# சமூக அறிவியல்

(வரலாறு - குடிமையியல் - புவியியல்)

## பத்தாம் வகுப்பு

தமிழ்நாடு அரசு
இலவசப் பாடநூல் வழங்கும்
திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்டது.
(விற்பனைக்கு அன்று)

தீண்டாமை ஒரு பாவச் செயல்
தீண்டாமை ஒரு பெருங்குற்றம்
தீண்டாமை மனிதத் தன்மையற்ற செயல்.

தமிழ்நாட்டுப்
பாடநூல் கழகம்
கல்லூரிச் சாலை, சென்னை - 600 006.

© தமிழ்நாடு அரசு
முதற் பதிப்பு - 2003
மறு பதிப்பு - 2006

## பாடக்குழுத் தலைவர்கள்

**வரலாறு - குடிமையியல்**

**டாக்டர். சி. பாலகிருஷ்ணன்**
வரலாற்றுப் பேராசிரியர்
தொலைதூரக் கல்வி நிறுவனம்
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை - 600 005.

**புவியியல்**

**டாக்டர். த. வசந்த குமரன்**
பேராசிரியர்
புவியியல் துறை
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை - 600 005.

## மேலாய்வாளர்கள்

**டாக்டர் பெ. சரவணன்**
இணைப் பேராசிரியர்
வரலாற்றுத் துறை
அரசினர் கலைக் கல்லூரி
சென்னை - 600 030.

**டாக்டர் ஜெ. உமா**
பேராசிரியர்
புவியியல் துறை
பாரதி பெண்கள் அரசினர் கல்லூரி
சென்னை - 600 108.

## நூலாசிரியர்கள்

**வரலாறு**

**திருமதி. எஸ். வசந்தா**
பட்டதாரி ஆசிரியை (ஓய்வு)
லேடி. எம்.சிடி.எம். மேல்நிலைப் பள்ளி
சென்னை - 600 084.

**திரு. இரா. இரவிந்திரநாதன்**
தலைமை ஆசிரியர் (ஓய்வு)
அரசு உயர் நிலைப் பள்ளி
அலவாக் கோட்டை (அஞ்சல்)
சிவகங்கை மாவட்டம்

**குடிமையியல்**

**டாக்டர் இரா. மாதையன்**
விரிவுரையாளர்
அரசியல் மற்றும் பொது நிருவாகத் துறை
தொலைதூரக் கல்வி நிறுவனம்
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை - 600 005

**புவியியல்**

**திரு. என். சுப்பிரமணியன்**
விரிவுரையாளர்
டி.ஐ.ஈ.டி
நாமக்கல் - 637 001

**திருமதி எ. தனபாக்கியம்**
பேராசிரியர்
புவியியல் துறை
பாரதி பெண்கள் அரசினர் கல்லூரி
சென்னை - 600 108.

*பாடங்கள் தயாரிப்பு - தமிழ்நாடு அரசுக்காக*
*பள்ளிக்கல்வி இயக்ககம், தமிழ்நாடு*

*இந்நூல் 60 ஜி.எஸ்.எம் தாளில் அச்சிடப்பட்டுள்ளது*

# பொருளடக்கம்

**பக்கம்**

## வரலாறு


காலக் கோடு ... v

**அலகு - I**

1. இந்தியாவிற்கு ஐரோப்பியர் வருகை ... 1
2. இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சி நிறுவப்படுதலும் அதன் விரிவாக்கமும் ... 17
3. முதல் இந்தியச் சுதந்திரப் போர் (1857-ஆம் ஆண்டு பெரும் புரட்சி) - ஆங்கிலக் கிழக்கிந்திய வணிகக் குழு ஆட்சியின் முடிவு ... 51

**அலகு - II**

4. 19-ஆம் நூற்றாண்டின் சமூக, சமயச் சீர்திருத்த இயக்கங்கள் ... 67

**அலகு - III**

5. இந்திய தேசிய இயக்கத்தின் தோற்றமும் வளர்ச்சியும் ... 85
6. இந்திய விடுதலைப் போர் - காந்தியடிகள் காலம் ... 109

**அலகு - IV**

7. சுதந்திரத்திற்குப் பின் இந்தியா (1947 - 2000) சமூக முன்னேற்றம் ... 135
8. இந்தியாவில் திட்டமிட்டப் பொருளாதார முன்னேற்றமும் அறிவியல் மற்றும் தொழில் நுட்ப வளர்ச்சியும் ... 147
9. இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை ... 161

## குடிமையியல்

**அலகு - I**


1. கூட்டாட்சி அரசு அமைப்பு ... 173
2. இந்தியாவின் மத்திய அரசு ... 183
3. மாநில அரசு ... 203


**அலகு - II**


4. இந்தியத் தேர்தல் ஆணையம் ... 217
5. தேர்தல்கள் ... 223
6. குடியுரிமை ... 233


## புவியியல்

**அலகு - பாடம்**


1. இந்தியா : வட்டாரப் பன்மை - இந்தியத் துணைக்கண்டம் ... 243
2. நிலத் தோற்றம், வடிகால் - நிலத் தோற்றமும் வடிகாலமைப்பும் ... 261
3. இந்தியாவின் காலநிலை - காலநிலையும் மழைநீர் அறுவடையும் ... 283
4. தாவரம் மற்றும் மண் - இயற்கைத் தாவரமும் மண்ணும் ... 303
5. இந்தியப் பயிர்கள் - பயிர்கள், உணவுப் பாதுகாப்பு ... 319
6. தொழிலகங்கள் - இந்தியத் தொழிலகங்கள் ... 341
7. கட்டுமானங்களும், சேவைகளும் - கட்டுமானங்களும் சேவைகளும் ... 359
8. இந்தியாவின் மக்கள் வளம் - மனித வளங்கள் ... 375
9. வளர்ந்து வரும் இந்தியா - எழுச்சியுறும் இந்தியா ... 387
10. நிலவரைப்படங்கள், விளக்கப் படங்கள் - பரவல் நிலவரைப் படங்களும், விளக்கப் படங்களும் ... 399
11. களப்பணி - களப்பணி : கருத்தும், வழக்கும் ... 417
12. பங்கேற்பு மதிப்பீடு - அதிவேக மற்றும் பங்கேற்பு மதிப்பீடு. ... 435

# வரலாறு

## (நவீன இந்திய வரலாறு) – காலக்கோடு

1 அலகு = 10 ஆண்டுகள்

1700

1707 ஔரங்கசீப்பின் இறப்பு

1724 ஐதராபாத்தில் சுதந்திர நிசாம் உருவாதல்

1740 வங்காள நவாப் சுதந்திரத்தை அறிவித்தல்

1746 முதல் கர்நாடகப் போர்
1748 இரண்டாம் கர்நாடகப் போர்

1756 மூன்றாம் கர்நாடகப் போர்
1757 பிளாசிப் போர்

1764 பக்சார் போர்

1767 – 1799 மைசூர் போர்கள்

1806 வேலூர் சிப்பாய்க் கலகம்

1828 – 1835 வில்லியம் பெண்டிங்கின் நிருவாகம்

1848 – 1850 டல்ஹௌசி தலைமை ஆளுநராகுதல்

## காலக்கோடு (தொடர்ச்சி)


1850
1856
டல்ஹௌசியின் நிருவாகம்
1857 பெரும் புரட்சி
1876
1880
1884
லிட்டனின் நிருவாகம்
ரிப்பனின் நிருவாகம்
1885
இந்திய தேசியக் காங்கிரசு தோன்றுதல்
மிதவாதிகள் காலம்
1905
சூரத் பிளவு
1907
தீவிரவாதிகளின் காலம்
1919
ஜாலியன் வாலாபாக் படுகொலை
1920 ஒத்துழையாமை இயக்கம்
1927 சைமன் குழு வருகை
1930 சட்ட மறுப்பு இயக்கம்
1939 இரண்டாம் உலகப் போர்
1942 வெள்ளையனே வெளியேறு இயக்கம்
1945 உலகப் போர் முடிவடைதல்
1947
இந்தியா விடுதலைப் பெறுதல்
காந்தியடிகள் காலம்
நேரு பிரதமாயிருந்த காலம்
1964
1966
லால்பகதூர் சாஸ்திரி பிரதமர்
இந்திரா காந்தி பிரதமர்
1977
ஜனதா ஆட்சி
1980
காங்கிரசு ஆட்சி
1989
தேசிய முன்னணி அரசு
1991
காங்கிரசு அரசு
1996
ஐக்கிய முன்னணி அரசு
1998
2000-04
தேசிய ஜனநாயகக் கூட்டணி – பி.ஜே.பி அரசு
2004-
காங்கிரசு அரசு

அலகு - I

பாடம் - 1

# இந்தியாவிற்கு ஐரோப்பியர் வருகை

**கற்றல் நோக்கங்கள்**

1. மாணவர் ஐரோப்பியர்களின் புதிய கடல்வழிக் கண்டுபிடிப்பு இந்திய வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது என்பதைக் கற்றுணர்தல்.
2. மாணவர் ஐரோப்பியரின் வருகை இந்தியாவின் எதிர்காலத்தில் ஏற்படுத்திய பெரும் மாற்றங்களைப் புரிந்து கொள்ளுதல்.
3. மாணவர் போர்ச்சுக்கீசியர்கள், டச்சுக்காரர்கள், டேனியர்கள், ஆங்கிலேயர்கள் மற்றும் பிரெஞ்சுக்காரர்கள் இந்தியாவில் தம் வணிக மையங்களை நிறுவியதும் அவை வளர்ந்த விதம் பற்றிய அறிவினைப் பெறுதல்.

ஐரோப்பியரின் இந்திய வருகை நம்நாட்டின் வரலாற்றில் மிக முக்கியமான ஒரு நிகழ்ச்சியாகும். இந்தியாவின் பெரும் செல்வ வளத்தைப் பற்றி வெனிசு நகர வர்த்தகரான **மார்க்கோ போலோ**வின் குறிப்புகள் மூலம் ஐரோப்பியர் அறிந்திருந்தனர். பழங்காலத்திலிருந்தே இந்தியா மேலைநாடுகளுடன் வியாபாரத் தொடர்பு கொண்டிருந்தது. இடைக்காலம் முழுவதும் இந்திய வணிகப் பொருட்களான வாசனைத் திரவியங்கள், குறிப்பிட்ட சில மருந்து வகைகள், உலோக வேலைப்பாடுகள் கொண்ட பொருட்கள், பருத்தி மற்றும் பட்டு ஆடைகள், தங்கம், வெள்ளி மற்றும் விலையுயர்ந்த கற்களுக்கு ஐரோப்பியச் சந்தைகளில் மிகுந்த வரவேற்பு இருந்தது.

இப்பொருட்கள் பெரும்பாலும் நிலவழி மூலமாக அல்லது ஒரு பகுதி நில வழியாகவும் மற்ற பகுதி கடல் வழியாகவும்

ஐரோப்பாவைச் சென்றடைந்தன. கி.பி.1453-ஆம் ஆண்டு துருக்கியர் **கான்ஸ்டான்டி நோபிளைக்** (துருக்கியிலுள்ள தற்கால இஸ்தான்புல்) கைப்பற்றியதால் இப்போக்குவரத்திற்குத் தடைகள் ஏற்பட்டன. எனவே வழிவழியாக, தரைமூலம் கிழக்கு நாடுகளுடன் ஐரோப்பா செய்து வந்த வணிகவழி அடைப் பட்டது. அதனால் பாதிக்கப்பட்ட ஐரோப்பிய வணிகர்கள் **தங்கக் கிழக்கு நாடுகள்** (Golden East) என்று அழைக்கப்பட்ட சீனா மற்றும் இந்தியா வர புதிய கடல்வழியினைக் கண்டுபிடிக்க முயன்றனர்.

## போர்ச்சுக்கீசியர்கள்

புதிய கடல் வழியினைக் கண்டுபிடிக்க போர்ச்சுக்கல் மற்றும் ஸ்பெயின் நாட்டு அரசர்கள் தம் நாட்டு மாலுமிகளை ஊக்குவித்தனர். எனவே புதிய கடல்வழிக் கண்டுபிடிப்பில் போர்ச்சுக்கீசியர் முன்னோடியாகத் திகழ்ந்தனர். **போர்ச்சுக்கீசிய இளவரசன் ஹென்றி** மாலுமிகளை ஆதரித்தார். அவர்களுக்குப் பயிற்சியளிக்க அறிவியல் முறையில் அமைந்த பயிற்சிப்பள்ளி ஒன்றை நிறுவினார். கடற்பயணம் மேற்கொள்பவர்களுக்கு வேண்டிய ஆதரவும் அளித்தார்.

| |
|---|
| கடல் வழிப்பயணத்தில் இளவரசர் ஹென்றி மிகுந்த ஆர்வம் காட்டியதாலும் அதற்கு ஆதரவு அளித்ததாலும் அவர் மாலுமி ஹென்றி (Henry, the Navigator) என வரலாற்றில் புனைப் பெயரிட்டு அழைக்கப்படுகிறார். |

**பார்த்தலோமியோ டயஸ் :** 1487-ஆம் ஆண்டு பார்த்தலோமியோ டயஸ் ஆப்பிரிக்காவின் மேற்குக் கடற்கரை ஓரமாகப் பயணம் செய்தார். அவர் ஆப்பிரிக்காவின் தென்கோடி முனையை அடைந்தார். எனினும் கடுமையான புயல் காரணமாக அவரால் தன் கடற்பயணத்தை மேற்கொண்டு தொடர முடியவில்லை. ஆனால் அவருடைய கடற்பயணம் மாலுமிகளுக்கு மேற் கொண்டு பயணம் செய்ய முடியும் என நம்பிக்கையளித்தது. எனவே ஆப்பிரிக்காவின் தென்கோடி முனையை **நன்னம்பிக்கை முனை** (Cape of Good Hope) என்று குறிப்பிட்டனர்.


வாஸ்கோட காமா

***வாஸ்கோட காமா :*** *வாஸ்கோட காமா என்ற போர்ச்சுக்கீசிய மாலுமி புதிய கடல்வழிக் கண்டு பிடிப்பின் பொருட்டு பார்த்தலோமியோ டயஸ் மேற்கொண்ட வழியிலேயே தானும் கடற் பயணம் செய்தார். நன்னம்பிக்கை முனையை அடைந்த அவர் பின் மொசாம்பிக்கைச் சென்றடைந்தார். அங்கிருந்து தொடர்ந்து ஒரு மாதம் பயணம் செய்தார். அவர் 1498-ஆம் ஆண்டு மே மாதம் 20-ஆம் தேதி* ***கோழிக்கூட்டிற்கு*** *அருகில்* (Calicut) *வந்து இறங்கினார். அப்பகுதியை ஆட்சிபுரிந்த* ***சாமரின்*** *என்ற அரசர் அவரை அன்புடன் வரவேற்றார். வாஸ்கோட காமா அவரிடம் சில சலுகைகளைப் பெற்றார். அச்சலுகைகள் மேற்கு நாடுகள் இந்தியாவுடன் வணிகத் தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ள வழிவகுத்தன.*

*வாஸ்கோட காமா இந்தியாவில் மூன்று மாதங்கள் தங்கியிருந்தார். அவர் திரும்பிச் செல்கையில் தன்னுடன் கப்பலில் ஏராளமான விலையுயர்ந்த பொருட்களை எடுத்துச் சென்றார். அப்பொருட்களால் கவரப்பட்ட மற்ற ஐரோப்பிய நாட்டுச் செல்வ வணிகர்கள் இந்தியாவிற்கு வர விரும்பினர்.*

*வாஸ்கோட காமா 1501-ஆம் ஆண்டு இரண்டாம் முறையாக இந்தியா வந்தபோது* ***கண்ணனூர்*** *என்னுமிடத்தில் ஒரு வணிகத்தலத்தை நிறுவினார். நாளடைவில்* ***கோழிக்கூடு*** (Calicut), ***கொச்சின், கண்ணனூர்*** *ஆகிய இடங்கள் போர்ச்சுக்கீசியரின் வர்த்தகத் தலங்களாகின. தாங்கள் பெற்று வந்த இலாபத்தை, போர்ச்சுக்கீசியர் அறுவடை செய்ததை அரேபியர் விரும்பவில்லை. அவர்கள் கோழிக்கூட்டை ஆண்ட சாமரின் மன்னருக்கும் போர்ச்சுக்கீசியருக்குமிடையே பகைமையை ஏற்படுத்தினர். எனவே கொச்சினிலிருந்த போர்ச்சுக்கீசியரை சாமரின் மன்னர் தாக்கினார். ஆனால் அவர் தோல்வியைத் தழுவ நேரிட்டது. அந்த வெற்றிக்குப் பின் போர்ச்சுக்கீசியர் தங்கள் மேலாண்மையை இந்தியாவில் நிலைநாட்டினர்.*

***பிரான்சிஸ்கோ டி அல்மெய்டா (1505-1509) :*** *1505-ஆம் ஆண்டு பிரான்சிஸ்கோ டி அல்மெய்டா இந்தியா வந்தார். அவர்தான் இந்தியாவில் இருந்த போர்ச்சுக்கீசியப் பகுதிகளின் முதல் ஆளுநர் ஆவார். அவர் இந்தியாவிலிருந்த போர்ச்சுக்கீசி யரின் கடல் வலிமையை மேம்படுத்துவதைத் தமது நோக்கமாகக் கொண்டிருந்தார். மேலும், இந்து மகாக்கடலில் போர்ச்சுக்கீசியர் ஆதிக்கம் பெற்றவர்களாய் விளங்க வேண்டுமெனவும் அவர் எண்ணினார். அவர் பின்பற்றிய கொள்கை* **நீலக்கடல் கொள்கை** (Blue Water Policy) *என அழைக்கப்பட்டது.*

***அல்போன்சோ-டி-அல்புகர்க்கு (1509 - 1515) :*** *இந்தியாவில் போர்ச்சுக்கீசியரின் செல்வாக்கு வளர உண்மையான அடித்தள மிட்டவர் அல்போன்சோ-டி-அல்புகர்க்கு ஆவார். அவர் 1510-ஆம் ஆண்டு பீஜப்பூர் மன்னரிடமிருந்து* **கோவா***வைக் கைப் பற்றினார். அதன் பின் கோவா போர்ச்சுக்கீசியரின் தலைமையிட மாக அமைந்தது. மேலும் அவர் விசயநகரப் பேரரசுடன் தனது உறவினை வலுப்படுத்திக் கொண்டார். அவர் 1511-ஆம் ஆண்டு* **மலாக்கா***வைக் கைப்பற்றினார். 1515-ஆம் ஆண்டு பாரசீக வளை குடாவில்* **ஆர்மசு** (Port Ormuz) *துறைமுகத்தை உருவாக்கினார். அல்புகர்க்கு ஒரு சிறந்த நிர்வாகியாக இருந்தபோதிலும் அவரின் சமயக் கொள்கையின் காரணமாக இசுலாமியர் அவரை மதிக்கவில்லை. அவர் இந்துக்களை நல்லவிதமாக நடத்தினார். அல்புகர்க்கு இந்துக்களின் கல்விக்காகப் பல பள்ளிகளைத் திறந்தார். அவர் இந்தியர்கள் போர்ச்சுக்கீசியரிடையே திருமண உறவுகளை ஊக்குவித்தார்.*

> *அல்புகர்க்கு சதி என்ற உடன்கட்டை ஏறும் பழக்கத் தைத் தடுக்க நடவடிக்கை மேற்கொண்டார். எனவே, அவர் வில்லியம் பென்டிங் பிரபுவின் முன்னோடியாவார்.*

*அல்புகர்கின் நற்பண்புகள் அவருக்கு இந்தியரின் மதிப்பைப் பெற்றுத் தந்தன. 16-ஆம் நூற்றாண்டின் இறுதிக்குள் போர்ச்சுக்கீசியர்* **கோவா, டையூ, டாமன், சால்செட்** *மேலும் அப்பகுதிகளைச் சுற்றியிருந்த பெரும் நிலப்பகுதிகளைத் தம்வசம் கொண்டு வந்தனர். எனினும் அவர்களது அதிகாரம்*



இந்தியாவிற்கு போர்த்துக்கீசியர் மேற்கொண்ட வழி
ஜெனோவா
வெனிசு
போர்த்துகல்
ஸ்பெயின்
லிஸ்பன்
மெடெய்ரா
கேனரித்தீவு
திரிபோலி
பாக்தாத்
பாரசீகம்
ஓர்மஸ்
மஸ்கட்
எகிப்து
அரேபியா
ஜெடா
மெக்கா
செங்கடல்
ஏடன்
ஆப்பிரிக்கா
வெர்டல் முனை
சியரா லியோன்
கினியா வளைகுடா
காங்கோ நதி
நைல் நதி
மிலிந்தி
மம்பூசா
மொசாம்பிக்
சோப்லா
செயின்ட் எலினா
நன்னம்பிக்கை முனை
மடகாஸ்கர்
மொரிஷியஸ்
ரீயூனியன்
முகலாயப் பேரரசு
டையூ
டாமன்
தக்காண சுல்தானியங்கள்
கோவா
விசய நகர்
கோழிக்கூடு
கொச்சின்
இலங்கை
கொழும்பு
சீனா
கேன்டன்
மகாவ்
பிலிப்பைன்ஸ் தீவுகள்
பெகு
சீயம்
மலக்கா
செலிபீஸ்
போர்னியோ
சுமத்ரா
ஜாவா
ஆஸ்திரேலியா
வ
மே
கி
தெ

மிகக் குறுகிய காலமே நீடித்தது. மற்ற ஐரோப்பிய வணிகர்களின் வருகையால் அவர்கள் நிலை மாறியது.

**போர்ச்சுக்கீசியரின் வீழ்ச்சிக்கான காரணங்கள் :** 1. போர்ச்சுக்கல் மிகச் சிறிய நாடு. இந்தியா போன்ற மிகப்பெரிய நாட்டை அந்நாட்டினால் கட்டுப்படுத்த முடியவில்லை. கடல் கடந்து குடியேற்ற நாடுகளை அமைக்கத் தேவையான பணபலமோ படைவலிமையோ அந்நாட்டிடம் இல்லை, 2. போர்ச்சுக் கீசியரின் ஆட்சி முறையில் ஊழல் ஏற்படத் தொடங்கியது. போர்ச்சுக்கீசிய வணிகர்கள் நேர்மையுடன் செயல்படத் தவறினர், 3. போர்ச்சுக்கீசியர் பின்பற்றிய சமயக் கொள்கை இசுலாமியரின் விரோதத்தை உருவாக்கியது. போர்ச்சுக்கீசியர் இந்தியர்களைக் கட்டாய மதமாற்றம் செய்தமையை இந்துக்களும் விரும்ப வில்லை, 4. போர்ச்சுக்கீசியர் இந்திய வணிகர்களுக்கு எதிராக அடிக்கடி கடற்கொள்ளையில் ஈடுபட்டனர், 5. கோவாவின் செழிப்பு விசயநகரப் பேரரசின் தலைநகரைச் சார்ந்தே இருந்தது. 1565-ஆம் ஆண்டு ஏற்பட்ட விசயநகரப் பேரசின் வீழ்ச்சி போர்ச்சுக்கீசியருக்குப் பெரும் அடியாக அமைந்தது, 6. அக்பர் மற்றும் அவருக்குப் பின் ஆட்சிப் பொறுப்பேற்றோரின் கீழ் முகலாயப் பேரரசு எழுச்சியுற்றமையால் போர்ச்சுக்கீசியரின் அதிகாரம் விரிவடைய முடியாமல் போனது, 7. இறுதியாக இந்தியா வந்த டச்சு, ஆங்கில வணிகக் குழுக்கள் போர்ச்சுக் கீசியர்களின் வலிமை வாய்ந்த போட்டியாளர்களாக மாறினர். இவை காரணமாக இந்தியாவில் போர்ச்சுக்கீசியரின் அதிகாரம் வீழ்ச்சியுற்றது.

## டச்சுக்காரர்கள்

கடற்கரையை ஒட்டிய பகுதிகளில் வாழ்ந்த டச்சுக்காரர்கள் துணிவும், எளிமையும், வீரச்செயல்களில் ஆர்வமும் உடைய மக்களாய் விளங்கினர். 1602-ஆம் ஆண்டு **ஒன்றிணைந்த நெதர்லாந்து கிழக்கிந்தியக் கம்பெனியை** ஹாலந்து நாட்டில் தொடங்கினர். இவர்கள் முதலில் **இந்தோனேசியத் தீவுகளில்** தங்கள் குடியேற்றங்களை அமைத்துக் கொண்டனர். பின்னர் தங்கள் கவனத்தை இந்தியாவின் மீது திருப்பினர். 1605-ஆம் ஆண்டு மசூலிப்பட்டினத்தில் தங்கள் வணிகத் தலத்தை

அமைத்தனர். சென்னைக்கு அருகில் உள்ள **பழவேற்காடு** என்னுமிடத்தில் தங்கள் முதல் கோட்டையைக் கட்டினர். போர்ச்சுக்கீசியரிடமிருந்து **நாகப்பட்டினத்தைக்** கைப்பற்றினர். **ஆக்ரா, சூரத், மசூலிப்பட்டினம்,** வங்காளத்தில் உள்ள **சின்சுரா** ஆகிய இடங்களைத் தங்கள் வணிகத் தலங்களாக்கிக் கொண்டனர்.

டச்சுக்காரர்கள் இந்தியாவில் தங்கள் அரசை நிறுவ விரும்ப வில்லை. வணிகமே அவர்களுடைய முக்கிய நோக்கமாக அமைந்தது. தம் துணிந்த முயற்சியின் மூலம் வணிகத்தில் கிடைத்த பெரும் லாபத்தில் மகிழ்ச்சியடைந்தனர். மேலும் நறுமணப் பொருட்கள் அதிகம் கிடைக்கும் இந்தோனேசியத் தீவுகளில் தங்கள் கவனத்தைச் செலுத்தினர். **'கோயன்'** (Coen) மற்றும் **வான்டிமென்** (Van Diemen) ஆகியோர் கிழக்குப் பகுதி களில் டச்சுக்காரர்களின் வெற்றிக்குக் காரணமாகத் திகழ்ந்தனர்.

**டச்சுக்காரர்களின் வீழ்ச்சிக்கான காரணங்கள் :** 1. டச்சுக்காரர் களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் இடையே ஏற்பட்ட போட்டி முற்றி 1623-ஆம் ஆண்டு டச்சுக்காரர்கள் ஆங்கிலேயரை **அம்பாயி னாவில்** படுகொலை செய்தனர். அதன் காரணமாக ஆங்கிலேயர் இந்தோனேசியாவிலிருந்து வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆங்கிலேயர் இந்தியாவிற்குத் திரும்பினர், 2. டச்சுக் காரர்கள் இந்தியாவில் தம் செல்வாக்கினை ஆங்கிலேயருக்கு விட்டுக் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. டச்சுக்காரர்கள் இந்தியாவை விட **இந்தோனேசியாவில்** வணிகம் செய்வதி லேயே அதிக ஈடுபாடு கொண்டனர் மற்றும் 3. ஆரம்ப முதலே இந்தியாவில் டச்சுக்காரர்களின் நிலைமை முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையவில்லை.

## டேனியர்கள்

**டேனியர்களின் குடியேற்றங்கள் :** டேனியக் கிழக்கு இந்திய வணிகக் குழு (Company) 1616-ல் டென்மார்க்கில் நிறுவப்பட்டது. டேனியர்கள் தென்னிந்தியாவில் **தரங்கம்பாடி** என்னுமிடத்தில்

1620-ல் தங்கள் வணிகத் தலத்தை அமைத்தனர். மேலும் கல்கத்தாவிற்கு (கொல்கத்தா) அருகிலுள்ள **செராம்பூர்** என்னுமிடத்திலும் தங்கள் குடியேற்றங்களை ஏற்படுத்தினர். டேனிய சமயப் பரப்பாளர்களைத் தவிர அந்நாட்டு வணிகர்கள் பெரும்புகழ் அடையவில்லை. எனவே அவர்கள் தங்கள் வணிகத் தலங்களை 1845-ஆம் ஆண்டு ஆங்கிலேயருக்கு விற்றுவிட்டனர்.

## ஆங்கிலேயர்கள்

மற்ற ஐரோப்பியர்களைப் போலவே ஆங்கிலேயர்களும் இந்திய வணிகப் பொருட்களை விரும்பினர். எனவே இந்தியா வுடன் நேரடியாக வணிகத் தொடர்பு கொள்ள எண்ணினர். 1600-ஆம் ஆண்டு இங்கிலாந்து அரசியான எலிசபெத் மகாராணி இலண்டனிலிருந்த நூறு வியாபாரிகள் கொண்ட வணிகக் குழு ஒன்றுக்கு, கிழக்கு நாடுகளுடன் வணிகம் செய்ய அனுமதி வழங்கினார். பின்னர் அவர்கள் **ஆங்கிலக் கிழக்கிந்திய வணிகக் குழுவை** நிறுவினர்.

கிழக்கிந்திய வணிகக் குழு சூரத் நகரில் ஒரு வணிகத் தலம் அமைக்க அனுமதி பெற 1609-ஆம் ஆண்டு **சர் வில்லியம் ஹாக்கின்ஸ்** என்பவரை முகலாயப் பேரரசர் ஜகாங்கீரின் அரசவைக்கு அனுப்பி வைத்தது. ஆனால் போர்ச்சுக்கீசியரின் செல்வாக்கு காரணமாக முகலாயர் ஆங்கிலேயர்களுக்கு அனுமதி அளிக்கவில்லை. 1613-ஆம் ஆண்டு தான் சூரத் நகரில் ஆங்கிலேயர் வணிகத் தலம் அமைக்க அனுமதிக்கப்பட்டனர்.

**சர் தாமஸ் ரோ** என்ற மற்றொரு ஆங்கில வர்த்தகர் 1615-ஆம் ஆண்டு ஜகாங்கீரின் அரசவைக்கு வந்தார். அவர் இந்தியாவில் மூன்று ஆண்டுகள் தங்கி **ஆக்ரா, சூரத், அகமதாபாத்** மற்றும் **புரோச்** ஆகிய இடங்களில் ஆங்கில வணிகத் தலங்கள் அமைக்க அனுமதி பெறுவதில் வெற்றி பெற்றார். 1639-ஆம் ஆண்டு **பிரான்சிஸ் டே** என்ற ஆங்கில வணிகர் சந்திரகிரி மன்னரின் கீழ் இயங்கிய சென்னைப் பகுதியின் நாயக்கரிடமிருந்து மதராசினை விலைக்கு வாங்கினார். பிற்காலத்தில் சென்னை என்றழைக்கப்

*பட்ட அந்த இடத்தில் ஆங்கில வணிகத் தலமான* **செயின்ட் ஜார்ஜ்** *என்ற கோட்டையைக் கட்டினார். அதே போல் கொல்கத்தா அருகில் 1651-ஆம் ஆண்டு* **ஹூக்ளியில்** *ஒரு வணிகத் தலம் அமைக்கப்பட்டது. இங்கிலாந்து மன்னர் இரண்டாம் சார்லஸ் 1661-ஆம் ஆண்டு குத்தகையாக* **பம்பாயை (மும்பை)** *ஆங்கிலக் கிழக்கிந்திய வணிகக் குழுவிற்கு அளித்தார். சார்லஸ் போர்ச்சுக்கீசிய இளவரசியை மணந்து பம்பாயைச் சீதனமாகப் பெற்றார்.*

> *அந்நாட்களில் பம்பாயின் ஒரு வருட வாடகை £ 10 மட்டுமே என்பதை உங்களால் நம்ப முடிகிறதா? சற்றேறக் குறைய ரூ. 700 (பவுண்ட்* (Pound) *இங்கிலாந்து நாணயம்).*

**கொல்கத்தாவில்** *ஒரு வணிகத் தலம் அமைக்க 1690-ஆம் ஆண்டு ஆங்கிலேயர் ஔரங்கசீப்பிடமிருந்து அனுமதி பெற்றனர். அங்கு 1696-ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட கோட்டை* **வில்லியம் கோட்டை** *என்று அழைக்கப்பட்டது.*

> *ஆங்கில மருத்துவரான வில்லியம் ஹாமில்டன் வங்காள ஆட்சியாளரின் உறவினர் ஒருவரை நோயிலிருந்து குணப்படுத்தியதன் பயனாக ஆங்கிலேயர் ஹூக்ளி நதிக்கரையில் வணிகத் தலம் ஒன்றினை அமைக்க அனுமதி பெற்றனர்.*

*ஆங்கிலக் கிழக்கிந்திய வணிகக் குழு இந்தியாவில் 1857-ஆம் ஆண்டு வரை தன் செல்வாக்கை விரிவுபடுத்தி வலிமையான அடித்தளம் அமைத்தது. 1857-ஆம் ஆண்டு ஆங்கில வணிகக்குழு ஆட்சிக்கு எதிராக நடந்த பெரும் புரட்சியின் விளைவாக விக்டோரியா மகாராணி இந்தியாவின் நிர்வாகப் பொறுப்பினை ஏற்றார்.*

### பிரெஞ்சுக்காரர்கள்

*இந்தியாவில் ஆங்கிலேயருக்கு எதிராக கடும் போட்டி யிட்டவர்கள் பிரெஞ்சுக்காரர்களே. பிரெஞ்சுக் கிழக்கிந்திய*



இந்தியாவில் ஐரோப்பிய
வணிக மையங்கள்
வ
மே
கி
தெ
ஆக்ரா (ஆ)
பாட்னா
அகமதாபாத் (ஆ)
புரோச் (ஆ)
சூரத் (ஆ)
டையூ (போ)
டாமன் (போ)
தாராபூர் (போ)
மும்பை (ஆ)
ஹூக்ளி (ஆ)
சின்சுரா (ட)
சந்திரநாகூர் (பி)
கொல்கத்தா (ஆ)
பாலசூர் (பி)
அரபியக் கடல்
வங்கக் கடல்
ஏனாம் (பி)
மசூலிப்பட்டினம் (ட)
கோவா (போ)
பழவேற்காடு (ட)
சென்னை (ஆ)
புதுச்சேரி (பி)
கண்ணனூர் (போ)
தரங்கம்பாடி (டே)
மாஹி (பி)
காரைக்கால் (பி)
கோழிக்கூடு (போ)
நாகப்பட்டினம் (ட)
கொச்சின் (போ)
இலங்கை
இந்து மகாக் கடல்
• வணிக மையங்கள்
டே - டேனியர்கள்
ட - டச்சுக்காரர்கள்
ஆ - ஆங்கிலேயர்கள்
பி - பிரெஞ்சுக்காரர்கள்
போ - போர்த்துக்கீசியர்கள்

வணிகக் குழு 1664-ஆம் ஆண்டு 14-ஆம் லூயி மன்னரின் பொருளாதார ஆலோசகரான **கால்பர்ட்** என்பவரின் திறன்மிகு தலைமையின் கீழ் அமைக்கப்பட்டது. இக்கம்பெனியின் பொது இயக்குநராக நியமிக்கப்பட்ட **பிரான்சிஸ் கரோன்** என்பவரால் 1667-ஆம் ஆண்டு **சூரத்** நகரில் முதல் பிரெஞ்சு வணிகத்தலம் அமைக்கப்பட்டது. 1669-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் **மசூலிப்பட்டினத்தில்** இன்னொரு பிரெஞ்சு வணிகத்தலம் நிறுவப்பட்டது.

பிரான்சிஸ் கரோனுக்குப் பின் **பிரான்சிஸ் மார்டின்** என்பவர் நியமிக்கப்பட்டார். இவர் பீஜப்பூர் சுல்தானான ஷெர்கான் லோடியிடமிருந்து அனுமதி பெற்று 1674-ஆம் ஆண்டு **பாண்டிச் சேரியை** (Pondicherry) அமைத்தார். பாண்டிச்சேரி பிரெஞ்சுக் காரர்களின் தலைமையிடமானது. பின்னர் பிரெஞ்சுக்காரர்கள் அதைத் தொடர்ந்து **சந்திரநாகூர், பலசோர்** (Balasore), **காசிம் பசார்** ஆகிய இடங்களில் தங்கள் குடியேற்றங்களை அமைத்தனர். 1725-ஆம் ஆண்டு மலபார் கடற்கரையில் **மாஹி**யையும் 1739-ஆம் ஆண்டு சோழ மண்டலக் கடற்கரையில் **காரைக்காலையும்** பிரெஞ்சுக் குடியேற்றங்களாக அமைத்தனர்.


டியூப்ளே

இந்தியாவிலிருந்த பிரெஞ்சுப் பகுதிகளின் ஆளுநராக 1735-ஆம் ஆண்டு முதல் 1741 வரை **டூமாஸ்** விளங்கினார். அவருக்குப் பின் வந்த **டியூப்ளே** (Dupleix) ஒரு சிறந்த இராஜ தந்திரி யாவார். அவர் இந்தியாவில் பிரெஞ்சுப் பேரரசு ஒன்றை நிறுவ எண்ணினார். பிரெஞ்சு ஆதிக்கம் இந்தியாவில் நிலை பெற அவர் பல போர்களில் ஈடுபட்டார். எனினும் பிரெஞ்சுக்காரர்கள் **பாண்டிச் சேரி, மாஹி, சந்திரநாகூர், காரைக்கால், ஏனாம்** ஆகிய பகுதிகளை மட்டுமே தக்க வைத்துக் கொள்ள முடிந்தது. இந்தியாவில் ஆட்சியை நிறுவுவதில் பிரெஞ்சுக்காரர்களைப் பின் தள்ளி ஆங்கிலேயர்கள் வெற்றி கொண்டனர்.

**கற்றல் அடைவுகள்**

1. மாணவர் ஐரோப்பியரின் இந்திய வருகையைப் பற்றி விளக்க முடியும்.
2. மாணவர் போர்ச்சுக்கீசியரின் குடியேற்றங்களைப் பற்றி விவரிக்க முடியும்.
3. மாணவர் டச்சுக்காரர்களின் இந்தியக் குடியேற்றங்களைச் சுட்டிக்காட்ட இயலும்.
4. மாணவர் இந்தியாவில் ஆங்கிலேயர் மற்றும் பிரெஞ்சுக் குடியேற்றங்களைப் பற்றிய விவரங்களைக் கொடுக்க இயலும்.

## சுயமதிப்பீடு

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்**

1. கி.பி.1453-ஆம் ஆண்டு கான்ஸ்டான்டிநோபிளைக் கைப்பற்றியவர்கள்

   அ. துருக்கியர்கள் ஆ. டச்சுக்காரர்கள்

   இ. பிரெஞ்சுக்காரர்கள் ஈ. ஆங்கிலேயர்கள்

2. கீழ்க்கண்ட நாடுகளைச் சேர்ந்த அரசர்கள் மாலுமிகளை ஊக்குவித்தனர்

   அ. இங்கிலாந்து, பிரான்சு ஆ. பிரான்சு, ஸ்பெயின்

   இ. ஸ்பெயின், போர்ச்சுக்கல் ஈ. போர்ச்சுக்கல், இங்கிலாந்து

3. வாஸ்கோட காமா கோழிக்கூடு பகுதியில் இறங்க அனுமதி அளித்த அரசர்

   அ. பீஜப்பூர் சுல்தான் ஆ. விசய நகர அரசர்

   இ. மன்னர் சாமரின் ஈ. சந்திரநாகூரின் மன்னர்

4. கோவாவைக் கைப்பற்றியவர்

   அ. அல்மிடா ஆ. வாஸ்கோட காமா

   இ. அல்புகர்க்கு ஈ. சாமரின்

5. சர் வில்லியம் ஹாக்கின்ஸ் இந்நாட்டைச் சேர்ந்தவர்

அ. போர்ச்சுக்கல் ஆ. ஸ்பெயின்

இ. இங்கிலாந்து ஈ. பிரான்சு

6. பம்பாயைத் திருமணப் பரிசாகப் பெற்ற இரண்டாம் சார்லஸ் மணந்த இளவரசியின் நாடு

அ. பிரான்சு ஆ. ஸ்பெயின்

இ. இங்கிலாந்து ஈ. போர்ச்சுக்கல்

7. வில்லியம் ஹாக்கின்ஸ் ஒரு

அ. ஆசிரியர் ஆ. வியாபாரி

இ. மருத்துவர் ஈ. படைவீரர்

8. ஆங்கிலக் கிழக்கிந்திய வணிகக்குழு பம்பாய்க்கு (மும்பை) அளித்த வருட குத்தகை

அ. £ 10 ஆ. £ 20

இ. £ 30 ஈ. £ 40

9. பிரெஞ்சுக் கிழக்கிந்திய வணிகக் குழு இவரின் தலைமையின் கீழ் அமைக்கப்பட்டது

அ. பிரான்சிஸ் கரோன் ஆ. கால்பர்ட்

இ. டியூப்ளே ஈ. இவர்களில் எவரும் இல்லை

10. மலபார் கடற்கரையில் உள்ள மாஹியைப் பிரெஞ்சுக்காரர்கள் பெற்ற ஆண்டு

அ. 1725 ஆ. 1735

இ. 1715 ஈ. 1745

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக

1. ஐரோப்பியர்கள் ______________ வர புதிய கடல்வழியினைக் கண்டுபிடிக்க முயன்றனர்.

2. புதிய கடல் வழிகள் கண்டுபிடிப்பதில் முன்னோடியாகத் திகழ்ந்தவர் ____________ ஆவார்கள்.

3. இந்தியாவில் முதல் போர்ச்சுக்கீசிய ஆளுநராக விளங்கியவர் ____________.

4. விசயநகர அரசுடன் தன் உறவைப் பலப்படுத்தியவர் ____________ ஆவர்.

5. சதி ஒழிப்பில் அல்போன்சா அல்புகர்க்கு ____________ பிரபுவிற்கு முன்னோடியாகத் திகழ்ந்தார்.

6. 1609-ஆம் ஆண்டு ____________ என்னுமிடத்தில் டச்சுக்காரர்களின் முதல் கோட்டை கட்டப்பட்டது.

7. சர் தாமஸ் ரோ ____________ மன்னரின் அரசவையில் மூன்று ஆண்டுகள் தங்கினார்.

8. செயின்ட் ஜார்ஜ் கோட்டை ____________ என்னுமிடத்தில் கட்டப்பட்டது.

9. பதினான்காம் லூயியின் பொருளாதார ஆலோசகர் ____________ ஆவார்.

10. சூரத்தில் முதல் பிரெஞ்சு வணிகத்தலத்தினை அமைத்தவர் ____________ ஆவார்.

## III. பின்வருவனவற்றைப் பொருத்துக

**அ**

| | | |
|---|---|---|
| 1. மார்க்கோ போலோ | -- | நீலக்கடல் கொள்கை |
| 2. சாமரின் | -- | இந்தியாவிற்குக் கடல்வழி |
| 3. பிரான்சிஸ்கோ டி அல்மிடா | -- | பாரசீக வளைகுடா |
| 4. ஆர்மசு துறைமுகம் | -- | வெனிசு வர்த்தகர் |
| 5. வாஸ்கோட காமா | -- | கோழிக்கூட்டின் அரசர் |

ஆ

| | | |
|---|---|---|
| 1. டச்சுக்காரர் | -- | போர்ச்சுக்கீசிய இளவரசி |
| 2. இரண்டாம் சார்லஸ் | -- | வாசனைப் பொருள் தீவுகள் |
| 3. அம்பாயினா படுகொலை | -- | கவர்னர் - ஜெனரல் |
| 4. பிரான்சிஸ் கரோன் | -- | பிரெஞ்சு தலைமையிடம் |
| 5. பாண்டிச்சேரி | -- | 1623 |

**IV. சுருக்கமாக விடையளிக்கவும்**

1. ஐரோப்பிய சந்தைகளில் பெரிதும் தேவைப்பட்ட இந்திய வணிகப் பொருட்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
2. கான்ஸ்டான்டிநோபிளின் வீழ்ச்சி ஐரோப்பிய வணிகர்களை எவ்விதம் பாதித்தது?
3. இளவரசர் ஹென்றி ''மாலுமி ஹென்றி'' என அழைக்கப் படுவதேன்?
4. பார்த்தலோமியோ டயஸ் பற்றி ஒரு குறிப்புத் தருக.
5. சாமரின் போர்ச்சுக்கீசியரை ஏன் தாக்கினார்?
6. நீலக்கடல் கொள்கை என்றால் என்ன?
7. இந்தியாவில் போர்ச்சுக்கீசிய வணிகத் தலங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
8. டச்சுக்காரர்களின் முக்கிய நோக்கங்கள் யாவை?
9. டச்சுக்காரர்களின் வணிகத் தலங்களைக் குறிப்பிடுக.
10. டச்சுக்காரர்களின் வீழ்ச்சிக்கான காரணங்கள் யாவை?
11. 'பிரான்சிஸ் டே'' பற்றி சிறு குறிப்புத் தருக.
12. இந்தியாவிலிருந்த ஆங்கிலேயரின் வணிகத் தலங்களைக் குறிப்பிடுக.

13. இந்தியாவில் ஆங்கிலேயர் அமைத்த முக்கிய கோட்டைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

14. பாண்டிச்சேரி எவ்விதம் பிரெஞ்சுக்காரர்களின் தலைமையிட மாகியது?

15. டியூப்ளே பற்றி உமக்கு என்ன தெரியும்?

**V. விரிவான விடை தருக**

1. போர்ச்சுக்கீசியர் இந்தியாவில் தமது வணிகத்தலங்களை எவ்வாறு அமைத்துக் கொண்டனர்?

2. அல்போன்சா டி அல்புகர்க்கு போர்ச்சுக்கல்லுக்கும் இந்தியர் களுக்கும் ஆற்றிய தொண்டினைக் குறிப்பிடுக.

3. இந்தியாவில் போர்ச்சுக்கீசியரின் ஆதிக்கம் வீழ்ச்சியடையக் காரணங்கள் யாவை?

4. ஆங்கிலேயர் இந்தியாவில் எவ்விதம் தம் வணிகத்தலங்களை நிறுவினர்?

**VI. செய்முறைப் பயிற்சி**

1. இந்திய வரைபடத்தில் போர்ச்சுக்கீசியர், டச்சுக்காரர், ஆங்கிலேயர் மற்றும் பிரெஞ்சுக்காரர் ஆகியோரின் வணிக மையங்களைக் குறிக்கவும்.

2. வாஸ்கோட காமா இந்தியாவிற்கு வந்த கடல்வழி மார்க்கத்தை உலகப்படத்தில் குறிப்பிட்டுக் காட்டவும்.

பாடம் - 2

# இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சி நிறுவப்படுதலும் அதன் விரிவாக்கமும்

**கற்றல் நோக்கங்கள்**

1. மாணவர் இந்தியாவில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும் 18-ஆம் நூற்றாண்டில் நடந்த மோதல்களைக் கற்றல்.
2. மாணவர் இந்தியாவில் ஆங்கிலேயர் ஆதிக்கம் வளர்ந்த விதம் பற்றிய அறிவினைப் பெறுதல்.
3. மாணவர் கர்நாடக, மைசூர் மற்றும் மராத்தியப் போர்களின் காரணங்கள், அப்போர்களின் விளைவுகள் பற்றி அலசுதல்.
4. மாணவர் வங்காளத்தில் ஆங்கிலேயர் ஆதிக்கம் வளர்ந்ததைத் தெரிந்து கொள்ளுதல்.
5. மாணவர் இந்தியாவில் ஆங்கிலேயர் ஆதிக்கம் விரிவடைந்ததைப் புரிந்து கொள்ளுதல்.
6. மாணவர் வெல்லெஸ்லி பிரபுவின் துணைப்படைத் திட்டத்தைப் பற்றிய அறிவினைப் பெறல்.
7. மாணவர் பென்டிங் பிரபுவின் சமூகச் சீர்திருத்தங்களைப் பற்றிக் கற்றல்.
8. மாணவர் டல்ஹௌசி பிரபுவின் வாரிசு இழப்புக் கொள்கை (Doctorine of Lapse) எவ்விதம் ஆங்கில அரசின் விரிவாக்கத்திற்கு உதவியது என்பதை அறிதல்.

18-ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயரும், பிரெஞ்சுக்காரர்களும், போர்ச்சுக்கீசியரையும் டச்சுக்காரர்களையும் இந்தியாவில் இருந்து வெளியேற்றுவதில் வெற்றி கண்டனர். ஐரோப்பியருடன் ஆன இந்திய வணிகத்தில் ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரர்களும்

மேலோங்கி நின்றனர். இவ்விருநாட்டினரும் இந்தியாவின் பல இடங்களில் தம் வணிகத் தலங்களை நிறுவினர். பெரும்பாலான அவ்வணிகத் தலங்கள் கடற்கரையை ஒட்டிய பகுதிகளில் அமைந்திருந்தன. வணிகத்தின் மூலம் கிடைத்த பெரும் இலாபம் அவ்விருநாட்டவரிடையே போட்டியையும், பூசலையும் உருவாக்கியது. அதனால் அவர்களுக்குள் அடிக்கடி கடுமையான சண்டைகளும் ஏற்பட்டன. அப்போர்களில் ஆங்கிலப் பிரெஞ்சு அரசுகள் தம் நாட்டு வணிகக் குழுக்களுக்கு ஆதரவு அளித்தன.

1707-ஆம் ஆண்டு ஔரங்கசீப்பின் மறைவிற்குப் பின் முகலாயப் பேரரசு சிதறுண்டது. 1645 முதல் **சிவாஜி**யின் விடாமுயற்சியால் அமைக்கப்பட்ட மராத்தியப் பேரரசு **பீஷ்வாக்கள்** தலைமையில் இந்தியாவின் மேற்குப் பகுதியில் பரந்து விரிந்தது. 1724-ல் **நிசாம் உல்முல்க்** என்றழைக்கப்பட்ட அசப்ஜா தக்காணப்பகுதியில் ஐதராபாத் அரசை நிறுவினார். 1740-ல் **அலிவர்திகான்** வங்காளத்தின் சுதந்திர நவாபாகத் தன்னை அறிவித்துக் கொண்டார். **ஆர்க்காட்டைத்** தலைநகராகக் கொண்டு **சாதத்துல்லா கான்** (Saadatullah Khan, 1710 - 1732) கர்நாடகப் பகுதியின் நவாபானார். அவருக்குப் பின் ஆட்சி செய்தவரும் அவருடைய மருமகனுமான **தோஸ்த் அலி** மராத்தியர்களால் 1740-ல் நடந்த போரில் கொல்லப்பட்டார். ஐதராபாத் நிசாமான அசப்ஜா திருச்சிராப்பள்ளி வரை வந்து **அன்வருதீன்கான்** என்பவரை ஆர்க்காட்டின் நவாபாக நியமித்தார். அவர் மக்கள் மத்தியில் புகழ் பெறவில்லை. மராத்தியர்களால் சிறை வைக்கப் பட்ட தோஸ்த் அலியின் மருமகனான, **சந்தாசாகிப்** 1748-ல் விடுவிக்கப்பட்டு அன்வருதீனுக்குத் தொல்லை கொடுத்து வந்தார். உள்நாட்டுப் பாளையக்காரர்களும் கலகத்தில் ஈடுபட்டனர். அந்த நிலையற்ற அரசியல் நிலைமை ஆங்கிலேயரையும், பிரெஞ்சுக் கார்களையும் நம் நாட்டு அரசியல் விவகாரங்களில் தலையிட வைத்தது.

## I. கர்நாடகப் போர்கள்

***முதல் கர்நாடகப் போர் (1746 - 48) - காரணங்கள் :*** ஐரோப்பிய வணிகக் குழுக்களிடையே ஏற்பட்ட போட்டிப்பகை 1742-ல்

**டியூப்ளே பாண்டிச்சேரி**யின் **ஆளுநராக** நியமிக்கப்பட்டதிலிருந்து தீவிரமடைந்தது. பிரெஞ்சுக்காரர்களின் நிலையை உயர்த்த டியூப்ளே விரும்பினார். அச்சமயம் ஐரோப்பாவில் ஆஸ்திரிய **வாரிசுரிமைப் போர்** ஏற்பட்டது. அப்போரில் இங்கிலாந்தும் பிரான்சும் எதிர்எதிர் அணியில் இருந்தன. அப்போர் இந்தியாவிலும் எதிரொலித்தது. 1746-ஆம் ஆண்டு ஆங்கிலேயர் இந்தியாவிலிருந்த பிரெஞ்சுக்காரர்கள் மீது போர் தொடுத்தனர்.



இராபர்ட் கிளைவ்

**போர் நிகழ்ச்சிகள் :** ஆங்கிலேயர் தங்கள் கடற்படைத் தலைவர் **பார்னெட்டின்** உதவியுடன் இந்தியக் கடலில் இருந்த பிரெஞ்சுக் கப்பல்களைக் கைப்பற்றினர். டியூப்ளே மொரீஷியஸிலிருந்த பிரெஞ்சு ஆளுநரான **லா பூர்டான்னாய்சை** (La-Bourdonnais) உதவிக்கு அழைத்தார். பிரெஞ்சுக் கடற்படை சென்னைத் துறை முகத்தை முற்றுகையிட்டது. டியூப்ளேயும் லா பூர்டான்னாய்சும் இணைந்து சென்னையைக் கைப்பற்றினர். சென்னையை மீட்க அன்வருதீன் மாபூஸ்கான் தலைமையில் மிகப்பெரிய படை யொன்றை அனுப்பினார். ஆனால் அப்பெரும் படையைக் கட்டுப்பாடு மிக்க சிறிய பிரெஞ்சுப் படை **அடையாறில் நடந்த சண்டையில்** தோற்கடித்தது. டியூப்ளே ஆங்கிலேயரின் செயின்ட் டேவிட் கோட்டையைக் கைப்பற்ற மேற்கொண்ட முயற்சி தோல்வி அடைந்தது. இதற்கிடையில் ஐரோப்பாவில் ஆஸ்திரிய வாரிசுரிமைப் போர் ஒரு முடிவுக்கு வந்தது. எனவே இந்தியாவிலும் ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரர்களும் தம் சண்டையை நிறுத்திக் கொண்டனர்.

**விளைவுகள் :** 1748-ஆம் ஆண்டு **அய்-லா-சாப்பேல்** (Aix-la-Chapelle) எனும் உடன்படிக்கை ஆஸ்திரிய வாரிசுரிமைப் போருக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தது. அத்துடன் முதல் கர்நாடகப் போரும் ஒரு முடிவுக்கு வந்தது. அவ்வுடன்படிக்கையின்படி ஆங்கிலேயர் **சென்னை**யைத் திரும்பப்

பெற்றனர். அதற்குப் பதிலாக அவர்கள் வட அமெரிக்காவில் இருந்த **லூயிஸ்பர்க்** (Louisburg)கை பிரான்சிற்கு தந்தனர்.

> கட்டுப்பாட்டுடன் முறையாக சம்பளம் பெற்று ஐரோப்பாவில் புதிதாய் உருவாக்கப்பட்ட பீரங்கிகளைக் கொண்டு குறைந்த எண்ணிக்கையிலான படைவீரர்கள் கூட இந்திய அரசர்களின் மிகப் பெரிய படையையும் வெற்றி கொள்ள முடியும் என்பதை முதல் கர்நாடகப் போர் வெளிப்படுத்தியது.

***இரண்டாம் கர்நாடகப் போர் (1748 - 1754) :*** இங்கிலாந்து, பிரான்சு ஆகிய நாடுகளிடையே இருந்த பகையுணர்ச்சி ஐரோப்பாவில் முடிவுக்கு வந்தாலும், இந்தியாவில் அவ்விரு நாட்டு வணிகக் குழுக்களிடையே நிலவிய போட்டித் தொடர்ந்தது. கர்நாடக நவாப்பின் படைகளுக்கு எதிராக டியூப்ளே பெற்ற வெற்றி அவருக்கு மிகுந்த நம்பிக்கையையும் பேராசையையும் கொடுத்தது. பிரெஞ்சுக்காரர்களின் நிலையை உயர்த்துவதே டியூப்ளேயின் நோக்கமாக இருந்தது. அவர் இந்திய மன்னர்களை ஒருவரோடு ஒருவர் மோதவிட்டார். பிரெஞ்சுக்காரர்களின் செல்வாக்கு வளர்ச்சி பெற்றதைக் கண்ட ஆங்கிலேயர் எச்சரிக்கையும் அச்சமும் கொண்டனர்.

***காரணங்கள் :*** *1748*-ல் ஐதராபாத்தின் நிசாம் காலமானார். அதனைத் தொடர்ந்து அவருடைய இரண்டாவது மகனான **நாசிர்ஜங்கிற்கும்,** பேரனான **முசாபர் ஜங்கிற்கும்** இடையே வாரிசுரிமைப் போர் ஏற்பட்டது. கர்நாடகத்தில் தோஸ்த் அலியின் மருமகனான **சந்தாசாகிப்** அன்வருதீனுக்கு எதிராக ஆர்க்காடு அரியணையை அடைய விரும்பினார். சந்தா சாகிப்பும், முசாபர்ஜங்கும் சேர்ந்துகொண்டு பிரெஞ்சுக்காரர் களின் உதவியை நாடினர். எனவே அன்வருதீனும், நாசிர்ஜங்கும் ஆங்கிலேயரின் உதவியைப் பெற்றனர். ஐதராபாத் மற்றும் ஆர்க்காடு அரியணைகளைக் கைப்பற்றுவதில் ஏற்பட்ட சச்சரவே போருக்குக் காரணமாகியது.

***போரின் போக்கு :*** *1749*-ல் பிரெஞ்சுப் படைகள், சாந்தசாகிப் மற்றும் முசாபர்ஜங் ஆகியோரின் படைகளுடன் இணைந்து

**ஆம்பூர்** என்னுமிடத்தில் அன்வாருதீனைத் தோற்கடித்தனர். அப்போரில் அன்வாருதீன் உயிரிழந்தார். அவருடைய மகன் **முகமது அலி** தற்காப்பிற்காக திருச்சிராப்பள்ளிக்குத் தப்பி ஓடினார். அங்கு அவர் ஆங்கிலேயரிடம் சரணடைந்தார். சந்தாசாகிப் கர்நாடக நவாபானார். அவர் டியூப்ளேயின் உதவிக்குக் கைமாறாக **வழுதானூர், வில்லியனூர்** மற்றும் பாண்டிச்சேரிக்கு அருகிலுள்ள **பாகூர்** ஆகிய இடங்களைப் பிரெஞ்சுக்காரர்களுக்கு அளித்தார். பின் முகமது அலியைப் பிடிப்பதற்காக திருச்சிராப் பள்ளியை நோக்கிப் படையெடுத்தார். ஆங்கிலேயர் முகமது அலியின் உதவிக்கு வந்தனர். ஆங்கிலக் கிழக்கிந்திய வணிகக் குழுவின் படைத் தலைவர்களில் ஒருவரான **இராபர்ட் கிளைவ்** ஆர்க்காட்டைத் தாக்குவதற்கு ஒரு திட்டம் தீட்டினார். அதனை ஆளுநர் **சாண்டர்ஸ் (SauVders)** ஏற்றுக் கொண்டார். அவர் கிளைவ் மற்றும் மேஜர் லாரன்சின் தலைமையில் படை ஒன்றை அனுப்பினார். 1751ல் கிளைவ் ஆர்க்காட்டை அதிக எதிர்ப்பின்றி கைப்பற்றினார். பிரெஞ்சுப் படைகளையும், சந்தாசாகிப்பையும் அவர் **ஆரணி, காவேரிப் பாக்கம்** ஆகிய இடங்களில் தோற்கடித்தார். ஆங்கிலேயரிடம் சரணடைந்த சந்தாசாபின் தலை துண்டிக்கப்பட்டது (1752). டியூப்ளேவால் திருச்சிராப்பள்ளியைக் கைப்பற்ற முடியவில்லை. 1754-ஆம் ஆண்டு பிரான்சு அவரைத் திரும்பத் தன் நாட்டுக்கு அழைத்துக் கொண்டது. அவர் சென்றபின் இரண்டாம் கர்நாடகப் போர் முடிவடைந்தது.

எனினும் ஐதராபாத்தில் பிரெஞ்சுக்காரர்களின் நிலைமை வலிமையுடையதாகவே இருந்தது. 1750ல் நாசிர்ஜங் கொலை யுண்டார். முசாபர் ஜங் நிஜாமாகப் பொறுப்பேற்றுப் பிரெஞ்சுக் காரர்களுக்கு ஏராளமான சலுகைகளை வழங்கினார். கர்நாடகப் போரில் ஆர்க்காட்டைக் கைப்பற்றியது ஆங்கிலேயரின் மிகப் பெரிய சாதனையாகும். எனவே கிளைவ் **ஆர்க்காட்டு வீரர்** என்று புகழப்பட்டார்.

**விளைவுகள் :** 1755ல் **பாண்டிச்சேரி உடன்படிக்கை** கையெழுத் தாயிற்று. அதன்படி பிரெஞ்சுக்காரர்களின் பகுதிகள் அவர்களுக்குத் திருப்பி அளிக்கப்பட்டன. கர்நாடகப்பகுதிகளில் ஆங்கிலேயர் வெற்றியடைந்தனர். ஐதராபாத்தில் ஜெரனல் புஸ்ஸி (General Bussy) பிரெஞ்சுச் செல்வாக்கைப் பாதுகாத்து வந்தார்.

***மூன்றாம் கர்நாடகப் போர் (1756 - 1763) காரணங்கள் :*** *ஐரோப்பாவில் வெடித்த* ***ஏழாண்டுப் போரே*** *மூன்றாம் கர்நாடகப் போருக்கு உடனடிக் காரணமாக அமைந்தது. இந்தியாவில் பிரெஞ்சுப் பகுதிகளின் ஆளுநராகவும் முதன்மைப் படைத் தளபதியாகவும்* ***கவுண்ட்-டி-லாலி*** (Count-de-Lally) *என்பவரை, பிரான்சு நாட்டு அரசு இந்தியாவுக்கு அனுப்பி வைத்தது. அவர் இந்தியா வந்தவுடன் செயின்ட் டேவிட் கோட்டையைத் தாக்கி அதனைக் கைப்பற்றினார். சென்னையைக் கைப்பற்றத் திட்டமிட்ட அவர் ஐதராபாத்திலிருந்த பிரெஞ்சுத் தளபதி புஸ்ஸியைத் துணைக்கு அழைத்தார். அது மிகப் பெரிய தவறாக முடிந்தது. புஸ்ஸி ஐதராபாத்திலிருந்து வெளியேறியவுடன் ஆங்கிலேயர்* ***வட சர்க்கார்*** *பகுதிகளை வென்று கைப்பற்றினார். ஐதராபாத்தின் நிசாம் சலாபத் ஜங் ஆங்கிலேயருடன் சேரவேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டார். அதனால் ஐதராபாத்தில் பிரெஞ்சுக்காரர்கள் தம் அரசியல் செல்வாக்கை இழந்தனர். பிரெஞ்சுத் தளபதிகளான லாலியையும், புஸ்ஸியையும் ஆங்கிலேயர் படுதோல்வி அடையச் செய்தனர். 1761-ஆம் ஆண்டு பாண்டிச்சேரியையும் கூட பிரெஞ்சுக்காரர்கள் ஆங்கிலேயரிடம் ஒப்படைத்தனர்.*

***விளைவுகள் :*** *மூன்றாம் கர்நாடகப் போர் 1763-ஆம் ஆண்டு* ***பாரிசு உடன்படிக்கை*** *மூலம் முடிவுக்கு வந்தது. அதன்படி பிரெஞ்சுக் காரர்கள் இனி கோட்டைகளைப் பலப்படுத்தக்கூடாது என்ற நிபந்தனையின் பேரில் பாண்டிச்சேரி, காரைக்கால் மற்றும் பிரெஞ்சுக்காரர்களுக்குச் சொந்தமான இதர பகுதிகள் மீண்டும் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. இந்தியாவில் பிரெஞ்சுக் காரர்களின் பேரவாவிற்கு மூன்றாம் கர்நாடகப் போர் ஒரு முற்றுப்புள்ளி வைத்தது.*

***ஆங்கிலேயரின் வெற்றிக்கான காரணங்கள் :*** *(1) பிரெஞ்சுக்காரர் களுடன் ஒப்பிடுகையில் ஆங்கிலேயரின் நிதி நிலைமை மேன்மையுடையதாகக் காணப்பட்டது, (2) பிரிட்டிஷ் அரசு தமது வணிகக் குழுவிற்குப் போதுமான உதவியை அளித்ததுபோல் பிரெஞ்சு அரசு அளிக்கவில்லை, (3) பிரெஞ்சுக்காரர்களை விட ஆங்கிலேயர்கள் சிறப்பான வணிக வசதிகளைப் பெற்றிருந்தனர், (4) இங்கிலாந்து பிரான்சை விட மிக உயர்ந்த கடல் வலிமை*

யைப் பெற்றிருந்தது, (5) ஆங்கிலப் படைத்தளபதிகளிடையே நல்ல ஒற்றுமை நிலவியது, (6) இங்கிலாந்தில் அமைதி நிலவியதால் ஆங்கிலேயர் இந்திய விவகாரங்களில் முழுக் கவனத்தையும் செலுத்தினர், (7) சிறந்த ஆளுநரான டியூப்ளேயின் சேவை இந்தியாவில் தேவைப்பட்ட காலகட்டத்தில் அவர் திரும்ப அழைக்கப்பட்டதும் அவருக்குப் பின் வந்தவர் டியூப்ளேயைப் போல் திறமையுடையவராக விளங்காததும் பிரெஞ்சுக்காரர்களின் தோல்விக்குக் காரணங்களாக அமைந்தன.

## II. வங்காளத்தில் ஆங்கிலேயர் ஆதிக்க வளர்ச்சி

***அலிவர்திகான்*** 1740ல் தன்னுடைய சுதந்திரத்தினை அறிவித்தார். அவர் வங்காளத்தின் நவாப் ஆனார். 1756ல் **அலிவர்திகான்** மறைவுக்குப் பின் அவருடைய பேரன் **சிராஜ்-உத்-தௌளலா** தன்னுடைய 24வது வயதில் வங்காளத்தின் நவாப் ஆனார். அவர் ஆட்சிக்கு வந்த சிறிது காலத்திற்குள்ளாகவே வங்காளத்தில் அவருக்கும் ஆங்கிலேயருக்கும் இடையே சச்சரவுகள் தோன்றின.

**பிளாசிப்போர் - காரணங்கள் :** ஆங்கிலேயர் வங்காளத்திலிருந்த **வில்லியம் கோட்டையைப்** பலப்படுத்துவதை நிறுத்துமாறு சிராஜ்-உத்-தௌளலா உத்தரவிட்டார். ஆனால் ஆங்கிலேயர் கோட்டையைப் புதுப்பித்தல் பணியை நிறுத்த மறுத்தனர். எனவே நவாப் காசிம்பஜாரிலிருந்த ஆங்கில வணிகத் தலத்தினைத் தாக்கினார். பின் வில்லியம் கோட்டையைக் கைப்பற்றினார். முக்கியமான ஆங்கில அலுவலர் பலர் உயிர் தப்பினர். எனினும் 146 பேர்கள் கைதிகளாக சிறைபிடிக்கப்பட்டனர். அவர்கள் அனைவரையும் சிராஜ் மிகச்சிறிய அறை ஒன்றில் வைத்து அடைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. 1756-ஆம் வருடம் ஜூன் மாதம் 20-ஆம் நாள் அவர்களில் 123 பேர் மூச்சுத்திணறி இறந்ததாகவும் 23 பேர் மட்டுமே உயிர் பிழைத்ததாகவும் கூறப்படுகிறது. இந்த நிகழ்ச்சி **இருட்டறை துயரச் சம்பவம்** (Black Hole Tragedy) என்று ஆங்கில வரலாற்று அறிஞர்களால் வர்ணிக்கப்படுகிறது.

அச்சம்பவத்தினைக் கேள்வியுற்ற சென்னையிலிருந்த ஆங்கிலேயர், இராபர்ட் கிளைவ் மற்றும் கடற்படைத் தளபதி

வாட்சன் (Admiral Watson) ஆகியோர் தலைமையில், ஒரு உதவிப் படையை வங்காளத்திற்கு அனுப்பி வைத்தனர். சிராஜ்-உத்-தௌலாவின் முதன்மைப் படைத்தளபதியான **மீர் ஜாபருடன்** கிளைவ் ஒரு இரகசிய உடன்படிக்கையைச் செய்து கொண்டு நவாபை எதிர்கொள்ளத் தயாரானார்.

***நிகழ்ச்சிகள் :*** *1757-ஆம் ஆண்டு ஜுன் மாதம் 23-ஆம் நாள் நவாபின் தலைநகரான முர்ஷிதாபாத்துக்கு அருகில் இருந்த பிளாசியை நோக்கி கிளைவ் முன்னேறினார். தலைமைத் தளபதியான மீர் ஜாபருடன் கிளைவ் செய்து கொண்ட இரகசிய உடன்படிக்கையின்படி அவர் ஆங்கிலேயருக்கு எதிராக போரில் ஈடுபடவில்லை. நவாப்பின் படைவீரர்கள் போர்க்களத்திலிருந்து தப்பி ஓடினர். பின்னர் நவாபும் கொல்லப்பட்டார். கிளைவின் வாக்குறுதியின்படி மீர்ஜாபர் வங்காளத்தில் நவாப் ஆனார். பிளாசியில் நடந்தது ஒரு சிறு கைகலப்பே தவிர அது ஒரு போர் அல்ல. எனினும் விளைவுகளைப் பொறுத்தவரை இந்திய வரலாற்றில் பிளாசிப்போர் மிகுந்த முக்கியத்துவம் பெற்றதாகக் கருதப்படுகிறது. ஏனெனில் இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சி கால் ஊன்ற அப்போர் வழிவகுத்தது.*

**விளைவுகள் :** *புதிய நவாபிடமிருந்து ஆங்கிலேயர் பெரும் தொகையைப் பெற்றனர். ஆங்கில வணிகக் குழு 24 பர்கானாக் களையும் பெற்றது. மீர்ஜாபர் கிளைவ்வின் கைப்பொம்மையாக மாறினார். அவரிடம் எந்த அதிகாரமும் இல்லை. நாளடைவில் அவரால் ஆங்கிலேயரின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் முடியவில்லை. எனவே 1760ல் அவர் பதவியிலிருந்து விலகும் படி கட்டாயப்படுத்தப்பட்டார். பின்பு அவருடைய மருமகனான மீர்காசிம் வங்காளத்தின் புதிய நவாபாக நியமிக்கப்பட்டார். வெகுவிரைவில் மீர்காசிமாலும் ஆங்கிலேயரின் பெருகி வந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்ய இயலாமல் போனது.*

***பக்சார் போர் (1764) காரணங்கள் :*** *மீர்காசிம் இளமையும், துடிப்பும், பேரார்வமும் உடைய ஆட்சியாளர். அவர் சுதந்திர மாகச் செயல்பட விரும்பினார். தன் தலைநகரைக் கொல்கத்தாவில் இருந்து வெகு தொலைவிலிருந்த மாங்கீர்* (Manghir) *என்னும் இடத்திற்கு மாற்றினார். தன் படைவீரர்களுக்குப் பயிற்சியளிக்க*

வெளிநாட்டுப் பயிற்சியாளர்களை வேலைக்கு அமர்த்தினார். எனவே ஆங்கிலேயருக்கும் நவாபுக்குமிடையே சச்சரவு ஏற்பட்டது. ஆங்கிலேயர் அவரைப் பதவியிலிருந்து இறக்க முடிவு செய்தனர். அதன் விளைவால் 1764-ஆம் ஆண்டு பக்சார் போர் ஏற்பட்டது. அப்போரில் மீர்காசிம், அயோத்தி நவாபான **சுஜா-உத்-தெளலா**, மொகலாய அரசர் **ஷா ஆலம்** ஆகிய மூவருடைய கூட்டணிப் படைகளையும் ஆங்கிலத் தளபதி மேஜர் மன்ரோ தோற்கடித்தார். மீர்காசிம் போர்க்களத்திலிருந்து தப்பி ஓடினார். மற்ற இருவரும் ஆங்கிலேயரிடம் சரண் அடைந்தனர்.

**விளைவுகள் :** 1765-ல் ஏற்பட்ட அலகாபாத் உடன்படிக்கை மூலம் பக்சார் போர் ஒரு முடிவுக்கு வந்தது. அவ்வுடன்படிக்கையின்படி அயோத்தி, சுஜா-உத்-தெளலாவிற்குத் திருப்பி அளிக்கப்பட்டது. ஆனால் அவர் போர் இழப்பீட்டுத் தொகையாக 50 லட்சம் ரூபாய் ஆங்கிலேயருக்கு அளிக்கவேண்டியிருந்தது. ஆங்கிலப்படை ஒன்றை அயோத்தியின் பாதுகாப்பிற்காக நிறுத்த வேண்டிய கட்டாயத்திற்கு சுஜா-உத்-தெளலா உள்ளாக்கப்பட்டார். கோரா, அலகாபாத் ஆகிய மாவட்டங்கள் ஷா ஆலத்திற்கு அளிக்கப் பட்டன. அவர் வங்காளம், பீகார், ஒரிசா ஆகிய பகுதிகளில் இருந்து நிலவரி வசூல் செய்யும் உரிமையை (திவானி உரிமை) ஆங்கிலேயருக்கு அளித்தார். அதற்கு ஈடாக அவர் ஆண்டுக்கு 26 லட்சம் ரூபாயை ஆங்கிலேயரிடமிருந்து ஓய்வூதியமாகப் பெற்றார். பக்சார் போர் ஆங்கிலேயரை வங்காளத்தின் உண்மை யான ஆட்சியாளர்களாக மாற்றியது. அப்போர் அவர்களின் இராணுவ வலிமையையும் எவரையும் எதிர் கொள்ளும் சக்தியையும் வெளிப்படுத்தியது.

வங்காளத்தில் பெற்ற வெற்றியினால் கிளைவ் வங்காளத்தின் முதல் ஆளுநராக (1758 - 1760) நியமிக்கப்பட்டார். அவர் ஆங்கில ஆட்சியை வங்காளத்திலும் தக்காணத்திலும் வலுப்படுத்தினார். அவர் வங்காளத்தில் அறிமுகப்படுத்திய புதிய நிர்வாக முறை **இரட்டை ஆட்சிமுறை** எனப்பட்டது. அதன்படி வங்காளத்தின் நிர்வாகப் பொறுப்பு நவாபிடமும் அதிகாரம் ஆங்கிலேயரிடத்திலும் இருந்தது. எந்த அதிகாரமும் இல்லாத தலைமைப் பொறுப்பு மட்டும் நவாப்பிடமும், எந்த பொறுப்பும் இல்லாத எல்லா அதிகாரங்களும் ஆங்கிலேயரிடமும் இருந்தன.

## III. மைசூர் போர்கள்

***ஐதர் அலி :*** *ஐதர் அலி 1721-ஆம் ஆண்டு பிறந்தார். அவருடைய தந்தை மைசூர் அரசரின் படைப்பிரிவு தலைவராவார் (பேஜ்தார்* Faujdar).

*ஐதர் அலி தன் வாழ்க்கையை ஒரு சாதாரணப் படை வீரராகத் தொடங்கினார். ஐதர் படிப்பறிவற்றவரெனினும் உறுதியும் வியக்கத்தக்க வீரமும், அறிவுக்கூர்மையும், பொதுஅறிவும் கொண்டவர். தனது கடின உழைப்பால் மைசூர் இராணுவத்தின் முதன்மைப் படைத்தளபதியாக ஐதர் உயர்வு பெற்றார். மைசூரின் மன்னர் இறந்தபோது ஐதர் தன்னை நாட்டின் ஆட்சியாளராக அறிவித்து மைசூரின் சுல்தானானார்.*



**ஐதர் அலி**

***முதல் மைசூர் போர் (1767 - 1769) - காரணங்கள் :*** *ஐதர் அலி தன் படையில் பிரெஞ்சு வீரர்களையும் சேர்த்துப் படை வலிமையைப் பெருக்கினார். தென் இந்தியாவின் பல பகுதிகளைக் கைப்பற்றி தன் நாட்டை விரிவாக்கினார். ஐதர் அலியின் வேகமான வளர்ச்சி மராத்தியர், ஐதராபாத் நிசாம் மற்றும் ஆங்கிலேயரின் பொறாமையைத் தூண்டியது. அவர்கள் மூவரும் இணைந்து மூவர் கூட்டணி அமைத்து ஐதர் அலி மீது போர் அறிவித்தனர். ஐதர் தனது திறமையால் மராத்தியரையும் நிசாமையும் வெற்றி கொண்டார். ஆனால் 1767ல் ஸ்மித்* (Smith) *என்ற ஆங்கிலப் படைத் தளபதியால் ஐதர் செங்கம் மற்றும் திருவண்ணாமலையில் தோற்கடிக்கப்பட்டார். அதே நேரத்தில் ஐதர் அலியின் மகனான திப்பு சுல்தான் தன் படைகளுடன் சென்னையை நோக்கி முன்னேறினார். எனவே ஆங்கிலேயர் சமாதான உடன்படிக்கையினைச் செய்து கொள்ள வேண்டியதாயிற்று.*

***விளைவுகள் :*** *1769ல் ஏற்பட்ட* ***மதராசு*** *(சென்னை)* ***உடன் படிக்கை****யுடன் போர் முடிவடைந்தது. அதன்படி ஐதரும்*

ஆங்கிலேயரும் போரில் தாம் கைப்பற்றிய இடங்களைத் திருப்பி அளித்தனர். ஐதர் அலியின் எதிரிகளான நிசாமும், மராத்தியர் களும் மைசூரைத் தாக்கினால் ஐதருக்கு உதவுவதாக ஆங்கிலேயர் ஒப்புக் கொண்டனர்.

**இரண்டாம் மைசூர் போர் *(1780 - 1784)* - காரணங்கள் :** *1771ல் மைசூர் மராத்தியர்களால் தாக்கப்பட்டது. சென்னை உடன் படிக்கையின்படி ஆங்கிலேயர் ஐதர் அலியின் உதவிக்கு வர வில்லை. எனவே ஐதர் அலி கோபமடைந்தார். ஐதர் ஆங்கிலே யரைத் தாக்குவதற்கான சந்தர்ப்பத்தை எதிர்நோக்கியிருந்தார். ஐதர் அலியின் பகுதியிலிருந்த பிரெஞ்சுக்குச் சொந்தமான மாஹியை ஆங்கிலேயர் தாக்கியபோது ஐதர் அலி 1780-ஆம் ஆண்டு ஆங்கிலேயர் மீது போர் அறிவித்தார். அவர் கர்நாடகத்தில் ஆங்கிலப்படையைத் தோற்கடித்தார். அப்பகுதி அவரிடம் சரணடைந்தது. கர்நாடகத்தின் பெரும் பகுதியை ஐதர் கைப்பற்றினார். ஆனால்* ***சர் அயர் கூட்*** (Sir Eyre Coote) *தலைமை யிலான ஆங்கிலப்படை ஐதர் அலியை 1781ல்* **போர்ட் நோவா** *என்னுமிடத்தில் தோற்கடித்தது. போரினிடையில் 1782-ஆம் ஆண்டு ஐதர் அலி புற்றுநோயால் மரணமடைந்தார். ஆனால் அவரது மகன் திப்பு சுல்தான் அடுத்த இரு வருடங்கள் ஆங்கிலேயருடன் தொடர்ந்து போரிட்டார்.*


**திப்பு சுல்தான்**

**விளைவுகள் :** *1784-ல் ஏற்பட்ட* **மங்களூர் உடன்படிக்கை** *மூலம் அப் போர் முடிவடைந்தது. அப்போரில் இருதரப்பினரும் தாம் கைப்பற்றிய இடங்களைத் திரும்பப் பெற்றுக் கொள்வது எனவும் சிறைபிடிக்கப்பட்ட கைதிகளை விடுவிப்பது எனவும் ஒப்புக் கொண்டனர். இரண்டாவது மைசூர் போர் வெற்றி, தோல்வி என எவ்வித விளைவுகளும் இன்றி முடிவடைந்தது.*

**மூன்றாவது மைசூர் போர் :** *காரன் வாலிஸ் பிரபு (1786 - 1793) வங்காளத்தின் தலைமை ஆளுனராக 1786-ஆம் ஆண்டு பொறுப்*

*பேற்றார். அவருக்கு ஆங்கிலப் படைகளின் முதன்மைத் தலைமைப் பொறுப்பும் வழங்கப்பட்டது. அவர் மூன்றாவது மைசூர் போரில் திப்புவுக்கு எதிராகப் போரிட்டார்.*



காரன்வாலிஸ்

***காரணங்கள் :*** *ஆங்கிலேயர் நிசாமுடனும், மராத்தியருடனும் தங்கள் உறவை மேம் படுத்தினர். அதே நேரத்தில் திப்பு தன் வளங்களைப் பெருக்கியதுடன் பிரெஞ்சுக் காரர்களின் உதவியையும் பெற்றார். திப்பு 1789-ஆம் ஆண்டு ஆங்கிலேயரின் நட்பு நாடான* **திருவிதாங்கூரைத்** (Travancore) *தாக்கினார். எனவே காரன்வாலிஸ் 1790ல் திப்புவின் மீது போர் அறிவித்தார். இரு படைகளுமே வெற்றித் தோல்விகளை மாறி மாறிச் சந்தித்தன. அப்போர் 1792ல் முடிவுற்றது.*

***விளைவுகள் :*** *திப்பு ஆங்கிலேயருடன்* ***சீரங்கப்பட்டின உடன் படிக்கை****யைச் செய்து கொண்டார். அதன் விளைவாக தன் நாட்டின் பாதியைத் திப்பு ஆங்கிலேயருக்குக் கொடுக்க நேரிட்டது.* **மலபார், குடகுப்பகுதி, திண்டுக்கல், பாரமகால்** *(தற்போதைய ஈரோடு, சேலம்) ஆகிய பகுதிகள் ஆங்கிலேயருக்குக் கொடுக்கப்பட்டன. அது மட்டுமின்றி மூன்று கோடி ரூபாயைப் போர் இழப்பீட்டுத் தொகையாகக் கொடுக்கும்படி திப்பு வற்புறுத்தப்பட்டார். அப்பெருந்தொகையைக் கொடுக்கும் வரை திப்பு தம் இரு புதல்வர்களையும் பிணைக் கைதிகளாக ஆங்கிலேயரிடம் ஒப்படைக்கும்படி நேரிட்டது.*

***நான்காம் மைசூர் போர் (1799) - காரணங்கள் :*** *சீரங்கப்பட்டினம் உடன்படிக்கையினால் திப்பு மற்றும் ஆங்கிலேயரிடையே அமைதி ஏற்படவில்லை. திப்பு வெல்லெஸ்லி பிரபுவின் துணைப்படைத் திட்டத்தை ஏற்றுக் கொள்ள மறுத்தார். அவர் ஆங்கிலேயரைப் பழிவாங்க எண்ணினார். எனவே காபூல், கான்ஸ்டான்டிநோபிள், அரேபியா மற்றும் பிரான்சு ஆகிய நாடுகளுக்குத் தன் தூதுவர்களை அனுப்பி திப்பு உதவி கோரினார். திப்புவின் நடவடிக்கைகளை அறிந்த வெல்லெஸ்லி பிரபு உடனடியாக 1799ல் திப்புவிற்கெதிராகப் போர் தொடுத்தார்.*

***தளபதி ஸ்டூவர்டு, தளபதி ஹாரிஸ்*** *ஆகியோரால் திப்பு தோல்வியைத் தழுவ வேண்டியதாயிற்று. வெல்லெஸ்லி சீரங்கப்பட்டினத்தை முற்றுகையிட்டபோது திப்பு மிக வீரமாக போரிட்டும் போரில் உயிர் துறக்க நேரிட்டது.*

***விளைவுகள் :*** *மைசூரின் பெரும்பகுதியை ஆங்கிலேயர் தம் அரசுடன் இணைத்துக் கொண்டனர். மைசூரின் மத்தியப்பகுதி வாடியார் மரபைச் சேர்ந்த கிருஷ்ணராஜாவுக்கு அளிக்கப்பட்டது. திப்புவின் குடும்பம் சீரங்கப்பட்டினத்திலிருந்து அகற்றப்பட்டு வேலூர்ச் சிறைக்கு அனுப்பப்பட்டது.*

## IV. துணைப்படைத் திட்டமும் ஆங்கிலேயர் ஆதிக்க விரிவாக்கமும்


வெல்லெஸ்லி பிரபு

*வெல்லெஸ்லி பிரபு இந்தியாவின் தலைமை ஆளுநராக 1798-1805 வரை பதவி வகித்தார். அவர் பல்வேறு கொள்கைகளைப் பின்பற்றி வணிக நிறுவனமாக இருந்த கிழக்கு இந்திய வணிகக் குழுவை இந்தியாவின் மிகப் பெரும் வல்லமைச் சக்தியாக உயர்த்தினார். ஆங்கிலேய ஆட்சியை விரிவுபடுத்த அவர் மூன்று முறைகளைக் கையாண்டார். அவைகள் : (1) துணைப் படைத் திட்டம், (2) போரின் மூலம் நாடுகளைக் கைப்பற்றுதல், (3) நாடுகளை இணைத்தல் ஆகும். இவற்றில் துணைப்படைத் திட்டத்தைப் பற்றி இங்கு அறிந்து கொள்வோம். நட்புமுறையில் ஆங்கிலேயருடன் உடன்படிக்கைச் செய்து கொள்ளுமாறு இந்திய அரசுகளை வெல்லெஸ்லி வேண்டினார். அவ்வாறு உடன் படிக்கையில் சேர்ந்த அரசுகள் கீழ்க்கண்ட நிபந்தனைகளைப் பின்பற்ற வேண்டுமென வற்புறுத்தப்பட்டன. அவைகள் :*

1. *ஆங்கிலேயரின் மேலாண்மையை ஏற்றுக் கொள்ளுதல்,*
2. *ஆங்கிலேயரின் பிரதிநிதி ஒருவரையும் ஆங்கிலத்துணைப் படையையும் தங்கள் பகுதியில் வைத்துக் கொள்ளுதல்,*



வெல்லெஸ்லியின் கீழ்
ஆங்கிலப் பகுதிகள்
(1799-1805)
காபூல்
பெஷாவர்
ஆப்கானியர்
முல்தான்
டெல்லி
குமாயைன்
சிந்து
ஜோத்பூர்
ஜெய்பூர்
அயோத்தி
1801
லக்னோ
அலகாபாத்
பாட்னா
கூச்
மீகார்
உதய்பூர்
பந்தேல்கண்ட்
வங்காளம்
1803
கொல்கத்தா
பரோடா
புரோச்
நாக்பூர்
சால்செட்
பஸ்சீன்
நிசாம்
1803
மும்பை
பூனா
1798
கட்டாக்
ஹைதராபாத்
1803
ஒரிசா
1800
வங்கக் கடல்
அரபியக் கடல்
மசூலிப்பட்டினம்
மங்களூர்
சென்னை
கோழிக்கூடு
தஞ்சாவூர்
கொச்சின்
திருவிதாங்கூர்
திருவனந்தபுரம்
இலங்கை
வ
மே
கி
தெ
இந்து மகாக் கடல்

3. துணைப்படைகளைப் பராமரிக்க அவ்வரசுகள் சில பகுதிகளை ஆங்கில வணிகக் குழுவுக்குக் கொடுத்தல்,

4. துணைப்படைத் திட்டத்தில் சேரும் அரசர்கள் ஆங்கிலே யரைத் தவிர வேறு எந்த ஐரோப்பியருடனும் தொடர்பு வைத்துக் கொள்ளாதிருத்தல்,

5. ஆங்கிலத் தலைமை ஆளுநரின் அனுமதியின்றி அவ் வரசுகள் மற்ற அரசுகளுடன் எவ்வித பேச்சுவார்த்தையிலும் ஈடுபடுதல் கூடாது,

6. இந்நிபந்தனைகளுக்கு உட்பட்ட அரசுகளை வெளித் தாக்குதலிலிருந்து ஆங்கிலேயர் பாதுகாப்பதாகவும் அவை களின் உள் விவகாரங்களில் தலையிடுவதில்லை எனவும் உறுதியளித்தனர்.

**துணைப்படைத் திட்டத்தில் சேர்ந்த நாடுகள் :** 1. ஐதராபாத் நிசாம் துணைப்படைத் திட்டத்தை முதன் முதலில் ஏற்றார். அவர் கடப்பை, பெல்லாரி, அனந்தப்பூர் மற்றும் கர்நூல் ஆகிய பகுதி களை ஆங்கிலேயரிடம் ஒப்படைத்தார். (2) திப்பு சுல்தான் இறந்த பின்பு மைசூரின் ஆட்சியைத் திரும்பப் பெற்ற கிருஷ்ண ராஜ வாடியாரும் இத்திட்டத்தில் சேர்ந்தார், (3) அயோத்தி நவாப் இத்திட்டத்தை ஏற்று **ரோஹில் கண்ட்** மற்றும் **தோ ஆப்** பகுதியின் தென்மாவட்டங்களை அளித்தார், (4) பீஷ்வா இரண்டாம் பாஜி ராவ் மற்றும் அநேக இராசபுத்திர மன்னர்களும் துணைப்படைத் திட்டத்தை ஏற்றுக் கொண்டனர்.

**இத்திட்டத்தின் சிறப்புகள் :** (1) இத்திட்டத்தினால் ஆங்கிலேயர் இந்தியாவில் மேலாதிக்கம் பெற்றனர், (2) ஆங்கிலேயரின் வளமும் செல்வாக்கும் மிகுந்த அளவில் பெருகியது, (3) இந்திய மன்னர்களை ஆங்கிலேயர் தம் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்க இத்திட்டம் உதவியது, (4) இந்திய அரசுகளின் செலவில் நிலையான மிகப்பெரிய படையை ஆங்கிலேயர் பராமரிக்க இத்திட்டம் உதவியது, (5) இத்திட்டத்தினை ஏற்ற பல இந்திய அரசுகள் தங்கள் நாட்டின் பல பகுதிகளை ஆங்கிலேயருக்கு அளித்ததால் ஆங்கிலப் பேரரசின் எல்லைகள் விரிவடைந்தன.

***குறைகள் :*** *(1) இத்திட்டத்தினை ஏற்ற சுதேச அரசுகள் தங்கள் மதிப்பையும் செல்வாக்கையும் இழந்தன, (2) துணைப் படைத் திட்டத்தில் சேர்ந்த இந்திய மன்னர்களிடம் இருந்து கோரப்பட்ட உதவித் தொகை அவர்களது தகுதிக்கும், வருவாய்க்கும் மேலான தாய் இருந்தது. எனவே அவ்வரசுகள் தம் குடிமக்கள் மீது அதிக வரியைச் சுமத்தினர், (3) இந்திய மன்னர்கள் தங்கள் படைகளைக் கலைக்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளானார்கள். அவ்வாறு கலைக்கப்பட்ட படைவீரர்கள் நாளடைவில் தக்கர், பிண்டாரிகள் போன்ற கொள்ளையர்களுடன் சேர்ந்து பொதுமக்களுக்குத் தொல்லை கொடுக்கலாயினர், (4) துணைப் படைத்திட்டத்தில் சேர்ந்த மன்னர்களின் பாதுகாப்பில் ஆங்கிலே யர்கள் அக்கரை காட்டியதால் சுதேச அரசர்கள் பொறுப்பற்ற வாழ்க்கை வாழ்ந்து தங்கள் மதிப்பையும் இழந்தனர், (5) இந்திய மன்னர்கள் தமக் கிடையே நேரிடையாகப் போர் புரிய அனுமதிக்கப்படவில்லை எனினும், அவர்கள் சதிவேலைகளில் ஈடுபட்டுப் போர் ஆயத்தங்களைச் செய்யலாயினர்.*

| |
|---|
| *வெல்லெஸ்லி பிரபுவின் நாடு இணைப்புக் கொள்கை யால் ஆங்கிலேயரின் அரசியல் ஆதிக்கம் மிகப்பெரிய அளவில் விரி வடைந்தது. எனவே சில வரலாற்று அறிஞர்கள் வெல்லெஸ்லி பிரபுவை ''ஆங்கிலக் கிழக்கிந்திய வணிகக் குழுவின் அக்பர்'' என்று அழைக்கின்றனர்.* |

## V. மராத்தியப் போர்கள்

***முதல் மராத்தியப் போர் :*** *வாரன்ஹேஸ்டிங்சு தலைமை ஆளுந ராக நிருவாகம் செய்த போது (1772 - 1785) முதல் மராத்தியப் போர் நிகழ்ந்தது. 1772ல் மராத்திய அரசின் பீஷ்வாவான மாதவராவ் பீஷ்வா இறந்தார். அவருக்கு வாரிசு இல்லை. எனவே அவருடைய இளைய சகோதரர், நாராயணராவ் பீஷ்வா ஆனார். ஆனால் அவருடைய சிறிய தந்தையும் பேராசையும் மிகுந்த, ரகோபா என அழைக்கப்பட்ட, ரகுநாதராவால் அவர் கொலை செய்யப்பட்டார். ரகுநாத ராவ் தன்னைப் பீஷ்வாவாக அறிவித்துக் கொண்டார். ஆனால் ரகோபா ஆட்சிப் பொறுப்பேற்றதை அரச விசுவாசம் கொண்ட மூத்த மராத்திய அரசியல் தலைவரான* ***நானா பட்னாவிஸ்*** *எதிர்த்தார். அவர் கொலையுண்ட நாராயண ராவின் மகனான மாதவராவ் நாராயணை அரியணையில் அமர்த்த*

விரும்பினார். ரகோபா ஆங்கிலேயரின் உதவியை நாடினார். அவர் 1775ல் மும்பை ஆளுநருடன் **சூரத் உடன்படிக்கை**யில் கையெழுத்திட்டார். அவ்வுடன்படிக்கையின்படி தனக்குப் பீஷ்வா பதவி கிடைப்பதற்கு ஆங்கிலேயர் உதவினால் அவர்களுக்குச் சால்செட், பஸ்ஸின் ஆகிய தீவுகளை அளிக்க ரகோபா ஒப்புக் கொண்டார். அவ்வுடன்படிக்கை ஆங்கிலத் தலைமை ஆளுநரான வாரன்ஹேஸ்டிக்குக்குத் தெரியாமல் மேற்கொள்ளப்பட்டதால் அவர் அந்த உடன்படிக்கையை நிராகரித்தார்.

> வங்காளத்தின் ஆளுநர், தலைமை ஆளுநர் எனவும் அழைக்கப்பட்டார். அவர் இந்தியாவிலிருந்த அனைத்து ஆங்கிலேயர்களுக்கும் உயர் அதிகாரியாவார்.

1776-ல் நானா பட்னாவிஸ் ஆங்கிலேயருடன் **புரந்தர் உடன் படிக்கை** செய்து கொண்டார். நானாபட்னாவிஸ் அவ்வாறு தன் நிலையை உயர்த்திக் கொண்டு ரகோபாவைத் தோற்கடித்தார். அப்போர் 1782-ஆம் ஆண்டு ஏற்பட்ட **சால்பை உடன்படிக்கை** யுடன் முடிவுக்கு வந்தது.

**விளைவுகள் :** மாதவராவ் நாராயண் பீஷ்வா ஆனார். ஆங்கிலேயர் சால்செட் தீவைத்தவிர மற்ற பகுதிகளைத் திருப்பி அளித்தனர். ரகோபாவிற்கு ஆண்டு ஓய்வு ஊதியமாக மூன்று லட்சம் ரூபாய் வழங்கப்பட்டது.

**இரண்டாம் மராத்தியப்போர் 1803 - காரணங்கள் :** மூத்த மராத்திய அரசியல் தலைவரான நானா பட்னாவிஸ் 1800-ஆம் ஆண்டு இறந்தார். அவருடைய மறைவிற்குப் பின் மராத்தியத் தலைவர்க ளான **பான்ஸ்லே, சிந்தியா** ஆகியோரிடையே போர் ஏற்பட்டது. அப்போது ஆட்சிபுரிந்த பீஷ்வா இரண்டாம் பாஜிராவ் வலிமை யற்ற அரசராய் விளங்கினார். எனவே அவர் தன் பாதுகாப்பிற்கு ஆங்கிலேயரின் உதவியை நாடினார். ஆங்கிலேயர் பான்ஸ்லே, சிந்தியா ஆகியோரின் ஒன்றிணைந்த படைகளைத் தோற் கடித்தனர்.

**விளைவுகள் :** பான்ஸ்லேயும் சிந்தியாவும் துணைப்படைத் திட்டத்தினை ஏற்றுக் கொண்டனர். நாளடைவில் மராத்தியர் தங்கள் வலிமையை இழந்தனர்.

**மூன்றாம் மராத்தியப் போர் (1817 - 1818) - காரணங்கள் :** 1817ல் பீஷ்வா இரண்டாம் பாஜிராவ் ஆங்கிலேயருக்கு எதிராக

மராத்திய தலைவர்களின் கூட்டமைப்பு ஒன்றினை உருவாக்க முயற்சி செய்தார். அச்சமயத்தில் பீஷ்வாவின் அமைச்சர் ஒருவரால் ஆங்கிலேயரின் நண்பரான பரோடா முதலமைச்சர் கொலைச் செய்யப்பட்டார். அதன் விளைவாக ஆங்கிலேயரால் பீஷ்வா இரண்டாம் பாஜிராவ் இழிவான ஒரு உடன்படிக்கையில் கையெழுத்திடுமாறு வற்புறுத்தப்பட்டார். அதற்கு உடன்பட மறுத்ததுடன் பீஷ்வா ஆங்கிலேயர் மீது போரையும் தொடுத்தார். ஆனால் அவர் ஆங்கிலேயரால் தோற்கடிக்கப்பட்டார். அவ் வெற்றியினைத் தொடர்ந்து தலைமை ஆளுநரான ஹேஸ்டிங்சுப் பிரபு இந்தியாவில் ஆங்கிலேயரின் ஆதிக்கத்தை நிலை நாட்டினார்.

**விளைவுகள் :** பீஷ்வாவின் அதிகாரம் உயிர்த்தெழாதவாறு சிதைக்கப்பட்டது. மராத்தியத் தலைவர்களின் பலமும் குறைந்தது. அவர்கள் ஆங்கிலேயர்களின் கீழ் ஆட்சி செய்யும் நிலைக்கு வந்தனர். இந்தியாவை ஆங்கிலேயர்களிடமிருந்து காப்பாற்ற மராத்தியர் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வி யுற்றன. பீஷ்வா இரண்டாம் பாஜிராவிற்கு வருட ஓய்வூதியமாக ரூபாய் 8 லட்சம் அளிக்கப்பட்டது. மராத்தியப் பகுதிகளைக் கொண்டுதான் மும்பாய் (பம்பாய்) மாநிலம் உருவாகியது.

> மார்ஷ்ஸ்மான் (Marshman) என்ற வரலாற்றாசிரியரின் கருத்துப்படி மராத்தியப் போர்களின் விளைவால் சுதேச இராணுவம் மட்டுமின்றி சுதேச மனநிலையும் அடிமைப் படுத்தப்பட்டது.

ஆங்கிலேயர் சத்ரபதி சிவாஜியின் மரபில் வந்த **பிரதாப் சிங்கை சதாரா**வின் மன்னராக்கினர். அவர் ஆங்கில ஆட்சிக்குக் கீழ்ப்படிந்த சிற்றரசாக விளங்கினார்.

**மராத்தியர்களின் வீழ்ச்சிக்கான காரணங்கள் :** அவைகள் (1) மராத்தியரின் பலவீனம், (2) அரசியல் வல்லமையின்மை, (3) திறமையற்ற தலைமை, (4) நிலமான்ய அமைப்பு, (5) மராத்தியரின் சமூக அமைப்பில் காணப்பட்ட குறைபாடுகள், (6) அரசின் பொருளாதார விவகாரங்களின் புறக்கணிப்பு, (7) ஆங்கிலேயரின் சிறந்த இராஜதந்திர திறனும், ஒற்றர் அமைப்பும் ஆகும்.

## VI. வில்லியம் பென்டிங் பிரபுவின் கீழ் இந்தியர் நலம்


வில்லியம் பென்டிங் பிரபு

***வில்லியம் பென்டிங் பிரபு (1828 - 1835)*** *தலைமை ஆளுநராக 1828-ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டார். அவர் மிகுந்த திறனும், நல்லெண்ணமும், மதிநுட்பமும் வாய்ந்த நிர்வாகி. அரசின் நலன் ஆளப்படும் மக்களின் நலனை அடிப்படையாகக் கொண்டது என்ற கொள்கையுடன் செயலாற்றிய அறிவார்ந்த முதல் தலைமை ஆளுநர் அவரே.*

*அவர் மக்களுக்கு நன்மையளிக்கும் சில சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தி நிர்வாகத்தில் தனது முத்திரையைப் பதித்துச் சென்றார். அவருடைய சீர்திருத்தங்களை மூன்று தலைப்புகளில் வகைப்படுத்தலாம். அவை : (1) பொருளாதார சீர்திருத்தங்கள், (2) நிர்வாக சீர்திருத்தங்கள், (3) சமூக சீர்திருத்தங்கள் ஆகியனவாகும்.*

*இப்பகுதியில் அவருடைய சமூக சீர்திருத்தங்களைப் பற்றி அறியலாம். பத்தொன்பதாம் நூற்றாண்டு இந்தியாவில், 'சதி' எனப்படும் உடன்கட்டை ஏறுதல், பலதார மணம், குழந்தைத் திருமணம், பெண்சிசுக் கொலை, பெண்களை விற்பனை செய்யும் பழக்கம், கணவனை இழந்த விதவைப் பெண்களின் பரிதாப நிலை போன்ற சமூகக் கொடுமைகள் நிலவியிருந்தன. அத்தகைய கொடிய பழக்கங்கள் ஆழமாக வேரூன்றி இந்தியப் பண்பாட்டினையும், இந்திய ஒற்றுமையையும் பாதித்தன. அவற்றில் சில தீமைகளைப் பென்டிங் பிரபு அகற்ற முயற்சித்தார்.*

***சதி ஒழிப்பு :*** *சதி எனும் உடன்கட்டை ஏறுதல் இந்துக்களிடையே காணப்பட்ட மிகக் கொடிய பழக்கங்களில் ஒன்றாகும். அதன்படி கணவனை இழந்த மனைவி தன் கணவன் உடலை எரிப்பதற்காக மூட்டப்பட்ட சிதையில் தானும் உயிருடன் எரிந்து தன் உயிரை மாய்த்துக் கொள்ள வேண்டும். தொடக்கத்தில் துக்கம் தாங்காமல்*

தானாக அவ்வாறு செய்தனர். ஆனால் நாளடைவில் விதவைகள் உறவினர்களின் வற்புறுத்தலால் உயிரை மாய்த்துக் கொள்ளக் கட்டாயப்படுத்தப்பட்டனர். பெண்களுக்கு இழைக்கப்பட்ட மனிதத்தன்மையற்ற அச்செயலைப் பெண்டிங் பிரபுவால் சகித்துக் கொள்ள முடியவில்லை. எனவே 1829ல் அவரது அரசு ஒரு சட்டம் இயற்றியது. அச்சட்டம் உடன்கட்டை ஏறுதல் சட்ட விரோதமான குற்றம் என அறிவித்தது. பெண்களை உடன் கட்டை ஏறும்படி வற்புறுத்தும் எவருக்கும் மரணதண்டனை அளிக்கப்படும் என்று அச்சட்டம் கூறியது. அச்சட்டம் நிறைவேற வங்காளத்தின் புகழ்மிக்க சமூக சீர்திருத்தவாதிகளான இராசாராம் மோகன்ராய் மற்றும் தேவேந்திரநாத தாகூர் ஆகியோர் ஆதரவினை பெண்டிங் பெற்றார்.

**உயிர் பலியிடுதல் மற்றும் பெண் சிசுக்கொலை ஒழிப்பு :** கடவுளரைத் திருப்திப்படுத்த மனித உயிர்களைப் பலிகொடுக்கும் வழக்கம் இந்தியாவில் ஒருசில குறிப்பிட்ட இனத்தவரிடம் காணப்பட்டது. மேலும் பெண் சிசுக்கொலை எனப்படும் பிறந்தவுடனேயே பெண் குழந்தைகளைக் கொல்லும் பழக்கம் குறிப்பாக இராஜஸ்தானம், மேற்கு, மைய இந்தியாவின் சில பகுதிகளில் காணப்பட்டது. இராசபுத்திரர்களில் பெரும்பான்மை யான இளைஞர்கள் பல போர்களில் ஈடுபட்டு இறந்ததால் அவர்களின் எண்ணிக்கை மிகக் குறைந்தது. மேலும் பாலைவனப் பகுதிகளில் பெண்களின் வாழ்க்கை முறை மிகக் கடினமாக இருந்ததும், மற்ற பகுதிகளில் வரதட்சணை முறை பின்பற்றப் பட்டதும் அதற்குக் காரணமாக அமைந்தன. அவ்விரு பழக்கங் களும் சட்டவிரோதமானவை என்றும் அதை மீறுவோர் கடுமை யான தண்டனைக்கு உள்ளாவார்கள் என்றும் பெண்டிங் பிரபு அறிவித்தார்.

**தக்கர்களை அடக்குதல் :** தக்கர்கள் என்ற கொள்ளைக் கூட்டம் ஒன்றுமறியா பயணிகளையும், வணிகப் பயணிகளையும் தாக்கி அவர்களிடமிருந்து பொருட்களைப் பறித்து வந்தது. அப் பிரச்சனை மத்திய இந்தியாவில் நிலவியது. தக்கர்கள் காடு களிலும் மக்கள் நடமாட்டம் குறைந்த பகுதிகளிலும் வசித்து வந்தனர். வணிகப் பயணிகள் வழிப்பறி செய்யப்பட்டதால்,

*பயணம் செய்வது மிகவும் அபாயகரமானதாகியது. அச் சமூக விரோத செயல்களுக்கு பென்டிங் பிரபு முடிவுகட்ட விரும்பினார். எனவே அவர் மேஜர் ஸ்லீமென் (Major Sleeman) என்பவரின் தலைமையில் ஒரு புதிய துறையை ஏற்படுத்தினார். தக்கர்கள் பெரும் அளவில் சிறை பிடிக்கப்பட்டனர். அவர்களுக்கு மரண தண்டனையோ அல்லது மிகக் கடுமையான தண்டனைகளோ அளிக்கப்பட்டன. தக்கர்களின் குழந்தைகள் சீர்திருத்த திட்டங்கள் மூலம் மறுவாழ்வு பெற வகை செய்யப் பட்டது. அவர்கள் கைத்தொழிலில் பயிற்சி பெற, தொழிற் பயிற்சிப்பள்ளி ஒன்று தொடங்கப்பட்டது. இவ்வாறு தக்கர்களின் ஆபத்து முழுவதும் நீக்கப்பட்டது.*

***கல்விச் சீர்திருத்தங்கள் :*** *பென்டிங் பிரபு தலைமை ஆளுநர் பதவியில் இருந்தபோது பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் ஆங்கிலம் பயிற்று மொழியாக புகுத்தப்பட்டது. தலைமை ஆளுநரின் சட்ட ஆலோசகரான மெக்காலே பிரபு என்பவர் அதற்குக் காரணமாவார். அவர் 1835ல் ஒரு தீர்மானத்தை நிறை வேற்றினார். அதன்படி பென்டிங் பிரபு ஆங்கிலமொழியை இந்தியாவின் அலுவலக மொழியாக மாற்றினார். மேலும் அவர் கிறித்துவ சமயப்பரப்பூழியர்கள் பள்ளிகளையும், கல்லூரிகளை யும் நிறுவ ஊக்குவித்தார். அது முதற்கொண்டு இந்தியாவின் நடுத்தர உயர்குடி மக்களிடையே மேற்கத்திய கல்விமுறை பரவ ஆரம்பித்தது.*

## VII. வாரிசு இழப்புக் கொள்கையும் ஆங்கிலேயர் ஆதிக்கம் விரிவடைதலும்

***டல்ஹௌசி பிரபு (1848 - 1856)*** *இந்தியாவை ஆட்சி செய்த புகழ்மிக்க ஆளுநர்களில் ஒருவராவார். அவர் ஏராளமானப் பகுதிகளை ஆங்கிலேய ஆட்சியுடன் இணைத்தார். போர்கள் மூலம் நாடுகளை இணைக்கும் கொள்கையைப் பின்பற்றினார். பஞ்சாபையும், கீழ் பர்மாவையும், போர்கள் மூலம் இணைத்துக் கொண்டார். ஆங்கில ஏகாதிபத்தியத்தை இந்தியாவில் நிலை நாட்ட வாரிசு இழப்புக் கொள்கையைப் பின்பற்றினார். அதே நேரத்தில் இந்தியா நவீனமயமாக்கப் படுவதற்கான அடித்தளத் தினையும் அவர் அமைத்தார்.*

டல்ஹௌசியின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய சர் டபிள்யூ. டபிள்யூ. ஹண்டர் (Sir W.W. Hunter) என்பவர் இந்தியாவில் டல்ஹௌசியின் பணிகளைச் சுருக்கமாக மூன்றே மூன்று வார்த்தைகளில் விளக்குகிறார். **வெற்றி கொள்ளுதல், ஒருங்கிணைத்தல், முன்னேறுதல்** ஆகியன எனக்கூறுகிறார்.

**வாரிசு இழப்புக் கொள்கை** (Doctrine of Lapse) *(ஆங்கிலேயரின் வசமாதல்) :* இந்துக்கள் தங்களுக்கு வாரிசு இல்லாமல் இருந்தால் ஆண் பிள்ளையைத் தத்து எடுத்துக் கொள்ளும் உரிமையைப் பெற்றிருந்தனர். அவ்வாறு தத்து எடுக்கப்பட்ட மகனுக்கு எல்லா உரிமைகளும், கடமைகளும் உண்டு. தத்தெடுக்கப்பட்டவரும் இயற்கை வாரிசுகளைப் போல தந்தையின் பொறுப்புகளைப் பகிர்ந்து கொண்டனர். முதலில் சுதேச மன்னர்களின் தத்தெடுக்கும் உரிமையை ஆங்கிலேயர் எத்தகைய தயக்கமும் இன்றி ஒப்புக் கொண்டனர்.

டல்ஹௌசி தலைமை ஆளுநராகப் பதவி ஏற்றபின் ஆங்கில ஆட்சியை விரிவுபடுத்த வாரிசு இழப்புக் கொள்கையைப் பின்பற்றினார். அவரது பதவிக்காலத்தில் ஆங்கிலேயர்களால் ***உருவாக்கப்பட்ட அரசுகள், அவர்களைச் சார்ந்திருந்த அரசுகள், சுதந்திர அரசுகள்*** என மூவகையான இந்திய அரசுகள் இந்தியாவில் இருந்தன.

1. ***ஆங்கிலேயரால் உருவாக்கப்பட்ட அரசுகள் :*** இவ்வரசுகளை ஆங்கிலேயர் உருவாக்கினர். இந்நாடுகளின் அரசர்கள் தங்களின் இறப்பிற்குப் பின் அரியணைக்கு வாரிசுகளைத் தத்து எடுக்க அனுமதிக்கப்படவில்லை.

2. ***ஆங்கிலேயரைச் சார்ந்திருந்த நாடுகள் :*** இவ்வரசுகள் ஆங்கில ஆதிக்கத்தினைச் சார்ந்திருந்தன. இந்த நாடுகளின் அரசர்கள் தத்தெடுக்க வேண்டுமெனில் ஆங்கிலேயரின் அனுமதியைப் பெற வேண்டியிருந்தது. அவர்களுக்கு ஆங்கிலேயர் அனுமதி அளிக்கலாம் அல்லது மறுக்கலாம்.

3. ***சுதந்திர அரசுகள் :*** இவ்வரசுகளின் மன்னர்கள் தத்தெடுக்கும் சுதந்திரம் பெற்றிருந்தனர். ஆனால் தத்தெடுக்கப்

பட்டவர்கள் மறைந்த அரசரின் சொந்த சொத்துக்களுக்கு மட்டுமே வாரிசாக முடியுமேயன்றி அரியணையைப் பெற முடியாது. அரியணைக்கு வாரிசுரிமையை ஆங்கிலேயரின் அனுமதியுடன்தான் பெறமுடியும்.

**வாரிசு இழப்புக் கொள்கை மூலம் இணைக்கப்பட்ட நாடுகள் :** இக்கொள்கையின் மூலம் டல்ஹௌசி சதாரா, ஜெய்த்பூர், சம்பல்பூர், உதயபூர், ஜான்சி மற்றும் நாக்பூர் ஆகிய பகுதிகளை ஆங்கிலப் பேரரசுடன் இணைத்துக் கொண்டார். அவற்றில் சதாரா, நாக்பூர், ஜான்சி ஆகிய நாடுகளின் இணைப்பு சற்றும் நியாயமற்றதாகும். 1857ல் நடந்த பெரும் புரட்சியில் ஜான்சி ராணி இலட்சுமிபாய் தன்னை எதிர்த்த ஒவ்வொரு ஆங்கில வீரனையும் கொன்று குவித்து தன் நாட்டைப் பறித்த ஆங்கிலேயரைப் பழிதீர்த்துக் கொண்டார்.

**வாரிசு இழப்புக் கொள்கையின் விளைவுகள் :** இக்கொள்கையினால் பாதிக்கப்பட்ட மன்னர்களின் வெறுப்புக்கு ஆங்கிலேயர் ஆளாயினர். அவர்கள் ஆங்கிலேயரின் தீவிர எதிரிகளாக மாறினர். மேலும் 1857-ஆம் ஆண்டு நடந்த பெருங்கலகத்திற்கான முக்கிய காரணங்களில் இக்கொள்கையும் ஒன்றாகும். ஆங்கிலேயர் மீது, மக்களின் வெறுப்பு அலை வீச வாரிசு இழப்புக் கொள்கை காரணமாயிற்று. தங்கள் நாடுகளும் ஆங்கில ஆட்சியுடன் இணைக்கப்பட்டுவிடுமோ என்ற பய உணர்வு இந்திய அரசர்களிடம் தொடர்ந்து காணப்பட்டது. மக்களும் ஆங்கில ஆட்சியை வெறுத்தனர். மக்கள் சுதேச மன்னர்களால் ஆட்சி செய்யப்படுவதையே விரும்பினர். தத்தெடுப்பதை அனுமதித்த இந்துச் சட்டத்திற்கு முரணானதாக வாரிசு இழப்புக் கொள்கைக் கருதப்பட்டது.

**டல்ஹௌசியின் நவீன மயமாக்கல் நடவடிக்கைகள் :** டல்ஹௌசி பல சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தினார். இருப்புப் பாதை போக்குவரத்து, தந்தி முறை, மலிவான தபால் முறை ஆகியன அவருடைய காலத்தில் அறிமுகப்படுத்தப் பட்டவைகளில் மறக்க முடியாதவை ஆகும்.

**இருப்புப்பாதை போக்குவரத்து :** இந்தியாவில் முதன்முதலாக 1853-ஆம் ஆண்டு **மும்பையிலிருந்து தானா** வரை 20 மைல் (36 கி.மீ.) தூரத்திற்கு இருப்புப்பாதை அமைக்கப்பட்டது. 1854ல்

***ஹௌராவிலிருந்து ராணிகஞ்ச்*** *என்னுமிடம்வரை இருப்புப் பாதை அமைக்கப்பட்டது. 1856ல்* ***சென்னையிலிருந்து அரக்கோணம்*** *வரையிலான இருப்புப்பாதை அமைக்கப்பட்டது. எனவே டல்ஹௌசி* ***இந்திய இருப்புப்பாதை திட்டத்தின் தந்தை*** *என்று அழைக்கப்படுகிறார்.*

***பொதுப் பணித்துறை :*** *புது சாலைகள் அமைத்தல், கால்வாய்கள் வெட்டுதல், பாலங்கள் கட்டுதல் ஆகிய பணிகளுக்காக பொதுப் பணித்துறை உருவாக்கப்பட்டது. அத்துறை ஏற்கனவே புழக்கத்தி லிருந்தவற்றைச் சீரமைக்கும் பணியிலும் ஈடுபட்டது. அவர் பதவிக் காலத்தில்* ***கங்கைக் கால்வாய்*** *வெட்டப்பட்டது. கொல்கத்தாவையும் பெஷாவரையும் இணைத்த* ***'கிராண்ட் டிரங்க்'*** (Grand Trunk) *எனப்படும் பெரு வழிச் சாலையும், அவருடைய காலத்தில் அமைக்கப்பட்டது.*

***தபால் தந்தி முறை :*** *டல்ஹௌசி அரைஅணா (3 பைசா)* ***தபால் முறையையும்*** *அறிமுகப்படுத்தினார். அதே போல்* ***தந்தி முறையையும்*** *அறிமுகப்படுத்தினார். 1853 - 1856 வரையிலான கால கட்டத்தில் சுமார் 4000 மைல் (6400 கி.மீ.) தூரத்திற்குத் தந்தி இணைப்புகள்* ***கொல்கத்தா, பெஷாவர், மும்பை, சென்னை*** *ஆகிய நகரங்களை இணைக்கும் விதமாக அமைக்கப்பட்டன. அவற்றின் இராணுவ முக்கியத்துவம் 1857ல் நடந்த புரட்சியின் போது உணரப்பட்டது.*

***கல்வி :*** *1854ல் சர் சார்லஸ் உட்* (Sir Charles Wood's Despatch of 1854) *அறிக்கையின் அடிப்படையில் டல்ஹௌசி கல்வித் துறையில் சில மாற்றங்களைக் கொண்டு வந்தார். ஒவ்வொரு மாகாணத்திலும் பொதுக்கல்வித்துறை* (Department of Public Instruction DPI) *ஒன்று ஏற்படுத்தப்பட்டது.* ***மும்பை, கொல்கத்தா, சென்னை*** *ஆகிய இடங்களில் பல்கலைக் கழகங்கள் நிறுவ முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அவை 1857ல் திறக்கப் பட்டன.*

*தாய்மொழி மூலம் பயிற்றுவித்தலுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. தனியார் கல்வி நிறுவனங்களை ஊக்குவிக்க மானியம்* (Grants-in-aid) *வழங்கும் முறை அறிமுகப்படுத்தப் பட்டது.*



டல்ஹௌசியின் கீழ்
ஆங்கிலப் பகுதிகள்
(1848 - 56)
காஷ்மீர்
காபூல்
பெஷாவர்
ஸ்ரீநகர்
திபெத்
ஆப்கானிஸ்தான்
பஞ்சாப்
லாகூர்
கபூர்தாலா
முல்தான்
பாடியாலா
டெல்லி
ராம்பூர்
நேபாளம்
பகவல்பூர்
அயோத்தி
இராஜஸ்தான்
சிக்கிம்
பூடான்
அஜ்மீர்
ஜெய்பூர்
லக்னோ
ஜைர்பூர்
சிந்து
ஜோத்பூர்
கராலி
குவாலியர்
அலகாபாத்
பீகார்
அசாம்
கட்ச்
ஹோல்கர்
சிந்தியா
ஜான்சி
பனாரஸ்
வங்காளம்
ரேவா
திப்பெரா
குஜராத்
பரோடா
போபால்
உதய்பூர்
சந்திர நாகூர்(பி)
கத்தியவார்
நாக்பூர்
சம்பல்பூர்
டையூ
(போ)
சூரத்
பேரார்
(1853ல் வழங்கப்பட்டது)
கொல்கத்தா
பர்மா
அரகான்
மும்பை
பூனா
ஐதராபாத்
நிசாம்
சதாரா
ஏனாம்(பி)
அரபிக் கடல்
கர்னூல்
வங்காள விரிகுடா
கோவா(போ)
மைசூர்
சென்னை(ஆ)
மஹி(பி)
புதுச்சேரி(பி)
கோழிக்கூடு
காரைக்கால்(பி)
கொச்சின்
திருவிதாங்கூர்
இலங்கை
வ
மே
கி
தெ
இந்துமாக் கடல்

டல்ஹௌசியின் அத்தகைய சீர்திருத்தங்கள் இந்தியாவை நவீனமயமாக்கிட இட்டுச் சென்றன.

**கற்றல் அடைவுகள்**

1. மாணவர் ஆங்கிலேயரின் ஆட்சி இந்தியாவில் நிறுவப் பட்டதையும் அதன் விரிவாக்கம் பற்றியும் விளக்க முடியும்.
2. மாணவர் கர்நாடக, மைசூர் மற்றும் மராத்தியப் போர்களுக் கான காரணங்கள், அவற்றின் விளைவுகள் பற்றி குறிப்பிட முடியும்.
3. மாணவர் பிளாசி, பக்சார் போர்களையும் அவற்றின் முடிவுகள் பற்றியும் நினைவுகூர இயலும்.
4. மாணவர் துணைப்படைத்திட்டம் அதன் நிறை, குறை பற்றி விவரிக்க முடியும்.
5. மாணவர் வில்லியம் பென்டிங் பிரபுவின் சீர்திருத்தங்களைப் பற்றி மதிப்பிட முடியும்.
6. மாணவர் டல்ஹௌசியின் நாடு விரிவாக்கும் கொள்கை பற்றியும், அவருடைய சீர்திருத்தங்கள் பற்றியும் எடுத்துரைக்க முடியும்.

## சுயமதிப்பீடு

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்**

1. ஆஸ்திரிய வாரிசுரிமைப் போர் நடைபெற்ற பகுதி

   அ. அமெரிக்கா ஆ. ஆப்பிரிக்கா

   இ. ஐரோப்பா ஈ. ஆசியா

2. கர்நாடக நவாப்பின் தலைநகரம்

   அ. சென்னை ஆ. பாண்டிச்சேரி

   இ. ஆர்க்காடு ஈ. காரைக்கால்

3. லா பூர்டான்னாய்ஸ் பிரெஞ்சு ஆளுநராக பதவி வகித்த இடம்

அ. சென்னை ஆ. மொரீஷியஸ்

இ. கொல்கத்தா ஈ. மும்பை

4. சந்தா சாகிப் இவருடைய மருமகன்

அ. அன்வருதீன் ஆ. முசாபர் ஜங்

இ. தோஸ்த் அலி ஈ. முகமது அலி

5. 1757-ஆம் ஆண்டு வங்காளத்தை ஆட்சி செய்தவர்

அ. ஷூஜா-உத்-தௌலா ஆ. சிராஜ்-உத்-தௌலா

இ. மீர்காசிம் ஈ. மீர்ஜாபர்

6. பிளாசிப் போர் நடைபெற்ற ஆண்டு

அ. 1757 ஆ. 1764

இ. 1765 ஈ. 1771

7. பக்சார் போரில் இந்திய மன்னர்களைத் தோற்கடித்த ஆங்கில ஆளுநர்

அ. கர்னல் ஸ்மித் ஆ. மேஜர் மன்றோ

இ. கிளைவ் பிரபு ஈ. அட்மிரல் வாட்சன்

8. ஐதர் அலியின் தந்தை ஒரு

அ. அரசர் ஆ. பாஜ்தார்

இ. அமைச்சர் ஈ. வணிகர்

9. முதல் மைசூர் போரில் ஐதர் அலி தோற்கடிக்கப்பட்ட இடம்

அ. செங்கம் ஆ. தஞ்சாவூர்

இ. மாஹி ஈ. பாண்டிச்சேரி

10. 1781ல் சர் அயர் கூட் ஐதர் அலியைத் தோற்கடித்த இடம்

அ. போர்டோ நோவா ஆ. சென்னை

இ. திருவாங்கூர் ஈ. மைசூர்

11. முதல் மராத்தியப் போர் கீழ்க்கண்ட தலைமை ஆளுநர் காலத்தில் நடைபெற்றது.

அ. இராபர்ட் கிளைவ் ஆ. டல்ஹௌசி

இ. வாரன் ஹேஸ்டிங் ஈ. பெண்டிங் பிரபு

12. ஐதர் அலி மரணமடைந்தது

அ. நிமோனியாவால் ஆ. புற்றுநோயால்

இ. அல்சர் (குடல் புண்) ஈ. உடல் நலமின்மையால்

13. வெல்லெஸ்லி பிரபு கீழ்க்கண்டவாறு புகழப்படுகிறார்

அ. வணிகக் குழுவின் சிங்கம் ஆ. நாட்டை உருவாக்கியவர்

இ. வணிகக் குழுவின் அக்பர் ஈ. வணிகக் குழுவின் தலைவர்

14. ஜெனரல் ஸ்டுவேர்டு பங்கேற்ற போர்

அ. முதல் மைசூர் போர் ஆ. இரண்டாம் மைசூர் போர்

இ. நான்காவது மைசூர் போர் ஈ. முதல் மராத்தியப்போர்

15. தக்கர்கள் செயல்பட்ட இடம்

அ. இமாலயப் பகுதி ஆ. கங்கைச் சமவெளி

இ. மத்திய இந்தியா ஈ. தென் இந்தியா

16. சதி ஒழிக்கப்பட்ட ஆண்டு

அ. 1828 ஆ. 1829

இ. 1835 ஈ. 1838

17. 1835ல் வில்லியம் பெண்டிங் இந்தியாவின் அலுவலக மொழியாக அறிவித்த மொழி

அ. பிரெஞ்சு ஆ. ஆங்கிலம்

இ. உருது ஈ. இந்தி

18. வாரிசு இழப்புக் கொள்கை கீழ்க்கண்ட சட்டத்திற்கு முரண்பாடானதாகக் கருதப்பட்டது.

அ. இந்து சட்டம் ஆ. முகமதிய சட்டம்

இ. கிறித்துவச் சட்டம் ஈ. ரோமானியச் சட்டம்

19. 1856ல் இப்பகுதிகளுக்கிடையில் இருப்புப் பாதை அமைக்கப் பட்டது.

அ. மும்பையிலிருந்து தானா ஆ. தானாவிலிருந்து பூனா

இ. சென்னையிலிருந்து அரக்கோணம் ஈ. ஹௌராவிலிருந்து ராணிகஞ்ச்.

## II. கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்க

1. டியூப்ளே _______________ யின் ஆளுநராவார்.

2. ஆங்கிலேயர் _______________ என்ற கடற்படைத் தலைவரின் உதவியுடன் பிரெஞ்சுக் கப்பல்களைக் கைப்பற்றினர்.

3. மூன்றாம் கர்நாடகப் போருக்கான உடனடிக்காரணம் ஐரோப்பா வில் ஏற்பட்ட _______________ போராகும்.

4. பிரெஞ்சு ஆளுநர் கவுண்ட்-டி-லாலி கைப்பற்றிய கோட்டை _______________ ஆகும்.

5. சிராஜ்-உத்-தௌலாவின் முதன்மைப் படைத்தலைவர் _______________ ஆவார்.

6. பாரிசு உடன்படிக்கையின்படி _______________ மற்றும் __________ ஆகிய இடங்கள் பிரெஞ்சுக்காரர்களுக்கு திருப்பி அளிக்கப்பட்டன.

7. ஐதர் அலியைத் தோற்கடித்த ஆங்கிலத் தளபதி __________ ஆவார்.

8. வங்காளத்தில் இரட்டை ஆட்சி முறையை அறிமுகப் படுத்தியவர் _______________ஆவார்.

9. 1776-ஆம் ஆண்டு நானா பட்னாவிஸ் _______________ உடன் படிக்கையில் கையெழுத்திட்டார்.

10. ரகோபா _______________ என்பவரின் சிறிய தந்தை ஆவார்.

11. சூரத் உடன்படிக்கையின் மூலம் ஆங்கிலேயர் _______________ மற்றும் _______________ ஆகிய இடங்களை ரகோபாவிடமிருந்து பெற்றனர்.

12. ஐதர் அலி தன் பகுதியிலிருந்த பிரெஞ்சுக்குச் சொந்தமான _______________ தாக்கப்பட்டதால் ஆங்கிலேயர் மீது போர் அறிவித்தார்.

13. ஐதர் அலியின் மகன் _______________ ஆவார்.

14. திப்பு சுல்தான் ஆங்கிலேயரின் நட்பு நாடான_______________ ரைத் தாக்கினார்.

15. திப்பு சுல்தான் இறந்த பின் மைசூர் அரசு _______________ மன்னருக்கு அளிக்கப்பட்டது.

16. திப்பு சுல்தான் உதவி கோரி_______________, _______________ மற்றும் _______________ ஆகிய நாடுகளுக்கு தன் தூதுவர்களை அனுப்பினார்.

17. பெண் சிசுக்கொலை அதிகம் காணப்பட்ட இடம் _____________ ஆகும்.

18. இந்தியாவில் முதன்முதலில் இருப்புப்பாதை ______________ விலிருந்து _______________ வரை அமைக்கப்பட்டது.

19. டல்ஹௌசி _______________ தபால் முறையை அறிமுகப் படுத்தினார்.

20. டல்ஹௌசி _______________ அறிக்கையின் அடிப்படையில் சில கல்விச் சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தினார்.

**III. பின்வருவனவற்றைப் பொருத்துக**

### அ

| | | | |
|---|---|---|---|
| *1.* | வில்லியம் கோட்டை | -- | ஆளுநர் |
| *2.* | சாண்டர்ஸ் | -- | கொல்கத்தா |
| *3.* | இராபர்ட் கிளைவ் | -- | முகலாயப் பேரரசர் |
| *4.* | மாங்கீர் | -- | இராணுவ அலுவலர் |
| *5.* | ஷா ஆலம் | -- | தலைநகர் |

### ஆ

| | | | |
|---|---|---|---|
| *1.* | நானா பட்னாவிஸ் | -- | *1776* |
| *2.* | சால்செட் | -- | *1782* |
| *3.* | புரந்தர் உடன்படிக்கை | -- | தலைமை ஆளுநர் |
| *4.* | சால்பை உடன்படிக்கை | -- | தீவு |
| *5.* | வாரன் ஹேஸ்டிங்சு | -- | மூத்த அரசியல் தலைவர் |

### இ

| | | | |
|---|---|---|---|
| *1.* | அய்-லா-சாபேல் உடன்படிக்கை | -- | மூன்றாம் கர்நாடகப் போர் |
| *2.* | பாண்டிச்சேரி உடன்படிக்கை | -- | முதல் மைசூர் போர் |
| *3.* | பாரிசு உடன்படிக்கை | -- | பக்சார் போர் |
| *4.* | அலகாபாத் உடன்படிக்கை | -- | இரண்டாம் கர்நாடகப் போர் |
| *5.* | சென்னை உடன்படிக்கை | -- | முதல் கர்நாடகப் போர் |

### ஈ

| | | | |
|---|---|---|---|
| *1.* | ராணி இலட்சுமிபாய் | -- | சதி ஒழிப்பு |
| *2.* | வில்லியம் பெண்டிங் | -- | தலைமை ஆளுநர் குழுவின் சட்ட உறுப்பினர் |
| *3.* | மேஜர் ஸ்லீமென் | -- | தபால் முறை |
| *4.* | மெக்காலே பிரபு | -- | தக்கர்கள் |
| *5.* | டல்ஹெளசி பிரபு | -- | ஜான்சி ராணி |

**IV. சுருக்கமாக விடையளிக்கவும்**

1. முதல் கர்நாடகப் போருக்கான காரணங்களை வெளிப்படுத்துக.
2. முதல் கர்நாடகப் போரின் விளைவு யாது?
3. இரண்டாம் கர்நாடகப் போருக்கான காரணங்கள் யாவை?
4. இரண்டாம் கர்நாடகப் போரின் விளைவுகளைக் குறிப்பிடுக.
5. ஆர்க்காட்டு வீரர் என்று அழைக்கப்படுபவர் யார்? ஏன் அவ்வாறு அழைக்கப்படுகிறார்?
6. பிரெஞ்சு ஆளுநர் கவுண்ட்-டி-லாலி செய்த மிகப்பெரிய தவறு யாது?
7. மூன்றாம் கர்நாடகப் போரின் விளைவுகளைக் கூறுக.
8. 'இருட்டறைத் துயரம்' பற்றி சிறுகுறிப்புத் தருக.
9. பிளாசிப் போருக்குப் பின் ஆங்கிலேயர் அடைந்த நன்மைகள் யாவை?
10. பக்சார் போருக்கான காரணங்களைக் குறிப்பிடுக.
11. ஐதர் அலி எவ்வாறு மைசூரின் சுல்தான் ஆனார்?
12. முதல் மைசூர் போருக்கான காரணங்கள் யாவை?
13. 1790ல் காரன்வாலிசு திப்புவின் மீது ஏன் போர் அறிவித்தார்?
14. மூன்றாம் மைசூர் போரின் முடிவுகளை வெளிப்படுத்துக.
15. நானா பட்னாவிஸ் பற்றி சிறு குறிப்பு தருக.
16. மூன்றாம் மராத்தியப் போரின் விளைவுகளை வெளிப்படுத்துக.
17. மராத்தியரின் வீழ்ச்சிக்கான காரணங்களைக் குறிப்பிடுக.
18. ஆங்கில ஆதிக்கம் இந்தியாவில் விரிவடைய வெல்லெஸ்லி மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

19. துணைப்படைத் திட்டத்தில் சேர்ந்த நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

20. தக்கர்கள் பற்றி உமக்கு என்ன தெரியும்?

21. வாரிசு இழப்புக் கொள்கை மூலம் டல்ஹௌசி இணைத்த நாடுகள் எவை?

22. ராணி இலட்சுமிபாய் ஆங்கிலேயர் மீது எவ்விதம் பழிதீர்த்துக் கொண்டார்?

23. இந்திய இருப்புப்பாதையின் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்? ஏன்?

24. கல்வித்துறையில் டல்ஹௌசி செய்த சீர்திருத்தங்களைக் குறிப்பிடுக.

## V. விரிவான விடை தருக

1. முதல் கர்நாடகப் போருக்கான காரணங்கள் யாவை? போரின் விளைவுகளை வெளிப்படுத்துக.
2. இரண்டாம் கர்நாடகப் போர் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.
3. கர்நாடகப் போர்களில் ஆங்கிலேயர் வெற்றி பெற்றதற்கான காரணங்களை விளக்கவும்.
4. வங்காளத்தில் ஆங்கிலேயர் எவ்வாறு ஆதிக்கம் பெற்றனர்?
5. இரண்டாம் மைசூர் போரைப்பற்றி ஒரு கட்டுரைத் தருக.
6. முதல் மராத்தியப் போரின் காரணங்கள், நிகழ்வுகள் மற்றும் விளைவுகளை விளக்குக.
7. இந்தியாவில் ஆங்கில வணிகக் குழுவினரின் ஆதிக்கத்தை வெல்லெஸ்லி பிரபு எவ்வாறு விரிவாக்கினார்? துணைப்படைத்திட்டத்தின் நிறை, குறைகளை விளக்குக.
8. வில்லியம் பென்டிங் பிரபுவின் சமூகச் சீர்திருத்தங்கள் பற்றி ஒரு கட்டுரை வரைக.

9. இந்தியாவில் ஆங்கிலப் பேரரசு விரிவடைய டல்ஹௌசி பின்பற்றிய கொள்கையை விவரிக்கவும்.

10. இந்தியாவை நவீனப்படுத்த டல்ஹௌசி மேற்கொண்ட நடவடிக்கைகளை வரிசைப்படுத்துக.

**VI. செய்முறைப்பயிற்சி**

1. இந்திய வரைபடத்தில் கீழ்க்கண்டவற்றைக் குறிக்கவும் :

அ. வெல்லெஸ்லி காலத்தில் ஆங்கிலப் பகுதியைக் குறிப்பிட்டு அதில் பின்வரும் இடங்களைச் சுட்டிக் காட்டவும் - கர்நாடகம், வடசர்க்கார், வங்காளம், பீகார், அயோத்தி.

ஆ. டல்ஹௌசி கால ஆங்கிலப் பகுதிகளை வரைந்து அதில் பின்வரும் இடங்களைச் சுட்டிக்காட்டவும் - ஜான்சி, சதாரா, அயோத்தி, நாக்பூர், உதய்பூர், மும்பை, தானா, சென்னை, கொல்கத்தா.

பாடம் - 3

# முதல் இந்தியச் சுதந்திரப்போர் (1857-ஆம் ஆண்டு பெரும்புரட்சி) - ஆங்கிலக் கிழக்கிந்திய வணிகக் குழு ஆட்சியின் முடிவு

**கற்றல் நோக்கங்கள்**

1. மாணவர் ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்த்து நடைபெற்ற முந்தைய புரட்சிகளைப் பற்றிய (Early revolts) கருத்தினைப் பெறுதல்.
2. மாணவர் 1857ல் ஏற்பட்ட புரட்சிக்கான அரசியல், நிருவாக, பொருளாதார, சமூக, சமய, மற்றும் இராணுவக் காரணங்கள் பற்றிய அறிவினைப் பெறுதல்.
3. மாணவர் பெரும் புரட்சி தோல்வி அடைந்ததற்கான காரணங்களையும் அதன் விளைவுகளையும் பற்றி புரிந்து கொள்ளுதல்.
4. மாணவர் விக்டோரியா பேரரசி பிரகடனத்தின் முக்கியத்துவத்தைத் தெரிந்து கொள்ளுதல்.

பிளாசிப் போருக்குப் பின்னர் கிழக்கிந்திய வணிகக் குழு இந்தியாவின் செல்வத்தினையும், வளங்களையும் சுரண்டி வந்தது. ஆங்கிலேயர் இந்தியர்களை அடிமைகளாக நடத்தினர். அவர்கள் இந்தியாவில் அரசியல், சட்டம், மற்றும் பொருளா தாரம் ஆகிய துறைகளில் புதிய அமைப்புகளைப் புகுத்தினர். அவை 18-ஆம் நூற்றாண்டில் நம் நாட்டில் வழக்கில் இருந்தன வற்றிற்கு முற்றிலும் மாறுபட்டவைகளாக இருந்தன. ஆங்கிலே யர்களின் அரசியல் மற்றும் பொருளாதாரக் கொள்கைகளால் பலதரப்பட்ட மக்களும் பாதிப்பிற்குள்ளாயினர். அவர்கள் அனைவரும் மகிழ்ச்சியிழந்தனர். பெருகிவந்த மக்களின் வெறுப்புடன் மன்னர்கள், படைவீரர்களின் குறைகளும் சேர்ந்து

கொண்டன. இதனால் சில இடங்களில் கலகங்களும், எதிர்ப்புகளும் ஏற்பட்டன. அவற்றில் 1857-ஆம் ஆண்டு ஏற்பட்ட பெரும் புரட்சி (Great Revolt) மிக முக்கியமானதாகும்.

> பண்டித ஜவஹர்லால் நேரு தன்னுடைய **டிஸ்கவரி ஆஃப் இந்தியா** (Discovery of India) என்ற புகழ்பெற்ற நூலில் ''பழம் பெருமை கொண்ட ஒரு நாட்டை, எங்கிருந்தோ ஒரு தீவிலிருந்து வந்த சிறு கூட்டம் ஆட்சி செய்வது என்னை மிகுந்த ஆத்திர மடையச் செய்கிறது'' என்று எழுதியுள்ளார். அக்கால கட்டத்தில் இதே உணர்ச்சிதான் இந்தியா முழுவதும் பரவியிருந்தது.

***ஆங்கில ஆட்சிக்கு எதிரான முந்தைய புரட்சிகள் (1765 - 1856) :*** இந்தியாவின் கிழக்குப் பகுதிகளில், இந்து சன்னியாசிகளும், இசுலாமிய துறவிகளும் ஆங்கிலேயரைப் பொதுவாக எதிர்த்தனர். தென் இந்தியாவில் பாளையக்காரர்கள் தங்கள் பகுதியில் ஆங்கிலேயர் ஆதிக்கம் பரவுவதை எதிர்த்தனர். அவர்கள் **மருது சகோதரர்கள், வீரபாண்டிய கட்டபொம்மன், பூலித்தேவன், வேலுத்தம்பி** ஆகியோர் தலைமையில் ஆங்கிலேயருக்கு எதிராக புரட்சியில் ஈடுபட்டனர். அவர்கள் தேசிய உணர்வு, வீரம், தன்மானம், தியாகம் ஆகிய பண்புகளில் சிறந்து விளங்கினர். 1806ல் நடந்த **வேலூர் புரட்சியானது** ஆங்கிலேயரின் நடவடிக்கைகள் எல்லாவற்றையும் இந்தியர்கள் பொறுத்துக் கொள்ள மாட்டார்கள் என்பதை உணர்த்தியது. 1824ல் ஏற்பட்ட பேரக்பூர் புரட்சியும் ஆங்கிலேயர்க்கு எதிராக ஏற்பட்ட மற்றொரு முக்கியப் புரட்சியாகும்.

***முதல் இந்தியச் சுதந்திரப்போர் அல்லது 1857ல் நடந்த பெரும் புரட்சி :*** இந்தியப் படைவீரர்கள் 1857-ஆம் ஆண்டு ஆங்கிலக் கிழக்கிந்திய வணிகக்குழுவுக்கு எதிராக புரட்சியில் ஈடுபட்டனர். அதை ஆங்கில வரலாற்று ஆசிரியர்கள் படைவீரர் கலகம் என்று எழுதியுள்ளனர். ஆனால் இந்திய வரலாற்று ஆசிரியர்கள் அந்நிகழ்ச்சியை முதல் இந்தியச் சுதந்திரப்போர் என்று வருணிக்கின்றனர். அந்நிகழ்ச்சி 1857-ஆம் ஆண்டுப் பெரும் புரட்சி என்றும் அழைக்கப்படுகிறது. அந்நிகழ்ச்சியின் போது **கானிங் பிரபு** இந்தியாவின் தலைமை ஆளுநராகப் பதவியில்

இருந்தார். அப்புரட்சிக்கான காரணங்கள் பல. அவைகளை அரசியல், நிர்வாக, பொருளாதார, சமூக, சமய, இராணுவ மற்றும் உடனடிக்காரணம் என வகைப்படுத்தலாம்.

***அரசியல் காரணங்கள் :*** ஆங்கிலேயரின் நாடு இணைப்புக் கொள்கை மிக முக்கிய காரணங்களில் ஒன்றாகும். வெல்லெஸ்லி பிரபு பல இந்திய மன்னர்களுடன் செய்து கொண்ட துணைப் படைத் திட்டம் ஆங்கிலேயருக்குச் சாதகமாக இருந்தபோது மட்டுமே அதன் நிபந்தனைகள் மதிக்கப்பட்டன. மற்ற சமயங் களில் அவைகள் புறக்கணிக்கப்பட்டன. டல்ஹௌசியின் வாரிசு இழப்புக் கொள்கை மூலம் எட்டு நாடுகள் எவ்வித நியாயமு மின்றி ஆங்கிலப் பேரரசுடன் இணைக்கப்பட்டன. நானாசாகிப் தன் ஒய்வூதியத்தினை இழந்தார். ஜான்சிராணி இலட்சுமிபாய் தத்து எடுத்துக் கொள்ள அனுமதிக்கப்படவில்லை. அவர்கள் ஆங்கிலேயர்க்கு எதிராகச் செயல்பட்டனர். அவர்கள் அச்சுதந்திர எழுச்சியின்போது மிகச் சிறந்த தலைவர்களாகக் கருதப் பட்டனர். அயோத்தி நவாப் வசித் அலிஷாவை பதவியிலிருந்து நீக்கி அயோத்தியை ஆங்கில அரசு தன் பகுதியுடன் இணைத்துக் கொண்டதால் அயோத்தி புரட்சி நடந்த இடங்களில் மிக முக்கியப் பகுதியாக விளங்கியது. முகலாயப் பேரரசர் இரண்டாம் பகதூர்ஷாவையும் அவரது வழித்தோன்றல்களையும் ஆங்கிலேயர் இழிவுபடுத்தினர். அவர்கள் தங்கள் முன்னோர் களின் அரண்மனையையும், செங்கோட்டையையும் எதிர் காலத்தில் பயன்படுத்த முடியாமல் தடுக்கப்பட்டனர். அவை மட்டுமின்றி பொதுவாக முசுலிம்கள் ஆங்கிலேயர்பால் அதிருப்திக் கொண்டிருந்தனர். ஆங்கில ஆட்சியினால் அவர்கள் தங்கள் அரசியல் அதிகாரத்தை இழந்ததாகக் கருதினர்.

***நிர்வாகக் காரணங்கள் :*** இந்தியர்களுக்கு ஆங்கிலேய ஆட்சியின் மீது நம்பிக்கையின்மையும், வெறுப்பும் ஏற்பட்டன. உதாரணமாக நீதிமன்றங்களில் பாரசீக மொழிக்குப் பதிலாக ஆங்கில மொழியைப் புகுத்தியது மக்களுக்குப் பிடிக்கவில்லை. ஆங்கிலேயரின் நீதிவழங்கும் முறை அதிக செலவுடையதாகவும், இயந்திரத் தன்மையுடையதாகவும் (Mechanical) காலத்தாமத முடையதாகவும் இருந்தது. அதனால் ஏழை மக்களுக்கு எந்தப் பயனும் கிடைக்கவில்லை. தங்களுக்குப் பலகாலமாக அடி

பணிந்து வந்த சாதாரண மக்களும் தங்கள் மீது வழக்குத் தொடுப்பதற்கு அந்நீதிமுறை சாதகமாக இருந்ததால் வசதி மிக்கோரும் அதை வெறுத்தனர். அப்போது ஆங்கிலக் காவல் துறை திறமையுடனும் செயல்படவில்லை. எனவே பொது மக்கள் தங்கள் உடமைக்கும், உயிருக்கும், கௌரவத்திற்கும் பாதுகாப்பு இல்லாததைப்போல் எப்போதும் உணர்ந்தனர். அவைகளில் மிகவும் அதிகமாக பாதிப்பினை ஏற்படுத்தியது நிலவரி முறையாகும். ஆங்கிலேய ஆட்சியின் கீழ் நிலப்பிரபுக் களும் குடியானவர்களும் சமமாகவே துன்பத்தை அனுபவித் தனர். குடியானவர்கள் மிக அதிகமான நிலவரி செலுத்த வேண்டியிருந்தது. நிலப்பிரபுக்களின் சலுகைகள் பறிக்கப் பட்டன. இந்தியர்களுக்கு அரசியலிலும் இராணுவத்திலும் உயர் பதவிகள் மறுக்கப்பட்டன. ஆங்கில வணிகக்குழு நிர்வாகத்தில் நல்ல வேலை கிடைக்குமென்று எதிர்பார்த்த படித்த இந்திய இளைஞர்களும் ஏமாற்றமடைந்தனர்.

**பொருளாதாரக் காரணங்கள் :** நாட்டின் பொருளாதாரச் சுரண்டலி னாலும், ஏராளமான செல்வம் வெளியேற்றப்பட்டதாலும், இந்தியத் தொழில்களின் அழிவினாலும் இந்திய மக்களின் பொருளாதார வாழ்க்கை சீர்குலைந்தது. ஆங்கிலேயர் இந்தியர் களின் தொழில்களையும், உற்பத்தியையும் முடக்கினர். இந்தியப் பொருட்களுக்கு இங்கிலாந்தில் மிக அதிக காப்பு வரியும் ஆங்கிலப் பொருட்களுக்கு இந்தியாவில் மிகக் குறைந்த இறக்குமதி வரியும் விதிக்கப்பட்டன. இயந்திரங்களினால் உற்பத்திச் செய்யப் பட்ட ஏராளமான ஆங்கில நாட்டுப் பொருட்கள் இந்திய சந்தைகளில் நிரம்பி வழிந்தன. ஜமீன்தார்களும். குறுநில மன்னர்களும் தங்கள் பதவியை இழந்ததால் அவர்களிடம் பணி புரிந்த இந்தியக் கைவினைஞர்களும், கைவினைக் கலைஞர்களும் ஆதரவு இழந்தனர். நெசவாளர்களும், கைவினைஞர்களும் ஆங்கில அலுவலர்களின் விருப்பத்திற்கேற்ப தொழில் புரியுமாறு கட்டாயப் படுத்தப்பட்டனர். அதற்கு அவர்களுக்கு மிகக் குறைந்த கூலியே கிடைத்தது. எனவே அவர்களின் தொழில் ஈடுபாடு குறைந்தது. அதனால் மிகப்பெரிய அளவிலும் மிகப்பயனும் உடையதாக விளங்கிய இந்தியாவின் நெசவுத் தொழில் நலிவடைந்தது. அதே போல் இந்திய அரசர்களிடம் உயர்பதவி வகித்து வந்த ஆயிரக்கணக்கானவர்கள் தங்கள்

பதவியை இழக்க நேரிட்டது. அதனால் அவர்களை நம்பி வாழ்ந்த மக்களின் வாழ்க்கையும் பாதிப்பிற்குள்ளானது. குத்தகைச் சுதந்திரம் கொண்ட நிலங்களை பென்டிங் பிரபு அரசின் கட்டுப்பாட்டில் கொண்டு வந்ததால் நிலச் சொந்தக்காரர்கள் பலர் வறுமைக்குத் தள்ளப்பட்டனர். 19-ஆம் நூற்றாண்டின் முதல் பாதியில் ஏற்பட்ட தொடர்ந்த ஏழு பஞ்சங்களும் நாட்டின் பொருளாதார நிலையைப் பெரிதும் பாதித்தன.

**சமூகக் காரணங்கள் :** ஆங்கிலேயர் இந்தியரை தம்மைவிடத் தாழ்ந்தவர்களாக நடத்தினர். இந்தியருடன் தொடர்பு கொண்ட போதெல்லாம் தங்கள் இன இறுமாப்பை வெளிப்படுத்தினர். இந்தியர்கள் தொடர் வண்டிகளில் முதல் வகுப்பில் பயணம் செய்ய அனுமதிக்கப்படவில்லை. அவர்கள் எல்லா சமூக பொதுக் கூட்டங்களிலிருந்தும் விலக்கி வைக்கப்பட்டனர். அவர்கள் ஆங்கிலேயருடன் சேர்ந்து பழக அனுமதிக்கப்பட வில்லை. வேகமாகப் பரவிய மேல்நாட்டு பண்பாடும், ஆங்கிலக் கல்வி முறையும் இந்தியப் பழமை வாதிகளைப் பீதியடையச் செய்தன. உடன்கட்டை ஏறும் வழக்கம் ஒழிக்கப்பட்டது, பெண் சிசுக் கொலை தடுப்பு, விதவைகள் மறுமணம் ஊக்குவிக்கப் பட்டது. கிறித்துவர்களாக மாறியவர்களும் சொத்துரிமை பெற்றது போன்றவை இந்திய சமயவாதிகளின் உணர்வினைப் பெரிதும் பாதித்தன.

**சமயக் காரணங்கள் :** கிறித்துவச் சமயப் பரப்பாளர்கள் தங்கள் சமயத்தைப் பரப்புவதில் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர். அவர்களின் செயல்பாடுகள் இந்தியரிடையே ஒருவித பயத்தை ஏற்படுத்தின. ஆங்கிலேயர் இந்தியரின் சமயங்களை அடியோடு அழித்து இந்தியாவைக் கிறித்துவ நாடாக மாற்ற முயற்சிப்பதாகச் சந்தேகப்பட்டனர்.

| |
|---|
| ஆங்கிலப் பாராளுமன்ற உறுப்பினரான ஆர்.டி.மேங்கல்ஸ் (R.D. Mangles) என்பவர், ‘‘ஒவ்வொரு ஆங்கிலேயரும் ஒரு இந்தியரையாவது கிறித்துவச் சமயத்திற்கு மாற்ற தீவிர முயற்சி எடுக்க வேண்டும். மேலும் கிறித்துவின் பதாகை இந்தியாவின் ஒரு முனையில் இருந்து மறு முனைவரை வெற்றிகரமாக பறக்க வேண்டும்’’ என்று வெளிப்படையாக அறிவித்தார். |

அந்த அறிவிப்பு இந்திய மக்களிடையே மிகுந்த கோபத்தையும் ஆங்கிலேயர் ஆட்சியின்மீது வெறுப்பையும் ஏற்படுத்தின. கோயில்களுக்கும், மசூதிகளுக்கும் சொந்தமான நிலங்களின் மீது ஆங்கிலேயர் விதித்த வரி மக்களின் சமய உணர்வினைத் தூண்டியது. இந்து சமய குருமார்களும், முகமதிய மௌல்விகளும் ஆங்கிலேய ஆட்சியின் மீது அதிருப்தி அடைந்தனர். அத்தகைய செயல்கள் மூலம் ஆங்கிலேயர் தம் மதிப்பை இழந்தனர்.

***இராணுவக் காரணங்கள் :*** இந்தியப் படைவீரர்கள் சிப்பாய்கள் என அழைக்கப்பட்டனர். இந்தியாவிலிருந்த ஆங்கில இராணுவப் படையில் இந்தியரே பெரும்பான்மை எண்ணிக்கையில் இருந்தனர். உண்மையில் கூற வேண்டுமானால், இந்தியச் சிப்பாய்களின் விசுவாசத்திலும் அவர்களின் உறுதியின் அடிப்படையிலும் தான் ஆங்கிலேயரின் அதிகாரம் இருந்தது. ஆனால் இந்தியச் சிப்பாய்களை ஆங்கிலேயர் இழிவாகவும், தாழ்வாகவும் நடத்தினர். இந்தியச் சிப்பாய்களுக்கு அவர்களைப் போன்ற ஆங்கிலச் சிப்பாய்களைவிட குறைவான சம்பளமே வழங்கப் பட்டது. அவர்களுக்கு இராணுவத்தில் பதவி உயர்வும் கிடையாது. இந்தியச் சிப்பாய்கள் தங்கள் சமயம் மற்றும் பண்பாட்டு வழக்கப்படி நெற்றியில் திலகம் இடுதல், தாடி வளர்த்தல், தலைப்பாகை அணிதல் போன்றவற்றிலிருந்து தடுக்கப்பட்டனர். 1856ல் கானிங் பிரபுவின் அரசு, ***பொது இராணுவப் பணியாளர் சட்டம்*** (The General Services Enlistment Act) ஒன்றை நிறைவேற்றியது. தேவை ஏற்பட்டால் இந்தியச் சிப்பாய்கள் கடல் கடந்து சென்றும் பணியாற்ற வேண்டும் என்று அச்சட்டம் கட்டாயப்படுத்தியது. அதனால் இந்தியச் சிப்பாய்கள் ஆங்கிலேயர் மீது வெறுப்புக் கொண்டனர்.

***உடனடிக் காரணம் :*** இந்திய இராணுவத்தில் ஆங்கிலேயரால் புதிய என்பீல்டு ரக துப்பாக்கிகள் அறிமுகப்படுத்தப்பட்டது தான் புரட்சிக்கு உடனடிக் காரணமாக அமைந்தது. அத்துப்பாக்கிகளின் தோட்டாக்களில் மிருகக் கொழுப்பு தடவப்பட்டிருந்தது. அத் தோட்டாக்களை உபயோகிப்பதற்கு முன் அதன் கடினமான மேலுறைகளைப் பற்களால் கடித்துத் திறக்க வேண்டியிருந்தது.

*பசு மற்றும் பன்றியின் கொழுப்பு, தோட்டாக்களில் தடவப்பட்டு இருந்ததாகக் கருதிய இந்து, இசுலாமிய படை வீரர்கள் அத்தோட்டாக்களை உபயோகிக்க மறுத்தனர். பசுக்களை இந்து சமயத்தினர் புனிதமாகக் கருதியதும், பன்றியை இசுலாமியர் வெறுத்து ஒதுக்கியதும் அதற்கான காரணமாகும். அத்தோட்டாக் களை உபயோகிப்பது தம் சமயக் கோட்பாட்டிற்கு எதிரானது என்று இரு சமயத்தினரும் கருதினர். 1857-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 29-ஆம் தேதி கொல்கத்தாவிற்கு அருகில் பேரக்பூர் என்னுமிடத்தில் வங்காளப் படைப்பிரிவைச் சேர்ந்த மங்கள் பாண்டே என்ற இளம் இந்தியப் படைவீரர் கொழுப்புத்தடவிய தோட்டாவை உபயோகிக்க மறுத்து தன் மேலதிகாரியைச் சுட்டுக் கொன்றார். அதனால் அவர் கைது செய்யப்பட்டு, நீதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு பின் தூக்கிலிடப்பட்டார். அச் செய்தி பரவியவுடன் இந்தியப் படைவீரர்கள் பலர், வெவ்வேறு பகுதிகளில் புரட்சியைத் தொடங்கினர்.*

**புரட்சியின் போக்கு :** *1857-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மீரட் நகரில் படைவீரர்கள் வெளிப்படையாக புரட்சியில் ஈடு பட்டனர். அவர்கள் கொழுப்புத் தடவிய தோட்டாக்களை தொட மறுத்தனர். எனவே அவர்கள் இராணுவ விசாரணைக்கு உட் படுத்தப்பட்டு 10 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை பெற்றனர். மீரட்டைச் சேர்ந்த படைப்பிரிவினர் 1857-ஆம் ஆண்டு மே மாதம் 10-ஆம் நாள் புரட்சியில் ஈடுபட்டனர். அவர்கள் சிறைச் சாலையைத் தகர்த்து வெளியேறினர். மேலும் சிறையிடப்பட்ட படைவீரர்களையும் விடுவித்தனர். பின்னர் அவர்கள் டெல்லியை நோக்கிச் சென்று மே திங்கள் 11-ஆம் நாள் டெல்லியைத் தம் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர். டெல்லியின் முன்னாள் அரசர் இரண்டாம் பகதூர் ஷா தயக்கம் கொண்ட போதும் அவரைப் பேரரசர் எனப் பிரகடனப்படுத்தினர்.*

*கான்பூரில் நடைபெற்ற புரட்சியை பீஷ்வா இரண்டாம் பாஜிராவின் தத்துப்பிள்ளையும் ஆங்கிலேயரிடம் மிகுந்த அதிருப்தியும் கொண்ட* **நானாசாகிப்** *வழி நடத்தினார். நானாசாகிப்பின் படைக்கு தாந்தியா தோப் என்ற விசுவாசமும் வீரமும் பொருந்திய படைத்தளபதி தலைமைப் பொறுப்*


1857 ஆம் ஆண்டு பெரும் புரட்சி
◆ தீவிரமாக நடைபெற்ற இடங்கள்
காஷ்மீர்
சிந்துநதி
சீனாப் நதி
சட்லெஜ் நதி
பகவல்பூர்
கையர்பூர்
மீரட்
டெல்லி
பர்ரய்லி
நேபாளம்
லக்னோ
கான்பூர்
அஜ்மீர்
சிந்தியா
குவாலியர்
பெனாரக
ஜான்சி
பீகார்
வங்காளம்
பிரம்மபுத்திரா ஆறு
அசாம்
பரோடா
போபால்
நர்மதா நதி
பேரக்பூர்
கொல்கத்தா
தப்தி நதி
சம்பல்பூர்
நாக்பூர்
கோதாவரி ஆறு
மும்பை
ஐதராபாத்
வங்கக் கடல்
கோவா
கிருஷ்ணா நதி
அரபியக் கடல்
சென்னை
மைசூர்
புதுச்சேரி
காவிரி ஆறு
வ
மே
கி
தெ
இலங்கை
இந்து மகாக் கடல்
◆ - புரட்சி நடைபெற்ற இடங்கள்

பேற்றார். லக்னோவில் **அயோத்தியின் அரசி ஹஸ்ரத்மகால் பேகம்** புரட்சியை வழி நடத்தினார். மத்திய இந்தியாவின் **ஜான்சி இராணி இலட்சுமிபாய்** புரட்சிப் படைகளுக்குத் தலைமை தாங்கினார். அவர் மிகச்சிறந்த இந்திய தேச பக்தர்களில் ஒருவராவார். ஆண் உடை தரித்து ஈடு இணையற்ற வீரத்துடனும் இராணுவ தந்திரத்துடனும் ஒரு உண்மையான வீரனைப் போல் புரட்சியில் ஈடுபட்டார். அவர் குவாலியர் நகரைக் கைப் பற்றினார். சாகும்வரை மிக வீரமாக போரிட்ட இராணி இலட்சுமிபாய் 1858-ஆம் ஆண்டு ஜூன் திங்களில் நடைபெற்ற சண்டையில் கொல்லப்பட்டார்.

புரட்சி நடந்த சமயம் இந்தியாவில் இருந்த ஆங்கில வரலாற்று ஆசிரியர்களின் கூற்றுப்படி **1857**ல் நடந்த புரட்சியில் ஈடுபட்ட இந்தியத் தலைவர்களில் மிகச்சிறந்தவராகவும், வீர மிக்கவராகவும் திகழ்ந்தவர் இராணி இலட்சுமிபாய் ஆவார்.

ரோகில்கண்டின் தலைநகரான பரெய்லியில் படைவீரர்கள் புரட்சியிலீடுபட்டனர். அவர்கள் ரோகில்லா பகுதியின் தலை வரைத் தங்கள் ஆளுநராக அறிவித்தனர். ஜகதீஷ்பூரின் நிலப் பிரபுவும் 80 வயது நிரம்பியவருமான **கன்வர்சிங்** மேற்கு பீகாரின் மிகச்சிறந்த இராணுவத் தளபதியாகத் திகழ்ந்தார்.

தலைவர்களுடன் சேர்ந்து மிகத் தைரியத்துடன் புரட்சியில் ஈடுபட்ட ஆயிரக்கணக்கான படை வீரர்களும், விவசாயிகளும் மற்றும் கைவினைஞர்களும்தான் இப்புரட்சியின் கதாநாயகர்கள். அவர்கள் மிகுந்த வீரத்துடன் தைரியமாகப் போராடினர். சில இடங்களில் சாதாரண மக்களும் புரட்சியில் ஈடுபட்டனர். உண்மையில் சொல்லப் போனால் விவசாயிகள், கை வினைஞர்கள் மற்றும் பொதுமக்கள் புரட்சியில் பங்கு பெற்றதால் அப்புரட்சிக்கு அதிக வலிமை கிட்டியது. அதனால் புரட்சி மக்கள் புரட்சியாக புகழ்பெற்றது. எனினும் ஆங்கிலேயரின் தீவிர அடக்கு முறையால் அப்புரட்சி வெற்றிபெற முடியாமல் தோல்வியுற்றது.

**புரட்சியின் தோல்விக்கான காரணங்கள் :** 1857-ஆம் ஆண்டு புரட்சி பல்வேறு காரணங்களால் தோல்வியடைந்தது.

**ஒற்றுமையின்மை :** புரட்சியாளர்களிடையே ஒற்றுமையில்லை. தேசியம், ஒற்றுமை போன்ற கருத்துக்கள் வளர்ச்சியடைய வில்லை. புரட்சியாளர்கள் பொதுவான நோக்கத்தினைக் கொண்டிருக்கவில்லை. வங்காள படைவீரர்கள் இடைக்கால முகலாயப் புகழை மீண்டும் கொண்டுவர எண்ணினர். நானா சாகிப்பும், தாந்தியா தோப்பும் மராத்தியச் செல்வாக்கை மீண்டும் நிறுவ முயற்சித்தனர். இராணி இலட்சுமிபாய் இழந்த தன் நாட்டை மீட்கப் போராடினார். அடுத்து, இப்புரட்சி நாடெங்கும் பரவவில்லை. இந்தியாவின் வடக்கு மற்றும் மத்திய பகுதிகளில் மட்டுமே புரட்சி நடைபெற்றது. மும்பை, பஞ்சாப், சிந்து, இராஜஸ்தான் மற்றும் தென்னிந்தியா போன்ற பகுதிகளில் அமைதி நிலவியது. ஆங்கிலேயர் சீக்கியர்கள், ஆப்கானியர்கள் மற்றும் கூர்க்காக்கள் கொண்ட படைப்பிரிவினரின் விசுவாசத் தைப் பெற்றனர். கூர்க்கா பிரிவு புரட்சியை அடக்க ஆங்கிலே யருக்கு உதவியாகச் செயல்பட்டது.

**நவீன கருவிகள் - தொழில் நுட்ப முறைகளில் குறைபாடு :** புரட்சியில் பங்கேற்றல் அல்லது வீரச் செயல் புரிதல் ஆகியன ஆங்கிலேயரின் நவீன போர்க்கருவிகளுக்கு ஈடாகவில்லை. புரட்சியில் பங்கேற்ற பொதுமக்களின் ஆதரவுடன் போராடிய இந்தியப் படைவீரர்களால் நன்கு திட்டமிடப்பட்டு ஒழுங்குடன் செயலாற்றிய ஆங்கில இராணுவத்தினை எதிர்கொள்ள முடிய வில்லை. பயிற்சி பெற்ற படைவீரர்களும், தேவையான போர்க் கருவிகளும் தகுந்த நேரத்தில் கிடைக்காமல் போனதால் பல சமயங்களில் புரட்சியாளர்கள் தங்கள் முயற்சிகளைக் கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆங்கிலேயரின் விரைவான செயல் பாடுகளுக்குத் தந்தி முறையும் அஞ்சல் தகவல் முறையும் பெரிதும் உதவின.

**தலைமைப் பொறுப்பு :** இந்தியர்களிடையே தகுதியான தலைவர்கள் காணப்படவில்லை. அவர்கள் எவ்வித அமைப் பினையும் திட்டத்தினையும் பெற்றிருக்கவில்லை. மேலும் புரட்சியின் தலைவர்கள் ஆங்கிலப் படைத்தளபதிகளுக்கு ஈடானவர்களும் அல்ல. இராணி இலட்சுமிபாயும் தாந்தியா தோப்பும், நானா சாகிப்பும் வீரத்தில் சிறந்தவர்களேயன்றி நல்ல

தளபதிகள் அல்ல. இறுதியாக ஆங்கிலேயரின் கடல் வலிமை தகுந்த நேரத்தில் அவர்களால் இங்கிலாந்திலிருந்து படை உதவி பெற ஏதுவாக அமைந்திருந்தது.

**புரட்சியின் விளைவுகள் :** 1. புரட்சிக்குப்பின் ஆங்கிலக் கிழக்கிந்திய வணிகக் குழுவின் ஆட்சி முடிவுக்கு வந்தது, 2. இந்தியாவை நிர்வகிக்கும் பொறுப்பினை ஆங்கில அரசே மேற்கொண்டது, 3. ஒரு சிறப்புச் சட்டத்தின் மூலம் இயக்குநர் குழுவும் (Board of Directors) கட்டுப்பாட்டுக் குழுவும் (Board of Control) கலைக்கப்பட்டன. அவற்றிற்குப் பதிலாக இந்தியச் செயலர் (Secretary of State for India) ஒருவர் நியமிக்கப்பட்டார். அவருக்கு உதவிட 15 உறுப்பினர்களைக் கொண்ட இந்தியக் குழு ஒன்று அமைக்கப்பட்டது, 4. இந்திய இராணுவம் முழுவதுமாக சீரமைக்கப்பட்டது, 5. இரக்கமற்ற முறையில் இந்திய நாடுகளை இணைத்துக் கொள்ளும் கொள்கை கைவிடப்பட்டது. இந்திய அரசுகளைப் பகைத்துக் கொண்ட தவறான செய்கையை ஆங்கிலேயர் உணர்ந்தனர்.

**ஆங்கிலக் கிழக்கிந்திய வணிகக்குழு ஆட்சியின் முடிவு :** 1858ல் புரட்சி அடக்கப்பட்டவுடன் இந்தியாவில் ஆங்கில ஆட்சி வரலாற்றில் ஒரு புதிய கட்டம் உருவானது. இந்தியா தொடர்பான ஆங்கிலக் கொள்கையில் முக்கிய மாறுதல்கள் ஏற்பட்டன. நிர்வாக அமைப்பிலும்கூட பல மாறுதல்கள் ஏற்பட்டன.

**1858-ஆம் வருட சட்டமும் விக்டோரியா பேரரசியின் பிரகடனமும் :** 1858-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் இங்கிலாந்துப் பாராளுமன்றம் ஒரு சட்டத்தினை இயற்றியது. அதன்படி ஆங்கிலக் கிழக்கிந்திய வணிகக் குழுவின் ஆட்சி முடிவுக்கு வந்தது. இந்திய நிர்வாகத்தினை ஆங்கில அரசு மேற்கொண்டது. இந்தியாவின் தலைமை ஆளுநர் **வைசிராய்** எனவும் அழைக்கப்பட்டார். வைசிராய் என்பதற்கு **அரசப்பிரதிநிதி** என்று பொருள் ஆகும்.

அச்சட்டம் இயற்றப்பட்டபோது இங்கிலாந்தை ஆட்சி செய்தவர் **விக்டோரியா மகாராணி**யாவார். அவரது பெயரில் ஒரு

பேரறிக்கை வெளியிடப்பட்டது. அதை 1858-ஆம் ஆண்டு **நவம்பர் மாதம் முதல் தேதி** இந்தியாவின் தலைமை ஆளுநரான **கானிங் பிரபு அலகாபாத்தில்** நடந்த தர்பாரில் (கூட்டம்) வெளியிட்டார். பேரரசியின் பிரகடனம் அல்லது பேரறிக்கை என அழைக்கப்பட்ட அவ்வறிக்கை இந்திய மக்களின் **மகாசாசனம்** என்றும் கருதப்பட்டது. இந்த அறிக்கை இந்தியர்களுக்குச் சில சலுகைகளை வழங்கியது. அதன்படி ஆங்கிலக் கிழக்கிந்திய வணிகக்குழு இந்திய அரசர்களுடன் கொண்டிருந்த உடன் படிக்கைகள் உறுதியாக்கப்பட்டன. அவ்வறிக்கை இந்தியாவின் பழமையான பண்பாடு, பழக்க வழக்கங்கள் மதிக்கப்படும் என உறுதியளித்தது. இந்திய மன்னர்களுக்குத் தத்து எடுத்துக் கொள்ளும் உரிமை வழங்கப்பட்டது. நாடிணைப்புக் கொள்கை கைவிடப்பட்டது. அவ்வறிக்கை அனைத்து இந்தியர்களும் இன, கொள்கை வேறுபாடின்றி கல்வி, திறமையின் அடிப்படையில் அரசு நிர்வாகப் பணிகளில் நுழையத் தகுதியுடையவர்கள் எனவும் அறிவித்தது. மேலும் புரட்சியின்போது ஆங்கிலேயரின் மரணத்திற்குக் காரணமாக இருந்தவர்கள் தவிர மற்ற அனைவருக்கும் நிபந்தனையற்ற மன்னிப்பும் வழங்கப்பட்டது.

**கற்றல் அடைவுகள்**

1. மாணவர் ஆங்கிலேயர்க்கு எதிராக நடந்த முந்தைய புரட்சிகளைச் சுட்டிக்காட்ட முடியும்.
2. மாணவர் 1857-ஆம் ஆண்டு பெரும்புரட்சிக்கான அரசியல், நிர்வாக, பொருளாதார, சமூக, சமய, இராணுவ மற்றும் உடனடிக் காரணங்களை நினைவுகூர முடியும்.
3. மாணவர் புரட்சியின் போக்கினை விளக்க முடியும்.
4. மாணவர் பெரும்புரட்சியின் தோல்விக்கான காரணங்களை விளக்க முடியும்.
5. மாணவர் புரட்சியின் விளைவுகளை விளக்க முடியும்.
6. மாணவர் பேரரசியின் பிரகடனத்தை விளக்க முடியும்.

## சுய மதிப்பீடு

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்**

1. தென்னிந்தியாவில் நடந்த புரட்சியில் பாளையக்காரர்களுக்குத் தலைமை ஏற்றவர்

   அ. இராணி இலட்சுமிபாய் ஆ. நானா சாகிப்

   இ. மருது சகோதரர்கள் ஈ. தாந்தியா தோப்

2. 1857ல் நடந்த புரட்சியைப் பற்றி ஆங்கில வரலாற்று ஆசிரியர்கள் விவரிக்கும் விதம்

   அ. சிப்பாய் கலகம் ஆ. பெருங்கலகம்

   இ. சுதந்திரப்போர் ஈ. விடுதலைப் போராட்டம்

3. இந்தியப் பெரும்புரட்சியின் போது இந்தியாவின் தலைமை ஆளுநராக இருந்தவர்

   அ. வெல்லெஸ்லி ஆ. டல்ஹௌசி

   இ. கானிங் ஈ. கிளைவ்

4. இயந்திரங்களால் உற்பத்திச் செய்யப்பட்ட ஆங்கில நாட்டுப் பொருட்கள் நிரம்பி வழிந்த இடம்

   அ. ஆங்கில நாட்டுச் சந்தை ஆ. இந்திய நாட்டுச் சந்தை

   இ. அரேபிய நாட்டுச் சந்தை ஈ. அமெரிக்க நாட்டுச் சந்தை

5. பொது இராணுவப் பணியாளர் சட்டம் வெளிவந்த ஆண்டு

   அ. 1856 ஆ. 1857

   இ. 1858 ஈ. 1859

6. கான்பூரில் புரட்சிக்குத் தலைமை தாங்கியவர்

   அ. நானாசாகிப் ஆ. இராணி இலட்சுமிபாய்

   இ. மங்கள் பாண்டே ஈ. பீஷ்வா முதலாம் பாஜிராவ்

7. கன்வர்சிங் ஒரு

   அ. ஆசிரியர் ஆ. சிப்பாய்

   இ. நிலப்பிரபு ஈ. கைவினைக் கலைஞர்

8. வங்காளத்திலிருந்த படைவீரர்கள் கீழ்க்கண்டவர்களின் இடைக்கால புகழினைத் திரும்பவும் கொண்டுவர எண்ணினர்

அ. மராத்தியர் ஆ. முகலாயர்

இ. சீக்கியர் ஈ. இந்துக்கள்

9. இராணி இலட்சுமிபாய் புரட்சியில் ஈடுபட்ட இடம்

அ. கான்பூர் ஆ. மத்திய இந்தியா

இ. லக்னோ ஈ. டெல்லி

10. வைசிராய் என்பதன் பொருள்

அ. அரசப்பிரதிநிதி ஆ. கப்பல் தலைவர்

இ. படைத்தளபதி ஈ. சமயத் தலைவர்

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக

1. பாளையக்காரர்கள் ______________ மற்றும் ______________ ஆகிய குணங்களில் சிறந்து விளங்கினர்.

2. 1857ல் நடந்த புரட்சியை இந்திய வரலாற்று ஆசிரியர்கள் ______________ என்று வருணிக்கின்றனர்.

3. 1857ல் நடந்த புரட்சியில் மிகச் சிறந்த வீரர்களாக______________ மற்றும் ______________ ஆகியோர் கருதப்பட்டனர்.

4. இந்தியப் படைவீரர்களுக்குத் தங்கள் சமயம் மற்றும் பண்பாட்டு வழக்கத்தின்படி ______________,______________ மற்றும் ______________ ஆகியவற்றைச் செய்ய தடை விதிக்கப்பட்டது.

5. இராணுவப் பொதுப்பணியாளர் சட்டம் இந்திய படைவீரர்கள் ______________ கடந்து பணியாற்றத் தயாராக இருக்க வேண்டும் என்று வற்புறுத்தியது.

6. நானாசாகிபின் படைகளை வழிநடத்திச் சென்றவர் ______________ ஆவார்.

7. மராத்தியர் ஆட்சியை மீண்டும் நிலைநாட்ட விரும்பிய தலைவர்கள் ______________ மற்றும் ______________ ஆவார்கள்.

8. பெரும் புரட்சியை அடக்க ஆங்கிலேயர்க்கு உதவி செய்த படைப்பிரிவு ______________ ஆகும்.

9. புரட்சியின்போது ஆங்கிலேயரின் விரைவான செயல்பாடுகளுக்கு ______________ மற்றும் ____________ முறைகள் மிக உதவியாக இருந்தன.

10. விக்டோரியா பேரரசியின் அறிக்கையை ______________ பிரபு ______________ தர்பாரில் வாசித்தார்.

**III. பின்வருவனவற்றைப் பொருத்துக**

**அ**

| | | | |
|---|---|---|---|
| 1. | வேலூர் சிப்பாய் கலகம் | -- | 1857 |
| 2. | பேரக்பூர் கலகம் | -- | பேரரசர் |
| 3. | பெரும்புரட்சி | -- | ஜான்சி |
| 4. | இரண்டாம் பகதூர்ஷா | -- | 1824 |
| 5. | இராணி இலட்சுமிபாய் | -- | 1806 |

**ஆ**

| | | | |
|---|---|---|---|
| 1. | மங்கள் பாண்டே | -- | கான்பூர் |
| 2. | இரண்டாம் பகதூர்ஷா | -- | அயோத்தி |
| 3. | நானா சாகிப் | -- | மத்திய இந்தியா |
| 4. | பேகம் ஹஸ்ரத் மகால் | -- | டெல்லி |
| 5. | இலட்சுமிபாய் | -- | பேரக்பூர் |

**IV. சுருக்கமாக விடையளிக்கவும்**

1. பாளையக்காரர்களைப் பற்றி உமக்கு என்ன தெரியும்? அவர்களில் சிலர் பெயரைக் குறிப்பிடுக.
2. பெரும்புரட்சி ஏற்பட ஆங்கிலேயரின் நாடு இணைப்புக் கொள்கை எவ்விதம் காரணமாயிற்று?
3. ஆங்கில அரசின் மீது இசுலாமியர் அதிருப்தி அடைந்ததேன்?
4. இந்தியாவின் தொழில்களை ஆங்கிலேயர் எவ்விதம் முடக்கினர்?
5. இந்தியாவில் நெசவுத் தொழில் மறையக் காரணங்கள் யாவை?

6. ஆர்.டி. மேங்கல்ஸ் (R.D. Mangles) அறிக்கையைப் பற்றி ஒரு குறிப்பு தருக.

7. 1857-ஆம் ஆண்டு நடந்த புரட்சியின் உடனடிக் காரணம் யாது?

8. மீரட் புரட்சியின் விளைவுகளை வெளிப்படுத்துக.

9. பெரும்புரட்சியில் இராணி இலட்சுமிபாயின் பங்கு யாது?

10. கன்வர்சிங்கின் சாதனையைக் குறிப்பிடுக.

11. புரட்சி ஏன் இந்தியா முழுவதும் பரவவில்லை?

12. 1857ல் நடந்த புரட்சியில் பங்கு பெற்ற தலைவர்களிடையே பொது நோக்கம் காணப்படவில்லை என்பதை நிரூபி?

13. விக்டோரியா பேரரசியின் அறிக்கையின் முக்கியத்துவம் யாது?

## V. விரிவான விடை தருக

1. 1857-ஆம் ஆண்டு நடைபெற்ற பெரும்புரட்சிக்கான காரணங்கள் யாவை?

2. புரட்சி ஏன் இந்தியாவின் வடக்கு மற்றும் மத்தியப் பகுதிகளில் மட்டும் பரவியது?

3. 1857-ஆம் ஆண்டு பெரும்புரட்சி தோல்வியடைந்ததற்கான காரணங்களை வரிசைப்படுத்துக.

4. 1857-ஆம் ஆண்டு புரட்சியின் விளைவுகளை எழுதுக.

## VI. செய்முறைப் பயிற்சி

1. இந்திய வரைபடத்தில் புரட்சி நடந்த கீழ்க்கண்ட மையங் களைக் குறிக்கவும் :

   டெல்லி, கான்பூர், லக்னோ, மீரட், பேரக்பூர், பரெய்லி, குவாலியர், அலகாபாத்.

அலகு - II

பாடம் - 4

# 19-ஆம் நூற்றாண்டின் சமூக, சமயச் சீர்திருத்த இயக்கங்கள்

**கற்றல் நோக்கங்கள்**

1. மாணவர் இந்தியாவில் சமூக, சமயச் சீர்திருத்த இயக்கங்கள் தோன்றியதற்கான காரணங்கள் பற்றிய அறிவினைப் பெறல்.
2. மாணவர் பிரம்ம சமாஜம், ஆரிய சமாஜம் மற்றும் இராம கிருஷ்ண இயக்கம் ஆகியவற்றின் நோக்கங்கள், அவற்றின் பணிகள் பற்றிய அறிவினைப் பெறல்.
3. மாணவர் பிரம்ம ஞானசபை தோற்றுவிக்கப்பட்ட விதம் பற்றியும், டாக்டர் அன்னிபெசன்ட் இந்திய சமுதாயத்திற்கு ஆற்றிய தொண்டுகள் பற்றியும் புரிந்து கொள்ளுதல்.
4. மாணவர் முசுலிம் சீர்திருத்த இயக்கங்கள் பற்றியும் சையது அகமதுகானின் பணிகள் பற்றியும் கற்றல்.
5. மாணவர் பார்சி, சீக்கியர் சீர்திருத்த இயக்கங்கள் பற்றி தெரிந்து கொள்ளுதல்.
6. மாணவர் சமூக, சமயச் சீர்திருத்த இயக்கங்களின் விளைவு களைப் பற்றி புரிந்து கொள்ளுதல்.

பத்தொன்பதாம் நூற்றாண்டு, இந்தியாவில் சமூகம் மற்றும் சமயத்தில் பல சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன. சமயத்திலும், சமூகத்திலும் புகுந்த தீமைகளையும் கேடுகளையும் நீக்குவதற்குப் படித்த இளைஞர்கள் பலர் முயன்றனர்.

மேற்கத்திய கருத்துக்களான பகுத்தறிதல், சமத்துவம், சுதந்திரம் மற்றும் மனிதத் தன்மை போன்றவை அவர்களைக் கவர்ந்தன. எனவே அவர்கள் தங்கள் பண்பாட்டில் இருந்த குறைகளை நீக்க முயன்றனர். அவர்கள் இந்தியப் பண்பாட்டினை மீண்டும் புத்துயிர் பெறச்செய்ய விரும்பினர். ஆகவே 19-ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட சமூக, சமயச் சீர்திருத்தங்களை **இந்திய மறுமலர்ச்சி இயக்கம்** என்று நாம் அழைக்கின்றோம். இராஜா ராம்மோகன் ராய் அவ்வியக்கத்தின் முன்னோடியாகத் திகழ்ந்தார்.

**சமூக, சமய இயக்கங்கள் தோன்றுவதற்கான காரணங்கள் - அரசியல் ஒற்றுமை :** ஆங்கிலேய ஆட்சியின் விரிவாக்கம், ஒருங்கிணைப்புக் கொள்கையால் இந்தியா அரசியல் ரீதியில் ஒன்றுபடுத்தப்பட்டது. அதனால் இந்தியர்களிடையே நிலவியப் பொதுப்பிரச்சனைகள் அனைவராலும் புரிந்து கொள்ளப்பட்டன. ஆங்கிலேய ஆட்சியின் தன்மையானது பல இந்திய இளைஞர் களைத் தங்களது துன்பத்திற்கும் இழிநிலைக்குமான காரணங் களை அறியத் தூண்டியது.

**கிறித்துவ சமயப்பரப்பூழியர்களின் பிரச்சாரத்திற்கு எதிர்ப்பு :** கிறித்துவ சமயப்பரப்பூழியர்கள் குறிப்பாக, ஏழை, ஒடுக்கப் பட்டவர்கள், மத்தியில் தங்கள் மதத்தைப் பரப்ப எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டனர். கல்விக் கூடங்கள், மருத்துவ மனைகள், இலவசச் சேவைகள் மற்றும் அரசின் ஆதரவு ஆகியவை கூட அந்நோக்கத்திற்குப் பயன்படுத்தப்பட்டது. எனவே இந்துக்களும், இசுலாமியர்களும் தங்கள் சமயங்களைக் காப்பாற்ற எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டனர்.

**அயல்நாட்டு அறிஞர்களின் பங்களிப்பு :** மேற்கத்திய அறிஞர்க ளான **மாக்ஸ்முல்லர்** மற்றும் **வில்லியம் ஜோன்ஸ்** ஆகியோர் இந்தியாவின் பழம்பெருமையை வெளிக்கொணர்ந்தனர். அவர்கள் பண்டைய இந்தியாவின் புலமைமிக்க நூல்களை ஆழ்ந்து படித்தனர். அதன் விளைவாக மேற்கத்தியப் பண்பாட்டை விட மிக உயர்ந்த இந்தியப் பண்பாட்டுச் செரிவினை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தனர். அவர்கள் பல இலக்கிய, சமய நூல்களை மொழிபெயர்த்தனர். அந்நூல்கள்

உலகப் புகழ் பெற்றன. அதனால் படித்த இந்தியர்களிடையே தங்கள் பண்பாட்டில் நம்பிக்கை வளர்ந்தது. எனவே அவர்கள் மேற்கத்தியப் பண்பாட்டை விட இந்தியப் பண்பாடு மேம்பட்டது என்பதை நிலைநாட்ட எண்ணினர்.

**இந்தியச் செய்தித் தாள்கள் :** ஐரோப்பியர்கள் இந்தியாவில் அச்சுக் கூடங்களை அறிமுகப்படுத்தினர். அதனால் நாளிதழ்களும், பருவ இதழ்களும் வெளிவரத் தொடங்கின. பல்வேறு இந்திய மொழிகளில் பல புத்தகங்களும் வெளியிடப்பட்டன. அவற்றில் பெரும்பாலும் இந்திய நாட்டைப் பற்றிய கருத்துக்கள் இடம் பெற்றிருந்தன. அவை நம்நாட்டின் பாரம்பரியத்தையும் மேன்மையையும் படித்த இந்தியர்கள் அறிந்து கொள்ள உதவின. எனவே அவர்கள் இந்தியப் பண்பாட்டு மறுமலர்ச்சிக்குப் பணியாற்றிடத் தொடங்கினர்.

**மேனாட்டுக் கல்வி :** மேனாட்டுக் கல்வியினால் மேலைக் கருத்துக்களான மக்களாட்சி, சுதந்திரம், சமத்துவம் மற்றும் தேசியம் ஆகியவை இந்தியாவில் பரவின. மேற்கத்திய நாடுகளுக்குச் சென்ற இந்தியர்கள் அக்கருத்துக்கள் அங்கு செயல்படும் விதம் பற்றி நேரடியாக அறிந்து கொண்டனர். தாய்நாடு திரும்பிய அவர்கள் இந்தியர்களிடையே அவை பற்றிய விழிப்புணர்ச்சி இல்லாமல் இருப்பதைக் கண்டு மனம் வருந்தினர். அக் கருத்துக்கள் இந்தியாவில் பரவ அவர்கள் தேவையான அடிப் படைச் செயல்களில் ஈடுபட்டனர்.

| |
|---|
| பல்வேறு துறைகளில் ஆங்கிலக் கல்வி பெற்ற இந்தியர்களால்தான் இந்திய தேசிய உணர்வும், நவீன சிந்தனையும் பெருமளவில் வளர்ச்சி பெற்றது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். |

***பிரம்ம சமாஜம் - 1828 :*** பிரம்ம சமாஜம் 1828-ஆம் ஆண்டு **இராஜா ராம்மோகன்ராய்** என்பவரால் தொடங்கப்பட்டது. அவர் வங்காளத்தில் ஓர் அந்தணர் குடும்பத்தில் பிறந்தார். அவர் அராபி, சமஸ்கிருதம், பாரசீகம், ஆங்கிலம், பிரெஞ்சு, இலத்தீன், கிரேக்கம் மற்றும் ஹீப்ரு போன்ற பல மொழிகளைக் கற்றுணர்ந்தார். மேலும் இந்து, இசுலாம், கிறித்துவம் மற்றும் சூபி

ஆகிய பல சமய தத்துவங்களையும் கற்றார். இந்து சமூகத்தையும் சமயத்தையும் சீர்திருத்துவது அவரின் முக்கிய நோக்கமாக இருந்தது. அவர் வங்காளம், இந்தி, சமஸ்கிருதம், பாரசீகம் மற்றும் ஆங்கில மொழிகளில் பலநூல்கள் எழுதியுள்ளார். **ஏசு கிறிஸ்துவின் கட்டளைகள்** (Precepts of Jesus Christ), **அமைதிக்கும் மகிழ்ச்சிக்கும் வழி** (The Guide to Peace and Happiness) ஆகியன அவற்றில் சில. அவர் வங்காள மொழியிலும் பாரசீக மொழியிலும் செய்தித்தாள்களை ஆரம்பித்தார். முகலாயப் பேரரசரான இரண்டாம் அக்பர் **இராம்மோகனுக்கு** இராஜா என்ற பட்டத்தை அளித்து அவரைத் தனது தூதுவராக இங்கிலாந்துக்கு அனுப்பி வைத்தார்.



இராஜா ராம்மோகன்ராய்

ஒரே கடவுள் என்ற கொள்கையின் அடிப்படையிலான பொதுச்சமயத்தில் நம்பிக்கைக் கொண்டவர்களின் சபையாக பிரம்ம சமாஜம் இருந்தது. உருவ வழிபாடு, சமய விதிகள், சடங்குகள் ஆகியவற்றை **இராஜாராம்மோகன்ராய்** கண்டித்தார். ஆனால் அவர் இந்து சமயத்திலும், வேதங்களிலும் கொண்டிருந்த நம்பிக்கையை இழக்கவில்லை. பிரம்ம சமாஜம் சாதிமுறை, தீண்டாமை, சதி எனும் உடன்கட்டை ஏறுதல், உருவ வழிபாடு ஆகியவற்றைக் கண்டித்தது.

பெண்களின் நிலையினை உயர்த்த இராஜாராம் மோகன்ராயும் வில்லியம் பென்டிங் பிரபுவும் சதி என்னும் உடன்கட்டை ஏறும் பழக்கத்தை ஒழிக்க முயற்சித்தனர். 1829-ஆம் ஆண்டு பென்டிங் பிரபு உடன்கட்டை ஏறும் பழக்கம் சட்டத்திற்குப் புறம்பானது என்றும், அதை ஊக்குவிப்பவருக்கு மரணதண்டனை வழங்கப்படும் என்றும் அறிவித்தார்.

இக்கொடிய பழக்கத்திற்கு எதிராக **இராம்மோகனை** மாற்றிய நிகழ்ச்சி எது என்று உங்களுக்குத் தெரியுமா? **இராம்மோகன்** சிறுவனாய் இருந்தபோது தம்மிடம் மிகவும்

அன்புகாட்டிய தனது மூத்த அண்ணனின் மனைவியைக் கணவன் இறந்தவுடன், தமது உறவினர்கள் உடன்கட்டை ஏற வற்புறுத்தி இறந்ததைக் கண்டார். அவருடைய இளம் நெஞ்சில் அந்த நிகழ்ச்சி ஆறாத பெரிய வடுவாக இருந்தது. எனவே இளம் வயதிலேயே அக்கொடிய பழக்கத்தை அடியோடு நீக்க வேண்டும் என மனதில் உறுதிகொண்டார்.

பிரம்ம சமாஜம் குழந்தைத் திருமணத்தையும், பலதார மணத்தையும் எதிர்த்தது. மேலும் விதவைகள் மறுமணத்தை ஆதரித்தது. பிரம்ம சமாஜத்தின் தலைவர்களில் ஒருவரான கேசவ **சந்திர சென்னின்** முயற்சியால் 1872-ஆம் ஆண்டு ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டது. அதன்படி குழந்தைத் திருமணமும், பலதார மணமும் ஒழிக்கப்பட்டன. அச்சட்டம் கலப்புத் திருமணத்தையும், விதவைகள் மறுமணத்தையும் ஆதரித்தது.

இராஜாராம்மோகன்ராயின் மறைவிற்குப் பின் பிரம்ம சமாஜத்தின் பணிகளைப் புகழ்மிக்க **கேசவ சந்திர சென்னும் தேவேந்திர நாத் தாகூரும்** மேற்கொண்டு நடத்தினர்.

**ஆரிய சமாஜம் - 1875 :** ஆரிய சமாஜத்தினை, **சுவாமி தயானந்த சரஸ்வதி** 1875-ஆம் ஆண்டு தொடங்கினார். அவர் குஜராத்தில் இருந்த ஒரு சிறு நகரத்தில் பழமையில் ஊறிய அந்தணர் குலத்தில் பிறந்தார். அவர் இளமைக் காலத்தில் **மூல் சங்கர்** என்று அழைக்கப்பட்டார். அவர் சுவாமி **வராஜ்னந்தர்** (Vrajanand) என்பவரை மதுராவில் சந்தித்தார். அவரின் சீடராகி வேதங்களைக் கற்றார். வேதங்களைப் பரப்புவதில் அவர் தன் வாழ்நாள் முழுவதையும் செலவிட்டார். அவர் இந்து சமூகத்தைச் சீர்திருத்த எண்ணினார்.



சுவாமி தயானந்த சரஸ்வதி

தயானந்த சரஸ்வதியின் கருத்துப்படி வேதங்கள் எல்லா உண்மைகளையும் உள்ளடக்கியுள்ளன. எனவே **''வேதங்களை**

**நோக்கிச் செல்''** (Go Back to The Vedas) என்பது அவரது முழக்க மானது. வேதங்களைப் பற்றிய அவருடைய கருத்துக்கள் **சத்யார்த்த பிரகாஷ்** (Sathyartha Prakash) என்ற அவர் எழுதிய நூலில் காணப்படுகின்றன.

சமயத்தைப் பொறுத்தவரையில் ஆரிய சமாஜம் உருவ வழிபாடு, சமயச் சடங்குகள், மிருகங்களைப் பலியிடல், சொர்க்கம், நரகம் மற்றும் தலைவிதி போன்ற கோட்பாடுகளை எதிர்த்தது. மதம் மாறி மற்ற மதங்களில் சேர்ந்த இந்து சமய மக்களைத் திரும்பவும் இந்து சமயத்திற்குக் கொண்டுவர தயானந்த சரஸ்வதி **சுத்தி இயக்கம்** (Suddhi Movement) என்ற இயக்கத்தை ஆரம்பித்தார். அதன் விளைவாக ஏராளமானவர்கள் திரும்பவும் இந்து சமயத்தினைப் பின்பற்ற ஆரம்பித்தனர்.

> தயானந்த சரஸ்வதி இந்து சமயத்தின் மார்டின் லூதர் என்று அழைக்கப்படுகிறார். மார்டின் லூதர் ஜெர்மெனியைச் சேர்ந்த சிறந்த சமயச் சீர்திருத்தவாதியாவார்.

ஆரிய சமாஜம் இந்து சமூகத்திற்குப் பயனுள்ள பல பணிகளைப் புரிந்துள்ளது. அவ்வமைப்பு குழந்தைத் திருமணம், பலதாரமணம், பர்தா எனும் முகத்திரை அணியும் முறை, சாதிமுறை மற்றும் உடன்கட்டை ஏறுதல் ஆகியவற்றை எதிர்த்தது. சமாஜம் பெண்கல்வி, தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றம் ஆகியவற்றை வற்புறுத்தியது. கலப்புத் திருமணம், சமபந்தி உணவு உண்ணல் (interdining) ஆகியவற்றை ஊக்குவித்தது. ஆரிய சமாஜம் இந்தியாவில் குறிப்பாக வட இந்தியாவில் ஏராள மான கல்வி நிறுவனங்களை நிறுவியுள்ளது. குருகுலங்களும் மகளிர் குருகுலங்களும் சமஸ்கிருத மொழியில் வேதங்களையும் ஆயுர்வேதத்தினையும் கற்பிக்கின்றன. தயானந்தர் ஆங்கில வேத பள்ளிகளிலும் (DAV Schools — Dayanand Anglo-Vedic Schools) கல்லூரிகளிலும் நவீனக் கல்வி, மனித பாடங்கள், அறிவியல் ஆகியன கற்பிக்கப்படுகின்றன. தயானந்தரின் சீடர்களான **லாலா லஜபதிராய், லாலா ஹன்ஸ்ராஜ், பண்டித குருதத்** ஆகியோர் ஆரிய சமாஜக் கொள்கைகளைப் பரப்பினர். இந்திய தேசியத் தலைவர்களான **பாலகங்காதர திலகர், கோபால கிருஷ்ண**

**கோகலே** ஆகியோர் ஆரிய சமாஜத்தின் தத்துவங்களிலும் கோட்பாடுகளிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டு இருந்தனர்.

> ‘சுதேசம்’ ‘இந்தியா இந்தியருக்கே’ போன்ற நற்கருத்துக் களை முதன்முதலில் கூறியவர் தயானந்த சரஸ்வதியாகத்தான் இருக்க வேண்டும். அவருடைய மற்ற குறிக்கோள் வாசகம் (Motto) ‘வாய்மையே வெல்லும் பொய்மை அல்ல’ என்று பொருள்படும். ‘சத்யமேவ ஜெயதே’, ‘நா அன்ரிதம்’ (Satyam Eva Jayate', 'Na Anritam') என்பதாகும்.

***பிரம்ம ஞான சபை*** - *1875* (Theosophical Society) **தியோசாபி** என்ற சொல் இரு கிரேக்கச் சொற்களின் இணைப்பு ஆகும். **தியோஸ்** என்றால் **கடவுள்** என்றும் **சோபாஸ்** என்றால் **அறிவு** என்றும் பொருள்படும். எனவே தியோசாபி என்றால் **கடவுளைப் பற்றிய** அறிவு என்று பொருள்படும். இது சமஸ்கிருத மொழியில் பிரம்மஞானம் என்று அழைக்கப்படுகிறது. இச்சபை முதன் முதலில் **பிளாவாட்ஸ்கி** என்ற பெண்மணியாலும், **கர்னல் எச்.எஸ். ஆல்காட்** என்பவராலும் *1875*-ஆம் ஆண்டு அமெரிக்க ஐக்கிய நாடுகளில் அமைக்கப்பட்டது.

இந்தியாவின் சிந்தனையும் பண்பாடும் அவர்களை ஈர்த்தன. எனவே அவர்கள் பின்னர் அச்சபையின் தலைமை இடத்தை சென்னையிலுள்ள **அடையாறு**க்கு மாற்றினர்.

***பிரம்மஞான சபையின் முக்கியக் கொள்கைகள் :*** இச்சபையின் கொள்கைகளாவன :

1. சகோதரத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட அனைத்து மக்களின் அமைப்பு ஒன்றை உருவாக்குதல்,
2. பண்டைய சமயம், தத்துவம், அறிவியல் பற்றி கற்றல், மற்றும்
3. இயற்கையின் நியதிகளை அறிந்து மனிதனிடம் தெய்வீக சக்திகளை வளர்த்தலும் ஆகும்.

இச்சபையின் சிறப்புமிக்க அங்கத்தினரான **திருமதி. அன்னிபெசன்ட்** அம்மையார் *1893*-ஆம் ஆண்டு இந்தியா வந்தார்.

அவர் பிரம்மஞான சபையின் தலைமைப் பொறுப்பினை ஏற்றார். அவர் இந்து சமய மறுமலர்ச்சிக்குத் தன்னை அர்ப் பணித்துக் கொண்டார். கல்வித் துறையில் அவர் ஆற்றிய பணிகள் மிக முக்கியமானவையாகும். அவர் **பனாரசில்** (காசி) தொடங்கிய **மத்திய இந்துக் கல்லூரி** இறுதியில் **பனாரசு இந்து பல்கலைக் கழகத்துடன்** இணைக்கப்பட்டது. அவர் நடத்திய செய்தித்தாளான **நியூ இந்தியா** (New India) பிரம்மஞானக் கொள்கைகளைப் பரப்பியது. பின்னர் அவர் ஆரம்பித்த **தன்னாட்சி இயக்கம்** (Home Rule Movement) இந்தியத் தேசிய இயக்கத்திற்கு உத்வேகம் அளித்தது.

***இராமகிருஷ்ண இயக்கம் 1897 :*** 19-ஆம் நூற்றாண்டின் மற்றொரு முக்கியமான சீர்திருத்தவாதி **இராம கிருஷ்ண பரமஹம்சர்** ஆவார். அவர் கல்கத்தாவிற்கு அருகில் உள்ள **தட்சிணேசுவரத்**திலிருந்த காளி கோயிலின் பூசாரியாக இருந்தார். அவர் முறையாகக் கல்வி கற்க வில்லை. எனினும் தன்னுடைய எளிமையான இயல்புகளாலும் உண்மையான அறிவினாலும் தன்னைச் சுற்றி இருந்தவர்களின் அன்பினைப் பெற்றார். எல்லா சமயங்களின் அடிப்படை உண்மைகளிலும் அவருக்கு ஆழ்ந்த நம்பிக்கை இருந்தது. அவர் அனைத்துச் சமயங்களின் ஒற்றுமையைப் போதித்தார். அவர் வேதங்களிலும் உபநிடதங்களிலும் காணப்படும் உயரிய கருத்துக் களை மிக எளிமையான முறையில் நீதிக்கதைகள் (Parables) மூலம் எடுத்துரைத்தார். மக்கள் அனைவரும் கடவுளின் ஒரு பகுதியே என்று வலியுறுத்தினார். அவரைப் பொருத்தவரை **''மனிதருக்குச் செய்யும் பணி கடவுளுக்குச் செய்வதாகும்.''**



**இராமகிருஷ்ண பரமஹம்சர்**

இராமகிருஷ்ணரின் கொள்கைகளைப் பரப்பியப் பெருமை அவருடைய முக்கிய சீடரான **விவேகானந்தரையே** சேரும். விவேகானந்தரின் இளமைப் பெயர் **நரேந்திரநாத்** என்பதாகும்.



சுவாமி விவேகானந்தர்

அவர் ஆங்கிலப் பள்ளிகளில் தம் பள்ளிப்படிப்பை முடித்தபின் உயர் கல்விப் பெற்றார். அவர் மேலை நாட்டுத் தத்துவ ஞானிகளின் நூல்களைப் படித்தார். ஒரு முறை காளி கோவிலுக்குச் சென்ற அவர் இராமகிருஷ்ணரைச் சந்தித்தார். நரேந்திரர் அவரால் ஈர்க்கப்பட்டார். அது முதல் அவர் இராமகிருஷ்ண பரமஹம்சரிடம் மிக நெருக்கமாகப் பழக ஆரம்பித்தார். இராம கிருஷ்ணரின் மறைவிற்குப் பின் விவேகானந்தர் தம் ஆசானின் கொள்கைகளை இந்தியா முழுவதும் பரப்பினார். அவருடைய பேச்சுத்திறனும், தோற்றமும் அரசர்களையும், சாதாரண குடியானவர்களையும் அவர்பால் கவர்ந்தன. விவேகானந்தரைப் பொறுத்தவரை **''ஏழைகளுக்கும், தாழ்த்தப் பட்டவர்களுக்கும் செய்யும் பணியே கடவுளுக்குச் செய்யும் மிகப்பெரிய பணியாகும்''.** அதுவே அவருடைய குறிக்கோளாயிற்று.

விவேகானந்தர் 1893-ஆம் ஆண்டு அமெரிக்காவில் உள்ள **சிக்காகோ** நகரில் நடைபெற்ற **உலகச் சமய மாநாட்டில்** பங்கு பெற்றார். அங்கு குழுமியிருந்தவர்களை நோக்கி அவர் தம் உரையை **''இவ்வுலகச் சகோதர, சகோதரிகளே''** (Brothers and Sisters of this Universe) என்று தொடங்கினார். விவேகானந்தர் உலகப் பார்வையில் இந்தியரின் பண்பாட்டினையும், இந்து சமயத்தின் மேன்மையையும் உயர்த்தினார். சிக்காகோவிலும், அமெரிக்காவின் இதர பகுதிகளிலும் மற்றும் இங்கிலாந்திலும் அவர் ஆற்றிய உரைகளால் அவருக்குப் புகழும் நண்பர்களும் கிட்டினர்.

**இராமகிருஷ்ணமடம்** 1897-ஆம் ஆண்டு சுவாமி விவேகானந்தரால் கொல்கத்தாவிற்கருகிலுள்ள பேலூரில் நிறுவப்பட்டது. இராமகிருஷ்ண மடத்தின் கிளைகள் இந்தியா வில் மட்டுமின்றி உலகின் பல பகுதிகளிலும் உள்ளன. **''மனித இனத்திற்குச் சேவை செய்வதே''** இவ்வியக்கத்தின் குறிக் கோளாகும். கல்வி, பெண்களின் மேம்பாடு, ஏழைகள் மற்றும்

தாழ்த்தப்பட்டவர்களின் வறுமை அகற்றல் ஆகியவற்றிற்கான பலசேவைகளை இந்நிறுவனம் செய்து வருகின்றது. இவ் வியக்கம் பல பள்ளிகளையும், தொழில்நுட்ப நிறுவனங் களையும், அனாதை இல்லங்களையும், மருத்துவமனைகளையும் நிறுவியுள்ளது. மேலும் இயற்கைத் துயரங்களான வெள்ளம், பஞ்சம் போன்றவைகளின் பாதிப்பிற்குள்ளான மக்களின் துயர் நீக்கவும், இந்நிறுவனம் பணியாற்றியுள்ளது.

| |
|---|
| சுவாமி விவேகானந்தர் இந்து சமயம், பண்பாடு, சமூகம், இந்திய தேசியம் ஆகியவற்றிற்குப் பெரும் தொண்டு ஆற்றி யுள்ளார். அதனால் இராமகிருஷ்ண இயக்கம் மிக வலிமை வாய்ந்ததாக மாறியது. இன்னமும் இந் நிறுவனம் இந்திய சமூகத்திற்குப் பயனளிக்கும் பணிகளைத் தொடர்ந்து செய்து வருகின்றது. |

**முசுலிம் இயக்கங்கள் :** முசுலிம்கள் நீண்டகாலமாக மேனாட்டுக் கல்வி மற்றும் ஆங்கிலேய ஆட்சியின் தாக்கத்திலிருந்து விலகியே இருந்தனர். 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் முசுலிம் சமூகத்தினரிடையே சீர்திருத்த இயக்கங்கள் தோன்றின. நவீனக் கல்வி முறையைப் பரப்புவதும், முசுலிம் சமுதாயத்தில் காணப்பட்ட பர்தா முறை, பலதார மணம் போன்றவைகளைக் களைவதும் அவற்றின் நோக்கமாக இருந்தன. 1863-ஆம் ஆண்டு கொல்கத்தாவில் **முகமதியர் இலக்கியக்கழகம்** (Mohammeden Literacy Society) என்ற அமைப்பை **நவாப் அப்துல் லத்தீப்** ஆரம்பித்தார். அக்கழகம் இசுலாமியரிடையே கல்வியைப் பரப்புவதில் முக்கியப் பங்கினை ஆற்றியதுடன் வங்காளத்தில் பல பள்ளிகளைத் தொடங்கியது.

**சையது அகமது கானும் அலிகார் இயக்கமும் :** முசுலிம் களிடையே நவீனக் கல்வியையும், சமூகச் சீர்திருத்தங்களையும் பரப்பிய மிக முக்கியமான அலிகார் இயக்கத்தை **சர் சையது அகமதுகான்** தொடங்கினார். அவர் ஆங்கில அரசாங்கத்தில் நீதித்துறையில் அலுவலராகப் பணியாற்றியவர். அவர் 1857-ல் நடந்த பெரும் புரட்சியின்போது ஆங்கிலேயருக்கு விசுவாசமாக இருந்தார். மேலும் ஆங்கில அரசுடன் முசுலிம்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று வற்புறுத்தினார். எனவே அவர் இந்திய


சர் சையது அகமதுகான்

தேசியக் காங்கிரசை எதிர்த் தார். மேலும் ஆங்கிலேயருக்கு எதிராக முசுலிம்கள் அரசியல் போராட்டத்தில் ஈடுபடுவது அவர்களது நலன்களைப் பாதிக்கும் என அவர் நம்பினார்.

சையது அகமதுகான் இந்திய தேசியக் காங்கிரசை எதிர்த்தாலும் இந்து முசுலிம் ஒற்றுமையை அவர் வலியுறுத்தி வந்தார். இந்துக்கள், முசுலிம்கள் ஆகிய இருவரும் ஒரே நாட்டைச் சேர்ந்தவர்கள் என்றும், அவர்களின் ஒற்றுமையில்தான் நாட்டின் முன்னேற்றம் உள்ளது என்றும் கருதினார்.

1864-ஆம் ஆண்டு சர் சையது அகமதுகான் **காசிபூரில்** பள்ளி ஒன்றைத் தொடங்கினார். பின்னாட்களில் அது **அறிவியல் கழகம்** (Scientific Society) என்று அழைக்கப்பட்டது. அக்கழகம் பல அறிவியல் நூல்களை உருது மொழியில், மொழிபெயர்த்து வெளியிட்டது. அவரின் மிகப்பெரிய சாதனை 1875-ஆம் ஆண்டு அலிகாரில் **முகமதியன் ஆங்கிலோ ஓரியண்டல் கல்லூரியை** (MAO) நிறுவியதாகும். இக்கல்லூரி நாளடைவில் இந்திய முசுலிம்களின் மிக முக்கியமான கல்வி நிறுவனமாக மாறியது. பின்னர் அந்நிறுவனம் **அலிகார் முசுலிம் பல்கலைக் கழகமாக** வளர்ந்தது. சர் சையது அகமது கானால் தொடங்கப்பட்ட இயக்கம் **அலிகார் இயக்கம்** என்று அழைக்கப்பட்டது. அவர் பெண்கள் முகத்திரை அணிவதை நீக்கவும் பெண்கல்வி வளரவும் சாதகமாகச் செயல்பட்டார். அவர் தான் நடத்திய **தாஹ்முல்-உத்-அக்லாக்** (Thazil-ud-Akhlag) (ஒழுக்கச் சீர்திருத்தம்) என்ற பத்திரிகையின் வாயிலாகத் தம் கருத்துக்களைப் பரப்பினார். முசுலிம் சமூகத்தினருக்குப் பணியாற்றிடப் பல சேவைக் கழகங்கள் தொடங்கப்பட்டன.

**பார்சி மற்றும் சீக்கிய சீர்திருத்த இயக்கங்கள் :** பார்சி இன மக்களிடையே சமய, சமூகச் சீர்திருத்தத்தினைப் புகுத்துவதில் முன்னோடியாக விளங்கியவர்கள் **தாதாபாய் நௌரோஜியும், நௌரோஜி பஃர்டுன்ஜியும்** (Navoroji Furdoonji) ஆவார். பெண் களின் முன்னேற்றத்திற்காகவும், அவர்களிடையே நவீன கல்வி

முறையைப் பரப்பவும் இருவருமாக இணைந்து **ராஸ்த் கோப்தார்** (Rast Goftar) என்ற பத்திரிகையை ஆரம்பித்தனர். மற்றுமொரு முக்கிய பார்சி இன சீர்திருத்தவாதி **சோரப்ஜி பெங்காலி** (Sorabji Bengali) என்பவராவார்.

சீக்கியர் மத்தியில் சீர்திருத்த இயக்கம் **சிங் சபாக்களால்** (Singh Sabhas) தொடங்கப்பட்டது. அவை **லாகூரிலும் அமிர்த சரசிலும்** ஆரம்பிக்கப்பட்டன. அவ்விரு சபாக்களும் இணைந்து கல்வியைப் பரப்புவதில் முக்கியப்பங்கு வகித்தன. 1892-ல் அமிர்தசரசில் **கால்சா கல்லூரி** (Khalsa College) ஆரம்பிக்கப் பட்டது. மேலும் பல கல்வி நிறுவனங்களும் தொடங்கப் பட்டன.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் சீக்கியரின் வழி பாட்டுத் தலங்களான **குருத்துவாராக்கள்** பூசாரிகளாலும் மகந்துக் களாலும் (Mahants) கட்டுப்படுத்தப்பட்டு வந்தன. அவர்கள் அந்த வழிபாட்டுத் தலங்களைத் தங்களின் சொந்தச் சொத்துக்களாகக் கருதினர். **சிரோன்மணி குருத்துவாரா பிரபந்தக் கமிட்டியும் அகாலிதளக் கட்சியும்** அக்குருத்துவாராக்களை சீக்கிய இனப் பிரதிநிதிகளிடம் ஒப்படைக்க நோக்கம் கொண்டன. சுதந்திர இயக்கத் தலைவர்களும் அதை ஆதரித்தனர். 1925-ஆம் ஆண்டு ஒரு சட்டம் இயற்றப்பட்டு அச்சட்டம் குருத்துவாராக்களை நிர்வகிக்கும் பொறுப்பினை சிரோன்மணி குருத்துவாரா பிரபந்தக் கமிட்டியிடம் ஒப்படைத்தது.

**சீர்திருத்த இயக்கங்களினால் ஏற்பட்ட விளைவுகள் :** 1. சீர்திருத்த இயக்கங்கள் சமூகத்திலும், சமயத்திலும் குறிப்பிடத்தக்க மாறுதல்களைக் கொண்டு வந்தன. தொடக்கத்தில் குறிப்பிட்ட சில இடங்களில் ஏற்பட்ட பெரும் மாற்றங்கள் நாளடைவில் அனைத்துப் பிரிவு மக்களிடையேயும் பரவின, 2. சீர்திருத்த இயக்கங்கள் இந்து முசுலிம் சமயங்களை உறுதியுடையன ஆக்கியதுடன் அச்சமயத்தினரிடையே நிலவிய சமூகக் கொடுமைகளை நீக்கவும் முயற்சித்தன, 3. கற்ற இந்தியர்கள் பகுத்தறிவுடன் சிந்திக்கத் தலைப்பட்டனர், 4. சீர்திருத்த இயக்கங்கள் கடந்தகால புகழினை மீண்டும் புதுப்பிக்க உதவின. மேலும் இந்தியாவை நவீனப் படுத்தவும் அச்சீர்திருத்த இயக்கங்கள் துணை புரிந்தன, 5. வட்டார மொழிகளின் இலக்கிய வளர்ச்சிக்கும் அவை இட்டுச் சென்றன, 6. சமூகத்தின் மீதிருந்த சாதிமுறையின் கட்டுப்பாடு தளரத் தொடங்கியது, 7. பெண்

விடுதலையில் குறிப்பிடத்தக்க சாதனை ஏற்பட்டது. அவர்களின் நிலையினை உயர்த்திட சில நடவடிக்கைகள் அறிமுகப் படுத்தப் பட்டன, 8. பாவச் செயலாகக் கருதப்பட்ட அயல்நாட்டுப் பயணம் மக்களால் ஏற்றுக் கொள்ளப் பட்டது, 9. பல துறைகளில் இந்தியா முன்னேற உறுதுணையாக விளங்கிய ஆசிரியர்கள், மருத்துவர்கள், வழக்கறிஞர்கள், விஞ்ஞானிகள் மற்றும் பத்திரிகையாளர்கள் அடங்கிய நடுத்தர மக்கள் தோன்ற இவ் வியக்கங்கள் காரணமாயின, 10. சீர்திருத்தச் செயல்களால் பல்வேறு பகுதியில் வாழ்ந்த இந்திய மக்கள் ஒன்றுசேர்ந்தனர். சீர்திருத்த இயக்கங்கள் ஒற்றுமை உணர்வை உருவாக்கி இந்திய தேசியம் வளர்ச்சி பெற தொண்டாற்றின.

**கற்றல் அடைவுகள்**

1. மாணவர் 19-ஆம் நூற்றாண்டின் சமூக, சமயச் சீர்திருத்த இயக்கங்கள் தோன்றியதற்கான காரணங்கள் பற்றி விளக்க முடியும்.
2. மாணவர் இராஜாராம்மோகன்ராய் மற்றும் தயானந்த சரஸ்வதி ஆகியோரின் பணிகளை விவரிக்க முடியும்.
3. மாணவர் இராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்தர் மற்றும் அன்னிபெசன்ட் அம்மையார் ஆகியோர் இந்திய சமுதாயத்திற்கு ஆற்றிய தொண்டுகளை நினைவுகூர இயலும்.
4. மாணவர் அலிகார் இயக்கத்தின் எழுச்சி பற்றியும், சர் சையது அகமத்கானின் பணிகள் பற்றியும் விவரிக்க முடியும்.
5. மாணவர் பார்சி மற்றும் சீக்கியர் இயக்கங்களைப் பற்றிய அறிவினைப் பெற இயலும்.
6. மாணவர் சமூக, சமயச் சீர்திருத்த இயக்கங்களின் தாக்கங்களைப் பற்றி மதிப்பீடு செய்ய முடியும்.

## சுய மதிப்பீடு

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்**

1. 19-ஆம் நூற்றாண்டில் சமூகத்தில் நிலவிய தீமைகளையும், கேடுகளையும் களைய முயற்சித்தவர்கள்

   அ. இந்தியப் படைவீரர்கள் ஆ. படித்த இந்தியர்கள்

   இ. படிக்காத இந்தியர்கள் ஈ. நிலப்பிரபுக்கள்

2. சமூக, சமய சீர்திருத்த இயக்கத்தின் முன்னோடியாகத் திகழ்ந்தவர்

அ. இராம்மோகன் ராய் ஆ. தயானந்த சரஸ்வதி

இ. அன்னி பெசன்ட் ஈ. விவேகானந்தர்

3. பிரம்ம சமாஜத்தைத் தோற்றுவித்தவர்

அ. தயானந்த சரஸ்வதி ஆ. இராஜா ராம்மோகன்ராய்

இ. சர் சையது அகமத்கான் ஈ. டாக்டர் அன்னிபெசன்ட்

4. இராஜாராம்மோகன்ராய் கீழ்க்கண்ட மொழிகளில் இரு பத்திரிக்கைகளை ஆரம்பித்தார்

அ. ஆங்கிலம், வங்காளம் ஆ. வங்காளம், பாரசீகம்

இ. பாரசீகம், இந்தி ஈ. இந்தி, ஆங்கிலம்

5. சுவாமி தயானந்த சரஸ்வதியின் இளமைக் காலப்பெயர்

அ. நரேந்தர் ஆ. மூல்சங்கர்

இ. தயானந்தர் ஈ. சந்திரசென்

6. தியோசாபிகல் என்ற சொல் கீழ்க்கண்ட மொழியிலிருந்து பெறப்பட்டது

அ. ஆங்கிலமொழி ஆ. கிரேக்கமொழி

இ. பாரசீக மொழி ஈ. உருது மொழி

7. பிரம்மஞான சபையின் தலைமையகம் அமைந்துள்ள இடம்

அ. சென்னை ஆ. கொல்கத்தா

இ. டெல்லி ஈ. மும்பை

8. 1893-ஆம் ஆண்டு உலகச் சமய மாநாடு நடைபெற்ற இடம்

அ. லண்டன் ஆ. சிக்காகோ

இ. கொல்கத்தா ஈ. எகிப்து

9. ராஸ்த் கோப்தார் என்பது ஒரு

அ. நகரம் ஆ. பத்திரிகை

இ. அரசர் ஈ. சீர்திருத்த இயக்கம்

10. சர் சையது முகமது கான் தன் கருத்துக்களைப் பரப்ப பயன்படுத்திய பத்திரிக்கை

அ. மெட்ராஸ் மெயில் ஆ. தி மராத்தா

இ. தாஹ்ல்-உத்-அக்லாக் (Tahzil-ud-Akhleg) ஈ. தி இந்து

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. 19-ஆம் நூற்றாண்டு இந்தியாவின் ______________ மற்றும் __________ ஆகியவற்றில் சீர்திருத்த நடவடிக்கைகள் தோன்றின.
2. பண்டைய இந்திய இலக்கியங்களைக் கற்ற புகழ்மிக்க மேல் நாட்டு அறிஞர்கள் ______________மற்றும் ____________ ஆவர்.
3. சமயப் பரப்பூழியர்கள் இந்தியர்களில் அநேகம் பேரைத் தங்கள் சமயமான ______________க்கு மாற்ற முயன்றனர்.
4. 19-ஆம் நூற்றாண்டின் இந்தியாவில் பரவிய மேற்கத்திய நாட்டுப் பொதுக்கருத்துக்கள் ___________ மற்றும் ____________ ஆகும்.
5. இராஜா ராம்மோகன்ராய் எழுதிய புத்தகங்கள் ______________ மற்றும்______________ ஆகும்.
6. இராஜா ராம்மோகன்ராயின் முக்கிய நோக்கம் ______________ சமூகத்தை மேம்படுத்துவதாகும்.
7. மூல்சங்கர் ________ என்பவரின் சீடராகி வேதங்களைக் கற்றார்.
8. தயானந்த சரஸ்வதியின் முழக்கமாக விளங்கிய சொற்றொடர் ______________ ஆகும்.
9. ஆரிய சமாஜத்தின் கொள்கைகளால் தாக்கம் பெற்ற இந்திய தேசியத் தலைவர்கள் ____________ மற்றும்___________ ஆவர்.
10. சமஸ்கிருத மொழியில் தியோசாபி என்பது ______________ என்று அழைக்கப்படுகிறது.
11. பிரம்மஞான சபையைத் தோற்றுவித்தவர்கள் ______________ மற்றும் ______________ ஆவர்.
12. விவேகானந்தரைப் பொறுத்தவரை ______________ மற்றும் _____________ ஆகியோருக்குச் செய்யும் தொண்டு கடவுளுக்குச் செய்யும் மிகச் சிறந்த தொண்டாகும்.
13. முசுலிம் சமூகத்தினரிடம் ______________ மற்றும் ____________ ஆகிய சமூகக் கொடுமைகள் நிலவின.
14. பார்சி இனத்தவரிடம் சமூக சீர்திருத்தங்களை முதலில் புகுத்தியவர்கள் ______________ மற்றும் _____________ ஆவர்.
15. 1892-ஆம் ஆண்டு அமிர்தசரசில் __________ கல்லூரி தொடங்கப் பட்டது.

**III. பின்வருவனவற்றைப் பொருத்துக**

**அ**

| | | |
|---|---|---|
| 1. பிரம்ம சமாஜம் | -- | பால கங்காதர திலகர் |
| 2. சத்தியார்த்த பிரகாஷ் | -- | நவீனக் கல்வி |
| 3. தேசியத்தலைவர் | -- | வேதங்களும் உபநிடதங்களும் |
| 4. DAV பள்ளிகள் | -- | சுவாமி தயானந்த சரஸ்வதி |
| 5. குருகுலம் | -- | தேவேந்திரநாத் தாகூர் |

**ஆ**

| | | |
|---|---|---|
| 1. இராஜா ராம்மோகன் ராய் | -- | ஆரிய சமாஜம் |
| 2. சுவாமி தயானந்த சரஸ்வதி | -- | இராமகிருஷ்ண பரமஹம்சர் |
| 3. டாக்டர் அன்னிபெசன்ட் | -- | பிரம்ம சமாஜம் |
| 4. சுவாமி விவேகானந்தர் | -- | அலிகார் இயக்கம் |
| 5. சர் சையது அகமதுகான் | -- | பிரம்ம ஞானசபை |

**IV. சுருக்கமாக விடையளிக்கவும்**

1. தம் பண்பாட்டில் காணப்பட்ட குறைகளைக் களைய விரும்பிய இந்தியர்களைக் கவர்ந்த மேல்நாட்டு கருத்துக்களைக் குறிப்பிடுக.
2. இந்தியர்களைத் திருப்திப்படுத்திய, புதிய சிந்தனைகளின் விளைவுகளை வெளிக் கொணர்க.
3. கிறித்துவ சமயப் பரப்பூழியர்களிடமிருந்து இந்துக்களும் முசுலிம்களும் தமது சமயங்களைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியம் ஏன் ஏற்பட்டது?
4. மேற்கத்திய அறிஞர்கள் நம் இலக்கியத்திற்கு ஆற்றிய பணிகள் யாவை?
5. 19-ஆம் நூற்றாண்டின் சமூக, சமயச் சீர்திருத்த இயக்கத்தின் வளர்ச்சிக்கு இந்தியச் செய்தித்தாள்களின் பங்கு பற்றி குறிப்பிடுக.
6. பெண்களின் முன்னேற்றத்திற்கு இராம்மோகன்ராய் ஆற்றிய பணிகளை விளக்குக.
7. கேசவ் சந்திரசென் பற்றி சிறு குறிப்புத் தருக.
8. இந்து சமயத்தின் மார்டின் லூதர் என்று அழைக்கப்படுபவர் யார்? ஏன்?

9. இந்து சமுதாயத்திற்கு ஆரிய சமாஜம் ஆற்றிய பணிகளைக் குறிப்பிடுக.
10. சுவாமி தயானந்த சரஸ்வதியைப் பின்பற்றியவர்களில் சிலரின் பெயர்களைக் குறிப்பிடுக.
11. பிரம்மஞான சபை (தியோசாபிகல் சொஸைட்டி) எப்போது, எங்கே, யாரால் அமைக்கப்பட்டது?
12. பிரம்மஞான சபையின் முக்கிய நோக்கங்கள் யாவை?
13. பிரம்மஞான சபையின் கொள்கைகளை டாக்டர் அன்னிபெசன்ட் எவ்விதம் பரப்பினார்?
14. ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர் மக்களுக்கு எவ்விதம் போதித்தார்?
15. 1893-ஆம் ஆண்டு சிக்காகோவில் நடைபெற்ற உலக சமய மாநாட்டைப் பற்றி சிறு குறிப்புத் தருக.
16. இராமகிருஷ்ண மடத்தின் பணிகளை வெளிக்கொணர்க.
17. முகமதியர் இலக்கியக் கழகத்தின் முக்கியக் குறிக்கோள் யாது?
18. சர் சையது அகமத்கான் இந்திய தேசியக் காங்கிரசை ஏன் எதிர்த்தார்.
19. குருத்துவாராக்கள் எவ்வாறு சீக்கிய இனப்பிரதிநிதிகள் கட்டுப்பாட்டின் கீழ் வந்தன?

**IV. விரிவான விடை தருக.**

1. இந்தியாவில் சமூக, சமயச் சீர்த்திருத்த இயக்கங்கள் தோன்றுவதற்கான காரணங்களை வெளிக் கொணர்க.
2. இந்து சமுதாயத்தைச் சீர்திருத்துவதில் இராஜா ராம்மோகன் ராய் மற்றும் பிரம்ம சமாஜத்தின் பங்கினை விவாதி.
3. முசுலிம் சீர்திருத்த இயக்கங்களைப் பற்றி ஒரு கட்டுரைத் தருக.
4. 19-ஆம் நூற்றாண்டு சமூக, சமயச் சீர்திருத்த இயக்கங்களால் ஏற்பட்ட விளைவுகளை வரிசைப்படுத்துக.

**VI. செய்முறை பயிற்சி**

1. சீர்திருத்தவாதிகளின் வாழ்க்கை மற்றும் அவர்களுடைய பணிகள் பற்றிய புத்தகங்களைப் படிக்கவும்.
2. இராமகிருஷ்ண மடத்தின் சமூகச் சேவை மையங்களின் அங்கத்தினர் போல் பிறர்க்குப் பணி செய்வதில் உன்னை ஈடுபடுத்திக் கொள்க.

## விடுதலை இயக்கம்

காலக்கோடு



அலகு - III

பாடம் - 5

# இந்திய தேசிய இயக்கத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

**கற்றல் நோக்கங்கள்**

1. மாணவர் லிட்டன் பிரபுவின் நிருவாக நடவடிக்கைகள் எவ்வாறு இந்தியர்களின் நலன்களுக்கு எதிரானவை என்பதைப் புரிந்து கொள்ளுதல்.
2. மாணவர் ரிப்பன் பிரபு, கர்சன் பிரபு ஆகியோரின் சீர்திருத்தங்களைப் பற்றி அறிந்து கொள்ளுதல்.
3. மாணவர் இந்திய தேசியத்தின் தோற்றம், அதன் வளர்ச்சி ஆகியவற்றிற்கான காரணங்களைக் கற்றல்.
4. மாணவர் இந்திய தேசியக் காங்கிரசின் நோக்கங்களைப் புரிந்து கொள்ளுதல்.
5. மாணவர் தீவிரவாதிகளின் நோக்கங்களைப் புரிந்து கொள்ளுதல்.
6. மாணவர் வங்காளப் பிரிவினை, சுதேசி இயக்கம், முஸ்லிம் லீக் தோற்றம், சூரத் பிளவு மற்றும் மின்டோ-மார்லி சீர்த்திருத்தங்கள் பற்றிய அறிவினைப் பெறுதல்.
7. மாணவர் தன்னாட்சி இயக்கம், லக்னோ உடன்படிக்கை, மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்த்திருத்தங்கள் பற்றி கற்றல்.

***1858-ஆம் ஆண்டிற்குப் பின் நிர்வாகத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் :*** 1857-ஆம் ஆண்டு பெரும் புரட்சிக்குப் பின் இந்தியாவை நிருவகிக்கும் பொறுப்பு வணிகக் குழுவிடமிருந்து 1858-ஆம் ஆண்டு ஆங்கில அரசின் கைக்கு மாறியது. இந்தியாவின் நிர்வாகத்தை ஆங்கில **அரசு இந்தியச் செயலர்** (Secretary of State

of India) மூலம் நேரடியாக ஏற்றுக் கொண்டது. இந்திய நிர்வாகத்தினைக் கட்டுப்படுத்திய அச் செயலாளருக்கு உதவிட 15 உறுப்பினர்களைக் கொண்ட **இந்தியக் குழு** ஒன்று இலண்டனில் அமைக்கப்பட்டது.

இந்தியாவின் தலைமை ஆளுநர் **வைசிராய்** என்றும் அழைக்கப்பட்டார். அவர் இங்கிலாந்திலிருந்த இந்தியச் செயலாளருக்குப் பதிலளிக்கக் கட்டுப்பட்டவர். 1861-ஆம் ஆண்டு ஆங்கிலப் பாராளுமன்றம் இந்திய கவுன்சில்கள் சட்டம் அல்லது இந்தியச் சட்டமன்றங்கள் சட்டத்தை இயற்றியது. அதன்படி தலைமை ஆளுநரின் சட்டக்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை 12-ஆக உயர்ந்தது. தலைமை ஆளுநர் அந்த உறுப்பினர்களை நியமிக்கலாம். அவர்களில் சில இந்திய உறுப்பினர்களும் நியமிக்கப்பட்டனர். அக்குழுவிற்குக் குறிப் பிட்ட சில அதிகாரங்கள் மட்டுமே இருந்தன.

மாகாண நிர்வாகத்தைப் பொறுத்தவரை 1861-ல் சட்ட மன்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. ஆனால் அவை மாகாண ஆளுநரின் கைப்பாவைகளாகவே செயல்பட்டன. அவை இந்தியாவில் ஆங்கிலேயர் கொண்டிருந்த அரசியல் மற்றும் பொருளாதார ஈடுபாடுகளைப் பாதுகாத்து அதை மேம்படுத்து வதையே முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்தன. ஆங்கில நிருவாகம், ஆங்கில வியாபாரிகள், தொழில் அதிபர்கள் மற்றும் ஆங்கில அலுவலர்கள் ஆகியோரின் நலன்களை மட்டுமே பாதுகாத்தது. அக்குழுக்கள் இந்தியரைப் பாதிக்கும் கொள்கை களையே பின்பற்றின. அத்தகைய நிலையிலும் 1870-ஆம் ஆண்டு இந்தியா-இங்கிலாந்து நாடுகளுக்கிடையே அமைக்கப்பட்ட தந்தி இணைப்பு (Telegraphline) ஒரு சில நன்மை என்பதை இங்கு குறிப்பிட வேண்டும். ஆங்கிலேயர் தங்களின் பேரரசுக் கொள்கையை நிலை நிறுத்தினர். அது லிட்டன் பிரபுவின் நடவடிக்கைகள் மூலம் தெளிவாகப் புலப்பட்டது.

### லிட்டன் பிரபு, ரிப்பன் பிரபு, மற்றும் கர்சன் பிரபு ஆகியோரின் உள்நாட்டு நிர்வாகம்

**லிட்டன் பிரபு (1876 - 1880) :** 1876ல் லிட்டன் பிரபு இந்தியாவின் வைசிராயாகப் பொறுப்பேற்றார். அவர் இலக்கியத்தில் ஈடுபாடு

கொண்டவர். ஆனால் நிர்வாக முன் அனுபவம் அற்றவர். மேலும் அவர் இந்திய விவகாரங்கள் பற்றிய அறிவினையும் பெற்றிருக்கவில்லை. அந்நிலையில் ஆட்சிப் பொறுப்பேற்ற அவர் இந்திய நிர்வாகத்தில் பல மாற்றங்களைக் கொண்டு வந்தார். அவை அனைத்தும் பிரிட்டனின் ஈடுபாடுகளை மட்டுமே பூர்த்தி செய்தன. எனவே இந்தியர்கள் லிட்டன் பிரபுவின் நடவடிக்கைகளில் மிகுந்த அதிருப்தி அடைந்தனர்.

**இரண்டாம் ஆப்கானியப் போர் :** லிட்டன் பிரபு இந்தியாவின் தலைமை ஆளுநராக இருந்தபோது, ஆங்கானிஸ்தானத்தில் இரஷ்யாவின் செல்வாக்கு வளர்வதைக் கண்டு ஆங்கிலேயர் அஞ்சினர். இரஷ்யா ஆப்கானிஸ்தான் வழியாக இந்தியா மீது படையெடுக்கக்கூடும் என்று இங்கிலாந்து எண்ணியது. எனவே இரஷ்யாவின் விரிவாக்கத்தைத் தடுக்க ஆப்கானிஸ்தானம் முழுவதையும் ஆங்கிலேயரின் பிடியில் கொண்டுவர லிட்டன் பிரபு தீர்மானித்தார். அதனால் 1878-ல் ஆப்கானிஸ்தானைத் தாக்க ஆங்கிலப் படையினை அனுப்பினார். அந்நாட்டின் மன்னர் **அமீர் ஷெர்அலி** இரஷ்யாவிற்குத் தப்பி ஓடினார். ஆங்கிலேயர் புதிய மன்னருடன் ஒரு உடன்படிக்கையைச் செய்து கொண்டனர். அதன்படி ஆங்கிலப் பிரதிநிதி (English Resident) ஒருவர் காபூலில் நியமிக்கப்பட்டார். ஆனால் மீண்டும் ஆப்கானிஸ்தானத்தில் ஏற்பட்ட ஒரு கலகத்தை அடக்க ஆங்கிலேயர் இரண்டாம் முறையாக ஆப்கானிஸ்தான் மீது படையெடுத்து அந்நாட்டைக் கைப்பற்றினார். தேவையில்லாமல் நடந்த அப்போர்களால் இந்தியப் பொருளாதாரம் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டது.

***1876 - 1878-ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட பஞ்சம் :*** 1876 முதல் 1878 வரை இந்தியாவில் மிகக் கடுமையானப் பஞ்சம் நிலவியது. **சென்னை, மும்பை, ஐதராபாத், பஞ்சாப், மத்தியப் பிரதேசத்தின் மத்தியப் பகுதி** ஆகிய இடங்கள் மிக மோசமாகப் பாதிக்கப் பட்டன. இலட்சக்கணக்கான மக்கள் இறந்தனர். பல கிராமங் களை விட்டு மக்கள் அகன்றனர். மிகப்பரந்த நிலப்பகுதிகளில் விவசாயத்தைக் கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டது. அந்த சமயத்தில் லிட்டன் பிரபு இங்கிலாந்திற்கு ஏற்றுமதி செய்த துணிவகைகளுக்குச் சுங்கவரி (ஆயத்தீர்வை) விதித்தார். மேலும்

1877ல் **டெல்லியில் பெரிய தர்பார்** ஒன்று நடத்தி, அதில் விக்டோரியா மகாராணியாரை **இந்தியாவின் பேரரசி** என்று பிரகடனப்படுத்தினார். ஆடம்பரமான அந்த தர்பாரை நடத்த இலட்சக்கணக்கான ரூபாய் செலவிடப்பட்டது.

> அச்செயல் ''ரோம் நகரம் எரிந்து கொண்டிருந்தபோது நீரோ மன்னன் பிடில் வாசித்ததுபோல்'' இருந்தது.

**வட்டார மொழிகள் பத்திரிகைச் சட்டம் 1878 :** இந்தியர்களின் மனக்குறைகளை இந்தியப் பத்திரிகைகள் அனுதாபத்துடன் வெளியிட்டன. அவைகள் லிட்டன் பிரபுவின் நடவடிக்கை களையும் ஆங்கில ஆட்சியையும் எதிர்த்து எழுதின. எனவே பத்திரிகைகளின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்த 1878ல் வட்டார மொழிகள் பத்திரிகைச் சட்டத்தை லிட்டனின் அரசு இயற்றியது. வட்டார மொழிகளில் வெளிவந்த செய்தித்தாள்களும், பருவ இதழ்களும், கடுமையான தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டன. அதனால் இந்தியர்கள் சீற்றமடைந்தனர்.

**இந்திய ஆயுதச் சட்டம் 1878 :** லிட்டனின் அரசு 1878-ஆம் ஆண்டு இந்திய ஆயுதச் சட்டத்தைக் கொண்டு வந்தது. அச்சட்டம், இந்தியர்கள் ஆயுதங்களை வாங்கினாலும், விற்றாலும் ஆங்கில அரசிடம் உரிமம் (Licence) பெற வேண்டும் என்று வலி யுறுத்தியது. அச்சட்டத்தை மீறியவர்கள் அபராதத்துடன் சிறைத் தண்டனைக்கும் உள்ளாக வேண்டியிருந்தது. ஆனால், ஆங்கிலேயர், ஆங்கிலோ-இந்தியர்கள் ஆங்கில அரசின் கீழ் பணிபுரிந்த குறிப்பிட்ட சில பிரிவினருக்கு அச்சட்டத்தில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டது. அவ்விதம் லிட்டன் பிரபுவின் பெரும் பான்மையான நிர்வாக நடவடிக்கைகள் இந்தியர்களின் உணர்வுகளுக்கு எதிராகவே இருந்தன.

**ரிப்பன் பிரபு (1880 - 1884) :** ரிப்பன் பிரபு 1880-ஆம் ஆண்டு இந்தியாவின் தலைமை ஆளுநராகப் பொறுப்பேற்றார். அவர் தாராள மனப்பான்மை கொண்டவர். அவர் படித்த இந்திய இளைஞர்களின் எதிர்பார்ப்புகளைப் புரிந்து கொண்டதுடன் அவர்களிடம் அனுதாபமும் காட்டினார். அவர் இந்திய நிர்வாகத்தில் இந்திய மக்களும் அதிகம் பங்குபெற வேண்டும்

என்று விரும்பினார். எனவே லிட்டன் பிரபு அறிமுகப்படுத்திய பல அடக்கு முறைச் சட்டங்களை அவர் நீக்கினார்.


ரிப்பன் பிரபு

***தொழிற்சாலைச் சட்டம் 1881 :*** *ரிப்பனின் அரசு 1881-ஆம் ஆண்டு* ***முதல் தொழிற்சாலைகள் சட்டத்தை*** *இயற்றியது. அச்சட்டம் 12 வயதிற்கு உட்பட்ட சிறுவர்களின் வேலை நேரத்தை நிர்ணயித்தது. மேலும் அச் சட்டம் தொழிற்சாலைகளில் அபாயகர மான இயந்திரங்களைச் சுற்றி பாது காப்பு வேலியிட வேண்டும் என வலியுறுத்தியது. அச்சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதைக் கண்காணிக்க ஆய்வாளர்கள் நியமிக்கப்பட்டனர்.*

***வட்டார மொழிகள் பத்திரிகைச் சட்டம் நீக்கப்படுதல் 1881 :*** *அதே ஆண்டு மக்களால் மிகவும் வெறுக்கப்பட்டதும் லிட்டன் பிரபு அறிமுகப்படுத்தியதுமான வட்டார மொழிகள் பத்திரிகைச் சட்டத்தை ரிப்பன் பிரபு நீக்கினார். அதனால் இழந்த பத்திரிகைச் சுதந்திரம் மீண்டும் பெறப்பட்டது.*

***இந்திய மக்கள் தொகைக் கணக்கெடுப்பு 1881 :*** *நாட்டை மேலும் சிறப்பாக நிருவகிக்கும் பொருட்டு ரிப்பன் பிரபு மக்கள்தொகை கணக்கெடுப்பு முறையை 1881-ஆம் ஆண்டு இந்தியாவில் அறிமுகப்படுத்தினார்.*

***1882-ஆம் ஆண்டு கல்விக்குழு :*** *1882ல் ரிப்பன் பிரபு ஒரு கல்விக்குழுவை நியமித்தார். அதன் தலைவராக* **சர். டபிள்யூ. டபிள்யூ. ஹண்டர்** (Sir W.W. Hunter) *என்பவர் செயல்பட்டார். அக்குழு தொடக்கக்கல்வி மற்றும் இடைநிலைக் கல்வி ஆகிய வற்றின் முன்னேற்றத்திற்கான ஆலோசனைகளை வழங்கியது. மேலும் அக்குழு ஒவ்வொரு மாவட்டத்திலும் மாதிரிப்பள்ளிகள்* (Model Schools) *நிறுவப்பட வேண்டும் என்றும் பரிந்துரை செய்தது. தனியார் பள்ளிகளுக்கு அளிக்கப்பட்டு வந்த மானியத் தொகையை* (Grants-in-aid) *மேலும் நீட்டிப்பதன் மூலம் இடை*

நிலைக் கல்வியை ஊக்குவிக்கலாம் எனவும் அக்குழு கூறியது. பெண்கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டு மென்றும் அக்குழு அரசுக்குப் பரிந்துரைச் செய்தது. **பஞ்சாப் பல்கலைக்கழகம்** நிறுவப்பட ரிப்பன் பிரபு காரணமாக இருந்தார்.

**உள்ளாட்சி :** ரிப்பனின் மிகப் புகழ்வாய்ந்த சீர்திருத்தம் நிருவாகத்தையும், நிதிக் கட்டுப்பாட்டையும் பரவலாக்க எடுக்கப்பட்ட நடவடிக்கையாகும். அவருடைய அரசு இந்தியாவில் உள்ளாட்சி அரசு நிறுவப்பட, 1883-84-ஆம் ஆண்டுகளில் வரிசையாகப் பலச் சட்டங்களை இயற்றியது. அவைகளின்படி இந்தியா முழுவதும் **மாவட்ட வாரியங்களும்** (District Boards), **தாலுக்கா வாரியங்களும்** (Taluk Boards) அமைக்கப்பட்டன. அவ் வுள்ளாட்சி அரசு அமைப்புகளிடம் கல்வி, பொதுச்சுகாதாரம், குடிநீர், சுத்தம், சுகாதாரம், சாலை பராமரிப்பு ஆகியவற்றை மேம்படுத்தும் பணிகள் ஒப்படைக்கப்பட்டன. அப்பணிகளைச் செய்து முடிக்க அவைகள் போதுமான நிதி வசதியைப் பெற்று இருந்தன. இவ்வமைப்புகளில் இந்தியர்கள் தங்கள் விவகாரங் களைத் தாங்களே நிர்வகித்துக் கொள்ளப் பயிற்சியளிக்கும் விதத்தில் நியமன (Nomination) முறைக்குப் பதில் தேர்தல் முறை பின்பற்றப்பட்டது. அச்சீர்திருத்தங்களால் ரிப்பன் பிரபு **'உள்ளாட்சி அரசின் தந்தை'** என்ற பட்டத்தைப் பெற்றார்.

**இல்பர்ட் மசோதா :** ரிப்பன் அரசின் சட்ட உறுப்பினரான **சி.பி. இல்பர்ட்** (C.P. Ilbert) என்பவர் 1883ல் ஒரு சட்டத்தினைக் கொண்டு வந்தார். அது **இல்பர்ட் மசோதா** என அழைக்கப்பட்டது. அதன்படி இந்திய நீதிபதிகள் ஆங்கிலக் குற்றவாளிகளையும் விசாரணை செய்யும் உரிமை பெற்றனர். அதன் மூலம் இந்திய நீதிபதிகள் ஆங்கில நீதிபதிகளுக்கு இணையான அதிகாரம் பெற்றனர். ஆனால் இந்தியாவிலிருந்த ஐரோப்பியச் சமூகத்தினர் அச்சட்டத்தைக் கடுமையாக எதிர்த்தனர். எனவே அம்மசோதா உடனடியாகத் திருத்தப்பட வேண்டியதாயிற்று. திருத்தப்பட்ட மசோதாவின்படி 'குறைந்தபட்சம் பாதி ஐரோப்பிய உறுப்பினர் களைக் கொண்ட' நீதிக்குழுவே (Jury) ஆங்கிலக் குற்றவாளிகளை விசாரிக்க முடியும் என்று மாற்றப்பட்டது.

ரிப்பன் பிரபு தடையில்லா வாணிகத்தில் (Free Trade) மிகுந்த நம்பிக்கை கொண்டவர். அவர் பல இறக்குமதி வரிகளை நீக்கினார். அவர் உப்பு மீதான வரியைக் குறைத்ததுடன் நிலவரி வரி முறையைச் சரி செய்யவும் முயற்சிகளை மேற்கொண்டார்.

***கர்சன் பிரபு (1899 - 1905) :*** கர்சன் பிரபு வைசிராயாக பதவி ஏற்பதற்கு முன் பலமுறை இந்தியாவிற்கு வந்து சென்றவர். அவர் உறுதியும் கடின உழைப்பும் கொண்டவர். அவர் ஆங்கில இனமே உயர்ந்தது என்றும் இந்தியாவை ஆட்சி செய்ய அவ் வினத்திற்கு உரிமை உண்டு என்றும் நம்பினார்.

***சீர்திருத்தங்கள் - பஞ்சம் - மற்றும் பிளேக் நிவாரணம் :*** கர்சன் பிரபு இந்தியாவிற்கு வந்தபோது, பருவமழை பொய்த்ததால், மத்திய, வட இந்தியாவின் பல பகுதிகளில் கடுமையான பஞ்சம் நிலவியது. அத்துடன் பிளேக் நோயும் பல இடங்களில் காணப் பட்டது. கர்சன் **பஞ்ச நிவாரணக் குழு** ஒன்று அமைத்து அதன் நிவாரணப் பணிகளுக்குப் பெரும் தொகையை ஒதுக்கினார்.

***விவசாய சீர்திருத்தங்கள் :*** கிராமப்புற மக்களுக்கு உதவிட கர்சன் பிரபு பல விவசாயச் சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தினார். எளிய தவணையில் திருப்பிச் செலுத்தக்கூடிய கடன்கள் விவசாயி களுக்கு வழங்கப்பட்டன. நாட்டின் பல பாகங்களிலும் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்பட்டன. வங்காளத்தில் **பூசா** என்னுமிடத்தில் **விவசாய ஆராய்ச்சி நிறுவனம்** ஒன்றும் தொடங்கப்பட்டது. அதன் நோக்கம் விவசாயத்துறையில் பல ஆராய்ச்சிகளை மேற்கொள்வதாகும். கர்சனின் நிருவாகத்தின் போது பெருமளவில் கால்வாய்கள் வெட்டப்பட்டு நீர்ப்பாசன முறையும் மேம்படுத்தப்பட்டது.

***இராணுவச் சீர்திருத்தங்கள் :*** கர்சன் இராணுவத்தின் போக்கு வரத்து அமைப்பைச் சீர்திருத்தினார். இராணுவத்திற்குப் புதிய போர்க்கருவிகளும், துப்பாக்கிகளும் வழங்கப்பட்டன. இளைஞர்களுக்கு இராணுவப் பயிற்சி அளிக்கப் **பேரரசு இளைஞர் படை** (Imperial Cadet Corps) ஒன்று அமைக்கப்பட்டது.

***பழங்கால நினைவுச் சின்னங்கள் பாதுகாப்புச் சட்டம் :*** *1904-ஆம் ஆண்டு நாட்டின் பழங்கால நினைவுச் சின்னங்களைப் பாதுகாக்க இச்சட்டம் இயற்றப்பட்டது. அவரது அரசு* **தொல்பொருள் கல்வெட்டியல் துறையினை** *நிறுவியது. அதனால் நாலந்தா, தட்சசீலம், சாஞ்சி, எலிபெண்டா குகைகள், சாரநாத் போன்ற இடங்களில் காணப்படும் விலைமதிக்க முடியாத இந்தியக் கலைப்பொருட்களும் கட்டடங்களும் பாதுகாக்கப் பட்டன.*

***கல்விச் சீர்திருத்தம் :*** *இந்தியப் பல்கலைக் கழகச் சட்டம் 1904-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது. கர்சன் கல்விமுறை முழுவதையும் மாற்றியமைத்தார். பொதுக்கல்வித் தலைமை இயக்குநர்* (Director General of Education) *தலைமையின் கீழ் கல்வித்துறை மையப் படுத்தப்பட்டது. ஆரம்பப் பள்ளிகளுக்கு மானியம் அளிக்கப்பட்டது. கல்வியின் முன்னேற்றத்திற்குத் தீவிர திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. பல்கலைக் கழகங்களின் செயல்பாடுகளை மேம்படுத்த ஒரு குழு அமைக்கப்பட்டது.*

***வங்காளப் பிரிவினை 1905 :*** *1905-ஆம் ஆண்டு வங்காளத்தைப் பிரிக்க கர்சன் பிரபு மேற்கொண்ட முடிவு இந்தியர்களின் தேசிய உணர்வுக்கு பெருத்த அடியாக அமைந்தது. வங்காளம், பீகார் மற்றும் ஒரிசாவின் ஒரு பகுதியையும் உள்ளடக்கிய பெரிய மாகாணமாய் இருந்தது என்பதில் சந்தேகமில்லை. அப்பெரிய மாகாணத்தை நிருவகிப்பதும் கடினமான செயலாகத்தான் இருந்தது. எனினும், பின்னால் பீகாரைத் தனி மாகாணமாகப் பிரித்ததைப் போன்று அப்பிரச்சனைக்கு எளிதாகத் தீர்வு கண்டிருக்கலாம். ஆனால் கர்சன் வங்காளத்தை இரண்டாகப் பிரித்துக் கிழக்கு வங்காளத்தையும் அசாமையும் இணைத்து ஒரு மாகாணமாகவும், மேற்கு வங்காளத்தையும் பீகாரையும் இணைத்து மற்றொரு மாகாணமாகவும் அறிவித்தார்.* **டாக்கா** *கிழக்கு வங்காளத்தின் தலைநகராகவும்,* **கொல்கத்தா** *மேற்கு வங்காளத்தின் தலைநகராகவும் அறிவிக்கப்பட்டன. கிழக்கு வங்காளத்தில் முசுலிம்களின் எண்ணிக்கை அதிகமாகவும், மேற்கு வங்காளத்தில் இந்துக்களின் எண்ணிக்கை அதிகமாகவும் இருந்தன. கர்சனின் அச்செயல் வங்கமொழி பேசிய மக்களின் ஒற்றுமையைச் சீர்குலைத்து தேசிய இயக்கத்தின் வளர்ச்சியைத்*

தடுப்பதை முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்தது. அவர் இந்துக்கள் முசுலிம்கள் இடையே பகைமையை ஏற்படுத்த எண்ணினார். ஆனால் அதன் விளைவு எதிர்மறையாக அமைந்தது. வங்க மக்கள் அனைவரும் ஒன்றாகத் திரண்டு அத்திட்டத்தினை எதிர்த்தனர். முசுலிம்களும், மிதவாதிகளும், தீவிரவாதிகளும் வங்கப் பிரிவினையைத் தடுக்கும் முயற்சியில் ஒன்றிணைந்து செயல்பட்டனர். அவர்கள் வங்கப் பிரிவினையைப் **பிரித்தாளும் கொள்கையின்** அறிமுகம் என அழைத்தனர். இந்தியர்களின் தீவிர எதிர்ப்புப் போராட்டத்தினால் வங்காளம் மீண்டும் 1911-ஆம் ஆண்டு ஒரே மாநிலமானது.

**இந்திய தேசிய இயக்கத்தின் தோற்றம் :** 1857-ஆம் ஆண்டு பெரும் புரட்சிக்குப் பின்னரான காலம் மிகுந்த ஏமாற்றமளிப்பதாகவே இருந்தது. விக்டோரியா பேரரசியின் பிரகடனத்தில் கூறப்பட்ட வாக்குறுதிகள் எதுவும் முழுதாக நிறைவேற்றப்படவில்லை. இந்தியாவின் பொருளாதார, அரசியல் மற்றும் பண்பாட்டு வளர்ச்சிக்கு அன்னிய ஆட்சிதான் உண்மையான தடை என்பதை இந்தியர்கள் உணர்ந்தனர். இக்காலகட்டத்தில் தான் இந்திய தேசியம் வளரத் தொடங்கியது. சமய, சமூக சீர்திருத்த இயக்கங்கள் இத்தேசிய உணர்வு வளர மேலும் உதவின.

**இந்திய தேசிய உணர்வு தோன்றியதற்கான காரணிகள் - அரசியல் ஒற்றுமை :** ஆங்கில ஆட்சியின் விளைவால் இந்தியாவில் அரசியல் ஒற்றுமை ஏற்பட்டது. அதனால் இந்தியா ஒரே நாடு என்ற எண்ணம் மக்களிடம் வளர்ந்தது. சமூக, சமயச் சீர்திருத்த இயக்கங்களும் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களை ஒன்று சேர்த்தன.

**ஆங்கிலேயரின் பொருளாதாரச் சுரண்டல் :** இந்தியாவின் செல்வ வளம் அனைத்தையும் தம் நாட்டுக்குச் சுரண்டிச் செல்வதே ஆங்கிலேயரின் நோக்கமாக இருந்தது. 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் இந்தியா, ஆங்கில நாட்டிற்கு வேண்டிய கச்சாப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் நாடாகவும், அந்நாடு உற்பத்தி செய்த பொருட்களை விற்பனை செய்யும் சந்தையாகவும் மாறியது. மேலும் ஆங்கிலேயர் தங்கள் மூலதனத்தை முதலீடு செய்து இலாபம் அடையும் இடமாகவும் மாறியது.

**இதர ஐரோப்பிய நாடுகளுடன் ஏற்பட்ட தொடர்பு :** ஆங்கிலம், படித்த இந்தியர்களின் மொழியானது. அதனால் இந்தியர்கள் மேல்நாட்டுக் கருத்துக்கள், பண்பாடு பற்றி அறிந்தனர். மேலும் இந்தியர்கள் ஜெர்மனி, இத்தாலி ஐக்கியமடைந்ததைக் கண்டு ஊக்கம் கொண்டனர். எனவே தாங்களும் தங்கள் விடுதலைக்குப் போராட எண்ணினர்.

**19-ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட சமூக, சமயச் சீர்திருத்த இயக்கங்கள் :** இராஜாராம்மோகன்ராய், தயானந்த சரஸ்வதி, இராம கிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவேகானந்தர் மற்றும் டாக்டர் அன்னி பெசன்ட் ஆகியோர் இந்தியா மற்றும், இந்தியரின் புகழினைப் புத்துயிர் பெறச் செய்தனர். அவர்கள் இந்தியாவில் தேசிய இயக்கம் தோன்றுவதற்கு அடித்தள மிட்டனர். சுயராஜ்ஜியம் என்ற சொல்லை முதன்முதலில் பயன்படுத்தியவர் தயானந்த சரஸ்வதி ஆவார்.

**தகவல் மற்றும் போக்குவரத்து முன்னேற்றம் :** இருப்புப்பாதை, தந்தி மற்றும் கம்பியில்லாத் தந்திமுறை, தபால்முறை, சாலைகள் மற்றும் கால்வாய்கள் அமைத்தல் போன்றவை நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு உதவின. இந்தத் தொழில் வளர்ச்சி இந்திய மக்களை ஒன்றிணைத்தது.

**அச்சகமும் செய்தித்தாள்களும் :** தேசியம் தோன்றவும் வளரவும் இந்தியப் பத்திரிகைகள் மிகமுக்கியப் பங்கினைப் புரிந்தன. பல்வேறு வட்டார மொழிகளில் ஏராளமான செய்தித்தாள்கள் வெளியிடப்பட்டன. அவைகளில் பெரும்பாலானவை ஆங்கிலே யருக்கு எதிரான கருத்துக்களை வெளியிட்டன. **தி சோஷியல் ரிபார்மர்** (The Social Reformer), **தி டைம்ஸ் ஆப் இந்தியா** (The Times of India), **தி மெட்ராஸ் மெயில்** (The Madras Mail), **தி ஸ்டேட்ஸ் மேன்** (The Statesman), **தி இந்து** (The Hindu), **அமிர்தபசார் பத்திரிகை** (The Amrit Bazaar Patrika) **தி கேசரி** (The Kesari), **மராத்தா** (The Maratha), **டிரிபியூன்** (The Tribune), **பம்பாய் சமாச்சார்** (The Bombay Samachar), மற்றும் **ராஸ்ட் கோப்தர்** (Rast Goftar) போன்ற பத்திரிகைகள் மிகப் பிரபலமானவை. அவை பொதுமக்களின் கருத்துக்களைப் பிரதிபலித்ததுடன் மக்களிடையே தேசிய விழிப்புணர்வையும் ஏற்படுத்தின. **பக்கிம்சந்திரசட்டர்ஜி,**

**இரவீந்திரநாத் தாகூர், சுப்பிரமணிய பாரதியார்** மற்றும் பல **தேசபக்த எழுத்**தாளர்களின் எழுத்துக்கள் இந்திய மக்களிடையே தேச உணர்வைப் பொங்கியெழச் செய்தன. ஆனால், 1878-ல் இயற்றப்பட்ட **வட்டார மொழிப் பத்திரிகைச் சட்டம்,** பத்திரிகைச் சுதந்திரத்தைப் பறித்தது. அதே ஆண்டு பிறப்பிக்கப்பட்ட **ஆயுதச் சட்டம்** இந்தியர்கள் ஆயுதங்கள் வைத்திருப்பதை தடை செய்தது. அத்தகைய சூழ்நிலைகளில்தான் இந்தியர்களின் உரிமைகளுக்குப் போராட **1885-ஆம் ஆண்டு இந்திய தேசியக் காங்கிரசு** தோற்றுவிக்கப்பட்டது.

**இந்திய தேசியக்காங்கிரசு - 1885 :** ஆங்கிலேய ஆட்சியில் நம்பிக்கையிழந்த இந்திய மக்கள் **இந்திய தேசியக்காங்கிரசு** அல்லது **இந்திய தேசியப் பேராயக்கட்சி** என்ற அமைப்பினை ஏற்படுத்தினர். அது 1885-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. ஓய்வு பெற்ற ஆங்கில அதிகாரியான **ஆலன் அக்டேவியன் ஹியூம்** (Allan Octavien Hume) என்பவர் இந்திய தேசியக் காங்கிரசின் தோற்றத்திற்கு முக்கிய காரணமாக இருந்தார். காங்கிரசின் முதல் கூட்டம் **மும்பையில்** நடைபெற்றது. அக்கூட்டத்திற்கு **டபிள்யூ. சி. பானர்ஜி** (W.C. Banerjee) தலைமை வகித்தார். **தாதாபாய் நௌரோஜி, சுரேந்திரநாத் பானர்ஜி, மதன்மோகன் மாளவியா, எம்.ஜி. ரானடே, கோபாலகிருஷ்ண கோகலே, பெரோஷா மேத்தா, ஜி. சுப்பிரமணிய அய்யர்** போன்ற தாராள எண்ணம் கொண்ட பல தலைவர்களும் அக்கூட்டத்தில் பிரதிநிதிகளாக கலந்து கொண்டனர்.

**இந்திய தேசியக் காங்கிரசின் ஆரம்பகால நோக்கங்கள் :** 1. சட்ட மன்ற விரிவாக்கமும் பிரதிநிதித்துவம் பெறுதல், 2. கல்வியைப் பரப்புதல், 3. பத்திரிகைச் சுதந்திரம், 4. நிர்வாகத் துறையிலிருந்து நீதித்துறையைப் பிரித்தல், 5. இந்திய நிர்வாகப் பணித் தேர்வுகளை (I.C.S.) இந்தியாவிலேயே நடத்தக் கோருதல், 6. இராணுவச் செலவுகளைக் குறைக்க வற்புறுத்துதல், மற்றும், 7. அயல்நாட்டுப் பொருட்கள் மீதான இறக்குமதி வரியை அதிகரிக்கக் கோருதல் ஆகியனவாகும்.

**மிதவாதிகள் (1885 - 1909) :** ஆரம்ப காலத்தில் காங்கிரசு அமைதியாகவும் மிதமான முறையிலும் செயலாற்றியது. காங்கிரசின்

தொடக்கக்காலத் தலைவர்கள் படித்த நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். அவர்கள் ஆங்கிலேயரின் நேர்மையான அணுகுமுறையில் நம்பிக்கை கொண்டிருந்தனர். தங்கள் கோரிக்கைகளையும், வாதங்களையும் வலியுறுத்த அமைதியான முறையினை மேற்கொண்டனர். காங்கிரசின் தலைவர்களாக **சுரேந்திரநாத் பானர்ஜி, தாதாபாய் நௌரோஜி, பெரோஷாமேத்தா, கோபாலகிருஷ்ண கோகலே, எம்.ஜி. ரானடே** போன்றோர் விளங்கினர்.



கோபாலகிருஷ்ண கோகலே

அவர்கள் காங்கிரசு கட்சியில் **மிதவாதிகள்** என்று அழைக்கப்பட்டனர். 19-ஆம் நூற்றாண்டு முழுக்க அரசின் கொள்கைகளைக் குறைகூறுவதிலும், சீர்திருத்தங்களைக் கோருவதிலுமே காங்கிரசு அக்கரை கொண்டிருந்தது. மிதவாதிகளின் கோரிக்கைகள் அரசியல் போல் உள்ளது எனக் காங்கிரசிலிருந்த இளைய தலைமுறையினர் வர்ணித்தனர். அவர்களின் தீவிரச் செயல்கள் தேசிய இயக்கத்தில் தீவிரவாதம் தோன்றக் காரணமாகின.



லாலா லஜபதி ராய், பாலகங்காதர திலகர் & பிபின் சந்திர பால்

**தீவிர தேசியவாதிகளின் தோற்றம்:** தொடக்க காலத்தில் ஆங்கில அரசு காங்கிரசுடன் நட்புப் பாராட்டியது. ஆனால், காங்கிரசில் உருவான தீவிரக் கருத்துக்களின் வளர்ச்சியினால் காங்கிரசுடனான ஆங்கில அரசின் போக்கில் மாறுதல் ஏற்பட்டது. காங்கிரசின் கோரிக்கைகளுக்கு அரசு எத்தகைய கவனத்தையும் அளிக்கவில்லை. எனவே காங்கிரசின் ஒரு பிரிவினர் மிதவாதிகளின் அணுகுமுறைகளில் நம்பிக்கை இழந்தனர். அவர்களில் முக்கியமானவர்கள் **பாலகங்காதரதிலகர்,** (பால் - Bal) **லாலா லஜபதி ராய்** (லால்-Lal) **பிபின் சந்திர பால்** (பால் - Pal), **அரவிந்த கோஷ்** ஆகியோர் ஆவர்.


அரவிந்த கோஷ்

அவர்கள் இந்தியச் சுதந்திரத்திற்காகப் போராடுவதில் உறுதி கொண்டிருந்தனர். அவர்கள் அரசுக்கு மனுக்கள் அனுப்புவதற்கு பதில் மக்கள் போராட்டங்களை நடத்துதல், அரசின் கொள்கைகளை விமரிசித்தல், அன்னியப் பொருட்களைப் புறக்கணித்தல், சுதேசப் பொருட்களையே (உள்நாட்டு பொருட்களையே) பயன்படுத்துதல் ஆகியவற்றில் மிக நம்பிக்கைக் கொண்டிருந்தனர். அவர்கள் சுதந்திரத்திற்கு அரசின் கருணையைச் சார்ந்திருக்கவில்லை. அதற்கு எதிர்மாறாகச் சுதந்திரம் பெறுவது தங்கள் உரிமை என்று நம்பினர். **'சுய ஆட்சி எனது பிறப்புரிமை, அதை அடைந்தே தீருவேன்'** என்று பாலகங்காதர திலகர் முழங்கினார். தமிழ்நாட்டில் **சுப்பிரமணிய பாரதியார், சுப்பிரமணிய சிவா, வ.உ.சிதம்பரனார்** ஆகியோர் திலகரின் நெருங்கிய நண்பர்களாகச் செயல்பட்டனர். திலகர் தன்


வ.உ. சிதம்பரனார்

கருத்துக்களை **கேசரி** என்ற பத்திரிகையின் மூலம் பிரச்சாரம் செய்தார். பிபின்சந்திரபால் **நியூ இந்தியா** எனும் பத்திரிகையின் உதவியுடன் தன் கருத்துக்களை வெளியிட்டார். அமைதியாக எதிர்க்கும் முறையை - அதாவது ஆங்கில அரசுக்கு உதவும் எந்தக் காரியத்திலும் தலையிடாமல் ஒதுங்கி நிற்கும் மிதவாதக் கொள்கையைப் பற்றி அரவிந்த கோஷ், **வந்தே மாதரம்** என்ற பத்திரிகையில் விளக்கினார். அவ்வாறு தீவிரவாதப் பிரிவினர் காங்கிரசின் நோக்கத்தை மாற்றுவது மட்டுமல்லாமல் அவற்றினை அடையும் வழியிலும் மாறுபட்டனர்.

***சுதேசி இயக்கம் :*** கர்சன் பிரபு வங்காளத்தை 1905-ஆம் ஆண்டு பிரித்தார். அச்செயல் காங்கிரசு இயக்கத்திற்கு மறைமுகமாக உதவியது. வங்கப் பிரிவினை மக்களைப் பிரிப்பதற்கு பதில், அவர்களை ஒன்றாகச் சேர்த்தது. அச்செயல் பொருளாதாரப் புறக்கணிப்பு எனும் **சுதேசி இயக்கம்** தோன்றுவதற்கு வழிவகுத்தது. சுதேசி என்பதன் பொருள் சொந்த நாடு என்பதாகும். அவ்வியக்கம் சொந்த நாட்டின் தொழில்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருந்தது. சுதேசி இயக்கத்தால் ஈர்க்கப்பட்ட ஏராளமான மக்கள் ஆங்கிலப் பொருட்களையும், குறிப்பாக துணிவகைகளையும், புறக்கணித் தனர். அதனால் இந்தியத் தொழில்கள் வளர்ந்தன. சுதேசி இயக்கத்தினர் அயல்நாட்டுத் துணிகளைச் சேகரித்து அவற்றை நகரங்களின் மையப்பகுதிகளில் எரித்துச் சாம்பலாக்கினர். ஏராளமான இளைஞர்கள் தம் படிப்பையும் விட்டு அவ் வியக்கத்தில் ஈடுபட்டனர். அவர்கள் **வந்தே மாதரம்** எனும் 'தாய்நாட்டு பற்றுமிக்க முழக்கத்தை எழுப்பினர். தென்னிந்தி யாவில் தூத்துக்குடியைச் சேர்ந்த வ.உ.சி. என எல்லோராலும் அழைக்கப்பட்ட வ.உ. சிதம்பரம் பிள்ளை **சுதேசி நீராவிக் கப்பல் கம்பெனி** அல்லது குழுமத்தினை (Swedeshi Steam Navigation Company) இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் வணிகம் செய்ய நிறுவினார்.

***முசுலிம் லீக் தோற்றம் - 1906 :*** இந்திய தேசியக் காங்கிரசின் தோற்றம் முசுலிம்களிடையே ஒருவித பயத்தை ஏற்படுத்தியது. தங்கள் முன்னேற்றத்திற்குத் தனியாக ஒரு அமைப்புத் தேவை

என்று படித்த முஸ்லிம்கள் பலரும் உணர்ந்தனர். **பிரித்தாளும் கொள்கையைப்** பின்பற்றிய ஆங்கில அரசு முசுலிம்களின் வேண்டுகோளை ஏற்றது. 1906-ஆம் ஆண்டு **டாக்காவின் நவாபான சலிமுல்லா கான்** தலைமையில் முசுலிம் லீக் உருவாகியது. முசுலிம் லீக் முசுலிம்களின் உரிமைகளைப் பாது காப்பதை நோக்கமாகக் கொண்டு ஆங்கிலேயருக்கு விசுவாசமாக நடந்து கொண்டது.

**சூரத் பிளவு - 1907 :** காங்கிரசில் மிதவாதிகளுக்கும் தீவிர தேசியவாதி களுக்கும் இடையே நிலவிய கருத்து வேறுபாடுகள் அதிகரித்துக் கொண்டு வந்தன. காங்கிரசு, சுயராஜ்யம் அடைவதே தனது நோக்கமென அறிவிக்க வேண்டும், என்று தீவிர தேசியவாதிகள் விரும்பினர். ஆனால், அத்தகைய தீவிர வழிகளில் ஈடுபட்டு ஆங்கில அரசுடன் நேரடியாக மோதுவதற்கு மிதவாதிகள் தயாராக இல்லை. 1907-ஆம் ஆண்டு நடந்த **சூரத் மாநாட்டில்** காங்கிரசுத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதில் இரு பிரிவினருக்குமிடையே மோதல் ஏற்பட்டது. அதனால் காங்கிரசு இரண்டாகப் பிரிந்து அதிலிருந்து தீவிர தேசியவாதிகள் வெளியேறினர். இந்நிகழ்ச்சி **சூரத் பிளவு** எனப்படுகிறது.

**மின்டோ-மார்லி சீர்திருத்தங்கள் - 1909 :** இந்தியாவின் அரசப் பிரதிநிதியான மின்டோ பிரபுவும் இந்திய அரசுச் செயலர் மார்லியும் இணைந்து இந்திய சட்டமன்றங்களைச் சீர்திருத்த திட்டம் வகுத்தனர். அதன்படி 1909-ஆம் ஆண்டு இந்தியச் சட்ட மன்றங்கள் சட்டம், அல்லது மின்டோ-மார்லி சீர்திருத்தச் சட்டம் இயற்றப்பட்டது. அச்சட்டம் இந்திய சட்டமன்றங்களின் செயல் பாடுகளில் சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தியது. அச்சட்டத்தின்படி சட்டமன்றங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களின் எண்ணிக்கை உயர்த்தப்பட்டது. முசுலிம்களுக் கென தனித் தொகுதிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. அதனை காங்கிரசு கடுமையாக எதிர்த்தது. **பால், லால், பால்** (Bal, Lal, Pal) அடங்கிய மூவர் தலைமையிலான அணி தங்கள் பேச்சினாலும், எழுத்தி னாலும், இந்தியா முழுவதும் மக்களிடையே போராட்ட உணர்வைத் தூண்டியது. மாசினியின் **''வாளை எடுத்து அரசை வீழ்த்து. ஏனெனில் அது அத்துமீறிய அன்னிய அரசு''** என்ற

சொற்கள் இந்தியரின் மனதில் எதிரொலித்தது. உண்மையில் ஆங்கிலேயரின் பிரித்தாளும் கொள்கையானது மிதவாதிகளை அரசிடம் மெத்தப் போக்குடையவர்களாக்கி, 1916-ஆம் ஆண்டு நடந்த **லக்னோ மாநாட்டில்** அவர்களைத் தீவிரவாதிகளுடன் மீண்டும் ஒன்றுசேர வழி வகுத்தது.

**முதல் உலகப்போர் 1914 - 1918 :** 1914-ஆம் ஆண்டு முதல் உலகப் போர் தொடங்கியது. ஆங்கில அரசு இந்தியாவை அப்போரில் பிரிட்டனின் சார்பில் பங்குபெறச் செய்ய விரும்பியது. ஆரம்பத்தில் இந்தியத் தலைவர்களுக்கு அதில் விருப்பமில்லை. எனினும் இந்தியப் போர்வீரர்கள் அப்போரில் பங்கு பெறுவதை தடுக்கவில்லை.

**தன்னாட்சி இயக்கம் 1916 :** பாலகங்காதர திலகர் 1916-ஆம் ஆண்டு **தன்னாட்சிக் கழகத்தை** (Home Rule League) மும்பையில் நிறுவினார். **அயர்லாந்தைச்** சேர்ந்த **அன்னி பெசன்ட்** என்ற பெண்மணி அடையாறிலிருந்த பிரம்மஞான சபையில் தொடர்புடையவராவார். அவர் தன்னைப் படிப்படியாக இந்திய தேசிய இயக்கத்தில் ஈடு படுத்திக் கொண்டார். அவரும் சென்னையில் ஒரு தன்னாட்சிக் கழகத்தைத் தொடங்கினார். அவ்விரு கழகங்களும் சேர்ந்து இந்தியரின் தன்னாட்சி இயக்கம் அல்லது சுய ஆட்சி பெறுவதற்குப் பிரச்சாரம் செய்தன. **மோதிலால் நேருவும் சி.ஆர். தாசும்** அவ்வியக்கத்தை ஆதரித்தனர். டாக்டர் அன்னி பெசன்ட், தம் பேச்சாலும் எழுத்தாலும், இந்திய மக்களிடையே மிகப்பெரிய அளவில் உற்சாகத்தைத் தூண்டினர். ஆங்கில அரசு அவர் நடத்திய பத்திரிகையான **நியூ இந்தியா**வை தடை செய்தது. திலகரும், அன்னிபெசன்ட் அம்மையாரும் கைது செய்யப் பட்டனர். அந்த நேரத்தில்தான் 1917-ஆம் ஆண்டு மாண்டேகு பிரபுவின் **ஆகஸ்டு அறிக்கை** வெளியிடப்பட்டது.



மோதிலால் நேரு

அவ்வறிக்கை, இந்தியர்களுக்குப் படிப்படியாக பொறுப்பாட்சி அளிக்கப்படும் என்று உறுதியளித்தது. எனவே, இந்தியர்கள் போருக்குப் பின்னர் சுய ஆட்சி கிடைக்கும் என்ற நம்பிக்கையில் ஆங்கிலேயரின் போர் முயற்சிகளுக்கு முழு மனதாக ஒத்துழைப்பு கொடுத்தனர். அதனால் தன்னாட்சி இயக்கம் தன் முக்கியத்துவத்தை இழந்தது.



**சி.ஆர். தாஸ்**

***லக்னோ ஒப்பந்தம் - 1916 :*** இந்திய தேசிய காங்கிரசின் லக்னோ மாநாட்டில் இரு முக்கிய வரலாற்று நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. முதலாவதாக, மிதவாதிகளும் தீவிரவாதிகளும் ஒன்றுபட்டனர். அவர்கள் இரு பிரிவினரும் ஓர் ஐக்கிய முன்னணியாகச் செயல்பட்டனர். இரண்டாவதாக, காங்கிரசும் முசுலிம் லீகும் சுய ஆட்சி பெறுவதில் ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பு நல்கிட ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டனர். அது **லக்னோ ஒப்பந்தம்** என அழைக்கப்படுகிறது.

| |
|---|
| அந்த லக்னோ மாநாட்டில்தான் ஜவஹர்லால் நேரு காந்திஜியை முதன்முதலாகச் சந்தித்தார். |

***முதல் உலகப் போர் முடிவடைதல் - 1918 :*** முதல் உலகப்போர் 1918-ஆம் ஆண்டு முடிவடைந்தது. ஆங்கிலேயர்களின் சார்பில் போரில் பங்கு பெற்ற இந்தியர்கள், தமக்கு ஆங்கிலேயரிடமிருந்து சில சலுகைகள் கிடைக்குமென்று மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்தனர்.

***மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தச் சட்டம் - 1919 :*** இந்தியாவுக்கான அரசுச் செயலாளரான **மாண்டேகுவும்,** இந்திய அரசுப்பிரதிநிதியான **செம்ஸ்போர்டும்** ஆங்கிலப் பாராளுமன்றம் இச்சட்டத்தினை 1919-ஆம் ஆண்டு இயற்றிடப் பொறுப்புடையவர்கள் ஆவர். இச்சட்டத்தின்படி **கிறிஸ்துவர்கள், ஆங்கிலோ-இந்தியர்கள், சீக்கியர்கள்** ஆகிய மூன்று இன மக்களுக்கும் தனித் தொகுதிகள் வழங்கப்பட்டன. இச்சட்டம் மத்திய, மாகாண சட்ட

மன்றங்களையும் விரிவுபடுத்தியது. மேலும், இச்சட்டம் மாகாணங்களில் இரட்டை ஆட்சி முறையையும் அறிமுகப் படுத்தியது. இந்தியர்கள் அதிக எண்ணிக்கையில் சட்ட மன்றங்களில் இடம் பெற்றனர். எனினும், இந்திய தேசியக் காங்கிரசு இச்சட்டத்தை நிராகரித்தது. இதைத் தொடர்ந்து இந்தியாவில் ஜாலியன் வாலாபாக் படுகொலையும், ஒத்துழை யாமை இயக்கமும் ஏற்பட்டன.

அச்சட்டத்தை வெளியிட்டது ஆங்கிலேயரின் பெருந் தன்மையற்ற செயல் எனவும், அதனை ஏற்றுக் கொள்வது இந்தியருக்கு மதிப்புடையதாகாது எனவும் அன்னிபெசன்ட் விவரித்தார்.

**கற்றல் அடைவுகள்**

1. மாணவர் லிட்டன் பிரபுவின் நடவடிக்கைகள் இந்தியர்களின் நலனுக்கு எவ்வாறு எதிரானவை என்பதை விளக்க முடியும்.
2. ரிப்பன் பிரபு இந்திய மக்களுக்கு ஆற்றிய சேவைகளை மாணவர் நினைவு கூர முடியும்.
3. கர்சன் பிரபுவின் சீர்திருத்தங்களை மாணவர் விவரிக்க முடியும்.
4. கர்சனின் 'பிரித்தாளும் கொள்கையை' மாணவர் விளக்க முடியும்.
5. மாணவர் இந்தியத் தேசியம் தோன்றியதற்கான காரணங் களை விளக்க முடியும்.
6. மாணவர் மிதவாதிகள் தீவிரவாதிகளின் நோக்கங்களையும் செயல்களையும் ஒப்பீடு செய்ய முடியும்.
7. மாணவர் சூரத் பிளவு ஏன் ஏற்பட்டது என்பதைச் சுட்டிக் காட்ட முடியும்.
8. அன்னிபெசன்ட் அம்மையார் இந்தியருக்கு ஆற்றிய பணிகளை மாணவர் விவரிக்க முடியும்.
9. மாணவர் தன்னாட்சி இயக்கத்தின் நோக்கத்தினைக் குறிப்பிட முடியும்.
10. மாணவர் லக்னோ ஒப்பந்தத்தின் முக்கியத்துவம் பற்றி குறிப்பிட முடியும்.
11. மாணவர் மாண்டேகு-செம்ஸ்போர்டு சட்டம் கொண்டு வந்த மாற்றங்களைப் பட்டியலிட முடியும்.

## சுய மதிப்பீடு

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்**

1. வெல்லி தர்பாரை நடத்தியவர்.

அ. மெக்காலே பிரபு ஆ. ரிப்பன் பிரபு

இ. லிட்டன் பிரபு ஈ. கர்சன் பிரபு

2. லிட்டன் பிரபு இந்தியப் பத்திரிகைகளின் சுதந்திரத்தைக் கட்டுப் படுத்த வெளியிட்ட சட்டம்

அ. வட்டார மொழிகள் பத்திரிகைச் சட்டம் ஆ. தொழிற்சாலைச் சட்டம்

இ. இல்பர்ட் சட்டம் ஈ. பல்கலைக் கழகச் சட்டம்

3. இந்தியாவில் மக்கள் தொகை கணக்கெடுப்பு முறையை அறிமுகப்படுத்தியவர்

அ. லிட்டர் பிரபு ஆ. ரிப்பன் பிரபு

இ. கர்சன் பிரபு ஈ. கிளைவ் பிரபு

4. தொழிற்சாலை சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு

அ. 1887 ஆ. 1882

இ. 1883 ஈ. 1885

5. உள் ஆட்சியின் தந்தை என்று அழைக்கப்படுபவர்

அ. கர்சன் பிரபு ஆ. ரிப்பன் பிரபு

இ. லிட்டன் பிரபு ஈ. மின்டோ பிரபு

6. சி.பி. இல்பர்ட் என்பவர் ஒரு

அ. படைத்தலைவர் ஆ. சட்ட உறுப்பினர்

இ. தலைமை ஆளுநர் ஈ. நீதிபதி

7. கூட்டுறவுச் சங்கங்களை அறிமுகப்படுத்தியவர்

அ. ரிப்பன் பிரபு ஆ. கர்சன் பிரபு

இ. லிட்டன் பிரபு ஈ. டல்ஹௌசி பிரபு

8. தொல்பொருள் ஆராய்ச்சித் துறையை ஏற்படுத்தியவர்

அ. லிட்டன் பிரபு ஆ. ரிப்பன் பிரபு

இ. கர்சன் பிரபு ஈ. மார்லி பிரபு

9. வங்காளப் பிரிவினை நிகழ்ந்த ஆண்டு

அ. 1911 ஆ. 1912

இ. 1905 ஈ. 1910

10. சுதேசி இயக்கத்தின் போது மக்கள் உபயோகித்த முழக்கம்

அ. வேதங்களை நோக்கிச் செல் ஆ. வந்தே மாதரம்

இ. சுயராஜ்யம் எனது பிறப்புரிமை ஈ. இவற்றில் எதுவும் இல்லை.

11. முதல் உலகப்போர் நிகழ்ந்த ஆண்டுகள்

அ. 1914 - 1916 ஆ. 1912 - 1915

இ. 1914 - 1918 ஈ. 1918 - 1921

12. டாக்டர் அன்னிபெசன்ட் ஒரு

அ. ஆங்கிலப் பெண்மணி ஆ. இந்தியப் பெண்மணி

இ. அமெரிக்கப் பெண்மணி ஈ. அயர்லாந்து பெண்மணி

13. ஆகஸ்டு அறிக்கையை வெளியிட்டவர்

அ. மார்லி ஆ. மாண்டேகு

இ. மவுண்ட் பேட்டன் ஈ. கர்சன்

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக

1. 1870ல் தந்திக்கம்பி இணைப்பு இங்கிலாந்துக்கும் ________ க்கும் இடையே அமைக்கப்பட்டது.

2. இந்தியர்கள் ஆயுதங்கள் வைத்திருக்க, வாங்க அல்லது விற்க வேண்டுமெனில் அரசின் அனுமதி பெறவேண்டும் என்று வற்புறுத்திய சட்டம் ________ ஆகும்.

3. 1881-ஆம் ஆண்டு தொழிற்சாலைச் சட்டம் ________ ன் வேலை நேரத்தை நிர்ணயித்தது.

4. ரிப்பன் பிரபுவின் அரசு ________ சட்டத்தை நீக்கியது.

5. ரிப்பன் பிரபு ________ல் உள்ள பல்கலைக் கழகத்தை நிறுவினார்.

6. கர்சன் ________ குழு ஒன்று அமைத்து நிவாரணப் பணிகளுக்கு பெருந்தொகை ஒதுக்கினார்.

7. இளைஞர்களுக்கு இராணுவப் பயிற்சியளிக்க கர்சன் ________ஐ அமைத்தார்.

8. கிழக்கு வங்காளத்தின் தலைநகர் ________ எனவும் மேற்கு வங்காளத்தின் தலைநகர் ________ எனவும் அறிவிக்கப்பட்டன.

9. ________ன் பிரகடனத்தில் வெளியிடப்பட்ட வாக்குறுதிகள் எதுவும் பின்பற்றப்படவில்லை.

10. இந்தியர்கள் ________, ________ ஆகிய நாடுகளின் ஐக்கியத்தினால் ஊக்கம் கொண்டு தங்கள் சுதந்திரத்திற்குப் போராட விரும்பினர்.

11. ________, ________ ஆகியோரின் எழுத்துக்கள் மக்கள் மத்தியில் தேசிய விழிப்புணர்ச்சியைக் கொண்டு வந்தன.

12. மிதவாதிகளின் கோரிக்கைகள் ________ என்று வர்ணிக்கப்பட்டது.

13. சுதேசி இயக்கத்தின் போது இந்தியர் ________ பொருட்களைப் புறக்கணித்தனர்.

14. தன்னாட்சி இயக்கத்தில் ஈடுபட்ட தலைவர்கள் ________ மற்றும் ________ ஆவார்.

15. லக்னோவில் நடந்த காங்கிரசு மாநாட்டில் ஜவஹர்லால் நேரு முதன் முதலாக ________ ஐ சந்தித்தார்.

**III. பின்வருவனவற்றைப் பொருத்துக**

**அ**

| | | |
|---|---|---|
| 1. | வட்டார மொழிகள் பத்திரிகைச் சட்டம் -- | 1877 |
| 2. | ஹண்டர் குழு -- | 1881 |
| 3. | டெல்லி தர்பார் -- | 1904 |
| 4. | தொழிற்சாலைச் சட்டம் -- | 1882 |
| 5. | இந்தியப் பல்கலைக்கழகச் சட்டம் -- | 1878 |

**ஆ**

1. அமீர் ஷெர் அலி -- பழங்கால நினைவுச் சின்னங்கள்
2. உள் ஆட்சியின் தந்தை -- சட்ட உறுப்பினர்
3. இல்பர்ட் -- ஆப்கானிய அரசர்
4. கர்சன் பிரபு -- பூசா
5. விவசாய ஆராய்ச்சி மையம் -- ரிப்பன்

**இ**

1. தயானந்த சரஸ்வதி -- மிதவாதிகள்
2. அரவிந்த கோஷ் -- வந்தே மாதரம்
3. அன்னிபெசன்ட் அம்மையார் -- கேசரி
4. பாலகங்காதர திலகர் -- நியூ இந்தியா
5. அரசியல் பிச்சை -- சுயராஜ்ஜியம்

**IV. சுருக்கமாக விடையளிக்கவும்**

1. வட்டார மொழிகள் பத்திரிகைச் சட்டம் பற்றி சிறுகுறிப்பு தருக.
2. 1881-ஆம் ஆண்டு தொழிற்சாலை சட்டம் பற்றி உமக்கு என்ன தெரியும்?
3. ரிப்பன் பிரபு இந்திய மொழிகள் பத்திரிகைச் சட்டத்தை ஏன் நீக்கினார்?
4. ரிப்பன் பிரபுவின் கல்விச் சீர்திருத்தங்களைக் குறிப்பிடுக.
5. இல்பர்ட் மசோதாவின் அம்சங்கள் யாவை?
6. கர்சன் பிரபுவின் விவசாய சீர்திருத்தங்கள் யாவை?
7. கர்சன் பிரபு எவ்வாறு இந்தியாவின் பழங்கால நினைவுச் சின்னங்களைப் பாதுகாத்தார்?
8. வங்காளம் ஏன் பிரிக்கப்பட்டது?
9. இந்திய தேசியத்தின் வளர்ச்சியிலும் அதைப் பரப்பியதிலும் அச்சுக்கூடங்கள் மற்றும் செய்தித்தாள்களின், பங்கினை வெளிக் கொணர்க.
10. 1878-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட ஆயுதச் சட்டத்தின் விளைவு யாது?
11. இந்திய தேசியக் காங்கிரசு எப்போது யாரால் தோற்றுவிக்கப் பட்டது?
12. இந்திய தேசியக் காங்கிரசின் தொடக்கக் கால நோக்கங்கள் யாவை?

13. மிதவாதிகள் யார்? அவர்களில் சிலரின் பெயர்களைக் குறிப்பிடுக.
14. தீவிரவாதத் தேசியவாதிகளின் நோக்கங்கள் யாவை?
15. தென்னிந்தியாவில் திலகருக்கு நெருக்கமான நண்பர்களாக இருந்தவர்கள் யார்?
16. முசுலிம் லீகின் நோக்கங்கள் யாவை?
17. தீவிர தேசியவாதிகள் எப்போது, ஏன் காங்கிரசை விட்டு விலகினர்?
18. டாக்டர் அன்னிபெசன்ட் இந்தியர்களிடையே எவ்வாறு தேசிய உணர்வை ஏற்படுத்தினார்?
19. லக்னோ ஒப்பந்தத்தின் முக்கியத்துவம் பற்றி கூறுக.

**V. விரிவான விடை தருக**

1. லிட்டன் பிரபுவின் பெருமையைக் குறைத்த கொள்கைகளைக் குறிப்பிடுக.
2. ரிப்பன் பிரபுவின் சீர்திருத்தங்களை விளக்குக.
3. கர்சன் பிரபுவின் சீர்திருத்தங்களை மதிப்பிடுக.
4. இந்தியாவில் தேசிய இயக்கம் தோன்றுவதற்கான காரணங்களை விளக்குக.
5. சூரத் பிளவு ஏற்பட இட்டுச் சென்ற நிகழ்ச்சிகளை விளக்குக.
6. தீவிர தேசியவாதிகள் எனப்பட்டவர்கள் யார்? அவர்களின் நோக்கம் யாது?
7. இந்திய சுதந்திரப் போராட்டத்தில் டாக்டர் அன்னிபெசன்டின் பங்கினை விவாதி.

**VI. செய்முறைப் பயிற்சிகள்**

1. இந்திய தேசியக் காங்கிரசின் தோற்றம் முதல் 1919-ஆம் ஆண்டு வரையிலான இந்திய விடுதலைப் போராட்ட நிகழ்ச்சிகளைக் குறிக்கும் காலக்கோட்டினைத் (Time Line) தயாரிக்கவும்.
2. ஜவஹர்லால் நேரு எழுதிய 'டிஸ்கவரி ஆப் இந்தியா' (Discovery of India) என்ற புத்தகத்தில் உள்ள சுதந்திர இயக்கம் பற்றிய பகுதிகளைப் படிக்கவும்.
3. வ.உ. சிதம்பரம் பிள்ளை, சுப்பிரமணிய பாரதியார் ஆகியோரின் வாழ்க்கை வரலாற்றைப் படிக்கவும்.



**காந்தியடிகள்**

பாடம் - 6

# இந்திய விடுதலைப் போர் - காந்தியடிகள் காலம்

**கற்றல் நோக்கங்கள்**

1. மாணவர் இந்திய சுதந்திரப் போராட்டத்தில் காந்திஜியின் பங்கு பற்றிய அறிவினைப் பெறல்.
2. மாணவர் ஜாலியன் வாலாபாக் படுகொலையைப் பற்றியும் கிலாபத் இயக்கம் பற்றியும் அறிந்து கொள்ளுதல்.
3. மாணவர் ஒத்துழையாமை இயக்கம் பற்றிப் புரிந்து கொள்ளுதல்.
4. மாணவர் சுயராஜ்ஜியக் கட்சி, லாகூர் காங்கிரசின் முக்கியத்துவம், உப்புச் சத்தியாக்கிரகம், வட்ட மேசை மாநாடுகள் மற்றும் பூனா ஒப்பந்தம் பற்றிய அறிவினைப் பெறல்.
5. மாணவர் 1935-ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின் அம்சங்களைப் புரிந்துகொள்ளுதல்.
6. மாணவர் சுதந்திரப் போராட்டத்திற்கு நேதாஜி ஆற்றிய பணிகளைப் பற்றி அறிந்து கொள்ளுதல்.
7. மாணவர் கிரிப்ஸ் தூதுக்குழு, வெள்ளையனே வெளியேறு இயக்கம், 1946ல் வந்த அமைச்சரவைத் தூதுக்குழு, இடைக்கால அரசு ஆகியவை பற்றிய அறிவைப் பெறல்.
8. மாணவர் மவுண்ட் பேட்டன் பிரபுவின் திட்டம் பற்றி அறிந்து கொள்ளுதல்.
9. மாணவர் இந்திய மன்னராட்சிப் பகுதிகள் இணைப்பில் வல்லபாய் படேலின் பங்கு பற்றிப் புரிந்து கொள்ளுதல்.

1919-ஆம் ஆண்டு இந்தியச் சுதந்திரப் போராட்ட வரலாற்றில் ஒரு மாறுபட்ட காலகட்டத்தைக் குறிப்பதாக

அமைந்தது. 1919-ஆம் ஆண்டிலிருந்து 1947 வரை காந்திஜி சுதந்திரப் போராட்டத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். எனவே இக்கால கட்டம் காந்தியடிகள் காலம் என்று அழைக்கப் படுகிறது. அவர் கத்தியின்றி இரத்தமின்றி ஆங்கிலேயரை எதிர்த்துப் போராட இந்திய மக்களைத் தயார்படுத்தினார். வன்முறைக்குப் பதிலாக சத்தியாக்கிரகம், அகிம்சை ஆகிய முறைகளைப் பயன்படுத்தினார்.

**ரௌலட் சட்டம் 1919 :** ரௌலட் சட்டம் 1919-ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. அச்சட்டம் உத்தரவின்றி எவரையும் கைது செய்ய ஆங்கில அரசுக்கு அதிகாரம் அளித்தது. அச்சட்டத்தின் மூலம் விசாரணையின்றி எவரையும் சிறையில் அடைக்கலாம். ரௌலட் சட்டத்தினை எதிர்க்கும்படி காந்திஜி இந்தியர்களுக்கு அழைப்பு விடுத்தார். அதன் விளைவாக நாடு முழுவதும் கடையடைப்பும், எதிர்ப்புப் போராட்டங்களும் ஏற்பட்டன.

**ஜாலியன் வாலாபாக் படுகொலை, 13-ஏப்ரல் 1919 :** ரௌலட் சட்ட எதிர்ப்புப் போராட்டம் தொடர்பாக **சத்தியபால்** மற்றும் சாய்ப்புதீன் கிச்லு (Saifuddin Kichlew) ஆகிய முக்கியத் தலைவர்கள் பஞ்சாபில் கைது செய்யப்பட்டனர். சட்டத்திற்குப் புறம்பான அக்கைதினை எதிர்த்து மக்கள் **அமிர்தசரசில்** உள்ள ஜாலியன் வாலாபாக் என்னுமிடத்தில் பூங்கா ஒன்றில் கூடினர். அப்பூங்காவிற்கு ஒரு பக்கம் மட்டும் சிறு நுழைவாயில் இருந்தது. மற்ற எல்லா பக்கங்களும் உயர்ந்த சுவர்களால் சூழப்பட்டிருந்தது. அதன் மையத்தில் ஒரு கிணறு இருந்தது. அமிர்தசரசின் இராணுவத் தளபதியான **ஜெனரல் டயர்** அந்த நுழைவு வாயிற்பகுதியை மூடும்படி தன் படைகளுக்கு உத்தர விட்டார். பின் எந்தவித முன்னறிவிப்புமின்றி அமைதியாகவும், நிராயுத பாணியாகவும் கூடிய மக்களைச் சுடும்படி தன் படை களுக்கு உத்தரவிட்டார். அக்கூட்டத்தில் பல பெண்டிரும், குழந்தைகளும் கூட இருந்தனர். அச்சம்பவம் ஒரு கொடுமை யான படுகொலையானது. அத்துப்பாக்கிச் சூட்டில் ஏறக்குறைய 500 பேர் உயிரிழந்தனர். 1200 பேர்களுக்கு மேல் காயமடைந்தனர். அச்சம்பவம் **ஜாலியன் வாலாபாக் படுகொலை** அல்லது **பஞ்சாப் படுகொலை** என்று அழைக்கப்படுகிறது. காந்திஜி அச்சம்பவத்தைக் கண்டித்தார். அதுமுதல் அவர் ஆங்கில அரசுடன் ஒத்துழைக்க மறுத்தார். அவர் இந்திய விடுதலைப்

போரில் சிறப்புமிக்க தலைவராகத் தோன்றினார். அவர் 1920-ஆம் ஆண்டு ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கினார்.

பஞ்சாப் படுகொலை, பின் வந்த தலைமுறை யினரிடையே நீடித்த ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது. தனது எதிர்ப்பினைக் காட்ட இரவீந்திரநாத் தாகூர் ஆங்கில அரசு தனக்கு அளித்த நைட்வுட் (Kinghthood) பட்டத்தைத் துறந்தார். தென் ஆப்பிரிக்க அரசால் தனக்கு அளிக்கப்பட்ட கெய்சர்-இ-ஹிந்த் (Kaiser-i-Hind) என்ற பதக்கத்தை காந்திஜி திருப்பி அளித்தார். தாகூர், காந்திஜி, நேருஜி ஆகியோரின் நண்பரான சி.எப். ஆண்ட்ரூஸ் (C.F. Andrews) என்பவர் அமிர்தசரஸ் சென்று திரும்பியவுடன் ஜாலியன் வாலாபாக் படுகொலையைப் பற்றி மகாதேவ தேசாயிக்கு கீழ்க் கண்டவாறு ''அது ஒரு படுகொலை, ஒரு கொலைக்களம்'' என எழுதினார்.


முகமது அலி

**கிலாபத் இயக்கம் :** இந்திய முசுலிம்கள் ஆங்கிலேயர்களுக்கு எதிராக பல குறை பாடுகளைக் கொண்டிருந்தனர். முதல் உலகப் போரின் போது துருக்கி ஜெர்மெனியின் நட்பு நாடாகச் செயல்பட்டது. போரில் ஜெர்மெனி தோல்வியடைந்தவுடன் துருக்கியப் பேரரசு சிதறடிக்கப்பட்டது. அப்பேரரசின் பகுதிகளை பிரிட்டனும், பிரான்சும் பங்கு போட்டுக் கொண்டன. துருக்கிய சுல்தான் அவமதிக்கப் பட்டார். சுல்தான் முசுலிம்களுக்கு கலிபா அல்லது சமயத் தலைவரும் கூட ஆவார். எனவே உலகம் முழுவதுமிருந்த முசுலிம்கள் ஆங்கில அரசுக்கு எதிராக **கிலாபத் இயக்க**த்தைத் தொடங்கினார். இந்தியாவில் **முகமது அலி, சவுகத் அலி** என்ற இரு சகோதரர்கள் அவ்வியக்கத்தைத் தொடங்கி னார்கள். காங்கிரசுக் கட்சி அவ்வியக்கத்தை ஆதரித்தது. இந்துக்களையும், முசுலிம் களையும் ஒன்று சேர்க்க அது ஒரு நல்ல சந்தர்ப்பம் என காந்திஜி எண்ணினார். முசுலிம் லீக் கட்சியும், காங்கிரசுக் கட்சியும் நெருங்கி வர கிலாபத் இயக்கம் வழிவகுத்தது.



சைமன் குழு புறக்கணிப்பு

***ஒத்துழையாமை இயக்கம் - 1920 :*** காங்கிரசுக் கட்சி 1920-ஆம் ஆண்டு ஒத்துழையாமை இயக்கத்தைக் கடைப் பிடித்தது. அவ்வியக்கத்தின் முக்கிய நோக்கம் அகிம்சை, அமைதி வழிகளில் சுயராஜ்ஜியம் பெறுவதாகும். அவ்வியக்கம் மூன்று நிலைகளில் கடைப்பிடிக்கப்பட்டது. **முதலாவதாக** இந்தியர்கள் ஆங்கில அரசிடமிருந்து பெற்ற பட்டங்களையும், கௌரவ விருதுகளையும் எதிர்ப்பை வெளிக்காட்டும் வகையில் துறந்தனர்.

**இரண்டாவது** கட்டமாக கடையடைப்பு உள்ளிட்ட பெரும் போராட்டங்களை நடத்தினர். எல்லா அரசு அலுவலகங்களும் - பள்ளிகள், கல்லூரிகள், சட்டமன்ற நடவடிக்கைகள் உள்பட அனைத்தும் புறக்கணிக்கப்பட்டன. மோதிலால் நேரு, ஜவஹர்லால் நேரு, சி.ஆர். தாஸ், இராஜாஜி, ஈ.வி. இராமசாமி (தந்தை பெரியார்) உள்பட ஏறக்குறைய 30,000 தேசபக்தர்கள் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டனர்.

அவ்வியக்கத்தின் **இறுதிக் கட்டம்** வரி செலுத்த மறுத்தல் ஆகும். 1921-ஆம் ஆண்டு அகமதாபாத்தில் நடந்த காங்கிரசு மாநாடு, அரசு தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றும் வரை மக்களை அரசாங்கத்திற்கு வரி செலுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொண்டது.

***சௌரி சௌரா நிகழ்ச்சி - 1922 :*** *ஒத்துழையாமை இயக்கம் கடைப்பிடிக்கப்பட்ட போது உத்திரப்பிரதேசத்தில்* ***சௌரி சௌரா*** *என்னுமிடத்தில் காவலர்களின் அடக்குமுறை துப்பாக்கிச் சூட்டிற்கு எதிராக விவசாயிகள் காவல் நிலையத்திற்கு தீயிட்டனர். அச்சம்பவத்தில் 22 காவலர்கள் உயிரிழந்தனர். அந்நிகழ்ச்சி* ***சௌரி சௌரா நிகழ்ச்சி*** *எனப்படுகிறது. அவ்வன்முறை நிகழ்ச்சியைக் கேள்வியுற்ற காந்திஜி மனம் வருந்தினார். அந்நிகழ்ச்சி அவரது அகிம்சை கொள்கைக்கு எதிரானதாக அமைந்தது. மக்கள் இன்னமும் அகிம்சை வழியில் ஒத்துழையாமை இயக்கத்தினைக் கடைப்பிடிக்க பக்குவப்படவில்லை என்பதை காந்திஜி உணர்ந்தார். எனவே அவர் ஒத்துழையாமை இயக்கத்தை உடனடியாக ஒதுக்கி வைத்தார். ஆங்கில அரசு காந்திஜியைக் கைது செய்தது. அவருக்கு ஆறு ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது.*

***சுயராஜ்ஜியக்கட்சி - 1923 - 1925 :*** *காந்திஜியின் கைதுக்குப் பின் சுதந்திரப் போராட்ட வீரர்களை வழிநடத்திச் செல்ல சரியான தலைவர்கள் இல்லை.* ***அலிப்பூர்*** *சிறையில் இருந்த* **மோதிலால் நேருவும், சி.ஆர். தாசும்,** *சுயராஜ்ஜியக்கட்சியை உருவாக்கி னார்கள். தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறுதலே அக்கட்சி யின் நோக்கமாகியது. சட்ட சபைக்குள் நுழைந்து அங்கிருந்து ஆங்கில அரசாங்கத்தை எதிர்ப்பதை அக்கட்சி எடுத்துக் கூறி வாதிட்டது. அக்கட்சி இந்தியாவில் பொறுப்பான அரசு நிறுவப்பட வேண்டுமெனக் கோரி தீர்மானத்தை நிறைவேற்றியது. மேலும் இந்தியர்களின் தேவைகளையும், கோரிக்கைகளையும் நிறை வேற்றிட வட்டமேசை மாநாடுகள் நடத்தப்பட வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்தது. ஆனால், 1925-ஆம் ஆண்டு சி.ஆர். தாசின் மறைவிற்குப் பின் அக்கட்சி செயலிழந்து பின்னர் கலைக்கப் பட்டது.*

***சைமன் குழு, 1927 :*** *1927-ஆம் ஆண்டு ஏழு பேர் அடங்கிய குழு ஒன்று ஆங்கில அரசால் நியமிக்கப்பட்டது. அக்குழுவின் தலைவ ராக* ***சர் ஜான் சைமன்*** *பொறுப்பேற்றார். அக்குழுவில் இருந்த அனைவருமே ஐரோப்பியர்கள். எனவே இந்தியர்கள் அக்குழு வினை நிராகரித்தனர். அக்குழு இந்தியா வந்தபோது* ***‘‘சைமனே***

***திரும்பிச் செல்''*** (Simon, Go back) *என்ற முழக்கத் துடன் மக்கள் அக்குழுவின் வருகையைப் புறக்கணித்தனர்.*

***பஞ்சாப் சிங்கம்*** *என்று அழைக்கப்பட்ட* **இலாலா லசபதி ராய்** *லாகூரில் சைமன் வருகையை எதிர்த்துப் போராட்டத்தை முன்னின்று நடத்தியபோது, காவலரின் தடியடிச் சம்பவத்தால் இறக்க நேரிட்டது. அவருடைய மரணம்* **பகத்சிங்கால்** *பழி தீர்க்கப்பட்டது. இலாலாலசபதிராய் இறப்பதற்குக் காரணமாக இருந்த காவலரை பகத்சிங் சுட்டுக் கொன்றார். அதற்காக பின்னாளில் அவருக்கு ஆங்கில அரசு மரணதண்டனை அளித்தது.*

***லாகூர் காங்கிரசு மாநாடு, 1929 :*** *1929-ஆம் ஆண்டு ஜவஹர்லால் நேருவின் தலைமையில் லாகூரில் காங்கிரசு மாநாடு கூடியது. அம்மாநாட்டில் ஆங்கிலேயரிடமிருந்து* **முழுவிடுதலை** *அல்லது* **பூரண சுதந்திரம்** *கோரி தீர்மானம் இயற்றப்பட்டது. மற்றுமொரு தீர்மானமும் அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. அதன்படி ஆங்கிலேயருக்கு எதிராக* **சட்ட மறுப்பு இயக்கம்** *தொடங்கப் பட்டது. அக்கூட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 26-ஆம் நாள் சுதந்திர நாளாக நாடெங்கும் அனுசரிக்கப்பட வேண்டும் எனவும் முடிவெடுக்கப்பட்டது. அதன்படி 1930-ஆம் ஆண்டு ஜனவரி 26-ஆம் நாள் சுதந்திர தினமாக நாடு முழுவதும் கொண்டாடப்பட்டது.*

*1930-ஆம் ஆண்டு ஜனவரி 26-ஆம் நாள் காங்கிரசுக் கட்சியின் மூவர்ணக் கொடி ஏற்றப்பட்டது. மக்கள் பூரணச் சுதந்திரம் பெற போராடச் சபதமெடுத்துக் கொண்டனர். அந்த நாள் காங்கிரசுக் கட்சி வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்ட நாளானது. இந்திய வரலாற்றில் அந்நாளினை நினைவு கூர 1950-ஆம் ஆண்டு ஜனவரி 26-ஆம் நாள் இந்திய அரசியல் அமைப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டது. அந்நாளினை நாம் குடியரசு தினமாகக் கொண்டாடி வருகின்றோம்.*

***உப்புச் சத்தியாகிரகம், 1930* (Salt Satyagraha) *அல்லது சட்ட மறுப்பு இயக்கம் :*** *பல இலட்சக்கணக்கான மக்கள் உபயோகித்த சாதாரண உப்பின் மீது ஆங்கில அரசு வரி விதித்தது. அந்த வரி விதிப்பினால், இயற்கையாகக் கிடைக்கும் உப்பை எல்லோரா லும் எளிதில் உபயோகிக்க முடியாத நிலை இருந்தது. முக்கிய*

*மாக ஏழை மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டனர். எனவே காந்திஜி உப்பு வரியை எதிர்க்கத் தீர்மானித்தார். அவர் 1930-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 12-ஆம் நாள் வரலாற்றுச் சிறப்புமிக்க **தண்டிப் பயணத்தை** மேற்கொண்டார்.*

> *சபர்மதி ஆசிரமத்திலிருந்து தண்டி வரையுள்ள 241 மைல்கள் (ஏறக்குறைய 400 கி.மீ.) தூரத்தை **சரோஜினி நாயுடு** உள்பட தேர்ந்தெடுக்கப்பட்ட 78 ஆதரவாளர்களுடன் காந்திஜி 25 நாள்களில் கால்நடையாகப் பயணம் செய்தார். அப்பயணத்தின் போது 'வந்தே மாதரம்' என்ற முழக்கம் எல்லா இடங்களிலும் எதிரொலித்தது.*

*அவர் ஏப்ரல் 6-ஆம் தேதி தண்டியை அடைந்து அக்கடற் கரையிலிருந்த உப்பை தன் கையால் எடுத்தார். அந்நிகழ்ச்சி இந்தியா முழுக்க மக்கள் இயக்கம் வெடித்திட ஒரு தீப்பொறி யாய் அமைந்தது. அவ்வியக்கத்தில் பெண்களும் பங்கேற்றனர். தென்னிந்தியாவில் அப்பயணத்தை இராச கோபாலாச்சாரியார் **திருச்சிராப்பள்ளியிலிருந்து வேதாரண்யம்** வரை மேற்கொண்டார். மலபார் கடற்கரையில் காங்கிரசுத் தலைவர்களில் ஒருவரான **கேளப்பன் கோழிக்கூட்டிலிருந்து பையனூர்** வரை பயணத்தைத் தலைமை தாங்கி நடத்தி உப்பு வரியை எதிர்த்தார். அவ்வியக்கம் **உப்பு சத்தியாக்கிரகம்** அல்லது **சட்ட மறுப்பு இயக்கம்** என அழைக்கப்பட்டது.*

*அதனைத் தொடர்ந்து நாடு முழுவதும் போராட்டங்களும், கடையடைப்புகளும், அன்னியப் பொருட்களைப் புறக்கணித் தலும் மேற்கொள்ளப்பட்டன. மக்கள் வரி செலுத்த மறுத்தனர். 1930-ஆம் ஆண்டு மே மாத இறுதியில் காந்திஜி, நேருஜி, இராஜாஜி போன்ற முக்கியத் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். வடமேற்கு எல்லைப்புற மாகாணங்களில் வாழ்ந்த மக்களும் அச்சட்ட மறுப்பு இயக்கத்தில் பங்கேற்றனர். அப்பகுதியில் **எல்லை காந்தி*** (Frontier Gandhi) *என அழைக்கப்பட்ட **கான் அப்துல் காபர்கான்** தலைமையேற்று அவர்களை வழி நடத்தினார்.*

*சட்ட மறுப்பு இயக்கம் ஒத்துழையாமை இயக்கத்திலிருந்து மாறுபட்டது. இவ்வியக்கத்தின் முக்கிய நோக்கம் முழுச்*

*சுதந்திரம் பெறுவது ஆகும். அச்சுதந்திரத்தை, சட்டங்களை மீறி யாவது அடைந்திட வேண்டும் எனக் கருதப்பட்டது. இந்தியர்கள் ஆங்கில அரசாங்கத்தை எல்லா நிலைகளிலும் எதிர்த்து அதனைச் செயலிழக்கச்செய்ய, சட்ட மறுப்பு இயக்கம் தூண்டியது.*

## வட்ட மேசை மாநாடுகள் 1930 - 32

***முதல் வட்ட மேசை மாநாடு, 1930 :*** *ஆங்கில அரசினால் சட்ட மறுப்பு இயக்கத்தை அடக்க முடியவில்லை. எனவே இந்தியர் களைச் சமாதானப்படுத்தும் வகையில் ஆங்கில அரசு 1930-ஆம் ஆண்டு இலண்டனில் வட்டமேசை மாநாடு ஒன்றிற்கு ஏற்பாடு செய்தது. ஆனால் காங்கிரசுக் கட்சித் தலைவர்கள் அனைவரும் சிறையில் அடைக்கப்பட்டு இருந்ததால் காங்கிரசு அந்த மாநாட்டில் பங்கேற்கவில்லை.*

***காந்தி - இர்வின் ஒப்பந்தம், 1931 :*** *காந்திஜி 1931-ஆம் ஆண்டு விடுதலை செய்யப்பட்டார். அதன் பின்* ***காந்தி-இர்வின் ஒப்பந்தம்*** *கையெழுத்தானது. அவ்வொப்பந்தத்தின்படி காந்திஜி சட்ட மறுப்பு இயக்கத்தினைக் கைவிட ஒப்புக் கொண்டார். அரசியல் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்தால் இரண்டாம் வட்ட மேசை மாநாட்டில் கலந்துகொள்ளவும் இசைந்தார். எனினும் அவ்வொப்பந்தம் மரண தண்டனை விதிக்கப்பட்டுச் சிறையி லிருந்த புரட்சித் தலைவர்களான பகத்சிங், இராஜகுரு ஆகியோரின் விடுதலைக்கு வழி வகுக்கவில்லை.*

***இரண்டாம் வட்ட மேசை மாநாடு:*** *1931-ஆம் ஆண்டு இரண்டாம் வட்டமேசை மாநாடு நடைபெற்றது. காந்திஜி அம்மாநாட்டில் கலந்து கொண்டார். ஆனால் அம்மாநாட்டில் எந்த ஒரு இறுதி முடிவும் எட்டப்பெறவில்லை. மனமுடைந்த காந்திஜி இந்தியா திரும்பினார். அவர் அரசுப் பிரதிநிதியைச் சந்திக்க மேற்கொண்ட முயற்சி பயனின்றிப் போனது. பின் ஆங்கில அரசு காங்கிரசுக் கட்சியைச் சட்ட விரோதமானது என அறிவித்தது. காந்திஜியும் மற்ற முக்கிய காங்கிரசுத் தலைவர்களும் சிறையிலடைக்கப் பட்டனர்.*



**இலண்டனில் நடைபெற்ற இரண்டாம் வட்டமேசை மாநாட்டில் காந்தி கலந்து கொள்ள செல்லுதல்**

***மூன்றாம் வட்ட மேசை மாநாடு, 1932 :*** *காங்கிரசுத் தலைவர்கள் எவரும் பங்கு பெறாமலேயே மூன்றாம் வட்ட மேசை மாநாடு நடைபெற்றது. அது தோல்வியில் முடிந்தது.*

*வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவமும் பூனா ஒப்பந்தமும், 1932 : 1932ல் காந்திஜி சிறையில் அடைக்கப்பட்டிருந்தபோது* **இராம்சே மெக்டொனால்டு** *தலைமையிலான ஆங்கில அரசு* **வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்** *திட்டத்தை அறிவித்தது. அதன் படி சிறுபான்மையினருக்கும், தாழ்த்தப்பட்ட இன மக்களுக்கும் தனி இட ஒதுக்கீடு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. அத் திட்டத்தைத் தாழ்த்தப்பட்ட இன மக்களின் தலைவரான* **டாக்டர் பி.ஆர். அம்பேத்கார்** *வரவேற்றார். ஆனால் இந்தியச் சமூகத் தினை மேலும் பிரித்தாளும் ஒரு திட்டமாக காந்திஜி அதனைக் கருதினார். எனவே அவர் அதை நிராகரித்தார். அதனைத் தொடர்ந்து அவர் சாகும்வரை உண்ணாவிரதத்தை மேற்கொண்டார். 1932-ஆம் ஆண்டு அம்பேத்காருடன் ஏற்பட்ட* **பூனா உடன்படிக்கைக்குப்** *பின் அவர் தனது உண்ணா விரதத்தினைக் கைவிட்டார். அவ் வுடன்படிக்கையின்படி தாழ்த்தப்பட்ட மக்களுக்கான தனி ஒதுக்கீடு கைவிடப்பட்டது. அதற்குப் பதிலாக சட்ட சபைகளில்*

*ஒடுக்கப்பட்ட, பின்தங்கிய வகுப்பினர்களுக்கு அதிக அளவு எண்ணிக்கையில் இடங்கள் வழங்க ஒப்புக்கொள்ளப்பட்டது. அவ்வாறு ஆங்கிலேயரின் பிரித்தாளும் திட்டம் முறியடிக்கப் பட்டது.*

***1935-ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டம் :*** *இந்திய அரசுச் சட்டம் 1935-ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. அச்சட்டம்* **சைமன் குழுவின் அறிக்கை** *வட்டமேசை மாநாடுகளின் முடிவுகள் அடிப் படையில் இயற்றப்பட்டது. அச்சட்டம் அறிமுகப்படுத்திய மாற்றங்கள் (1) மாகாணங்களில் தன்னாட்சி, (2) மாகாணங்களில் இரட்டை ஆட்சிமுறை நீக்கம், (3) மத்தியில் கூட்டாட்சி அரசு, (4) மத்திய, மாகாண சிக்கல்களைத் தீர்க்க கூட்டாட்சி நீதிமன்றம் நிறுவுதல் மற்றும் (5) கூட்டாட்சி ரிசர்வ் வங்கி* (Federal Reserve Bank) *நிறுவுதல் ஆகியனவாகும்.*

*அச்சட்டம் காங்கிரசின் எதிர்பார்ப்புகளை பூர்த்திச் செய்ய வில்லை. எனவே காங்கிரசு தனது போராட்டத்தைத் தொடர்ந் தது. எனினும் 1937ல் அமல்படுத்தப்பட்ட அச்சட்டத்தின் அடிப்படையில் நடந்த தேர்தலில் காங்கிரசு போட்டியிட்டது. காங்கிரசு 8 மாகாணங்களில் மந்திரி சபை அமைத்தது.*

***இரண்டாம் உலகப்போர்:*** *இரண்டாம் உலகப்போர் 1939-ஆம் ஆண்டு ஏற்பட்டது. அப்போரில் பிரிட்டனின் நிலைமை இடர் பாடு மிக்கதானது. ஆங்கில அரசு காங்கிரசு தலைவர்களையோ அல்லது சட்டசபை உறுப்பினர்களையோ கலந்து ஆலோசிக்கா மல் இந்தியாவை அப்போரில் ஈடுபடுத்தியது. இந்தியாவை அப்போரில் ஈடுபடுத்தியதைக் காங்கிரசு தொடக்கத்தில் விரும்ப வில்லை. பின்னர் போரின் முடிவில் இந்தியாவிற்குச் சுதந்திரம் அளிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் அதனைக் காங்கிரசு ஏற்றுக் கொண்டது.*

***ஜின்னாவின் இருநாடுகள் கொள்கை, 1940 : முகமதுஅலி ஜின்னா*** *1940-ஆம் ஆண்டு தனது இரு நாடுகள் கொள்கையை வெளியிட்டார். அவர் முசுலிம்களுக்கு பாகிஸ்தான் என்ற ஒரு தனி நாடு கோரினார்.*

***ஆகஸ்டு நன்கொடை 1940 :*** *இரண்டாம் உலகப்போரில் இந்தியர் களை ஈடுபடுத்தக் காரணமாய் இருந்தவர் ஆங்கில அரசப் பிரதிநிதி* **லின்லித்கோ** *ஆவார். அவர் காங்கிரசைத் திருப்திப் படுத்த சில சலுகைகளை அறிவித்தார். அதன்படி போர் முடிவுற்ற உடன் இந்தியாவிற்கு* **டொமினியன் அந்தஸ்து** (Dominion Status) *வழங்கப்படும் என்று உறுதியளித்தார். மேலும் இந்திய அரசிய லமைப்பினை வரைந்திட ஒரு குழு அமைக்கப்படும் என்றார். அரசுப் பிரதிநிதியின் போர் நிர்வாகக் குழுவில் இந்தியர் ஒருவர் நியமிக்கப்படுவார் என்றும் உறுதி கூறினார். அவ்வறி விப்புகள் 1940-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் வெளியிடப்பட்டன. எனவே அவை* **ஆகஸ்டு நன்கொடை** *என்று அழைக்கப்படுகின்றது. காங்கிரசு அவ்வறிக்கையை முழுவதுமாக நிராகரித்தது.*

***இந்திய தேசிய இராணுவம், 1942 :*** *நேதாஜி (தலைவர் என பொருள் படும்) சுபாஷ் சந்திரபோஸ் புகழ் பெற்ற தேசத் தலைவர் களில் ஒருவர். அவர் காந்திஜி மேற் கொண்ட அமைதிப் போராட்ட முறை களில் திருப்தி யடையவில்லை. அவர் 1927-ஆம் ஆண்டு இந்திய தேசியக் காங்கிரசில் சேர்ந்தார். ஜவஹர்லால் நேருவுடன் இணைந்து பணியாற்றி னார். நேதாஜி இளைஞர்களுக்கும் பொது மக்களுக்கும் தேசிய உணர்வு பெற காரணமாய்த் திகழ்ந்தவர். அவர் ஏராளமான இளைஞர்களை தேசிய இயக்கத்தில் பங்கு பெற வைத்தார். அவர் 1938-ஆம் ஆண்டு இந்திய தேசியக் காங்கிரசின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1939ல் அவர்* **முற்போக்குக் கட்சியை** (Forward Bloc Party) *தொடங்கினார். அவர் பல நாடுகளுக்கும் சுற்றுப் பயணம் மேற்கொண்டு இந்தியா மீது அந்நாடுகளின் அனுதாபத் தைப் பெற்றார். அவர் சிறிதுகாலம் வீட்டுச் சிறையில்* (House arrest) *வைக்கப்பட்டார். அங்கிருந்து அவர் ஆப்கானியர் போல் வேட மிட்டு இந்தியாவிலிருந்து தப்பி ஜெர்மனியை அடைந்தார். ஜெர்மனியின் தலைவர் ஹிட்லரைச் சந்தித்து இந்தியாவிற்கு*



**சுபாஷ் சந்திரபோஸ்**

அவரது உதவியைக் கோரினார். பின் ஜப்பான் சென்று அந்நாட்டு பிரதமரைச் சந்தித்தார்.

பின்னர் 1942ல் பர்மா சென்றார். அச்சமயம் பர்மா ஜப்பானியர் வசமிருந்தது. ஜப்பானியர் ஆங்கிலேயரிடம் பணி புரிந்த பெருமளவிலான இந்தியர்களைக் கைதுசெய்து சிறைக் கைதிகளாக வைத்திருந்தனர். அவர்களின் எண்ணிக்கை 20,000க்கும் மேல் இருக்கும். நேதாஜியால் அவர்களை ஜப்பானியர் விடுவித் தனர். அவர்களைக் கொண்டு சுபாஷ் சந்திர போஸ் இந்திய தேசிய இராணுவத்தினை (Indian National Army) உருவாக்கினார். பின் 1943ல் அவர் சிங்கப்பூர் சென்றார். அங்கு **இந்திய விடுதலைக் கழகத்தின்** (Indian Independence League) தலைமைப் பொறுப்பை **இராஷ் பிகாரி போஸ்** சுபாஷிடம் ஒப்படைத்தார்.

| |
|---|
| இந்தியாவைச் சேர்ந்த இராஷ்பிகாரி போஸ் 1915-ஆம் ஆண்டு முதல் ஜப்பானில் வசித்து வந்தார். அவர் 1942-ஆம் ஆண்டு மார்ச் மாதம் டோக்கியோ நகரில் சுதந்திர மாநாடு ஒன்றை நடத்தினார். |

**ஆசாத் ஹிந்த் ஃபாஜ்** (Azad Hind Fauj) என்று அழைக்கப் பட்ட **இந்திய தேசிய இராணுவத்தின்** தளபதியாக சுபாஷ் பொறுப் பேற்றார். அது முதல் சுபாஷ் சந்திரபோஸ் **நேதாஜி** (தலைவர்) என்று எல்லோராலும் அழைக்கப்பட்டார். இந்திய தேசிய இராணுவத்தில் ஜான்சி ராணி இலட்சுமி பாய் பெயரில் அமைக்கப்பட்ட பெண்கள் அணிப் பிரிவிற்கு இலட்சுமி என்ற தமிழ்நாட்டுப் பெண்மணி தலைவராகச் செயலாற்றினார்.

**ஜெய்ஹிந்த்** என்ற சுபாஷ் சந்திரபோசின் முழக்கம் புகழ் பெற்ற முகமனாக மாறி இந்தியா முழுக்க எதிரொலித்தது. **'டெல்லியை நோக்கிச்செல்'** (Delhi Chalo) எனும் மற்றொரு புகழ் பெற்ற முழக்கமும் போசினுடையதாகும். அவர் ஏற்படுத்திய இராணுவம் இந்தியாவின் வடகிழக்குப் பகுதியான மணிப்பூர் வரை முன்னேறியது. துரதிருஷ்டவசமாக அதிக மழையினாலும், மோசமான சூழ்நிலைகளாலும் அந்த இராணுவம் மிகத் துயர் களைச் சந்தித்தது. எனவே அப்படை பின்வாங்கவேண்டிய நிலை ஏற்பட்டது. அவ்வாறு செல்கையில் அவர்களில் அநேகர் பர்மா

பகுதியில் தம் உயிரை இழந்தனர். உலகப் போரில் 1945-ஆம் ஆண்டு ஜப்பான் சரணடைந்தது. எனவே இந்திய தேசிய இராணுவ வீரர்கள் கைது செய்யப்பட்டனர். அந்நிலையில் நேதாஜி பாங்காக்கிலிருந்து டோக்கியோவிற்கு விரைந்தார். அவ்வாறு செல்லும் வழியில் அவர் விமான விபத்தில் உயிரிழந்ததாக நம்பப்படுகிறது.

இந்தியாவை விடுவிக்க நேதாஜி கண்ட கனவு அவருடைய காலத்தில் நிறைவேறவில்லையெனினும் அவருடைய வீரச் செயல் இந்திய மக்களிடையே ஆழ்ந்த தேசபக்தியை வளர்த்தது. அவரது வாழ்க்கை இந்திய மக்களின் உணர்வுகளைத் தட்டி எழுப்பியது.

***கிரிப்ஸ் தூதுக்குழு, 1942 :*** சர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் சில திட்டங் களுடன் இந்தியா வந்தார். அவர் காங்கிரசின் ஒத்துழைப்பை நாடினார். அவர் தன் திட்டத்தைக் கீழ்க்கண்டவாறு விளக்கினார்.

இந்தியர்கள் ஆங்கிலேயர் மீது கொண்டிருந்த வெறுப்பினை மறந்து போரில் அவர்களுக்கு உதவிகரமாய் இருக்க வேண்டும். போர் முடிந்தவுடன் இந்திய அரசியல் அமைப்பினை வரைவதற் கான புதிய திட்டம் அறிவிக்கப்படும் எனக் கூறினார். ஆனால் இந்தியாவிற்கு சுதந்திரம் வழங்குவதுபற்றி அவர் எத்தகைய கருத் தினையும் குறிப்பிடவில்லை. எனவே மகாத்மா காந்தி அவரது திட்டத்தினை **திவாலாகிக் கொண்டிருந்த வங்கிக்கு பின்தேதி யிட்ட காசோலை** (A post dated cheque on a failing bank) **வழங்கு வது** போல் இருப்பதாகக் கூறி அதை நிராகரித்தார். எனவே கிரிப்ஸ் தூதுக் குழு தோல்வி கண்டது.

**வெள்ளையனே வெளியேறு இயக்கம், *1942* (Quit India Movement)** *:* கிரிப்ஸ் தூதுக்குழுவின் தோல்வி காந்திஜியின் போக்கில் மாற்றங்களைக் கொண்டு வந்தது. அதுவரை அவர் பின்பற்றி வந்த அகிம்சை வழிகள் எத்தகைய பயனையும் அளிக்க வில்லை என்பதை உணர்ந்தார். எனவே அவர் ஆங்கிலேயர் இந்தியாவை விட்டு முழுவதுமாக வெளியேற வேண்டுமெனக் கோரினார். இங்கிலாந்திற்கும் இந்தியாவிற்குமிடையில் எவ்வித

நட்புறவும் ஒத்துழைப்பும் இனி இருக்காது என அவர் வெளிப்படையாக அறிவித்தார்.

**ஹரிஜன்** என்ற பத்திரிகையில் காந்திஜி தொடர்ந்து பல கட்டுரைகளை எழுதினார். அதில் அவர் விளக்கிய கருத்துக்கள், கட்டுரைகள் அடிப்படையில் வரலாற்றுப் புகழ் மிக்க வெள்ளையனே வெளியேறு இயக்கம் தோன்றியது. இந்தியர்கள் இனியும் பொறுத்துக் கொள்ளமுடியாது எனத் தெளிவு படுத்தினார். ''நான் பொறுத்திருப்பதைத் தொடர்ந் தேனானால் என்றென்றைக்கும் பொறுத்திருக்க வேண்டியது தான்'' என்று கூறினார். பொறுமையை இழந்த காந்திஜி, ''அடிமைத்தனத்தால் தனிப்பட்ட முறையில் உளச்சோர்வுற்ற நான் அரசிலா நிலையினைக் (Anarchy) கூட ஏற்கத் தயார்'' என மேலும் கூறினார்.

1942-ஆம் ஆண்டு ஆகஸ்டு 8-ஆம் நாள் காங்கிரசின் செயற் குழு ஒரு தீர்மானத்தை இயற்றியது. அத்தீர்மானம் ஆங்கிலே யரை இந்தியாவை விட்டு வெளியேறுமாறு கோரியது. மும்பையில் நடந்த செயற்குழுக் கூட்டத்தில் காந்திஜியின் மறக்கமுடியாத சொற்பொழிவைத் தொடர்ந்து அத்தீர்மானம் நிறைவேறியது. ''முழுச் சுதந்திரம் தவிர வேறு எதனிலும் நான் திருப்தி அடைய மாட்டேன். நாம் அதற்காக வாழ்வோம் அல்லது வீழ்வோம். இந்தியாவை விடுதலை பெறச் செய்வோம் அல்லது அம்முயற்சியில் செத்து மடிவோம்'' என்றார் காந்திஜி. உண்மையில் அப்பேச்சு மிகப்பெரிய அளவிலான ஆயுதமற்ற புரட்சிக்கு அவர் எழுப்பியக் குரலாக அமைந்தது.

அதற்கு அடுத்த நாளே காந்திஜி, நேருஜி, அபுல்கலாம் ஆசாத் மற்றும் முக்கிய காங்கிரசுத் தலைவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர். சரியான வழிகாட்டுதல் இல்லாமை யால் நாடெங்கும் வன்முறைக் கலவரங்கள் ஏற்பட்டன.

இரண்டாம் உலகப் போர் 1945-ஆம் ஆண்டு முடிவ டைந்தது. இங்கிலாந்தில் தொழிற்கட்சி (Labour Party) ஆட்சிக்கு வந்தது. தொழிற் கட்சியின் தலைவர் **அட்லி** (Attlee) ஆவார். அவர் இந்தியச் சுதந்திரப் போராட்டத்திற்கு ஆதரவு அளித்தவர். அவர் இங்கிலாந்தின் பிரதமரானார். அவர் காங்கிரசின் மீது ஆங்கில அரசு விதித்திருந்த தடை உத்தரவுகளையும்

விலக்கினார். இந்தியாவின் பிரச்சனைகளைத் தீர்க்க ஒரு குழுவை இந்தியாவிற்கு அனுப்பி வைத்தார். அக்குழு இந்தியாவிற்குச் சுதந்திரம் வழங்க பரிந்துரைச் செய்தது.

***அமைச்சரவைத் தூதுக் குழு 1946 :*** (The Cabinet Mission) 1946ஆம் ஆண்டு மார்ச் மாதம் இந்தியாவுக்கான ஆங்கில அமைச்சர் பெதிக் லாரன்ஸ், (The British Indian Minister) வர்த்தகக் குழுவின் தலைவரான **ஏ.வி. அலெக்சாண்டர்** மற்றும் **சர். ஸ்டாபோர்டு கிரிப்ஸ்** ஆகிய மூவர் கொண்ட குழு இந்தியாவிற்கு வந்தது. அவர்கள் மூவருமே பிரிட்டிஷ் அமைச்சரவையில் உறுப்பினர்க ளாய் இருந்தனர். எனவே அக்குழு **காபினெட்** அல்லது **அமைச்சரவைக் குழு** என்று அழைக்கப்பட்டது. அக்குழு இந்துக்கள், முசுலிம்கள் பெருவாரியாக அமைந்த மாகாணங் களை உருவாக்க பரிந்துரைச் செய்தது. மேலும் கூட்டாட்சி அரசு முறையையும் அக்குழு பரிந்துரைத்தது. இந்தியர்களின் பிரச்சனை களைத் தீர்க்க இடைக்கால அரசு ஒன்றை அமைத்திட ஆங்கிலேயர் முடிவு செய்தனர்.

***இடைக்கால அரசு, 1946 :*** நேருவைப் பிரதமராகக் கொண்ட ஒரு இடைக்கால அரசு 1946ல் நிறுவப்பட்டது. அந்த இடைக்கால அரசை அமைக்க நேரு ஜின்னாவின் உதவியைக் கோரினார். ஆனால் ஜின்னா நேருவுடன் ஒத்துழைக்க மறுத்துவிட்டார். ஜின்னா தனது பாகிஸ்தான் கோரிக்கையில் பிடிவாதமாக இருந்தார். எனவே இந்தியப் பிரிவினை தவிர்க்க முடியாத தாயிற்று.

***மவுண்ட் பேட்டன் திட்டம் 1947 :*** 1947-ஆம் ஆண்டு மவுண்ட் பேட்டன் பிரபு இந்தியாவின் தலைமை ஆளுநராகப் பதவி ஏற்றார். அவர்தான் ஆங்கில அரசின் கடைசித் தலைமை ஆளுநர் ஆவார். முசுலிம் லீக்கினால் உருவாக்கப்பட்ட அரசியல் மற்றும் அரசியலமைப்பு முட்டுக்கட்டைக்கு அவர் ஒரு தீர்வு வழங்கினார். அதன்படி இந்தியா, **இந்திய யூனியன்** என்றும் **பாகிஸ்தான் யூனியன்** என்றும் இரு சுதந்திர நாடுகளாகப் பிரிக்கப்பட வேண்டியதாயிற்று. இந்தியாவிலிருந்த சுதேச அரசுகள் இவ்விருநாடுகளில் ஏதாவது ஒன்றுடன் சேர்ந்து



மவுண்ட் பேட்டன் பிரபு

கொள்ளவோ அல்லது சுதந்திரத்துடன் இருக்கவோ விருப்ப உரிமைப் பெற்றன. காங்கிரசும் முசுலிம்லீகும் அத்திட்டத்தினை ஏற்றுக் கொண்டன. அத்திட்டத்தின் அடிப்படையில் இங்கிலாந்து அரசு 1947-ஆம் ஆண்டு ஜூலை மாதம் இந்திய விடுதலைச் சட்டத்தினை இயற்றியது. இந்தியப் பிரிவினை 1947-ஆம் ஆண்டு நடைமுறைபடுத்தப் பட்டது. ஆங்கில அரசிடமிருந்து அதிகாரங்கள் இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு மாற்றப்பட்டன. புதிதாக உருவாக்கப் பட்ட பாகிஸ்தான் மேற்கு பஞ்சாப், சிந்து, வடமேற்கு எல்லைப் புற மாகாணம் மற்றும் கிழக்கு வங்காளம் ஆகியவற்றைக் கொண்டதாக அமைந்தது. அம்மாகாணங்களில் முசுலிம் மக்கள் தொகை பெரும்பான்மையாக இருந்தது.



சி. இராசகோபாலாச்சாரியார்

இந்தியா 1947-ஆம் ஆண்டு ஆகஸ்டு 15-ஆம் நாள் விடுதலை பெற்றது. டெல்லியில் உள்ள வரலாற்றுப் புகழ் மிக்க செங்கோட்டையில், பிரிட்டனின் யூனியன் ஜாக் (Union Jack) கொடி பறந்த இடத்தில், இந்தியாவின் மூவர்ணக் கொடி ஏற்றப்பட்டது. **மவுண்ட் பேட்டன் பிரபு** சுதந்திர இந்தியாவின் **முதல் தலைமை ஆளுநராகவும்** (Governor-General) **பண்டிதர் ஜவஹர்லால் நேரு முதல் பிரதம மந்திரியாகவும்** பொறுப் பேற்றனர். பின்னர் **சி. இராச கோபாலாச்சாரியார்** சுதந்திர இந்தியாவின் **முதல் இந்தியத் தலைமை ஆளுநராகப்** பதவி வகித்தார். இந்தியா 1950-ஆம் ஆண்டு ஜனவரி 26-ஆம் நாள் குடியரசானவுடன் **டாக்டர் இராசேந்திரபிரசாத்** நமதுநாட்டின் **முதல் குடியரசுத் தலைவரானார்.**



சர்தார் வல்லபாய் படேல்

***சுதேச அரசுகளின் இணைப்பு :*** இந்தியா சுதந்திரம் அடைந்த போது நாட்டில் ஏறத்தாழ 565 சுதேச அரசுகள் இருந்தன. அவைகளை நவாபுகள், மன்னர்கள் மற்றும் நிசாம் போன்றவர்கள் ஆட்சி செய்து வந்தனர். அந்த அரசுகளை இந்தியாவுடன் இணைக்கும் பொறுப் பினைச் **சர்தார் வல்லபாய் படேல்** மேற்கொண்டார். அதற்கென ***இந்திய அரசுகள் துறை*** (The Indian States Department) உருவாக்கப்பட்டது. படேல் அத் துறைக்கு அமைச்சராகப் பொறுப் பேற்றார். தொடக்கத்தில் சுதேச அரசர்களில் பலர் தனித்துச் செயல்படவே விரும்பினார். படேல் அவர்களை இந்திய யூனியனுடன் சேரும்படி அழைப்பு விடுத்தார். பலர் அவ்வழைப்பை உடனடியாக ஏற்றனர்.

ஏறத்தாழ 562 சுதேச அரசுகள் இந்திய யூனியனுடன் இணைந்தன. அவ்வாறு இந்திய ஒருமைப்பாட்டிற்கும், பாதுகாப்பிற்கும் நேர இருந்த ஆபத்து நீக்கப்பட்டது. ஆனால், காஷ்மீரம், ஐதராபாத் மற்றும் ஜீனாகத் ஆகியவை இந்தியாவுடன் இணையத் தயங்கின. படேல் தனது அரசியல் திறமையினாலும் கடுமையான நடவடிக்கைகளாலும் அந்த நாடுகளை இந்திய யூனியனுடன் இணைத்து **இந்தியாவின் இரும்பு மனிதர்** என்ற புகழைப் பெற்றார்.

***காஷ்மீரம் :*** காஷ்மீரை ஆட்சி செய்த **மகாராஜா ஹரிசிங்** ஒரு இந்து ஆவார். அங்கு வாழ்ந்த மக்களில் பெரும்பான்மை யானவர்கள் முசுலிம்களாவர். காஷ்மீரின் அரசர் காஷ்மீரத்தை இந்தியாவுடனோ அல்லது பாகிஸ்தானுடனோ இணைக்க விரும்பவில்லை. அதற்கிடையில் பாகிஸ்தான் மலைவாழ் மக்களை காஷ்மீர் மீது படையெடுக்க ஊக்குவித்து அவர்களுக்கு மறைமுக உதவிகளைச் செய்தது.

அப்படைகள் காஷ்மீரத்தின் தலைநகரான ஸ்ரீநகரை நெருங்கின. வேறுவழி இன்றி 1948-ஆம் ஆண்டு மகாராஜா

ஹரிசிங் காஷ்மீரத்தை இந்தியாவுடன் இணைத்தார். ஆனால் அதற்குள் பாகிஸ்தான் படைகள் காஷ்மீரத்துக்குள் ஊடுருவி சில பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டன. இந்தியா பாகிஸ்தான் இடையே 1948-ஆம் ஆண்டு ஒரு சிறு போர் ஏற்பட்டதனால் காஷ்மீரம் இந்தியாவுடன் இணைந்திருக்க விரும்பியது.

***ஐதராபாத் :*** இந்தியச் சுதேச அரசுகளில் மிகப்பெரியது ஐதராபாத். அங்கு வாழ்ந்த மக்களில் பெரும்பான்மையோர் இந்துக்கள். நிசாம் அரசர் ஒரு முசுலிம். நிசாமின் பிரதம அமைச்சரான **காசிம் இராஸ்வி** என்பவர் தலைமையில் அதிகாரமிக்க ஒரு சிறு முசுலிம் பிரிவு **இராசக்கர் இயக்கத்தினைத்** தொடங்கியது. அவ்வியக்கம் இந்துக்களுக்கு எதிராக பெரும் கொடுமைகளை இழைத்தது. அவர்களின் உயிருக்கும் உடமைகளுக்கும் பெரும் தீங்கு ஏற்பட்டது. மவுண்ட் பேட்டன் பிரபுவும் படேலும் சேர்ந்து விடுத்த இணைப்பு வேண்டுகோளினை ஏற்க நிசாம் மறுத்து விட்டார். அதுமட்டுமில்லாமல் அவர் பாகிஸ்தானுடன் சேருவதற்கான உடன்படிக்கையிலும் ஈடுபட்டார். எனவே அப்பகுதி மக்கள் அவருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தனர். நாட்டில் சட்டம் மற்றும் ஒழுங்கு சீர் கெட்டது. எனவே இந்திய அரசு தலையிட வேண்டிய கட்டாயத்திற்குள்ளானது. படேல் இராணுவ நடவடிக்கையைத் தொடங்கினார். மூன்றே நாட்களில் ஐதராபாத் முழுவதும் கைப்பற்றப்பட்டதால் நிசாம் சரணடைந்தார். 1948ல் ஐதராபாத் இந்திய யூனியனுடன் இணைந்தது.

***ஜுனாகத் இணைப்பு, 1949 :*** ஜுனாகத் கத்தியவாரிலிருந்த ஒரு மிகச் சிறிய அரசு. அதன் மக்கள் இந்துக்கள். ஆனால் மன்னர் ஒரு முசுலிம். மக்களின் விருப்பத்தை மதிக்காமல் ஜுனாகத்தின் மன்னர் பாகிஸ்தானுடன் தன் நாட்டை இணைத்தார். அதனால் மக்கள் உள்நாட்டுக் கலவரத்தில் ஈடுபட்டனர். அரசரால் அவர்களை அடக்க முடியவில்லை. எனவே அவர் பாகிஸ் தானுக்குத் தப்பி ஓடினார். பின்னர் 1948ல் மக்கள் வாக்கெடுப்பு நடந்தது. அப்பகுதி மக்கள் அனைவரும் இந்திய யூனியனுடன் சேரத் தீர்மானித்தனர். 1949-ஆம் ஆண்டு ஜனவரி 29-ஆம் நாள் ஜுனாகத் இந்தியாவுடன் இணைந்தது.



1947-ஆம் ஆண்டு இந்தியாவும்
பாகிஸ்தானும்
ஆப்கானிஸ்தான்
ஜம்மு
காஷ்மீர்
ஸ்ரீநகர்
சீனா
திபெத்
குவெட்டா
பஞ்சாப்
லாகூர்
ஐக்கிய
மாகாணங்கள்
பஞ்சாப்
மாநிலங்கள்
டெல்லி
பலுசிஸ்தான்
பீகானர்
ஜெய்பூர்
ஐக்கிய
மாகாணங்கள்
நேபாளம்
பூடான்
கலாத்
இராஜபுத்தானா
லக்னா
அசாம்
குவாலியர்
அலகாபாத்
பாட்னா
சிந்து
மேற்கு இந்திய
மாகாணங்கள்
பீகார்
வங்காளம்
மைய மாநிலங்கள்
கிழக்கு
மாநிலங்கள்
இந்தோர்
ஜபூல் பூர்
சந்திர நாகூர்(பி)
பரோடா
ஐக்கிய
மாகாணங்கள்
கொல்கத்தா
டையூ(போ)
பேரார்
நாகபூர்
டாமன்(போ)
மும்பை
ஒரிசா
கட்டாக்
பஸ்தார்
அரபிக் கடல்
தக்காண
மாநிலங்கள்
ஐதராபாத்
வங்கக் கடல்
ஏனாம்
கோவா(போ)
மைசூர்
மங்களூர்
பெங்களூர்
சென்னை
மஹி(பி)
புதுச்சேரி
காரைக்கால்
கோழிக்கூடு
திருச்சிராப்பள்ளி
கொச்சின்
திருவனந்தபுரம்
இலங்கை
இந்துமாக் கடல்
வ
மே
கி
தெ

***பிரெஞ்சுப் பகுதிகள் இணைக்கப்படல், 1954 :*** பிரெஞ்சு அரசின் அனுமதியுடன் **பாண்டிச்சேரி, காரைக்கால், மாஹி, ஏனாம், சந்திரநாகூர்** ஆகிய பகுதிகள் 1954-ஆம் ஆண்டு இந்தியாவுடன் இணைக்கப்பட்டு இந்திய யூனியன் பகுதிகளாயின.

**போர்ச்சுக்கீசிய பகுதிகள் இணைப்பு, 1961 : கோவா, டையூ, டாமன்** ஆகியவை இந்தியாவில் போர்ச்சுக்கீசிய குடியேற்றங்களாய் இருந்தன. பிரெஞ்சு அரசினைப் போல் போர்ச்சுக்கீசிய அரசு தங்கள் குடியேற்றங்களை இந்தியா இணைத்துக் கொள்ளவதை அனுமதிக்கவில்லை. ஆனால் இப்பகுதிகளில் வாழ்ந்த மக்கள் இந்தியாவுடன் இணைய விரும்பினர். எனவே 1961ல் இந்தியா இப்பிரதேசங்களின் மீது இராணுவ நடவடிக்கை எடுக்க நேரிட்டது. 1961-ஆம் ஆண்டிற்குப் பிறகு இறுதியாக அவைகள் இந்திய யூனியனின் பகுதிகளாயின.

**கற்றல் அடைவுகள்**

1. மாணவர் இந்திய விடுதலைப் போராட்டத்திற்கு காந்திஜி ஆற்றிய தொண்டுகள் பற்றி விவரிக்க முடியும்.
2. மாணவர் ஜாலியன் வாலாபாக் படுகொலை பற்றி விளக்கவும், நம் தேசபக்தர்கள் எவ்வாறு விடுதலைக்குப் போராடினர் என உணரவும் முடியும்.
3. மாணவர் கிலாபத் இயக்கம், ஒத்துழையாமை இயக்கம் ஆகியவற்றைப் பற்றி விவரிக்க முடியும்.
4. மாணவர் சௌரி சௌரா நிகழ்ச்சியையும், சுயராஜ்ஜியக் கட்சியின் தோற்றத்தையும் விவரிக்க முடியும்.
5. மாணவர் வரலாற்றுப் புகழ்வாய்ந்த தண்டிப் பயணத்தைப் பற்றி விவரிக்க முடியும்.
6. மாணவர் வட்டமேசை மாநாடுகளையும், அவற்றின் முடிவுகளையும் விளக்க முடியும்.
7. மாணவர் பூனா உடன்படிக்கை, 1935-ஆம் ஆண்டு இந்திய அரசு சட்டம் ஆகியவற்றின் முக்கிய அம்சங்களை விவரிக்க முடியும்.

8. மாணவர் லாகூர் மாநாடு, ஆகஸ்டு நன்கொடை இந்திய விடுதலைப் போரில் நேதாஜியின் பங்கு ஆகியன பற்றி விவரிக்க முடியும்.

9. மாணவர் அமைச்சரவைத் தூதுக்குழு, மவுண்ட்பேட்டன் திட்டம் பற்றி குறிப்பிட முடியும்.

10. மாணவர் சுதேச அரசுகளின் இணைப்பிற்கு பட்டேல் ஆற்றிய பணிகள் பற்றி விவரிக்க முடியும்.

11. மாணவர் விடுதலைப் போர் வீரர்களின் தொண்டுகளையும் தியாகங்களையும் நினைவுகூர முடியும்.

## சுய மதிப்பீடு

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்**

1. ரௌலட் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு

அ. 1919 ஆ. 1917

இ. 1918 ஈ. 1921

2. ஜாலியன் வாலாபாக் படுகொலையுடன் தொடர்புடைய ஆங்கிலத் தளபதி

அ. மேஜர் ஸ்லிமென் ஆ. ஜெனரல் டயர்

இ. சர் ஆர்தர் வெல்லஸ்லி ஈ. கர்னல் மான்சன்

3. ஜாலியன் வாலாபாக் படுகொலைக்குப் பின் இரவீந்திரநாத் தாகூர் துறந்த பட்டம்

அ. தலைவர் ஆ. நைட்வுட்

இ. பிரபு ஈ. அரசர்

4. துருக்கிக்கு எதிராக பிரிட்டிஷ் அரசு செய்த நியாயமற்ற செயலைக் கண்டித்து அலி சகோதரர்கள் ஆரம்பித்த இயக்கம்

அ. முசுலீம் லீக் ஆ. சுய ராஜ்ஜியக் கட்சி

இ. கிலாபத் இயக்கம் ஈ. ஒத்துழையாமை இயக்கம்

5. சுயராஜ்ஜியக் கட்சி தோன்றிய இடம்

அ. அலிப்பூர் சிறை ஆ. டெல்லி

இ. சௌரி சௌரா ஈ. அலகாபாத்

6. 1929-ஆம் ஆண்டு நடந்த லாகூர் காங்கிரசு மாநாட்டிற்குத் தலைமை வகித்தவர்

அ. காந்திஜி ஆ. நேருஜி

இ. நேதாஜி ஈ. இராஜாஜி

7. தென் இந்தியாவில் உப்புச் சத்தியாக்கிரகத்தை முன்னின்று நடத்தியவர்

அ. காந்திஜி ஆ. இராசகோபாலாச்சாரியார்

இ. காமராசர் ஈ. கான் அப்துல் காபர்கான்

8. இரண்டாம் உலகப் போர் தொடங்கிய ஆண்டு

அ. 1937 ஆ. 1939

இ. 1941 ஈ. 1942

9. இந்திய தேசிய இராணுவத்தைத் தோற்றுவித்தவர்

அ. சி.ஆர். தாஸ் ஆ. நேதாஜி

இ. காந்திஜி ஈ. இராஜாஜி

10. முசுலிம்களுக்குத் தனி நாடு வேண்டுமென்று கேட்டவர்

அ. நவாப் சலிமுல்லா ஆ. நேதாஜி

இ. ஜின்னா ஈ. அலி சகோதரர்கள்

11. இடைக்கால அரசில் பிரதமர் பதவி வகித்தவர்

அ. நேருஜி ஆ. இராஜாஜி

இ. பட்டேல் ஈ. காந்திஜி

12. சுதந்திர இந்தியாவின் முதல் இந்தியத் தலைமை ஆளுநர்

அ. காந்திஜி ஆ. நேருஜி

இ. ஜின்னா ஈ. இராஜாஜி

13. இந்தியா குடியரசு ஆன நாள்

அ. 26 ஜனவரி 1935 ஆ. 15 ஆகஸ்டு 1947

இ. 26 ஜனவரி 1950 ஈ. 26 ஆகஸ்டு 1950

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக

1. 1919-ஆம் ஆண்டு கைதுசெய்யப்பட்ட இரு புகழ்பெற்ற பஞ்சாப் தலைவர்கள் ________ மற்றும்________ஆவர்.
2. ஜாலியன் வாலாபாக் படுகொலைக்குப் பின் காந்திஜி தென் ஆப்பிரிக்க அரசு அவருக்குக் கொடுத்த________ பதக்கத்தை திருப்பிக் கொடுத்தார்.
3. இந்தியாவில் அலி சகோதாரர்களான ________யும் ________யும் கிலாபத் இயக்கத்தை ஆரம்பித்தனர்.
4. ________ன் மறைவிற்குப் பின் சுயராஜ்ஜியக் கட்சி கலைக்கப்பட்டது.
5. ________ என்பவர் எல்லைக்காந்தி என்று அழைக்கப்படுகிறார்.
6. 1940-ஆம் ஆண்டு லாகூர் கூட்டத்தில் ________ என்பவர் இருநாடுகள் கொள்கையை வெளியிட்டார்.
7. இந்தியர்கள் இரண்டாம் உலகப்போரில் ஈடுபடக் காரணமாக இருந்த ஆங்கிலத் தலைமை ஆளுநர் ________ ஆவார்.
8. இந்திய தேசிய இராணுவத்தில் பெண்கள் அணிப்பிரிவு ________ என்பவர் தலைமையில் இயங்கியது.
9. இரண்டாம் உலகப்போர் ________-ஆம் ஆண்டு முடிவு அடைந்தது.
10. இடைக்கால அரசு அமைக்க நேருஜி முசுலிம் லீகின் தலைவரான ________ என்பவரின் உதவியைக் கோரினார்.
11. சுதந்திர இந்தியாவின் முதல் இந்தியத் தலைமை ஆளுநர் ________ என்பவர் ஆவார்.
12. நமது இந்தியக் குடியரசின் முதல் குடியரசுத் தலைவர் ________ ஆவார்.
13. ஜுனாகத்தின் மன்னர் ஒரு ________ ஆவார்.
14. ________ அரசரான ஹரிசிங் எந்த நாட்டுடனும் சேராமல் தனித்திருக்க விரும்பினார்.

15. இந்தியாவிலிருந்து பிரெஞ்சுக் குடியேற்றங்கள் ________ ஆம் ஆண்டு இந்திய யூனியனுடன் இணைந்தன.

16. 1961-ல் போர்ச்சுக்கீசிய குடியேற்றப் பகுதிகளான ________, ________ மற்றும் ________ ஆகியவை இந்தியாவுடன் இணைக்கப்பட்டன.

17. சர்தார் படேல் இந்தியாவின் ________ என்று புகழப்படுகிறார்.

**III. பின்வருவனவற்றைப் பொருத்துக**

**அ**

1. ரௌலட் சட்டம் -- காந்திஜி
2. தண்டிப் பயணம் -- நேதாஜி
3. ஜெய்ஹிந்த் -- இராணுவத் தளபதி
4. ஜெனரல் டயர் -- 1927
5. சைமன் குழு -- 1919

**ஆ**

1. மோதிலால் நேரு -- உத்திரப்பிரதேசம்
2. சௌரி சௌரா -- சுயராஜ்ஜியக்கட்சி
3. பஞ்சாபின் சிங்கம் -- கான் அப்துல் காபர்கான்
4. எல்லை காந்தி -- இராம்சே மெக்டொனால்டு
5. வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் -- இலாலா லஜபதிராய்

**IV. சுருக்கமாக விடையளிக்கவும்**

1. காங்கிரசுக்கட்சி ஏன் ரௌலட் சட்டத்தை எதிர்த்தது?
2. ஜாலியன் வாலாபாக் படுகொலை பற்றி சிறு குறிப்புத் தருக.
3. கிலாபத் இயக்கம் ஏன் தொடங்கப்பட்டது?
4. சுயராஜ்ஜியக்கட்சி ஏன் ஆரம்பிக்கப்பட்டது?

5. ராஷ் பிகாரி போஸ் என்பவர் யார்?

6. கிரிப்சின் திட்டத்தினை காந்திஜி ஏன் நிராகரித்தார்?

7. அமைச்சரவைத் தூதுக் குழுவின் உறுப்பினர்கள் யார்?

8. மவுண்ட் பேட்டன் திட்டம் பற்றி விளக்குக.

**V. விரிவான விடை தருக**

1. ஒத்துழையாமை இயக்கத்தின் மூன்று நிலைகளை விளக்கவும்.
2. தண்டிப் பயணத்தைப் பற்றியும் அதன் விளைவுகளையும் விவரிக்க.
3. வட்டமேசை மாநாடுகளின் முக்கியத்துவத்தினை வெளிக் கொணர்க.
4. 1935-ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டம் கொண்டுவந்த மாற்றங்கள் யாவை?
5. வெள்ளையனே வெளியேறு இயக்கம் பற்றியும் அதன் விளைவுகளையும் விளக்குக.
6. சுதந்திரப் போராட்டத்தில் சுபாஷ் சந்திரபோஸ், இந்தியதேசிய இராணுவத்தின் பங்கினைப் பற்றி எழுதுக.
7. படேல் ஏன் இந்தியாவின் இரும்பு மனிதர் என்று அழைக்கப்படுகிறார்?
8. பின்வரும் நிகழ்ச்சிகளுக்கு காலக்கோடு ஒன்று வரைக.

   அ. ஒத்துழையாமை இயக்கம்

   ஆ. சௌரி சௌரா நிகழ்ச்சி

   இ. சுயராஜ்ஜியக் கட்சி

   ஈ. உப்புச் சத்தியாக்கிரகம்

   உ. வட்ட மேசை மாநாடுகள்

9. 1930 முதல் 1945 வரையிலான ஐந்து முக்கிய நிகழ்ச்சிகளைக் காலக்கோட்டில் குறிப்பிடுக.

**VI. செய்முறைப் பயிற்சிகள்**

*1.* இந்திய வரைபடத்தில் கீழ்க்கண்ட இடங்களைக் குறிக்கவும் :

ஐதராபாத், ஜுனாகத், காஷ்மீரம், கோவா, டையூ, டாமன், பாண்டிச்சேரி, ஏனாம், மாஹி

*2.* விடுதலைப் போராட்ட வீரர்களின் படங்களைச் சேகரித்து படஏடு (Album) ஒன்று தயாரிக்கவும்.

**அலகு - IV**

## பாடம் - 7

# சுதந்திரத்திற்குப் பின் இந்தியா (1947 - 2000) - சமூக முன்னேற்றம்

**கற்றல் நோக்கங்கள்**

1. மாணவர் சுதந்திரத்திற்குப் பின் இந்தியா எதிர்கொண்ட சமூக சவால்களைத் தெரிந்து கொள்ளுதல்.
2. மாணவர் இந்தியாவில் சமூக முன்னேற்றத்திற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளைக் கற்றல்.
3. மாணவர் தீண்டாமை ஒழிப்பிற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளைப் புரிந்து கொள்ளுதல்.
4. மாணவர் 1947 முதல் இந்தியாவில் ஏற்பட்ட சமூக முன்னேற்றம் பற்றிய அறிவினைப் பெறல்.
5. மாணவர் சமூக மற்றும் கல்வி வளர்ச்சியினால் ஏற்பட்ட தாக்கங்களைக் கற்றல்.

சுதந்திரம் பெற்ற பின் இந்தியா பல சவால்களைச் சந்திக்க நேர்ந்தது. சமூக ஏற்றத்தாழ்வுகள், பெண்கள், சிறுவர்கள் மற்றும் ஒடுக்கப்பட்ட பிரிவினர் பிரச்சனைகளுக்கு இந்தியா தீர்வு காண வேண்டியிருந்தது. மேலும் எழுத்தறிவின்மை இந்தியாவின் மிக மோசமான பலவீனமாக விளங்கியது. அவை இந்தியாவின் சமூக முன்னேற்றத்திற்குத் தடைகளை உருவாக்கின. எனவே சமூக முன்னேற்றத்தின் தேவை ஆழ்ந்து உணரப்பட்டது. இந்தியாவில் சமூக முன்னேற்றத்தினைக் கொண்டுவர பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அவை சமூகச் சீர்திருத்த இயக்கங்கள், சமூகநலச் சட்டங்கள் மற்றும் கல்வி வளர்ச்சியின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டன.

**பூமிதான இயக்கம் :** இவ்வியக்கத்தினை 1951-ஆம் ஆண்டு ஏப்ரல் 18-ஆம் நாள் **ஆசார்ய வினோபாபாவே** துவக்கினார். அதன் நோக்கம் நியாயமான மற்றும் சமத்துவ சமுதாய அமைப்பினை உருவாக்குவதாகும். இவ்வியக்கம் அதிக அளவில் நிலங்களை வைத்திருந்த நிலச்சுவான்தார்களிடமிருந்து உபரி நிலங்களைப் பெற்று அவற்றை நிலமற்ற ஏழை விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தது. நிலமுடையோர் தாமாக முன்வந்து நிலங்களைத் தானமாக வழங்குவதை இவ் வியக்கம் ஊக்குவித்தது. இவ்வியக்கம் ஏற்படுத்திய விழிப் புணர்வினால் மத்திய, மாநில அரசுகள் சட்டங்களை இயற்றி நில உச்ச வரம்பினைக் கொண்டு வந்தன. நிலமற்ற ஏழைகளின் பரிதாப நிலையினை இவ்வியக்கம் வெளிச்சப்படுத்திக் காட்டியது.

**சர்வோதய இயக்கம் :** இவ்வியக்கமும் வினோபாபாவே அவர்க ளால் துவக்கப்பட்டது. இவ்வியக்கம் நமது தேசத் தலைவர்களின் ஆசியினைப் பெற்றிருந்தது. இவ்வியக்கம் அனைத்து மக்களின் உயர்வினையும், நலனையும் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருந்தது. குடிசைத் தொழில்கள் மேம்பாடு, கதர் உற்பத்தி ஆகியன இவ்வியக்கத்தின் முதன்மைப் பணியாகும். இந்தியா வில் அகிம்சை, அமைதி வழியில் ஒரு சமூக, பொருளாதாரப் புரட்சியினைக் கொண்டு வருவதை இவ்வியக்கம் நோக்கமாகக் கொண்டிருந்தது.

**பெண்கள் முன்னேற்றம் :** சுதந்திரத்திற்கு முன்னர் இந்தியாவில் பெண்களின் நிலை வருந்தத்தக்க வகையில் இருந்தது. 1947 முதல் பெண்களின் நிலையினை மேம்படுத்த பல சமூகச் சட்டங்கள் இயற்றப்பட்டன. நமது அரசியலமைப்புச் சட்டம் ஆண், பெண் சமத்துவத்தினை வலியுறுத்துகின்றது. பெண்கள் முன்னேற்றத் திற்காக நிறைவேற்றப்பட்ட சட்டங்கள் மற்றும் இதர நடவடிக்கைகள் பின்வருமாறு :

**1954-ஆம் ஆண்டு திருமணச் சட்டம் :** இச்சட்டம் கலப்புத் திருமணங்களையும், சமய கலப்புத் திருமணங்களையும் சட்டப் படி செல்லுபடியாக்கியது. மேலும் ஆண்கள் திருமண வயதினை 21 ஆகவும் பெண்கள் திருமண வயதினை 18 எனவும் சட்ட

பூர்வமாக்கியது. இச்சட்டம் குழந்தை அல்லது பால்ய விவாகத்தை தண்டனைக்குரிய குற்றம் என அறிவித்தது.

***1955 - 56-ஆம் ஆண்டு இந்துச் சட்ட மசோதா :*** இந்தியாவில் பெண்கள் முன்னேற்ற வரலாற்றில் இச்சட்டம் ஒரு மகா சாசனமாகக் கருதப்படுகிறது. திருமணம், மணமுறிவு (Divorce) அல்லது விவாகரத்து, வாரிசுரிமை, காப்பாளர் உரிமை, தத்து எடுத்தல் பற்றிய விவரங்களை இச்சட்டம் விளக்குகின்றது.

***1955-ஆம் ஆண்டு இந்துச் திருமணச் சட்டம் :*** இச்சட்டம் ஒருவனுக்கு ஒருத்தி என்னும் ஒரு தார மணத்தை (Monogamy) சட்டப் பூர்வமாக்கியது. இந்துக்கள் பலதார (Polygamy) மணம் புரிந்து கொள்வதை இச்சட்டம் தடுக்கின்றது. இச்சட்டம் ஆண்கள், பெண்கள் இருபாலர்களுக்கும் மணமுறிவு அல்லது விவாகரத்தில் சம உரிமையினை வழங்குகின்றது.

***1956-ஆம் ஆண்டு இந்து வாரிசுரிமைச் சட்டம் :*** இச்சட்டம் தாய், தந்தையரின் சொத்தில் மகனுக்கும், மகனின் குழந்தைகளுக்கும் உள்ளது போல மகளுக்கும் மகளின் குழந்தைகளுக்கும் சம உரிமை அல்லது பங்குபெற வழி வகுக்கின்றது.

***1956-ஆம் ஆண்டின் இந்து இளவர் மற்றும் காப்புரிமைச் சட்டம் :*** இச்சட்டம் தாய்க்குக் குழந்தைகள் மீதான இயற்கைக் காப்பாளர் என்ற உரிமையைப் பாதுகாக்கின்றது. மேலும் இச்சட்டம் ஆண்களைப் போல் பெண்களும் மகன் அல்லது மகளைத் தத்து எடுக்கும் உரிமையையும் வழங்குகின்றது.

***1961-ஆம் ஆண்டு வரதட்சணை தடுப்புச் சட்டம் (1984ல் திருத்தப் பட்டது) :*** இச்சட்டம் வரதட்சணை என்னும் சுரண்டலிலிருந்து பெண்களைப் பாதுகாக்கின்றது. வரதட்சணை பெறுதல் இச்சட்டத்தின்படி கடுமையான தண்டனைக்குரிய குற்றமாகும்.

***1961-ஆம் ஆண்டு மகப்பேறு சலுகைகள் சட்டம் :*** இச்சட்டம் பணியாற்றும் பெண்கள் மகப்பேறு விடுப்பு பெறும் உரிமையை வழங்கியுள்ளது.

***1971-ஆம் ஆண்டு மருத்துவரீதியான கரு கலைப்புச் சட்டம் :*** *கருவுற்றிருக்கும் பெண்களின் உடல் மற்றும் மன ஆரோக்கியத்திற்கு ஊறு விளைவிக்கும் கருவை கலைக்கும் உரிமையை இச்சட்டம் பெண்களுக்கு அளிக்கின்றது.*

***1976-ஆம் ஆண்டு சம ஊதியச் சட்டம் :*** *இச்சட்டம் ஆண்களுக்கு நிகராக பெண்களுக்கும் ஊதியம் வழங்குவதற்கு வழிவகுக்கின்றது. பணி விவகாரங்களில் பால் அடிப்படையிலான வேறுபாட்டினை இச்சட்டம் தடுக்கின்றது.*

***மற்ற சமூக, பொருளாதாரத் திட்டங்கள் :*** *இந்திய அரசு 1953-ஆம் ஆண்டு* ***மத்திய சமூக நல வாரியத்தினை*** *அமைத்தது. அதே போல் ஒவ்வொரு மாநிலத்திலும் மாநிலச் சமூக நல வாரியங்கள் உள்ளன. அவை பெண்கள், குழந்தைகள் மற்றும் எளியோரின் நலன்களை மேம்படுத்துகின்றன. ஊனமுற்ற பெண்கள், விதவைகள், அனாதைகள், கைவிடப்பட்ட பெண்கள் ஆகியோரின் நலன்களை இவ்வாரியங்கள் பாதுகாக்கின்றன.*

***1990-ஆம் ஆண்டு தேசிய பெண்கள் ஆணையச் சட்டம் :*** *இச்சட்டத்தின்படி 1992-ஆம் ஆண்டு ஜனவரி 31-ஆம் நாள் தேசிய பெண்கள் ஆணையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இவ்வாணையத்திற்கு ஒரு தலைவரும், செயலரும், மற்ற உறுப்பினர்களும் உள்ளனர். இவ்வாணையம் பெண் உரிமைகள் மறுப்பு, கொடுமைகள், அநீதிகள் போன்ற புகார்களை விசாரித்து அவைகளைக் களைய நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.*

***இராஷ்டிரிய மகிள கோஷ் அல்லது பெண்களுக்கான தேசிய கடன் வழங்கும் நிதியம் :*** *இந்நிதி நிறுவன அமைப்பு 1993-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 30-ஆம் நாள் ஏற்படுத்தப்பட்டது. தொழில் அல்லது வேலை வாய்ப்பு வசதியினைத் தொடங்க ஏழை மற்றும் தேவை மிக்க பெண்களால் அமைக்கப்படும் சுய உதவிக் குழுக்களுக்கு* (Self-Help Groups) *இந்நிதியத்திலிருந்து நிதி உதவி வழங்கப்படுகிறது.*

***பாலிகா சம்ரிதி யோஜனா* (Balika Samridhi Yojana) :** *இத்திட்டம் 1997-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 2-ஆம் நாள் தொடங்கப்*

பட்டது. 1999-ல் மாற்றம் செய்யப்பட்ட இத்திட்டம் வறுமைக் கோட்டிற்குக் கீழ் (below poverty line) வாழும் தாய்மார்களுக்குப் பிறக்கும் பெண் குழந்தைகளுக்குப் பயனளிக்கக் கூடியது. அத்தகைய பெண் குழந்தைகள் ஒவ்வொருவரும் அஞ்சலகம் அல்லது வங்கியில் ரூபாய் 500/- வைப்புத் தொகையாக செலுத்தப்படுகிறது. அக்குழந்தைகள் 18 வயதினை நிறைவு செய்யும் பொழுது அத்தொகையை கல்வி அல்லது திருமண நோக்கத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம். இதுமட்டுமின்றி அவர்கள் பத்தாம் வகுப்புவரை கல்வி கற்க உதவித் தொகையும் வழங்கப்படுகிறது.

**சுவ - சக்தி திட்டம் (Swa & Shakti Project) :** இத்திட்டம் 1998-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 16-ஆம் நாள் முதல் செயல்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் மூலம் 15 முதல் 20 பெண்களைக் கொண்ட சுய உதவிக் குழுக்களால் தொடங்கப்படும் ஆக்கபூர்வ பணிக்கு அரசு நிதி உதவி அளித்து வருகின்றது.

இந்தியாவில் பெண்கள் முன்னேற்றத்தினை நோக்கமாகக் கொண்டு அரசு மற்றும் அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் (Non-Governmental Organisations) மேலும் பல நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. ஐக்கிய நாடுகள் சபை (ஐ.நா. சபை) 1978-ஆம் ஆண்டினை **சர்வதேச பெண்கள் ஆண்டு** என அறிவித்தது. தமிழ் நாட்டில் பெண்களுக்கு 30 விழுக்காடு வேலைவாய்ப்பில் இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. உள்ளாட்சி அமைப்புகளில் பெண்கள் 33 விழுக்காடு இட ஒதுக்கீடு பெறத் தகுதியுடையவர்கள். பெண்கள் தற்போது அலுவலர்களாகவும், மருத்துவர்களாகவும், பொறியாளர்களாகவும், காவலர்களாகவும், சட்டமன்ற உறுப்பினர்களாகவும் (M.L.A.) பாராளுமன்ற உறுப்பினர்களாகவும், (M.P.) உள்ளனர். இந்தியா பெண் பிரதமரையும், ஆளுநர்களையும், முதலமைச்சர்களையும் கண்டு உள்ளது. இவை சுதந்திரத்திற்குப் பின்னர் பெண்கள் நிலையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களையும் சமூக முன்னேற்ற சாதனையையும் எடுத்தியம்புகின்றன.

**சிறார் நலம் :** குழந்தைத் தொழிலாளர் பிரச்சனை இந்தியாவில் ஒரு பெரும் சமூகப் பிரச்சனையாகும். ஏழைச் சிறுவர்கள்

சூழ்நிலைகளின் கட்டாயத்தினால் பணிக்குச் செல்ல வேண்டியுள்ளது. நமது அரசியலமைப்புச் சட்டம் சிறுவர்களைத் தொழில் அமைப்புகளில் வேலைக்கமர்த்துவதைத் தடை செய்கின்றது. ***1948-ஆம் ஆண்டு இந்தியத் தொழிற்சாலைகள் சட்டம்*** 14 வயதிற்குட்பட்ட ஆண் அல்லது பெண்ணினைத் தொழிற்சாலைகளில் வேலைக்கமர்த்துவதைத் தடை செய்கின்றது. ***1951-ஆம் ஆண்டு தோட்டத் தொழிலாளர் சட்டம்*** 12 வயதிற்குக் கீழ் உள்ள சிறுவர்களைக் காப்பி மற்றும் இரப்பர் தோட்டத் தொழிலில் வேலைக்கமர்த்துவதைத் தடுக்கின்றது. ***1952-ஆம் ஆண்டு சுரங்கச் சட்டம்*** 15 வயதிற்குக் கீழ் உள்ளவர்களைச் சுரங்கங்களில் வேலைக்கமர்த்துவதைக் கட்டுப்படுத்துகின்றது. ***1960-ஆம் ஆண்டு சிறுவர்களின் சட்டப்படி*** எல்லா மாநிலங்களிலும் சிறார் நல வாரியங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 1961-ஆம் ஆண்டு ***பெண் சிசுவதைச் சட்டம்*** பெண் குழந்தைகள் கொல்லப் படுவதைத் தடுக்கின்றது. தவறு இழைப்போரை இச்சட்டம் தண்டிக்கின்றது. சிறார் தொழிலினை நீக்கவும், சிறுவர்களைப் பயிற்றுவிக்கவும், பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. எனினும் சிறார் பிரச்சனை பல்வேறு காரணங்களினால் நாட்டின் ஒரு சில பகுதிகளில் இன்னமும் நீடித்து வருகின்றது.

***ஒடுக்கப்பட்ட மக்களின் நலம் :*** சாதி முறையினால் ஏற்படும் ஏற்றத்தாழ்வு இந்தியாவிற்கு மற்றொரு சவாலாகும். நமது அரசியலமைப்புச் சட்டம் எந்த வகையான வேறுபாட்டினையும் தடுக்கின்றது. ***1955-ஆம் ஆண்டு தீண்டாமைக் குற்றச் சட்டம்*** தீண்டாமையைக் கடைப்பிடிப்போருக்குத் தண்டனை வழங்குகின்றது. ***1989-ஆம் ஆண்டு தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர் (அநீதிகள் தடுப்புச்) சட்டம்,*** தாழ்த்தப்பட்ட பழங்குடியினருக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகளைக் களைய கடுமையான தண்டனை அளிக்க வகை செய்கின்றது. இத்தகைய சட்டபூர்வ நடவடிக்கைகளைத் தவிர மத்திய, மாநில அரசுகள் தாழ்த்தப் பட்டோர், பழங்குடியினர், மற்ற பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கு வேலை வாய்ப்பிலும், கல்வி நிறுவனங்களிலும் இட ஒதுக்கீடு கொள்கையினைப் பின்பற்றி வருகின்றன. கல்வி உதவித் தொகைகள், கட்டணச் சலுகைகள், சிறப்பு மற்றும் தொழில் பயிற்சி, இத்தகைய வகுப்பினர்களுக்கான விடுதி வசதி

ஆகிய நடவடிக்கைகள் இந்தியாவில் ஒருங்கிணைந்த சமூக முன்னேற்றத்தினைக் கொண்டு வருவதில் உதவி புரிந்துள்ளன.

***சிறுபான்மையினர் நலம் :*** இந்திய அரசியலமைப்புச் சட்டம் சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்கள் அமைத்திடவும், தங்களது, சமூக, பண்பாட்டு உரிமைகளை மேம்படுத்திக் கொள்ளவும் உரிமையினை அளிக்கின்றது. ***1992-ஆம் ஆண்டு சிறுபான்மையினர் தேசிய ஆணையச் சட்டம்*** தேசிய, மாநில சிறுபான்மையினர் ஆணையங்களை அமைத்திட வழி செய்கின்றது. இத்தகைய நடவடிக்கைகள் நமது நாட்டிலுள்ள சிறுபான்மையினர் மத்தியில் பாதுகாப்பு உணர்வினைப் ஏற்படுத்தியுள்ளன.

***ஊனமுற்றோர் நலன் :*** ஊனமுற்றோர்களின் குறைகளைக் களைந்திட அரசு மற்றும் அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் பணியாற்றி வருகின்றன. ***1955-ஆம் ஆண்டு ஊனமுற்றோர் சட்டம்*** உடல் ஊனமுற்றோர் மறுவாழ்வு பெற்றிட இயற்றப்பட்டது. ***1976-ஆம் ஆண்டு கான்பூரில் இந்தியச் செயற்கை உடல் உறுப்புகள் உற்பத்தி நிறுவனம்*** (Artificial Limb Manufacturing Corporation of India) அமைக்கப்பட்டது. இந்நிறுவனம் ஊனமுற்றோருக்குத் தேவைப்படும் மனித உறுப்புகளைச் செயற்கையாக உற்பத்திச் செய்து வருகின்றது. ***1997-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 24-ஆம் நாள் தேசிய ஊனமுற்றோர் வளர்ச்சி நிதி நிறுவனம்*** (The National Handicapped Finance and Development Corporation) அமைக்கப்பட்டது. இந்நிறுவனம் ஊனமுற்றோர்கள் கல்வி, மற்றும் வேலை வாய்ப்பினைப் பெற கடன் உதவியளித்து வருகின்றது.

***முதியோர் நலன் :*** முதியோர் நலனைப் பேணிட அரசு மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் செயல்புரிந்து வருகின்றன. முதியோர் வசதியுடன் தங்கிட **முதியோர் இல்லங்கள்** (Old Age Homes) ஏற்படுத்தப்பட்டுள்ளன. அத்தகைய இல்லங்களுக்கு அரசு உதவிகளைப் புரிந்து வருகின்றது.

***கல்வி வளர்ச்சி :*** சமூக முன்னேற்றத்தினைக் கொண்டு வருவதில் கல்வியின் பங்கு வலிமை வாய்ந்ததாகும். கல்வி ஒருங்கிணைந்த

சமூக வளர்ச்சியைக் கொண்டுவர உறுதுணைப் புரிகின்றது. 1951-ஆம் ஆண்டு இந்தியாவில் கல்வி அறிவு பெற்றிருந்தோரின் விழுக்காடு 16.1 ஆகும். பெண்கள் கல்வி மிகப் பின்தங்கிய நிலையில் புறக்கணிக்கப்பட்டிருந்தது. சுதந்திரத்திற்குப் பின்னர் கல்வி வளர்ச்சிக்கு மிகுந்த கவனம் செலுத்தப்பட்டது. இந்தியாவில் கல்வியை மேம்படுத்தும் பொறுப்பு மத்திய, மாநில இரு அரசுகளுடையதுமாகும். இந்திய அரசு 1948-ஆம் ஆண்டு டாக்டர் சர். இராதாகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் பல்கலைக்கழகக் கல்விக்குழுவினை நியமித்தது.

ஒவ்வொரு ஆண்டும் டாக்டர் சர். இராதாகிருஷ்ணன் அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் 5 **ஆசிரியர் தினமாகக்** கொண்டாடப்படுகிறது.

அவர் தலைமையிலான குழு அளித்த 1949-ஆம் ஆண்டு அறிக்கையின் அடிப்படையில் நமது நாட்டின் கல்வி முறை மாற்றியமைக்கப்பட்டது. 1953-ஆம் ஆண்டு டாக்டர் ஏ. இலட்சுமண சாமி முதலியார் தலைமையில் மற்றொரு கல்விக் குழு அமைக்கப்பட்டது. அக்குழு பரிந்துரையின்படி பள்ளிக் கல்வி என்பது **கற்றலும் செயல்பாடும்** என்னும் அடிப்படையில் அமைந்தது. உலக, இந்திய, ஜனநாயக இலட்சியக் குடிமக்களை உருவாக்குவதே உயர்நிலைப் பள்ளிக் கல்வியின் நோக்கமாக அமையவேண்டுமென அக்குழு பரிந்துரைத்தது. உயர்நிலைப் பள்ளி நிலையில் சிறுவர்களின் ஒட்டுமொத்த வளர்ச்சியினைக் கொண்டுவர வேண்டுமென அக்குழு வலியுறுத்தியது. 1964-ஆம் ஆண்டு **கோத்தாரி கல்விக்குழு** அல்லது தேசியக் கல்விக் குழு நியமிக்கப்பட்டது. அக்குழுவின் 1966-ஆம் ஆண்டு பரிந்துரை அறிக்கை இந்தியா முழுவதும் ஒரே மாதிரியான கல்வி அமைப்பினைக் கொண்டுவர எண்ணியது.

அக்குழுவின் அறிக்கை தொழில், தொழில்நுட்ப, பொறியியல், வேளாண்மை மற்றும் அறிவியல் கல்விக்கு முக்கியத்துவம் அளித்தது. 1986-ஆம் ஆண்டின் **புதிய கல்விக் கொள்கையும்** 1992-ஆம் ஆண்டின் செயல் திட்டமும் 21-ஆம் நூற்றாண்டு தொடங்கும் முன் 14 வயதுவரை உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் நிறைவுடன் கூடிய தரமான கல்வியைத்

தருவதை நோக்கமாகக் கொண்டிருந்தன. இத்தகைய முயற்சிகளி னால் 1951-ஆம் ஆண்டு 42.6 விழுக்காடாக இருந்த தொடக்கக் கல்வி சேர்க்கை 1999-ஆம் ஆண்டு 94.9 விழுக்காடு நிலைக்கு உயர்ந்தது. உயர்நிலைப் பள்ளிக் கல்வி, உயர் கல்வி மற்றும் பல்கலைக்கழகக் கல்விக்கும் சம முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வளர்ச்சியுற்றது. இந்தியாவில் 1.10 இலட்சத்திற்கும் மேற்பட்ட உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி நிறுவனங்கள் உள்ளன. அதே போல் பொது, தொழில்நுட்ப, மருத்துவ மற்றும் வேளாண்மைக் கல்விக்கு 12,350 கல்லூரிகள் உள்ளன. இந்தியாவில் 250க்கும் மேற்பட்ட பல்கலைக் கழகங்கள் (Universities) செயலாற்றி வருகின்றன. சேர்க்கை எண்ணிக்கை அதிகரிப்பினாலும் நிறுவனங்களின் எண்ணிக்கை வளர்ச்சியி னாலும் 2000-ஆம் ஆண்டு இந்தியாவில் கல்வி கற்றோரின் விழுக்காடு 65 ந்திற்கும் மேல் உயர்ந்தது.

1947-ஆம் ஆண்டிற்குப் பின்னர் இந்தியாவில் ஏற்பட்ட சமூக, கல்வி முன்னேற்றத்தின் விளைவாக குறிப்பிடத்தக்க சமூக மாற்றம் ஏற்பட்டுள்ளது. சாதி அமைப்பில் சரிவு ஏற்பட்டுள்ளது. சமூக இடப்பெயர்வு ஏதுவாகியுள்ளது (Social mobility), நவீன மயமாதலினால் சமுதாயத்தின் அனைத்து பிரிவு மக்களுக்கும் நன்மைகள் சென்று சேர்கின்றன. இந்தியாவில் சமத்துவ சமுதாயம் தோன்றிவருகின்றது.

**கற்றல் அடைவுகள்**

1. மாணவர் பூமிதான, சர்வோதய இயக்கங்களின் நோக்கங்களை விளக்க முடியும்.
2. மாணவர் சுதந்திரத்திற்குப் பின்னர் இந்தியாவில் பெண்கள் முன்னேற்றத்தினை விவரிக்க முடியும்.
3. மாணவர் ஒடுக்கப்பட்ட பிரிவினர், சிறுவர்கள், சிறுபான்மை யினர் நலன்களுக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை விளக்க முடியும்.
4. மாணவர் 1947-ஆம் ஆண்டிற்குப் பிறகு ஏற்பட்ட கல்வி முன்னேற்றத்தினை விவரிக்க முடியும்.

## சுயமதிப்பீடு

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்**

1. பூமிதான இயக்கம் தொடங்கப்பட்ட ஆண்டு

   அ. 1960 ஆ. 1950

   இ. 1952 ஈ. 1951

2. வரதட்சணை தடுப்புச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு

   அ. 1961 ஆ. 1960

   இ. 1962 ஈ. 1963

3. தமிழ் நாட்டில் பெண்களுக்கு வேலை வாய்ப்பில் இட ஒதுக்கீட்டின் அளவு

   அ. 30 விழுக்காடு ஆ. 33 விழுக்காடு

   இ. 31 விழுக்காடு ஈ. 32 விழுக்காடு

4. ஆசிரியர் தினம் கொண்டாடப்படும் நாள்

   அ. செப்டம்பர் 5 ஆ. செப்டம்பர் 10

   இ. செம்படம்பர் 15 ஈ. செப்டம்பர் 25

5. கோத்தாரிக் குழு நியமிக்கப்பட்ட ஆண்டு

   அ. 1966 ஆ. 1962

   இ. 1960 ஈ. 1964

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. சர்வோதய இயக்கத்தினைத் தொடங்கியவர் ________ ஆவார்.

2. இந்துத் திருமணச் சட்டம் ________ மணத்தைச் சட்டபூர்வ மாக்கியது.

3. பெண்கள் சம ஊதியம் பெற வகை செய்யும் சட்டம்________ ஆகும்

4. தொழிற்சாலைகளில் சிறுவர்களை வேலைக்கமர்த்துவதைத் தடுக்கும் சட்டம் ________ ஆகும்.

5. தீண்டாமைக் குற்றச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு ________.

6. டாக்டர் ஏ. இலட்சுமணசாமி முதலியார் குழு நியமிக்கப்பட்ட ஆண்டு________.

**III. பின் வருவனவற்றைப் பொருத்துக**

| | | | |
|---|---|---|---|
| 1. | வினோபாபாவே | -- | 1953 |
| 2. | மத்தியச் சமூக நல வாரியம் | -- | 1986 |
| 3. | பெண் சிசுவதைத் தடுப்புச் சட்டம் | -- | பூமிதான இயக்கம் |
| 4. | புதிய கல்விக் கொள்கை | -- | 1961 |

**IV. சுருக்கமாக விடையளிக்கவும்**

1. பூமிதான இயக்கத்தின் நோக்கம் என்ன?
2. இந்து வாரிசுரிமைச் சட்டம் தரும் உரிமை என்ன?
3. மத்திய, மாநில, சமூக நல வாரியங்களின் பணி என்ன?
4. 1952-ஆம் ஆண்டு சுரங்கச் சட்டத்தின் நோக்கம் என்ன?
5. தேசிய ஊனமுற்றோர் வளர்ச்சி நிதி நிறுவனம் எப்போது அமைக்கப்பட்டது?
6. 1951-ஆம் ஆண்டு இந்தியாவில் கற்றோரின் விழுக்காடு என்ன?

**V. விரிவான விடை தருக**

1. இந்தியாவில் பெண்கள் முன்னேற்றத்திற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை விளக்குக.
2. 1947 முதல் இந்தியாவில் கல்வி முன்னேற்றம் குறித்து எழுதுக.
3. சுதந்திரத்திற்குப் பின்னர் இந்தியாவில் சமூக முன்னேற்றம் பற்றி ஒரு கட்டுரைத் தருக.

**VI. செய்முறைப் பயிற்சிகள்**

1. வரதட்சணை தடுப்பு பற்றி ஒரு சொற்போருக்கு ஏற்பாடு செய்க.

2. இந்தியாவில் கல்வி முன்னேற்றத்திற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து வினா-விடை நிகழ்ச்சி நடத்துக.

பாடம் - 8

# இந்தியாவில் திட்டமிட்டப் பொருளாதார முன்னேற்றமும் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியும்

**கற்றல் நோக்கங்கள்**

1. மாணவர் சுதந்திரத்தின் போது இந்தியா எதிர்கொண்ட பொருளாதாரப் பிரச்சனைகள், திட்டமிடலின் நோக்கங்கள் மற்றும் ஐந்தாண்டுத் திட்டங்கள் பற்றிய அறிவினைப் பெறல்.
2. மாணவர் ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலம் அடைந்த சாதனைகளைப் புரிந்து கொள்ளுதல்.
3. மாணவர் தனியார்மயம், தாராளமயம், உலகமயம் பற்றியும் இவை குறித்த இந்தியாவின் நிலையினையும் தெரிந்து கொள்ளுதல்.
4. மாணவர் சுதந்திரத்திற்குப் பின்னர் இந்தியாவில் ஏற்பட்ட அறிவியல், தொழில் நுட்ப வளர்ச்சிகளைப் புரிந்து கொள்ளுதல்.

ஆங்கில ஆட்சியாளர்கள் இந்தியாவினைக் கச்சாப் பொருட்களை உற்பத்தி செய்யும் ஒரு நாடாகவே வைத்திருந்தனர். அவர்கள் இந்தியாவின் தொழில் முன்னேற்றத்தினைப் புறக்கணித்தனர். முதல், இரண்டாம் உலகப்போர்களின் போது ஏற்பட்ட தேவைகளினால் இந்தியாவில் சிறிது தொழில் வளர்ச்சி ஏற்பட்டது. ஆனால் அவ்வளர்ச்சி பாராட்டத்தக்க அளவு இல்லை. பிரிவினையால் இந்தியப் பொருளாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டது. பிரிக்கப்படாத இந்தியாவிலிருந்த சுமார் 68 விழுக்காடு நீர்ப்பாசனப் பகுதி பாகிஸ்தானுக்குச் சென்றது. அதனால் நமது நாட்டின் உணவு உற்பத்திக் குறைந்தது. அதன் விளைவாக இந்தியாவில் உணவு தானியப் பற்றாக்குறை

ஏற்பட்டது. நாட்டின் தனிநபர் வருமானமும் மிகவும் குறைவான தாக இருந்தது. மக்களின் வாழ்க்கைத் தரமும் பின்தங்கிய நிலை யிலேயே இருந்தது. மேலும் மக்கள் தொகைப் பெருக்கத்தால் வேலையின்மை ஏற்பட்டது. எனவே 1947-ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்றபோது இந்தியா பல பொருளாதாரப் பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அப்பிரச்சனைகளை நீக்கிட இந்தியா **திட்டமிட்டப் பொருளாதார வளர்ச்சி** முறையினை மேற்கொண்டது.

**திட்டக்குழு, 1950 :** எந்தவொரு நீண்ட கால அல்லது குறுகிய கால குறிக்கோள்களையும் வெற்றிபெறச் செய்திட வேண்டுமெனில் முறையான திட்டமிடல் அவசியமாகின்றது. நாட்டிற்கான அத்தகைய திட்டமிடல் பணியினைப் புரிந்திட நேருவின் அரசு 1950-ஆம் ஆண்டு மார்ச் திங்களில் **திட்டக் குழுவினை** அமைத்தது. நேரு அதன் தலைவராக விளங்கினார். திட்டக் குழுவின் பணிகள் : 1. ஐந்தாண்டுத் திட்டங்களை வகுத்தல், 2. நாட்டிற்குத் தேவையான பொருள், மூலதன, மனிதவள ஆதாரங்களை மதிப்பிடுதல், 3. நிதி ஒதுக்கீடு துறை களை நிர்ணயித்தல், 4. நாட்டின் பொருளாதார முன்னேற்றத் தினை அளவிடல் மற்றும், 5. அரசின் பொருளாதாரக் கொள்கைகள், திட்டங்கள் மீதான ஆலோசனைகளை வழங்குதல் ஆகியனவாகும். 1952-ஆம் ஆண்டு நாட்டின் திட்டமிட்டப் பொருளாதார வளர்ச்சியினை வலுப்படுத்த **தேசிய வளர்ச்சிக் குழு** (National Development Council) எனும் மற்றொரு அமைப்பும் ஏற்படுத்தப்பட்டது. இவ்வமைப்பில் மாநிலங்கள் பங்கேற்று நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ஒத்துழைக்கின்றன.

**திட்டமிடலின் நோக்கங்கள் :** இந்தியத் திட்டமிடலின் முக்கிய நோக்கங்களாக (1) தேசிய வருவாய், மக்களின் தனிநபர் வருவாய் ஆகியனவற்றை அதிகரிக்கச் செய்தல், 2. மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல், 3. வறுமையையும், வேலை யின்மையையும் குறைத்தல் மற்றும், 4. அனைவருக்கும் சமப் பொருளாதார வாய்ப்புக்களை வழங்கிடல் ஆகியன அமைந்தன.

**கலப்புப் பொருளாதாரம் :** நேருவின் அரசு கலப்புப் பொருளா தாரக் (Mixed Economy) கொள்கையினைப் பின் பற்றியது. அதன்

பொருள் **அரசுக்குச் சொந்தமான** (பொது நிறுவனங்கள்) **தனியாருக்குச் சொந்தமான** (தனியார் நிறுவனங்கள்) இரண்டு தொழில் நிறுவனங்களுமே நாட்டில் இயங்கும் என்பதாகும். 1950-ஆம் ஆண்டுகளில் தொழில் முன்னேற்றத்தின் தூண்கள் எனப்படும் சில அடிப்படை கனரகத் தொழிற்சாலைகளை அமைத்திட பெரும் மூலதனம் தேவைப்பட்டது. அத்தகைய தொழில்கள் சுமார் 20-தினை 1948-ஆம் ஆண்டு, 1956-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட அரசின் **தொழில் கொள்கைத் தீர்மானங்கள்** அடையாளம் செய்தன. அவைகள் பாதுகாப்பு மற்றும் தளவாடத் தொழில்கள், விண்வெளி ஆராய்ச்சி, அணு சக்தி, வானவூர்தி (Air-ways), கப்பல் கட்டுதல், மின்சாரப் பொருட்கள், தொடர் வண்டிகள் (Railways), எஃகுத் தொழிற் சாலைகள், எண்ணெய் மற்றும் எண்ணெய் பொருட்கள் மற்றும் மின் உற்பத்தி போன்ற பல தொழில்களாகும். இத் தொழில்களின் வளர்ச்சிக்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டது. பின்னர் வங்கிகளும், காப்பீட்டு (Insurance) நிறுவனங்களும் கூட அரசின் கட்டுப் பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டன. 1956-ஆம் ஆண்டு இந்தியப் பாராளுமன்றம் **சமதர்ம சமுதாய அமைப்பினை** நிறுவுவதை அரசின் சமூக, பொருளாதாரக் கொள்கைகளின் நோக்கமாக ஏற்றுக் கொண்டது. அதன் பொருள் நாட்டின் பொருளாதாரச் செயல்கள் **மையத் திட்டமிடல்** மூலம் நடை பெறும் என்பதாகும். அக்கொள்கையும் கூட தனியார் தொழிற்சாலைகள் மீது அரசின் கட்டுப்பாடு அதிகரிக்க வழிகோலியது. தனியார் துறை அரசின் உரிமத்துடன் (License) தான் தொழிற்சாலைகள் அமைத்திட அனுமதிக்கப்பட்டன. துணி உற்பத்தி, சிமெண்ட், மோட்டார் வாகனங்கள், இயந்திரத் தொழில், சிறு தொழில்கள் மற்றும் குடிசைத் தொழில்கள் ஆகியன தனியாரின் முயற்சிக்கு விடப்பட்டன. ஆனால் 1991-ஆம் ஆண்டிலிருந்து தொடங்கிய தாராள மயமாதல், தனியார் மயமாதல் மற்றும் 20-ஆம் நூற்றாண்டின் இறுதி ஐந்து ஆண்டுகளில் ஏற்பட்ட உலக மயமாதல் ஆகியவற்றிற்குப் பின்னர் அண்மைக் காலத்தில் கலப்புப் பொருளாதாரக் கொள்கை மாற்றத்திற்குள்ளாகி உள்ளது.

***ஐந்தாண்டுத் திட்டங்களும், சாதனைகளும் :*** இந்தியா இதுவரை ஒன்பது ஐந்தாண்டுத் திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளது. தற்போது **பத்தாவது** ஐந்தாண்டுத் திட்டம் *(2002-2007)* செயலில் உள்ளது. ***முதல் ஐந்தாண்டுத் திட்டம்*** *(1951-1956) 1951*-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அத்திட்டம் **வேளாண்மைக்கு** முக்கியத்துவம் அளித்தது. நீர்ப்பாசனம், மின் உற்பத்தி, தொழில், போக்குவரத்து போன்ற மற்ற துறைகளின் வளர்ச்சிக்கும் கவனம் செலுத்தப் பட்டது. பல்நோக்கு நதி நீர்த் திட்டங்களான **தாமோதர் திட்டம்** (மேற்கு வங்கம், பீகார்), ஒரிசாவில் மகாநதியின் குறுக்கே கட்டப் பட்டுள்ள ***ஹிராகுட் அணை*** (உலகின் நீளமான அணை), சட்லஜ் நதியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள **பக்ரா நங்கல் அணை** (இந்தியாவின் மிகப்பெரிய பல்நோக்கு நதிநீர்த் திட்டம்), **துங்கபத்ரா திட்டம்** (ஆந்திரா, கர்நாடகம்), **கோசித் திட்டம்** (பீகார்), **சாம்பல் திட்டம்** (மத்தியப் பிரதேசம், இராஜஸ்தானம்), **மயூராக்ஷித் திட்டம்** (மேற்கு வங்கம்), **நாகார்ஜுனசாகர் திட்டம்** (ஆந்திரப்பிரதேசம்) ஆகியன அமைக்கப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. **இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் *(1956-1961)*** கனரகத் தொழிற்சாலைகளுக்கு முக்கியத்துவம் அளித்தது. பிலாய், பொக்காரோ, துர்காபூர், ரூர்கேலா ஆகிய நான்கு இடங்களில் **எஃகுத் தொழிற்சாலைகள்** ஏற்படுத்தப் பட்டன. கூடுதலாக சேலம், விசாகப்பட்டினம், பத்ராவதி போன்ற இடங்களிலும் எஃகுத் தொழிற்சாலைகள் அமைக்கப் பட்டுள்ளன. கோயின், கோர்பா ஆகிய இடங்களில் **அலுமினியத் தொழிற்சாலைகள்** துவங்கப்பட்டன. கேத்திரி, அக்னிகுண்டா, ராகா, மலன்ஜ்கன்ட் போன்ற இடங்களில் **தாமிரச் சுரங்கங்கள்** தோன்றின. துத்த நாகத்தினை உருக்கி உலோகத்தைப் பிரித் தெடுக்கும் ஆலைகள் உதய்பூரில், தன்பாத்திற்கு (Dhanbad) அருகிலும் அமைக்கப்பட்டன. **மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம்** *(1961 - 1966)* வேளாண்மை, தொழில்துறை ஆகிய இரண்டிற்குமே முக்கியத்துவம் அளித்தது. மூன்றாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில்தான் இந்தியாவில் **பசுமைப் புரட்சி** (வேளாண்மை முன்னேற்றம்) கொண்டு வரப்பட்டது. பசுமைப்புரட்சியினால் இந்தியா **உணவுத் தன்னிறைவினைப்** பெற்றது.

*1949-50-ஆம் ஆண்டில் மொத்த உணவு தான்ய உற்பத்தியின் அளவு 54,921,000 டன்களாகும். 1970 - 71 ஆம் ஆண்டில் அது 108,422,000 டன்களாக உயர்ந்தது. அதே போல் அக்கால கட்டத்திலேயே 6,759,000 டன்களாக இருந்த கோதுமை உற்பத்தி 26,477,000 டன்களாக உயர்ந்தது.*

*1967-ஆம் ஆண்டு முதல் 1969-ஆம் ஆண்டுவரை* **ஓராண்டுத் திட்டங்கள்** (Annual Plans) *செயல்படுத்தப்பட்டன.* **நான்காவது ஐந்தாண்டுத் திட்டம்** *(1969 - 1974) வேளாண்மை வளர்ச்சியை ஆண்டிற்கு 5 விழுக்காடாகவும், தொழில் வளர்ச்சியை ஆண்டிற்கு 9 விழுக்காடாகவும் இருக்க இலக்கு நிர்ணயித்தது. 1951-ஆம் ஆண்டு முதல் எடுத்துக் கொள்ளப்பட்ட 600 பெரிய, நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்களில் 360 திட்டங்கள் 1973-ஆம் ஆண்டிற்குள் நிறைவேற்றப்பட்டன.* **ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் (1974 - 1979) ஒரு நீண்டகால கண்ணோட்டத் திட்ட மாகும்.** *அத்திட்டம் 1985-ஆம் ஆண்டு வரை செயல்படக்கூடிய 10 ஆண்டு திட்டமாகும். அத்திட்டக் காலத்தில்* **கரிபி ஹட்டோ** *(வறுமை அகற்றல்) எனும் புதிய முழக்கம் பயன்படுத்தப் பட்டது. அக்காலகட்டத்தில்தான் திட்டமிடலின் நோக்கமாக* **சமூக நீதியின்** *வளர்ச்சியும் தோன்றியது. 1973, 1978 மற்றும் 1980-ஆம் ஆண்டுகளில் இந்திய அரசு* **தொழில் கொள்கை தீர்மானங்களை** *நிறைவேற்றியது. 1970-ஆம் ஆண்டுகளில் தொடங்கப்பட்ட* **பால் உற்பத்திப் பெருக்கத் திட்டத்தினால்** (Operation Flood) *1997-ஆம் ஆண்டு இந்தியா பால் உற்பத்தியில் உலகின் முதல் இடத்தைப் பெறமுடிந்தது. கோழி வளர்ப்புத் திட்டத்தினால் இந்தியா முட்டை உற்பத்தியில் ஐந்தாவது இடத்தினைப் பிடித்தது. அதன் விளைவாக நாட்டின் மூலை, முடுக்குகளிலெல்லாம் முட்டை தாராளமாகக் கிடைக்கின்றது. திட்டமிட்டப் பொருளாதார முன்னேற்றத்தினால் இந்தியாவில் தொழில் உற்பத்திப் பெருகியுள்ளது. ஒவ்வொரு வட்டாரமும், சம வளர்ச்சியினைக் கண்டுள்ளது.* ***ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம் (1980 - 1985), ஏழாவது திட்டம் (1985 - 1990), எட்டாவது திட்டம் (1992 - 1997) மற்றும் ஒன்பதாவது திட்டம் (1997 - 2002)*** *ஆகிய அனைத்தும் வளர்ச்சி இலக்கினை நிர்ணயித்து செயல்படுத்தப் பட்டன. அவைகள் அனைத்தும் வேளாண்மை, தொழில்,*

மனிதவளம், இயற்கை மற்றும் சமூகக் கட்டமைப்பு முன்னேற்றம், வேலைவாய்ப்பு உருவாக்கம், தேசிய வருவாயை உயர்த்துதல் மற்றும் வறுமை அகற்றல் ஆகிய நோக்கங்களைக் கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்டன.

| |
|---|
| முதல் ஐந்தாண்டுத் திட்டம் அரசின் செலவினத் தொகையாக ரூபாய் 2,400 கோடிகளைக் கொண்டிருந்தது. அது ஒன்பதாவது திட்டக் காலத்தில் ரூபாய் 8,59,000 கோடியாக உயர்ந்தது. |

1950 - 51-ஆம் ஆண்டில் ரூபாய் 9,140 கோடியாக இருந்த இந்தியாவின் **தேசிய வருமானம்** 1998 - 99-ஆம் ஆண்டில் ரூபாய் 16,80,000 கோடியாக உயர்ந்தது. அதே போல் 1950-51-ஆம் ஆண்டில் ரூபாய் 255 மட்டுமே இருந்த **தனிநபர் வருமானம்** 2000 - 2001-ஆம் ஆண்டில் ரூபாய் 16,500 அளவிற்கு உயர்ந்தது. 1974-ஆம் ஆண்டில் 55 விழுக்காடாக இருந்த **வறுமைக் கோட்டிற்குக் கீழ்** வாழ்ந்த மக்கள் தொகையின் அளவு 2000-ஆம் ஆண்டில் 26 விழுக்காடாகக் குறைந்தது (கிராமப்புறங்களில் ரூபாய் 328/-க்கும் கீழ் மாத வருமானமுடையவர்களும், நகர்ப்புறங்களில் ரூபாய் 454/-க்குக் கீழ் மாத வருமானமுடையவர்களும் **வறுமைக் கோட்டிற்குக் கீழ்** வாழும் மக்களாகக் கருதப்படுகின்றனர்). நாட்டில் திட்டமிட்டப் பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டுள்ள போதிலும் இன்னமும் நாம் வறுமை, வேலையின்மை, பொருளாதார ஏற்றத்தாழ்வு போன்ற பிரச்சனைகளைச் சந்திக்க வேண்டியுள்ளது. இத்தகைய நிலைக்கு முக்கிய காரணம் மக்கள்தொகைப் பெருக்கமேயாகும்.

**தனியார் மயமாதல் :** அரசுக்குச் சொந்தமான தொழிற்சாலைகளைத் தனியார் மயமாக்கும் கொள்கை 1980-ஆம் ஆண்டுகளில் உருவானது. இக்கொள்கை இங்கிலாந்தில் **தாட்சர் சகாப்தத்தில்** (1976-89) தொடங்கியது. இக்கொள்கை வளர்ந்த, வளர்ச்சி பெற்றுவரும் இருவகை நாடுகளுக்கும் பரவியது. அரசு மட்டுமே கட்டுப்பாட்டில் வைத்திருந்த விமானப் போக்குவரத்து, இரயில்வேதுறை, கப்பல் போக்குவரத்து, மின் உற்பத்தி, நீர் நிலையங்கள், தொலைத் தொடர்புத்துறை போன்ற அடிப்படை

முக்கியத்துவம் வாய்ந்த தொழில்கள் தனியார் துறைக்குத் திறந்து விடப்பட்டன. 1991-ஆம் ஆண்டிற்குப் பிறகு தொடங்கிய தாராள மயமாதலினால் தனியார் மயமாதல் வேகம் பெற்றது.

**தாராள மயமாதல் :** அரசு மட்டுமே உரிமை கொண்டு நடத்தியும் கட்டுப்படுத்தியும் வந்த சில தொழில்களைத் தனியார் நிறுவனங்கள் தொடங்க முடியாமல் விதிக்கப்பட்டிருந்த தடைகள் தளர்த்தப்பட்டன. இந்தியாவில் இக்கொள்கை 1991-ஆம் ஆண்டிலிருந்து பின்பற்றப்பட்டு வருகின்றது. தாராள மயமாக்கலுக்குப் பின் பொதுத்துறைக்கு என இந்தியாவில் ஒதுக்கப்பட்டிருந்த தொழில்களின் எண்ணிக்கை 17லிருந்து 3ஆகக் குறைந்தது. தற்போது தனியார் நிறுவனங்களும் எஃகு, விமானப் போக்குவரத்து, கப்பல் போக்குவரத்து, கனரக இயந்திரங்கள் மட்டுமல்லாது பாதுகாப்பு தொழிற்சாலைகளைக் கூட அமைத்து நடத்திட அனுமதிக்கப்படுகின்றன. அதே போல் உரிமங்கள் (Licenses) வழங்குவதற்கான சட்டங்களும், நடை முறைகளும், இறக்குமதி, ஏற்றுமதிக்கான அனுமதிகளும், விலைக்கட்டுப்பாடு, விற்பனைத் தொடர்பான சட்ட திட்டங்களும் தளர்த்தப்பட்டுள்ளன. இத்தகைய நடவடிக்கைகள் **தாராள மயமாதல்** என அழைக்கப்படுகின்றன. தாராளமய மாதலின் அடுத்த கட்ட நடவடிக்கையாக அரசின் முதலீடு விலக்கல் கொள்கை (Disinvestment) நடைமுறைக்கு வந்துள்ளது. 1991-ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட **புதிய தொழில் கொள்கை** (New Industrial Policy) தளவாட, உயர் நுட்பத் தொழில்கள், கட்டமைப்பு வசதிகள் ஆகியனவற்றை அரசு முதலீட்டிற்குரிய துறைகள் என அறிவித்துள்ளது. முதலீடு குறைப்புக் கொள்கை யின்படி அரசு தனது வளங்களைப் பெருக்க பொதுத்துறை, அரசுச் சார்பு நிறுவனங்களிலுள்ள பங்கு முதலீட்டினைத் தனியாருக்கு விற்க தொடங்கியது. தனியார்துறை தொழில் ரீதியாக வளரவும் போட்டி போட்டுக் கொண்டு இயங்கவும் ஊக்குவிக்கப் படுகின்றது. பொதுத்துறை இத்தகைய சவால்களைச் சந்திக்கவும் அதனால் மிகத் திறமையுடன் செயலாற்றவும் வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

**உலக மயமாதல் :** உலக நாடுகள் பொருளாதார ரீதியில் சர்வதேச அளவில் ஒன்றையொன்று சார்ந்தியங்க வேண்டியுள்ளன. அவை

உலகத் தொழில்கள், வர்த்தகம், சந்தை போன்ற நிலைகளில் தங்களை ஒன்றுபடுத்திக் கொள்ள வேண்டியது அவசியமா கின்றது. தகவல் தொடர்புப் புரட்சியினால் உலகம் இன்று ஒரு கிராமமாக இயங்குகின்றது. இத்தகைய நிலையில் ஐக்கிய நாடுகள் சபையின் (U.N.O) உறுப்பு நாடுகள் பல ஒன்று சேர்ந்து 1995-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 1-ஆம் நாள் **உலக வர்த்தக நிறுவனத்தினை** (World Trade Organisation) அமைத்தன. உலக நாடுகளுக்கிடையில் வணிகத்தினை மேம்படுத்துவது அதன் நோக்கமாகும். அதன் தலைமையகம் **ஜெனிவாவில்** அமைந் துள்ளது.

உலக வங்கி நிறுவனத்தின் உறுப்பு நாடுகள் தங்களுக்குள் தாராள பரஸ்பர வர்த்தக ஒப்பந்தங்களைச் செய்து கொள்கின்றன. அந்நாடுகளுக்கிடையில் பொருட்கள், மூலதனம், தொழில் நுட்பம் மற்றும் தொழிலாளர் தடையின்றிச் செல்ல அனுமதிக்கப் படல் வேண்டும். அந்நாடுகள் தங்களுக்குள் வர்த்தகத் தடை களைத் தளர்த்துதல் வேண்டும். இறக்குமதி, ஏற்றுமதி மீது நிர்ணயிக்கப்பட்டுள்ள அளவுகளை அந்நாடுகள் அகற்றல் வேண்டும். அதே நேரத்தில் உலக வங்கி நிறுவனத்தின் நியதி களை அந்நாடுகள் ஏற்றுக் கொள்ள வேண்டும். இந்நிறுவனம் விதிக்கின்ற வர்த்தக நிபந்தனைகளையும் உறுப்பு நாடுகள் ஏற்று அவைகளைப் பின்பற்றுதல் வேண்டும். இத்தகைய நிலை உலக மயமாதல் முறை என அழைக்கப்படுகின்றது. இந்தியா உலக வங்க நிறுவனத்தின் ஓர் உறுப்பு நாடாகும்.

**சுதந்திரத்திற்குப் பின் அறிவியல் மற்றும் தொழில் நுட்ப வளர்ச்சிகள் :** சுதந்திரத்திற்கு முன்னர் இந்தியா ஜே.சி. போஸ், சி.வி. இராமன், எஸ். இராமானுஜன் போன்ற விஞ்ஞானிகளைக் கண்டது. சுதந்திரத்திற்குப் பின்னர் இந்திய அறிவியல், தொழில் நுட்ப வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயம் தொடங்கியது. ஜவஹர்லால் நேரு அறிவியல், தொழில்நுட்ப பயனில் மிகுந்த நம்பிக்கைக் கொண்டிருந்தார். இந்தியாவில் அதிவேக சமூக, பொருளாதார மாற்றங்களைக் கொண்டு வருவதில் அவைகளை மிகப் பயனுள்ள சாதனங்களாகக் கையாளலாம் என அவர்

கருதினார். எனவே அவரது அரசு, அறிவியல், தொழில் நுட்ப ஆராய்ச்சியை ஊக்குவித்தது. 1958-ஆம் ஆண்டு இந்தியப் பாராளுமன்றம் நேருவின் **''அறிவியல் கொள்கைத் தீர்மானத்தினை''** ஏற்றுக் கொண்டது. இந்தியாவில் அறிவியல், தொழில் நுட்ப முன்னேற்றத்தினைக் கொண்டு வருவதில் மூன்று நிறுவனங்கள் மிக முக்கியப் பணியினை ஆற்றிவருகின்றன. அவை: 1. **எச்.ஜே. பாபாவின்** தலைமையில் இயங்கிய **அணு சக்தித் துறை** (Department of Atomic Energy (D.A.E.), **2. எஸ்.எஸ்.** பட்நாகர் தலைமையில் செயல்பட்ட **அறிவியல், தொழில் ஆராய்ச்சிக் கழகம்** (Council of Scientific and Industrial Research (CSIR) மற்றும் 3. **டி.எஸ். கோத்தாரியின்** கீழ் செயலாற்றிய **பாதுகாப்பு அறிவியல் நிறுவனம்** (Defence Science Organisation (DSO) ஆகியனவாகும். 1947-ஆம் ஆண்டு தேசிய இயற்பியல் பரிசோதனைக் கூடம் டெல்லியில் அமைந்திட நேரு அடிக்கல் நாட்டினார்.

> இச்சோதனைக்கூட அடிக்கல்லில் லூயி பாஸ்டரின் வாசகமான ''பரிசோதனைக் கூடம் எனப் பெயரிட்டு அழைக்கப்படும் புனித வசிப்பிடங்களில் ஆர்வம் கொள்க என நான் உங்களைக் கெஞ்சுகிறேன். அவைகளை இரட்டிப்பாக்கி வளர்ச்சியடையக் கோருங்கள். இவைகள்தான் எதிர்கால கோயில்கள் - நன்மையும், மகிழ்வும் தரும் சிறந்த கோயில்கள். இங்குதான் மனித இனம் உயர்ந்தும், வலிமை பெற்றும் நன்கும் வளர்கின்றது'' என்பது இடம் பெற்றுள்ளது.

**அணு ஆராய்ச்சி :** 1948-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் **அணு சக்திக் குழு** அமைக்கப்பட்டது. அவ்வமைப்பு 1954-ஆம் ஆண்டு **ஹோமி ஜஹாங்கீர் பாபா** தலைமையின் கீழ் முழு வசதி கொண்ட துறையாக மாற்றியமைக்கப்பட்டது. இந்தியாவின் அணு சக்தி திட்டத்திற்கு அடித்தளமிட்டவர் பாபாவே. 1957-ஆம் ஆண்டு **மும்பாயில் பாபா அணு ஆராய்ச்சி மையம்** அமைக்கப் பட்டது. இந்தியா அணு சக்தியை அமைதி நோக்கமான மின் உற்பத்திக்குப் பயன்படுத்துகின்றது. **தாராபூரில்** அமைக்கப்பட்ட இந்தியாவின் முதல் அணு மின் நிலையம் 1969-ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் மின் உற்பத்தியைத் தொடங்கியது. அதே

போன்று இரு நிலையங்கள் இராஜஸ்தானில் **கோடா** என்ற இடத்திலும், தமிழ்நாட்டில் சென்னைக்கருகிலுள்ள **கல்பாக்கத்திலும்** தொடங்கப்பட்டன. நான்காவது உத்திரப் பிரதேசத்தில் லுள்ள **நரோரா** என்னுமிடத்தில் அமைக்கப்பட்டது. தொழில் முன்னேற்றத்திற்கு மிக அவசியமான மின்சாரம், நீர் மின் உற்பத்தி மூலம் மட்டுமின்றி இவ்வணுமின் நிலையங்களாலும் உற்பத்தி செய்யப்பட்டு அளிக்கப்படுகின்றது.

> இந்தியா இராஜஸ்தானிலுள்ள **பொக்ரான்** என்னும் இடத்தில் 1974-ஆம் ஆண்டு மே மாதம் 18-ஆம் நாளும், 1999-ஆம் ஆண்டு மே 11-ஆம் நாளும் அமைதியாக அணு வெடிப்புச் சோதனையை நடத்தியது.

**அறிவியல் மற்றும் தொழில் ஆராய்ச்சிக் கழகம் :** 1942-ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட அறிவியல் மற்றும் தொழில் ஆராய்ச்சிக் கழகம் (Council of Scientific and Industrial Research (CSIR)) சுதந்திரத்திற்குப் பின்னர் மாற்றியமைக்கப்பட்டது. நேரு அதன் தலைவரானார். புகழ் பெற்ற விஞ்ஞானியான **எஸ்.எஸ். பட்நாகர்** (S.S.Bhatnagar) பொறுப்பில் அக்கழகம் விடப்பட்டது. அவரது சீரிய முயற்சியினால் 1964-ஆம் ஆண்டிற்குள் இந்தியாவின் பல பாகங்களிலும் முப்பது தேசிய பரிசோதனைக் கூடங்கள் அமைக்கப்பட்டன. இந்தியா முழுவதும் தற்போது பல்வேறு மையங்கள் தொடங்கப்பட்டு செயலாற்றி வருகின்றன.

**விண்வெளி ஆராய்ச்சி :** இந்தியாவில் விண்வெளி ஆராய்ச்சி பாராட்டத்தக்க அளவில் வளர்ச்சி பெற்றுள்ளது. பெங்களூரைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வரும் **இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம்** (Indian Space Research Organisation [ISRO]) **விக்ரம் ஏ. சாராபாயின்** சீரிய பணியால் விரிவாக்கமடைந்தது. இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையங்கள், கர்நாடகாவின் தலைநகரான **பெங்களூரிலும்** (ஐ.எஸ்.ஆர்.ஓ), கேரளாவில் திருவனந்தபுரம் அருகில்



விக்ரம் ஏ. சாராபாய்

**தும்பா** (விக்ரம் சாராபாய் விண்வெளி மையம்) என்னும் இடத்திலும், ஆந்திரப் பிரதேசத்தில் **ஸ்ரீ ஹரி கோட்டா** (சத்தீஸ் தவான் விண்வெளி மையம்) என்னுமிடத்திலும், தமிழ் நாட்டில் **மகோந்திரி கிரி** (திரவ ஏவு முறைகள் மையம், Liquid Propulsion Systems Centre) என்னுமிடத்திலும், **அகமதாபாத்திலும்** அமைந்துள்ளன. இந்தியாவில் செயற்கைக் கோள் செலுத்தும் திட்டம் 1972-ஆம் ஆண்டு முதல் தொடங்கியது. 1975-ஆம் ஆண்டு இந்தியா தனது முதல் செயற்கைக் கோளான **ஆரியபட்டாவை** விண்ணில் செலுத்தியது. **பாஸ்கரா ஒன்று, பாஸ்கரா இரண்டு** போன்ற செயற்கைக் கோள்களையும் இந்தியா விண்ணில் செலுத்தியுள்ளது. செயற்கைக் கோள் செலுத்தும் விண்வெளிக் கலன்களையும் (Satellite Launching Vehicles (SLVs), திறன்மிகு செயற்கைக் கோள் செலுத்தும் விண்வெளிக் கலன்களையும் (Augmented Satellite Launching Vehicles (ASLVs)), பூமியைச் சுற்றும் செயற்கைக் கோள் செலுத்தும் விண்வெளிக் கலன்களையும் (Geo-Synchronous Satellite Launching Vehicles (GSLVs)), துருவ செயற்கைக் கோள் செலுத்தும் விண்வெளிக் கலன்களையும் (Polar Satellite Launch Vehicles (PSLVs), இந்தியா விண்வெளியில் செலுத்தியுள்ளது. 1982-ஆம் ஆண்டு தொடங்கி வரிசையாக விண்ணில் செலுத்தப்பட்ட இந்தியத் தேசிய செயற்கைக் கோள்கள் (Indian National Satellites (INSATs) நம் நாட்டின் தொலைக் காட்சி, தொலைத் தொடர்பு, வள ஆதாரங்களை அளவிடுதல் மற்றும் நிர்வகித்தல், சுற்றுச் சூழலைக் கண்காணித்தல், வானிலை மற்றும் தகவல் தொழில் நுட்ப முறைகள் ஆகிய துறைகளில் புரட்சிகர மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளன.



**ஆரியபட்டா** செயற்கைக் கோள்

**கடல் ஆராய்ச்சியிலும்** (Oceanography) இந்திய விஞ்ஞானிகள் முத்திரை பதித்துள்ளனர். அன்டார்ட்டிகாவில் நமது விஞ்ஞானிகள் ஒரு ஆராய்ச்சி மையத்தினை அமைத்துள்ளனர்.

அதன் பெயர் **தக்சின் கங்கோத்ரி** என்பதாகும். இந்தியாவில் பசுமைப் புரட்சி ஏற்பட **எம்.எஸ். சுவாமிநாதனின்** வேளாண்மை ஆராய்ச்சிகள் பெரும் துணைபுரிந்துள்ளன. நமது ஏவுகணைத் தொழில் நுட்பம் **ஏ.பி.ஜே. அப்துல் கலாமின்** பங்களிப்பினால் முன்னேறியுள்ளது. உணவு, எரிசக்தி, உரங்கள், இயற்பியல், மென்பொருட்கள், வானூர்தி, கதிரியக்கம், வேதியியல் போன்ற பல்வேறு துறைகளில் இந்தியாவில் ஆராய்ச்சிகள் முன்னேறியுள்ளன.

நமது நாட்டிற்குத் தேவையான தொழில்நுட்பப் பணியாளர்களின் எண்ணிக்கையை அளவிட நேருவின் அரசு 1947-ஆம் ஆண்டு **அறிவியல் மனித ஆற்றல் குழு** ஒன்றினை அமைத்தது. அக்குழுவின் கணிப்பிற்குப் பின் **சென்னை, டெல்லி, கான்பூர், கரக்பூர், மும்பாய்** போன்ற ஐந்து இடங்களில் **இந்தியத் தொழில் நுட்ப நிறுவனங்கள்** (Indian Institutes of Technology) அமைக்கப்பட்டன. பின்னர் ரூர்கி, அசாம் பகுதிகளில் மேலும் இரு நிறுவனங்கள் ஏற்பட்டன. இந் நிறுவனங்கள் பயிற்சி பெற்ற தொழில் நுட்ப வல்லுநர்களை உருவாக்குகின்றன. தொழில் நுட்ப வல்லுநர்களைப் பயிற்றுவிப்பதில் இந்தியா, அமெரிக்க ஐக்கிய நாடுகள், இரஷ்யாவிற்கு அடுத்து மூன்றாம் நிலையிலுள்ளது. கணினிப் பொறியாளர்களுக்கும் இந்தியாவில் பஞ்சமில்லை. நமது நாட்டில் கணினி விஞ்ஞானிகளும், பணியாளர்களும் ஏராளமாக உள்ளனர்.

**கற்றல் அடைவுகள்**

1. மாணவர் திட்டக்குழுவின் பணிகளைக் குறிப்பிட முடியும்.
2. மாணவர் திட்டமிடலின் நோக்கங்களைக் கூறமுடியும்.
3. மாணவர் ஐந்தாண்டுத் திட்டங்கள் பற்றியும் அத்திட்டங்களின் கீழ் ஏற்பட்ட சாதனைகளைப்பற்றியும் எழுத முடியும்.
4. மாணவர் தனியார் மயமாதல், தாராள மயமாதல் மற்றும் உலக மயமாதல் பற்றி விவரிக்க முடியும்.
5. மாணவர் இந்தியாவில் ஏற்பட்டுள்ள அறிவியல், தொழில் நுட்ப வளர்ச்சிகளைப் பற்றி விவரிக்க முடியும்.

## சுயமதிப்பீடு

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்**

1. திட்டக்குழு அமைக்கப்பட்ட ஆண்டு

   அ. 1956 ஆ. 1950

   இ. 1952 ஈ 1954

2. ஐந்தாண்டுத் திட்டத்தினை வகுப்பது

   அ. திட்டக்குழு ஆ. தேசிய வளர்ச்சிக்குழு

   இ. அணுசக்திக்குழு ஈ பிரதம அமைச்சரின் அலுவலகம்

3. நேரு அரசு பின்பற்றிய பொருளாதாரக் கொள்கை

   அ. தனியார் மயம் ஆ. தாராள மயம்

   இ. கலப்புப் பொருளாதாரம் ஈ. உலக மயம்

4. இந்தியாவில் அணுசக்திக் குழு அமைக்கப்பட்ட ஆண்டு

   அ. 1945 ஆ. 1948

   இ. 1954 ஈ. 1955

5. இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் அமைந்துள்ள இடம்

   அ. பெங்களூர் ஆ. புதுடெல்லி

   இ. ஐதராபாத் ஈ சென்னை

**II. கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்க**

1. முதல் ஐந்தாண்டுத் திட்டம் ________ க்கு முக்கியத்துவம் அளித்தது.

2. உலக வர்த்தக நிறுவனம் அமைக்கப்பட்ட ஆண்டு ________

3. இந்திய அணுசக்தி திட்டத்திற்கு அடித்தளமிட்டவர் ________ ஆவார்.

4. தமிழ்நாட்டில் ________ என்ற இடத்தில் அணுமின் நிலையம் அமைந்துள்ளது.

**III. பின்வருவனவற்றைப் பொருத்துக**

| | | |
|---|---|---|
| 1. எச்.ஜே. பாபா | -- | உத்திரப்பிரதேசம் |
| 2. எஸ்.எஸ். பட்நாகர் | -- | டி.எஸ்.ஓ. (D.S.O.) |
| 3. டி.எஸ். கோத்தாரி | -- | இராஜஸ்தானம் |
| 4. கோடா | -- | சி.எஸ்.ஐ.ஆர் (CSIR) |
| 5. நரோரா | -- | டி.ஏ.ஈ.(D.A.E.) |

**IV. சுருக்கமாக விடையளியளிக்கவும்**

1. திட்டக்குழுவின் பணிகளைக் கூறுக.
2. திட்டமிடலின் நோக்கங்களைக் குறிப்பிடுக.
3. கலப்புப் பொருளாதாரம் என்றால் என்ன?
4. தனியார் மயமாதல் என்றால் என்ன?
5. இந்தியாவில் அணுமின் நிலையங்கள் அமைந்துள்ள இடங்களைக் குறிப்பிடுக.
6. நம் நாட்டில் விண்வெளி ஆராய்ச்சி மையங்கள் அமைந்துள்ள இடங்களின் பெயர்களை எழுதுக.

**V. விரிவான விடை தருக**

1. சுதந்திரத்திற்குப் பிறகு இந்தியாவில் ஏற்பட்ட திட்டமிட்ட பொருளாதார முன்னேற்றம் பற்றி எழுதுக.
2. சுதந்திரம் பெற்றது முதல் இந்தியாவில் ஏற்பட்டுள்ள அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சியினை மதிப்பிடுக.

**VI. செய்முறைப் பயிற்சிகள்**

1. மாணவரைத் தங்கள் பகுதியிலுள்ள தொழிற்சாலைகள் பற்றிய தகவலைச் சேகரிக்கக் கூறவும்.
2. மாணவர் தங்கள் பகுதியில் ஏற்பட்டு வரும் பொருளாதார மாற்றங்களைப் பற்றி அறிதல்.

பாடம் - 9

# இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை

**கற்றல் நோக்கங்கள்**

1. மாணவர் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையின் முக்கியக் கூறுகளைப் புரிந்து கொள்ளுதல்.
2. மாணவர் பஞ்ச சீலக் கொள்கை பற்றிய அறிவினைப் பெறல்.
3. மாணவர் அணிசேராக் கொள்கையினைக் கற்றல்.
4. மாணவர் மண்டலக் கூட்டுறவின் முக்கியத்துவத்தினைப் புரிந்து கொள்ளுதல்.
5. மாணவர் இந்தியா அண்டை நாடுகளுடன் மற்ற நாடுகளுடனும் கொண்டுள்ள உறவினை அறிதல்.

ஒரு நாடு உலகிலுள்ள மற்ற நாடுகளுடன் கொண்டுள்ள உறவு **வெளியுறவு** என அறியப்படுகின்றது. ஒரு நாட்டின் வெளியுறவானது ஒரு சில கொள்கைகள், கோட்பாடுகள் அடிப்படையில் அமைந்ததாகும். அவைகளை மொத்தமாக **வெளியுறவுக் கொள்கை** அல்லது **அயல்நாட்டுக் கொள்கை** என அழைக்கின்றோம். உலக விவகாரங்களில் ஒரு நாடு அக்கொள்கையின் அடிப்படையில் தன்னை ஈடுபடுத்திக் கொள்வதை உலக விவகாரங்களில் அந்நாட்டின் பங்கு எனக் கருதுகின்றோம்.

இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை காலனி அல்லது குடியேற்ற ஆதிக்கத்தினால் ஏற்பட்ட பாதிப்புகளின் பின்னணியில் உருவாக்கப்பட்டதாகும். இந்தியாவின் முதல் பிரதம அமைச்சரான **ஜவஹர்லால் நேரு** இந்திய வெளியுறவுக் கொள்கையின் முதன்மை சிற்பி ஆவார். 1947-ஆம் ஆண்டு முதல் (1) உலகச் சமாதானத்தைப் பேணுதல், (2) குடியேற்றக் கொள்கை எதிர்ப்பு, (3) பேரரசுக் கொள்கை எதிர்ப்பு, (4) நிறவெறிக்

கொள்கை எதிர்ப்பு, (5) பஞ்சசீலம், (6) அணி சேராமை, (7) அண்டை நாட்டுடன் நட்பு, (8) மண்டலக் கூட்டுறவு, (9) காமன்வெல்த் அமைப்பில் பங்கு, (10) பயங்கரவாத எதிர்ப்பு ஆகியன இந்திய வெளியுறவுக் கொள்கையின் முக்கிய அம்சங்களாக விளங்கி வந்துள்ளன.

***1. உலகச் சமாதானம் பேணுதல் :*** இந்தியா ஐக்கிய நாடுகள் சபையின் **அமைதியும் முன்னேற்றமும்** என்னும் கொள்கையில் நம்பிக்கைக் கொண்டுள்ளது. அமைதியின்றி மனித குல முன்னேற்றம் இல்லை. 1945-ஆம் ஆண்டு முதல் இந்தியா ஐ.நா. சபையின் உறுப்பினராக இருந்து வருகின்றது. நேரு அவர்களின் சகோதரி **திருமதி. விஜயலட்சுமி பண்டிட்** ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் முதல் பெண் தலைவராக 1953 - 54-ஆம் ஆண்டுகளில் பணியாற்றினர். ஐக்கியநாடுகள் சபையின் உறுப்பினர் என்ற முறையில் 1950-ஆம் ஆண்டு ஏற்பட்ட வட, தென் கொரியப் போரின் போதும், 1956-ஆம் ஆண்டு சூயஸ் சிக்கலின் போதும், காங்கோ (1960 - 64) பிரச்சினையின் போதும், அங்கோலா சிக்கலின் போதும் இந்தியா உலகப் பதட்ட நிலையினை குறைத்திட அரும்பாடு பட்டது. காங்கோ, அங்கோலா, காசா, சைப்ரஸ் பகுதிகளில் அமைதியை நிலைநாட்டிட ஐ.நாவிற்கு உதவும் வகையில் இந்தியா தனது இராணுவத்தினை அனுப்பிவைத்தது. 1991-ஆம் ஆண்டு ஏற்பட்ட வளைகுடாப் போர் நெருக்கடியை ஐ.நா. தீர்த்து வைத்திட இந்தியா தனது முழு ஆதரவினை அளித்தது.

**2. குடியேற்றக் கொள்கை எதிர்ப்பு :** இந்தியா ஆங்கிலேயரின் குடியேற்றக் கொள்கையினால் (Colonialism) மிகவும் பாதிப்பிற்குள்ளானது. குடியேற்றக் கொள்கையின் கீழ் ஏற்படும் பொருளாதாரச் சுரண்டலின் தீமைகளைப்பற்றி இந்தியா நன்கு அறிந்திருந்தது. எனவே உலகின் எந்தப் பகுதியிலும் குடியேற்றக் கொள்கை எந்த ஒரு வடிவிலும் நிலவக் கூடாது என இந்தியா கருதியது. குறிப்பாக ஆசியா, ஆப்பிரிக்கா, இலத்தீன் அமெரிக்க நாடுகளில் அந்நியர் குடியேற்றங்கள் நீக்கப்படுவதில் இந்தியா அக்கரை காட்டியது. எனவேதான் இந்தியாவின் வெளியுறவுக்

கொள்கையில் குடியேற்றக் கொள்கை எதிர்ப்பு ஒரு முக்கிய அம்சமானது.

**3. பேரரசுக் கொள்கை எதிர்ப்பு :** மேற்கு நாடுகளின் பேரரசுக் கொள்கையினால் ஏற்பட்ட பயங்கர விளைவுகள் குறித்து இந்தியா விழிப்புணர்வு கொண்டது. **வலிமை மிக்க நாடு எளிய நாட்டினை வென்று, அதனைத் தன் நாட்டுடன் இணைத்துக் கொண்டு ஆதிக்க நிர்வாகம் செய்வதைப் பேரரசுக் கொள்கை** என அழைக்கின்றோம். அத்தகைய பேரரசுக் கொள்கை முதல், இரண்டாம் உலகப் போர்களுக்கு (1914 - 18 மற்றும் 1939 - 45) ஒரு பெரும் காரணமாக விளங்கியது. இவ்வுலகப் போர்களினால் இந்தியா மிகவும் பாதிக்கப்பட்டதாலும், இரண்டாம் உலகப் போர் முடிந்த உடனே சுதந்திரம் பெற்றதாலும் பேரரசுக் கொள்கை எவ்வடிவில் எங்கு நிலவினாலும் அதனை எதிர்ப்பதை இந்தியா குறிக்கோளாகக் கொண்டிருந்தது. முன்பு நிலவிய பேரரசுக் கொள்கையின் வடிவைவிட தற்போது நிலவும் வளர்ந்த நாடுகளின் **பொருளாதாரப் பேரரசுக் கொள்கை** மிகவும் தீமையுடையதாகும். எனவே எத்தகைய வடிவிலான பேரரசுக் கொள்கையென்றாலும் அதனை இந்தியா எதிர்க்கும் ஒரு நாடாகும்.

**4. நிறவெறிக் கொள்கை எதிர்ப்பு :** மேலை நாடுகள் நிறவெறி அல்லது இனக் கொள்கையினைப் பின்பற்றின. அவை ஆசிய, ஆப்பிரிக்க மக்களை தாழ்மையுடன் நடத்தின. 1919-ஆம் ஆண்டு நடைபெற்ற பாரிசு அமைதி மாநாட்டில் ஜப்பான் நாடு இனச் சமத்துவத்திற்குக் கோரிக்கை விடுத்தபோது மேற்கு நாடுகள் அதனை நிராகரித்தன. எனினும் சீன, ஜப்பான் நாடுகளின் எழுச்சியானது மேலை நாடுகளின் உயர்வான எண்ணப் போக்கிற்கு ஒரு முற்றுப்புள்ளி இட்டது. காந்தி தன்னை இந்திய விடுதலைப் போரில் ஈடுபடுத்திக் கொள்ளும் முன்னர் தென் ஆப்பிரிக்க அரசின் இனவேறுபாட்டினை எதிர்த்துப் போராடி னார். எனினும் கறுப்பர்களுக்கு எதிரான தென் ஆப்பிரிக்க வெள்ளையர் அரசின் 'அபார்தீட்' என்று அழைக்கப்பட்ட நிற வேற்றுமைக் கொள்கை தொடர்ந்து நீடித்தது. அப்பிரச்சினையை இந்தியா முதன்முதலில் 1946-ஆம் ஆண்டு ஐ.நா. சபையில்

எழுப்பியது. **நெல்சன் மண்டேலாவின்** இடைவிடா போராட்டத்தினாலும் இந்தியா அளித்துவந்த தார்மீக ஆதரவினாலும் அண்மைக் காலத்தில்தான் நிற வேற்றுமைக் கொள்கை அகற்றப்பட்டது.

***5. பஞ்ச சீலம் :*** இந்தியாவும் சீனாவும் அண்டை நாடுகள். இரு நாடுகளுக்கு மிடையில் பல நூற்றாண்டுகளாக வரலாற்று பாரம்பரியமிக்க உறவு நீடித்து வந்தது. 1949-ஆம் ஆண்டு சீனா பொதுவுடைமை நாடாக உருவானபோது இந்தியா அந் நாட்டுடன் நெருக்கமாகப் பழகியது. சீனாவுக்கு நேருவும், இந்தியாவுக்கு சூ-யென்-லாயும் பயணம் மேற் கொண்டனர். இருநாடுகளும் 1954-ஆம் ஆண்டு ஐந்து அம்சங் களைக் கொண்ட **பஞ்ச சீலக் கொள்கையின்** அடிப்படையில் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.


நேருவும் சூ-யென்-லாயும்

***அவ்வைந்து அம்சங்கள் :***

1. ஒவ்வொருவரும் மற்ற நாட்டின் ஒற்றுமையையும், இறையாண்மையையும் மதித்தல்,
2. ஒருவருக்கொருவர் அத்துமீறாமை,
3. ஒருவர் மற்ற நாட்டின் உள் விவகாரங்களில் தலை யிடாமை,
4. சமத்துவம், பரஸ்பர நன்மைகள் மற்றும்
5. சமாதானச் சகவாழ்வு ஆகியனவாகும்.

இக்கொள்கையை 1955-ஆம் ஆண்டு இந்தோனேசியாவில் நடைபெற்ற **பான்டுங் மாநாட்டில்** கலந்து கொண்ட 29-திற்கும் மேற்பட்ட ஆப்பிரிக்க - ஆசிய நாடுகளும் ஏற்றுக் கொண்டன. அண்டை நாடுகளுடன் நட்புறவை வளர்த்துக் கொள்வதில் இக்கொள்கை இன்றும் மதிப்புடையதாக விளங்குகின்றது.

***6. அணிசேராமை :*** *'அணிசேராமை' அல்லது 'கூட்டுச் சேராமை' எனும் வார்த்தையை வி.கே. கிருஷ்ணமேனன் உருவாக்கினார். அதை ஜவஹர்லால் நேரு இந்திய வெளியுறவுக் கொள்கையின் அடிப்படையாக்கினார். இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் அமெரிக்க ஐக்கிய நாடும், முன்னாள் சோவியத் யூனியனும் (இரஷ்யா) பனிப்போர், இராணுவப் போட்டி, அணுஆயுதக் குவிப்பு, இராணுவ அணிகளை அமைத்தல் போன்ற செயல் களில் ஈடுபட்டு வந்தன. முதலாளித்துவ அமெரிக்க ஐக்கிய நாடு* **நேட்டோ** (NATO) என்னும் **வட அட்லாண்டிக் ஒப்பந்த அமைப் பினையும்** (North Atlantic Treaty Organisation) ***'சீட்டோ'*** (SEATO) **தென்கிழக்கு ஆசிய நாடுகள் ஒப்பந்த அமைப்பினையும்** (South East Asia Treaty Organisation) *ஊக்குவித்தது. பொதுவுடமை இரஷ்யா மேற்கில்* **வார்சா ஒப்பந்த நாடுகளையும்** (Warsaw Pact Countries), *கிழக்கில்* **பொதுவுடமைச் சீனாவினையும்** *ஊக் குவித்தது. அதனால் உலகப் பாதுகாப்பிற்கும் அமைதிக்கும் பெரும் அச்சுறுத்தல் உருவானது. இந்தியா இத்தகைய அணிகள் எதனுடனும் சேர விரும்பவில்லை. அதே போல் இந்தியா எந்த வொரு நாட்டுடன் உடன்பாடு கொள்ளவும் விரும்பவில்லை. இந்த நிலையே* ***அணிசேராமை*** *என அழைக்கப்படுகிறது.* **இந்நிலை நடுநிலை எனப்பொருள் படாது. இந்நிலை சர்வதேசப் பிரச்சனைகளைப் பொறுத்தவரை சுதந்திரச் செயல்பாடு எனப் பொருள்படும்.** புதிதாக அப்பொழுது சுதந்திரம் பெற்ற ஆப்பிரிக்க, ஆசிய நாடுகளும் இக்கொள்கையைப் பின்பற்ற வேண்டுமென இந்தியா விரும்பியது. இக்கொள்கைக்கு **பான்டுங் மாநாட்டில்** நல்லாதரவு கிட்டியது. இக்கொள்கையை ஏற்றுக் கொண்ட நாடுகள் அனைத்தும் நெருங்கி நட்பு கொண்டன. இதுவே **அணிசேரா இயக்கமாக** (Non-Aligned Movement) உரு வெடுத்தது. இந்தியாவின் **நேரு,** யூகோஸ்லேவியாவின் **டிட்டோ,** இந்தோனேசியாவின் **சுகர்னோ,** எகிப்தின் **நாசர்** இக் கொள்கையை முதலில் ஏற்றுக் கொண்ட தலைவர்களாவர். *1961-ஆம் ஆண்டு யூகோஸ்லேவியத் தலைநகரான* **பெல்கி ரேட்டில்** *அணிசேரா இயக்க நாடுகளின் முதல் மாநாடு நடை பெற்றது. 1964-ஆம் ஆண்டு இவ்வியக்கத்தின் இரண்டாம் மாநாடு எகிப்திலுள்ள* **கெய்ரோவில்** (Cairo) *நடைபெற்றது. இக்கொள்கையின் நற்திட்டங்களை அம்மாநாட்டில் லால் பகதூர்*

சாஸ்திரி வெளியிட்டார். அவைகள் : (1) அணு ஆயுதக் குறைப்பு, (2) எல்லைத் தகராறுகளை அமைதியுடன் தீர்த்தல், (3) அந்நிய ஆதிக்கம், அத்துமீறல், திசை திருப்பல், நிறவேற்றுமை - ஆகியனவையிலிருந்து விடுதலை, (4) சர்வதேச கூட்டுறவு மூலம் துரிதப் பொருளாதார வளர்ச்சியைக் கொண்டுவருதல், (5) ஐக்கிய நாடுகள் சபைக்கும், அதன் அமைதி மற்றும் வளர்ச்சித் திட்டத்திற்கும் முழு ஆதரவு அளித்தல் ஆகியன ஆகும்.

அணிசேரா நாடுகள், ஐக்கிய நாடுகள் சபையில் மூன்றாம் அணியாகச் செயல்பட்டன. அணிசேரா நாடுகளின் நியாயமான வாதங்களை ஆதரித்த ஆசிய, ஆப்பிரிக்கா, இலத்தீன், அமெரிக்க நாடுகள் **மூன்றாம் உலக நாடுகள்** (Third World Countries) என அழைக்கப்பட்டன. இருபதாம் நூற்றாண்டில் அணிசேரா இயக்கம் சுமார் 12 உச்சி மாநாடுகளைக் கண்டுள்ளது. இவ் வியக்கத்தில் 112-க்கும் மேற்பட்ட நாடுகள் பங்கு கொண்டு உள்ளன. உலக நாடுகள் பல்வேறு துருவங்களாகச் செயல்பட்டு வரும் இக்காலகட்டத்திலும் உலக அமைதியையும், பாது காப்பினையும் நோக்கமாகக் கொண்ட இவ்வியக்கம் இன்றும் தேவையுடைய ஒன்றாகவே உள்ளது.

**7. அண்டை நாடுகளுடன் நட்புக் கொள்கை :** இந்தியா எப்பொழுதும் சீனா, பாகிஸ்தான், வங்காளதேசம், நேபாளம், பூடான், மியான்மார் (பர்மா), இலங்கை, மாலத்தீவுகள் போன்ற தனது அண்டைநாடுகளுடன் நல்லுறவினையே வைத்துக் கொள்ள விரும்புகின்றது. இந்தியா தனது அண்டை நாடுகளுடன் மண்டலக் கூட்டுறவு (Regional Co-operation) அடிப்படையில் நட்புடன் செயல்பட்டு வருகின்றது. இந்தியாவின் முன்னாள் பிரதமரான **ஐ.கே. குஜ்ரால்** (I.K. Gujral) 1996-ஆம் ஆண்டு **ஐந்து அம்சங்களின்** அடிப்படையிலான இந்தியாவின் **'அண்டை நாட்டுக் கோட்பாட்டினை'** வெளியிட்டார். அவை (1) எதிர்பார்ப் பில்லா நட்பு பாராட்டுதல், (2) மற்ற நாட்டு ஒற்றுமையை மதித்தல், (3) பிற நாட்டு உள் விவகாரங்களில் தலையிடாமை, (4) தனது நாட்டுப் பகுதியை மற்ற நாட்டிற்கெதிராகப் பயன்படுத்த அனுமதியாமை, (5) பிரச்சனையைத் தீர்த்துக் கொள்வதில் நேரடிப் பேச்சு ஆகியனவாகும். இவை **குஜ்ரால் கோட்பாடு** என அழைக்கப்படுகின்றன.


இந்தியாவும் அதன் அண்டை நாடுகளும்
சார்க் அமைப்பு நாடுகள்
சீனா
திபெத்
பாகிஸ்தான்
நேபாளம்
பூடான்
இந்தியா
வங்காளதேசம்
மியான்மார்
அரபியக் கடல்
வங்கக் கடல்
வ
மே
கி
தெ
இலங்கை
மாலத்
தீவுகள்
இந்து மகாக் கடல்
★ சார்க் அமைப்பு நாடுகள்

***8. சார்க் மூலம் மண்டலக் கூட்டுறவு :*** இந்தியா, மண்டலக் கூட்டுறவில் நம்பிக்கைக் கொண்டுள்ளது. இதனடிப்படையில் பயனுற வங்காளதேசம் இந்தியாவுடன் ஒத்துழைத்திட முன் வந்தது. அதன் விளைவாக **தெற்கு ஆசிய நாடுகள் சார்க் அல்லது மண்டலக் கூட்டுறவிற்கான தெற்காசியச் சங்கம்** (South Asian Association for Regional Co-operation (SAARC) எனும் அமைப்பு உருவாக்கப்பட்டது. இவ்வமைப்பின் முதல் மாநாடு 1985-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வங்காள தேசத் தலைநகரான **டாக்காவில்** நடைபெற்றது. 1986-ஆம் ஆண்டு நேபாளத்தின் தலைநகரான காத்மண்டு (Kathmandu) இவ்வமைப்பின் தலைமை யகமானது, இவ்வமைப்பில், (1) இந்தியா, (2) வங்காள தேசம், (3) பாகிஸ்தான், (4) நேபாளம், (5) பூடான், (6) இலங்கை, (7) மாலத்தீவுகள் போன்ற 7 நாடுகள் தற்போது அங்கம் பெற்று உள்ளன. இவ்வமைப்பு ஒருவருக்கொருவர் சமூக, பொருளாதார, பண்பாட்டுத் துறைகளில் உதவி செய்து கொள்வதை நோக்க மாகக் கொண்டுள்ளது. இவ்வமைப்பு எத்தகைய அரசியல் கருது பொருளையும் கொண்டியங்கவில்லை. உறுப்பு நாடுகள் குடிநீர், எரிசக்தி, தகவல்தொடர்பு, போக்குவரத்து, சுற்றுச்சூழல், இடப் பெயர்வு, சுற்றுலா, வணிகம், முதலீடு போன்ற துறைகளில் தங்களுக்குள் ஒற்றுமையுடன் செயல்பட ஒப்புக் கொண்டுள்ளன. இந்நாடுகள் 1993-ஆம் ஆண்டு சாப்டா அல்லது **தெற்காசிய முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தம்** (South Asian Preferential Trade Agreement (SAPTA) ஒன்றினைச் செய்து கொண்டன. இவ் வமைப்பு தற்போதுவரை 12 உச்சி மாநாடுகளைக் கண்டுள்ளது. இந்தியா தெற்காசியப் பகுதியில் அமைதியையும் உறுதியையும் நிலைநிறுத்த தனது அண்டை நாடுகளுடன் ஒத்துழைப்பதில் மிகவும் ஆர்வமாக இருந்து வருகின்றது.

***9. காமன்வெல்த்தில் பங்கு :*** இங்கிலாந்தின் முன்னாள் குடியேற்ற நாடுகள் தங்களுக்குள் வணிக, பண்பாட்டுத் தொடர்புகளைக் கொண்டிருந்தன. அவைகள் காமன்வெல்த் என்ற அமைப்பினை ஏற்படுத்தின. இந்தியாவும் அவ்வமைப்பில் உறுப்பினராய்ச் சேர்ந்தது. காமன்வெல்த் நாடுகள் தங்களுக்குள் கல்வி, அறிவியல், தொழில் நுட்பம், பண்பாடு போன்ற துறைகளில் ஒத்துழைப்புடன் செயல்பட்டு வருகின்றன. அந்நாடுகளுடன்

இந்தியா தனது உறவினைத் துண்டித்துக் கொள்ள விரும்ப வில்லை.

***10. பயங்கரவாத எதிர்ப்பு :*** *பயங்கரவாத அமைப்புகளும் பயங்கரவாதமும் தற்போது அமைதிக்கு அச்சுறுத்தலாய் விளங்கி வருகின்றன. இந்தியா பயங்கரவாதத்தினை எதிர்க்கின்றது. இந்தியா தனது அண்டை நாடுகளுடனும், மற்ற உலக நாடுகளுடனும் சேர்ந்து சர்வதேச அளவில் பயங்கர வாதத்தினை எதிர்ப்பதில் ஒத்துழைத்திட என்றும் தயாராக உள்ளது.*

## அண்டை நாடுகளுடனும் மற்ற நாடுகளுடனும் இந்தியாவின் உறவுகள்

***சீன - இந்திய உறவுகள் :*** *1957-ஆம் ஆண்டு முதல், சீன-இந்திய உறவுகளில் பாதிப்புகள் ஏற்பட்டன. 1959-ஆம் ஆண்டு சீனா இந்தியாவுடன் எல்லைத் தகராற்றினை வளர்த்தது. அவ்வாண்டு திபெத்தில் சீனாவுக்கெதிராக எழுந்த புரட்சியை ஒடுக்க சீனா துருப்புகளை அனுப்பியது. திபெத்தின்* ***தலாய் லாமா*** *இந்தியா வுக்கு ஓடி வந்தார். சீனா இந்தியாவுடன் போரிடத் தயாரானது. 1962-ஆம் ஆண்டு சீனா இந்தியாவைத் தாக்கியது. அப்போரினால் இந்தியா பல இன்னல்களுக்குள்ளானது. அப்போரினைத் தொடர்ந்து 1976-ஆம் ஆண்டுவரை இந்தியச்-சீன உறவில் சுமுக நிலை அற்றுப்போனது. 1988-ஆம் ஆண்டு முன்னாள் இந்தியப் பிரதமர்* **இராஜீவ் காந்தி** சீனாவிற்குப் பயணம் செய்தபோதுதான் *மீண்டும் இந்தியச்-சீன உறவில் சுமுக நிலை ஏற்பட்டது. அவ்வாண்டு இந்தியாவும் சீனாவும்* **அறிவியல் மற்றும் தொழில் நுட்பம், வான்போக்குவரத்து, பண்பாட்டு பரிவர்த்தனை** *போன்ற மூன்று ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டன. 1993-ஆம் ஆண்டு இருநாடுகளும்* ***அமைதி மற்றும் அமைதி காத்தல்*** *எனும் மற்றொரு ஒப்பந்தத்திலும் கையெழுத்திட்டன. 1996-ஆம் ஆண்டு சீனத் தலைவர்* ***ஜியாங்ஜெமின்*** (Jiang Zemin) *இந்தியாவிற்கு வருகை புரிந்தார். அப்போது இந்தியாவும் சீனாவும் நம்பிக்கை வளர்க்கும் நடவடிக்கை ஒப்பந்தங்கள் நான்கில் கையெழுத் திட்டன. அது முதற்கொண்டு சீன-இந்திய உறவில் நிலையான முன்னேற்றம் ஏற்பட்டு வருகின்றது.*

***பாகிஸ்தானுடன் உறவுகள் :*** *இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் பிரிவினையால் ஏற்பட்ட காயங்கள் ஆறுவதற்கு நீண்டநாட்கள் ஆயின. இன்னமும் காஷ்மீரப் பிரச்சினை தீர்க்கப் படாத ஒன்றாகவும் இரு நாடுகளுக்குமிடையில் வாதத்திற்குரிய தாகவுமுள்ளது. சுதந்திரத்திற்குப் பின் காஷ்மீரத்தின் மன்னர் காஷ்மீரை இந்தியாவுடன் இணைத்தார். ஆனால் பாகிஸ்தானில் உள்ள காஷ்மீர விரும்பிகள் இன்றளவும் இணைப்பை எதிர்ப்பதுடன் அமைதி முயற்சிகளை முறியடிப்பதிலும் ஈடுபட்டு வருகின்றனர். அத்தகைய முயற்சிகளுக்கு அந்நிய சக்திகள் எரி தீயில் எண்ணெய் ஊற்றுவதுபோல உதவி வருகின்றன. அதனால் இந்தியா-பாகிஸ்தான் இடையில் 1948, 1965, 1971 மற்றும் 1999-இல் (கார்கில் போர்) போர்கள் நடைபெற்றன.* ***1966-ஆம் ஆண்டு தாஷ்கண்ட் ஒப்பந்தமும், 1972-ஆம் ஆண்டு சிம்லா ஒப்பந்தமும்*** *நேரடிப் பேச்சு வார்த்தை, உடன்பாட்டின் மூலம் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள வழி வகுக்கின்றன. இந்திய அரசு காஷ்மீரில் மக்களாட்சியை அமைத்துள்ளது. பாகிஸ்தானின் நீண்டகால இராணுவ ஆட்சி, இராணுவத்தின் மூலமும், தீவிரவாதத்தினாலும் காஷ்மீரை இந்தியாவிடமிருந்து பிரிக்க முயற்சிக்கிறது. ஆனால் இருநாட்டு மக்கள் மத்தியில் எவ்வித கசப்புணர்ச்சியும் இல்லை.*

***இந்தியாவும் இலங்கையும் :*** *இந்தியாவும் இலங்கையும் நல்ல அண்டை நாடுகள். இலங்கை எப்பொழுதும் இந்தியாவின் நியாயமான நிலையினை ஆதரித்து வரும் நாடாகும். 1990-ஆம் ஆண்டு தமிழர் இனப்பிரச்சினைத் தொடர்பாக இந்தியா தனது* ***அமைதி காக்கும் படையினை*** *இலங்கை அரசின் வேண்டு கோளுக்கிணங்க இலங்கைக்கு அனுப்பியது. மற்ற வகையில் இருநாடுகளின் உறவும் சுமுக நிலையிலேயே இருந்து வருகின்றது.*

***உலக நாடுகளுடனான உறவுகள் :*** *1973-ஆம் ஆண்டு வரை இந்திய-அமெரிக்க உறவுகள் பாராட்டும் வகையில் அமைய வில்லை. 1974-ஆம் ஆண்டு அமெரிக்க வெளியுறவுச் செயலர் ஹென்றி கிஸ்சிங்கர் இந்தியா வந்தார். அது முதற்கொண்டு இரு நாடுகளுக்கும் இடையில் வணிகம், அறிவியல், தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் ஒற்றுமை நிலவி வருகின்றது. இந்தியா 1953-ஆம் ஆண்டு முதல் இரஷ்யாவுடன் நல்ல உறவினை வைத்து*

வந்துள்ளது. இந்தியா தனது எஃகுத் தொழிற்சாலைகளை அமைத்திட இரஷ்யா, பிரான்சு, ஜெர்மனி, இங்கிலாந்து போன்ற நாடுகளின் உதவியினைப் பெற்றுள்ளது. இந்தியா ஆசியாவின் மற்ற நாடுகளான ஜப்பான், தென் கொரியா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுடன் தொடர்ந்து ஒற்றுமையுடன் செயலாற்றி வருகின்றது. அதே போன்று ஆப்பிரிக்க நாடுகள், மத்திய கிழக்கு, கனடா, ஆஸ்திரேலியா, இலத்தீன் அமெரிக்க நாடுகளுடனும் இந்தியா நல்லுறவினைப் பேணி வருகின்றது.

**கற்றல் அடைவுகள்**

1. மாணவர் இந்தியவெளியுறவுக் கொள்கையின் முக்கிய அம்சங்களை விளக்க முடியும்.
2. மாணவர் பஞ்ச சீலம், அணிசேராக் கொள்கைகளை விவரிக்க முடியும்.
3. மாணவர் சீன-இந்திய உறவுகளை விவாதிக்க முடியும்.
4. மாணவர் குஜ்ரால் கொள்கையை விளக்க முடியும்.
5. மாணவர் இந்தியா உலக நாடுகளுடன் கொண்டுள்ள உறவுகளைக் கோடிட்டுக் காட்ட முடியும்.

## சுயமதிப்பீடு

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்**

1. இந்தியா ஐ.நா. சபையின் உறுப்பினர் ஆன ஆண்டு

   அ. 1944    ஆ. 1945

   இ. 1947    ஈ. 1946

2. ‘அபார் தீட்’ கொள்கையைப் பின்பற்றிய நாடு

   அ. தென் ஆப்பிரிக்கா    ஆ. ஆசியா

   இ. சீனா    ஈ. ஆப்பிரிக்கா

3. முதல் அணிசேரா இயக்க மாநாடு நடைபெற்ற இடம்

   அ. கெய்ரோ    ஆ. டாக்கா

   இ. பெல்கிரேட்    ஈ. ஜகார்த்தா

4. சார்க் அமைப்பின் தலைமையிடம்

   அ. டாக்கா    ஆ. காத்மண்ட்

   இ. மாலே    ஈ. புது தில்லி

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. பான்டுங் மாநாடு நடைபெற்ற ஆண்டு ___________ ஆகும்.
2. பஞ்ச சீலம் ___________ கோட்பாடுகளைக் கொண்டுள்ளது.
3. சார்க் அமைப்பின் விரிவாக்கம் _________ ________ _________.
4. சீன-இந்தியப் போர் நடைபெற்ற ஆண்டு ___________.
5. கார்கில் போர் நடைபெற்ற ஆண்டு ___________.

**II. பின்வருவனவற்றைப் பொருத்துக**

| | |
|---|---|
| 1. திருமதி. விஜயலட்சுமி பண்டிட் | -- 1985 |
| 2. சார்க் | -- 1996 |
| 3. சாப்டா | -- யூகோஸ்லேவியா |
| 4. டிட்டோ | -- 1993 |
| 5. குஜ்ரால் கோட்பாடு | -- ஐ.நா. சபையின் முதல் பெண் தலைவர். |

**IV. சுருக்கமாக விடையளிக்கவும்**

1. பேரரசுக் கொள்கை என்றால் என்ன?
2. அணிசேரா இயக்கத்தின் முக்கியத் தலைவர்கள் யார்?
3. சாப்டாவை விரிவாக்குக.
4. சார்க் நாடுகள் பெயர்களை எழுதுக.
5. இராஜீவ் காந்தி எப்பொழுது சீனாவுக்குப் பயணம் சென்றார்?

**V. விரிவான விடை தருக**

1. இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையை விளக்குக.
2. இந்தியா அண்டை நாடுகளுடனும் மற்ற உலக நாடுகளுடனும் கொண்டுள்ள உறவுகளை விவரி.

**VI. செய்முறைப் பயிற்சிகள்**

1. வரை படத்தில் இந்தியாவின் அண்டை நாடுகளைக் குறிப்பிடுக.
2. மாணவரை நேரு, சூ-யென்-லாய், டிட்டோ, நாசர், இந்தியா வந்த மற்ற உலகத் தலைவர்களின் படங்களைச் சேகரிக்கச் சொல்லவும்.

# குடிமையியல்

அலகு - I

பாடம் - 1

## கூட்டாட்சி அரசு அமைப்பு

**கற்றல் நோக்கங்கள்**

1. மாணவர் கூட்டாட்சி அரசு பற்றிய அறிவினைப் பெறல்.
2. மாணவர் கூட்டாட்சி அரசின் அம்சங்கள் என்ன என்பதைத் தெரிந்து கொள்ளுதல்.
3. மாணவர் இந்தியக் கூட்டாட்சி அமைப்பின் தன்மையைத் தெரிந்து கொள்ளுதல்.
4. மாணவர் மத்திய, மாநில அரசுகள் மத்தியப்பகுதிகள், (யூனியன் பிரதேசங்கள்) இடையிலான உறவினைப் புரிந்து கொள்ளுதல்.

கூட்டாட்சி எனும் பொருள்படும் **பெடரேசன்** (Federation) என்ற ஆங்கிலச் சொல் இலத்தீன் மொழி வார்த்தையான **'பிடெஸ்'** (Foedus) என்பதிலிருந்து பெறப்பட்டதாகும். ஒரு கூட்டாட்சி அரசு என்பது மாநிலங்கள் ஒன்றிணைவதின் விளைவால் தோன்றுவதாகும். எனவே ஒரு கூட்டாட்சி அரசில் **மத்தியில் ஓர் அரசும், மாநில அரசுகளும்** என இரு அரசு அமைப்புகள் உள்ளன. இவ்விரு அரசு அமைப்புகளும் எழுதப்பட்ட (Written), நெகிழாத் தன்மை கொண்ட (Rigid) ஒரு அரசியலமைப்புச் சட்டத்தினால் பகிர்ந்தளிக்கப்பட்ட சுதந்திர அதிகாரங்களைக் கொண்டுள்ளன. மற்றொரு வகையில் கூறினால் ஒரு கூட்டாட்சி நாட்டில் மத்திய அரசும், மாநில அரசுகளும் உள்ளன. அமெரிக்க ஐக்கிய நாடு,

ஆஸ்திரேலியா, சுவிட்சர்லாந்து, இந்தியா, கனடா போன்ற நாடுகள் கூட்டாட்சி அரசுகளுக்கு உதாரணங்கள் ஆகும். ஒரு நாட்டில் ஒரே ஒரு அரசு அமைப்பு மட்டும் இருக்குமேயானால் அந்நாட்டினை **ஒற்றையரசு** (Unitary State) நாடு என அழைக்கிறோம். இங்கிலாந்து மற்றும் ஸ்ரீலங்கா போன்ற நாடுகள் ஒற்றையரசுகளுக்கு உதாரணங்களாகும்.

**கூட்டாட்சி அரசுகளின் அடிப்படை அம்சங்கள் :** ஒரு கூட்டாட்சி அரசு நான்கு அடிப்படை அம்சங்களைக் கொண்டுள்ளது. அவை பின்வருமாறு : 1. அரசியலமைப்புச் சட்டத்தின் தனி முதல் ஆதிக்கம், 2. மத்திய, மாநிலங்களுக்கிடையிலான அதிகாரப் பகிர்வு, 3. அரசியலமைப்புச் சட்டத்தின் நெகிழாத் தன்மை மற்றும், 4. சுதந்திரமான நீதித்துறை அமைப்பு உள்ளமை ஆகும்.

**1. அரசியலமைப்புச் சட்டத்தின் தனி முதல் ஆதிக்கம் :** ஒவ்வொரு கூட்டாட்சி அரசும் அவசியம் எழுதப்பட்ட ஒரு அரசியலமைப்புச் சட்டத்தினைப் பெற்றிருத்தல் வேண்டும். அவ்வரசியலமைப்புச் சட்டம் நெகிழாத் தன்மையுடைய ஒன்றாக இருத்தல் வேண்டும். மத்திய நிர்வாகம், சட்டமன்றம் மற்றும் மாநில நிர்வாகம், சட்டமன்றம் ஆகியவைகளின் அதிகாரங்கள், பணிகளை அரசியலமைப்புச் சட்டம் எல்லை வரையறைச் செய்து கூறுகின்றது. அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணாக நிர்வாகமோ அல்லது சட்டமன்றமோ செயலாற்றுதல் இயலாது.

**2. மத்திய, மாநிலங்களுக்கிடையிலான அதிகாரப் பகிர்வு :** ஒரு கூட்டாட்சி அரசியலமைப்புச் சட்டத்தில் மத்திய அரசு, மாநில அரசுகளுக்கிடையிலான அதிகாரங்கள் பகிர்வு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். பொதுவாக, தேசிய முக்கியத்துவம் வாய்ந்த அதிகாரங்கள் மத்திய அரசிற்கு ஒதுக்கப்படுகின்றன. மாநில முக்கியத்துவம் வாய்ந்த துறைகள் மாநில அரசுகளுக்கு வழங்கப்படுகின்றன. அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்படாத அல்லது எஞ்சிய அதிகாரங்கள் (Residuary Powers) மத்திய அல்லது மாநிலங்கள் வசம் ஒப்படைக்கப்படுகின்றன. இந்திய அரசியலமைப்புச் சட்டம் மத்திய அரசின் அதிகாரங்களை **மத்தியப்**

***பட்டியலில்*** (Union List) குறிப்பிடுகின்றது. அப்பட்டியலில் 97 துறைகள் இடம் பெற்றுள்ளன. ***மாநிலப் பட்டியலில்*** 66 துறைகள் இடம் பெற்றுள்ளன. **பொது** அல்லது **ஒருங்கிணைந்த பட்டியலில்** 47 துறைகள் இடம் பெற்றுள்ளன. குறிப்பிடப்படாத அல்லது **எஞ்சிய அதிகாரங்கள்** மத்திய அரசின் வசம் ஒப்படைக்கப் பட்டுள்ளன. இந்தப் பட்டியல்களில் ஏதேனும் மாற்றம் செய்ய வேண்டுமெனில் அதனை அரசியலமைப்புச் சட்டத்திருத்தம் மூலம் மட்டுமே செய்தல் முடியும்.

***3. அரசியலமைப்புச் சட்டத்தின் நெகிழாத்தன்மை :*** ஒரு கூட்டாட்சி அரசு எழுதப்பட்ட ஒரு அரசியலமைப்புச் சட்டத் தினைப் (Written Constitution) பெற்றிருக்கும். அதனை எளிதில் திருத்த முடியாது. எனவே அது ஒரு நெகிழா அரசியலமைப்புச் சட்டம் எனப்படும். அத்தகைய அரசியலமைப்புச் சட்டத்தினைத் திருத்தம் செய்ய கடினமான முறையினைப் பின்பற்ற வேண்டி யிருக்கும். ஆஸ்திரேலியா, சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளில் ஒவ்வொரு அரசியலமைப்புச் சட்ட திருத்தமும் மக்களின் ஒப்பு தலைப் பெற்றே நிறைவேற்றப்பட வேண்டும். அமெரிக்காவில் பாராளுமன்றத்தின் அறுதிப் பெரும்பான்மை ஆதரவுடனும், நான்கில் மூன்று பங்கு மாநிலச் சட்டமன்றங்களின் ஆதரவுடனும் தான் அரசியலமைப்புத் திருத்தங்களைச் செய்ய முடியும். இந்தியாவில் அரசியலமைப்புத் திருத்தங்கள் மூன்று வெவ்வேறு வகைகளில் செய்யப்படுகின்றன. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் சில பகுதிகளைத் திருத்தம் செய்ய நாடாளுமன்ற இரு அவைகளின் மூன்றில் இரு பங்கு பெரும்பான்மை ஆதரவு தேவைப்படுகின்றது. ஒரு மாநிலத்தின் பெயரினை மாற்றுதல், மாநில எல்லைகளை மாற்றியமைத்தல், புதிய மாநிலங்களை உருவாக்குதல் போன்ற திருத்தங்களைச் செய்ய நாடாளுமன்றத்தின் பெரும்பான்மை ஆதரவு இருந்தால் மட்டும் போதுமானதாகும். அரசியலமைப்புச் சட்டத்தின் ஒரு சில மற்ற பகுதிகளைத் திருத்தம் செய்ய வேண்டுமெனில் நாடாளுமன்ற இரு அவை களின் மூன்றில் இரு பங்கு பெரும்பான்மை ஆதரவும் நாட்டி லுள்ள பாதி மாநில சட்டமன்றங்களின் ஆதரவும் அவசியமாகும்.

***4. சுதந்திரமான நீதித்துறையும், அதன் நீதிமன்ற மறு ஆய்வு அதிகாரமும் :*** *சுதந்திரமான நீதித்துறை செயல்படுவது கூட்டாட்சி அரசின் தன்மையைக் குறிக்கின்றது. கூட்டாட்சி முறையில் மத்திய, மாநில அரசுகள் அரசியலமைப்புச் சட்ட வரையறைக் குள் தங்களது அரசியலமைப்புக் கடமைகளை நிறைவேற்று கின்றன. இருந்தபோதிலும் அவைகளுக்கிடையில் ஏதாவதொரு வகையில் மோதல்கள் ஏற்படும். அத்தகைய மோதல்களுக்குத் தீர்வு காண நீதி அறிவுரைத் தேவைப்படுகிறது. எனவே கூட்டாட்சி அரசில் தீர்வுக்கான கருத்தினை வழங்கவோ அல்லது அரசிய லமைப்புச் சட்டத்தினை விளக்கவோ ஒரு சுதந்திர நீதித்துறை அவசியம் தேவைப்படுகின்றது. உச்ச நீதிமன்றம் எடுக்கும் முடிவின்படி மத்திய, மாநில அரசுகள் ஒத்துப் போதல் வேண்டும். இதனை உச்ச நீதிமன்றத்தின்* ***நீதிமன்ற மறு ஆய்வு அதிகாரம்*** *எனவும் அழைக்கிறோம்.*

***கூட்டாட்சி அரசின் நிறைகள் :*** *கூட்டாட்சி அரசு அமைப்பினைப் பல அரசியல் அறிஞர்கள் ஏற்றுப் பரவலாகப் பாராட்டியுள்ளனர். கூட்டாட்சி அரசின் நிறைகளைப் பின்வரும் வரிகள் விளக்கு கின்றன : 1. கூட்டாட்சி அரசில் சிறு மாநிலங்கள் ஒன்றிணைந்து உறுதியான கூட்டரசு அமைத்து அதனால் வலிமை பெறுகின்றன, 2. பல்வேறு இனங்கள், பண்பாடுகள், மொழிகள், சமயங்கள் கொண்ட பெரிய நாடுகளுக்குக் கூட்டாட்சி அமைப்பு உகந்ததாகும் 3. இவ்வமைப்பில் வட்டார மற்றும் பகுதிப் பிரச்சினைகள் உடனடியாகத் தீர்க்கப்படுகின்றன, 4. கூட்டாட்சி அரசினால் சிறிய மாநிலங்களின் மதிப்பு உயருகின்றது, 5. சிறு மாநிலங்கள் தங்களைப் பொருளாதார வகையில் வலுப்படுத்திக் கொள்ளும் நன்மை பயப்பதாக இவ்வரசு முறை உள்ளது, 6. இம்முறையில் எதேச்சதிகார அரசுகள் தோன்றும் அபாயம் இல்லை, 7. இம் முறையில் மாநிலங்களின் திறமைகள் ஊக்குவிக்கப்படுகின்றன, 8. இவ்வரசில் வேலைப்பளு அதிகமில்லை, 9. அதிகாரம் மையப் படுத்துதலும் இம்முறையில் இல்லை.*

***கூட்டாட்சி அரசின் குறைகள் :*** *1. இம்முறையிலான அரசு செலவுடையதாகும், 2. சில சமயங்களில் உள்நாட்டு, வெளி*

நாட்டு விவகாரங்களில் முரண்பாடுகள் எழக்கூடும், 3. மத்திய, மாநிலங்களுக்கிடையில் உரிமை, அதிகாரம் போன்றவை குறித்து பல மோதல்கள் எழ வாய்ப்புண்டு, 4. அவ்வாறு மத்திய, மாநிலங்களுக்கிடையே ஏற்படும் மோதல்களால் தேசிய ஒருமைப்பாடு பாதிப்பிற்குள்ளாகலாம், 5. கால தாமதமும், ஊக்கம் வீணடிக்கப்படுதலும் நிகழலாம், 6. அரசியலமைப்புச் சட்டத்தின் நெகிழாத் தன்மையினால் அவ்வப்போது ஏற்படும் சமூக, பொருளாதார சவால்களைப் போக்கிட உடனடிச் சட்டத் தீர்வுகளை வழங்கிட முடியாது.

***மத்திய-மாநில உறவுகள் :*** இந்தியாவில் தற்போது 28 மாநிலங்களும், 6 மத்திய ஆட்சிப் பகுதிகளும் (யூனியன் பிரதேசங்கள்) 1 தேசிய தலைநகர்ப் பகுதியும் (டெல்லி) உள்ளன. நமது அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கியுள்ள கூட்டாட்சி அரசு அமைப்பினைப் பொறுத்தவரையில் உலகின் வேறு எந்தக் கூட்டாட்சி அரசுடனும் இதனை ஒப்பிட முடியாது. நமது நாட்டில் மத்திய, மாநில அரசுகளுக்கிடையிலான உறவுகள் பெரும் முக்கியத்துவம் பெறுகின்றன. தேசிய ஒற்றுமை, ஒருமைப்பாடு, சுதந்திரம் நாட்டின் இறையாண்மையைப் பாதுகாத்து வளர்த்திடவேண்டுமென்ற நோக்குடன் மத்திய, மாநில அரசுகளுக்கிடையில் அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கும் நமது அரசியலமைப்புச் சட்டத்தின் 235 முதல் 263 வரையிலான விதிகள் மத்திய அரசிற்குக் கூடுதல் அதிகாரங்களை வழங்குகின்றன. இந்தியக் கூட்டாட்சி முறை சுதந்திரமுடையதுமல்ல, சார்ந்தியங்குவதுமல்ல. ஆனால் மத்திய, மாநில இரு அரசுகளும் ஒன்றையொன்று சார்ந்தியங்கும் கொள்கையின் அடிப்படையில் இயங்குவதாகும்.

மத்திய, மாநில அரசுகளுக்கிடையிலான உறவுகளைப் பின்வரும் தலைப்புகளின் கீழ் விளக்கலாம் : 1. சட்டமுறையிலான உறவுகள், 2. நிர்வாக முறையிலான உறவுகள் மற்றும், 3. நிதி வகையிலான உறவுகள் ஆகியனவாகும்.

***1. சட்ட முறையிலான உறவுகள் :*** தேசிய முக்கியத்துவம் வாய்ந்த துறைகள் மத்தியப் பட்டியலில் இடம் பெற்றுள்ளன. பாதுகாப்பு,

வெளிநாட்டு விவகாரங்கள், இருப்புப் பாதைகள், அஞ்சல் மற்றும் தந்தி, காகிதப் பணம் மற்றும் நாணயங்கள் போன்ற சில முக்கியத் துறைகள் இப்பட்டியலில் சேர்க்கப்பட்டு உள்ளன. மாநிலச் சட்ட மன்றங்கள் சட்டமியற்றும் அதிகாரம் பெற்றுள்ள துறைகள் மாநிலப் பட்டியலில் இடம் பெற்றுள்ளன. சட்டம் மற்றும் ஒழுங்கு, காவல், சிறைச்சாலைகள், பொதுச் சுகாதாரம், உள்ளாட்சி அமைப்புகள், வேளாண்மை போன்ற சில முக்கியத்துறைகள் மாநிலப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன. பொதுப்பட்டியலில் (Concurrent List) சேர்க்கப்பட்டுள்ள துறை களின் மீது மத்திய, மாநில இரு அரசுகளும் சட்டங்களை இயற்ற உரிமை உண்டு. இருந்தபோதிலும் முரண்பாடு ஏற்படும் பொழுது மத்திய அரசு இயற்றும் சட்டமே மாநில அரசுச் சட்டத்தினைவிட செல்வாக்கு மிக்கதாய் விளங்கும். திருமணம், மணவிலக்கு (Divorce), கல்வி, தொழிலாளர் நலம் போன்றவை பொதுப்பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள துறைகளாகும்.

**2. நிர்வாக முறையிலான உறவுகள் :** மாநில அரசுகள் சாதாரண நிலையில் தங்களது வரையறைக்குட்பட்ட நிர்வாக விவகாரங் களில் முழு அதிகாரத்தினையும் கொண்டுள்ளன. எனினும் குறிப்பிட்ட சில நிலைமைகளின் கீழ் மத்திய அரசு மாநில நிர்வாக விவகாரங்களின் மீது தனது கட்டுப்பாட்டினைச் செலுத்து கின்றது. ஒட்டுமொத்தமாக மத்திய, மாநில அரசுகளுக்கிடையி லான நிர்வாக உறவுகளைப் பின்வரும் வகையில் விளக்கலாம் :

(1) நாடாளுமன்றம் சட்டமியற்றக்கூடிய அனைத்து விவரங் களின் மீதும் மத்திய அரசின் நிர்வாக அதிகாரங்கள் செல்லுபடி யாகும் (விதி 162), (2) மத்தியச் சட்டத்தினை செயல்படுத்த மாநில அரசுகளுக்கு மத்திய அரசு தேவையான நெறிமுறைகளை வழங்கலாம் (விதி 257), (3) இந்தியக் குடியரசுத் தலைவர் மாநில ஆளுநர்களை நியமிக்கிறார். மாநிலங்களில் செயலாற்றும் ஆளுநர்கள் மத்திய அரசின் நேரிடை பிரதிநிதிகளாய் இயங்கு கின்றனர். மாநில நிலைமைகள் குறித்து அவர்கள் மத்திய அரசிற்கு பருவ அறிக்கைகளை அனுப்புகின்றனர், (4) மத்தியப்

பகுதிகளை (Union Territories) மத்திய அரசு நேரிடையாக நிர்வாகம் செய்கின்றது. இப்பகுதிகளின் துணை ஆளுநர்கள் அல்லது தலைமை ஆணையர்களை இந்தியக் குடியரசுத் தலைவர் நியமிக்கின்றார், (5) இரு மாநிலங்களுக்கிடையில் தண்ணீரைப் பயன்படுத்துதல் மற்றும் எல்லைகள் குறித்த தகராறுகளைத் தீர்ப்பது தொடர்பாக நாடாளுமன்றம் விதிகளை வகுக்கலாம்.

***3. நிதி வகையிலான உறவுகள் :*** மத்திய, மாநில அரசுகளுக்கிடையிலான நிதி அதிகாரங்களையும் இந்திய அரசியலமைப்புச் சட்டம் பகிர்ந்தளிக்கிறது. இவ்வுறவுகள் சிலவற்றைப் பின்வரும் வகையில் விளக்கலாம் :

(1) மத்திய அரசு வருமான வரி போன்ற வரிகளை விதித்து, அவற்றினை வசூலிக்கின்றது. இவ்வரிகள் மூலம் பெறப்படும் வருமானம் மத்திய, மாநிலங்களுக்கிடையில் பங்கீடு செய்யப்படுகின்றது, (2) நாடாளுமன்றத்திற்குட்பட்டு மத்திய அரசு மாநிலங்களுக்கு கடன்களை வழங்கலாம். மாநில அரசுகள் பெறும் கடன்களுக்கு மத்திய அரசு பிணையாளர் உறுதி வழங்கலாம், (3) இந்தியத் **தலைமைக் கணக்கு தணிக்கை யாளரைக்** குடியரசுத் தலைவர் நியமனம் செய்கிறார். மாநிலக் கணக்குகள் தொடர்பான அதிகாரங்களும் கடமைகளும் அவரிடம் வழங்கப்படுகின்றன, (4) சில வரிகளின் மூலம் பெறப்படும் வருவாயிலிருந்து மாநிலங்களுக்கு ஒதுக்கப்படும் நிதி, மாநிலங்களுக்கான மானிய உதவிக் கொள்கைகள் ஆகியவற்றை ஆய்வு செய்திட ஐந்து ஆண்டிற்கொரு முறை ஒரு **நிதிக்குழுவினைக்** குடியரசுத் தலைவர் அமைக்கின்றார்.

நமது அரசியலமைப்புச் சட்டம் இவ்வாறாக மத்திய, மாநில அரசுகளுக்கிடையில் அதிகாரங்களைப் பகிர்வு செய்கின்றது. மத்திய, மாநில இரு அரசுகளும் தங்கள் அதிகாரங்களைச் சுதந்திரமாகச் செயல்படுத்த உரிமை பெற்றுள்ளன. மத்திய - மாநில உறவுகளை விசாரிக்க முன்னாள் பிரதம அமைச்சர் இந்திரா காந்தி **சர்க்காரியா குழுவினை** நியமித்தார். அக்குழு அரசியலமைப்புச் சட்ட வரையறைக்குள் மத்திய,

மாநில அரசுகளுக்கிடையிலான உறவுகளை மேம்படுத்தச் சில பரிந்துரைகளைச் செய்தது.

**கற்றல் அடைவுகள்**

1. மாணவர் கூட்டாட்சி அரசு என்றால் என்ன என்பதை விளக்க முடியும்.
2. மாணவர் கூட்டாட்சி அரசின் அடிப்படை அம்சங்களை விளக்க முடியும்.
3. மாணவர் கூட்டாட்சி அரசின் நிறைகள், குறைகளை விவரிக்க முடியும்.
4. மாணவர் மத்திய, மாநிலங்களுக்கிடையிலான உறவுகளைக் குறிப்பிட முடியும்.

## சுய மதிப்பீடு

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்**

1. 'பிடெஸ்' என்பது ஒரு

அ. கிரேக்க வார்த்தை  ஆ. இலத்தீன் வார்த்தை

இ. ஆங்கில வார்த்தை  ஈ. மேலுள்ள எதுவும் இல்லை.

2. கூட்டாட்சி அரசின் அடிப்படை அம்சமாக உள்ளவை

அ. இரு மாநிலங்கள்  ஆ. ஒற்றை அரசு மட்டும்

இ. இரு நாடுகள்  ஈ. மத்திய அரசும், மாநிலங்களும்

3. மத்தியப் பட்டியலில் உள்ள துறைகளின் எண்ணிக்கை

அ. 67  ஆ. 97

இ. 47  ஈ. 57

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. அமெரிக்க ஐக்கிய நாடு ஒரு __________ அரசு.
2. இந்தியாவில் எஞ்சிய அதிகாரங்கள் ________ அரசிடம் உள்ளன.
3. மாநிலப் பட்டியலில் _________, _________, _________ போன்ற துறைகள் உள்ளன.
4. கூட்டாட்சி அரசுகள் ____________ நீதித்துறையைக் கொண்டு உள்ளன.

**III. பின்வருவனவற்றைப் பொருத்துக**

| | | |
|---|---|---|
| 1. பொதுப்பட்டியல் | -- | கூட்டாட்சி அரசின் ஒரு அம்சம் |
| 2. இருப்புப் பாதைகள் | -- | ஒற்றையரசு |
| 3. நெகிழாத் தன்மை | -- | கல்வி |
| 4. துணை ஆளுநர் | -- | மத்தியப் பட்டியல் |
| 5. இங்கிலாந்து | -- | மத்திய ஆட்சிப் பகுதிகள் |

**IV. சுருக்கமாக விடையளி**

1. கூட்டாட்சி என்றால் என்ன?
2. கூட்டாட்சி அரசின் அம்சங்கள் யாவை?
3. கூட்டாட்சி அரசின் நிறைகளைச் சுருக்கமாக விவாதி.
4. மத்திய, மாநில அரசுகளுக்கிடையிலான உறவுகளின் மூன்று தலைப்புகளைப் பட்டியலிடவும்.

**V. விரிவான விடை தருக**

1. கூட்டாட்சி அரசின் நிறைகள், குறைகளைக் குறிப்பிடுக.
2. இந்தியாவில் மத்திய, மாநில அரசுகளுக்கிடையிலான உறவுகளை விளக்குக.

**VI. செய்முறைப் பயிற்சிகள்**

1. மத்திய, மாநில அரசுகளுக்கிடையிலான அதிகாரப் பகிர்வு பற்றிய அட்டைப்படம் ஒன்று தயார் செய்க.
2. மாணவர் இந்திய மாநிலங்கள், மத்தியப் பகுதிகளின் பட்டியலைத் தயாரித்தல்.

பாடம் - 2

# இந்தியாவின் மத்திய அரசு

**கற்றல் நோக்கங்கள்**

1. மாணவர் மத்திய நிர்வாக, சட்டமன்ற, நீதித்துறை அங்கங்களின் அதிகாரங்கள், பணிகளைப் பற்றி புரிந்து கொள்ளுதல்.
2. மாணவர் இந்திய குடியரசுத் தலைவர், துணைக் குடியரசுத் தலைவர், பிரதம அமைச்சர் ஆகியோர் தேர்வுக்கான தகுதிகளைப் பற்றி அறிதல்.
3. மாணவர் அமைச்சரவைச் செயல்படும் விதம் பற்றிய அறிவினைப் பெறல்.
4. மாணவர் இந்திய நாடாளுமன்றத்தின் அதிகாரங்கள், பணிகளைப் பற்றித் தெரிந்து கொள்ளுதல்.
5. மாணவர் இந்திய உச்ச நீதிமன்றம் செயல்படும் விதத்தினைப் புரிந்து கொள்ளுதல்.

மத்திய அரசு தான் நமது நாட்டின் மேல் நிலை அரசாகும். மத்திய அரசின் தலைமையகம் **புது தில்லியில்** (New Delhi) அமைந்துள்ளது. மத்திய அரசு **மத்திய நிர்வாகம், சட்ட மன்றம், நீதித்துறை** என அழைக்கப்படும் மூன்று அங்கங்களைக் கொண்டு உள்ளது. மத்திய நிர்வாகம் இந்தியக் குடியரசுத் தலைவர், துணைக் குடியரசுத் தலைவர் மற்றும் பிரதம அமைச்சரின் தலைமையிலான அமைச்சரவையைக் கொண்டதாகும். மத்திய சட்டமன்றம் **நாடாளுமன்றம்** என அழைக்கப்படுகிறது. அவ்வமைப்பு **இராஜ்ய சபா** எனப்படும் மாநிலங்களவையையும் **லோக்சபா** எனப்படும் மக்களவையையும் (இரு அவைகள்) கொண்டதாகும். மத்திய நீதித்துறை இந்திய உச்ச நீதிமன்றத்தினைக் கொண்டுள்ளது. இவ்வங்கங்களின் அமைப்பு, அதிகாரங்கள், பணிகளைக் கீழ்க்கண்டவாறு விளக்கலாம் :


மத்திய அரசு
நிர்வாகம்
சட்ட மன்றம்
நீதி மன்றம்
இந்தியக் குடியரசுத் தலைவர்
துணைக் குடியரசுத் தலைவர்
பிரதம அமைச்சர்
அமைச்சரவைக் குழு
நாடாளு மன்றம்
லோக் சபா
இராஜ்ய சபா
543 பேர் மக்களால் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர்.
2 பேர் இந்தியக் குடியரசுத் தலைவராய் நியமிக்கப் படுகின்றனர்.
238 பேர் மாநிலச் சட்ட மன்றங்களினால் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர்.
12 பேர் இந்தியக் குடியரசுத் தலைவரால் நியமிக்கப் படுகின்றனர்.
இந்திய உச்ச நீதிமன்றம்
இந்தியத் தலைமை நீதிபதி
25 மற்ற நீதிபதிகள்

**குடியரசுத் தலைவர் :** இந்தியக் குடியரசுத் தலைவர் நாட்டின் முதல் குடிமகன் / குடிமகள் ஆவார். குடியரசுத் தலைவரே நமது அரசின் தலைவராவார். அவர் நமது நாட்டின் மிக உயர்ந்த பதவியினை வகிக்கின்றார். மத்திய அரசின் அனைத்து நிர்வாக அதிகாரங்களும் சட்டப்படி குடியரசுத் தலைவரிடமே உள்ளன.

**குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான தகுதிகள் :** இந்தியக் குடியரசுத் தலைவர் பதவிக்குத் தேர்தலில் போட்டியிட ஒருவர் பின்வரும் தகுதிகளைப் பெற்றிருத்தல் வேண்டும் : (1) அவர் இந்தியக் குடிமகனாய் / குடிமகளாய் இருத்தல் வேண்டும், (2) அவர் முப்பத்தைந்து வயதினைப் பூர்த்தி அடைந்தவராக இருத்தல் வேண்டும், (3) அவர் மத்திய அரசிலோ, மாநில அரசிலோ அல்லது உள்ளாட்சி அமைப்பிலோ ஊதியம் பெறும் பதவி வகித்தல் கூடாது,(4) அவர் லோக் சபா என அழைக்கப்படும் மக்களவையின் உறுப்பினராவதற்குரிய மற்ற தகுதிகளைப் பெற்றிருத்தல் வேண்டும், (5) அவரது பெயரைக் குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் வாக்காளர் மன்றத்தில் (Electoral College) இடம் பெற்றும் குறைந்த பட்ச பத்து வாக்காளர்கள் முன்மொழிதலும் (Proposals) மற்றுமொரு பத்து வாக்காளர்கள் வழி மொழிதலும் (Seconders) வேண்டும். குடியரசுத் தலைவரின் பதவிக்காலம் 5 ஆண்டுகளாகும். அவர் மீண்டும் தேர்ந்தெடுக்கப் பட தகுதியுடையவராவார்.

இந்தியக் குடியரசுத் தலைவரை லோக் சபா, இராஜ்ய சபாவின் **தேர்ந்தெடுக்கப்பட்ட** உறுப்பினர்களும், அனைத்து மாநிலங்களின் **தேர்ந்தெடுக்கப்பட்ட** மாநில சட்டப் பேரவைகளின் உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கின்றனர். குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவர் இந்தியத் தலைமை நீதிபதியின் முன்னிலையில் பதவி உறுதி மொழியினை அல்லது பதவிப் பிரமாணத்தினை ஏற்றுக் கொள்ளல் வேண்டும்.

**குடியரசுத் தலைவரின் அதிகாரங்களும் பணிகளும் - 1. நிர்வாக அதிகாரங்கள் :** இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி மத்திய அரசின் நிர்வாக அதிகாரங்கள் அனைத்தும் குடியரசுத் தலைவரிடமே உள்ளன. அவ்வதிகாரங்களை அவர் நேரிடை

யாகவோ அல்லது அவர் கீழ் பணிபுரியும் அலுவலர்கள் மூலமாகவோ செயல்படுத்தலாம். குடியரசுத் தலைவர் தனது பணிகளைச் செயல்படுத்த உதவிடவும், அறிவுரை வழங்கிடவும் பிரதம அமைச்சரின் தலைமையிலான அமைச்சரவைக் குழு உள்ளது. மத்திய அரசின் அனைத்து நிர்வாக நடவடிக்கைகளும் குடியரசுத் தலைவரின் பெயரிலேயே செயல்படுத்தப் படுகின்றன.

குடியரசுத் தலைவர் பிரதம அமைச்சரையும், மற்ற மத்திய அமைச்சர்களையும், மாநில ஆளுநர்களையும், உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி, மற்ற நீதிபதிகளையும், உயர்நீதிமன்ற நீதிபதிகளையும் மற்றும் அனைத்து முக்கிய அலுவலர்களையும் நியமிக்கின்றார்.

**2. சட்ட அதிகாரங்கள் :** குடியரசுத் தலைவர் ஒரு ஆண்டில் நாடாளுமன்றத்தைக் குறைந்த பட்சம் இரு முறைக் கூட்டுகிறார். குடியரசுத் தலைவர் நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் கூட்டத்தையோ அல்லது ஒரு அவையின் கூட்டத்தையோ ஒத்தி வைக்கவும் அல்லது முடிவுக்குக் கொண்டு வரவும் அதிகாரம் கொண்டவர். லோக் சபா எனப்படும் மக்களவையைக் கலைக்க குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் உண்டு. குடியரசுத் தலைவர் இராஜ்ய சபா எனப்படும் மாநிலங்களவைக்கு 12 உறுப்பினர் களை நியமிக்கின்றார். கலை, அறிவியல், இலக்கியம் மற்றும் சமூகச் சேவை போன்ற துறைகளில் சிறப்புப் பெற்றவர்களில் சிலர் அந்நியமனத்திற்குத் தகுதியுடையவர்கள். மேலும் ஆங்கிலோ - இந்தியச் சமூகத்தினர் லோக் சபாவில் போதுமானப் பிரதி நிதித்துவம் பெறவில்லை என அவர் கருதினால் அச்சமூகத்தி லிருந்து இரு உறுப்பினர்களுக்கு மிகாமல் லோக் சபாவிற்கு நியமிக்கலாம்.

குடியரசுத் தலைவர் நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்து கிறார். அவர் இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்திலும் அல்லது ஏதாவது ஒரு அவையில் தனியாகவும் உரை நிகழ்த்தலாம். இரு அவைகளுக்கும் ஏதேனும் கருத்து வேறுபாடுகள் ஏற்படுமாயின் அவைகளைத் தீர்க்க குடியரசுத் தலைவர் லோக் சபா மற்றும்

இராஜ்ய சபாவின் கூட்டுக் கூட்டத்தைக் கூட்டலாம். நாடாளு மன்றத்தினால் நிறைவேற்றப்படும் எந்த ஒரு மசோதாவும் குடியரசுத் தலைவரின் இசைவு அல்லது ஒப்புதல் இன்றிச் சட்டமாகாது. நாடாளுமன்றத்தின் கூட்டம் நடைபெறாத சமயங்களில் அவசரச் சட்டத்தினைப் பிறப்பிக்க குடியரசுத் தலைவருக்கு அதிகாரமுண்டு.

***3. நிதி அதிகாரங்கள் :*** குடியரசுத் தலைவரின் பரிந்துரை யில்லாமல் எந்தவொரு நிதி மசோதாவையும் நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்த முடியாது. இந்திய அரசியலமைப்புச் சட்டம் இந்திய எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து (Contingency Fund of India) செலவழிக்கும் உரிமையைக் குடியரசுத் தலைவருக்கு வழங்கியுள்ளது. அவர் அந்நிதியிலிருந்து நாடாளுமன்றத்தின் இறுதி அங்கீகாரம் பெறும் முன்னர் அரசின் எதிர்பாராச் செலவு களைச் சமாளிக்க அரசுக்கு முன்பணம் வழங்க அதிகாரம் பெற்று உள்ளார். ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு தடவை அல்லது மாநிலங் களின் கோரிக்கையின் பேரில் குடியரசுத் தலைவர் ஒரு **நிதிக் குழுவை** நியமிக்கிறார்.

***4. நீதி அதிகாரங்கள் :*** குடியரசுத் தலைவர் கைதிகளுக்கு மன்னிப்பு வழங்கவும், தண்டனையை ஒத்திவைக்கவும் அல்லது குறைக்கவும் அதிகாரம் பெற்றுள்ளார். குடியரசுத் தலைவர் அரசியல் சட்டம் தொடர்பான விவகாரங்கள் மீது உச்சநீதி மன்றத்தின் ஆலோசனையைப் பெற உரிமை பெற்றுள்ளார்.

***5. நெருக்கடி கால அதிகாரங்கள் :*** இந்தியக் குடியரசுத் தலை வரிடம் நெருக்கடி கால அதிகாரங்கள் உள்ளன. அவை : (அ) போர் அல்லது வெளிநாட்டுப் படையெடுப்பு அல்லது ஆயுதப் புரட்சியின் போது நெருக்கடி நிலையை அறிவித்தல், (ஆ) மாநிலங்களில் அரசியலமைப்பு நிர்வாகம் செயலிழக்கும்போது நெருக்கடி நிலையை அறிவித்தல், மற்றும், (இ) நிதி நெருக்கடி நிலையினை அறிவித்தல் ஆகும்.

***துணைக் குடியரசுத் தலைவர் :*** நமது அரசியலமைப்புச் சட்டம் ஒரு துணைக் குடியரசுத் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட வகை

## 1950 முதல் நமது குடியரசுத் தலைவர்கள்



டாக்டர்
இராசேந்திர பிரசாத்
1950-1962



டாக்டர்
இராதாகிருஷ்ணன்
1962-1967



டாக்டர்
ஜாகீர் உசேன்
1967-1969



வி.வி. கிரி
1969-1974



பக்ருதீன் அலி அகமது
1947-1977



என். சஞ்சீவ ரெட்டி
1977-1982



கியானி ஜெயில்சிங்
1982-1987



ஆர். வெங்கட்ராமன்
1987-1992



டாக்டர் எஸ்.டி சர்மா
1992-1997



கே.ஆர். நாராயணன்
1997-2002



டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம்
2002-

செய்கிறது. அவரை நாடாளுமன்றத்தின் இரு அவைகளைச் சேர்ந்த உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கின்றனர். இப்பதவிக்குப் போட்டியிடும் ஒருவர் இந்தியக் குடிமகனாயும், அல்லது குடிமகளாயும், 35 வயது நிரம்பியவராகவும், இராஜ்ய சபாவில் ஒரு உறுப்பினராவதற்குரிய தகுதிகளையும் பெற்றிருத்தல் வேண்டும். துணைக் குடியரசுத் தலைவரின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள். துணைக் குடியரசுத் தலைவர், பதவி வழியே (Ex-Officio) இராஜ்ய சபாவின் தலைவராகச் செயலாற்றுகிறார். குடியரசுத் தலைவர் உடல்நலக் குறைவால் தனது கடமைகளை ஆற்ற இயலாதபோதும் அல்லது நாட்டில் இல்லாத போதும் துணைக் குடியரசுத் தலைவர் குடியரசுத் தலைவரின் பணிகளைக் கவனிப்பார். குடியரசுத் தலைவர் பதவி, அவரது பதவி விலகலால், இறப்பு அல்லது குற்றத்தாக்கல் (Impeachment) மூலம் காலியாகும்போது துணைக் குடியரசுத் தலைவர் அதிகபட்சம் ஆறு மாத காலத்திற்குத் குடியரசுத் தலைவராகப் பொறுப்பு வகிக்கலாம்.

**பிரதம அமைச்சரும் அமைச்சரவைக் குழுவும் :** அரசியலமைப்பு சட்டத்தின்படி குடியரசுத் தலைவருக்கு உதவிடவும் அறிவுரை வழங்கிடவும் பிரதம அமைச்சரைத் தலைவராகக் கொண்ட ஒரு மத்திய அமைச்சரவைக் குழு செயல்படுகின்றது. குடியரசுத் தலைவர் அமைச்சரவை வழங்கும் அறிவுரையை மறு பரிசீலனைச் செய்யச் சொல்லலாம். ஆனால் மறு பரிசீலனைக் குப் பின்னர் அந்த அறிவுரையின்படி அவர் நடந்து கொள்ளுதல் வேண்டும்.

**பிரதம அமைச்சரின் நியமனம் :** லோக் சபாவின் (மக்களவை) பெரும்பான்மைக் கட்சித் தலைவரைக் குடியரசுத் தலைவர் பிரதம அமைச்சராக நியமிக்கின்றார். மற்ற அமைச்சர்களையும், குடியரசுத் தலைவர் பிரதம அமைச்சரின் ஆலோசனையின்பேரில் நியமிக்கின்றார். லோக் சபாவில் எந்த ஒரு கட்சிக்கும் தனிப் பெரும்பான்மை பலம் இல்லையெனில் குடியரசுத் தலைவரின் கருத்துப்படி எந்தக்கட்சி அமைச்சரவையை அமைக்க முடியுமோ அதன் தலைவரை அவர் அழைத்து அரசு அமைக்கக் கூறலாம்.

## 1947 – முதல் இந்தியாவின் பிரதம அமைச்சர்கள்

| எண் | பெயர் | ஆண்டு |
|---|---|---|
| 1. | திரு ஜவஹர்லால் நேரு | 1947-1964 |
| 2. | திரு லால் பகதூர் சாஸ்திரி | 1964-1966 |
| 3. | திருமதி இந்திரா காந்தி | 1966-1977 |
| 4. | திரு மொரார்ஜிதேசாய் | 1977-1979 |
| 5. | திரு சரண்சிங் | 1979-1980 |
| 6. | திருமதி இந்திரா காந்தி | 1980-1984 |
| 7. | திரு இராஜிவ் காந்தி | 1984-1989 |
| 8. | திரு வி.பி. சிங் | 1989-1990 |

## 1947 - முதல் இந்தியாவின் பிரதம அமைச்சர்கள்

| எண் | பெயர் | ஆண்டு |
|---|---|---|
| 9. | திரு சந்திர சேகர் | 1990-1991 |
| 10. | திரு பி.வி. நரசிம்ம ராவ் | 1991-1996 |
| 11. | திரு ஏ.பி. வாஜ்பேயி | மே 1996 |
| 12. | திரு எச்.டி. தேவகௌடா | 1996-1997 |
| 13. | திரு ஐ.கே. குஜ்ரால் | 1997-1998 |
| 14. | திரு ஏ.பி. வாஜ்பேயி | ஏப்ரல் 1998 |
| 15. | திரு ஏ.பி. வாஜ்பேயி | 1999-2004 |
| 16. | டாக்டர் மன்மோகன் சிங் | 2004- |

குடியரசுத் தலைவர் அமைச்சர்களுக்குப் பதவிப் பிரமாணமும் இரகசியக்காப்புப் பிரமாணமும் செய்து வைக்கின்றார். பிரதம அமைச்சர், மற்ற அமைச்சர்களின் ஊதியங்களையும், படிகளை யும் நாடாளுமன்றம் நிர்ணயிக்கின்றது. நாடாளுமன்றத்தில் உறுப்பினராய் இல்லாதவர் கூட அமைச்சராய் நியமிக்கப் படலாம். ஆனால் அவர் 6 மாதங்களுக்குள் நாடாளு மன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படல் வேண்டும்.

அமைச்சர்கள் தனிப்பட்ட முறையிலும், ஒட்டு மொத்த மாகவும் மக்களவைக்கு (லோக் சபா) பொறுப்புடையவர்களாவர்.

மத்திய அமைச்சர்கள் மூன்று வகையாக உள்ளனர். பிரதம அமைச்சரைத் தவிர **கேபினெட்** அல்லது **ஆட்சிக்குழு அமைச்சர்கள், இராசாங்க அமைச்சர்கள்** (Ministers of State) **துணை அமைச்சர்கள்** என அவர்கள் மூவகையாக அழைக்கப்படுகின்றனர். கேபினெட் அமைச்சர்கள் அரசின் முக்கியத் துறைகளை நிர்வகித்து பெரும்பாலான கொள்கைகளைத் தீர்மானிக்கின்றனர்.

இரண்டாவது, மூன்றாவது வகை அமைச்சர்கள் கேபினெட் உறுப்பினர்கள் அல்ல. அவர்களைச் சிறப்பு விருந்தினர்களாக அழைத்தாலொழிய அவர்கள் கேபினெட் கூட்டங்களில் கலந்து கொள்ள முடியாது. இராசாங்க அமைச்சர் துணை அமைச்சரை விடத் தகுதியில் உயர்ந்தவராவார். அவர் தனித்தும் அல்லது ஒரு கேபினெட் அமைச்சரின் கீழும் பணியாற்றலாம். துணை அமைச்சர் கேபினெட் அமைச்சருக்கு உதவியாளராகப் பணியாற்றுவார்.

**பிரதம அமைச்சரின் பதவியும் அதிகாரங்களும் :** இந்தியாவில் உண்மையான நிர்வாக அதிகாரங்கள் பிரதம அமைச்சரிடத்தி லேயே உள்ளன. பிரதம அமைச்சர் தான் அரசின் துறைகளை அமைச்சர்களுக்கு ஒதுக்கீடு செய்கிறார். பிரதம அமைச்சர் எந்த வொரு அமைச்சரையும் பதவி விலகக் கோரலாம்.

பிரதம அமைச்சர், தான் தலைமை வகிக்கும், கேபினெட் அல்லது அமைச்சரவைக் கூட்டத்தின் தேதியினையும் கருது பொருளையும் (Agenda) குறித்து முடிவு செய்வார். பிரதம அமைச்சரே கேபினெட்டின் தலைவர். மற்ற அமைச்சர்கள்

அவருடைய சகாக்கள் ஆவர். கேபினெட் கூட்டம் நடைபெறாத பொழுது பிரதம அமைச்சர் தனது மூத்த சகாக்கள் இருவர் அல்லது மூவரை இயல்பாகக் கலந்தாலோசிக்கலாம். பிரதம அமைச்சர் பல்வேறு துறைகளின் பணிகளையும் மேற்பார்வை யிடுகிறார்.

**கேபினெட் அல்லது அமைச்சரவை :** நிர்வாகத்தின் மையமாக விளங்கும் கேபினெட் என்பது மூத்த அமைச்சர்களைக் கொண்ட ஒரு தனிப்பட்ட அமைப்பு ஆகும். அரசின் முக்கிய முடிவுகளைக் கேபினெட் எடுக்கின்றது. மற்ற அமைச்சர்கள் அம்முடிவின்படி செயல்படுதல் வேண்டும்.

நாடாளுமன்ற கூட்டத் தொடர் நடைபெறும் தேதி, ஒத்தி வைக்கப்படும் தேதிகளைக் குறித்து முடிவெடுப்பது கேபினெட் டின் முக்கியச் சட்டமன்றப் பணியாகும். அவசரச் சட்டங்களைப் பிறப்பிக்க குடியரசுத் தலைவருக்கு கேபினெட் பரிந்துரைகளைச் செய்கிறது. அரசியல் சட்டத் திருத்த மசோதாக்களைக் கொண்டு வருவதிலும் கேபினெட் முக்கியப்பங்கு வகிக்கின்றது.

அனைத்து அமைச்சர்களின் கருத்துக்களையும் ஒருங் கிணைத்து தேசியக் கொள்கைகளை வகுப்பது கேபினெட்டின் நிர்வாகப் பணியாகும். கேபினெட்டின் விவாத அடிப்படையில் நிதி அமைச்சர் ஆண்டு வரவு-செலவு திட்டத்தை (Annual Budget) தயார் செய்கிறார். எனவே நிதி மசோதாக்களின் பிறப்பிடம் கேபினெட்டேயாகும். அதன் பின் அவை குடியரசுத் தலைவரின் பரிந்துரைகளுடன் மக்களவையில் அறிமுகப்படுத்தப்படுகின்றன.

கேபினெட், அரசின் வெளிநாட்டுக் கொள்கையை முடிவு செய்கிறது. சர்வதேச உடன்படிக்கைகளை அங்கீகரிக்கின்றது. மேலும் பல்வேறு நாடுகளுக்கு இந்தியத் தூதுவர்களை நியமிப்பதிலும் முக்கியப்பங்கினை வகிக்கின்றது.

**இந்திய நாடாளுமன்றம் :** இந்திய நாடாளுமன்றம் நமது நாட்டின் குடியரசுத் தலைவர், **மாநிலங்களவை** (இராஜ்ய சபா) மற்றும் **மக்களவை** (லோக் சபா) யைக் கொண்டதாகும்.

**இராஜ்ய சபா உறுப்பினராவதற்குரிய தகுதிகள் :** இராஜ்ய சபா உறுப்பினராவதற்கு ஒரு வேட்பாளர் பின்வரும் தகுதிகளைப் பெற்றிருத்தல் வேண்டும் :

(1) அவர் ஒரு இந்தியக் குடிமகனாய் / குடிமகளாய் இருத்தல் வேண்டும், (2) 30 வயது நிரம்பியவராயிருத்தல் வேண்டும், (3) சட்டப்படியான மற்ற தகுதிகளைப் பெற்றிருத்தல் வேண்டும், (4) அவர் மாநில அல்லது மத்திய அரசில் சம்பளம் பெறும் எந்தப் பதவியையும் வகித்தல் கூடாது, (5) அவர் மனநிலை சரியில்லாதவராகவோ அல்லது பெற்ற கடனை திரும்பத் தர வக்கற்றவராய் இருத்தல் கூடாது.

இராஜ்ய சபா ஒரு நிரந்தர அங்கமாகும். அதனைக் கலைக்க முடியாது. இராஜ்ய சபா உறுப்பினர்களின் பதவிக்காலம் 6 ஆண்டுகளாகும். அதன் உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பகுதி யினர் ஒவ்வொரு இரண்டாண்டும் ஓய்வு பெறுகின்றனர். அதனால் ஏற்படும் காலியிடங்கள் புதிய உறுப்பினர்களால் நிரப்பப்படு கின்றன.

**லோக் சபா உறுப்பினராவதற்குரிய தகுதிகள் :** லோக் சபாவின் உறுப்பினராவதற்கு ஒருவர் கீழ்க்கண்ட தகுதிகளைப் பெற்றிருத்தல் வேண்டும் :

(1) அவர் இந்தியக் குடிமகனாய் / குடிமகளாய் இருத்தல் வேண்டும், (2) அவர் 25 வயதிற்குக் குறைவுடையவராய் இருத்தல் கூடாது, (3) நாட்டின் ஏதாவது ஒரு பகுதியில் அவரது பெயர் வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றிருத்தல் வேண்டும், (4) அவர் அரசு அலுவலகத்தில் சம்பளம் பெறும் பணியில் இருத்தல் கூடாது.

லோக் சபா உறுப்பினர்கள் ஐந்து ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். எனினும் பிரதம அமைச்சரின் ஆலோசனையின் பேரில் பதவிக் காலம் முடியும் முன்பே லோக் சபாவைக் குடியரசுத் தலைவர் கலைக்கலாம்.

**நாடாளுமன்றத்தின் அதிகாரங்களும், பணிகளும் :** இந்திய நாடாளுமன்றம் சட்டமியற்றுதல், நிர்வாகத்தினை மேற்பார்வை

யிடுதல், வரவு-செலவுத் திட்டத்தினை ஏற்றல், பொதுமக்கள் குறைகளைப் போக்குதல், வளர்ச்சித் திட்டங்கள், சர்வதேச உறவுகள், உள்நாட்டுக் கொள்கைகள் என பல்வேறு தலைப்பு களை விவாதித்தல் போன்ற பல பணிகளைச் செய்கின்றது. நாடாளுமன்றம் குடியரசுத் தலைவர் மீதான குற்றத் தாக்குதல் களை விசாரிக்கவும், உச்ச நீதிமன்ற, உயர் நீதிமன்ற நீதிபதிகள், தலைமைத் தேர்தல் ஆணையர், இந்தியத் தலைமைக் கணக்காய்வாளர் - தணிக்கையாளர் ஆகியோரை அரசியலமைப்புச் சட்ட விதிமுறைகளின்படி பதவி நீக்கம் செய்யவும் அதிகாரம் பெற்றுள்ளது.

நாடாளுமன்றம் நிர்வாகத்தினை கேள்விகள், துணைக் கேள்விகள் கேட்பதன் மூலமாகவும், ஒத்திவைப்புத் தீர்மானங் கள், விவாதங்கள், தீர்மானங்கள் இயற்றுதல், கண்டனத் தீர்மானம் அல்லது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை விவாதித்து அவையில் கொண்டு வருதல் போன்றவைகளின் மூலமாகவும் தனது கட்டுப்பாட்டினைச் செலுத்தி வருகின்றது. மாநிலங்களின் எல்லைகளை மாற்றியமைத்திட நாடாளுமன்றத்திற்கே அதிகாரம் உண்டு.

**நீதித்துறை :** நீதித்துறை அரசின் மூன்றாவது அங்கமாகும். இத்துறை குடிமக்களின் உரிமைகளையும், சுதந்திரத்தினையும் பாதுகாப்பதில் ஒரு முக்கியப்பங்கினை வகிக்கின்றது. நாட்டின் சட்டங்கள், அரசியலமைப்பின் அம்சங்களை அலசி, அவற்றிற்குப் பொருளுரைக்கும் ஒரு சிறப்பான பணியினையும் இத்துறை செய்து வருகின்றது.

**உச்ச நீதிமன்றம் :** இந்திய உச்ச நீதிமன்றம் ஒரு தலைமை நீதிபதியையும், 25 நீதிபதிகளையும் கொண்டுள்ளது. உச்ச நீதி மன்றத்தின் தலைமை நீதிபதியைக் குடியரசுத் தலைவர் நியமிக்கின்றார். மற்ற நீதிபதிகளை உச்ச நீதி மன்றத் தலைமை நீதிபதியின் ஆலோசனையுடன் நியமிக்கின்றார்.

அரசியலமைப்புச் சட்டத்தின்படி ஒருவர் பின்வரும் தகுதிகளைப் பெற்றிருந்தால் மட்டுமே உச்ச நீதிமன்ற நீதிபதியாக

நியமனம் பெற முடியும் : (1) ஒருவர் இந்தியக் குடிமகனாய் / குடிமகளாய் இருத்தல் வேண்டும், (2) ஒருவர் குறைந்த பட்சம் ஐந்து ஆண்டுகள் ஒரு உயர் நீதிமன்றம் அல்லது இரு உயர்நீதி மன்றங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட உயர்நீதி மன்றங்களில் தொடர்ந்து நீதிபதியாகப் பணி புரிந்திருத்தல் வேண்டும் அல்லது (3) ஒருவர் குறைந்தபட்சம் பத்து ஆண்டுகள் ஒரு உயர்நீதி மன்றத்தில் அல்லது இரு அல்லது அதற்கு மேற்பட்ட உயர்நீதி மன்றங்களில் தொடர்ந்து வழக்கறிஞராகச் செயலாற்றியிருத்தல் வேண்டும் அல்லது (4) குடியரசுத் தலைவர் கருத்தின்படி சிறப்பு மிக்க சட்ட வல்லுநராய் இருத்தல் வேண்டும்.

உச்ச நீதிமன்ற நீதிபதிகள் 65 வயதினை அடையும்வரை பதவியில் நீடிப்பர். உச்ச நீதிமன்றத்தின் நிரந்தர தலைமையிடம் **புது தில்லியிலுள்ளது.** எனினும் இந்தியக் குடியரசுத் தலைவரின் இசைவு பெற்று இந்தியத் தலைமை நீதிபதியின் முடிவின்படி வேறு எந்த மாநிலத்திலும் அல்லது இடத்திலும் இந்நீதிமன்ற அமர்வு அமையலாம்.

**உச்ச நீதிமன்றத்தின் அதிகாரங்களும் பணிகளும்**




***1. தனக்கேயுரிய நீதி வரையறை :*** இந்திய அரசியலமைப்புச் சட்டம் உச்ச நீதிமன்றத்திற்கேயுரிய சிறப்பு நீதிவரையறைக்குட் பட்டவையாக பின்வருவனவற்றைக் குறிப்பிடுகிறது : (அ) இந்திய அரசிற்கும் ஒரு மாநிலம் அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்குமிடையிலான சிக்கல்கள், அல்லது (ஆ) இந்திய

அரசு, ஏதாவதொரு மாநிலம் அல்லது மாநிலங்கள் இன்னொரு புறமும் கொண்ட சிக்கல்கள், அல்லது (இ) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கிடையிலான சிக்கல்கள். அடிப்படை உரிமைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக எழும் சிக்கல்களும் உச்ச நீதிமன்றத்தின் தனக்கேயுரிய நீதி வரை யறைக்குட்பட்டதாகும். இவ்வுரிமைகளை நடைமுறைப்படுத்த நெறிமுறைகளை வழங்கவும், ஆணைகள், நீதிமன்ற உத்திரவு களை வழங்கவும் உச்ச நீதிமன்றத்திற்கு அதிகாரமுண்டு. இந் நோக்கங்களுக்காக உச்ச நீதிமன்றம் (1) ஆட்கொணர் நீதிப்பேராணை, (2) கீழ் மன்றத்திற்கு விடுக்கும் கட்டளை நீதிப் பேராணை, (3) வழக்கு விசாரணைத் தடை ஆணை, (4) உரிமை வினா நீதிப்பேராணை, (5) பத்திரத்தைக் கொண்டு வந்து முன்னிலைப்படுத்தக் கீழ் மன்றங்களுக்கு இடப்படும் கட்டளை போன்ற நீதிமன்ற உத்திரவுகளைப் பிறப்பிக்கலாம்.

***2. மேல்முறையீடு நீதி வரையறை :*** உச்ச நீதிமன்றமே நாட்டின் இறுதி மேல்முறையீட்டு நீதிமன்றமாகும். மாநில உயர்நீதி மன்றங்கள் வழங்கும் உரிமையியல் மற்றும் குற்றவியல் (Civil and Criminal) வழக்குகள் மீதான தீர்ப்புகளுக்கு எதிரான மேல்முறை யீட்டு வழக்குகளை உச்ச நீதிமன்றம் விசாரிக்கின்றது. அப்படிப் பட்ட வழக்குகளைத் தீர்க்க அரசியலமைப்புச் சட்டப்படி மேலும் சட்ட விளக்கம் தேவையென உயர்நீதிமன்றம் சான்றிதழ் அளித்தால் மட்டுமே அவ்வழக்குகளை உச்ச நீதிமன்றத்தின் முன் கொண்டு செல்ல முடியும்.

***3. ஆலோசனை நீதி வரையறை :*** பொது முக்கியத்துவம் வாய்ந்த எந்தவொரு சட்டம் அல்லது உண்மை மீதான உச்ச நீதி மன்றத்தின் கருத்தினைப்பெற அரசியலமைப்புச் சட்டம் குடியரசுத் தலைவருக்கு அதிகாரத்தினை வழங்குகின்றது.

***4. பல்வேறு வித நீதி வரையறை :*** உச்ச நீதிமன்றம் ஒரு ஆவண நீதிமன்றமாகச் செயல்படுகின்றது. நீதிமன்ற அவமதிப்பினைத் தண்டிக்கும் உரிமை உள்பட ஒரு நீதிமன்றத்திற்குரிய பின்வரும் அனைத்து அதிகாரங்களையும் உச்ச நீதிமன்றம் பெற்றுள்ளது :

அ. உச்ச நீதிமன்றம் பிறப்பிக்கும் சட்டம் இந்தியாவின் அனைத்துப் பகுதியிலுள்ள நீதிமன்றங்களையும் கட்டுப் படுத்தும்.

ஆ. குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்று நீதிமன்றத்தின் பொதுவான செயல்முறைகள், வழிமுறைகளை ஒழுங்கு படுத்தும் விதிகளை உருவாக்க உச்சநீதி மன்றத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இ. உச்ச நீதிமன்றம் தனது அமைப்பின் மீதான முழுக்கட்டுப் பாட்டினையும் கொண்டுள்ளது.

**நீதிமன்ற மறு ஆய்வு அதிகாரம் :** உச்ச நீதிமன்றம் அரசிய லமைப்புச் சட்டத்தின் பாதுகாவலனாய்ச் செயல்படுகின்றது. சர்ச்சைக்குரிய ஒரு சட்டத்தினை அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணானது என அறிவிக்கும் நீதிமன்ற மறு ஆய்வு அதிகாரம் உச்சநீதிமன்றத்திற்கு உள்ளது. உச்ச நீதிமன்றம் இவ்வதிகாரத்தைச் செயல்படுத்துகின்றது. பின்வருவனவற்றை **தனிப்பட்ட நீதிமன்ற மறு ஆய்வு செய்யும் அதிகாரமும்** இந்திய உச்ச நீதி மன்றத்திடம் உள்ளது. அவை (அ) மத்திய மாநிலங்களுக்கிடையிலான சிக்கல் கள், (ஆ) ஐயப்பாடுகள், கருத்து வேற்றுமைகளுக்குள்ளாகும் அரசியலமைப்புச் சட்டத்தின் அம்சங்களை விளக்கி தெளிவு படுத்துதல், (இ) அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்தல், (ஈ) அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணாக சட்டமன்றங்கள் இயற்றும் சட்டங்கள் ஆகியனவாகும்.

**கற்றல் அடைவுகள்**

1. மாணவர் மத்திய அரசின் நிர்வாக, சட்டமன்ற, நீதித் துறைகளின் அதிகாரங்கள், பணிகளை வரிசைப்படுத்த முடியும்.
2. மாணவர் இந்தியக் குடியரசுத் தலைவர், துணைக் குடியரசுத் தலைவர் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்படுவதற்குரிய தகுதிகளை விவரிக்க முடியும்.

3. மாணவர் நாடாளுமன்றத்தின் அமைப்பு, மத்திய அரசின் அமைப்பு பற்றி விளக்க முடியும்.

4. மாணவர் இந்திய உச்ச நீதிமன்றத்தின் அதிகாரங்கள், பணிகளைக் குறிப்பிட முடியும்.

## சுய மதிப்பீடு

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்**

1. மத்திய அரசின் அங்கங்கள்

   அ. இரு அங்கங்கள் ஆ. மூன்று அங்கங்கள்

   இ. ஒரு அங்கம் ஈ. நான்கு அங்கங்கள்

2. மத்திய அமைச்சரவைக் குழுவின் தலைவர்

   அ. பிரதம அமைச்சர் ஆ. குடியரசுத் தலைவர்

   இ. துணைக் குடியரசுத் தலைவர் ஈ. துணைப் பிரதம அமைச்சர்

3. இராஜ்ய சபாவின் உறுப்பினர் எண்ணிக்கை

   அ. 238 உறுப்பினர்கள் ஆ. 248 உறுப்பினர்கள்

   இ. 250 உறுப்பினர்கள் ஈ. 12 உறுப்பினர்கள்

4. உச்ச நீதிமன்றத்தின் நிரந்தர தலைமையிடம்

   அ. சென்னை ஆ. மும்பை

   இ. கொல்கத்தா ஈ. புது தில்லி

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. நாடாளுமன்றத்தில் ____________ அவைகள் உள்ளன.

2. குடியரசுத் தலைவர் ____________ன் தலைவராவார்.

3. பிரதம அமைச்சர் ____________யின் தலைவராவார்.

4. அமைச்சரவைக் குழு ____________திற்கு ஒட்டு மொத்தமாக பொறுப் புடையதாகும்.

**III. பின் வருவனவற்றைப் பொருத்துக**

| | | |
|---|---|---|
| 1. குடியரசுத் தலைவர் | -- | கீழ்ச்சபை |
| 2. பிரதம அமைச்சர் | -- | மூன்றாம் அங்கம் |
| 3. துணைக் குடியரசுத் தலைவர் | -- | உண்மையான தலைவர் |
| 4. நீதித்துறை | -- | பெயரளவில் தலைவர் |
| 5. லோக் சபா | -- | அலுவல்வழியில் இராஜ்ய சபாவின் தலைவர் |

**IV. சுருக்கமாக விடையளி**

1. குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான தகுதிகள் என்ன?

2. இந்தியாவில் துணைக் குடியரசுத் தலைவர் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகிறார்?

3. மத்திய அமைச்சரவைக் குழுவிலுள்ள அமைச்சர்களின் வகைகளை விளக்குக.

4. நீதிமன்ற மறு ஆய்வினைப் பற்றி ஒரு சிறு குறிப்பு எழுதுக.

**V. விரிவான விடை தருக**

1. மத்திய அரசின் அமைப்பு பற்றி எழுதுக.

2. பிரதம அமைச்சரின் அதிகாரங்களை விளக்குக.

3. உச்ச நீதிமன்றத்தின் அதிகாரங்களையும் பணிகளையும் விளக்குக.

**VI. கற்பித்தல், கற்றல் செயல்கள்**

1. மத்திய அரசின் அங்கங்களைக் காண்பிக்கும் விளக்கப்பட அட்டை தயார் செய்க.
2. மத்திய நிர்வாக, சட்டமன்ற, நீதித்துறை தலைவர்களின் பெயர்களை வரிசைப்படுத்துக.

பாடம் - 3

# மாநில அரசு

**கற்றல் நோக்கங்கள்**

1. மாணவர் மாநில அரசு அமைப்பு பற்றிய அறிவினைப் பெறல்.
2. மாணவர் ஆளுநர், முதலமைச்சர், அமைச்சர்கள், சட்டப் பேரவைத் தலைவர் ஆகியோரின் அதிகாரங்களையும் பணி களையும் புரிந்து கொள்ளுதல்.
3. மாணவர் மாநில சட்டமன்றம் பற்றி தெரிந்து கொள்ளுதல்.
4. மாணவர் மாநிலத்திலுள்ள நீதித்துறை அமைப்பு பற்றி தெரிந்து கொள்ளுதல்.

இந்தியா பல மாநிலங்களை உள்ளடக்கிய ஓர் ஒன்றியம் ஆகும். இந்தியாவில் தற்போது 28 மாநிலங்களும் 6 யூனியன் பிரதேசங்களும் 1 தேசிய தலைநகர் பகுதியும் (டெல்லி) உள்ளன. இந்திய அரசியலமைப்புச் சட்டம் மாநில அரசின் (State Government) அதிகாரங்களையும் பணிகளையும் தெளிவாக விளக்குகின்றது. இந்திய நாடாளுமன்றத்திற்கு மாநிலங்களின் எல்லைகளையும், தேவை ஏற்படின் மாநிலங்களின் பெயர்களையும் மாற்றும் அதிகாரம் உள்ளது. உதாரணமாக **மதராசு மாநிலம்** என்றிருந்த பெயர் 1967-ஆம் ஆண்டு **தமிழ்நாடு** என நாடாளுமன்றத்தினால் மாற்றப்பட்டது. அரசியலமைப்புச் சட்டம் குறிப்பிடும் மாநிலப் பட்டியலில் இடம் பெற்றுள்ள துறைகளை நிர்வகிக்கும் பொறுப்பு மாநிலங்களையேச் சாரும். இங்கு நாம் **மாநில நிர்வாகம், சட்டமன்றம்** மற்றும் **நீதித்துறை** பற்றி விவாதிப்போம்.

**நிர்வாகம் :** மாநில அரசாங்கத்தின் அரசு அமைப்பும் மத்திய அரசு போன்று மூன்று அங்கங்களைக் கொண்டதாகும். அவை **நிர்வாகம், சட்ட மன்றம்,** மற்றும் **நீதித்தறை** ஆகியனவாகும்.

ஒவ்வொரு மாநில நிர்வாகமும் ஆளுநரையும், முதலமைச்சரைத் தலைவராகக் கொண்ட அமைச்சரவையையும் உள்ளடக்கிய தாகும். அரசியலமைப்புச் சட்டத்தின்படி மாநில அரசின் தலைவ ராக ஆளுநர் பெயரளவில் செயல்படுகிறார். அமைச்சர்களே உண்மையான நிர்வாக அதிகாரங்களைச் செயல்படுத்துகின்றனர். எனினும் சட்டப்படி எல்லா நிர்வாக அதிகாரங்களும் ஆளுநரிடமே உள்ளன. நிர்வாக அதிகாரங்கள் ஆளுநரின் பெயரிலேயே செயல் படுத்தப்படுகின்றன. அரசியலமைப்புச் சட்ட விதிகள் 151 முதல் 160 வரை ஆளுநரின் நியமனம், தகுதிகள், அதிகாரங்கள், பணிகளைக் குறிப்பிடுகின்றன.

ஆளுநரை இந்தியக் குடியரசுத் தலைவர் மத்திய அமைச்சரவையின் பரிந்துரையின் பேரில் நியமிக்கிறார். ஒருவர் ஆளுநராக நியமிக்கப்படும் முன் பொதுவாக மாநில முதலமைச்சர் கலந்தாலோசிக்கப்படுகிறார். மேலும் ஆளுநர், சம்பந்தப்பட்ட மாநிலத்திற்கு வெளியிலிருந்தே நியமிக்கப்படுகிறார். குடியரசுத் தலைவர் ஒரு மாநில ஆளுநரை அருகாமையிலுள்ள யூனியன் பிரதேசத்தின் கூடுதல் நிர்வாகப் பொறுப்பினையும் கவனிக்க நியமனம் செய்யலாம். உதாரணமாக தமிழ்நாடு ஆளுநர்கள் பல முறை புதுச்சேரி (பாண்டிச்சேரி) யூனியன் பிரதேச நிர்வாகத் தினையும் கவனித்து வந்துள்ளனர்.

**தகுதிகள், பதவிக்காலம், உரிமைகள் :** அரசியலமைப்புச் சட்டம் ஆளுநரின் தகுதி, பதவிக்காலம், உரிமைகள் மற்றும் பிறவற்றைப் பற்றி விவரிக்கின்றது. அதன்படி (1) ஒருவர் இந்தியக் குடிமகனாய் / குடிமகளாய் இருத்தல் வேண்டும், (2) அவர் 35 வயதினை நிரம்பியவராய் இருத்தல் வேண்டும், (3) அவர் நாடாளுமன்றத்திலோ அல்லது மாநில சட்டமன்றத்திலோ ஒரு உறுப்பினராய் இருத்தல் கூடாது. அவ்வாறு அவர் ஏதாவதொரு சட்டமன்ற அவையில் உறுப்பினராய் இருப்பாரேயானால் ஆளுநர் பதவியேற்கும்போது அவரது உறுப்பினர் பதவி தானாக காலியானதாகப் பொருள்படும், (4) அவர் ஊதியம் பெறும் எந்தப் பதவியினையும் வகித்தல் கூடாது.

ஆளுநரின் பதவிக்காலம் பொதுவாக ஐந்து ஆண்டுகளாகும். ஆனால் குடியரசுத் தலைவர் விரும்பும் வரையில் அவர் பதவியில் நீடிக்கலாம். குடியரசுத் தலைவர் எந்தவித காரணத்தையும் குறிப்பிடாமல் ஆளுநரைப் பதவியிலிருந்து நீக்கலாம்.

***ஆளுநரின் அதிகாரங்களும் பணிகளும்*** *: ஆளுநர் பின்வரும் அதிகாரங்களைப் பெற்று பணிகளைப் புரிகிறார் : (1) நிர்வாக அதிகாரங்கள், (2) சட்டத்துறை அதிகாரங்களும், பணிகளும், (3) நிதி அதிகாரம், (4) நீதி அதிகாரம் மற்றும், (5) மற்ற பிற அதிகாரங்கள்.*

***1. நிர்வாக அதிகாரங்கள் :*** *அரசியலமைப்புச் சட்டத்தின்படி மாநில அரசின் நிர்வாக அதிகாரங்கள் அனைத்தும் ஆளுநரிடமே உள்ளன. அவர் மாநில சட்ட மன்றத்தில் பெரும்பான்மை பலம் கொண்ட கட்சியின் தலைவரை முதலமைச்சராகவும் அவரின் ஆலோசனையின் பேரில் மற்ற அமைச்சர்களையும் நியமிக்கின்றார். அவர் மாநில அரசின் தலைமை வழக்கறிஞரையும், அரசுப் பணியாளர் தேர்வு ஆணையத்தின் தலைவர், மற்ற உறுப்பினர் களையும், பல்கலைக் கழகங்களின் துணை வேந்தர்களையும் நியமனம் செய்கிறார். ஆளுநருக்கு, மாநில அரசின் செயல்பாடு குறித்து குடியரசுத் தலைவருக்கு அறிக்கைகள் அனுப்பும், அரசியலமைப்புச் சட்டப்படியான கடமை உள்ளது. மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி திணிக்கப்படும் பொழுது ஆளுநர் மாநிலத்தை நேரிடையாக ஆட்சி செய்கிறார்.*

***2. சட்டமன்ற அதிகாரங்களும் பணிகளும் :*** *ஒரு அவை அல்லது இரு அவைகளைக் கொண்ட மாநில சட்டமன்றத்தில் ஆளுநருக்கும் பங்கு உண்டு. அவர் மாநில சட்ட மேலவை உறுப்பினர்கள் 1/6 பகுதியினரை நியமனம் செய்கிறார். மாநிலத்தின் இரு சட்டமன்ற அவைகளிலும் அல்லது சட்டப் பேரவையில் அவர் உரை நிகழ்த்துவார். மாநில சட்டமன்றம் நிறைவேற்றும் எந்தவொரு மசோதாவும் ஆளுநரின் இசைவு பெற்ற பின்னரே சட்டமாகும்.*

***3. நிதி அதிகாரங்கள் :*** *நிதி மசோதாக்கள் சட்ட மன்றத்தில் அறிமுகம் செய்யப்படுவதற்கு ஆளுநரின் அனுமதி தேவைப்படு கின்றது. ஆளுநரின் பரிந்துரையில்லாமல் மானிய கோரிக்கை களை எழுப்ப முடியாது. வரவு - செலவுத் திட்டம் சட்ட மன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதை ஆளுநர் உறுதிபடுத்த வேண்டும். மாநில எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து எதிர்பாராச் செலவுகளைச் சமாளிக்க நிதி வழங்கிட அரசியலமைப்புச் சட்டம் ஆளுநருக்கு அதிகாரம் வழங்கியுள்ளது.*

***4. நீதி அதிகாரங்கள் :*** *மாநில அரசின் நீதிவரையறைக்குட்பட்ட விவகாரங்கள் தொடர்பாக குற்றம் புரிந்து தண்டனை பெற்று வரும் குற்றவாளிகளை மன்னிக்கவும், தண்டனையைக் குறைக்க வும் அல்லது நீக்கவும் ஆளுநர் அதிகாரம் பெற்றுள்ளார். எனினும் ஆளுநர் தண்டனைகளை அதிகப்படுத்த அதிகாரங்கள் பெற்றிருக்க வில்லை.*

***5. மற்ற பிற அதிகாரங்கள் :*** *மாநில அரசுப் பணியாளர் தேர்வு ஆணையத்திடமிருந்து ஆண்டு அறிக்கைகளை ஆளுநர் பெறுகிறார். அவைகளைச் சட்டமன்றத்தின் பரிசீலனைக்கும், ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கின்றார். அதே போல் மாநில அரசின் பல்வேறு துறை களின் வரவு, செலவு தொடர்புடைய தலைமை தணிக்கையாளரின் அறிக்கையையும் கூட ஆளுநர் பெறுகிறார்.*

## மாநிலச் சட்ட மன்றம்

*அரசியலமைப்புச் சட்டம் ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு சட்டமன்றம் அமைக்கப்பட வகை செய்கின்றது. மாநிலச் சட்டமன்றம் ஓர் அவை அல்லது இரு அவைகளைக் கொண்டதாக இருக்கலாம். மாநிலச் சட்டமன்றம் ஆளுநரையும், ஓர் அவை அல்லது இரு அவைகளைக் கொண்ட சட்டமன்றத்தினையும் உள்ளடக்கியதாகும். இரு அவைகளைக் கொண்ட சட்டமன்றங்கள் பீகார், கர்நாடகம், மகாராட்டிரம் போன்ற மாநிலங்களில் செயல்படுகின்றன. தமிழ் நாட்டிலும் மற்ற மாநிலங்களிலும் சட்டப்பேரவையை மட்டும் கொண்ட ஓர் அவை சட்டமன்றங்கள் செயல்படுகின்றன.*

***சட்டப் பேரவை :*** *சட்டப் பேரவை மக்களால் நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளைக் கொண்டதாகும். எனவே இம்மன்றம் மாநிலத்தில் உண்மையான அதிகார மையமாக விளங்குகின்றது. சட்டப் பேரவை, வயது வந்தோர் வாக்குரிமை யின் அடிப்படையில் மக்களால் நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப் பட்ட உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. மக்கள் தொகையின் அடிப்படையில் இம்மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடும். இருந்தபோதிலும் சட்டப் பேரவையின் அதிகபட்ச எண்ணிக்கை 500க்கு மிகாமலும் அதன்*




குறைந்தபட்ச எண்ணிக்கை 60-க்குக் குறையாமலும் இருத்தல் வேண்டும். சிறிய மாநிலங்கள் இவ்வரம்பிலிருந்து விதிவிலக்கு பெற்றுள்ளன. தமிழ் நாடு சட்டப் பேரவையில் 234 உறுப்பினர்கள் (MLAs) உள்ளனர்.

**சட்ட மன்ற மேலவை :** சட்ட மன்ற மேலவை மாநிலத்தின் மேலவை அல்லது மேல் சபையாகும். ஒரு மாநிலத்தின் சட்ட மேலவையின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை அம்மாநிலச் சட்டப் பேரவை உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் 1/3 பகுதிக்கு மேல் இருத்தல் கூடாது. அதே நேரத்தில் அதன் உறுப்பினர்களின் எண்ணிக்கை 40-க்குக் குறையாமல் இருத்தல் வேண்டும். மேலவை உறுப்பினர்கள் மக்களால் நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை. அதன் பெரும்பாலான உறுப்பினர்கள் ஒற்றை மாற்று வாக்குமுறையில் விகிதாச்சாரப் பிரதிநிதித்துவ அடிப்படையில் மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

**சட்டப் பேரவைத் தலைவர் :** சட்டப் பேரவை தனது உறுப்பினர்களில் இருவரைச் சட்டப்பேரவைத் தலைவராகவும், துணைத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கின்றது. ஒருவர் தன்னால் சட்டப்

பேரவை உறுப்பினர் பதவியில் தொடர முடியாதபொழுது அவர் பேரவைத் தலைவர் பதவியை விட்டு விலக வேண்டும். அவர் எப்போது வேண்டுமானாலும் பதவி விலகலாம். சட்டப் பேரவைத் தலைவரை, சட்ட சபை 14 நாள்கள் அறிவிப்புக் கொடுத்து பின்னர் ஒரு தீர்மானத்தின் மூலமும் பதவியிலிருந்து நீக்கலாம். அத்தகைய தீர்மானம் வாக்கெடுப்பின்போது வருகை புரிந்தோரில் பெரும்பான்மையினரால் நிறைவேற்றப்பட வேண்டும். சட்டப்பேரவை கலைக்கப்படும்போது சட்டப் பேரவைத் தலைவர் தனது பதவியை விட்டு விலக வேண்டிய தில்லை. புதிய சட்டப்பேரவை முதல் தடவையாக அமரும் வரை அவர் சட்டப்பேரவைத் தலைவராகத் தொடர்ந்து நீடிப்பார். சட்டப்பேரவைத் தலைவர் பதவி காலியாக உள்ளபோது, துணைத்தலைவர் அவரது பணிகளைப் புரிகிறார்.

**முதலமைச்சரும், அமைச்சரவையும் :** மாநிலத்தில் உண்மையான அதிகாரங்களைச் செயல்படுத்துவது முதலமைச்சரின் தலைமையி லான அமைச்சரவையாகும். ஆளுநர், முதலமைச்சரையும், அவரது பரிந்துரையின்படி மற்ற அமைச்சர்களையும் நியமனம் செய்கிறார். பொதுவாக, சட்டப்பேரவையில் பெரும்பான்மைக் கட்சியின் தலைவரே முதலமைச்சராக நியமிக்கப்படுகிறார். எந்த வொரு அரசியல் கட்சியும் சட்டப்பேரவையில் அறுதிப் பெரும் பான்மையைப் பெறவில்லையெனில் தனிப்பெரும்பான்மை யுடைய கட்சியின் தலைவருக்கு அமைச்சரவையை அமைக்கு மாறு ஆளுநர் அழைப்பு விடுக்கலாம்.

ஆனால் அவ்வாறு அமைச்சரவை அமைப்பவர் ஆளுநர் குறிப்பிடும் கால அவகாசத்திற்குள் சட்டப் பேரவையில் தனக்குப் பெரும்பான்மை ஆதரவு உள்ளது என்பதை நிரூபிக்க வேண்டும்.

முதலமைச்சரின் பதவிக் காலம் நிர்ணயிக்கப்பட்டதன்று. சட்டப்பேரவையில் பெரும்பான்மையினரின் ஆதரவு தனக்கு உள்ளவரை ஒருவர் அப்பதவியில் தொடரலாம். முதலமைச்சரின் பதவி விலகல் முழு அமைச்சரவையின் பதவி விலகலாகும்.

**முதலமைச்சரின் அதிகாரங்களும் பணிகளும் :** நிர்வாகத்தின் உண்மையான தலைவரான முதலமைச்சர், மாநில நிர்வாகத்தின்

முன்னோடியாகத் திகழ்கிறார். அவர் பின்வரும் அதிகாரங்களை யும் பணிகளையும் புரிகிறார் :

1. முதலமைச்சரின் முதல் பணி தனது அமைச்சரவையை அமைத்தல் ஆகும்.
2. முதலமைச்சர் தனது அமைச்சரவைச் சகாக்களை தெரிவு செய்வதுடன் அவர்களுக்கான துறைகளையும் ஒதுக்கு கின்றார். அவர் ஒரு அமைச்சரைப் பதவி விலகக் கோரலாம். அவர் தனது அமைச்சரவையின் அளவைப் பெரிதாக்கலாம் அல்லது குறைக்கலாம்.
3. முதலமைச்சரே அமைச்சரவையின் தலைவராவார். அமைச் சரவைக் கூட்டத்தினைக் கூட்டி தலைமை தாங்குபவரும் அவரே.
4. முதலமைச்சர் அனைத்து அமைச்சர்களின் பணிகளையும் பொதுவாக மேற்பார்வையிடுகிறார்.
5. முதலமைச்சர் ஆளுநருக்கும் தனது அமைச்சரவைக் குழு விற்கும் இடையில் ஒரு இணைப்புப் பாலமாகச் செயல் படுகிறார். அமைச்சர்களின் துறைகளிலிருந்து ஆளுநருக்கு அனுப்பப்படும் ஒவ்வொரு தகவலும் முதலமைச்சர் மூலமாகவே செல்ல வேண்டும்.
6. ஆளுநர் தனது பணியினை ஆற்ற முதலமைச்சர் தகுந்த அறிவுரையினை வழங்க வேண்டும். சட்டப்பேரவையில் முதலமைச்சருக்கு பெரும்பான்மை பலம் குறையும்போது சட்டப்பேரவையைக் கலைக்க முதலமைச்சர் ஆளுநருக்கு அறிவுறுத்தலாம்.

**அமைச்சரவைக் குழு :** அமைச்சரவைக் குழு அரசின் செயல் களுக்கு மாநிலச் சட்டமன்றத்தில் பதிலளிக்க கூட்டுப் பொறுப் புடையதாகும். அமைச்சரவைக் குழுவின் அனைத்து அங்கத்தினர் களும் மாநிலச் சட்டமன்றத்தின் உறுப்பினர்களாய் இருத்தல் வேண்டும். அமைச்சராக நியமிக்கப்படும்போது சட்ட மன்ற உறுப்பினராய் இல்லாதவர்கள் 6 மாத காலத்திற்குள் சட்டமன்ற உறுப்பினர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படல் வேண்டும். எல்லா அமைச்சர்களும் முதலமைச்சரின் தலைமையின் கீழ் ஒரே அணி

## 1952-முதல் தமிழ் நாட்டின் முதலமைச்சர்கள்

| எண் | பெயர் | ஆண்டு |
|---|---|---|
| 1. | திரு சி. இராசகோபாலச்சாரி | 1952-1954 |
| 2. | திரு கே. காமராஜ் | 1954-1957 |
| 3. | திரு கே. காமராஜ் | 1957-1963 |
| 4. | திரு எம். பக்தவச்சலம் | 1963-1967 |
| 5. | திரு சி.என். அண்ணாத்துரை | 1967-1969 |
| 6. | திரு மு. கருணாநிதி | 1969-1971 |
| 7. | திரு மு. கருணாநிதி | 1971-1976 |
| 8. | திரு எம்.ஜி. இராமச்சந்திரன் | 1977-1980 |
| 9. | திரு எம்.ஜி. இராமச்சந்திரன் | 1980-1984 |
| 10. | திரு எம்.ஜி. இராமச்சந்திரன் | 1985-1987 |
| 11. | திருமதி ஜானகி இராமச்சந்திரன் | ஜனவரி 1988 |
| 12. | திரு மு. கருணாநிதி | 1989-1991 |
| 13. | செல்வி ஜெ. ஜெயலலிதா | 1991-1996 |
| 14. | திரு மு. கருணாநிதி | 1996-2001 |
| 15. | செல்வி ஜெ. ஜெயலலிதா | 2001 |
| 16. | திரு ஓ. பன்னீர்செல்வம் | 2001-2002 |
| 17. | செல்வி ஜெ. ஜெயலலிதா | 2002-2006 |
| 18. | திரு மு. கருணாநிதி | 2006- |

யாகச் செயல்படுகின்றனர். முதலமைச்சர் பதவியில் நீடிக்கும் வரை அமைச்சரவைக் குழுவும் பதவியில் இருக்கும். சட்டப் பேரவை அமைச்சரவையின் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை (No-confidence motion) நிறைவேற்றினால் மாநில அமைச்சரவை பதவி விலக வேண்டும்.

சுருங்கக் கூறினால் மாநில அமைச்சரவைக் குழு மத்திய அமைச்சரவைக் குழுவைப் போலவே அதிகாரங்களைப் பெற்று உள்ளது. மாநிலத் தலைமைச் செயலகம் மூலம் அமைச்சரவைக் குழு கொள்கைகளையும், திட்டங்களையும் நடைமுறைப்படுத்து கிறது.

**நீதித்துறை :** மாநில நீதித் துறையின் உச்ச நிலையில் உயர் நீதி மன்றம் (High Court) அமைந்துள்ளது. அரசியலமைப்புச் சட்டத்தின் படி ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு உயர்நீதி மன்றம் இருத்தல் வேண்டும். இருந்த போதிலும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்கள், யூனியன் பிரதேசத்திற்கும் சேர்த்து பொதுவாக ஒரு உயர்நீதி மன்றமும் இருக்கலாம். அதனை நாடாளுமன்றச் சட்டம் அனுமதிக்க வேண்டும். உதாரணமாக சென்னை உயர்நீதி மன்ற நீதி வரையறையின் (Jurisdiction) கீழ் தமிழ்நாடும், புதுவை யூனியன் பிரதேசமும் உள்ளன. உயர்நீதி மன்றத்தின் மீது மாநில அரசின் கட்டுப்பாடு எதுவும் இல்லை.

**அமைப்பு :** மாநில உயர்நீதி மன்றத்தில் ஒரு தலைமை நீதிபதியும், குடியரசுத் தலைவரால் அவ்வப்போது ஏற்படும் தேவைக்கேற்ப நியமிக்கப்படும், மற்ற நீதிபதிகளும் உள்ளனர். உயர்நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை ஒரே மாதிரியாகவும் நிர்ணயிக்கப்பட்ட ஒன்றாகவும் இல்லை. குடியரசுத் தலைவர் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியை இந்தியத் தலைமை நீதிபதி மற்றும் மாநில ஆளுநரைக் கலந்தாலோசித்த பிறகே நியமிக் கிறார். ஆனால் மற்ற நீதிபதிகளை நியமிக்கும்போது குடியரசுத் தலைவர் கூடுதலாக உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியையும் கலந்தாலோசிக்கிறார். பொதுவாக மிக மூத்த (Senior Most) ஒரு நீதிபதியே தலைமை நீதிபதியாக நியமனம் செய்யப்படுகிறார்.

உயர்நீதிமன்றத்தின் நீதிபதியாக நியமனம் பெற ஒருவர் பின்வரும் தகுதிகளைப் பெற்றிருத்தல் அவசியமாகும் :

1. அவர் இந்தியக் குடிமகன் / குடிமகளாய் இருத்தல் வேண்டும்.

2. அவர் இந்தியாவின் எந்தப் பகுதியிலாவது உள்ள நீதிமன்ற அலுவலகத்தின் தலைமைப் பொறுப்பில் இருந்து குறைந்த பட்சம் 10 ஆண்டுகள் அனுபவம் பெற்றவராயிருத்தல் வேண்டும்.

3. அவர் ஒரு உயர்நீதி மன்றம் அல்லது அதற்கு மேற்பட்ட உயர்நீதி மன்றங்களில் வழக்கறிஞராகப் பணியாற்றி குறைந்த பட்சம் 10 ஆண்டுகள் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

நீதிபதிகள் தங்கள் ஓய்வுக்கால வயதான 62 ஆண்டுகள் வரை பதவியில் நீடிக்கலாம். தேவையெனில் ஒருவர் குடியரசுத் தலைவருக்கு எழுத்து மூலம் தெரிவித்து பதவி விலகலாம். ஒரு நீதிபதி தவறான நடவடிக்கை அல்லது திறமையற்றவர் என குற்றம் சாட்டப்பட்டு நாடாளுமன்றத்தின் ஒவ்வொரு அவையும் தீர்மானம் இயற்றினால் குடியரசுத் தலைவர் அந்த உயர்நீதி மன்ற நீதிபதியைப் பதவியிலிருந்து நீக்கலாம்.

**உயர்நீதி மன்றத்தின் அதிகாரங்களும் பணிகளும் :** உயர்நீதி மன்றம் அடிப்படையில் மேல்முறையீட்டு நீதி மன்றமாகும். உயர்நீதிமன்றம் இரு வகையான பணிகளைப் புரிகின்றது. அவை **நீதி வழங்கல்** மற்றும் **நிர்வாகப் பணிகளாகும்.**

தனது நீதி வழங்கும் பணியில் உயர்நீதி மன்றம் தனக்கே யுரிய **தனிமுதல் நீதி அதிகாரத்தினையும்** மற்றும் **மேல் முறை யீட்டு நீதி வரையறையையும்** கொண்டுள்ளது. உயர்நீதிமன்றம் தனக்கேயுரிய தனிமுதல் நீதி அதிகாரத்தின் கீழ் நீதிமன்ற ஆணை களையும் மற்றும் உத்திரவுகளையும் அடிப்படை உரிமைகளை நடைமுறைப்படுத்த மட்டுமின்றி மற்ற நோக்கங்களுக்காகவும் வழங்க அதிகாரம் கொண்டுள்ளது. உயர்நீதி மன்றம் ஆட்கொணர் ஆணை (Habeas Corpus), கீழ் நீதி மன்றத்திற்கு விடுக்கும் ஆணை (Mandamus), வழக்கு விசாரணைத் தடை ஆணை (Prohibition), உரிமை வினா நீதி ஆணை (Quo Warranto), பத்திரத்தை முன்னிலைப்படுத்தக் கீழ் மன்றத்திற்கு விடுக்கும் ஆணை

(Certiorari) எனப் பல நீதிமன்ற ஆணைகளைப் பிறப்பிக்கும் அதிகாரம் கொண்டுள்ளது. மேலும் உயர்நீதி மன்றம் கப்பல்துறை, வாழ்விறுதி விருப்பம் (Will), திருமணம், மணவிலக்கு, வணிகக் குழுமச் சட்டம் (Company Law), நீதிமன்ற அவமதிப்பு தொடர்புடைய வழக்குகள் மீதும் கூட தனது நீதி வரையறையைக் கொண்டுள்ளது.

உயர்நீதி மன்றம் **உரிமையியல்** மற்றும் **குற்றவியல்** ஆகிய இரு வழக்குகளின் மேல்முறையீட்டு நீதிவரையறையினையும் பெற்றுள்ளது. உரிமையியல் வழக்குகளில் உயர்நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளும் மேல் முறையீடுகள் கீழ் நீதிமன்றங்களிடமிருந்து வந்த முதல் மேல் முறையீடாகவோ அல்லது இரண்டாவது மேல் முறையீடாகவோ இருக்கலாம். குற்றவியல் வழக்குகளில் உயர் நீதிமன்றம் அமர்வு நீதிபதி (Sessions Judge) அல்லது கூடுதல் அமர்வு நீதிபதி (Additional Sessions Judge) ஆகியோரின் தீர்ப்பு களுக்கு எதிரான மேல் முறையீட்டு வழக்குகளையும் விசாரிக்கும் நீதி வரையறையைக் கொண்டுள்ளது.

நிர்வாக அதிகாரங்களின்படி உயர்நீதி மன்றம் தனது கீழுள்ள நீதிமன்றங்கள் எல்லாவற்றினையும் கட்டுப்படுத்தவும் அவற்றின் பணிகளை மேற்பார்வையிடவும் அதிகாரம் பெற்றுள்ளது. அந்நீதி மன்றங்கள் தங்களது பணிகளை முறையாகப் புரிந்திட விதிகளையும் ஒழுங்குமுறைகளையும் உயர்நீதி மன்றம் வகுக்கின்றது. கீழ் நீதி மன்ற கோப்புகளைக் (Files) கூட உயர்நீதி மன்றம் ஆய்வு செய்யலாம். வழக்குகளை ஒரு நீதி மன்றத்தி லிருந்து இன்னொரு நீதிமன்றத்திற்கும் மாற்றலாம். உயர்நீதி மன்றம் தனக்குக் கீழுள்ள நீதிமன்றங்களை விளக்க அறிக்கை களை அனுப்புமாறும் கோரலாம்.

நீதி நிர்வாக நோக்கத்திற்காக ஒவ்வொரு மாநிலமும் பல மாவட்டங்களாகவும் அவை ஒவ்வொன்றும் ஒரு மாவட்ட நீதிபதியின் நீதி வரையறையிலும் செயல்படுகின்றன. மாவட்ட நீதிபதியின் கீழ் படிப்படியாக பணியாற்றும் நீதி அலுவலர்கள் வெவ்வேறு வகை நீதி நிர்வாகத்தினைச் செலுத்தி வருகின்றனர். கீழ்நிலை நீதிபதிகளை, உயர்நீதி மன்றம் மற்றும் மாநில அரசுப்

பணியாளர் தேர்வு ஆணையம் ஆகிய அமைப்புகளுடன் கலந்து ஆலோசித்து வகுக்கப்பட்ட விதிகளின்படி, ஆளுநர் நியமிக்கின்றார்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்களைச் செயல்படுத்துவதில் உயர்நீதிமன்றம் முழு அதிகாரங்களைப் பெற்று தனது நீதிவரையறைக்குள் சுதந்திரத்துடன் செயலாற்றுகின்றது. அதனுடைய சுதந்திரப் பணியினை அரசியலமைப்புச் சட்ட பாதுகாப்புகள் உறுதிப்படுத்துகின்றன.

**கற்றல் அடைவுகள்**

1. மாணவர் மாநில நிர்வாகம், சட்டமன்றம் மற்றும் நீதித்துறையின் அதிகாரங்கள், பணிகளைப் பட்டியலிட முடியும்.
2. மாணவர் ஆளுநருக்குரிய தகுதிகளை விவரிக்க முடியும்.
3. மாணவர் முதலமைச்சர் மற்றும் அமைச்சரவைக் குழுவின் அதிகாரங்கள், பணிகளை விளக்க முடியும்.
4. மாணவர் மாநில உயர்நீதி மன்றத்தின் அதிகாரங்களையும், பணிகளையும் குறிப்பிட முடியும்.

## சுய மதிப்பீடு

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்**

1. மாநில ஆளுநரை நியமிப்பவர்

   அ. இந்தியக் குடியரசுத் தலைவர்   ஆ. துணைக்குடியரசுத் தலைவர்

   இ. லோக் சபா தலைவர்   ஈ. இந்தியத் தலைமை நீதிபதி

2. மாநில அமைச்சரவைக் குழுவின் தலைவர்

   அ. ஆளுநர்   ஆ. முதலமைச்சர்

   இ. சட்டப்பேரவைத் தலைவர்   ஈ. உள்துறை அமைச்சர்

3. முதலமைச்சரை நியமிப்பவர்

அ. பிரதம அமைச்சர் ஆ. ஆளுநர்

இ. குடியரசுத் தலைவர் ஈ. சட்டப் பேரவைத் தலைவர்

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக

1. இந்தியாவில் _________ மாநிலங்களும் _________ யூனியன் பிரதேசங்களும் உள்ளன.
2. ஆளுநர் மாநிலத்தின் ________ மற்றும் ________ தலைவராவார்.
3. முதலமைச்சர் _________ தலைவராவார்.
4. ஆளுநரின் பதவிக்காலம் பொதுவாக ________ ஆண்டுகளாகும்.
5. மாவட்ட நீதிபதிகளை _________ நியமிக்கிறார்.

## III. பின்வருவனவற்றைப் பொருத்துக

| | | |
|---|---|---|
| 1. ஆளுநர் | -- | சட்டப் பேரவை |
| 2. முதலமைச்சர் | -- | பெயரளவுத் தலைவர் |
| 3. சட்டப் பேரவைத் தலைவர் | -- | மாநிலச் சட்டமன்ற மேலவை |
| 4. சட்டமன்ற மேலவை | -- | உண்மையான தலைவர் |

## IV. சுருக்கமாக விடையளிக்கவும்

1. மாநில சட்டப்பேரவை பற்றி சிறு குறிப்பு எழுதுக
2. அமைச்சரவைக் குழு.
3. உயர்நீதி மன்றத்தின் அமைப்பினை சுருக்கமாக விவாதி.

## V. விரிவான விடை தருக

1. முதலமைச்சரின் அதிகாரங்கள், பணிகள் யாவை?
2. ஆளுநரின் அதிகாரங்கள், பணிகள் யாவை?
3. உயர்நீதி மன்றத்தின் அதிகாரங்கள், பணிகள் யாவை?

**VI. கற்பித்தல் மற்றும் கற்றல் செயல்கள்**

1. *மாநில அரசின் நிர்வாக அமைப்பினை விளக்கும் விளக்கப் பட அட்டை தயார் செய்க.*

2. *மாணவர் தமிழ்நாடு ஆளுநர், முதலமைச்சர், அமைச்சர்கள் மற்றும் அண்டை மாநிலங்களின் ஆளுநர்கள், முதலமைச்சர் களின் பெயர்களைப் பட்டியலிடல்.*

அலகு - II

பாடம் - 4

# இந்தியத் தேர்தல் ஆணையம்

**கற்றல் நோக்கங்கள்**

*1. மாணவர் இந்தியத் தேர்தல் ஆணையம் ஒரு சுதந்திரமான அரசியலமைப்புச் சட்ட அமைப்பு என்பதைப் புரிந்து கொள்ளுதல்.*

*2. மாணவர் தேர்தல் ஆணையத்தின் அமைப்பினைத் தெரிந்து கொள்ளுதல்.*

*3. மாணவர் இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அதிகாரங்கள், பணிகளைப் பற்றிக் கற்றல்.*

*4. மாணவர் தலைமைத் தேர்தல் ஆணையர், மற்ற தேர்தல் ஆணையர்களின் நியமனம் பற்றி தெரிந்து கொள்ளுதல்.*

*5. மாணவர் மாநிலத் தேர்தல் ஆணையம், அதன் பணிகள் பற்றிய அறிவினைப் பெறல்.*

இந்தியத் தேர்தல் ஆணையம் ஒரு சுதந்திரமான அரசியலமைப்புச் சட்ட அமைப்பு ஆகும். இவ்வாணையம் **புது தில்லியில்** அமைந்துள்ளது. இவ்வாணையம் நாட்டின் அனைத்து தேர்தல் பணிகளையும் மேற்பார்வையிடுகிறது. இதனை **''நிர்வாசன் சதன்''** என்றும் அழைக்கின்றனர்.

**அமைப்பு :** இந்தியத் தேர்தல் ஆணையம் மூன்று உறுப்பினர்களைக் கொண்ட ஓர் அமைப்பு ஆகும். இதில் ஒரு தலைமைத் தேர்தல் ஆணையரும், இரண்டு மற்ற தேர்தல் ஆணையர்களும் உள்ளனர். அவர்கள் அனைவரையும் இந்தியக் குடியரசுத் தலைவர் நியமனம் செய்கிறார். தலைமைத் தேர்தல் ஆணையரும்,

மற்ற தேர்தல் ஆணையர்களும் தாங்கள் பதவியேற்ற நாளிலிருந்து ஆறு ஆண்டுகள் வரை பதவியிலிருப்பர்.

தேர்தல் ஆணையர்களின் அந்தஸ்து உச்ச நீதிமன்ற நீதிபதிகளுக்கு இணையானதாகும். இவர்களின் ஊதியங்களும், படிகளும் இந்திய உச்சநீதி மன்ற நீதிபதிகளின் ஊதியங்களுக்கும் படிகளுக்கும் சமமாக உள்ளன. இவர்களது ஊதியங்களும் படிகளும் இந்தியாவின் தொகுப்பு நிதியிலிருந்து (Consolidated Fund of India) வழங்கப்படுகின்றன.

**அதிகாரங்களும் பணிகளும் :** தேர்தல் ஆணையம் பின்வரும் முக்கியப் பணிகளைப் புரிகின்றது :

1. நாடாளுமன்றத் தேர்தல்களை நடத்துதல்,
2. மாநில சட்டமன்றங்களுக்கான (யூனியன் பிரதேசங்கள் உள்பட) தேர்தல்களை நடத்துதல்,
3. குடியரசுத் தலைவர், துணைக் குடியரசுத் தலைவர் பதவி களுக்கான தேர்தல்களை நடத்துதல் ஆகியனவாகும்.

மேற்குறிப்பிட்ட செயல்களுடன் தொடர்புடைய பணி களாக (அ) வாக்காளர் பட்டியலைத் தயாரித்தல், (ஆ) தேர்தல் தேதிகளை நிர்ணயித்தல், (இ) தேர்தல்களை மேற்பார்வை யிடுதல், (ஈ) வாக்கு எண்ணிக்கை மற்றும் முடிவுகளை அறிவிக்க ஏற்பாடு செய்தல், (உ) ஒரு நாடாளுமன்ற அல்லது மாநிலச் சட்டமன்ற உறுப்பினர் தேர்தல் குறித்த சர்ச்சைகள் எழும்போது அவர் தகுதியை இழக்கின்றாரா அல்லது இல்லையா என்பது பற்றிய அறிவுரையைக் குடியரசுத் தலைவருக்கு வழங்குதல் போன்றவற்றையும் புரிகின்றது.

**ஆணையத்தின் சுதந்திரத் தன்மை :** தேர்தல் ஆணையத்தின் பங்கு அச்சாணி போன்றதாகும். ஆணையத்தின் பாரபட்சமின்மை அதன் சுதந்திரத் தன்மையுடன் முக்கியமாகப் பிணைக்கப்பட்டு உள்ளது. தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் பிற தேர்தல் ஆணையாளர்களின் இன்றியமையாப் பணிகள் சட்டம் பின் வருவனவற்றிற்கு வகை செய்கிறது :

அ. தேர்தல் ஆணையர் நியமனம் விருப்பத்தின் அடிப்படையில் அமைந்ததன்று. இந்த நியமனம் 6 ஆண்டுகள் பதவிக் காலம் அல்லது ஒருவர் 65 வயதினை எட்டுதல் இவற்றில் எது முன்னதோ அதன்படி நியமிக்கப்படுகின்றார்.

ஆ. ஒரு தேர்தல் ஆணையரை உச்சநீதி மன்ற நீதிபதியை நீக்க பின்பற்றப்படும் வழியிலும் அதே முறையிலும் தான் நீக்க முடியும்.

இ. ஒரு ஆணையரின் பணி நிபந்தனை அவரது நியமனத்திற்குப் பின் அவருக்குப் பாதகமாக மாற்றப்படக் கூடாது.

ஈ. ஒரு தேர்தல் ஆணையரைத் தலைமைத் தேர்தல் ஆணையரின் பரிந்துரையில்லாமல் பணியிலிருந்து நீக்குதல் முடியாது.

உ. ஆணையம் தனது பணிகளைப் புரிந்திட மத்திய, மாநில அரசுகள் தேவையான பணியாளர்களை ஆணையத்திற்கு கிடைத்திடச் செய்ய கடமைப்பட்டுள்ளன.

***தலைமைத் தேர்தல் அதிகாரி :*** ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு தலைமைத் தேர்தல் அதிகாரி உள்ளார். இந்தியத் தேர்தல் ஆணையம் மாநில அரசின் / யூனியன் பிரதேசத்தின் ஒரு அலுவலரைத் **தலைமைத் தேர்தல் அதிகாரியாக** நியமனம் செய்கிறது அல்லது பெயரிட்டு பணியிலமர்த்துகிறது. அத்தகைய நியமனம் மாநில அரசு / யூனியன் பிரதேச நிர்வாகத்துடன் கலந்தாலோசிக்கப்பட்டு செய்யப்படுகிறது.

மாநில தேர்தல் பணியினை மேற்பார்வையிடும் அதிகாரம் தலைமைத் தேர்தல் அதிகாரிக்கு வழங்கப்படுகிறது. மாநிலத் தேர்தல் பணிகளை ஒட்டுமொத்தமாக மேற்பார்வையிடுதல், நெறிப்படுத்துதல், கண்காணித்தல் ஆகியன மாநிலத்திலுள்ள தலைமைத் தேர்தல் அதிகாரியின் கீழ் உள்ளன.

இந்தியத் தேர்தல் ஆணையம் நாடாளுமன்ற மற்றும் மாநில சட்டசபை தொகுதிகளுக்குத் தேர்தல் பார்வையாளர்களாக

**இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையம்**

**தலைமைத் தேர்தல் ஆணையர்**

**தேர்தல் ஆணையர்கள்**

**தலைமைத் தேர்தல் அதிகாரி**

**மாவட்டத் தேர்தல் அதிகாரி**

**தேர்தல் அதிகாரி**

**வாக்குப் பதிவு அலுவலர்**

**வாக்குச் சாவடி அதிகாரி**

**வாக்கு அலுவலர்**

*(பொதுப்பார்வையாளர்கள் மற்றும் தேர்தல் செலவுகள் பார்வை யாளர்கள்) அரசு அலுவலர்களை நியமிக்கின்றது. அவர்கள் ஆணையம் ஒப்படைக்கும் பணியினைப் புரிகின்றனர். பார்வை யாளர் நியமனம் என்பது சட்டபூர்வமான ஒன்றாகும். அவர்கள் ஆணையத்திற்கு அறிக்கையை நேரிடையாக அனுப்புகின்றனர்.*

***மாநிலத் தேர்தல் ஆணையம் :*** *அரசியலமைப்புத் திருத்தச் சட்டங்கள் 73 மற்றும் 74-ன் படி மாநிலத் தேர்தல் ஆணையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாநில / யூனியன் பிரதேச தேர்தல் ஆணையமும் உள்ளாட்சி அங்கங்களான மாநகராட்சிக் கழகங்கள், நகராட்சிகள், மாவட்ட ஊராட்சிகள், ஊராட்சி*

ஒன்றியங்கள், கிராம ஊராட்சிகள் மற்றும் பிற உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்களை நடத்த அதிகாரம் கொண்டவை யாகும். இவை இந்தியத் தேர்தல் ஆணையத்தின் கட்டுப்பாட்டில் இல்லாமல் தனியாக இயங்குகின்றன. தமிழ்நாட்டில் மாநிலத் தேர்தல் ஆணையம் **சென்னையில்** அமைந்துள்ளது.

**கற்றல் அடைவுகள்**

1. மாணவர் இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அமைப்பினை விவரிக்க முடியும்.
2. மாணவர் தேர்தல் ஆணையத்தின் பணிகளை விளக்க முடியும்.
3. மாணவர் தேர்தல் ஆணையர்கள் நியமனம் பற்றிக் குறிப்பிட முடியும்.
4. மாணவர் மாநிலங்களில் எந்த அமைப்பு உள்ளாட்சித் தேர்தல்களை நடத்துகின்றது என்பதை விளக்க முடியும்.

## சுய மதிப்பீடு

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்**

1. இந்தியத் தேர்தல் ஆணையம் ஒரு
   அ. சுதந்திரமான அமைப்பு   ஆ. சட்டபூர்வ அமைப்பு
   இ. தனியார் அமைப்பு   ஈ. பொது நிறுவனம்

2. இந்தியத் தேர்தல் ஆணையம் அமைந்துள்ள இடம்
   அ. மும்பை   ஆ. சென்னை
   இ. புது தில்லி   ஈ. கொல்கத்தா

3. தேர்தல் ஆணையர்கள் இவரால் நியமிக்கப்படுகின்றனர்
   அ. பிரதம அமைச்சர்   ஆ. ஆளுநர்
   இ. இந்தியக் குடியரசுத் தலைவர்   ஈ. அமைச்சரவைக் குழு

4. உள்ளாட்சித் தேர்தல்களை இதே அமைப்பு நடத்துகின்றது
   அ. மாநிலத் தேர்தல் ஆணையம்   ஆ. மத்திய தேர்தல் ஆணையம்
   இ. மாவட்டத் தேர்தல் வாரியம்   ஈ. பார்வையாளர்கள்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. இந்தியத் தேர்தல் ஆணையம் __________ எனவும் அழைக்கப் படுகின்றது.
2. தேர்தல் ஆணையர்களின் பதவிக்காலம் ______ ஆண்டுகளாகும்.
3. தேர்தல் ஆணையர்களின் தகுதி ______ நீதிபதிகளுக்குச் சமமாகும்.
4. அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் ______ மற்றும் ______ ஆகியவைகளின் கீழ் மாநிலத் தேர்தல் ஆணையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**III. பின்வருவற்றைப் பொருத்துக**

| | | |
|---|---|---|
| 1. தலைமைத் தேர்தல் ஆணையர் | -- | அரசியலமைப்புச் சட்ட அமைப்பு |
| 2. தலைமைத் தேர்தல் அதிகாரி | -- | 73 மற்றும் 74 திருத்தங்கள் |
| 3. இந்தியத் தேர்தல் ஆணையம் | -- | மாநிலத் தேர்தல் அதிகாரி |
| 4. உள்ளாட்சி அமைப்புகளின் தேர்தல் | -- | மாவட்ட அளவு |
| 5. தேர்தல் அதிகாரி | -- | இந்தியத் தேர்தல் ஆணையம் |

**IV. சுருக்கமாக விடையளிக்கவும்**

1. தேர்தல் ஆணையர்களை நியமனம் செய்வது யார்?
2. தேர்தல் ஆணையர்களின் பணிக்காலம் எவ்வளவு?
3. தலைமைத் தேர்தல் அதிகாரியை நியமிப்பது யார்?
4. உள்ளாட்சி அமைப்புகளின் தேர்தல்களை எந்த அமைப்பு நடத்துகிறது.

**V. விரிவான விடை தருக**

1. இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அதிகாரங்கள், பணிகள் யாவை?
2. மாநிலத் தேர்தல் ஆணையத்தின் அமைப்பு, பங்கினை விளக்குக.

பாடம் - 5

# தேர்தல்கள்

**கற்றல் நோக்கங்கள்**

1. மாணவர் தேர்தல்கள் பற்றிய அறிவினைப் பெறல்.
2. மாணவர் தேர்தல் முறைகளின் வகைகளைப் புரிந்து கொள்ளுதல்.
3. மாணவர் நாடாளுமன்றம், மாநிலச் சட்ட மன்றங்கள், உள்ளாட்சி அமைப்புகளின் உறுப்பினர்கள் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகின்றனர் என்பதைப் புரிந்து கொள்ளுதல்.
4. மாணவர் மக்கள் பிரதிநிதிகளின் பங்கினைப் பற்றித் தெரிந்து கொள்ளுதல்.

நாடாளுமன்றம், மாநிலச் சட்ட மன்றங்கள், உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு வாக்காளர்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் செயலினைத் **தேர்தல்கள்** என அழைக்கிறோம். தேர்தலின்போது வாக்காளர்கள் அதி முக்கியத்துவம் பெறுகின்றனர். தேர்தல்கள் இன்றி பிரதிநிதித்துவ அரசு அமைவது இயலாததாகும். பொதுவாக இரு வகையாகத் தேர்தல் முறைகள் உள்ளன. அவைகளில் ஒன்று **நேர்முகத் தேர்தலும்** மற்றொன்று **மறைமுகத் தேர்தலும்** ஆகும். இந்தியாவில் போதுத் தேர்தல்கள் **ஐந்து** ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப் படுகின்றன. தேர்தல்கள் நாடாளுமன்றம், மாநிலச் சட்டமன்றங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு நடத்தப்படுகின்றன.

**நேர்முகத் தேர்தல்கள் :** இம்முறையில் வாக்காளர்கள் தங்களுக்கு விருப்பமான வேட்பாளர்களுக்கு நேர்முகமாக வாக்களித்து தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கின்றனர். இந்தியாவில் லோக் சபா மற்றும் மாநிலச் சட்டப் பேரவை உறுப்பினர்கள்

இம்முறையில் ஐந்து ஆண்டுக் காலத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இம்முறையில் ஒவ்வொரு வாக்காளரும் தாங்கள் விரும்பும் வேட்பாளர்களின் சின்னங்களுக்கு எதிராகத் தங்கள் வாக்கினைப் பதித்து வாக்களிக்கின்றனர். அவ்வாறு பதிவான வாக்குகளில் மிக அதிக எண்ணிக்கையில் வாக்குகளைப் பெறும் வேட்பாளர் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுவார்.

***நிறைகள் :***

1. இம்முறை மிகவும் மக்களாட்சித் தன்மையுடையதாகும். ஏனெனில் வாக்காளர்கள் தங்கள் பிரதிநிதிகளை நேர்முகமாக தேர்ந்தெடுக்கும் ஒரு வாய்ப்பினை இம்முறையில் பெறுகின்றனர்.
2. இம்முறையினால் பிரதிநிதிகளுக்கும் வாக்காளர்களுக்கும் இடையில் நெருக்கமான தொடர்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது.
3. அரசியலில் மக்கள் தீவிர பங்கினை ஆற்ற இம்முறை ஆர்வமூட்டுகின்றது.
4. பொதுவாக, நேர்முகத் தேர்தலில் வேட்பாளர்கள் தங்கள் கொள்கைகளையும் திட்டங்களையும் வாக்காளர் முன் அறிவிக்கின்றனர். இதனால் அரசின் செயல்பாடுகளை மக்களால் புரிந்துகொள்ள முடிகின்றது.
5. இம்முறையில் நல்ல பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கு வாய்ப்பு உள்ளது.

***குறைகள் :***

1. இந்தியாவில் பல வாக்காளர்கள் படிப்பறிவு அற்றவர்களாகவும் தெளிவற்றவர்களாகவும் உள்ளதால் தலைவர்களின் பேச்சுக்களால் அவர்கள் எளிதில் ஈர்க்கப்படுகின்றனர். அதன் விளைவாக சில நேரங்களில் திறமையற்ற சுயநலவாதிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டு விடுகின்றனர்.
2. இவ்வகைத் தேர்தல் அதிகச் செலவுடையதாகவும் மிகப் பெரிய அளவில் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டிய ஒன்றாகவும் உள்ளது.

3. பல்வேறு சாதிகள், சமயங்கள், மொழிகள் உள்ள ஒரு சமுதாயத்தில் பிளவுகள் மேலும் வலுக்க இம்முறையில் வாய்ப்புண்டு.

4. அச்ச உணர்வின் காரணமாக நல்லறிவுடையோர் தேர்தலில் பங்கேற்காமல் விட்டுவிடுகின்றனர்.

5. மக்களாட்சியில் நம்பிக்கையற்றவர்களுக்கு இம்முறை உகந்ததல்ல.

**மறைமுகத் தேர்தல் :** இம்முறையில் மக்கள் ஒரு வாக்காளர் மன்றத்தினைத் தேர்ந்தெடுக்கின்றனர். அம்மன்றம் அவர்களது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கின்றது. இவ்வகைத் தேர்தல் முறையை **மறைமுகத் தேர்தல்** என அழைக்கிறோம்.

**நிறைகள் :**

1. வயது வந்தோர் வாக்குரிமை முறையினால் ஏற்படும் குறைகளை இம்முறையிலான தேர்தல் நீக்குகின்றது.
2. இம்முறையினை மக்களாட்சி பாரம்பரியம் இல்லாத ஒரு நாட்டிலும் செயல்படுத்தலாம்.
3. இம்முறையில் அரசியல் கட்சிகளின் முக்கியத்துவம் குறைக்கப்படுகின்றது.
4. பெரிய நாடுகளுக்கு இம்முறை உகந்ததாகும்.
5. இம்முறையினால் குறைந்த செலவே ஏற்படும்.

**குறைகள் :**

1. இம்முறை மக்களாட்சித் தன்மையற்றது.
2. வாக்காளர்கள் அரசியலில் அதிக ஈடுபாடு கொள்வதில்லை.
3. இம்முறையில் கையூட்டிற்கும் லஞ்சத்திற்கும் வாய்ப்புண்டு.
4. இம்முறையில் வாக்காளர்களின் முக்கியத்துவம் மிகவும் குறைகின்றது.
5. இம்முறையில் வாக்காளர்களுக்கும் பிரதிநிதிகளுக்குமிடையிலான நேரிடைத் தொடர்பு கிடையாது.

**இடைத் தேர்தல் :** ஒரு வேட்பாளரின் பதவிக்காலத்தில் அவரது பதவி விலகல் அல்லது இறப்பினால் ஏற்படும் நாடாளுமன்ற அல்லது மாநிலச் சட்டமன்றக் காலி இடத்தினை நிரப்ப நடத்தப் படும் தேர்தல் **இடைத் தேர்தல்** என அழைக்கப்படுகிறது.

**உப தேர்தல் :** நாடாளுமன்றத்தையோ அல்லது மாநிலச் சட்ட மன்றத்தையோ அதனுடைய பதவிக் காலம் முடியும் முன்பே கலைத்துவிட்டு நடத்தும் பொதுத் தேர்தல் **உப தேர்தல்** என அழைக்கப்படுகிறது.

**உள்ளாட்சி அமைப்புகள் தேர்தல் :** உள்ளாட்சி அமைப்பு அல்லது உள்ளாட்சி அரசு என்பதன் பொருள் ஒரு பகுதியின் மக்கள் தங்கள் பகுதி விவகாரங்களைத் தாங்களே நிர்வகித்துக் கொள்ளுதல் ஆகும். அதன் அடிப்படைக் கொள்கை என்ன வெனில் மத்திய, மாநில அரசுகளைவிட ஒரு பகுதியின் தேவை களையும் பிரச்சினைகளையும் அப்பகுதியின் மக்களே சிறப்பாக கவனித்துக் கொள்ள முடியும் என்பதாகும்.

1992-ஆம் ஆண்டு அரசியலமைப்புச் சட்ட திருத்தச் சட்டங்கள் 73 ம் 74 ம் இயற்றப்பட்டன. இத்திருத்தச் சட்டங்கள் 1993-ஆம் ஆண்டு ஏப்ரல் 24 முதல் நடைமுறைக்கு வந்தன. இவை ஊராட்சிகளையும் நகராட்சி அமைப்புகளையும் அரசியலமைப்பு சட்டப்படியான அமைப்புகளாக மாற்றின.

**உள்ளாட்சி அரசு :** உள்ளாட்சி அரசு நகர்ப்புற உள்ளாட்சி அரசாகவும் மற்றும் கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகள் எனவும் பிரிக்கப்படுகின்றன.



73-வது அரசியல் சட்டத்திருத்த சட்டம் ஒவ்வொரு கிராமத்திலும் கிராம சபையினையும் கிராம, இடைநிலை, மாவட்ட அளவில் ஊராட்சிகளையும் ஏற்படுத்த வகை செய்கிறது. **'நகர்பாலிகாச் சட்டம்'** எனவும் அழைக்கப்படும் 74-வது அரசியல் சட்டத் திருத்தச் சட்டம் மூன்று வகை நகராட்சி அமைப்புகளை அமைக்க வகை செய்கின்றது. இவைகள் நகர்ப்புற ஊராட்சிகள், நகராட்சிக் கழகங்கள், மாநகராட்சி கழகங்கள் எனப்படும். நகர்ப்புற ஊராட்சிகள் கிராமப் பகுதியாக இருந்து நகரப் பகுதியாக மாறிவரும் பகுதிகளுக்கு அமைக்கப்படுவன ஆகும். சிறு நகர்ப்புறப் பகுதிகளுக்கு அமைக்கப்படும் அமைப்புகள் நகராட்சிகள் ஆகும். பெருமளவிலான நகர்ப்புறப்பகுதிகளுக்கு அமைக்கப்படும் அமைப்புகள் மாநகராட்சிகள் ஆகும்.

**கிராம உள்ளாட்சி அமைப்புகள்** : தமிழ்நாடு சட்டமன்றம் 73-வது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தின்படி 1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டத்தினை நிறைவேற்றியது. தமிழ்நாட்டில் பின்வரும் வகையிலான மூன்று கட்ட கிராம உள்ளாட்சி அரசு செயல்படுகின்றது : (1) 500 பேர்களையும் அதற்கு மேலும் மக்கள் தொகையைக் கொண்ட ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு ஊராட்சி, (2) வட்டார அளவில் பல கிராம ஊராட்சிகளைக் கொண்ட ஊராட்சி ஒன்றியக் குழு மற்றும், (3) மாவட்ட அளவில் மேல் கட்டத்தில் மாவட்ட ஊராட்சி ஆகியனவாகும். தற்போது தமிழ்நாட்டில் 12,584 கிராமப் பஞ்சாயத்துக்களும், 384 ஊராட்சி ஒன்றியங்களும், 28 மாவட்ட ஊராட்சிகளும் உள்ளன.

கிராம ஊராட்சியின் தலைவர், பகுதி உறுப்பினர்கள் அரசியல் அடிப்படையின்றி மக்களால் நேரிடையாகத் தேர்ந் தெடுக்கப்படுகின்றனர். துணைத் தலைவர்கள் பகுதி உறுப்பினர் களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அனைவரும் ஐந்து ஆண்டு களுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இவ்வமைப்புகளில் மூன்றில் ஒரு பகுதி இடங்கள் பெண்களுக்காக ஒதுக்கப் பட்டுள்ளன.

அனைத்து ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் உறுப்பினர் களும் மக்களால் நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஊராட்சி ஒன்றியக் குழுவின் தலைவர் அக்குழுவிற்குத் தலைமைப் பொறுப்பேற்கிறார். தலைவரையும், துணைத் தலைவரையும் பகுதி உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கின்றனர். தேர்ந் தெடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் பதவிக் காலம் ஐந்து ஆண்டுகளாகும்.

ஊராட்சி முறையின் மூன்றாவது கட்ட அமைப்பு மாவட்ட ஊராட்சிகள் ஆகும். மாவட்ட ஊராட்சிகளின் தலைவரே அதன் முதன்மையானவர். அவரை மாவட்ட ஊராட்சியால் தேர்ந் தெடுக்கப்பட்ட பகுதி உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கின்றனர். மக்கள் பகுதி உறுப்பினர்களை நேரிடையாகத் தேர்ந் தெடுக்கின்றனர்.

18 வயதிற்கு மேற்பட்ட வயது வந்த குடிமக்கள் அனை வரும் வாக்களிக்கத் தகுதியுடையவர்கள். 21 வயது நிரம்பிய வர்கள் மட்டுமே ஊராட்சி உறுப்பினர்களாகவும், துணைத் தலைவர்களாகவும், தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்படுவர். ஊராட்சியின் பதவிக்காலம் முடியும் முன்பு அது கலைக்கப் படுமாயின் 6 மாத காலத்திற்குள் அதற்குத் தேர்தல் நடத்தப் பெறல் வேண்டும்.

**நகர உள்ளாட்சி அமைப்புகள் :** அரசியலமைப்புச் சட்டம் மாநகராட்சிக் கழகம், நகராட்சிகள், நகர்ப்புற ஊராட்சிகளை நகர உள்ளாட்சி அமைப்புகளாக அங்கீகரித்துள்ளது. இருந்த போதிலும் நகர அமைப்புகள் (Townships), இராணுவக் குடியிருப்பு வாரியங்கள் (Contonment Boards), அறிவிக்கப்பட்ட பகுதி குழுக்கள் (Notified Area Committee) ஆகியனவும் மற்ற சில நகர உள்ளாட்சி அமைப்புகளாகும்.

நகராட்சி அமைப்பின் மேல் கட்டத்தில் **மாநகராட்சிக் கழகங்கள்** உள்ளன. இம்மாநகராட்சிக் கழகங்கள் பெரிய நகரங்களில் நிறுவப்படுகின்றன. பொதுவாக, 10 இலட்சம் மக்கள் தொகையையும் அதற்கு மேலும் கொண்ட பெரு நகரங்கள் மாநகராட்சிகளாக அமைக்கப்படுகின்றன. உதாரணமாக சென்னை, மும்பை, கொல்கத்தா, டெல்லி ஆகியன இந்தியாவில்

மிகப் பெரிய மாநகராட்சிக் கழகங்களாகும். தமிழ்நாட்டில் சென்னை, மதுரை, கோயமுத்தூர், சேலம், திருச்சி மற்றும் திருநெல்வேலி போன்ற 6 மாநகராட்சிக் கழகங்கள் உள்ளன.

மாநகராட்சிக் கழகத்தின் அரசியல் தலைவர் மேயர் ஆவார். அவர் மாநகரத் தந்தை எனவும் மாநகரின் முதல் குடிமகன் / குடிமகள் எனவும் அழைக்கப்படுகிறார். மேயரையும், பகுதி உறுப்பினர்களையும் மக்கள் நேரிடையாகத் தேர்ந்தெடுக்கின்றனர். பகுதி உறுப்பினர்கள் துணை மேயரைத் தேர்ந்தெடுக்கின்றனர். அவர்களது பதவிக்காலம் 5 ஆண்டுகளாகும். மாநகராட்சிக் கழக உறுப்பினர்களின் 2/3 பங்கு பெறும்பான்மை பலத்துடன் தீர்மானம் இயற்றி மேயர், துணை மேயரைப் பதவியிலிருந்து நீக்கலாம்.

நகர உள்ளாட்சி அரசில் நகராட்சிகள் இரண்டாவது இடத்தை வகிக்கின்றன. நகராட்சி எனும் சொல் நகர் அல்லது மாநகரின் சுய-ஆட்சியைக் குறிக்கின்றது. தமிழ் நாட்டில் 100-க்கும் மேற்பட்ட நகராட்சிகள் உள்ளன. ஒவ்வொரு நகராட்சியிலும் தலைவர், துணைத் தலைவர், பகுதி உறுப்பினர்கள் உள்ளனர். தலைவரையும், பகுதி உறுப்பினர்களையும் மக்கள் நேரிடை யாகத் தேர்ந்தெடுக்கின்றனர். துணைத் தலைவரைப் பகுதி உறுப்பினர்கள் தங்களுக்குள் தேர்ந்தெடுத்துக் கொள்கின்றனர். அவர்கள் 5 ஆண்டுகள் பதவி வகிக்கின்றனர்.

ஒவ்வொரு சிறுநகர்ப் பகுதியிலும் ஒரு நகர்ப்புற ஊராட்சி அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் உள்ளனர். இதற்காக நகர்ப்புற ஊராட்சி பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பகுதியும் ஒரு உறுப்பினரை மட்டுமே தேர்ந்தெடுக்கின்றது. நகர்ப்புற ஊராட்சி யின் தலைவரையும், உறுப்பினர்களையும் மக்கள் நேரிடையாகத் தேர்ந்தெடுக்கின்றனர். அவர்களும் ஐந்து ஆண்டுகள் பதவி வகிக்கின்றனர். நகராட்சித் தலைவர், உறுப்பினர்களைப் போன்ற அதே நிலையினையும், அதிகாரங்களையும் மற்றும் உரிமை களையும் இவர்களும் பெற்றுள்ளனர்.

**மக்கள் பிரதிநிதிகளின் பங்கும் பொறுப்புகளும் :** தேர்ந் தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற, மாநிலச் சட்டமன்ற, உள்ளாட்சி அமைப்புகளின் உறுப்பினர்கள் **மக்கள் பிரதிநிதிகள்** என அழைக்கப்படுகின்றனர். மக்களுக்கான அவர்களது பங்கும் பொறுப்புகளும் மிக முக்கியமானவை. நாடாளுமன்ற, மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்கள் மக்களுக்கு தனிப்பட்ட முறையில் பொறுப்புடையவர்கள் ஆவர். நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தின் மூலம் தங்கள் பணிகளைப் புரிகின்றனர். மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்கள் மாநில அளவில் அமைச்சர் களாகவும் மக்களின் பிரதிநிதிகளாகவும் தங்கள் பணியினைப் புரிகின்றனர். மேயர், நகரத் தலைவர், தலைவர் போன்றோர் பல்வேறு உள்ளாட்சி அமைப்புக்களின் அரசியல் நிர்வாகி களாவர். உள்ளாட்சி அமைப்புகளின் அரசியல் தலைவர்கள் மாநகராட்சிக் கழகங்கள், நகராட்சிகள் மற்றும் ஊராட்சிகளின் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குகின்றனர். அவர்கள் உள்ளாட்சி அமைப்புகளின் ஆவணங்களைப் பராமரித்து அவ் வமைப்புகளின் அலுவலர்கள் மீது நிர்வாக அதிகாரத்தினையும் செலுத்துகின்றனர். மக்கள் பிரதிநிதிகளுக்கு ஒருங்கிணைப்பு, மேற்பார்வையிடுதல் பணி முக்கியமானதாகும்.

**கற்றல் அடைவுகள்**

1. மாணவர் நமது நாட்டில் பின்பற்றப்படும் தேர்தல் முறை களை விளக்க முடியும்.
2. மாணவர் நேர்முக, மறைமுகத் தேர்தல்களின் நிறைகள், குறைகளைக் குறிப்பிட முடியும்.
3. மாணவர் உள்ளாட்சி அமைப்புகளின் வகைகளை விவரிக்க முடியும்.
4. மாணவர் 73-வது அரசியலமைப்புச் சட்டதிருத்தச் சட்டத் தினை விளக்க முடியும்.
5. மாணவர் மக்கள் பிரதிநிதிகளின் பங்கினையும் பொறுப்பு களையும் விளக்க முடியும்.

## சுய மதிப்பீடு

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்**

1. லோக்சபா உறுப்பினர்களின் பதவிக் காலம்

   அ. நான்கு ஆண்டுகள் ஆ. மூன்று ஆண்டுகள்

   இ. ஐந்து ஆண்டுகள் ஈ. இரண்டு ஆண்டுகள்

2. உள்ளாட்சி அமைப்புகளின் பதவிக் காலம்

   அ. மூன்று ஆண்டுகள் ஆ. ஆறு ஆண்டுகள்

   இ. நான்கு ஆண்டுகள் ஈ. ஐந்து ஆண்டுகள்

3. மேயரைத் தேர்ந்தெடுப்பவர்கள்

   அ. நேரிடையாக மக்கள் ஆ. உறுப்பினர்கள்

   இ. முதலமைச்சர் ஈ. ஆளுநர்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. இந்தியாவில் பொதுத் தேர்தல்கள் ______ ஆண்டுகளுக்கொரு முறை நடத்தப்படுகின்றன.
2. பொதுவாக ______ வகையான தேர்தல் முறைகள் உள்ளன.
3. கிராமத் தலைவரை மக்கள் ______ ஆகத் தேர்ந்தெடுக்கின்றனர்.
4. மேயரை மக்கள் ______ ஆகத் தேர்ந்தெடுக்கின்றனர்.

**III. பின்வருவனவற்றைப் பொருத்துக**

| | | |
|---|---|---|
| 1. | 73-வது அரசியலமைப்புச் சட்டத்திருத்தம் | -- 74வது திருத்தம் |
| 2. | நகர்பாலிகா | -- மாநகராட்சிக் கழகம் |
| 3. | மேயர் | -- ஊராட்சி நிர்வாகம் |
| 4. | நகரத் தலைவர் | -- நகர்ப்புற ஊராட்சி |
| 5. | தலைவர் | -- நகராட்சி |

**IV. சுருக்கமாக விடையளிக்கவும்**

1. தேர்தல் என்றால் என்ன?
2. தேர்தல் வகைகளை விளக்குக.
3. இடைத் தேர்தல் என்றால் என்ன?
4. உள்ளாட்சி அரசு வகைகளை விளக்குக.

**V. விரிவான விடை தருக**

1. நேர்முகத் தேர்தலின் நிறைகள், குறைகள் யாவை?
2. உள்ளாட்சி அமைப்புகளின் உறுப்பினர்கள் எவ்வாறு தேர்ந் தெடுக்கப்படுகின்றனர்?
3. மக்கள் பிரதிநிதிகளின் பங்கு, பொறுப்புகள் யாவை?

**VI. செய்முறைப் பயிற்சிகள்**

1. உள்ளாட்சி அரசின் வகைகள் கொண்ட விளக்க அட்டை ஒன்று தயார் செய்க.
2. உள்ளாட்சி சுய-அரசின் அமைப்பினைக் காண்பிக்கும் அட்டைப் படம் ஒன்று தயார் செய்து அதனை வகுப் பறையில் பார்வைக்கு வைக்கவும்.

பாடம் - 6

# குடியுரிமை

**கற்றல் நோக்கங்கள்**

1. மாணவர் குடியுரிமை, வாக்குரிமை பற்றி புரிந்து கொள்ளுதல்.
2. மாணவர் வாக்காளர் அடையாள அட்டை, வாக்களித்தல் முறைகள் பற்றிய அறிவினைப் பெறல்.
3. மாணவர் குடியுரிமைக்குரிய தகுதிகளைப் பற்றி தெரிந்து கொள்ளுதல்.
4. மாணவர் அரசியல் கட்சிகளின் சின்னங்கள் பற்றி தெரிந்து கொள்ளுதல்.
5. மாணவர் வாக்காளர்களின் கடமைகளைப் புரிந்து கொள்ளுதல்.

'குடிமகன்' எனப் பொருள்படும் **'சிட்டிசன்'** எனும் ஆங்கிலச் சொல் இலத்தீன் மொழி வார்த்தையான 'சிவிஸ்' என்பதிலிருந்து பெறப்பட்டதாகும். அச்சொல் நகர-நாட்டில் (City-State) வசிப்பவர் எனும் பொருள் கொண்டதாகும். நகர-நாடு அரசுகள் மறைந்த பின் அச்சொல் ஒரு நாட்டில் வசிக்கின்ற வர்களைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது. ஒரு நாட்டின் குடி மக்கள், முழு **குடியுரிமை** மற்றும் அரசியல் உரிமைகளை அனுபவிக்கின்றனர்.

**குடிமக்களின் உரிமைகள் :** நமது அரசியலமைப்புச் சட்டம் நம் நாட்டின் குடிமக்களுக்குப் பின்வரும் உரிமைகளை வழங்கு கின்றது :

1. அடிப்படை உரிமைகள்.
2. குடிமக்கள் மட்டுமே பொதுப்பதவிகளை வகிக்கத் தகுதி யுடையவர்கள். நமது நாட்டின் தலையாய பொதுப்

பதவிகள் குடியரசுத் தலைவர், துணைக் குடியரசுத் தலைவர், பிரதம அமைச்சர், உச்ச, உயர் நீதிமன்ற நீதிபதி கள், ஆளுநர்கள் மற்றும் முதலமைச்சர் ஆகியனவாகும்.

3. குடிமக்கள் மட்டுமே லோக் சபா மற்றும் மாநில சட்ட மன்றங்களின் உறுப்பினர்களுக்கு வாக்களிக்கத் தகுதியுடை யவர்கள்.

4. குடிமக்கள் மட்டுமே நாடாளுமன்ற, மாநிலச் சட்ட மன்றங்களின் உறுப்பினர்களாகத் தகுதியுடையவர்கள்.

**குடிமக்களின் கடமைகள் :** 1976-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட 42-வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தின்படி அனைத்துக் குடிமக்களும் பின்பற்ற வேண்டிய **அடிப்படைக் கடமைகள்** வகுக்கப்பட்டுள்ளன. அவைகள் : (1) அரசியலமைப்புச் சட்டத் தினையும் அதன் குறிக்கோள் மற்றும் நிறுவனங்களையும் பின்பற்றி நடத்தல், (2) தேசியக் கொடி, தேசிய கீதத்தினை மதித்தல், (3) அகிம்சை, மக்களாட்சி மற்றும் சமயச் சார்பின்மை போன்ற அவசியக் கொள்கைகளை உணர்ந்து அவற்றைப் பின்பற்றுதல், மற்றும் (4) நமது பண்பாட்டு மரபு வளம், இறையாண்மை, ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டினைப் பாதுகாத்தல் ஆகியனவாகும். பொதுச் சொத்துக்கள், இயற்கை வளங்களைப் பாதுகாத்தல் மற்றும் சமூக விரோதச் செயல்களைத் தவிர்த்தல் போன்ற மேலும் பல கடமைகளும் உள்ளன.

**குடியுரிமையின் வகைகள் :** குடியுரிமை இரு வகைப்படும். அவை **பிறப்பால் பெறும் குடியுரிமை** மற்றும் **அயல் நாட்டவர் பெறும் குடியுரிமை** ஆகியனவாகும். ஒரு நாட்டில் நிரந்தரமாக வாழும் (உறைவிடமாகக் கொண்டோர்) குடிமக்களைப் பெற்றோராகக் கொண்டு பிறக்கும் குழந்தைகள் பிறப்பால் குடிமக்களாகின்றனர். உதாரணமாக இந்தியக் குடிமக்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் இயற்கையாகவும் தன்னிச்சையாகவும் இந்தியக் குடிமக்களா கின்றனர். ஒரு நாட்டில் நீண்ட காலம் தங்கியோ அல்லது அந்நாட்டின் ஒரு குடிமகனை / குடிமகளை மணந்தோ பெறும் குடியுரிமை அயல்நாட்டவர் பெறும் குடியுரிமை (Naturalisation)

என வழங்கப்படுகிறது. பொதுவாக ,வயது வந்த ஒருவர் எந்த நாட்டிலும் குடியுரிமைக்கு விண்ணப்பிக்கலாம். ஆனால் அவரின் விண்ணப்பத்தினை ஏற்கவும் அல்லது நிகராகரிக்கவும் அந்நாட்டு அரசிற்கு உரிமை உண்டு. இவ்வகையில் புதிய குடியுரிமை யினைப் பெறும் ஒருவர் தனது பழைய குடியுரிமையை இழந்து தான் எந்த நாட்டில் வாழ் கிறாரோ அந்நாட்டின் குடிமகன் / குடிமகளாகின்றார். உதாரண மாக இந்தியர்கள் பலர் அமெரிக்க ஐக்கிய நாட்டில் குடியுரிமை யைப் பெற்று அங்கேயே குடியமர்ந்துள்ளனர். இருந்தபோதிலும் இந்திய அரசு அவர்களில் சிலருக்கு இருப்பிடமற்ற இந்தியக் குடிமக்கள் (Non-Resident Indians (NRIs) எனும் தகுதியினை வழங்கியுள்ளது.

***குடியுரிமையின் தன்மை:*** *நமது இந்திய அரசியலமைப்புச் சட்டம் இந்தியக் குடிமகன் / குடிமகள் எனப்படும்* ***ஒற்றைக் குடியுரிமையை*** *மட்டும் வழங்குகிறது. ஆனால் அமெரிக்க ஐக்கிய நாடு, சுவிட்சர்லாந்து போன்ற சில கூட்டரசு நாடுகளில் கூட்டாட்சி அல்லது தேசியக் குடிமக்கள் மற்றும் குறிப்பிட்ட மாநிலத்தின் குடிமக்கள் எனும்* ***இரட்டைக் குடியுரிமை*** *முறை உள்ளது.*

***வாக்களிக்கும் உரிமைகள் :*** வாக்குரிமைப் பெற வயது ஒன்றே தகுதியாகும். குறிப்பிட்ட ஒரு வயதினை எய்திய மக்கள் **அனைவருக்கும் வாக்குரிமை** வழங்கப்படுகிறது. இதனை **வயதுவந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை** அல்லது **தேர்தல் வாக்குரிமை** என அழைக்கின்றனர். இந்தியாவில் 18 வயதினை எய்திய எவரும் வாக்களிக்கத் தகுதியுடையவர். அவர்களுடைய பெயர்கள் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்படுகின்றன. தேர்தல் ஆணையம் அவர்களுக்கு வாக்காளர் அடையாள அட்டையினை வழங்குகின்றது.

***வாக்காளர் அடையாள அட்டை :*** இந்தியத் தேர்தல் ஆணையம் வாக்காளர் அடையாள அட்டையினை அறிமுகம் செய்துள்ளது. இவ்வட்டையில் வாக்காளரின் பெயர், வயது, பால், முகவரி, தொகுதியின் குறியீடு எண் மற்றுமுள்ள தகவல்கள் அடங்கி யுள்ளன. வாக்குச் சாவடிகளுக்குள் நுழையும்போது வாக்காளர்கள்

இவ்வடையாள அட்டையைத் தங்களுடன் வைத்துக் கொள்ளுதல் வேண்டும். வாக்காளர் அடையாள அட்டை வழங்கப்பெறாத வாக்காளர்கள் வாக்களிக்கச் செல்லும்போது தங்களுடன் பின்வரும் ஏதாவதொரு ஆதாரத்தினை வைத்துக் கொள்ளுதல் வேண்டும். அவை (1) குடும்ப உணவு அட்டை, (2) ஓட்டுநர் உரிமம், (3) நுழைவு உரிமை சான்றிதழ் (Passport Certificate) ஆகியனவாகும். ஒவ்வொரு வாக்காளரும் தங்கள் பகுதியில் வாக்காளர் அடையாள அட்டையினை அரசு அலுவலர்கள் வழங்கும் பொழுது அதனைப் பெற்று தேர்தல் ஆணையத்துடன் ஒத்துழைத்தல் அவசியமாகும்.

**வாக்களிக்கும் முறை :** வாக்களிக்கும் முறையினை இருவகைப் படுத்தலாம். அவை **வெளிப்படையான வாக்குப்பதிவு, இரகசிய**

**தற்போதைய வாக்காளர் அடையாள அட்டையின் மாதிரி**

**முன் பக்கம்**




**பின் பக்கம்**




**வாக்குப்பதிவு** என்பன ஆகும். தற்போது இவ்விரு வாக்களிக்கும் முறைகளிலும் வாக்கினைப் பதிவு செய்ய மின்னணுச்

சாதனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இதனை ***மின்னணு முறையில் வாக்களித்தல்*** என அழைக்கிறோம்.

***1. வெளிப்படையான வாக்குப்பதிவு :*** ஒரு வாக்காளர் தனது வாக்கினை வெளிப்படையாகத் தெரிவித்தால் அதனை **வெளிப் படையான வாக்குப்பதிவு** என அழைக்கிறோம். வெளிப்படை யான வாக்குப்பதிவு முறைக்குச் சிறந்த உதாரணம் கைகளை உயர்த்திக் காட்டி நபர்களைத் தேர்ந்தெடுத்தலாகும். இம்முறை யில் இரகசியம் காக்கப்படுவதில்லை. இம்முறை வாக்காளர் எண்ணிக்கை பெருமளவிலுள்ள பொதுத் தேர்தல்களுக்குப் பயன்படாது. இம்முறையிலுள்ள வெளிப்படைத் தன்மையினால் வாக்காளரின் விருப்ப உரிமை மறுக்கப்படுகிறது.

***2. இரகசிய வாக்குப் பதிவு :*** இம்முறையில் வாக்காளர்கள் தங்கள் வாக்குரிமையை இரகசியமாகச் செயலாக்குகின்றனர். தனிப் பட்ட வாக்காளரின் விருப்பத்தினைப் போட்டியிடும் வேட் பாளரோ அல்லது உடன் வாக்களிக்கும் வாக்காளரோ அறிய முடியாது. உதாரணமாக இந்தியாவில் நடத்தப்பெறும் பொதுத் தேர்தல்களில் இம்முறை பின்பற்றப்படுகிறது. இங்கு வாக்காளர் களுக்கு வேட்பாளர்களின் பெயர்களும், சின்னங்களும் கொண்டு அச்சிடப்பட்ட வாக்குத்தாள்கள் வழங்கப்படுகின்றன. வாக்காளர் தான் விரும்பும் வேட்பாளரின் பெயருக்கு எதிரே குறிப்பிட்ட ஒரு குறியினை இட்டு வாக்குத்தாளை வாக்குப் பெட்டியில் போட வேண்டும். இம்முறையிலான இரகசிய வாக்குப் பதிவு முறை இந்தியா, அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து போன்ற நாடுகளில் பின்பற்றப்படுகிறது.

***அரசியல் கட்சிகளின் சின்னங்கள் :*** ஒவ்வொரு அரசியல் கட்சியும் தனக்கென ஒரு சின்னம் கொண்டுள்ளது. இந்தியத் தேர்தல் ஆணையம், நாடாளுமன்றம், மாநிலச் சட்ட மன்றங்களுக்குப் போட்டியிடும் வேட்பாளர்களுக்குச் சின்னங்களை ஒதுக்கு கின்றது. கிராம ஊராட்சிகள் மற்றும் நகராட்சிக் கழகங்கள் போன்ற உள்ளாட்சி அமைப்புகளுக்கு நடத்தப்படும் தேர்தலுக்கு மாநிலத் தேர்தல் ஆணையம் சின்னங்களை ஒதுக்குகின்றது.

**கற்றல் அடைவுகள்**

1. மாணவர் குடிமக்களின் உரிமைகளைக் குறிப்பிட முடியும்.
2. மாணவர் குடிமக்களின் அடிப்படைக் கடமைகளைப் பட்டியலிட முடியும்.
3. மாணவர் வாக்குரிமைகளை விளக்க முடியும்.
4. மாணவர் வாக்காளர் அடையாள அட்டையினைப் பற்றி விவரிக்க முடியும்.
5. மாணவர் வாக்களிக்கும் முறை பற்றி விளக்க முடியும்.

## சுய மதிப்பீடு

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்**

1. சிட்டிசன் எனும் சொல் இம்மொழியிலிருந்து பெறப்பட்டது

அ. கிரேக்கம் ஆ. இலத்தீன்

இ. ஸ்பானியம் ஈ. உருது

2. இந்தியாவில் வாக்களிக்கும் உரிமைக்கான வயது

அ. 21 ஆண்டுகள் ஆ. 25 ஆண்டுகள்

இ. 18 ஆண்டுகள் ஈ. 20 ஆண்டுகள்

3. குடிமக்கள் பொதுவாக இவ்வாறு வகைப்படுத்தப்படுகின்றனர்

அ. இரு வகையாக ஆ. நான்கு வகையாக

இ. ஐந்து வகையாக ஈ. ஒரு வகையாக

4. அமெரிக்க ஐக்கிய நாட்டில் உள்ள குடியுரிமை வகை

அ. இரட்டைக் குடியுரிமை ஆ. ஒற்றைக் குடியுரிமை

இ. மாநிலக் குடியுரிமை ஈ. மேலுள்ள எதுவும் இல்லை

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக

1. குடிமக்கள் முழு _________ மற்றும் _________ உரிமைகளை அனுபவிக்கின்றனர்.
2. இந்தியாவில் வாக்காளர் அடையாள அட்டையினை ______ ______ ______ அறிமுகம் செய்துள்ளது.
3. வாக்களிக்கும் முறை ______. மற்றும் ______ என இருவகையாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.
4. அரசியல் கட்சிகளின் சின்னங்களை ______ ______ ______ ஒதுக்குகின்றது.
5. இந்தியாவில் ______ குடியுரிமை மட்டுமே உள்ளது.

## III. பின்வருவனவற்றைப் பொருத்துக

| | | |
|---|---|---|
| 1. வாக்களிக்கும் வயது | -- | தேர்தல் ஆணையம் |
| 2. இரட்டைக் குடியுரிமை | -- | 18 ஆண்டுகள் |
| 3. சின்னங்களை ஒதுக்குவது | -- | கைகளை உயர்த்துதல் |
| 4. வெளிப்படையான வாக்குப்பதிவு | -- | 42-வது திருத்தச் சட்டம் |
| 5. அடிப்படைக் கடமைகள் | -- | அமெரிக்க ஐக்கிய நாடு |

## IV. சுருக்கமாக விடையளிக்கவும்

1. குடியுரிமை என்றால் என்ன?
2. 'வயதுவந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை' என்ற சொல்லினை விளக்குக.
3. வாக்காளர் அடையாள அட்டையினை வழங்குவது யார்?

## V. விரிவான விடை தருக

1. இந்தியக் குடிமக்களின் உரிமைகளையும், கடமைகளையும் விளக்குக.
2. வாக்குரிமை, வாக்காளர் அடையாள அட்டை, வாக்களிக்கும் முறை ஆகியன பற்றி விரிவாக எழுதுக.

**VI. கற்பித்தல் மற்றும் கற்றல் செயல்**

குடிமக்கள் உரிமைகள், கடமைகள் அடங்கிய விளக்க அட்டை ஒன்று தயார் செய்து அதனை வகுப்பறையில் பார்வைக்கு வைக்கவும்.

# புவியியல்

## இந்தியா - ஓர் அறிமுகம்

நம்நாடு பன்மைச் சிறப்புடைத்து. இங்கு பல வண்ணங்களும் உண்டு. நேற்றைய, இன்றைய இந்தியாவில் ஒரு காலம் தவிர்த்தத் தன்மை (timelessness) யும் நிலவுகின்றது. நவீன காலத்தின் மாற்றங்கள், முந்தைய காலத்துடன் ஒப்பிடு கையில், மிகவும் வேகமாக நிகழ்கின்றன. முன்பெல்லாம், இந்தியா மெல்லவே மாற்றம் அடைந்தது. வாழ்க்கையின் ஒன்றிரண்டு கூறுகளில் மட்டும் மாற்றங்களை அனுமதித்தது. ஆனால் இன்றைய மாற்றங்கள் எல்லா வாழ்க்கைக் கூறுகளையும் பாதிப்பது மட்டுமின்றி, அரசியல், பொருளாதாரம், சமுதாயம், நுட்பம் மற்றும் கலாச்சாரம் போன்ற எல்லாவற்றுள்ளும் உருமாற்றம் ஒன்றையே நிகழ்த்தியுள்ளது. கடந்த 50 வருடங்களுக்கு மேலான காலம், சுதந்திர இந்தியாவில் நிகழ்ந்த மாற்றங்களைத் தெளிவு செய்யவும் மதிப்பிடவும் ஒரு அமைப்பினை நமக்குத் தருகின்றது.

எல்லா மாற்றங்களும் நல்ல மாற்றங்களாகவே இருந்தன என்பதைப் பறைசாற்றத் தேவையில்லை. என்றாலும், முந்தைய காலத்தினை விடவும் மேலான முன்னேற்றம் ஏற்பட்டது என்பதை எடுத்துச் சொல்லவே வேண்டும். ஒரு சில பிணக்குகள் / வழக்குகள் மட்டுமே வெளிப்பாடாய் தோன்றின. அதனால் மேம்பாட்டில் சொல்லத் தகுந்த வகையில் முன்னேற்றம் இல்லாதிருந்தது என்பது ஒரு ஏமாற்றமே. எல்லாவற்றையும் விட மிக முக்கியமான சாதனை ஒரு பலம் வாய்ந்த தேசியத்தையும், பற்றையும் உருவாக்க முடிந்தது என்பதே. அரசியலில் சனநாயக முறைப்படி பங்கேற்க வாய்ப்பிருந்ததும் இச்சாதனைகளில் ஒன்றெனலாம். குறைபாடுகள் நிறையவே தென்படினும் கூட, சுதந்திரம் மற்றும் தனிமனித உரிமைகள் போன்றவை இருந்தன என்பது இன்னொருச் சிறப்பு. நாட்டுப்பற்று அதனால் வெளிப்படும் நேயம் நாம் நமது அண்டைநாடுகளைப் பொருத்த நடவடிக்கைகளை நடத்திய வகையில் தெரியவருகின்றன.

பொருளாதார முன்னேற்றம் அவ்வளவு திருப்தி தருவதாக இல்லை; என்றாலும் முந்தைய வருடங்களை விடவும் தற்சமயம் முன்னேற்றம் நன்றாகவே உள்ளது. நாட்டில் நிழ்ந்த சில நிகழ்ச்சிகள் நம்மை மெச்சும் வகையானவையாக இல்லை என்பது ஒரு கணிப்பு. பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் இந்தியாவின் சாதனைகள் சிறப்பாகவே இல்லை. ஆசிய நாடுகளை விடவும் பின்தங்கிய நிலையில் இந்தியா உள்ளது என்பது தெளிவு. கல்வியறிவு, நலவாழ்வு மற்றும் வாழ்க்கைத் தரம் போன்றவற்றிலும் நம் நாடு இன்னும் ஏழ்மை நிலையிலேயே உள்ளது என்பது வருத்தம் தரக்கூடிய ஒன்று. அரசுக் குறுக்கீட்டையும் கட்டுப்பாட்டினையும் மட்டும் நம்பினால் அது மிகையானதாகவே முடியும். நோபிள் பரிசு பெற்ற நமது அமர்தியா சென் கூறுகிறார் : 'தேவை இருந்தபோதும், நமது அரசு போதுமான அளவில், கல்வியறிவு மற்றும் நலவாழ்வு பொருத்தவரையில், உற்சாகத்துடன் செயல்படவில்லை.' என்றாலும், இந்தியா ஒரு வெற்றி நடை போடும் நாடாகத் தலைதூக்கும் என்ற நம்பிக்கை நிலவுகின்றது. ஏற்கனவே, நம்நாடு ஒருமுனைப்புடன் தன்னுள் இருந்து, தன்னை விடுவித்துக் கொண்டு வெளிவரவும் தொடங்கியுள்ளது. விளிம்பிலிருந்து விலகி மற்ற நாடுகளுடன் அரசியல் ரீதியில் நடுநிலைக்கும் வந்திருக்கின்றது. நமக்குச் சாதகமான சமுதாய -அரசியல் மாற்றங்களும் நிகழ்ந்த வண்ணம் உள்ளன. கூடிய சீக்கிரமே இந்தியா உலக அரங்கில் வெற்றி நாயகியாகத் திகழும். இங்கே வாழ்க்கைத் தரம் மேம்படும். அஹிம்சை வழியில் மற்ற மக்களுக்கு நேயம் தரும் வகையில், சார்பின்மையுடன் செயல் படுவோமானால், நாம் தலை தூக்குவோம், வீறு நடை போடுவோம்.

த. வசந்தகுமாரன்
தலைவர் : பத்தாம் வகுப்பு
புவியியல் புத்தகக் குழு



அலகு I : இந்தியா : வட்டாரப் பன்மை

பாடம் *1*

# இந்தியத் துணைக்கண்டம்

**கற்றல் நோக்கங்கள்**

1. மாணவர் இந்தியத் துணைக் கண்டத்தின் பல பரிமாணங்களை அறிந்து கொள்வதும், வியத்தலும்
2. மாணவர் இந்திய நிலத்தோற்றங்கள், கலாச்சாரங்கள் மற்றும் (மதச்)சார்பின்மையை தெரிந்து வியத்தல்.

புவியில் நிலநடுக்கோட்டிற்கு வடக்கில் ஆசியக் கண்டத்தின் தென்பகுதியில் அமைந்துள்ளது நமது துணைக் கண்டம். உலக நிலப்பரப்பில் 2.5 சதவிகிதத்தை மட்டும் தன்னுள் அடக்கிய போதிலும், உலக மக்கள் தொகையில் 16 சதவிகிதத்தைப் பெற்றுள்ளது. கண்டங்களின் நிலப் பரப்புடன் ஒப்பிடும் போது, இந்திய நிலப்பரப்பு சிறியதாக இருந்தபோதிலும் கண்டங்களில் காணப்படுவது போலவே நில அமைப்பு, கால நிலை, இயற்கைத் தாவரங்கள், மண் போன்ற இயற்கைக் காரணிகளிலும் கலாச்சாரக் காரணிகளான மொழி, மதம், இனம் மற்றும் பழக்கவழக்கங்களிலும் பல வேறுபாடுகள் நிறைந்து காணப்படுகின்றது. எனவே இந்தியா ஒரு துணைக் கண்டமாகக் கருதப்படுகின்றது.

பலவிதமான இயற்கை அமைப்பு, கலாச்சாரம், மதம், இனம், மொழிகள் காணப்படுவதால் இந்தியா துணைக் கண்டம் என்ற தகுதியைப் பெறுகின்றது.

**அமைவிடம்** : ஆசியக் கண்டத்தின் தென்பகுதியிலும் இந்தியப் பெருங்கடலின் தலைப்பகுதியிலும் இந்தியா அமைந்து உள்ளது. இந்தியாவின் மேற்கில் அரேபியத் தீபகற்பமும், கிழக்கில் இந்தோசீனா தீபகற்பமும் அமைந்து, ஒரு கேந்திர அமைப்பை நம் நாட்டிற்குத் தருகின்றன. அமைவிடச் சிறப்பி னால் இந்தியா உலகில் எல்லா நாடுகளுடனும் தொடர்பு கொள்ள முடியும். இந்தியாவின் மிக நீண்ட கடற்கரையும், துறைமுகங் களும் மேற்கு மற்றும் கிழக்கு நாடுகளுடன் வணிகத் தொடர் பிற்கும், கடல் போக்குவரத்துக்கும் வகைசெய்து நமக்கு உறுதுணையாக விளங்குகின்றன. வடக்கில் அமைந்துள்ள இமய மலைகளும் தெற்கில் அமைந்துள்ள இந்தியப் பெருங்கடலும் இந்தியாவிற்கு இயற்கை அரண்களாக விளங்குகின்றன (படம் 1.1).

### பரவல்

இந்தியா $8^{\circ}$ 4’ வட அட்சத்திலிருந்து $37^{\circ}$ 5’ வட அட்சம் வரையிலும் $68^{\circ}$ 7’ கிழக்குத் தீர்க்கத்திலிருந்து $97^{\circ}$2’ கிழக்குத் தீர்க்கம் வரையிலும் பரவியுள்ளது. மேலும் 23½$^{\circ}$ வட அட்சரேகை (கடகரேகை) இந்தியாவின் குறுக்காக ஓடி இந்தியா வை இரண்டு சமபாகங்களாகப் பிரிக்கின்றது (படம் 1.2).

1. கடக அட்சத்திற்கு தெற்கில் உள்ள இந்திய தீபகற்பப்பகுதி.
2. கடக அட்சத்திற்கு வடக்கில் உள்ள புறஇந்திய தீபகற்பப் பகுதி.

நம்நாடு புவிப்பரப்பின் அடிப்படையில் ஏழாவது பெரிய நாடாகும். இந்தியாவின் மொத்தப் பரப்பு 3.3 மில்லியன் ச.கி.மீட்டராகும். இந்தியா வடக்கு தெற்காக 3,214 கி.மீட்டர் நீளமும் கிழக்கு மேற்காக 2,933 கி.மீட்டர் அகலமும் கொண்டு உள்ளது. மேலும் 6,600 கி.மீட்டர் நீளம் கொண்ட மிக நீண்ட கடற்கரையையும் கொண்டுள்ளது. அந்தமான் - நிக்கோபார், இலட்சத்தீவுகளின் கடற்கரையையும் சேர்த்துக் கொண்டால் இந்தியக் கடற்கரையின் நீளம் 7,516 கி.மீட்டர் ஆகும்.






**படம் 1.1**

கடக அட்சம் நமது நாட்டை தீபகற்ப இந்தியா மற்றும் புற தீபகற்ப இந்தியா என்ற இரண்டு பாகங்களாகப் பிரிக்கின்றது.

## எல்லைகள்

இமயமலைகள் இந்தியாவின் வடக்கு எல்லைகளாகும். தெற்கே இந்தியப் பெருங்கடலும், மேற்கே அரபிக்கடலும், கிழக்கில் வங்காள விரிகுடாவும் எல்லைகளாக உள்ளன. இந்தியாவின் வடமேற்குப்பகுதிகளில் ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், வடக்கில் நேபாளம், சீனா, பூட்டான், கிழக்கில் வங்காளதேசம், தெற்கில் ஸ்ரீலங்கா போன்றவைகள் எல்லை நாடுகளாக உள்ளன. ஸ்ரீலங்காவை சிறிய நீர்ச்சந்தி பிரிகின்றது. இந்நீர்ச்சந்தி பாக்நீர்ச்சந்தி என்றழைக்கப் படுகின்றது.

ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், சீனா, நேபாளம், பூட்டான், மியான்மர், வங்காளதேசம் ஆகியவை இந்தியாவுடன் பொதுவான எல்லைகளைக் கொண்டுள்ளன. இதனால் எல்லைப் பிரச்சினையும் அந்நாடுகளின் கொள்கைப் பிரச்சினையும் இந்தியாவில் நேரடியாகவோ மறைமுக மாகவோ தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன.

குறிப்பாக பாகிஸ்தான் மற்றும் இந்தியாவுக்கு இடையிலான ஜம்மு காஷ்மீர் பிரச்சினை, சீனாவின் திபெத் பிரச்சினை, ஸ்ரீலங்காவின் விடுதலைப் புலிகள் போராட்டம் இந்தியாவை அரசியல் ரீதியாக அதிகம் பாதித்துள்ளது.

## அரசியல் பிரிவுகள்

இந்தியா விடுதலையடைவதற்கு முன்னர் 562 முடியரசு களும், கிழக்கிந்திய கம்பெனியால் நிறுவப்பட்ட ஒன்பது மாகாணங்களும் இருந்தன. சுமார் 150 வருடங்களாக ஆட்சி செய்த இங்கிலாந்து இந்தியாவை பல வட்டாரங்களாகப் (Provinces) பிரித்து நிர்வகித்தது. இந்தியா சுதந்திரம் அடைந்த போது இந்தியா, பாகிஸ்தான் என்ற இரண்டு நாடுகளாகப் பிரிந்தது. இந்தப் பிரிவினை இந்தியாவிற்கு பல பிரச்சினைகளைத் தோற்று வித்தது. வளங்களின் பரவல், தொழில், பொருளாதார வளர்ச்சியின் ஏற்றத் தாழ்வுகள் இப்பிரச்சினைகளை அதிகரிக்கக் காரணமாயின. இந்தியா மிகச் சிறுநாடுகளாக இருந்த காரணத்தால் நிர்வகிப்பதில்






**படம் 1.2**

ஏற்பட்ட சிக்கல்களைத் தவிர்க்க *1956*-ஆம் ஆண்டு இந்தியா மொழிவாரி மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டது: *25* மாநிலங்களும் மற்றும் *7* யூனியன் பிரதேசங்களும் கொண்டதாகப் பிரிக்கப்பட்டது. சென்ற சில வருடத்தில் பெரும் மாநிலங்கள் பிரிக்கப்பட்டு *3* புதிய மாநிலங்கள் தோன்றின. மக்கள் தொகை அதிகரித்த காரணத்தால் தற்போது இந்தியாவில் *28* மாநிலங்களும் *7* யூனியன் பிரதேசங்களும் உள்ளன (படம் *1.3*).

### வேற்றுமையில் ஒற்றுமை

இந்தியாவில் உயர்ந்த மலைகள், பீடபூமிகள், சமவெளிகள் என பலவேறுபட்ட நில அமைப்புகள் காணப்படுகின்றன. மிகப்பரந்த நிலப்பரப்பைக் கொண்டிருப் பதால் பல்வேறு விதமான காலநிலைகள் நிலவுகின்றன. இந்தியாவில் மிக வறண்ட தார் பாலைவனமும் மிக அதிக மழையினைப் பெறும் சிரபுஞ்சியும், வடகிழக்குப் பகுதியும், மேற்குக் கடற்கரையும் காணப்படுகின்றன. தாவர வகைகளும், சுற்றுப்புறச் சூழலுக்கு ஏற்ப மாறுபட்டுக் காணப்படுகின்றன. இராஜஸ்தானில் முட்புதர் களும், அசாமில் அடர்ந்த காடுகளும் காணக் கிடைக்கின்றன. அங்கே மிகப்பெரிய யானை, முதல் சிறிய உயிரினம் வரை பலவிதமான உயிரினங்களும் வாழ்கின்றன. இராஜஸ்தானில் உள்ள உப்புப் பாலைகள், ஆற்றுச் சமவெளிகளில் காணப்படும் வண்டல், பீடபூமிப் பகுதியில் காணப்படும் கரிசல்மண் எனப் பலவிதமான மண்வகைகள் காணப்படுகின்றன. பலவகையானக் கனிமப் பொருட்களும் வெட்டியெடுக்கப் படுகின்றன. இந்தியா இயற்கைக் காரணிகளான நிலஅமைப்பு, காலநிலை, இயற்கைத் தாவரம், மண் போன்றவற்றில் மட்டும் வேறுபட்டுக் காணப் படவில்லை. இங்கு வாழும் மக்களின் இனம், மொழி, பழக்கவழக்கங்கள், மதம் போன்றவற்றிலும் வேறு பட்டுள்ளது. இவ்வாறு வேறு பட்ட இன, மத, மொழி மக்களிடையில் பல நேரங்களில் பிரச்சினைகள் தோன்றினாலும் கூட இந்தியாவில் வாழும் மக்கள் அனைவர் மனதிலும் 'நாம் இந்தியர்' என்ற உணர்வு வலுவாக உள்ளன. மேலும் காஷ்மீரிலிருந்து கன்னியாகுமரி வரை மக்களின்






**படம் 1.3**

கலாச்சாரப் பழக்க வழக்கங்கள் ஏறக்குறைய ஒன்றாகவே உள்ளது. வழக்கில் உள்ள கதைகளும் ஒரே மாதிரியாயுள்ளன. இந்தியர் என்ற உணர்வு, இந்தியாவில் ஏற்படும் இயற்கைச் சீற்றங்கள், நாட்டின் பாதுகாப்பிற்கு பங்கம் வரும்போதும் மிக ஓங்கிக் காணப்படுகின்றது. வேற்றுமைகளை மறந்து நாம் இந்தியர் என்ற உணர்வுடன் அனைவரும் செயல்படுகின்றனர். அதே போன்று பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும்போது இந்தியர் அனைவரிடமும் இன, மொழி, மத பேதமின்றி இந்தியா வெற்றிபெற வேண்டும் என்ற உணர்வு மேலோங்கி காணப்படுகின்றது. இந்த உணர்வு இன்றுமட்டும் அல்லாமல் இந்தியா சிறுசிறு துண்டுகளாக, பிரிட்டிஷ் காலனி ஆதிக்கத்தில் இருந்தபோதே இருந்தது. இந்தியர் அனைவரும் ஒன்றுபட்ட ஒருமித்த குரலில் காந்தியின் தலைமையில் தண்டியாத்திரையின் போது ‘வெள்ளையனே வெளியேறு’ என்று முழங்கினர். இந்த ஒருமைப்பாடே பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை அசைத்து ஆங்கிலேயரை இந்தியாவை விட்டே வெளியேற்றியது (படம் *1.4*).

**இந்தியாவின் வண்ணங்கள்**

இந்தியா வண்ணம் நிறைந்த நாடாகும். இங்கு வாழ்ந்த ஞானிகள் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே சூரிய ஒளி பல நிறங்களை உள்ளடக்கி, வெண்நிறமாகக் காட்சியளிக்கின்றது என்பதனைக் கூறியுள்ளனர். மேலும் கதிரவனை சூரியக் கடவுளாகவும் உருவகப்படுத்தி மற்ற எட்டு கிரகங்களின் தலைவனாகவும், எல்லா உயிர் களுக்கும் ஆதாரமானவ னாகவும் நினைத்தனர். ஒவ்வொரு கிரகமும் ஒவ்வொரு வண்ணத்தைப் பூமிக்கு அனுப்புகின்றது. இந்தக் கிரகங்கள் புவியில் வாழும் உயிரினங்களின் விதியை நிர்ணயிக்கின்றன. இங்குள்ள விலையுயர்ந்த கற்கள், பூனைக் கண், முத்து, பவளம், மரகதம், கோமேதகம், நீலம், வைரம், வைடூரியம் என்பவை நிறங்களுடன் தொடர்பு உடையவை. இந்நிறங்கள் ஒவ்வொரு வாழ்க்கை நிலையிலும் மாற்றம் ஏற்படுத்தக் கூடியனவாம்.






**பாடம் 1.4.**

வண்ணங்கள் இந்திய வாழ்க்கை முறையில் ஓர் பிரிக்க முடியாத பகுதியாகும். இவை மதம், கலாச்சாரம், அன்றாட நடவடிக்கைகள் மற்றும் உணவு, உடை, விழாக்கள் ஆகிய வற்றில் இரண்டற கலந்துள்ளன. நிறங்கள் வாழ்க்கையின் வேகத்தையும், அழகையும் பிரிக்க இயலாமல் இந்திய வாழ்க்கையுடன் கலந்துள்ளன.

நிர்வாக அமைப்பு, இந்திய அரசியலமைப்புச் சட்டங்கள் எல்லாவற்றிலும் இந்தியா ஒன்று. இதில் வாழும் அனைவரும் சமம். அனைத்துச் சமூகத்தினருக்கும் பாதுகாப்பும், சுதந்திரமும் அளிக்கப்பட்டுள்ளன. இந்தியாவில் பல மொழிகள் பேசப் பட்டாலும், *18* மொழிகள் அரசின் மொழிகளாக அங்கீகரிக்கப் பட்டுள்ளன. இங்கு யார் வேண்டுமானாலும் எந்த மதத்தையும் பின்பற்றலாம்.

மொழிகள் என்பவை மற்றவருடன் தொடர்பு கொள்ளவும் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவும் உதவும் கருவியாகும். மதங்கள் மக்களை நெறிப்படுத்துவதற்காக ஏற்பட்டவை. எனவே மதமும், மொழியும் தனிப்பட்ட, சுயநலத்திற்காக கையாளப்படுவதையும், அதனை வைத்துக் கலவரங்கள் ஏற்படு வதையும் தடுத்தல் வேண்டும். அவ்வாறு தடுக்கப்படா விட்டால் நாம் நமது நாட்டின் சார்பின்மை (secularism) என்ற பெருமிதத்தையே இழந்துவிடுவோம். எனவே குழந்தைப் பருவத்தில் இருந்தே நாம் மதம், மொழியின் பெருமைகளை எடுத்துச் சொல்வதுடன், மற்ற மதங்களின் சிறப்புக்களையும் எடுத்துக்கூறி மத, மொழி நல்லிணக்கத்தையும் சகிப்புத் தன்மையையும் வளர்த்தல் வேண்டும். மொழிகள் நட்புறவை வளர்க்கும் பாலமாக விளங்குதல் அவசியமாகும்.

### இந்தியச் சார்பின்மை (INDIAN SECULARISM)

இந்தியா பல நம்பிக்கைகள் கொண்டது. பல்லாயிரம் வருடங்களாகவே இந்தியாவில் மதங்கள் நல்லிணக்கங் களுடன் ஒன்றுபட்டு இருந்துவந்தன. ஆனால் கடந்த நூற்றாண்டில் ஆங்காங்கே மத, இனக் கலவரங்கள் தோன்றி சார்பின்மையை குலைத்தன. இன்றும் கூட



இந்தியா சார்பின் மைக் கொள்கையையே பின்பற்றுகின்றது. இங்கு மதச் சார்பின்மை, மதச் சகிப்புத் தன்மை போன்றவை வேறுன்றி உள்ளன. எனினும், சில இடங் களில் நடந்த கலவரங்கள் நம்முடைய பாரம்பரியப் பெருமைக்கு ஊறுவிளைவிப்ப துடன் நாட்டினையும் சிறுசிறு துண்டுகளாக்கி பலமிழக்கச் செய்துவிடும் என்ற பயம் தோன்றியுள்ளது. எனவே, வளரும் குழந்தைகளுக்கு நல்லிணக்கத்தினையும் சார்பின்மை யையும் கற்றுத் தருவது நல்லது. அத்துடன் பிரிவினைச் செயல் களையும் ஒன்று திரண்டு எதிர்த்துப் போராடுவது என்ற லட்சியம் இந்தியாவிற்கு கொள்கைப் பெருமையினைத் தரும் என்பதில் ஐயமில்லை. சார்பற்ற மக்களாட்சி தழைக்க அது வழிகாட்டும் என்பதனையும் புகட்டுதல் நலம் பயக்கும்.

### வியத்தகு விவரங்கள்

இந்தியாவைப் பற்றி ஜெர்மன் பத்திரிகையில் வந்த விவரங்கள் இவை.

**இந்தியரின் உலகம் :** ஐக்கிய அமெரிக்காவில் இந்தியர்கள் விவரம்

ஐக்கிய அமெரிக்காவில் *3.22* மில்லியன் இந்தியர்கள் உள்ளனர். அமெரிக்காவின் மருத்துவர்களில் *38* சதவிகிதத்தினர் இந்தியர்கள். *12* சதவிகிதத்தினர் இந்திய விஞ்ஞானிகள், நாசாவில் பணிபுரிபவர்களில் *36* சதவிகிதத்தினர் இந்தியர்கள். மைக்ரோ சாப்ட் பணியாளர்களில் *34* சதவிகிதத்தினர் இந்தியர். ஐ.பி.எம் பணியாளர்களில் *28* சதவிகிதத்தினர் இந்தியர். ஜெராக்ஸ் பணி யாளர்கள் *13* சதவிகிதத்தினர் இந்தியர்கள். ஐக்கிய அமெரிக்க நாடுகளில் இந்தியர்களுள் *23* விழுக்காட்டினர் பச்சை அட்டைகள் வைத்துள்ளனர்.

### வட்டாரங்கள்

இந்தியா வேற்றுமைகள் நிறைந்த நாடு. ‘‘வேற்றுமையில் ஒற்றுமை’’ என்ற அளவில் இயற்கை மற்றும்

கலாச்சாரக் காரணிகளின் வேற்றுமையையும் காரணங்களையும் தெளிவாகப் புரிந்து கொள்ளுதல் நலம். ஒரு கூற்றினைச் சார்ந்து ஒரே மாதிரி உள்ள பகுதிகள் வட்டாரங்களாகப் பிரிக்கப்படுகின்றன. இயற்கை அல்லது செயற்கைக் காரணிகளில் ஏதாவது ஓரிரண்டு பகுதிகள் முழவதும் ஒரே மாதிரிச் சூழல்கள் உள்ளவைகளை வட்டாரங்கள் என்கிறோம். புவியியல் காரணிகளை வைத்து அடிப்படையில் இந்தியாவைப் பல வட்டாரங்களாகப் பிரிக்கலாம்.

**இந்தியாவைப் பற்றி மற்றவர்கள் கூறியது**

**ஆல்பர்ட் ஐன்ஸ்டைன்** : நாம் இந்தியர்களுக்கு கடன் பட்டிருக்கிறோம். எவ்வாறு எண்ணுவது என்பதனைக் கற்பித்தவர்கள் அவர்கள். அவ்வாறு கற்பித்திருக்கா விட்டால் எந்தவித அறிவியல் கண்டுபிடிப்புகளும் இல்லாமல் போயிருக்கும்.

**மார்க் ட்வைன்** : இந்தியா மனித இனத்தின் தொட்டில், மனிதப் பேச்சின் பிறப்பிடம், சரித்திரத்தின் தாயகம், நினைவுச் சின்னங்களுக்கு முதாட்டி, பாரம்பரியத்து பெரு முதாட்டி. மனித வரலாற்றின் விலைமதிக்க முடியாத சுவடுகள் இந்தியாவில்தான் பாதுகாக்கப்பட்டுள்ளன.

**பிரஞ்சு கல்வியாளர் ரொமைன்ரோலன்ட்** : உலகில் ஓரிடத்தில் மனிதர்களின் கனவெல்லாம் நினைவானது என்று எடுத்துக் கொண்டால் அவ்விடம் நிச்சயமாக இந்தியாவாகத் தான் இருந்திருக்கும்.

**ஹூ சை** : அமெரிக்க ஐக்கிய நாட்டின் சீன தூதர் கூறியது. சீனாவை 20 நூற்றாண்டுகளாக கலாச்சார ரீதியில் இந்தியா ஒரு வீரனையும் எல்லை தாண்டி அனுப்பாமல் வெற்றி கொண்டுள்ளது.

வட்டாரங்களை இயற்கை வட்டாரங்கள் மற்றும் கலாச்சார வட்டாரங்கள் என இருவகையாகப் பிரிக்கலாம் (படம் 1.5).



**படம் 1.5**

**இந்தியத் துணைக்கண்டம் : புவியியல் காரணிகள்**

| இயற்கைத் தோற்றங்கள் | கலாச்சாரத் தோற்றங்கள் |
|---|---|
| **இயற்கை வட்டாரங்கள்** | **கலாச்சார வட்டாரங்கள்** |
| 1. நிலத்தோற்றம் | 1. வேளாண்மை |
| 2. காலநிலை | 2. தொழிலகங்கள் |
| 3. இயற்கைத் தாவரம் | 3. சேவைகள் |
| 4. மண் | 4. மனித வளங்கள் |

**இயற்கை வட்டாரங்கள்** : நில அமைப்பு, பாறையமைப்பு, வடிகால், காலநிலை, இயற்கைத் தாவரங்கள், மண் ஆகியவற்றின் அடிப்படையில் இயற்கை வட்டாரங்கள் பிரிக்கப்படுகின்றன. இதில் ஏதாவது ஒரு காரணி ஒரே மாதிரியாக உள்ள பகுதிகள் ஒரு இயற்கை வட்டாரமாகக் கருதப்படுகின்றது. பொதுவாக கீழ்கண்ட காரணிகளின் அடிப்படையில் இயற்கை வட்டாரங்கள் பிரிக்கப்படுகின்றன.

1. நில அமைப்பு
2. காலநிலை
3. இயற்கைத் தாவரங்கள்

நில அமைப்பின் அடிப்படையில் பிரிக்கப்படும் பகுதிகளில் அந்தப் பகுதிகளில் காணப்படும் நில அமைப்பின் தன்மை மாறுதல் இல்லாமல் இருக்க வேண்டும். அதே போன்று காலநிலை அல்லது இயற்கைத் தாவரங்கள் அடிப்படையில் வகுக்கப்படும் வட்டாரங்களில் காணப்படும் காலநிலைகளில் தாவர வகைகளில் ஏறக்குறைய ஒரே மாதிரியான மாற்றங்கள் மிகாத் தன்மைகள் காணக்கிடைக்கின்றன.

**கலாச்சார வட்டாரங்கள்** : இவற்றில் கலாச்சாரக் காரணிகளின் செயற்பாட்டினால் ஒன்று போன்றுள்ள பகுதிகளைக் கலாச்சார வட்டாரம் என்கிறோம். இந்தியாவில் கீழ்க்காணும் காரணிகளின், செயல்பாட்டினை வைத்துக் கலாச்சார வட்டாரங்கள் பிரிக்கப் படுகின்றன. அவைகள் :

1. வேளாண்மை,
2. தொழில்,
3. சேவை மற்றும்
4. மனித வளம்

**இந்தியாவைப் பற்றிய விவரங்கள்**

வரலாற்றில் 10,000 ஆண்டுகளாக எந்த நாட்டையும் ஆக்கிரமிக்கவில்லை. இந்தியா எண் முறையைக் கண்டுபிடித்தது. ஆர்யபட்டா பூஜ்யத்தை கண்டுபிடித்தார். உலகில் முதல் பல்கலைக் கழகமான தக்ஷிலா கி.மு.700 ஆண்டில் நிறுவப்பட்டது. 10,500க்கும் அதிகமான மாணவர்கள் உலகெங்கிலிருந்தும் வந்து 60க்கும் மேற்பட்டக் கலைகளைக் கற்றனர். நாலந்தா பல்கலைக் கழகம் கி.மு. 4-ஆம் நூற்றாண்டு தொடங்கப்பட்டது. கல்வித்துறையில் மிகப்பெரியச் சாதனை யைச் செய்துள்ளது. சமஸ்கிருதம் எல்லா ஐரோப்பிய மொழி களுக்கும் தாய் மொழியாக விளங்கியது. சம்ஸ்கிருதம் கணினி மென்பொருள் எழுத மிக ஏற்ற மொழியாகும் என்கிறது. போர்பஸ் பத்திரிகையில் 1987-ஆம் ஆண்டு வெளிவந்த அறிக்கை - ஆயுர்வேதம் மிகப் பழமையான மருத்துவமாகும். சாரக்கா - மருத்துவத்தின் தந்தை - 2500 ஆண்டுகளுக்கு முன்னர் இதனை வகைப்படுத்தினார். தற்போது மிக வேகமாக ஆயுர்வேதம் முக்கியத்துவம் பெற்றுவருகின்றது. 17-ஆம் நூற்றாண்டில் பிரிட்டிஷ் காலனியாதிக்கம் ஏற்படும்வரை இந்தியா மிகச் செல்வமிக்க நாடாக விளங்கியது. சிந்து நதியில் 6,000 ஆண்டுகளுக்கு முன்பே நீர்வழிப் போக்குவரத்து தொடங்கி யுள்ளது. நேவிகேஷன் என்ற பெயர் சம்ஸ்கிருதத்தின் 'நவஜித்' என்ற சொல்லில் இருந்து வந்ததாகும். பாஸ்கராச்சாரியா பூமி சூரியனைச் சுற்றிவர எடுத்துக் கொள்ளும் நேரத்தை வானவியல் வல்லுனர் ஸ்மார்ட் என்பவருக்கு முன்னரே கண்டறிந்தார். 5-ஆம் நூற்றாண்டிலேயே சூரியனை வலம்வர புவி எடுத்துக் கொள்ளும் நாட்கள் 365.258756486 என கண்டறியப்பட்டது பையின் (PI) மதிப்பைக் கண்டறிந்தவர். புத்தயானர். இவர் 6-ஆம் நூற்றாண்டிலேயே பிதாக்கோரஸ் தேற்றத்தை விளக்கியவர். மேலும் அல்ஜீப்ரா, ஜியோமிதி, கால்குலஸ் ஆகியவை இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்டவை. ஸ்ரீதராச்சார்யா 11-ஆம் நூற்றாண்டில் குவாட்டீரட்டிக் சமன்பாடு கண்டுபிடித்தார். கிரேக்கரும், ரோமானியரும் $10^6$ பயன்படுத்திய போது இந்தியர்கள் $10^{53}$ ஐ 5000 ஆண்டுகளுக்கு முன்னரே வேத காலத்தில் பயன்படுத்தியுள்ளனர். இன்றும் அதிக எண்ணிக்கையை $10^{12}$ பயன்படுத்துகிறார்கள்.

அமெரிக்காவின் இயற்கைத் தாக்கங்கள் ஆராயும் நிறுவனத்தின் கூற்றுப்படி 1896-ஆம் ஆண்டுவரை உலகில் வைரத்திற்கு ஆதாரமாக இந்தியா தான் விளங்கியது. ஐக்கிய அமெரிக்காவில் அமைந்துள்ள இயற்கையின் தாக்கங்கள் ஆய்வு நிறுவனம் கம்பியில்லாத போக்குவரத்தை மார்கோனிக்கு முன்னரே ஜகதிஸ்போஸ்தான் கண்டு பிடித்தார் என்பதனை நிரூபித்துள்ளது. மேலும் சௌராஷ்ட்டிராவில் தான் முதன் முதலில் நீர்த்தேக்கம் நீர்பாசனத்திற்காகக் கட்டப் பட்டுள்ளது. சாகா அரசன் ருத்ரமன் கூற்றுப்படி 150 கி.யுகத்தில் ரவி வடாகா குன்றில் சுதர்ஷிண ஏரி சந்திரகுப்த மௌரியர் காலத்தில் கட்டப்பட்டுள்ளது. சதுரங்க விளையாட்டும் இந்தியாவில் தான் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சுஸ்ருத்தாதான் அறுவை சிகிச்சை மருத்துவத்தின் தந்தையாவார். 2,600 ஆண்டு களுக்கு முன்னரே கண் அறுவைச் சிகிச்சை, செயற்கைக் கால், எலும்பு முறிவு, மூத்திரப்பை கல், பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை, மூளை அறுவை சிகிச்சைகள் இங்கே நடை பெற்றுள்ளன. மேலும் மயக்க மருந்து பற்றி நன்கறிந் துள்ளனர். 125க்கும் மேற்பட்ட அறுவைச் சிகிச்சை கருவிகள் பயன் படுத்தப்பட்டுள்ளன. மேலும், உடல் கூறு, கரு, உடல் இயக்கக் கூறுகள், மரபு அணுக்கள் போன்ற மருத்துவக்கூறுகள் பற்றி ஆழமான அறிவையும் பெற்றிருந்ததற்குப் பல சான்றுகள் உள்ளன. 5,000 ஆண்டுகளுக்கு முன்னர் பலர் காடுகளில் நாடோடி வாழ்க்கை வாழ்ந்த போது, இந்தியர் சமவெளியில் மொகன்ஜதாரோ, ஹரப்பா நகரங்களை நிறுவி கலாச்சாரத்தை நிறுவினர். மேலும் மதிப்பு அமைப்பு, புள்ளித்திட்டம் (1 ஐ பத்தாகப் பிரிப்பது) கி.மு. 100 லேயே கண்டுபிடித்தனர்.

வேளாண் பயிர்களின் அடிப்படையில் வேளாண் வட்டாரங்களும், தொழில்களின் அடிப்படையில் தொழில் வட்டாரங்களும், சேவைகள் அடிப்படையில் சேவை மண்டலங்களும் பிரிக்கப்படுகின்றன. மனிதவள அடிப்படையிலும் மண்டலங்கள் உள்ளன.



**கற்றல் அடைவுகள்**

1. மாணவர் / மாணவியர் இந்தியாவைப் பற்றியும் இந்தியத் துணைக் கண்டத்தைப் பற்றியும் அறிந்து கொள்கின்றனர்.
2. இந்தியாவின் அமைவிடம் மற்றும் அரசியல் பிரிவுகள் பற்றி மாணவர்கள் தெளிவு பெறுகின்றனர்.
3. இந்தியாவின் கலாச்சார வேற்றுமையில் ஒற்றுமை, சார்பின்மை, நம்பிக்கைகள் பற்றியும் அறிந்து கொள்கின்றனர்.

## சுயமதிப்பிடு

**I.** சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்

1. தீபகற்ப இந்தியாவின் கிழக்கில் உள்ளது

   அ. அரேபியா ஆ. இந்தோ-சீனா

   இ. இத்தாலி ஈ. ஐபீரியா

2. ஒரே மாதிரியானப் புவியியல் காரணிகள் கொண்ட பகுதி

   அ. வட்டாரம் ஆ. நாடு

   இ. கண்டம் ஈ. உலகம்

3. விவசாயம், தொழில், மனித வளத்தின் அடிப்படையில் பிரிக்கப் படுகின்றது.

   அ. கலாச்சார வட்டாரம் ஆ. தொழில் வட்டாரம்

   இ. சமூக வட்டாரம் ஈ. இயற்கை வட்டாரம்

4. இந்தியாவின் குறுக்காக ஓடும் சிறப்பு அட்சம்.

   அ. கடகரேகை ஆ. மகரரேகை

   இ. புவிநடுக்கோடு ஈ. துருவ வட்டம்

**II.** கோடிட்ட இடங்களை நிரப்புக

1. இந்தியாவின் மேற்கில் __________ தீபகற்பம் அமைந்துள்ளது.
2. __________ அட்சம் இந்தியாவின் குறுக்காக ஓடுகின்றது.

3. இந்தியா 8°4' வட அட்சத்திலிருந்து ___________ வட அட்சம் வரை பரவியுள்ளது.

4. மாநிலங்களும், யூனியன் வட்டாரங்களும் ___________ அடிப் படையில் பிரிக்கப்பட்டுள்ளன.

5. கடக அட்சத்திற்குத் தெற்கில் அமைந்துள்ள பகுதி ___________

**III.** பின்வருவனவற்றைப் பொருத்துக

| | | |
|---|---|---|
| 1. வட எல்லை | -- | வங்காளவிரிகுடா |
| 2. தென் எல்லை | -- | அரபிக்கடல் |
| 3. கிழக்கு எல்லை | -- | இமயமலை |
| 4. மேற்கு எல்லை | -- | இந்தியப் பெருங்கடல்<br>மேற்குத் தொடர்ச்சி மலைகள் |

**IV.** சுருக்கமாக விடையளிக்கவும்

1. இந்தியாவின் அமைவிட முக்கியத்துவத்தை விவரி?
2. இந்தியாவைத் துணைக்கண்டம் என்று ஏன் அழைக்கின்றோம்?
3. இந்தியாவின் அட்சதீர்க்க பரவலை விவரி.
4. இந்தியாவின் அரசியல் பிரிவுகளை எழுதுக?

**V.** விரிவான விடை தருக

1. இந்தியாவில் ஓர் வேற்றுமையில் ஒற்றுமை பற்றி விவரி.

**VI.** செய்முறைப் பயிற்சிகள்

1. இந்திய வரைப்படத்தில் மாநிலங்களையும், தலை நகரங்களையும் குறிக்கவும்.

அலகு - II : நிலத்தோற்றம், வடிகால்

பாடம் 2

# நிலத்தோற்றமும் வடிகாலமைப்பும்

**கற்றல் நோக்கங்கள்**

1. மாணவர் இந்தியாவில் காணப்படும் தீபகற்ப, புறதீபகற்பப் பகுதிகள் எனப்படும் இருபெரும் நிலத்தோற்றங்களைப் பற்றி கற்றுக்கொள்ளல்.
2. மாணவர் தீபகற்ப இந்தியாவின் மூன்று மலைத் தொடர்களைப் பற்றி தெரிந்து கொள்ளல்.
3. மாணவர் பீடபூமிகளைப் பற்றி தெரிந்து கொள்ளல்.
4. மாணவர் கடற்கரைச் சமவெளியின் இருபெரும் பிரிவுகளைப் பற்றி கற்றுக் கொள்ளல்.
5. மாணவர் புறதீபகற்ப இந்தியாவில் காணப்படும் மலைத் தொடர் மற்றும் சமவெளிகளைப் பற்றி கற்றறிதல்.
6. மாணவர் இந்தியாவைச் சார்ந்த தீவுக்கூட்டங்களைப் பற்றி தெரிந்து கொள்ளல்.
7. மாணவர் தீபகற்ப, புறதீபகற்ப இந்தியாவிலுள்ள ஆறுகளைக் கண்டறியும் திறனை வளர்த்தல்.

உலகில் காணப்படும் பெரிய நிலத்தோற்றங்களான மலைகள், பீடபூமிகள் மற்றும் சமவெளிகள் போன்று இந்தியாவிலும் பல நிலத்தோற்றங்கள் உள்ளன. வடக்கில் இமயமலையும், தெற்கில் தக்காணபீடபூமியும் மற்றும் இடையில் கங்கைச் சமவெளிகளும் காணக் கிடைக்கின்றன.

இந்தியாவின் நிலத்தோற்றங்கள் வெவ்வேறு காலகட்டங்களில் உருவானவை. எனவே, அவைகள் பல்வேறான பாறை அமைப்புகளைக் கொண்டிருக்கின்றன. இந்தியாவில் மூன்று பாறை வகைகள் உள்ளன. அவைகள்

*1.* தீப்பாறைகள்,

*2.* படிவுப்பாறைகள் மற்றும்

*3.* உருமாறிய பாறைகள் என்பனவாம்.

இந்தியாவின் நிலத்தோற்றங்கள் அனைத்திலும் தக்காண பீடபூமிதான் பழமையான நிலத்தோற்றங்களைக் கொண்ட பாறை அமைப்பு ஆகும். வல்லுனர்களின் கூற்றுப்படி பீட பூமியில் உள்ள பாறைகள் பூமி தோன்றிய காலத்திலேயே உருவானவை. இந்தியாவின் நிலத்தோற்றத்தை அவை உருவான கால அட்டவணையின் அடிப்படையில் இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவையாவன :

(i) தீபகற்ப இந்தியா (Peninsular India)

(ii) புறதீபகற்ப இந்தியா (Extra-Peninsular India)

## தீபகற்ப இந்தியா

நிலநடுக்கோட்டிற்கு வடக்கே (*8° வ. அட்சரேகை*) கடக அட்சத்திற்குத் (*23½° வ*) தெற்கே உள்ள நிலப்பகுதி தீபகற்ப இந்தியா எனப்படுகின்றது. இப்பகுதியிலுள்ள பாறைகள் பழமை வாய்ந்தவை. இவை புவி தோன்றிய காலத்திலேயே உருவான வை. தீபகற்பப் பீடபூமியின் வரலாற்றை அறிந்து கொள்ள புவியின் வரலாற்றை நாம் அறிந்து கொள்வது அவசியம்.

சூரியனிடமிருந்து பிரிந்து வந்த வாயு வலையம் காலப்போக்கில் குளிர்ந்து இறுகி புவிக்கோளமாக உருவெடுத்தது என்ற கருத்து உள்ளது. அவ்வாறு பாறைகளாக இறுகி புவி உருவான காலத்தில் அனைத்து நிலப்பகுதிகளும் ஒரே தொகுப்பாக பேஞ்சியா (Pangea) என்று அழைக்கப்பெற்றது. பேஞ்சியாவைச் சுற்றிலும் பேன்தலாசா (Panthalaza) என்ற நீர்ப்பரப்பும் இருந்தது (*படம் 2.1*).

பேஞ்சியா நிலப்பகுதி டெத்திஸ் (Tethys) என்ற தாழ்வான கடலால் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. டெத்திஸ் கடற்கரைக்கு வடக்கே அங்காரா (Ankara) என்ற



**பேஞ்சியாவும் பேன்தலாசாவும்**




படம் 2.1

நிலப்பகுதியும், தெற்கே கோண்டுவானா (Gondwana) என்ற நிலப்பகுதியும் இருந்தன. கோண்டுவானா நிலம் கிழக்கில் ஆஸ்திரேலியாவுடனும் மேற்கில் ஆப்பிரிக்காவுடனும் இணைந்திருந்தது. பின்னர் ஒரு காலக் கட்டத்தில் கண்ட நகர்வு (Continental Drift) ஏற்பட்டது. கண்ட நகர்வினால் கோண்டுவானா நிலம் உடைந்து புவி அசைவுகள் ஏற்பட்டு கோண்டுவானாப் பாறைகள் பல மாறுதல்களுக்கு உட்பட்டன. புவி அசைவினால் பிளவுபட்ட கோண்டுவானா நிலப்பகுதியின் ஒரு பகுதி தீபகற்ப இந்தியாவாக உருப்பெற்றது. இந்தியாவின் இயற்கை அமைப்பில் தீபகற்பப் பகுதி அதிக முக்கியத்துவத்தைப் பெறுகின்றது.

புவி அசைவிற்கு கோண்டுவானா நிலம் ஆட்படுத்தப்பட்ட போது தீபகற்ப இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் பல பிளவுகள் தோன்றி, பிளவுகளின் வழியே ‘லாவா’ என்ற பாறைக்குழம்பு வெளியேறி தீபகற்பப் பீடபூமியில் படிந்தது. காலப்போக்கில் லாவா இறுகி தீப்பாறைகளாக மாறி இப்பகுதி தக்காணப் பிடிப்பு (Deccan Trap) அல்லது லாவா பீடபூமி (Lava Plateau) என்றழைக்கப்பட்டது.

இவ்வாறு உருவான லாவா பீடபூமி நில அமைப்பியல் வரலாற்றில் பல மாற்றங்களுக்கு ஆட்படுத்தப்பட்டது. எடுத்துக் காட்டாக தற்போதைய தாமோதர், மகாநதி, கோதாவரி பள்ளத்தாக்குப் பகுதிகளுக்கு இணையாக ஏற்பட்ட பிளவுகளின் இடையே காடுகள் புதைந்து, அவை காலப்போக்கில் நிலக்கரி வயல்களாக உருவெடுத்தன. தற்சமயம் இந்தியாவில் நிலக்கரி பெரும்பாலும் வெட்டியெடுக்கப்படுகின்றது.

தீபகற்பப் பீடபூமி இவ்வாறாக பிளவு, அரிப்பு, வானிலைச் சிதைவு போன்ற பலவித மாற்றங்களுக்கு ஆட்படுத்தப்பட்ட தால் தீபகற்ப இந்தியாவில் தற்போது காணப்படும் நில அமைப்பை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம் (படம் 2.2) :

1. மலைகள்,
2. பீடபூமிகள் மற்றும்
3. கடற்கரைச் சமவெளிகள்.





படம் 2.2

**மலைகள்** : தீபகற்ப இந்தியாவில் மூன்று மலைத்தொடர்கள் உள்ளன :

(i) விந்திய - சாத்பூரா மலைகள்

(ii) மேற்குத் தொடர்ச்சி மலைகள்

(iii) கிழக்குக் குன்றுகள்

### விந்திய - சாத்பூரா மலைகள்

விந்திய சாத்பூரா மலைகள் நர்மதை நதி பள்ளத்தாக்கிற்கு இணையாக மேற்கு - கிழக்காகச் செல்லுகின்றன. விந்திய மலைகள் நர்மதா பள்ளத்தாக்கின் பக்கச் சுவர்களே; அவை உண்மையில் மலைகளே அல்ல. இம்மலைகள் வாரணாசிக்கு அருகில் முடிவடைகின்றன.

| |
|---|
| விந்திய மலைகள் நர்மதைப் பள்ளத்தாக்கின் பக்கச் சுவர்களே. |

சாத்பூரா மலைகள் நர்மதைக்கும் தபதிக்கும் இடையே காணப்படுகின்றன. விந்திய மலைகளுக்குத் தெற்கில் அவற்றிற்கு இணையாகச் செல்கின்றன. இம்மலைகளின் பாறைகள் தக்காண, லாவா பீடபூமி பாறை வகைகளைச் சார்ந்தவை. இவை வரலாற்று காலத்தில் ஏற்பட்ட மடிப்பு மலைகள் ஆகும். சாத்பூரா என்றால் ஏழு மடிப்புகள் என்றும் பொருள்படும்.

| |
|---|
| சாத்பூரா மலைகள் மிகப் பழமையான மடிப்பு மலைகள். |

### மேற்குத் தொடர்ச்சி மலைகள்

இவை தீபகற்ப இந்தியாவின் மேற்கில் மேற்கு கடற் கரைக்கு இணையாக அமைந்துள்ளன. தபதி நதியின் முகத்து வாரத்திலிருந்து கன்னியாகுமரி வரை வடக்கு தெற்காகவும் அமைந்துள்ளன. இத்தொடரில் மூன்று கணவாய்களும் உள்ளன. வடக்கில் தால்காட், போர்காட் கணவாய்களும், தெற்கில்- பாலக்காட்டுக் கணவாயும் உள்ளன. இக்கணவாய்களின் வழியே செல்லும் இருப்புப் பாதைகள் (railway lines) பல முக்கிய நகரங்களை இணைக்கின்றன.



மேற்குத் தொடர்ச்சி மலைகளின் தென்பகுதியில் உயரமான சிகரங்கள் உள்ளன. குறிப்பாக, நீலகிரி மலையில் தொட்ட பெட்டாவும், ஆனைமலையில் ஆனைமுடியும் குறிப்பிடத் தக்கவை. பழனிமலை, கொடைக்கானல் மலை, குற்றாலமலை ஆகியனவும் மேற்குத் தொடர்ச்சி மலைகளைச் சார்ந்தவை. கோடை வாழிடங்களான உதகமண்டலம், குன்னூர், கோத்தகிரி, ஆகியனவும் இம்மலைத் தொடரில் உள்ளன.

### கிழக்குக் குன்றுகள்

இவை கிழக்குக் கடற்கரைச் சமவெளியை ஒட்டி அமைந்துள்ளன. தொடர்ச்சியற்ற பல குன்றுகளாகவும் உள்ளன. ஒரிசா மாநிலத்திலிருந்து ஆந்திர மாநிலம் வரை கிழக்குக் கடற்கரையை ஒட்டிச் செல்கின்றன. பின்னர் தென்மேற்காகச் சென்று நீலகிரியில் மேற்குத் தொடர்ச்சி மலைகளுடன் இணைகின்றன. இதில் திருப்பதிமலை, ஜவ்வாது மலை, கொல்லிமலை, பச்சை மலை ஆகிய மலைகள் முக்கியமானவை. ஏற்காடு, ஏலகிரி ஆகியவை இம்மலைகளில் காணப்படும் முக்கியமான சுற்றுலாத் தலங்களாகும்.

### பீடபூமிகள்

தீபகற்பப் பீடபூமி பல சிறிய பீடபூமிகளைக் கொண்டது. வடக்கில் மாளவ பீடபூமியும், தெற்கில் தக்காண பீடபூமியும், இடையில் தபதி-நர்மதை பிளவுப் பள்ளத்தாக்குகளும் காணக்கிடைக்கின்றன.

**மாளவ பீடபூமி** : இது சிறிய முக்கோண வடிவத்தில் உள்ளது. வடமேற்கில் ஆரவல்லித் தொடர்கள் அமைந்துள்ளன. ஆரவல்லித் தொடர்கள் ஒருகாலத்தில் இமயமலையை விட உயரமாக இருந்தன. ஆனால் அரிப்பின் காரணமாக உயரம் குறைந்து ஏறக்குறைய 500 மீட்டர் உயரத்தை மட்டுமே தற்சமயம் கொண்டமைந்துள்ளன. இங்குள்ள உயர்ந்த சிகரம் அபுமலை (Mount Abu) (குர் ஷா கார்) என்பதாகும்.

**தக்காண பீடபூமி** : தக்காண பீடபூமி நர்மதைப் பள்ளத்தாக்கிற்கு தெற்கில் அமைந்துள்ள பெரிய முக்கோண வடிவப் பீடபூமியாகும். முக்கோணத்தின் அகன்றபகுதியில்

விந்திய மலைகளும், கூரிய பகுதியில் கன்னியாகுமரியும் உள்ளன. இப்பீடபூமியின் மூன்று பக்கங்களும் மலைகளாலும், கடலாலும் சூழப்பட்டுள்ளன. வடக்கே சாத்பூரா, மேற்கில் மேற்குத் தொடர்ச்சிமலைகள், கிழக்கில் கிழக்குக் குன்றுகள் ஆகியவை காணப்படுகின்றன. மூன்று பக்கங்களில் கடலால் சூழப்பட்டும் உள்ளது. கிழக்கில் வங்காளவிரிகுடா, மேற்கில் அரபிக்கடல் மற்றும் தெற்கில் இந்தியப் பெருங்கடல் சூழ்ந்து திகழ்கின்றது. இப்பீடபூமி கிழக்கு நோக்கியச் சரிவுடையது. எனவேதான் தக்காணத்தின் முக்கிய ஆறுகள் கிழக்கே ஓடி வங்காள விரிகுடாவில் கலக்கின்றன. இப்பீடபூமிக்கு வடகிழக்கில் கனிவளங்கள் நிறைந்த சோடாநாகபுரி பீடபூமி அமைந்துள்ளது.

| |
|---|
| தக்காண பீடபூமி மூன்று பக்கங்கள் மலைகளால் சூழப் பட்டும், கிழக்கு நோக்கிச் சரிந்தும் காணப்படுகின்றது. |

## கடற்கரைச் சமவெளிகள்

தீபகற்ப இந்தியாவின் மேற்கிலும் கிழக்கிலும் கடற்கரைச் சமவெளிகள் காணப்படுகின்றன. அவையாவன :

1. மேற்குக் கடற்கரைச் சமவெளி
2. கிழக்குக் கடற்கரைச் சமவெளி

## மேற்குக் கடற்கரைச் சமவெளி

இச்சமவெளி குஜராத் முதல் கேரளா வரை நீண்டு காணப்படுகின்றது. தீபகற்ப இந்தியாவில் பிளவுகள் ஏற்பட்ட பொழுது மேற்குத் தொடர்ச்சி மலைகளுக்கு மேற்கில் வடக்கு தெற்காக ஏற்பட்ட பிளவின் வழியே நிலப்பகுதி கடலில் அமிழ்ந்தது. அவ்வாறு நிலப்பகுதி அமிழ்ந்ததால்தான் மேற்குக் கடற்கரை உருவானது. எனவேதான் மேற்குக் கடற்கரை நேராகவும், குறுகலாகவும் காணப்படுகின்றது.

## கிழக்குக் கடற்கரைச் சமவெளி

கிழக்குக் கடற்களைச் சமவெளி கங்கைக் கழிமுகம் முதல் கன்னியாகுமரி வரை பரவியுள்ளது. மேற்குக் கடற்கரைச் சமவெளியைவிடவும் அகலமானது.



இச்சமவெளியில் ஆறுகளினால் கொண்டு வரப்பட்ட வண்டல் அதிகமாகப் படிந்துள்ளது. ஆற்று கழிமுகங்களும், டெல்டாக்களும் இக்கடற்கரைச் சமவெளியில் காணப் படுகின்றன.

## புறதீபகற்ப இந்தியா

கடகஅட்சத்திற்கு (23½° வ) வடக்கே உள்ளச் சமவெளி மற்றும் இமயமலையை உள்ளடக்கிய நிலப்பகுதி 'புற தீபகற்ப இந்தியா' எனப்படும். இந்நிலப்பகுதி, தீபகற்ப நிலப்பகுதியை போலன்றி நிலமியல் கால அட்டவணைப்படி சமீபகாலத்தில் உருவானது. படிவுப் பாறைகளாலும் ஆனது. புறஇந்திய தீபகற்பத்தை இரண்டு இயற்கைப் பகுதிகளாகப் பிரிக்கலாம் (படம் 2.3) :

1. இமயமலை 2. கங்கைச்சமவெளி

## இமயமலை

இந்தியாவின் வடஎல்லையான இமயமலைத் தொடர்கள் வடமேற்கில் காஷ்மீரிலிருந்து வடகிழக்கில் அஸ்ஸாம் வரை பரவியுள்ளன. நிலயியல் கால அட்டவணைப்படி இமயமலைத் தொடர் ஏறக்குறைய 200 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர்தான் உருவான மடிப்புமலைகள் என வல்லுனர்கள் கருதுகின்றனர். எனவேதான் இவற்றை 'இளம் மடிப்பு மலைகள்' (Young Fold Mountains) என்றழைக்கின்றனர். இம்மலைகளின் முகடுகளும் சரிவுகளும் கடல்படிமங்கள் படிந்த படிவுப்பாறைகளால் ஆனவை.

## இமயமலை உருவான விதம்

முன்பே படித்த அங்காராவிலிருந்தும், கோண்டுவானாவி லிருந்தும் ஆறுகள் தாங்கள் அரித்து வந்தப் பொருட்களை ஆழம் இல்லாத டெதிஸ் கடலில் படிய வைத்தன. ஆறு ஒரு சிறந்த அரிப்புக் காரணி என்பது உங்களுக்குத் தெரியும். காலப்போக்கில் டெதிஸ் கடல் படிவுகளால் நிரப்பப்பட்டது. படிவுகள் இறுகி படிவுப்பாறைகளாக மாறின.




படம் 2.3



புவி ஓட்டின் பக்கவாட்டு நகர்வினால் கோண்டுவானா நிலப்பகுதி வடக்கு நோக்கி நகர்ந்தது, அவ்வாறே அங்காரா நிலப் பகுதியும் நகர்ந்து சென்றது. இரண்டு நிலங்களும் வெவ்வேறு வேகத்தில் நகர்ந்தன. எனவே, இரண்டு நிலப்பகுதிகளுக்கும் இடையே இருந்த மிருதுவான படிவுப் பாறைகள் அழுத்தப் பட்டன.

இம்மிருதுவான பாறைகள் மடிந்து மடிப்புகளாக உயர்ந்தன. இவையே ‘‘மடிப்புமலைகள்’’ என்று இமயமலைகளை அழைக்கக் காரணமாயின.

புவிஓட்டின் பக்கவாட்டு நகர்வினால் மடிந்து உயர்ந்த படிவுப் பாறைகளைக் கொண்ட இமயமலைகளை ‘மடிப்பு மலைகள்’ என அழைக்கின்றோம்.

இமயமலைகளே இந்தியாவின் அரண். இம்மலைகளில் பல உயர்ந்த சிகரங்களும் கணவாய்களும், கோடை வாழிடங் களும் உள்ளன. உலகிலேயே மிக உயர்ந்த சிகரமான எவரெஸ்ட் நேபாள நாட்டு எல்லையில் உள்ளது. இம்மலைத்தொடரில் கஞ்சன்சங்கா, தவளகிரி, நங்கபர்வதம் போன்ற சிகரங்களும் கைபர், போலன் கணவாய்களும் உள்ளன. இமயமலைகளிலுள்ள காஷ்மீர் பள்ளத்தாக்கு மிகவும் அழகு வாய்ந்தது. அங்குள்ள டால் ஏரி, டார்ஜிலிங், சிம்லா, முசோரி போன்ற கோடை வாழிடங்கள் சுற்றுலாத் தலங்களாகும். அழகு நிறைந்தவையும் ஆகும்.

**இமயமலைகளில் மிகத் தொன்மையான மலைகளின் சுவடுகள்**

அரிசோனாப் பல்கலைக்கழக புவிஅறிவியலாரின் கண்டு பிடிப்பின்படி, நேபாளம், இந்தியா மற்றும் பூடானில் காணப்பெறும் உலகிலேயே உயர்ந்த, சிறப்புகள் கொண்ட இமயமலைகள் மிகத் தொன்மையான மலைகளின் மீது கட்டப் பெற்றவையாகும். இமயமலைகளில் காணப்பெறும் பாறை களின் வயதினை வரையறுத்துள்ள இவர்கள் தொன்மையான மலைகள் உண்மையில் *450 - 500*

மில்லியன் வருடங்களுக்கு முற்பட்டவை என்கின்றனர். 'தற்போதைய இமயமலைகள் அவற்றுக்கு முன்பிருந்த அதே அளவிலான தொன்மையான மலைகளை அடிவாரமாகக் கொண்டு கட்டப்பெற்றன என இவர் நம்புகின்றனர்', என்று கூறுகிறார் பேராசிரியர் ஜார்ஜ் ஜெரல்ஸ்.

பல வருடங்களாகவே பேராசிரியர் ஜெரல்ஸுும் அவரது துணை ஆய்வாளர்களும் கரடுமுரடான நேபாள மலைகளில் களப்பணிகளில் ஈடுபட்டு வந்துள்ளனர். அவர்களது அறிக்கை யில் கூறியுள்ளவை பற்றி எடுத்துச் சொல்லும் பேராசிரியர் ஜெரல்ஸ், 'எங்கள் மாதிரி தரும் உற்று நோக்கலின் தகவல் களைப் பார்க்கும் போது, சுமார் 450 - 500 மில்லியன் வருடங் களுக்கு முன்பு இமயமலைகளின் பாறைகள் கீழ்நோக்கி மிகவும் ஆழத்திற்கு அழுத்தப் பெற்றுள்ளன', என்கிறார். புதை யுண்ட பாறைகள் அழுத்தத்தால் வெப்பமடைந்து உருக, பெரும் கருங்கல் அமைப்புகள் உருவாயின.

இவ்வாழப் பாறைகள் பிளவுகள், மேல் தள்ளுதல், அரித்தல் ஆகியச் செயல்களால் நில மேல் பரப்பிற்குக் கொண்டு வரப்பெற்றன. மேல் உயர்தலும் பிளவுகளும் மலைகளை உருவாக்க, அவற்றின் அரிப்பு அளவுக்கதிகமானப் படிவுகளை உற்பத்தி செய்தன. இத்தொன்மையானப் படிவுகளில் கிடைத்த கூட்டுப் பாறைகளையும், மண் பாறைகளையும் அரிசோனாப் பல்கலைக் கழக அறிவியலார் ஆய்வு செய்தனர். அவர்களது ஆய்வின் முக்கியத்தலங்கள் நேபாளத்தில் அன்னபூரணா தொடரில் இருந்தவையாகும்.

இமயமலைகளின் பிறப்பானது உண்மையில் பாறைகள் கீழ் தள்ளப்பெற்று மேலே கொண்டு வரப்பட்ட கதையே ஆகும். அத்துடன் பெருமளவிலான அரிப்பும் கூடவாகும். 'பெரும் பாலான புதைதலும், மேலெழுதலும் அரிப்பும் 450 - 500 மில்லியன் வருடங்களுக்கு முந்தி நிகழ்ந்தவையாகவே நாங்கள் கருதுகிறோம்', என்றகிறார் ஜெரல்ஸ். 'அவ்வாறே இந்தியக் கண்டம் மற்றொரு நிலப்பகுதியின் கீழ்



தள்ளப்பட்டதாலேயே இமயமலைகள் எழுந்தன' என்பதும் அவர்கள் கருத்தாகும். 'எங்கள் கருத்தின்படி இந்த முட்டுதல் (collision) செயல் சுமார் 508 மில்லியன் வருடங்களுக்கு முன் ஒரு சிறிய மலைத்தொடரில் நிகழ்ந்தது. பிளவு, பாறைகள் புதைதல், கருங்கல் உருவாதல் மற்றும் மேலெழுதல் பின்னர் இந்தியா நோக்கி நிகழ்ந்தன', என்கிறார் ஜெரல்ஸ்.

சுமார் 450 மில்லியன் வருடங்களுக்கு முன், மலை உருவாதல் முறை வலுவிழக்கத் தொடங்கியபோது, அரிப்பு நிலத் தோற்றங்களைப் புதைந்த அளவில் தென்படும் மாற்றுருப் பாறைகள் அளவிற்கு தாழ்த்தியது மட்டுமின்றி, அதிக அளவிலானப் படிவுகளையும் உருவாக்கியது. தொடர்ந்து, தொன்மை மலைகள் மறைந்ததோடு மட்டுமின்றி கடல் மட்டத்திற்குக் கீழும் தாழ்ந்து, இந்திய விளிம்புகளிலிருந்து நிலப்பகுதிகளை அப்பால் தள்ளின. எனவே, இவ்வட்டாரம் முழுவதும் கடல் படிவுகளுக்குக் கீழே நீண்டகாலம் புதைந் திருந்து, பின்னர் 55 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்த தெற்கு ஆசியாவுடன் ஆன முட்டுதலாலேயே மெதுவாக உயரத் தொடங்கின. இப்போதுதான் நவீன இமயமலைகள் உருப் பெறத் துவங்கிற்று. இச்சமயத்தில்தான் உலகக் கால நிலையும் குளிரத் துவங்கியது. இமய மலைகளில் நிகழ்ந்த சிதறல் நிகழ்வுகளின் எதிரிடைச் செயல்களால் வளிமண்டலத்திலிருந்து கரியமில வாயுவும் பிரிக்கப்பட்டு உலகளாவிய குளிர்தலால் புவி தனது வெப்ப ஊக்கத் தன்மையையும் இழந்தது. அதே சமயத்தில், உலகின் பேராழிகளது இரசாயனமும் மாற்றமடைய கடல்நோக்கித் தள்ளப் பெற்ற படிவுகள் காரணமாயின. உண்மையில் இன்றைய காலநிலையின் மாற்றங்களிலும், கடல்நீரின் இரசாயனத்திலும், இமயமலைகளின் பாறைகளில் ஏற்பட்ட புதைதலும், உருமாற்றமும், மேலெழுதலும் மலைகள் உருவாகக் காரணமாயின என்கிறார் ஜெரல்ஸ்.

## கங்கைச் சமவெளி

இமயமலைகளுக்குத் தெற்கே அமைந்துள்ள கங்கைச் சமவெளி கங்கை ஆற்றினால் உருவாக்கப்பட்டது. இச்சமவெளி மேற்கு கிழக்காகப் பரந்து விரிந்துள்ளது.

கங்கை ஆறு இமயமலைகளில் உருவாகி, பாறைகளை அரித்து, மலையடிவாரத்தில் வண்டலைப் படிய வைக்கின்றது. இம்மண் மிகவும் செழிப்புள்ளதால் வேளாண் பயிர்கள் நன்கு வளர்கின்றன. செறிந்த வேளாண்மையினால் இந்தியாவிலேயே இங்குதான் மக்களடர்த்தியும் அதிகம்.

கங்கைச் சமவெளிக்கு மேற்கில் சட்லஜ் சமவெளியும், கிழக்கில் பிரம்மபுத்திரா ஆற்றுச் சமவெளியும் இந்தியாவின் எல்லையோரங்களில் அமைந்துள்ளன.

## தீவுகள்

இந்தியாவைச் சார்ந்த இரண்டு தீவுக்கூட்டங்கள் கிழக்கிலும் மேற்கிலும் உண்டு. அவையாவன (படம் *2.4*):

*1.* அந்தமான், நிக்கோபார் தீவுகள்

*2.* இலட்சத் தீவுகள்

## அந்தமான் தீவுகள்

சென்னைக்குக் கிழக்கே வங்காள விரிகுடாக் கடலில் வடக்குப் பகுதியில் அந்தமான் தீவும், தெற்கில் நிக்கோபார் தீவும் அமைந்துள்ளன. அந்தமான் தீவுகள் சிறிதும் பெரிதுமாக ஏறத்தாழ *300* தீவுகளைக் கொண்டுள்ளன. இத்தீவுகளுள் ஐந்தில் மட்டுமே மக்கள் வசிக்கின்றனர். நிக்கோபார் தீவுகளின் பெரும்பகுதியில் மக்கள் வசிக்கின்றனர். பயணிகள் விரும்பி சுற்றுலா மேற்கொள்ளும் தீவுகளாக இவையுள்ளன.

## இலட்சத்தீவுகள், மினிக்காய், அமின்திவி தீவுகள்

இத்தீவுகள் அரபிக்கடலில் கேரளாவை ஒட்டி அமைந் துள்ளன. இத்தீவுகளில் உப்பங்கழிகள், பவளப்பாறைகள் போன்றவை உள்ளன. இவைகளும் சுற்றுலாத் தலங்களாகும்.

## இந்திய ஆறுகள்

இந்தியாவில் பாயும் ஆறுகளை அவற்றின் வடிகாலமைப் பின் அடிப்படையில் இருபிரிவுகளாகப் பிரிக்கலாம் (படம் *2.5*):






படம் 2.4




படம் 2.5



(i) தீபகற்ப இந்திய ஆறுகள்

(ii) புறதீபகற்ப இந்திய ஆறுகள்

## தீபகற்ப இந்திய ஆறுகள்

தீபகற்ப இந்தியாவின் ஆறுகள் பெரும்பாலானவை மேற்குத் தொடர்ச்சி மலைகளில் உருவாகின்றன. இத்தொடர் மலைகள் தென்மேற்குப் பருவக்காற்றினால் கனமழையைப் பெறுகின்றன. ஆறுகள் உருவாகும் இடத்தில் மழைப்பொழிவு இருப்பதினால் மழைக்காலங்களில் மட்டும் நீர் பாய்ந்து, மழையற்ற காலங்களில் வறண்டு போகின்றன. எனவே, இவை வற்றும் ஆறுகள் எனப்படுகின்றன.

மேற்குத் தொடர்ச்சி மலைகளில் உருவாகும் ஆறுகள் பீடபூமிப் பகுதியிலிருந்து கிழக்கு நோக்கிப் பாய்ந்து வங்கக்கடலில் கலக்கின்றன. கிழக்கு நோக்கிப் பாயும் ஆறுகளில் முக்கியமானவை மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா, காவிரி என்பவையாகும்.

காவிரி ஆறு கர்நாடகாவிலுள்ள குடகுமலையில் உருவாகி தமிழ்நாட்டைக் கடந்து வங்கக்கடலில் கலக்கின்றது. தமிழ் நாட்டில் திருச்சி, தஞ்சை மாவட்டங்களில் பல சதுர கி.மீ. பரப்பில் டெல்டாக்களையும் கழிமுகங்களையும் உருவாக்கு கின்றது. வண்டல் சமவெளிகள் நல்ல வளம் படைத்தவை யாகவும் உள்ளன.

கோதாவரி, கிருஷ்ணா ஆறுகள் ஆந்திராவை வளப்படுத்து கின்றன. தீபகற்ப இந்திய ஆறுகளில் கோதாவரி மிக நீளமான ஆறு. மகாநதி ஒரிசா மாநிலத்தில் பாய்கின்றது. நர்மதை, தபதி ஆறுகள் தக்காண பீடபூமியின் வடமேற்குப் பகுதியில் உள்ள உயர்நிலங்களில் உருவாகி மேற்கு நோக்கிப் பாய்ந்து அரபிக்கடலில் கலக்கின்றன.

## புறதீபகற்ப இந்திய ஆறுகள்

புறதீபகற்ப இந்திய ஆறுகளில் பெரும்பான்மை யானவை இமயமலைகளில் தோன்றுகின்றன. இமயமலைகள்

மிகவும் உயரமாக இருப்பதால் பனிஆறுகள் (Glaciers) உருவாகின்றன. புறதீபகற்ப இந்திய ஆறுகள் இப்பனி ஆறுகளிலிருந்தும், மழைக் காலத்தில் பருவ மழையினாலும் நீரைப் பெறுகின்றன. எனவே, இவை ஆண்டு முழுவதும் நீரோட்டத்துடன் காணப்படுகின்றன. இதனால் இவை 'வற்றாத ஆறுகள்' எனப்படுகின்றன.

புறதீபகற்ப இந்திய ஆறுகளில் மிகவும் முக்கியமான ஆறு கங்கை ஆறு. இவ்வாறு இமயமலைகளின் ஹரித்துவார் என்ற இடத்தில் சமவெளியை வந்து அடைகின்றது. இக்கங்கையாற்றின் துணை ஆறுகள் :

(i) யமுனை,

(ii) தாமோதர் மற்றும்

(iii) கோசி.

இவ்வாறு கடலில் கலக்கும் முன் பல பெரிய டெல்ட்டாக் களை உருவாக்குகின்றது. கங்கை டெல்டாவின் பெரும் பகுதி வங்காள தேசத்தில் உள்ளது. கிளை நதிகளில் ஒன்றான ஹூக்ளி மட்டும் இந்தியாவில் பாய்கின்றது. ஹூக்ளி நதியில்தான் இந்தியாவிலேயே மிக அதிக அளவு உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து நடைபெறுகின்றது. இந்நதியே கொல்கத்தா துறை முகத்தைக் கடலுடன் இணைக்கின்றது.

**உங்களுக்குத் தெரியுமா?**

***மலைகளும் ஏரிகளும் சுருங்குகின்றன!***

உலகின் மிகமுக்கிய பார்வைக்கு உகந்த நிலவரைப் படத்தொகுதியாகக் கருதப்படும் 'டைம்ஸின் உலக முழுமை நிலவரைப் படத்தொகுதி' (Times Comprehensive Atlas of the World) அக்டோபர் 16-ம் தேதி (2003) வெளியிடப் பட்டது. உலகின் மூன்று கண்டங்களில் இருக்கின்ற தலையாய மலை முகடுகள் (Mountain peaks) யாவும் உயரங்களில் குறைந்துவிட்டன என்று கூறுகின்றது இந்த நிலவரைப் படத்தொகுதி. நான்கு வருடத்திற்கு முன்பு வெளியிடப்பட்ட நிலவரைப்படத் தொகுதியில் தரப்பட்டிருக்கின்ற புள்ளிவிவரங்களை விட மிகவும் குறைவாகத் தரப்பட்டு உள்ளன. உண்மையில் இதன் காரணம் திறமையுடனும், அக்கறையாகவும் செய்யப்பட்ட தரமான சர்வேயின் நிமித்தமே. நிலவரைப்படத் தொகுதியில் கொடுக்கப்பட்டு உள்ள நிலவரைப் படங்கள் சாக்கடல் (Dead Sea) மற்றும் சட் ஏரி (Lake Chad) போன்ற நீர்நிலைகள் காலநிலை மாற்றத் தாலும், நீர்ப்பாசன வளர்ச்சியாலும் சுருங்கி வருவதை எடுத்துக் கூறுகின்றன.

உயரத்தில் குறைந்து வருகின்ற பெரும் மலைகளில், ஆப்பிரிக்காவின் மிக உயர மலையான டான்சானியாவின் கிளிமஞ்சாரோவும் ஒன்று. இம்மலை 3 மீட்டர்களை இழந்து 5,892 மீட்டர் உயரமுள்ளதாக நிற்கின்றது. ஆஸ்திரேலேசி யாவிலேயே மிக உயரமான முகடாகக் கருதப்படுகின்ற நியூசிலாந்தின் 'குக்மலை' சுமார் 10 மீட்டர் உயரத்தில் குறைந்து 3,754 மீட்டருடையதாக நிற்கின்றது. இது 1991-ல் ஏற்பட்டப்பாறை மற்றும் பனிகளாலான வீழ்ச்சியின் காரணமாகவே என்கிறது இந்த நிலவரைப் படத்தொகுதி. அவ்வாறே, தென்னமெரிக்காவின் உயர்ந்த மலைகளில் ஒன்றான அகான்காகுவா (Aconcaqua) ஏறக்குறைய ஒரு மீட்டர் அளவிற்குக் குறைந்து ஆண்டீஸ் மலைகளும் உயரத்தில் குறைந்து வருகின்றன என்பதைக் காட்டுகின்றது. அகான்கா குவாவின் இன்றைய உயரம் 6,959 மீட்டர்களாகும்.

இப்புதிய நிலவரைப் படத்தொகுதி சாக்கடலின் துயரத்தினை யும் எடுத்துக் கூறுகின்றது. ஏனெனில் 1975-ஆம் வருட நிலவரைப் படத்தொகுதியில் காட்டப்பட்டிருப்பதைவிட சுமார் 16 மீட்டர் ஆழம் குறைவாயுள்ளது எனத் தரப் பட்டுள்ளது.

இமயமலைகளிலிருந்து உருவாகும் ஏனைய இரு ஆறுகளான சிந்துவும், பிரம்மபுத்திராவும் இந்தியாவில் ஒரு சிறிய பகுதியில் மட்டும் பாய்கின்றன. சிந்து நதியின் பெரும் பகுதி பாகிஸ்தானிலும், பிரம்மபுத்திராவின் பெரும்பகுதி திபெத்திலும் பாய்கின்றன. சிந்துவின் துணை ஆறான சட்லஜ்

மட்டுமே இந்தியாவின் வடமேற்கில் பாய்கின்றது. இந்நதியின் மீது ஆசியாவிலேயே மிகப்பெரிய அணைக் கட்டான பக்ரா- நங்கல் இந்திய அரசால் கட்டப்பட்டுள்ளது. இவ்வணை மூலம் பஞ்சாப் மாநிலம் பெரும் பயன் பெறுகின்றது.

பிரம்மபுத்திரா நதி இமயமலைகளின் வடகிழக்கிலுள்ள அஸ்ஸாம் மலைக்குன்றுகள் வழியாக இந்தியாவிற்குள் பாய்கின்றது. பின்னர் வங்காள தேசத்திற்குள் நுழைகின்றது. இந்நதியில் அடிக்கடி ஏற்படும் வெள்ளத்தினால் அஸ்ஸாம், பீகார் மாநிலங்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றன.

**கற்றல் அடைவுகள்**

1. மாணவர்கள் இந்தியாவில் காணப்படும் வெவ்வேறு நிலத் தோற்றங்களைப் பற்றித் தெரிந்து கொள்கின்றனர்.
2. மாணவர்கள் தீபகற்ப இந்தியாவில் காணப்படும் வெவ்வேறு நிலத்தோற்றங்களை நன்கு அறிந்து கொள்கின்றனர்.
3. மாணவர்கள் புறதீபகற்ப இந்தியாவில் காணப்படும் சமவெளிகள், மலைத்தொடர்களைப் பற்றித் தெளிவு பெறுகின்றனர்.
4. மாணவர்கள் இந்தியாவைச் சார்ந்துள்ள தீவுக் கூட்டங்களைப் பற்றி நன்கு அறிகின்றனர்.
5. மாணவர்கள் இந்தியாவில் பாயும் ஆறுகளைப் பற்றி அறிகின்றனர்.

## சுயமதிப்பீடு

**I.** சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்

1. இமயமலையில் உள்ள உயரமான சிகரம்

   அ. தொட்ட பெட்டா ஆ. கஞ்சன் ஜங்கா

   இ. எவரெஸ்ட் ஈ. தவள கிரி

2. தீபகற்ப இந்தியாவின் வட மேற்குப் பகுதி

   அ. தக்காண பீடபூமி ஆ. மேற்கு தொடர்ச்சி மலை

   இ. மாளவ பீடபூமி ஈ. சோட்டா நாக்பூர் பீடபூமி



3. தொட்ட பெட்டா அமைந்துள்ள மலை

   அ. ஆனைமலை ஆ. நீலகிரி மலை

   இ. பழனிமலை ஈ. குற்றாலமலை

4. காவிரி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள அணை

   அ. பக்ராநங்கல் அணை ஆ. ஹிராகுட் அணை

   இ. தாமோதர் அணை ஈ. ஸ்டான்லி அணை

5. கனிமங்கள் அதிகமாக காணப்படும் பகுதி

   அ. மாளவ பீடபூமி ஆ. சோட்டாநாக்பூர்

   இ. மிக்கோல் மலை ஈ. அஜந்தா குகைகள்

**II.** கோடிட்ட இடங்களை நிரப்புக

1. பூமத்திய ரேகைக்கும், கடக ரேகைக்கும் இடையே உள்ள பகுதி _________ .
2. காஷ்மீர் பள்ளத்தாக்கில் உள்ள _________ ஏரி ஒரு சிறந்த சுற்றுலாத் தலமாகும்.
3. நர்மதாப் பள்ளத்தாக்கிற்கு இணையாக அமைந்துள்ள மலை _________
4. வங்காளவிரிகுடா, கடலில் வடக்கு தெற்காக அமைந்துள்ள தீவு கள் _________
5. நர்மதா மற்றும் தபதி ஆறுகள் _________ கடலில் கலக்கின்றன

**III.** பின்வருவனவற்றைப் பொருத்துக

| | | |
|---|---|---|
| 1. தக்காண பீடபூமி | -- | தால்காட் |
| 2. சாத்பூரா | -- | கொல்லிமலை |
| 3. மேற்கு தொடர்ச்சி மலை | -- | லாவா பீடபூமி |
| 4. கிழக்குக் குன்றுகள் | -- | ஹூக்ளி |
| 5. கங்கை | -- | ஏழு ம |

டிப்புகள்

-- கிருஷ்ணா

**IV.** சுருக்கமாக விடையளிக்கவும்

1. இந்தியாவின் இருபெரும் நிலத்தோற்றங்கள் யாவை?
2. தக்காண பீடபூமி பற்றி குறிப்பு வரைக.
3. இமயமலை ''இளம் மடிப்பு மலை'' ஏன்?
4. இந்தியாவில் காணப்படும் தீவுகள் யாவை?
5. இமயமலையில் உற்பத்தியாகும் ஆறுகள் யாவை?

**V.** விரிவான விடை தருக

1. இந்தியாவின் நிலத்தோற்றம் எவ்வாறு பிரிக்கப்பட்டு உள்ளது? ஏதேனும் ஒன்றினை விவரி.
2. இந்திய ஆறுகள் பற்றி ஒரு கட்டுரை எழுது.

**VI.** செய்முறைப் பயிற்சிகள்

1. இந்திய வரைபடத்தில் அதன் இயற்கைப் பகுதிகளை வரைக.
2. இந்திய வரைபடத்தில் அதன் ஆறுகளையும் தீவுகளையும் காட்டுக.

அலகு - III : இந்தியாவின் காலநிலை

பாடம் - 3

# காலநிலையும் மழைநீர் அறுவடையும்

**கற்றல் நோக்கங்கள்**

1. மாணவர் இந்தியாவின் காலநிலை எவ்வாறு இயங்குகின்றது என்று கற்றுக் கொள்ளல்.
2. மாணவர் இந்தியாவில் நிலவும் காலநிலையின் பல்வேறு கூறுகளை அறிந்து கொள்ளல்.
3. மாணவர் இந்தியாவில் மழைக்காலம் எந்தெந்த மாதங்களில் நிலவுகின்றன என்பதை அறிந்து கொள்ளல்.
4. மாணவர் பருவக்காற்றுகளின் வகைகள் பற்றியும், அக்காற்றுகளால் மழை பெய்யும் இடங்கள் பற்றியும் அறிந்து கொள்ளல்.
5. மாணவர் மழை நீர் அறுவடை பற்றிய அறிவைப் பெறல்.

ஒவ்வொரு நாளும் நம்மை மிகவும் பாதிக்கும் நிகழ்ச்சி களில் ஒன்று காலநிலை. இந்திய விவசாயம் காலநிலையை நம்பி யுள்ளது. இந்திய வேளாண்மை பருவக்காற்றினைச் சார்ந்த சூதாட்டம் என்றழைக்கப்படுகிறது. தொலைக்காட்சி செய்தி களிலும் வானொலியிலும், காலநிலையை அறிந்து கொள்ள வானிலைக் குறிப்புகள் வாசிக்கப்படுகின்றன. வானிலை என்பது ஒரு இடத்தில் நிலவும் ஒரு நாளைய அல்லது குறுகிய கால வெப்பநிலை, அழுத்தம், காற்று, மேக மூட்டம், மழைப் பொழிவு ஆகியவற்றைக் குறிக்கின்றது. நம் நாட்டில் பள்ளிகளில் ஒவ்வொரு ஆண்டும் ஆண்டு விடுமுறை விடப்படுகின்றது. இது கோடைக் காலத்தில் விடப்படுகிறது. கோடைக் காலத்திற்குப் பிறகு வெப்பம் படிப்படியாகக் குறைந்து டிசம்பர், சனவரி

மாதங்களில் குளிர ஆரம்பிக்கும். இதுபோன்று வானிலை வருடத்தில் மாறி மாறி பல்வேறு காலநிலைகளாக வரும்.

வானிலைக்கும் காலநிலைக்கும் ஏதேனும் வேறுபாடு உண்டா? இதனைப் பற்றி மாணவ, மாணவிகள் கலந்துரை யாடலாக - விவாதிக்கவும்.

சூரியனிடமிருந்து வெளிப்படும் வெப்பம் ஆண்டு முழுவதும் ஒரே அளவில் புவியை வந்தடைந்தாலும் புவியின் சில பகுதிகள் வெப்பமாகவும், சில பகுதிகள் குளிர்ச்சியாகவும் உள்ளன. வெப்பநிலை புவியில் ஆண்டு முழுவதும் ஒரே மாதிரியாக இல்லாமல் இடத்திற்கு இடம், காலத்திற்குக் காலம் வேறுபடுகின்றது. இதற்குக் காரணம் பருவகாலங்கள் தோன்றுவதே.

பருவகாலங்கள் பற்றி ஏழாம் வகுப்பில் படித்ததை இங்கு நினைவில் கொள்ளவும்.

புவி தனது அச்சில் 23½° சாய்வில் சுழல்கின்றது. ஒரு ஆண்டில் சூரியன் 23½° வட அட்சமான கடக அட்சத்திற்கும், 23½° தென் அட்சமான மகர அட்சத்திற்கும் வடக்கிலிருந்து தெற்காகவும், தெற்கிலிருந்து வடக்காகவும் நகர்ந்து பிரகாசிப்பது போலத் தோன்றும். சூரியன் மார்ச், செப்டம்பர் மாதங்களில் நிலநடுக்கோட்டின் மீது நேராகப் பிரகாசிக்கின்றது. அதேபோல் கடக அட்சத்தில் ஜூன் மாதமும், மகர அட்சத்தில் டிசம்பர் மாதமும் சூரியனின் கதிர்கள் செங்குத்தாக விழுகின்றன.

மார்ச் முதல் செப்டம்பர் வரை சூரியனின் செங்குத்துக் கதிர்கள் வடஅரைக்கோளத்தில் விழுகின்றன. இவை அதிக வெப்பம் தரக்கூடியவை. எனவே வடஅரைக்கோளத்தில் இம்மாதங்களில் கோடைக்காலம் நிலவுகின்றது.

வட அரைக்கோளத்தில் கோடைக்காலம் நிலவும் போது, சூரியனின் கதிர்கள் தென் அரைக்கோளத்தில் சாய்வாக விழுவதால் அங்கு வெப்பம் குறைவாகவே இருக்கும். எனவே மார்ச் முதல் செப்டம்பர் வரை தென் அரைக்கோளத்தில் குளிர்காலம் நிலவும் (படம் 3.1).






படம் 3.1

செப்டம்பர் மாதத்திற்குப் பிறகு, சூரியன் நிலநடுக் கோட்டிற்கு தெற்கே நகர்வதால் சூரியனின் கதிர்கள் டிசம்பர் மாதத்தில் மகர அட்சத்தில் செங்குத்தாக விழுகின்றன. பின்னர் மார்ச் மாதத்தில் சூரியன் நிலநடுக்கோட்டை அடைகின்றது. எனவே செப்டம்பர் முதல் மார்ச் வரை தென் அரைக்கோளத்தில் கோடைக்காலமும், வட அரைக் கோளத்தில் சூரியனின் கதிர்கள் சாய்வாக விழுவதால் குளிர்காலமும் நிலவுகின்றன.

| |
|---|
| வட அரைக்கோளத்தில் மார்ச் முதல் செப்டம்பர் வரை கோடை காலமாகவும், அக்டோபர் முதல் பிப்ரவரி வரை குளிர் காலமாகவும் இருக்கும். |

தமிழ்நாடு வட அரைக்கோளத்தில் அமைந்துள்ளதால் இது போன்ற காலநிலையே நிலவுகின்றது.

இந்தியா நிலநடுக்கோட்டிற்கு வடக்கில் $8^0$ வட அச்சம் முதல் $37^o$ வட அட்சம் வரை பரவியுள்ளது. எனவே, வட அரைக் கோளத்தின் காலநிலை இந்தியாவிற்கும் பொருந்தும். கால நிலைக் கூறுகளின் அடிப்படையில் இந்தியாவின் காலநிலையை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. கோடைக்காலம்
2. குளிர்காலம்
3. மழைக்காலம்

## கோடைக்காலம்

இந்தியாவில் மார்ச் மாதத்தில் சூரியன் நிலநடுக்கோட்டி லிருந்து இடம் பெயர்ந்து ஜூன் மாதத்தில் கடக அட்சத்தை அடைகின்றது. இம்மாதங்களில் சூரியனின் கதிர்கள் இந்தியா வில் செங்குத்தாக விழும். எனவே மார்ச் முதல் செப்டம்பர் வரை இந்தியாவில் கோடைக்காலம் நிலவுகின்றது (படம் 3.2).

கடக அட்சத்திற்குத் தெற்கே, நிலநடுக்கோட்டிற்கு அருகில் தீபகற்ப இந்தியா அமைந்துள்ளதால் மார்ச்





படம் 3.2

மாதத்திலிருந்து வெப்பம் அதிகரிக்கின்றது. எனவே தான் தமிழ்நாட்டில் மே மாதத்தில் உச்ச வெப்பநிலை காணப்படுகின்றது.

கடக அட்சத்தில் ஜூன் மாதத்தில் சூரியனின் கதிர்கள் செங்குத்தாக விழுகின்றன. அப்பொழுது கடக அட்சத்திற்கு வடக்கேயுள்ள புறதீபகற்ப இந்தியாவில் மார்ச் முதல் ஜூன் வரை கோடை வெப்பம் உச்சநிலையை அடைகின்றது.

| |
|---|
| இந்தியாவில் கோடை வெப்ப நிலை மார்ச் முதல் ஜூன் வரை நிலவுகின்றது. |

இந்தியாவின் வெப்பப் பரவல் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி செல்லச் செல்ல அதிகரிக்கின்றது. இந்தியாவின் வட மேற்குப் பகுதிகளில் உச்ச வெப்பநிலை காரணமாக அழுத்தம் குறைகின்றது. இந்த அழுத்தக் குறைவினால் தாழ்வு அழுத்த மையம் ஒன்று உருவாகின்றது. கோடையில் இந்தியாவில் பெரும்பாலான இடங்களில் உயர்வெப்பம் இருப்பினும் கடற்கரை ஓரங்களிலும் மலைப்பகுதிகளிலும் வெப்பம் சற்று மிதமாகவே இருக்கும். கடற்கரையை ஒட்டிய நிலப்பரப்பில் கடற்காற்று வீசி, வெப்பத்தைத் தணிக்கின்றது.

தீபகற்ப இந்தியாவின் கடற்கரையை ஒட்டிய பகுதிகளின் வெப்பநிலை உள்நாட்டு நிலப்பகுதிகளின் வெப்பநிலையைக் காட்டிலும் குறைவாக உள்ளது. தமிழ்நாட்டின் கிழக்குக் கடற் கரையில் அமைந்துள்ள சென்னையில் கோடைக் காலத்தில் வெப்பம் உள்நாட்டிலுள்ள மதுரை, திருச்சி ஆகிய இடங்களை விடக் குறைவாக உள்ளது. கடல் மட்டத்திலிருந்து உயரமான மலைப் பகுதிகளில் வெப்பநிலை அடிவாரத்தைக் காட்டிலும் குறைவாக இருக்கும். எனவேதான் இமயமலை, மேற்குத் தொடர்ச்சி மலைகள், கிழக்குக் குன்றுகள் ஆகிய பகுதிகளில் கோடையிலும் மிகக் குறைந்த வெப்பநிலையே நிலவுகின்றது. மேற்குத் தொடர்ச்சி மலையிலுள்ள ஊட்டி, குன்னூர், கொடைக்கானல் போன்ற இடங்களும், இமயமலையிலுள்ள டார்ஜிலிங், சிம்லா, டேராடூன் போன்ற இடங்களும் கோடை வாழிடங்களாகத் திகழ்கின்றன.

இந்தியாவில் கோடைக்கால உயர்வெப்பம் பரவலாகக் காணப்படினும் கடற்கரை ஓரங்களிலும் மலைப் பகுதிகளிலும் வெப்பம் சிறிது குறைவாகவே இருக்கும்.



## குளிர்காலம்

செப்டம்பர் மாதத்திற்குப் பிறகு சூரியன் நிலநடுக்கோட்டி லிருந்து தெற்கே இடம் பெயர்ந்து தென் அட்சமான (23½°) மகர அட்சத்தின் மீது டிசம்பர் மாதத்தில் செங்குத்தாகப் பிரகாசிக்கின்றது. எனவே செப்டம்பர் முதல் பிப்ரவரி வரை தென் அரைக்கோளத்தில் கோடைக்காலமாகவும், வட அரைக்கோளத்தில் குளிர்கால மாகவும் அமையும். வட அரைக்கோளத்தில் அமைந்துள்ள இந்தியாவில் செப்டம்பர் முதல் பிப்ரவரி வரை குளிர்காலம் (படம் 3.3).

கடக அட்சத்திற்குத் தெற்கே அமைந்துள்ள தீபகற்ப இந்தியாவைவிட வடக்கே அமைந்துள்ள புறதீபகற்ப இந்தியாவின் குளிர்கால வெப்பநிலை சற்று அதிகமாக இருக்கும்.

| |
|---|
| இந்தியாவில் குளிர்கால வெப்பநிலை அக்டோபர் முதல் பிப்ரவரி வரை நிலவுகின்றது. |

தீபகற்ப இந்தியா நிலநடுக்கோட்டிற்கு அருகில் (8°வ) அமைந்துள்ளதால் சூரியனின் கதிர்கள் செங்குத்தாக விழுகின்றன. எனவே இங்கு குளிர்காலம் மிதமாக இருக்கும்.

மாறாக புறதீபகற்பப் பகுதி நிலநடுக்கோட்டிலிருந்து தொலைவில் உள்ளதால் அங்கு சூரியனின் சாய்வான கதிர்களே விழுகின்றன. இதனால் இங்கு குளிர்கால வெப்பநிலை மிகவும் குறைவு.

குளிர்காலத்தில் இந்தியாவின் வெப்பநிலை தெற்குப் பகுதியைவிட வடக்கில் மிகக்குறைவாகவே பதிவாகி யுள்ளது. வெப்பம் குறைவதால் அதிக அழுத்த மையம் ஒன்று இங்கு உருவாகின்றது.

இந்தியாவில் பரவலாகக் குளிர்கால வெப்பம் குறைவாக இருப்பினும் கடற்கரைப் பகுதிகளில் வெப்பம் சற்று அதிகமாகவே இருக்கும். ஏனெனில் கடலோரப் பகுதிகளில் வீசும் கடற்காற்றின் வெப்பநிலை நிலப்பரப்பின் குளிர்ந்த காற்றையும் வெப்பமடையச் செய்து குளிரைக்

## இந்தியா மழையின் பரவல்




படம் 3.3



குறைக்கின்றது. எனவே இந்தியாவில் குளிர்காலத்தில், கடற்கரைப் பகுதிகளில் வெப்பம் அதிகமாக இருக்கின்றது.

மலையடிவாரத்திலிருந்து உயரே செல்லச் செல்ல வெப்பம் குறைவதால் தமிழ்நாட்டில் சென்னை, மதுரை போன்ற இடங் களைவிட ஊட்டி மற்றும் கொடைக்கானலில் மிகக்குறைந்த வெப்ப நிலையே பதிவாகின்றது.

### மழைக்காலம்

இந்தியாவில் கோடை மற்றும் குளிர் காலத்தில் உருவாகும் அழுத்த வேறுபாட்டினால் வீசும் பருவக்காற்றுகள் மழையைத் தோற்றுவிக்கின்றன.

| |
|---|
| இந்தியாவில் ஜூன் முதல் நவம்பர் வரை பருவக்காற்றினால் மழை பொழிகின்றது. |

இந்தியாவில் பொழியும் மழையை இரண்டு பிரிவாகப் பிரிக்கலாம்.

1. *கோடைக்கால மழை*
2. *குளிர்கால மழை*

### கோடைக்கால மழை

மார்ச் முதல் செப்டம்பர் வரை இந்தியாவிற்கு கோடைக் காலம். இம்மாதங்களில் இந்தியாவின் வடமேற்குப் பகுதிகளில் காற்று வெப்பமடைந்து, விரிவடைந்து மேல்நோக்கி எழுகின்றது. எனவே இங்கு குறைந்த அழுத்த மையம் ஒன்று உருவாகின்றது (படம் 3.4).

குறைந்த அழுத்தத்தை ஈடுசெய்யக் காற்றானது உயரழுத்த பகுதியிலிருந்து, குறைவழுத்தப் பகுதியை நோக்கி வீசும். வடமேற்கு இந்தியாவின் குறைந்த அழுத்தத்தை ஈடுசெய்ய தெற்கிலிருந்து வீசும் இக்காற்று நில நடுக்கோட்டைக் கடந்து வட அரைக்கோளத்தில் நுழையும் போது, புவியின் சுழற்சி காரணமாகத் திசைமாறி, தென்மேற்கிலிருந்து வீசுகின்றது. எனவேதான், தென் அரைக்கோளத்திலிருந்து வீசும் இக்காற்று தென் மேற்குப் பருவக்காற்று எனப்படுகின்றது.




படம் 3.4



## தென்மேற்கு பருவக்காற்று

தென்மேற்குப் பருவக்காற்று ஜூன் மாத ஆரம்பத்தில் இந்தியாவை நோக்கி வீசத் தொடங்கும். இந்தியாவின் வடிவமைப்பு காரணமாக இது இரண்டு கிளைகளாகப் பிரிகின்றது. அவை :

(i) அரபிக்கடல் கிளை (Arabian Sea branch) மற்றும்

(ii) வங்காள விரிகுடா கிளை (Bay of Bengal branch) பிரிவுகளாகும்.

## அரபிக்கடல் கிளை

தென்மேற்குப் பருவக்காற்றின் ஒருகிளை அரபிக் கடலைக் கடந்து இந்தியாவின் மேற்குக் கடற்கரையை நோக்கி வீசுகின்றது. தென்மேற்குப் பருவக்காற்று மேற்குக் கரையோரத்தில் வடக்கு- தெற்காக அமைந்துள்ள மேற்கு தொடர்ச்சி மலைகளினால் தடுக்கப்பட்டு உயரே எழுகின்றது. உயரே எழும் காற்றின் நீராவி சுருங்கி, மேற்குத் தொடர்ச்சி மலைகளின் மேற்குப் பகுதிகளில் கனமழை பொழிகின்றது. இங்கு ஆண்டுக்கு 250 செ.மீட்டருக்கு மேல் மழை பொழி கின்றது.

ஈரப்பதமிக்க காற்று மழை பெய்த பின்னர் வறண்ட காற்றாக மாறி மேற்குத் தொடர்ச்சி மலைகளின் உச்சியைக் கடந்து அதன் கிழக்குச் சரிவில் கீழிறங்குகின்றது. வறண்ட காற்றிற்கு மழை தரும் தன்மையின்மையால் மேற்குத் தொடர்ச்சி மலைகளின் கிழக்கிலுள்ள தக்காண பீடபூமி **மழை மறைவுப்** பிரதேசமாக உள்ளது.

## வங்காள விரிகுடாக் கிளை

தென்மேற்குப் பருவக்காற்றின் மற்றொரு கிளை வங்காள விரிகுடாக் கடலைக் கடந்து இந்தியாவின் வடகிழக்கில் நுழை கின்றது. இக்காற்று இமயமலையினால் தடுக்கப்பட்டு மேலெழுந்து, குளிர்ந்த இமயமலையின்

வடகிழக்குப் பகுதிகளில் *300* செ.மீ.க்கு மேலான கன மழையைக் கொடுக்கின்றது. பின்பு, இக்காற்று வடமேற்காகத் திரும்பி கங்கைச் சமவெளியில் முழு அளவில் மழையைக் கொடுக்கின்றது. தொடர்ந்து இக்காற்று நிலப்பகுதியை அடைந்து தனது ஈரப்பதத்தினை இழப்பதால் மழை அளவு குறைகின்றது. இறுதியில் வடமேற்கில் உருவான தாழ் அமுத்த மையத்தை அடையும் போது இக்காற்று முற்றிலும் வறண்டு விடுகின்றது. எனவே இங்கு பெய்யும் சொற்ப மழையால் இப்பகுதி பாலைவனமாகக் காட்சியளிக்கின்றது. இங்குதான் தார் பாலைவனம் அமைந்துள்ளது.

### குளிர்கால மழை

அக்டோபர் முதல் மார்ச் வரை சூரியன் தென் அரைக் கோளத்தில் பிரகாசிக்கின்றது. எனவே இங்கு நிலவும் கோடை வெப்பத்தினால் காற்றின் அழுத்தம் குறைந்து தாழ் அழுத்தம் உருவாகின்றது.

அதே சமயத்தில் வட அரைக்கோளத்தில் குளிர்காலம் நிலவும், எனவே தீபகற்ப இந்தியாவைவிடவும் புறதீபகற்ப பகுதியில் சூரியக்கதிர்கள் சாய்வாக விழுவதினால் வெப்பம் குறைந்து அழுத்தம் அதிகரித்து உயர் அழுத்த மையம் ஒன்று வடமேற்கு இந்தியாவில் உருவாகின்றது. இவ்வழுத்த வேறுபாட்டை ஈடுகட்ட வட அரைக்கோளத்திலிருந்து தென் அரைக்கோளத்தை நோக்கி காற்று வீசும். வடக்கிலிருந்து வீசும் இக்காற்று புவியின் சுழற்சியினால் திசைமாறி வடகிழக்காக வீசுகின்றது. இதனையே வடகிழக்குப் பருவக்காற்று என்பர். இதற்கு 'பின்னடையும் பருவக்காற்று' (Retreating Monsoon) என்றும் பெயர் உண்டு. வடகிழக்குப் பருவக்காற்று உயரழுத்தப் பகுதியிலிருந்து வீசுவதால் வறண்ட காற்றாகவே உள்ளது. இக்காற்று புறதீபகற்ப இந்தியாவிற்கு மழையைக் கொடுப்ப தில்லை. ஆனால் இது வங்காள விரிகுடாக் கடலைக் கடக்கும் போது ஈரப்பதத்தைப் பெற்று தீபகற்ப இந்தியாவின் கிழக்குக் கடற்கரையை நோக்கி வீசுகின்றது (படம் *3.5*). அங்குள்ள மலைக்குன்றுகளால் தடுக்கப்பட்டு கடற்கரைப் பகுதிகளுக்கு மழையைக்






படம் 3.5

கொடுக்கின்றது. இக்குன்றுகள் இமயமலையைப் போன்று உயரமாகவும் இல்லை, தொடர்ச்சியாகவும் இல்லை. எனவே, இக்காற்று தென்மேற்குப் பருவக்காற்றைப் போல கனமழையைக் கொடுப்பதில்லை.

வடகிழக்குப் பருவக்காற்று குளிர்காலத்தில் தீபகற்ப இந்தியாவின் கிழக்குக் கடற்கரைப் பகுதிக்கு மட்டுமே மழையைக் கொடுக்கின்றது. கிழக்குக் கடற்கரை இப்பருவக் காற்று மழையைத் தவிர புயல்காற்றினாலும் மழையைப் பெறுகின்றது. குளிர் காலத்தில் வங்கக்கடலில் தொடர்ந்து புயல்கள் எழுவதால் ஒருசில மாதங்களுக்கு, குறிப்பாக அக்டோபர் முதல் டிசம்பர் வரை, மழையைக் கொடுக்கின்றன. இதனால் கடலோரங்களில் வெள்ளப் பெருக்கும், உயிர் மற்றும் பயிர்ச் சேதமும் விளைகின்றன.

இச்சேதங்களிலிருந்து பாதுகாப்பைப் பெற உதவும் நிலையான தீர்ப்பு ஏதேனும் உண்டா என்று ஆராய்க.

### தண்ணீர் பிரச்சினை ஏன்?

நன்னீர் பெருமளவில் பெருகிவரும் மக்கள் தேவையைப் பூர்த்தி செய்யப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. மேலும் நகரமையமாதலாலும், கான்கிரீட் கட்டிடங்களாலும், திறந்த வெளிகள் குறையத் தொடங்கியுள்ளன. திறந்த வெளிகள்தான் நிலநீரினளவு திரும்பவும் மழைநீரின் மூலம் பெற்றுக்கொள்ள வழிசெய்யும் பகுதியாகும். பருவமழை பொய்த்தது, நீர்ப்பற்றாக்குறை மேலும் அதிகரித்தது. எனவே மக்கள் நிலத்தடி நீரை நம்பியுள்ள காரணத்தால் அதனை மிக அதிக அளவில் கிணறுகள், குழாய்க் கிணறுகள் மூலம் எடுக்கின்றனர். இதனால் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து கிணறுகள் வறண்டு விடுகின்றன.

### இந்தியாவின் மழையும் நீர் வளங்களும்

இந்தியாவில் வருடச் சராசரி மழையின் அளவு 4,000 கன கி.மீ. அவ்வாறே ஆறுகளில் பாயும் நீரின் ஓட்டம் 1,869 கன கி.மீ. மழை பருவகாலங்களின் மூன்று



மாதங்களில் மட்டுமே பெய்வதால், பயன்படுத்தக்கூடிய நீரின் அளவும் 690 கன கி.மீ. நிலத்தடி நீரிலிருந்து மேல் இறைக்கப்படும் நீரின் வருடச் சராசரி அளவு 432 கன கி.மீ. சராசரியாக, சுமார் 1,122 கன கி.மீ. நீரானது பயன்பாட்டிற்குள் உள்ளது; நமது தேவைகளைப் பொருத்த மட்டில் இந்நீர் போதுமானதாகும் என்றாலும், நீரைப் பயன்படுத்துவதில் பிரச்சனைகள் உண்டு; அதாவது நீர் அளவின் பரவல், பரப்பு மற்றும் காலம் பொருத்தும், ஒரே சீராக இல்லை.

நமது நாட்டின் 20 முக்கிய ஆற்றுவடிகால்களில் 6 வடிகால் பகுதிகள் பற்றாக்குறையால் அவதியுறுகின்றன. இப்பொழுதே, நமது நாட்டில் நீர் ஒரு வளர்ச்சியைத் தடுக்கும் வளமாக மாறிவருகின்றது. நீரின் அளவு மற்றும் தரப்பற்றாக்குறையினைத் தீர்க்கும் வண்ணமாகத் தேசியத் திட்டங்கள் (தடுப்பு மற்றும் தீர்வுச் செயல் திட்டங்கள்) பல தீட்டப்பெற்று செயல்படத் துவங்கியுள்ளன.

### மழைநீர் அறுவடை (சேகரிப்பு)

மழை பெய்யும் காலங்களில் மழை நீரைச் சேகரித்துத் தேவைப்படும் பொழுது மழை பெய்யாத சமயங்களில் உபயோகிப்பது மழைநீர் அறுவடை ஆகும்.

### தண்ணீர் தட்டுப்பாடு - ஏன்?

1. தூயநீர் வளங்கள் அதிகமாக உபயோகப்படுத்தப்பட்டு உள்ளதால் எப்பொழுதும் நல்ல தண்ணீருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.
2. வேகமாக வளர்ந்து வரும் நகரமயமாதலால் இயற்கையாக மழைநீர் சேகரிக்கும் பகுதிகள் குறைந்து வருகின்றன.
3. பருவமழை பொய்த்து விடுவதால் மோசமான சூழ்நிலை ஏற்படுகின்றது.
4. மழையின் அளவு குறைந்து விடுவதால் நிலத்தடி நீரைச் சார்ந்து இருக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

5. அதிகமாக நிலத்தடி நீர் உபயோகிக்க வேண்டி உள்ளதால் நீர் மட்டத்தின் அளவு குறைந்து இறுதியாகக் கிணறுகள் வற்றிவிடுகின்றன.

### தீர்வு

1. தூய நீருக்கு மாற்று ஆதாரம் மழைநீர் மட்டுமே.
2. தண்ணீர்த் தட்டுப்பாட்டைத் தீர்க்கத் தேவையான அளவு மழை தேவை.
3. மழைநீர் அறுவடையின் மூலம் தண்ணீர் தட்டுப் பாட்டைத் தீர்க்கலாம்.
4. நிலத்தடி நீரைப் பாதுகாக்க அனைத்து நீர்ப்பிடிப்பு களிலும் மழைநீரைத் தேக்க வேண்டும்.
5. மழைநீர் அறுவடை (சேகரிப்பு) ஒன்றுதான் நிரந்தரத் தீர்வு ஆகும்.

### மழைநீரை ஏன் சேமிக்க வேண்டும்?

1. நிலத்தடி நீரின் அளவு குறையாமல் பாதுகாக்க மழைநீரைச் சேகரிக்க வேண்டும்.
2. நீர் மட்டத்தின் அளவு குறையாமல் இருக்கச் சேகரிக்க வேண்டும்.
3. நிலத்தடி நீரின் தன்மையை உயர்த்தச் சேமிக்க வேண்டும்.
4. கடற்கரை ஓரங்களில் கடல் நீரின் ஊடுருவலைத் தடுக்க மழைநீரைச் சேமிக்க வேண்டும்.
5. சுவர்களில் ஏற்படும் விரிசல்களைத் தடுக்க மழைநீரைச் சேமிக்க வேண்டும்.

### மழைநீர் அறுவடை என்றால் என்ன?

1. இது நேரடியாக மழைநீரை சேகரிக்கும் ஒரு செயற்பாடு ஆகும்.
2. மழைநீரைச் சேகரித்து நேரடியாக உபயோகிக்கலாம் அல்லது நிலத்தடி நீர்ப்பிடிப்புகளில் சேமித்து உபயோகிக்கலாம்.



### மழைநீர் எவ்வாறு அறுவடை செய்யப்படுகின்றது?

மழைநீரானது கீழ்க்கண்ட இருவழிகளில் சேகரிக்கப் படுகின்றது.

1. நீர்த் தொட்டிகளில் சேகரித்து, பாதுகாத்து நேரடியாக உபயோகிப்பது.
2. உறை கிணறுகளில் சேகரித்து பிறகு உபயோகிப்பது.

### மழைநீர் அறுவடை செய்யும் முறைகள்

1. வீடுகளின் கூரைகளிலும், சுற்றியுள்ள வெற்றிடங்களிலும் விழும் மழை நீரை உரிய முறையில் (மழைநீர் தொட்டி யில்) சேகரிப்பது.
2. எங்கெங்கு திறந்த / குழாய்க் கிணறுகள் உள்ளனவோ அவற்றில் வீடுகளில் விழும் மழை நீரைத் தேக்கி வைப்பது.
3. திறந்த வெளியில் விழும் மழைநீரை என்னென்ன முறைகளில் தேக்கலாமோ அதன்படி சேமிக்கலாம்.

**கற்றல் அடைவுகள்**

1. மாணவர்கள் இந்தியாவின் காலநிலைச் சிறப்பைத் தெரிந்து கொள்ளும் திறமையைப் பெறுகின்றனர்.
2. வேளாண்மை என்பது பருவக்காற்றின் மீதானச் சூதாட்டம் என்பதை மாணவர்கள் கற்றறிகின்றனர்.
3. மாணவர்கள் வெவ்வேறு பருவங்களின் கூறுகள் மற்றும் மழைகள் பற்றி தெளிவு பெறுகின்றனர்.
4. மழைநீர் அறுவடை ஏன் முக்கியத்துவம் பெற்றது என்பதைக் கற்றறிகின்றனர்.

## சுயமதிப்பீடு

**I.** சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்

1. செப்டம்பர் முதல் மார்ச் வரை இந்தியாவில் நிலவும் பருவம்
   அ. வறண்ட பருவம் ஆ. கோடை
   இ. மழை ஈ. குளிர்
2. கடக ரேகையில் சூரிய ஒளி செங்குத்தாக விழும் மாதம்
   அ. ஜனவரி ஆ. பிப்ரவரி
   இ. மே ஈ. ஜுன்
3. குளிர்காலத்தில் அதிக காற்றழுத்தம் உள்ள பகுதி
   அ. தென் மேற்குப் பகுதி ஆ. தென் கிழக்குப் பகுதி
   இ. வடகிழக்குப் பகுதி ஈ. வடமேற்குப் பகுதி
4. தீபகற்ப இந்தியாவில் குளிர்காலம்
   அ. வெப்பமானது ஆ. குளிரானது
   இ. மிதமானது ஈ. மிகக் குளிரானது
5. வடகிழக்குப் பருவக்காற்றால் மழை பெறும் பகுதி
   அ. தக்காண பீடபூமி ஆ. மேற்குக் கடற்கரை
   இ. கிழக்குக் கடற்கரை ஈ. கேரளா

**II.** கோடிட்ட இடங்களை நிரப்புக

1. இந்தியாவில் அதிக வெப்பநிலை உள்ள மாதம் __________
2. கடல் மட்டத்திலிருந்து உயரே செல்லச் செல்ல வெப்பநிலை __________
3. கோடைக்காலத்தில் அதிக வெப்பநிலை பதிவாகும் பகுதி __________



4. இந்தியாவின் மழைக்காலம் ஜுன் முதல் __________ மாதம் வரை ஆகும்.
5. மேற்குத் தொடர்ச்சி மலையின் கிழக்குப் பகுதி __________ ஆகும்.

**III.** பின்வருவனவற்றைப் பொருத்துக

1. தென்மேற்குப் பருவக்காற்று -- டிசம்பர் முதல் பிப்ரவரி வரை
2. வடகிழக்குப் பருவக்காற்று -- தார் பாலைவனம்
3. வறண்ட பிரதேசம் -- கோடை மழை
4. மழை மறைவு பிரதேசம் -- குளிர்கால மழை
5. குளிர்காலம் -- செப்டம்பர் முதல் நவம்பர் வரை

**IV.** சுருக்கமாக விடையளிக்கவும்

1. வானிலை என்றால் என்ன?
2. இந்தியாவின் காலநிலைப் பிரிவுகள் யாவை?
3. தென்மேற்குப் பருவக்காற்றின் இரு கிளைகள் யாவை?
4. இந்தியாவின் கோடை வாழிடங்கள் சிலவற்றைக் கூறுக.
5. தீபகற்ப இந்தியாவில் குளிர்காலம் மிதமாக இருக்கக் காரணம் என்ன?
6. மழைநீர் அறுவடை என்றால் என்ன?

**V.** விரிவான விடை தருக

1. இந்தியாவின் கோடைக்காலம், குளிர்காலம் ஒப்பிடுக.
2. தென் மேற்குப் பருவக்காற்று - விவரி.
3. வடகிழக்குப் பருவக்காற்று - விவரி.
4. மழைநீர் அறுவடையின் முக்கியத்துவம் பற்றி விவரி.

**VI.** செய்முறைப் பயிற்சிகள்

1. இந்திய வரைபடத்தில் தென் மேற்கு மற்றும் வடகிழக்குப் பருவக்காற்றின் திசைகளைக் குறிப்பிடுக.
2. இந்திய வரைபடத்தில் தென்மேற்கு மற்றும் வடகிழக்குப் பருவக் காற்றால் மழை பெறும் பகுதிகளை வேறுபடுத்திக் காட்டுக.

அலகு - III : தாவரம் மற்றும் மண்

பாடம் 4

# இயற்கைத் தாவரமும் மண்ணும்

**கற்றல் நோக்கங்கள்**

1. மாணவர் பல்வேறு வகையான தாவரங்களைப் பற்றி அறிந்து கொள்ளல்.
2. மாணவர் தாவரங்களைப் பாதுகாக்கும் முறைகளைப் பற்றியும் அவற்றின் அவசியத்தைப் பற்றியும் தெரிந்து கொள்ளல்.
3. மாணவர் மண் தோன்றும் முறைகள் குறித்தும், மண்ணின் வகைகளைப் பற்றியும் புரிந்து கொள்ளல்.
4. மாணவர் மண் அரிப்பைக் கட்டுப்படுத்தும் முறைபற்றி அறிந்து கொள்ளல்.

நம்மைச் சுற்றி எங்கு பார்த்தாலும் மரம், செடி, கொடிகள் வளர்ந்துள்ளன. அவைகளில் ஆல், அரசு, வேம்பு, பூவரசு, காட்டுச் செடிகள், கொடிகள் போன்றவை கிராமப்புறங்களில் நன்கு வளர்ந்திருப்பதை நாம் பார்க்கின்றோம். அவற்றை யாரும் பயிரிடாமல், தானாகவே முளைத்து வளருவதால் அவை 'இயற்கைத் தாவரங்கள்' என அழைக்கப்படுகின்றன. அவை அந்தந்த பகுதியிலுள்ள தட்பவெப்ப நிலை, மண், மழைப் பொழிவுக்கு ஏற்ப தானாகவே முளைத்து வருபவை.

இயற்கையானச் சூழ்நிலையில் மனிதனின் ஈடுபாடு இல்லாமல் வளரும் தாவரங்கள் 'இயற்கைத் தாவரங்கள்' எனப்படும்.

தாவர வளர்ச்சிக்கு ஆதாரமாக அமைபவை :

1. சூரிய ஒளி
2. மழைப்பொழிவு
3. மண்

இம்மூன்றில் ஏதேனும் ஒன்று குறைந்தாலும் அது தாவர வளர்ச்சியைப் பாதிக்குமா?

இந்தியாவில் காணப்படும் நிலத்தோற்றம் மற்றும் தட்பவெப்ப நிலைக்கேற்ப இயற்கைத் தாவரத்தை 3 பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம் (படம் 4.1). அவை :

(i) மலைத்தாவரங்கள் (Hill Vegetation)

(ii) இலையுதிர் தாவரங்கள் (Deciduous Vegetation)

(iii) பாலைவனத் தாவரங்கள் (Desert Vegetation)

## 1. மலைத்தாவரங்கள்

மலைகளின் அடிவாரம் மற்றும் கீழ்ச்சரிவுகளில் வெப்பமும் மழையும் மிகுதியாக இருக்கும். எனவே, இங்கு தாவரங்கள் செழித்து வளரும். இமயமலையின் வடகிழக்குப் பகுதிகள், மேற்குத் தொடர்ச்சி மலையின் மேற்குச் சரிவுகள் ஆகியவற்றின் அடிவாரத்திலிருந்து ஏறத்தாழ 1,000 மீட்டர் வரை அடர்ந்த காடுகள். பல்வேறு கொடிகளும் படர்ந்திருக்கும். தரை யில் சிறு செடிகள் வளர்ந்திருக்கும். இவை ஆண்டு முழுவதும் பசுமையாகக் காணப்படும். எனவே இவை 'பசுந்தாவரங்கள்' (Evergreen Vegetation) என்றழைக்கப்படுகின்றன. எபின், தேவ தாரு, செம்மரம் (Rose wood), கருங்காலி போன்றவை பசுந் தாவரங்கள்.

சுமார் 1,000 மீட்டர் முதல் 2,500 மீட்டர் வரையான உயரத்தில் வெப்பமும், மழையும் குறைவாக இருக்கும். அங்கு மரங்கள் அடர்ந்து வளராமல், பசுமையாக இருக்காது. ஓரளவு மழை பெய்தும், மழை நீர் தங்காததால் தனித்த மரங்களும், புதர்ச் செடிகளும், கொடிகளும் கலந்து






படம் 4.1

காணப்படும். இத் தாவரங்களைக் கொண்ட பகுதி கலப்புக் காடுகள் (Mixed Forest) என்றழைக்கப்படும்.

சுமார் 2,500 மீட்டருக்கு மேலான உயரங்களில் வெப்பம் மிக மிகக் குறைந்து பனி நிறைந்து காணப்படும். இங்கு வளரும் தாவரங்கள் குளிரையும், பனியையும் தாங்குவதற்கு ஏற்றவாறு ஊசி போன்ற இலைகளைப் பெற்றுள்ளன. எனவே, இம்மரங்களைக் கொண்ட காடுகள் 'ஊசியிலைக் காடுகள்' (Coniferous Forest) எனப்படும்.

சுமார் 4,000 மீட்டருக்கும் மேலுள்ள உயரத்தில் அடர்ந்த பனி மூடியிருப்பதால் இங்கு தாவரங்கள் வளருவதற்கான சூழ்நிலை இல்லை.

## 2. இலையுதிர் தாவரங்கள்

தாவரங்கள் வளரத் தேவையான சூழ்நிலை இருப்பினும் ஒருசில மாதங்கள் மட்டுமே மழை இருந்தால் அங்கு வளரும் தாவரங்கள் வறட்சியைத் தாக்குப்பிடிக்க இலைகளை உதிர்த்து விடும். அக்காலங்களில் மரங்கள் இலைகளை உதிர்த்து பட்டுப் போனது போலத் தோன்றும். இத்தகைய தாவரங்களைக் கொண்ட காடுகளை 'இலையுதிர் காடுகள்' (Deciduous Forests) என்பர். இந்தியாவில் இக்காடுகள் 'பருவமழைக் காடுகள்' என்றும் அழைக்கப்படுகின்றன.

இந்தியாவின் தக்காண பீடபூமி, மேற்குத் தொடர்ச்சி மலைகளின் கிழக்குச் சரிவில் அமைந்துள்ளதால் தென்மேற்குப் பருவக்காற்று வறண்ட காற்றாகவே வீசுகின்றது. எனவே குறைந்த அளவில் மழையைப் பெறும் இப்பகுதி இலையுதிர் தாவரங்களால் நிறைந்துள்ளன.

இதேபோல் இமயமலை அடிவாரத்தின் மேற்குப் பகுதியிலும் இலையுதிர் காடுகள் உள்ளன. தென் மேற்குப் பருவக்காற்றுக் காலத்தில் வடகிழக்கிலிருந்து வடமேற்காக செல்லச் செல்ல மழை படிப்படியாகக் குறைகின்றது. இங்கு வளமான மண் இருந்தும் பருவகால மழையினால் தேக்கு, சால், செம்மரம், சந்தனமரம், மூங்கில் போன்றவை இலையுதிர் தாவரங்களாக உள்ளன.



## 3. பாலைவனத் தாவரங்கள்

ஆண்டு முழுவதும் அதிக வெப்பத்தையும், ஒருசில சமயங்களில் மட்டுமே மழைப்பொழிவையும் கொண்டுள்ள இடங்களில் வளரும் சப்பாத்திக்கள்ளி, கற்றாழை போன்ற தாவரங்களை பாலைவனத் தாவரங்கள் (Desert Vegetation) என்பர். புறதீபகற்ப இந்தியாவின் வடமேற்குப் பகுதியிலுள்ள தார் பாலைவனத்தில் இவ்வகைத் தாவரங்கள் காணப்படுகின்றன.

இம்மூவகைத் தாவரங்களைத் தவிர இந்தியாவில் காணப்படும் இன்னொரு சிறப்பு வகைத் தாவரம் சதுப்பு நிலத் தாவரம் ஆகும். இது இந்தியாவின் கிழக்குக் கடற்கரையோரக் கழிமுகப் பகுதிகளில் காணப்படுகின்றது. இவ்வகைத் தாவரங் களுக்குக் கடலின் அலைகள் மூலமும், ஓதங்கள் மூலமும் எந்நேரமும் நீர் கிடைக்கின்றது. கங்கைநதிக் கழிமுகத்தில் காணப்படும் சதுப்பு நிலத்தாவரங்கள் சுந்தரவனம் என்று அழைக்கப் படுகின்றன. சதுப்பு நிலத்தாவரங்கள் மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா நதி கழிமுகங்களிலும், அந்தமான் - நிக்கோபார் தீவுகளின் கழிமுகங்களிலும் காணப்படுகின்றன.

### இந்தியக் காடுகள் கொள்கை

### INDIAN FORESTRY POLICY

மிக நீண்ட காலமாகவே காடுகள் கொள்கை கொண்ட நாடுகள் சிலவற்றுள் இந்தியாவும் ஒன்று. இங்கு 1894 முதலாகவே காடுகள் கொள்கை உண்டு. இது 1952-ல் திருத்தப்பட்டது. 1988-ம் ஆண்டு காடுகள் கொள்கையின் முக்கிய அம்சங்கள் பாதுகாப்பும் காடுகள் வளர்த்தலும் ஆகும். இதன் நோக்கங்கள் :

(1) சுற்றுச்சூழல் நிலைத் தன்மையைப் பேணுதலும் இயற்சூழல் சமன்பாட்டினைத் திரும்பக் கொணர்தலும்.

(2) இயற்கைப் பாரம்பரியத்தைப் பாதுகாத்தல்.

(3) மண் அரிப்பையும், ஆறுகள், ஏரிகள் மற்றும் தேக்கங்களின் பிடிப்புப் பகுதிகள் சிதறல்களையும் கட்டுப்படுத்துதல்.

(4) இராஜஸ்தானின் பாலைப் பகுதிகள் மற்றும் கடற்கரைப் பகுதிகளில் மணல் மேடுகளின் ஊடுருவலைத் தடுத்தல்.

(5) காடமைத்தல் மற்றும் சமூகக் காடுகள் திட்டங்களின் மூலம் மரக்காடுகளின் பரப்பினை அதிகரித்தல்.

(6) விறகு, மாட்டுத்தீவனம் மற்றும் காட்டுப் பொருட்களின் தேவையை நிவர்த்தி செய்தலும், ஊரக மற்றும் பழங்குடி மக்களின் மண் மற்றும் மரத் தேவைகளைப் பூர்த்தி செய்தலும்.

(7) நாட்டுத் தேவையைச் சந்திக்கும் வகையில் காடுகளின் உற்பத்தித் திறனை அதிகரித்தல்.

(8) காட்டுப் பொருட்களைத் திறமையாகப் பயன்படுத்தலை ஊக்குவித்தலும், மரத்திற்கு ஏற்புடைய மாற்று காணுதலும்.

(9) காடுகளின் நோக்கங்களை நிறைவேற்றும் வகையாக வெகுவான மக்களையும், பெண்களையும் திரட்டுதல் மற்றும் இன்றையக் காடுகளின் மீதான அழுத்தங்களைக் குறைத்தல்.

இவற்றிலிருந்து 1988-ம் வருட தேசியக் காடுகளின் கொள்கை வழியாகப் பல சிறப்பு மிக்க காடுகள் சம்பந்தமான நடவடிக்கைகளுக்குப் புத்துணர்ச்சி ஊட்டப்படுகின்றது என்பது திண்ணம்.

**இயற்கைத் தாவரப் பாதுகாப்பு (Conservation of Forest)** : மக்கள் தொகை பெருகிவிட்ட இக்காலத்தில் காடுகளைக் குடியிருப்புகளாக மாற்றுவது அழிவுக்கு வழிவகுக்கும். மக்கள் தொகை பெருகி மரங்கள் குறைந்து வருவதால் மண் அரிப்பு அதிகரித்துவிட்டது. கங்கைச் சமவெளி, குஜராத், பஞ்சாப், ராஜஸ்தான் மற்றும் தென்னிந்தியப் பகுதிகளில் முன்பிருந்த காடுகளின் சுவடே இப்போதில்லை.



## தேவதை மரம்

முனகும் வானம்
'இதுதான் நேரம்' என
தீர்வு செய்து
பயமுறுத்தலை நிறுத்தி
மழையாய்ப் பெய்தது.
மெதுவானத் தூறல்
ஒரு தொடர்
மழையாய்
வேகமாய் மாறிற்று.
மழையின் ஊடே
நான் அம்மரத்தைப் பார்த்தேன்.
எங்கள் மரத்தை நீங்கள்
எடுத்துச் செல்ல முடியாது, மிஸ்டர்!
அவள் எங்கள் உடனானவள்!
நீங்கள் ஒரு தவறு
செய்தால், பெருந்தவறு செய்தால்,
உங்களுள்
ஒரு கொடிய பேராசை இருந்தால்,
நான் சொல்வதைக் கொஞ்சம்
கேளுங்கள் :
இது என் மரம் இல்லை, விற்பதற்கு;
இது எங்கள் அனைவரின் ஆத்மாவிலும்
உறைந்துள்ளது.
அவள் எங்கள் தேவதை.

மரங்கள் வெட்டப்பட்டால் மண்ணுக்குள் இருக்கும் இலைமக்கு, தழைச்சத்து போன்றவை மழையால் நீக்கப் பட்டு விடும். காடுகள் அழிந்து வருவதால் ஆண்டுதோறும் 1.5 மில்லியன் ஹெக்டேர் நிலங்களும், மற்ற காரணங்களால் இன் னொரு மில்லியன் ஹெக்டேர் நிலங்களும் வீணாக்கப் படுகின்றன. மலைச்சரிவுகளில் காடுகள் இல்லையெனில் வெள்ளம் அதிகரித்து, வண்டல் மண் படிவுகள் வயல்களில் படிந்து பயிர்களுக்குச் சேதம் விளைவிக்கும். இதனால் விளை நிலங்கள் வீண்நிலங்களாகி பயிரிடத் தகுதியற்றனவாகும். நம் முன்னோர் தம் வாழ்க்கையில் குறிப்பிட்ட எண்ணிக்கைக்கு குறையாமல் மரங்களை நடவேண்டும் என்ற குறிக்கோளை வைத்திருந்தனர். காலப்போக்கில் இப்பழக்கங்கள் மறைந்து விட்டன. காடுகளை அழிவி லிருந்து காக்க நமது அரசும் பல சட்டங்களை இயற்றியுள்ளது. ஒவ்வொரு மாநிலத்திலும் வனத்துறை அமைக்கப் பட்டுள்ளது. டேராடூனிலுள்ள வனத்துறை ஆராய்ச்சி நிறுவனம் காட்டுப் பொருட்கள் தொடர்பானப் பல்வேறு ஆராய்ச்சிகள் மேற்கொண்டு மரங்களின் நோய்களைத் தடுப்பது, உற்பத்தித் திறனை அதிகரிப்பது போன்ற ஆய்வுகளில் செயல்பட்டு வருகின்றது. மரம் வெட்டும் உரிமம் பெற்றவர்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் சில குறிப்பிட்டச் செடிகளை நட்டிருக்க வேண்டும் என்ற சட்டம் இயற்றப் பட்டுள்ளது. 1950-ஆம் ஆண்டு முதல் நாடெங்கிலும் மரம் நடுவிழா ஜூலை மற்றும் ஆகஸ்டு மாதங்களில் நடைபெற்று வருகின்றது. இதன் மூலம் மக்கள் மரங்களை நட்டு வளர்ப்பதற்கு ஊக்குவிக்கப் படுகிறார்கள். வானொலி, தொலைக்காட்சிச் சாதனங்கள், விளம்பரம், துண்டுப் படங்கள், நாடகங்கள் மூலமாகக் காடுகளில் நெருப்பு பிடிப்பது, முறையற்ற கால்நடை மேய்ச்சல் போன்றவை கட்டுப்படுத்தப் பட்டுள்ளது. அதிக வளர்ச்சியும், செழிப்பும் இல்லாத காடுகளைத் திருத்தம் செய்து நல்ல இனத்தைச் சேர்ந்த நாட்டுச் செடிகளை உற்பத்தி செய்யும் திட்டத்தை, காட்டு இலாகாவினர் பல மாவட்டங்களில் அமுலாக்கி உள்ளனர். இந்த முறையே குமரி பயிர் முறை என்றழைக்கப்படுகின்றது. இதன் நோக்கம் மிகுந்த அளவில் பயன்தரும் மரங்களை வளர்த்து மேய்ச்சல் வசதியைப் பெருக்குவதே.



காட்டிலாகா நிலங்களைக் குத்தகைக்கு எடுக்கும் நிலமில்லா ஏழைகளை குமரிதார்கள் என்பர். அந்தச் செடிகளுக்கிடையில் குமரிதார்களுக்குத் தேவையான உணவுப் பயிர்களையும் விளைவிக்கலாம்.

இம்முறை குமரிதாரர்களிடம் மரம் வளர்க்கும் மனப் பான்மையையும், காட்டின் அவசியத்தையும், அதைப் பாதுகாக்கும் முறையையும் உணர்த்துகின்றது.

தமிழ்நாட்டில் 1984-ஆம் ஆண்டின் சர்வேயின்படி காடுகளின் மொத்த பரப்பளவு 2.2 மில்லியன் ஹெக்டேர். மொத்த நிலப்பரப்பில் 17 விழுக்காட்டுப் பகுதிகள் காடுகளாகும். ஆனால் சென்ற சில வருடங்களில் காடுகள் நிறையவே அழிந்துவிட்டன.

**காடுகள், மலைகள்**

காட்டின் ‘ஹம்’ என்ற ஓசை,
காற்று
விட்டில் பூச்சியின் எழில் நடனம்,
வெண் கொக்கின் சத்தம் இல்லா சாகச நடை,
புலியின் வேக நடை
இவை யாவும்
பழங்குடியினர் நடனமும்
இசையும்!

ஒவ்வொரு கூழாங்கல்லும்
ஆறு,
மலையோ
அவர்தம் வாழ்க்கையின்
பூரண உணர்வு,
அசைவு
இலட்சியம்.

## மண்

புவியின் மேற்பரப்பில் காணப்படும் மிகச்சிறிய பாறைத் துகள்களால் ஆன படலமே 'மண்' எனப்படும். மண்ணில் தாதுப்பொருட்கள், மக்கிய தாவரங்கள், பாக்டீரியாக்கள் போன்றவை உள்ளன.

புவியில் தாவரங்கள் வேரூன்றி வளர மண்ணே ஆதாரம். பாறைகளிலிருந்து சிதைக்கப்பட்டு உருவாகும் மண்ணை தாவரங்களும், இறந்த விலங்கினங்களும், இலைகளும், மக்கி வளமான மண்ணாக மாற்றுகின்றன.

## மண்ணின் வகைகள்

பாறைகளிலுள்ள தாதுக்களின் தன்மைக்கேற்ப மண்ணின் பண்புகள் மாறுபடுகின்றன. இதனால்தான் புவியின் மேற் பரப்பில் பல்வேறு மண்வகைகள் காணப்படுகின்றன.

இந்திய நிலப்பரப்பில் பல்வேறுமண் வகைகள் உள்ளன (படம் 4.2). அவை :

1. மணல்
2. வண்டல்மண்
3. செம்மண்
4. கரிசல் மண்
5. மலை மண்

## மணல்

இந்தியாவின் கடற்கரையோரப் பகுதிகள், ஆற்றுப்படுகைகள், ஓடைகள் ஆகிய இடங்களில் மணல் காணப்படுகின்றது. இது மண்ணின் ஒருவகை. மணல் துகள்களுக்கிடையே இடைவெளி இருப்பதால், மழைநீர் மணலில் தேங்குவதில்லை. ஆதலால் மணலுக்கு ஈரத்தைத் தாங்கும் சக்தி குறைவு. மணல் தாவர வளர்ச்சிக்கு ஏற்றதல்ல.






படம் 4.2

மணலில் இலைமக்கு குறைவாக இருக்கும் மணலில் தென்னை நன்கு வளரும். சவுக்கு, முந்திரி போன்ற மரங்கள் மணற்பாங்கான இடங்களில் நன்கு வளர்கின்றன. வறண்ட பாலைவனங்களில் மணல் காணப்படுகின்றது. இம்மண்ணில் தாது உப்புகளும், பாஸ்பரசும் இருப்பதனால் பாசன வசதி இருப்பின் பயிர் செய்ய இயலும்.

### வண்டல் மண்

மண் வகைகளில் இது மிகவும் முக்கியமானது. ஆற்றுச் சமவெளிகளில் வண்டல் மண் ஆற்று நீரால் படிய வைக்கப் படுகின்றது. இந்தியாவில் கங்கைச் சமவெளி மிகப்பெரிய வண்டல்மண் சமவெளியாகும். காவிரி ஆறு வண்டல் மண் சமவெளியை தஞ்சை, நாகை மாவட்டங்களிலும் உருவாக்கு கின்றது. வண்டல் மண்ணில் கோதுமை, நெல், கரும்பு, வாழை போன்றவை நன்கு வளரும். இது மழைநீரைத் தேக்கி ஈரத்தைத் தாங்கிக் கொள்ளும் திறன் கொண்டிருப்பதால் தாவர வளர்ச்சிக்கு ஏற்றது. ஆற்றுக் கழிமுகங்களில் வண்டல் மண்ணில் கடல்நீர் அதிகம் சேருவதால் சதுப்பு நிலங்கள் உருவாகின்றன.

### செம்மண்

தீபகற்ப இந்தியாவில் உருமாறியப் பாறைகளில் உள்ள இரும்பு ஆக்ஸைடு மண்ணிற்குச் செந்நிறத்தை அளிக்கின்றது. செம்மண், மணலிற்கும், வண்டல் மண்ணிற்கும் இடைப்பட்ட அளவிலான துகள்களாலானது. ஓரளவிற்கு நீரினை உறிஞ்சி குறைவான நீரைத் தேக்கிவைத்துக் கொள்கின்றது. செம்மண் சுமாரான வளமுடைய மண். அவரை, துவரை, நிலக்கடலை, ஆமணக்கு போன்ற பயிர்கள் வளர மிகவும் ஏற்ற மண்.

### கரிசல் மண்

தக்காண பீடபூமியின் வடமேற்குப் பகுதியில் கரிசல் மண் அதிக அளவில் உள்ளது. மண் துகள்களுக்கிடையே இடைவெளி மிகக் குறைவாக இருப்பதால், மழைநீரை விரைவில் உறிஞ்சாது. ஆனால், உறிஞ்சிய நீரை அதிக



நாட்கள் தக்க வைத்துக் கொள்வதால், கரிசல் மண் பயிர் உற்பத்திக்கு ஏற்றது. பருத்தி, புகையிலை, மிளகாய், எண்ணெய் வித்துக்கள் போன்ற பயிர்களும், கம்பு, சோளம், தினை போன்ற தானிய வகைகளும் இம்மண்ணில் நன்றாக வளர்கின்றன.

### மலை மண்

மலைகளின் அடிவாரத்தில் அடர்ந்த காடுகள் இருக்கு மிடத்தில், தழைச்சத்து அதிகமுள்ள காட்டு மண் உள்ளது. இமயமலை, மேற்குத் தொடர்ச்சி மலை, கிழக்கு மலைக் குன்றுகள், தீபகற்ப இந்தியாவின் உயர்பகுதிகளிலும் இம்மண் காணப்படுகிறது. மலைச் சரிவுகளிலும், உச்சியிலும் மண் ஓடும் நீரினால் அரிக்கப்படுவதால், சரிவுகளிலுள்ள மண் வளமற்றுக் காணப்படும். குறிப்பாக பாறைகளிலுள்ள சிலிகா அகற்றப் படுகிறது. இம்மண்ணைத் ''துருக்கல் மண்'' என்பர். இம்மண் தோட்டப் பயிர்களுக்கும், சாலைகள் அமைக்கவும் பயன் படுகிறது.

### மண் அரிப்பு

மண்ணின் மேல் அடுக்கு அரிக்கப்படுதலை மண்ணரிப்பு என்பர். இயற்கைச் சக்திகளான நீர், காற்று ஆகியவற்றாலும், மனிதர்களின் செயல்களாலும் மண்ணரிப்பு அதிகம் நிகழ் கின்றது. இந்தியாவின் மொத்த நிலப்பரப்பில் 20 விழுக்காட்டு நிலப்பரப்பு மண்ணரிப்பினால் பாதிக்கப்பட்டுள்ளது. மலைப் பிரதேசங்களிலும், பீடபூமிப் பகுதிகளிலும் மண்ணரிப்பு அதிக அளவில் நிகழ்கின்றது. மண்ணரிப்பினால் மண் வளம் குறைவதால், மண்ணைப் பாதுகாத்தல் அவசியம்.

### மண்வளப் பாதுகாப்பு

மண் அரிப்பினைக் கட்டுப்படுத்துவதன் மூலமும், வளத்தி னைப் பாதுகாத்தல் மூலமும் மண் வளத்தைப் பராமரிக்க இயலும்.

**(1) மண் அரிப்பினைக் கட்டுப்படுத்துதல்** : மலைச் சரிவுகளின் குறுக்கே வரப்புகளை அமைத்து, மண்ணரிப்பைத் தவிர்க்கலாம். இவ்வரப்புகளைச் 'சமஉயரக்

கோட்டு வரப்புகள்' என்பர். சமநிலத்தில் மண்ணரிப்பைத் தடுக்க மரம், செடி, கொடிகளை வளர்க்க வேண்டும். வளரும் மரங்களை வெட்டாமல் பாதுகாப்ப தால், அவற்றின் வேர்கள் மண்ணை இறுகப் பிடித்துக் கொள்ள நீரினால் மண்ணை எளிதில் அரிக்க முடிவது இல்லை. காற்று வீசும் திசைக்குக் குறுக்கே மரங்களை நட்டால் காற்றின் வேகம் தடைப்பட்டு மண்ணரிப்பு கட்டுப்படுத்தப்படுகின்றது. இதனால் தான் நம் அரசு ''மரங்களை வளர்ப்போம் காடுகளைப் பாதுகாப் போம்'' என மக்களுக்கு அறிவுறுத்தி வருகின்றது.

**(2) மண்வளம் பாதுகாத்தல் :** மண் வளத்தைப் பாதுகாக்க மண் பரிசோதனை மூலம் மண்ணின் தன்மையை அறிந்து அதற்கேற்ப பயிர்களை வளர்த்தல் வேண்டும். ஒரே வகையானப் பயிர்களை ஒரு நிலத்தில் தொடர்ந்து பயிரிடுவதால் மண் வளம் குறையும். இதைத் தடுக்க பயிர்ச் சுழற்சி முறையைக் கையாள வேண்டும். மண்வளம் பாதுகாக்க உதவும் வேறு சில முறைகள் :

(i) நீர்ப் பாசன முறை

(ii) மண்ணின் குறைகளை நீக்கும் முறை

(iii) தகுந்த உரங்களைப் பயன்படுத்துதல் போன்றவை யாகும்.

இதன் மூலம் மண்வளம் பெருகி, பயிர்களின் உற்பத்தியும் பெருகி, நம் நாட்டின் பொருளாதாரம் முன்னேற்றம் அடையும்.

**கற்றல் அடைவுகள்**

1. இந்தியாவின் தாவர வகைகளுள், தாவரங்களை பாதுகாப்பதன் அவசியத்தையும் தெரிந்து கொண்டது.
2. தற்போது காடுகளின் பாதுகாப்பினை உணர்ந்து நாம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை அறிந்து கொண்டது.
3. தனிமனிதனின் கடமை மரங்களைப் பாதுகாப்பது, வளர்ப்பது என்பதனைப் புரிந்து கொண்டது.
4. மண் வளங்களை மேம்படுத்துவது, மண் அரிப்பினைத் தடுத்து மண்வளங்களைக் காப்பதன் அவசியத்தை உணர்ந்து கொண்டது.



## சுயமதிப்பீடு

**I.** சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்

1. அதிக வெப்பமும் மழையும் உள்ள பிரதேசத்தில் வளரும் தாவரம்

அ. இலையுதிர் தாவரம் ஆ. புல்வெளிகள்

இ. பசுமைமாறாக் காடுகள் ஈ. ஊசியிலைக் காடுகள்

2. இமயமலைச் சரிவுகளில் காணப்படும் காடுகள்

அ. ஊசியிலைக் காடுகள் ஆ. இலையுதிர்க் காடுகள்

இ. டைகா ஈ. பசுமை மாறாக் காடுகள்

3. கங்கைச் சமவெளியில் காணப்படும் தாவரங்கள்

அ. சுந்தரவனக் காடுகள் ஆ. தரைகள்

இ. டைகா ஈ. ஊசியிலைக் காடுகள்

4. கடற்கரையோரங்களில் காணப்படும் மண் வகைகள்

அ. வண்டல் மண் ஆ. சிவப்பு மண்

இ. மணல் ஈ. கரிசல் மண்

5. பருத்திச் சாகுபடிக்கு ஏற்ற மண்

அ. கரிசல்மண் ஆ. வண்டல்

இ. மணல் ஈ. செம்மண்

**II.** கோடிட்ட இடங்களை நிரப்புக

1. ________ காடுகள் 1,000 லிருந்து 2,000 மீட்டர் உயரம் வரை வளரக்கூடியது.
2. தக்காண பீடபூமியில் காணப்படும் தாவரங்கள் __________
3. புறதீபகற்ப இந்தியாவில் காணப்படும் தாவரங்கள் __________
4. கங்கைச் சமவெளியில் உள்ள சதுப்பு நிலக்காடுகள் __________
5. மணலில் மிகக் குறைந்த அளவு __________ உள்ளதால் விவசாயத் திற்கு ஏற்றது இல்லை.

6. வடமேற்குத் தக்காண பீடபூமியில் ________ மண் வகை காணப் படுகின்றது.

**III.** பின்வருவனவற்றைப் பொருத்துக

| | | |
|---|---|---|
| 1. வண்டல் மண் | -- | பருப்பு வகைகள் |
| 2. கரிசல் மண் | -- | தேக்கு |
| 3. சிவப்பு மண் | -- | சுந்தரவனக் காடுகள் |
| 4. பசுமை மாறா தாவரங்கள் | -- | பருத்தி |
| 5. ஈரக்காடுகள் | -- | நெல் |

**IV.** சுருக்கமாக விடையளிக்கவும்

1. இயற்கைத் தாவரம் என்றால் என்ன?
2. ஊசியிலைக் காடுகள் இந்தியாவில் எங்கே காணப்படுகின்றன? ஏன்?
3. கழிமுகங்கள் எவ்வாறு சதுப்பு நிலங்களாக மாறுகின்றன?
4. வண்டல் மண்ணின் குணங்களை விவரி?
5. மணல் தாவர வளர்ச்சிக்கு உகந்தாக இல்லை ஏன்?

**V.** விரிவான விடை தருக

1. இந்தியாவின் மண் வகைகளைப் பற்றி ஓர் கட்டுரை வரைக.
2. காடுகளைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை விளக்குக.
3. மண் வளம் எவ்வாறு பாதுகாக்கப்பட வேண்டும்?

**VI.** செய்முறை பயிற்சி

1. இந்தியப் படத்தில் மண் வகைகளைக் காட்டவும்.
2. நீ வாழ்கின்ற பகுதியில் உள்ள இயற்கைத் தாவரங்களை பட்டியலிடுக.

அலகு - V : இந்தியப் பயிர்கள்

பாடம் 5

# பயிர்கள், உணவுப் பாதுகாப்பு

**கற்றல் நோக்கங்கள்**

1. மாணவர் இந்தியாவில் காணப்படும் இருவகை நிலத் தோற்றங்களை அறியும் திறனை வளர்த்தல்.
2. மாணவர் தீபகற்ப இந்தியப் பயிர்கள் பற்றி கற்றுக் கொள்ளல்.
3. மாணவர் புறதீபகற்ப இந்தியப் பயிர்கள் பற்றி அறிந்து கொள்ளல்.
4. மாணவர் ஒவ்வொரு பயிரும் வளர்வதற்கேற்ற சூழ்நிலைப் பற்றி கற்றுக் கொள்ளல்.
5. மாணவர் ஒவ்வொரு மாநிலத்திலும் அதிகமாக உற்பத்தியாகும் பயிர்கள் பற்றி தெரிந்து கொள்ளல்.

## வேளாண் பயிர்கள்

நமது நாடு அடிப்படையில் ஒரு விவசாய நாடு. நமது நாட்டில் 47 விழுக்காட்டு மக்கள் வேளாண் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். மனிதன் உயிர் வாழ்வதற்கு உணவு அவசியம். நம் உணவில் பெரும்பாலானவற்றை நாமே உற்பத்தி செய்து கொள்கின்றோம்.

பல வகையான மண் வளத்தாலும், வேறுபட்ட பருவ நிலைகளாலும், மிகுதியான நிலப்பகுதி விவசாயத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கின்ற காரணத்தாலும் ஒவ்வொரு வருடமும் இந்தியா தேவையான பயிர்களை விளைவிப்பதில் ஒரு தனி இடத்தை வகிக்கின்றது. இந்தியாவில் நிலவும் சூழலுக்கேற்ப

உணவுப் பயிர்களின் வகைகள் மாறுகின்றன. பயிர்களின் வகைகளுக்கேற்ப மக்களின் உணவு பழக்கவழக்கங்களும் மாறுபடுகின்றன.

இந்தியா பன்மை நிலைத்தோற்றங்களைக் கொண்ட நாடு. எனவே, இங்கு பல்வேறு வகையான பயிர்கள் விளைகின்றன. தீபகற்ப இந்தியாவில் அரிசி முதன்மை உணவாகவும், நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய், கடலை எண்ணெய் முதலியன சமையல் எண்ணெய் களாகவும் பயன்படுகின்றன.

புறதீபகற்ப இந்தியாவில் கோதுமை முதன்மை உணவாகவும், கடுகு எண்ணெய் சமையல் எண்ணெ யாகவும் பயன்படுகின்றன. நமது நாட்டில் விளையும் பயிர்கள் இடத்திற்கு இடம் வேறுபடுவதற்கான காரணங்களை இனி விரிவாகக் கற்றறிவோம்.

இந்தியாவில் நெல், கோதுமை, தினை வகைகள், பருப்பு வகைகள், கரும்பு, எண்ணெய் வித்துக்கள், பானப் பயிர்கள் (Beverages), இழைப்பயிர்கள் (Fibre Crops) எனப் பலவகையான பயிர்கள் பயிரிடப்படுகின்றன. இப்பயிர்கள் யாவும் அவற்றிற் கேற்ற தட்பவெப்ப நிலையுள்ள இடங்களில் உற்பத்தி செய்யப் படுகின்றன. இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் பயிர்களை நிலத்தோற்றப் பிரிவினை வைத்து இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

(i) தீபகற்ப இந்தியப் பயிர்கள்

(ii) புறதீபகற்ப இந்தியப் பயிர்கள்

## 1. தீபகற்ப இந்தியப் பயிர்கள்

தீபகற்ப இந்தியாவில் நெல், கரும்பு, தினை வகைகள், பருப்பு வகைகள், எண்ணெய் வித்துக்கள், காப்பி, பருத்தி முதலியவை முக்கியமான சாகுபடிப் பயிர்களாகும்.

முதன்மை உணவுப் பயிரான நெல் விளைவதற்கு சற்று சிறப்பான சூழ்நிலைகள் தேவைப்படுகின்றன. கரும்பு, நெல்



விளையும் இடங்களில் எளிதில் விளையும். தினை வகைகள், பருப்பு வகைகள், எண்ணெய் வித்துக்கள் முதலானவை வறண்ட சூழ்நிலையிலும் வளரக்கூடிய பயிர்களாகும். காப்பிப் பயிரானது மலைச்சரிவுகளிலும், பருத்தி கரிசல் மண் பகுதிகளிலும் செழித்து வளரக்கூடியவை. இந்தியாவில் இப்பயிர்களுக்கேற்ற சூழ்நிலை காணப்படுவதால் இவை யாவும் தீபகற்ப இந்திய நிலப்பகுதிகளில் அதிகமாகச் சாகுபடி செய்யப்படுகின்றன.

### (i) நெல்

நெல் ஒரு நன்செய் பயிராகும். நெல் சாகுபடிக்கு பரந்த நிலப்பரப்பு, அதிக வெப்பம், அதிக மழை, வளமான மண் ஆகியவை அவசியம். நெற்கதிர்கள் வளரும் பருவத்தில் வயல்களில் நீர் தேங்கியிருத்தல் மிகவும் இன்றியமையாதது. அதே போல் நெற்கதிர்கள் முதிர்ந்த பின் அறுவடை செய்யும் வரை, வயல்களில் ஈரமான மண்ணும், வறண்ட காலநிலையும் நிலவ வேண்டும்.

மலைப் பகுதிகளில் மழையை மட்டும் நம்பி நெல் சாகுபடி நடைபெறும். கொல்லிமலை இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

இந்தியாவின் கிழக்குக் கடற்கரைச் சமவெளி நெற்பயிர் சாகுபடிக்கு ஏற்ற நிலப்பரப்பாகும். இப்பகுதியில் மார்ச் முதல் செப்டம்பர் வரை ஏறக்குறைய ஏழு மாதங்களுக்கு அதிக வெப்பம் நிலவுகின்றது. இது நெல்பயிர் வளரத் தேவையான ஒரு காலநிலை, வடகிழக்குப் பருவக்காற்றினால் நெற்பயிருக்குத் தேவையான மழைப்பொழிவும் கிடைக்கின்றது. மேலும் இந்திய ஆறுகளான காவிரி, கிருஷ்ணா, கோதாவரி, மகாநதி ஆகியவற்றில் கட்டப்பட்டுள்ள அணைகளிலிருந்தும் குழாய் கிணறுகள், ஏரிகள் மூலமாகவும் நெல் விளைச்சலுக்குத் தேவையான நீர் கிடைக்கின்றது.

கிழக்குக் கடற்கரைச் சமவெளியானது ஆறுகளினால் தோற்றுவிக்கப்பட்ட செழிப்பான வண்டல் மண் கொண்ட

டெல்டாப் பகுதிகளை உள்ளடக்கியது. எனவே இப்பகுதி நெற்பயிர் சாகுபடிக்கு ஏற்றது.

கிழக்குக் கடற்கரைச் சமவெளி தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், ஒரிசா ஆகிய மாநிலங்களின் கிழக்குப் பகுதிகளில் உள்ளது. ஆதலால் இம்மாநிலங்கள் நெற்பயிர்ச் சாகுபடியில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இந்தியாவின் நெற் சாகுபடியில் ஆந்திர மாநிலம் முதல் இடத்தையும், தமிழ்நாடு இரண்டாம் இடத்தையும் வகிக்கின்றன.

தீபகற்ப இந்தியாவின் கிழக்குக் கடற்கரையில் அமைந்துள்ள தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், ஒரிசா மாநிலங்களின் கிழக்குப் பகுதிகளில் நெல் சாகுபடி நடைபெறுகின்றது.

உங்களுக்குத் தெரியுமா?

தமிழ்நாட்டின் நெற்பயிர் சாகுபடி

தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம் தஞ்சை மாவட்டம். இங்கு சம்பா, குறுவை, தாளடி ஆகிய நெல் வகைகள் பயிரிடப்படுகின்றன. சம்பா ஒரு நீண்டகாலப் பயிர். அது ஏறத்தாழ 5 அல்லது 6 மாத காலத்தில் அறுவடையாகும். குறுவை 3, 4 மாத காலத்தில் அறுவடையாகக் கூடிய குறுகிய காலப் பயிர். நெற்பயிர் அறுவடைக்குப் பின் முந்திய பயிரின் தாள் பகுதியையும் சேர்த்து உழுதுவிட்டு அடுத்துப் போடப்படும் நெற்பயிர் **தாளடி** எனப்படும். நெற்பயிர் அறுவடைக்குப் பின் வயல்களில் உளுந்து, துவரை, பயறு போன்ற பருப்பு வகைகள் பயிர் செய்யப்படும். பின்னர் நிலம் ஓரிரண்டு மாதங்களுக்குத் தரிசாக விடப்படும். நெற்பயிர் அறுவடையை ஒட்டியே ஜனவரி மாதத்தில் அறுவடை விழாவானது பொங்கல் விழாவாகக் கொண்டாடப் படுகிறது. நவீனப் பயிர் முறைகளின் தாக்கத்தினால் அறுவடை காலங்கள் மாறி வருகின்றன.

தஞ்சை மாவட்டத்தில் ஆடுதுறையில் நெல்லுக்கான வட்ட ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்பட்டது. ஆடுதுறை 27






படம் 5.1

(ADT *27), 50* (ADT *50)* போன்ற நெல் வகைகள் இந்நிலையத்தின் கண்டு பிடிப்புகளாகும். இந் நெற்பயிர் கதிர் முற்றிய பிறகும், நிலத்தில் சாயாத வண்ணம் நிற்பதால் விவசாயிகளிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது *(படம் 5.1).*

## 2. கரும்பு

நெற்பயிரினைப் போன்றே கரும்பும் ஒரு நன்செய் பயிர். கரும்பு வளரும் பருவத்தில் அதிக நீரும் அதிக வெப்பநிலையும் தேவைப்படுகின்றன. வெப்பம் அதிகரிக்க அதிகரிக்க கரும்பின் வளர்ச்சி துரிதமாகும். கரும்பு வளர எட்டு மாதக் காலத்திற்கு நீர் தேவை. கரும்பு வண்டல் மண்ணிலும், கரிசல் மண்ணிலும் நன்கு வளரும். இது ஒரு வருடப் பயிர். பத்து மாதத்திற்கு அறுவடைக்கு வரும்.

தீபகற்ப இந்தியாவின் கடற்கரைச் சமவெளியில் உள்ள டெல்டாப் பகுதிகளில் கரும்பு வளர ஏற்ற சூழ்நிலை நிலவுகின்றது. இந்தியாவின் நீண்ட கோடைக்காலமும், மிதமான மழைப் பொழிவும் நீர்ப்பாசனமும் கரும்பு வளர உதவி புரிகின்றன.

கரும்பில் சுக்ரோஸ் என்ற இனிப்புச் சத்து இருக்கின்றது. கரும்பு முதிர்ந்த பின் அதிக மழைப்பொழிவு ஏற்படின் அதிலுள்ள சுக்ரோஸின் அளவு குறைந்து, கரும்பிலிருந்து பெறப்படும் சர்க்கரையின் அளவும் குறைகின்றது. சரியான அளவு நீர் இருப்பின் சுக்ரோஸ் அதிகமாக இருக்கும். எனவே, குறைந்த நிலப்பரப்பில் அளவான நீர்ப்பாசன உதவியுடன் பயிராகும் கரும்பில் அதிக அளவு சர்க்கரை உற்பத்தி செய்ய முடியும். தென் குஜராத், மஹாராஷ்டிரம், கர்நாடகா, தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் கரும்புச் சாகுபடி நடைபெறுகின்றது. குஜராத், தமிழ்நாடு மற்றும் ஆந்திரப்பிரதேச மாநிலங்களில் நீர்ப்பாசன வசதியுடன் கரும்புச் சாகுபடி நடைபெறுகின்றது. கர்நாடக மாநிலத்தின் மண்டியா மாவட்டம், காவிரியின் கரையோரத்தில் அமைந்துள்ளது. இங்கு கரும்பு நன்கு விளைகின்றது.



உங்களுக்குத் தெரியுமா?

கரும்புச் சாகுபடி

கரும்பை ஒரு முறை விதைத்து அறுவடை செய்யும்போது முழுவதுமாக வெட்டாமல், அடிப்பகுதியை வயலிலேயே விட்டுவிடுவர். அதிலிருந்து மீண்டும் வளரும் கரும்பை, கட்டைக் கரும்பு (rattoon) என்பர். ஹவாய்த் தீவுகளில் ஒரு சாகுபடியில் இருந்து ஏழு-எட்டு முறை கரும்பு வளர்ந்து அறுவடையாகும். இந்தியாவில் இரண்டு - மூன்று முறையே கட்டைக் கரும்பு வளருகின்றது. கட்டைப்பயிர் முறையால் ஒவ்வொரு ஆண்டும் விதைக்கும் செலவும், காலமும் குறையும்.

## 3. தினை வகைகள், பருப்பு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துக்கள்

தினை வகைகள், பருப்பு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துக்கள் ஆகியவை புன்செய்ப் பயிர்களாகும். இப்பயிர்களுக்கு அதிக நீர் தேவைப்படாது. இவை வளம் குறைந்த மண்ணிலும் வளரும். இந்தியாவின் தக்காணப் பீடபூமியில் நிலவும் சூழ்நிலை இப்பயிர்களுக்கு ஏற்றது. தக்காணப் பீடபூமியில் தென்மேற்குப் பருவக்காற்று, வறண்ட காற்றாக வீசுவதால், இங்கு மழை மிகக் குறைவு, மேலும், கோடைக்காலத்தில் வறட்சி நிலவுகின்றது. இப்பகுதியில் வளம் குன்றிய செம்மண் பரவியுள்ளது.

ஆகவே இப்பகுதியில் வறட்சியைத் தாங்கக்கூடிய பயிர்களான

| | | |
|---|---|---|
| தினை வகைகள் | : | கேழ்வரகு, சோளம், கம்பு |
| எண்ணெய் வித்துக்கள் | : | கடுகு, நிலக்கடலை, எள், ஆமணக்கு, இலுப்பை. |
| பருப்பு வகைகள் | : | துவரை, உளுந்து, பயிறு போன்றவை நன்கு பயிர் ஆகின்றன. |

தக்காணப் பீடபூமியின் பெரும்பகுதி கர்நாடக மாநிலத்தில் அமைந்துள்ளதால் இங்கு தினைப்பயிர் மற்றும் பருப்பு வகைகள் நன்கு பயிராகின்றன. தமிழ்நாடு மற்றும் ஆந்திரப் பிரதேசத்தில் எண்ணெய் வித்துக்கள் அதிகமாகப் பயிராகின்றன.

பீடபூமிப் பகுதியைத் தவிர கேரளாவின் கடற்கரையோரப் பகுதிகளிலும் தென்னை, முந்திரி போன்ற எண்ணெய் பயிர்கள் அதிகமாக விளைவிக்கப்படுகின்றன.

தக்காணப் பீடபூமி கர்நாடகம், தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களை உள்ளடக்கியுள்ளதால் இங்கு தினைப் பயிர்களும் எண்ணெய் பயிர்களும் சாகுபடி செய்யப்படுகின்றன.

## 4. பருத்தி

பருத்தி இந்தியாவின் முதன்மையான நாற்பயிர். பருத்தி அதிக வெப்பத்திலும், மிகுந்த நீர் வசதியிலும், வளமான மண்ணிலும் நன்கு விளையும். தக்காணப் பீடபூமியின் வட மேற்குப் பகுதிகளான மகாராஷ்டிரம், குஜராத்தின் தென்பகுதி ஆகிய பகுதிகளில் வளமான கரிசல் மண் பரவியுள்ளது. இம் மண்ணில் பருத்தி செழித்து வளருவதால் இதை ‘‘பருத்தி மண்’’ என்றும் கூறுவர்.

இப்பீட பூமியில் நிலவும் உயர் வெப்பமும், பருத்தி வளர ஏற்றது. மகாராஷ்டிரம், குஜராத், தமிழ்நாடு மேற்கு மற்றும் தென் மாவட்டங்கள் ஆகிய பகுதிகளில் பருத்தி உற்பத்தி செய்யப்படுகின்றன. மகாராஷ்டிரம் மிக அதிகமாக பருத்தி உற்பத்தி செய்யும் மாநிலமாகும்.

மகாராஷ்டிரம், குஜராத் மாநிலங்களில் கரிசல்மண் பகுதியிலும் தமிழ்நாட்டின் மேற்கு மற்றும் தெற்கு மாவட்டங் களிலும் பருத்தி பயிர் சாகுபடி ஆகின்றது.

## 5. காப்பி

காப்பி ஒரு பணப்பயிர். காப்பி விளைய மிதமான வெப்பமும், நிழலும், சீரான மழைப்பொழிவும் தேவை.



பொழியும் மழைநீர் வேர்களில் தங்கக்கூடாது. காப்பிச் செடிகள் மலைச்சரிவுகளில் நன்கு விளைகின்றன. உயரத்தின் காரணமாக மலைகளில் வெப்பம் குறைவாக இருப்பதாலும், மழைநீர் மலைச்சரிவுகளில் வடிந்து விடுவதாலும் இங்கு காப்பி நன்கு விளைகின்றது.

இந்தியாவின் மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளான கர்நாடகம், கேரளா, தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் காப்பி வளர ஏற்ற சூழ்நிலைகள் காணப்படுகின்றன. கர்நாடகத்தில் குடகு மலையும், தமிழ்நாட்டில் பழனி மலையும் காப்பிப் பயிர் வளரும் முக்கிய பகுதிகளாகும். இந்தியாவில் உற்பத்தியாகும் காப்பியில் 80 விழுக் காட்டிற்கு மேல் கர்நாடகாவில் விளைகின்றது.

உங்களுக்குத் தெரியுமா?

**காப்பிப் பயிர் சாகுபடி**

இந்தியாவில் காப்பிப் பயிரிடுதல் கர்நாடகாவில்தான் முதலில் தொடங்கியது. பாபாபுதான் என்னும் முஸ்லீம் பெரியவர், மெக்காவிற்கு புனித யாத்திரை சென்று திரும்பிய போது, காப்பிச் செடியைக் கொண்டு வந்து குடகுத் தொடரின் ஒரு பகுதியில் அதை நட்டார். அங்குள்ள காலநிலை காப்பிக்கு ஏற்றதாக இருந்ததால் காப்பிப் பயிரிடல் விரைவில் சிறப்பாக வளர்ச்சி பெற்றது. அந்த முஸ்லீம் பெரியவரின் நினைவாக குடகு மலையின் ஒரு பகுதியானது பாபாபுதான் குன்றுகள் என்றழைக்கப்படுகின்றன.

காப்பியைத் தவிர தேயிலையும் இந்தியாவில் பயிரா கின்றது. காப்பியை விடக் குறைந்த வெப்பமே தேயிலைக்குத் தேவை. எனவே மலைகளின் உயர் பகுதிகளில் தேயிலை பயிராகின்றது.

கேரளாவின் வயநாடு, கண்ணன்தேவன் பகுதிகளிலும் தமிழ்நாட்டின் நீலகிரி, ஆனைமலையிலும் தேயிலைச் சாகுபடி செய்யப்படுகின்றது.

காப்பி, தேயிலைத் தவிர வேறு பல பயிர்களும் இந்தியாவில் பயிராகின்றன. அவை புகையிலை, ரப்பர் மற்றும் நறுமணப் பயிர்களாகும். புகையிலை ஆந்திரா மற்றும் குஜராத் மாநிலங்களின் கடற்கரையோரப் பகுதிகளில் பயிரிடப்படு கின்றது. ரப்பர் மற்றும் நறுமணப் பயிர்களான மிளகு, ஏலக்காய், இலவங்கம் போன்றவை கேரளாவின் மேற்கு மலைத்தொடரின் சரிவுகளில் பயிரிடப்படுகின்றன.

## 2. புறதீபகற்ப இந்தியப் பயிர்கள்

புறதீபகற்ப இந்தியப் பயிர்களாவன :

i) கோதுமை

ii) நெல்

iii) கரும்பு

iv) தினைப்பயிர்கள், பருப்பு வகைகள், எண்ணெய் வித்துக்கள்

v) தேயிலை

vi) சணல்

### 1. கோதுமை

கோதுமை ஒரு நன்செய் பயிர். முதன்மைப் பயிரான கோதுமை விளைவதற்கு பரந்த நிலப்பரப்பு, மிதவெப்பம், மிதமழை, வளமான மண் ஆகியவை அவசியம். கோதுமை நீண்ட வளர்பருவம் கொண்ட பயிர். கோதுமை வளரும் பருவத்தில் பனியற்ற நிலையும், மிதவெப்பமும் தேவை. புறதீபகற்ப இந்தியாவில் கங்கைச் சமவெளி, அதன் வடமேற்கே அமைந்துள்ள சட்லஜ் சமவெளி ஆகிய பகுதிகளில், தென்மேற்கு பருவக்காற்றினால் பெய்யும் மித மழையினால் கோதுமைச் சாகுபடி நன்கு நடைபெறுகின்றது. சட்லஜ், கங்கை ஆறுகளால் கொண்டு வரப்பட்ட வண்டல் மண் இங்கு படிந்துள்ளது. சட்லஜ் நதியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பக்ராநங்கல் அணையின் மூலமாக நீர்ப்பாசன வசதியும் கிடைக்கின்றது.



சட்லஜ் சமவெளியில் அமைந்துள்ள பஞ்சாப், ஹரியானா, உத்திரப் பிரதேச மாநிலங்களில் கோதுமைச் சாகுபடி முதன்மை யானதாக விளங்குகின்றது. காஷ்மீர் பள்ளத்தாக்கு, ஹிமாசலப் பிரதேசத்திலும் கோதுமை சாகுபடி நடைபெறுகின்றது.

பஞ்சாப் கோதுமைச் சாகுபடியில் இந்தியாவில் முதல் இடத்தையும், உத்திரப் பிரதேசம் இரண்டாம் இடத்தையும் வகிக்கின்றன.

உங்களுக்குத் தெரியுமா?

**பஞ்சாபில் கோதுமைச் சாகுபடி**

இந்தியாவின் கோதுமைக் களஞ்சியமாய் விளங்குவது பஞ்சாப், இங்கு கோதுமை இரண்டு பருவங்களில் பயிர் செய்யப்படுகின்றது.

(i) குளிர்காலக் கோதுமை

(ii) வசந்தகாலக் கோதுமை

குளிர்காலக் கோதுமை நீண்ட வளர்பருவம் கொண்டது. அது குளிர்காலத்தின் தொடக்கத்தில் விதைக்கப்பட்டு, குளிர்ப் பருவம் முடிந்த பின்புதான் முளைக்கத் துவங்கும். அதுவரை முளைக்காமல் நிலத்திலேயே புதைந்திருக்கும். குளிர்காலக் கோதுமை மெதுவாக வளர்ந்து முதிர்வதால் அதன் தரம் உயர்ந்தது. இது 6 மாத காலப்பயிர்.

வசந்தகாலக் கோதுமை குறுகிய காலப்பயிர். இது குறுகிய காலத்தில் முதிர்வதால் குளிர்கால கோதுமையைவிட கடினமுள்ளது. இது 4 மாத காலப் பயிர். மார்ச் மாதத்தில் கோதுமையின் அறுவடையையொட்டியே ஹோலிப் பண்டிகை கொண்டாடப்படுகின்றது.

### 2. நெல்

நெல் வெப்பமண்டலப் பயிர். அதிக மழைப் பொழிவு காரணமாகத் துணை வெப்பமண்டலத்திலும் பயிராகும். புற தீபகற்ப இந்தியாவில் கங்கைச் சமவெளியின் கிழக்குப் பகுதி,

ஹூக்ளி சமவெளி ஆகிய பகுதிகளில் நெல் விளையத் தேவையான வண்டல் மண்ணும் தென்மேற்கு பருவக்காற்றினால் மழைப்பொழிவும் உள்ளன. எனவே இங்கு நெற்பயிர் செழித்து விளைகின்றது. இந்தியாவிலேயே அதிக நெல் சாகுபடி நடைபெறும் மாநிலம் மேற்கு வங்காளம். இதைத் தவிர அஸ்ஸாமிலும் ஓரளவு நெல் விளைகின்றது.

### 3. கரும்பு

நெற்பயிர் விளையும் இடங்களில் கரும்பும் விளையும்.

புறதீபகற்ப இந்தியாவின் கங்கைச் சமவெளியிலுள்ள உத்திரப்பிரதேசம், பீகார், மேற்கு வங்காளம் ஆகியவற்றில் கரும்பு நன்கு சாகுபடி செய்யப்படுகின்றது. கரும்பு உற்பத்தியில் இந்தியாவில் முதலிடம் வகிப்பது உத்திரப் பிரதேசம். தீபகற்ப இந்தியாவை விட இங்கு விளையும் கரும்பில் சுக்ரோஸ் குறைவாக உள்ளது. எனவே, உற்பத்தியாகும் சர்க்கரையின் அளவும், இனிப்பும் குறைவாகவே உள்ளது.

### 4. தினைப்பயிர்கள், பருப்பு வகைகள்

தீபகற்ப இந்தியாவில் பயிராகும் தினைப் பயிர்களைவிட, புறதீபகற்ப இந்தியாவில் உற்பத்தியாகும் தினைப்பயிர்கள் சத்துமிக்கவை. இங்கு விளையும் பார்லி, மக்காச்சோளம் போன்றவை குளிர்கால நிலைகளைத் தாங்கக்கூடியவை. பஞ்சாப், அரியானா, மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் தினைப்பயிர்களும், மத்தியப் பிரதேசம், பீகார், மேற்கு வங்காளம் ஆகிய பகுதிகளில் பருப்பு வகைகளும் பயிராகின்றன. மத்தியப் பிரதேச மாநிலம் பருப்பு வகைகள் உற்பத்தியில் முதலிடம் வகிக்கின்றது.

### 5. தேயிலை

இமயமலைத் தொடரின் உயரமான பகுதிகளில் அமைந்துள்ள அஸ்ஸாம் மாநிலம், தேயிலையை அதிகமாகச் சாகுபடி செய்கின்றது. தவிர, மேற்கு வங்காளத்திலுள்ள டார்ஜிலிங்கிலும் தேயிலைச் சாகுபடி சிறப்பாக நடைபெறுகின்றது.



### 6. சணல்

சணல் உற்பத்தியில் மேற்கு வங்காளம் முதல் மாநிலமாக உள்ளது. காஷ்மீர் பள்ளத்தாக்கு, ஆரஞ்சு, ஆப்பிள், செர்ரி ஆகிய பழவகைகளுக்குப் பெயர் பெற்றது. பஞ்சாபில் விளையும் நீண்ட இழைப்பருத்தி குறிப்பிடத்தக்க சிறப்பு வாய்ந்தது.

**நீர்ப்பாசனம், வேளாண்மை மற்றும் உணவு உற்பத்தித் திறன். (Irrigation, Agriculture and Food Production Potential)**

வேளாண் தொழிலே மிகப்பெரிய நீர் நுகரும் துறையாக இருப்பதுடன், மொத்த நீர்ப் பயன்பாட்டில் 80 விழுக் காட்டினை நுகருவதாகவும் உள்ளது. மனித இனத்திற்குத் தேவையான உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்ற ஒரே அடிப்படையுடன், நிலங்கள் நீர்ப்பாசனத்தில் நூற்றாண்டுகள் பலவாகவே இருந்து வருகின்றன. எனவே, நீர்ப்பாசனமே தற்போது மிகப் பெரிய நீர் நுகரும் துறையாயிற்று. நீர்ப் பாசனத்திரள் 1951-ம் வருடம் 22.6 மில்லியன் ஹெக் டேர்களாகவும் உணவு உற்பத்தி 50 மில்லியன் டன்களாகவும் இருந்தன. தற்போது உணவு உற்பத்தி நான்கு மடங்காகி 200 மில்லியன் டன்களாக உயர்ந்துள்ளதோடு, நீர்ப்பாசனத்திரளும் 100 மில்லியன் ஹெக்டேர்களாக உயர்ந்துள்ளது. இந்திய நீர்வள அமைச்சகத்தின் சமீபத்திய கணக்கின்படி இந்தியாவின் ஒட்டுமொத்த நீர்ப்பாசனத் திரள் 139.89 மில்லியன் ஹெக்டேர்க ளாகும், இவற்றுள் முதன்மை மற்றும் நடுநிலை நீர்ப்பாசனம் 58.46 மில்லியன் ஹெக்டேர்களும் சிறு நீர்ப்பாசனம் 81.43 மில்லியன் ஹெக்டேர்களும் அடங்கும். எனினும் இன்னொரு திருத்தப் பெற்ற கணிப்பின்படி ஒட்டு மொத்த நீர்ப்பாசனத் திரள் 113.50 மில்லியன் ஹெக்டேர்கள் மட்டுமேயாகும். 2025-ம் வருடத்திய மக்கட் தொகையின் உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய, ஒட்டு மொத்த நீர்ப்பாசனத் திரளினை அவ் வருடத்திற்குள் எய்திவிட வேண்டும். இல்லையேல் உணவுப் பாதுகாப்பில் பிரச்சனைகள் எழ வாய்ப்புகள் உண்டு.

### உணவுப் பாதுகாப்பு

உணவுப் பாதுகாப்பு என்பது தரமான சத்தான உணவு தனக்குக் கிடைக்கும் என்ற எல்லோருக்குமான பாதுகாப்பு

உணர்வே ஆகும். இது நாட்டின் உணவு உற்பத்தியையும் இறக்குமதியையும் சேர்த்து மக்களுக்குக் கிடைக்கும் மொத்த உணவினை நுகரும் சக்தியினைப் பொருத்தது. இந்தியா உணவு உற்பத்தியில் தன்னிறைவைப் பெற்று இருந்தும் கூட, உணவுப் பாதுகாப்பு போதுமானதாக இல்லை. நாட்டின் பொருளாதாரத் தொழில்கள், சேவைகள் சரியாக இருந்தால், நாட்டில் வேலையும், வேலைக்கு ஏற்ற ஊதியமும் கிடைத்தால், நுகரும் திறன் கூடும். நுகரும் திறன், உணவு அளிப்பு (Food Supply) மட்டும் அல்லாமல் சரியாகப் பயன்படுத்தக்கூடிய, உணவைப் பற்றிய கல்வியறிவு அவசியம். தரமான, சத்தான உணவை உண்பதற்கு ஏற்ற உணவுப் பாதுகாப்பினைப் பெற ஓர் ஒருங்கிணைந்த முயற்சி தேவைப்படுகின்றது.

நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சியே உணவுப் பாதுகாப்பினை அளிக்க வல்லது. உலகில் 840 மில்லியன் மக்கள் உணவுப் பாதுகாப்பின்றி வசிக்கின்றனர். அதில் 799 மில்லியன் மக்கள் வளரும் நாடுகளில் உள்ளனர். எனவே, 1996-ஆம் ஆண்டு கூடிய உணவு உற்பத்தியின் உச்ச மாநாடு உலகில் 2015க்குள் உணவு பாதுகாப்பினைக் கொண்டுவரத் தீர்மானம் இயற்றியுள்ளது. ‘இது சாத்திய மாகுமா? என்பது போகப் போகத்தான் தெரியும்.

## இந்தியாவில் உணவுப் பாதுகாப்பு

இந்தியா தற்பொழுது பலதரப்பட்ட பொருளாதார நிலைகளில் உள்ள மக்களைக் கொண்டுள்ளது. அதாவது உணவின்றி பசியில் வாழும் கவலையே உருவான மக்கள் ஒருபுறமும், மாறாக உபரியில் வாழும் மக்கள் ஒரு புறமும் இருக்க, இவற்றிற்கிடையே மலைபோல் கிடங்குகளில் குவிந்து கிடக்கும் உணவுப் பொருட்களின் சேகரிப்பு ஒருபுறமுமாக உள்ள ஒரு நிலைமையை எய்தியுள்ளது. உணவுப்பொருட்கள் இந்திய உணவுக் கழகத்தில் (F.C.I.) சேகரித்து வைக்கப்பட்டுள்ளன. இங்கு எப்பொழுதும் அதிகபட்சமான, அதாவது 62 மில்லியன் டன்களுக்கு மேல்,



உணவுப் பொருட்கள் உள்ளன எனலாம். இது ஓராண்டிற்கு நமது மக்களுக்குத் தேவையான சுமார் 20 மில்லியன் டன்களைவிட அதிகமேயாகும். எனவே, போதுமான அளவிற்கு உணவுப் பொருட்கள் சேமித்து வைக்கப் பட்டுள்ளன என்பதனை இது உறுதி செய்கின்றது. இருப்பினும், தற்பொழுதும்கூட, சுமார் 200 மில்லியன் மக்களுக்கு உணவு கிடைக்கின்ற நிலைமையும் சுமார் 50 மில்லியன் மக்களுக்கு பசி, பட்டினியின் கொடுமைக்கு இன்றும் ஆளாகி வருகின்ற நிலைமையும் உள்ளது. இதன் விளைவாக பலர் இறக்கின்ற நிலைமையும் காணப்படு கின்றது. இந்த மோசமான நிலைமை மக்களுக்கு மேலும் நீடிக்காமல் இருக்க தற்பொழுதுள்ள உணவுப் பாதுகாப்பு முறையை சிறப்பாகச் செயல்படுத்துதல் அவசியமாகும்.

## எதிர்கொள்ள வேண்டிய சவால்

உணவுப்பாதுகாப்பே ஒரு சவால்தான். எல்லோராலும் பெருமையாகப் பேசப்படும் உணவுப் பாதுகாப்புக் கொள்கை யின் முக்கிய நோக்கமானது மக்களுக்குக் குறைந்த விலையில் உணவுப் பொருட்கள் வழங்குவதும், உணவே கிடைக்கப் பெறாத, வறுமையில் வாடும் மக்களுக்கு உணவு கிடைக்கச் செய்வதுமே ஆகும். மேலும் இக்கொள்கையின்படி - வேளாண் பொருட்களின் உற்பத்தியை அதிகரிக்கச் செய்ய, பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒரு காலத்தில் இந்தியா உணவுப் பொருட்களை இறக்குமதி செய்தது என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

மற்றும் உணவுதானியங்களான அரிசி, கோதுமை ஆகிய வற்றினை கொள்முதல் செய்வதற்கும், அவற்றினைப் பாதுகாப்பதற்கும் ஆகும் செலவினையும் சேர்த்துதான் உணவுப் பொருட்களின் விலை நிர்ணயம் செய்யப் படுகின்றது. பொதுவாகக் கூறினால் உணவுப் பொருட் களைக் கொள்முதல் செய்து இருப்பில் வைப்பதும், சேமிக்கப்பட்ட பொருட்களை மக்களுக்கு மலிவு விலையில் பொது வழங்கு முறையில் (PDS) அளிப்பதும் இந்திய உணவுக் கழகத்தின் முக்கிய நோக்கங்கள் ஆகும்.

## இடுபொருள் மானியங்கள் (INPUT SUBSIDIES)

சில வருடங்களாகவே, உணவுப் பொருட்களின் விலை ஏழை மக்களின் வாங்கும் திறனுக்கு ஏற்ப நிர்ணயம் செய்யப் படுகின்றது. மேலும் அரசாங்கம் உணவு தானியங்களின் விற்பனையை ஓரளவிற்குக் குறைத்து கட்டுப்பாட்டிற்குள் வைத் துள்ளது. அதாவது வேளாண் மக்களின் உணவு தானியங்களின் ஒரு பகுதியைக் கொள்முதல் செய்கின்ற அருகிலுள்ள சந்தைப் பகுதிகளில் தானியங்களின் விலை குறைவாக உள்ளது எனலாம். இதனைச் சரிக்கட்டும் வகையில், அவர்களுக்கு வேளாண்மைத் தொடர்பான உரம், நீர்மின்சக்தி, நீர் போன்றவற்றினைப் பெறுவதற்காக மானியம் வழங்கப்படுகின்றது. இப்பொழுது இந்த மானிய அளவு நெகிழும் தன்மையைப் பெற்றிருக்கின்றது.

அதிகப்படியான நீர்பாய்ச்சுதலால் நீர் தேங்கும் நிலை யையும், அதிகப்படியான உரமிடுதலால் உப்புத் தன்மை யையும் ஏற்படுத்துவதோடு மண்ணிலுள்ள சத்தும் குறைக்கப் படுவதால், முடிவாக மண்ணின் சத்து குறைந்து விடுகின்றது. மானியத் தொகை அதிகமாக வழங்கப் பட்டும் கூட அரசு முதலீடு கிடைக்காததால் வேளாண்மைத் தொடர்பானப் பலதேவைகளைச் சரிவரச் செய்ய இயலாமல் வேளாண் உற்பத்தி குறைந்து வருகின்றது.

## வழங்கு விலை (ISSUE RICE)

நாட்டு மக்களைப் பொருளாதார நிலையின் அடிப் படையில் இரு பிரிவாகப் பிரிக்கலாம். ஒன்று வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்கள் (Below Poverty Line - BPL) மற்றொன்று வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ளவர்கள் (Above Poverty Line - APL). உணவுப் பொருட்களின் விநியோக விலை யானது மேற்குறிப்பிட்ட இரு பிரிவினருக்கும் ஏற்ப நிர்ணயம் செய்யப்படுகின்றது. எனினும், இந்த முறை முற்றிலும் சரியென்று கூறுவதற்கு இல்லை என்றாலும், வறுமைக் கோட்டினை அளவிடும் முறை சரிவரச் செய்யப்படாததால், உண்மையில் வறுமைக் கோட்டிற்குக் கீழிருக்கும் பலரும் விடுபட்டுப் போகின்றனர். அதுமட்டுமல்லாமல், வறுமைக் கோட்டிற்கு மேலிருக்கும் சிலரும் தம்மை வறுமைக்



கோட்டிற்குள் சேர்த்துக் கொண்டு மலிவு விலைப் பொருட்கள் உண்மையில் கிடைக்க வேண்டியவருக்குக் கிடைக்காமல் போக வழிசெய்கின்றனர். அவ்வாறே வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளவர்க்குக் கிடைக்க வேண்டிய சலுகைகளையும் பறித்துக் கொள்கின்றனர். இதனாலேயே அரசாங்கத்தின் நிதிப்பற்றாக் குறையை குறைக்கும் நோக்கத்தோடு, உணவுப் பொருட்களை வாங்கும் செலவுத் தொகையை குறைப்பதற்காக பொது மக்களுக்கு வழங்கு விலையின் நிர்ணய அளவை அரசாங்கம் கூட்ட வேண்டியுள்ளது. பொதுவாக, பொருளாதாரச் செலவு என்பது தானியங்களைக் கொள்முதல் செய்வதற்கு ஆகும் செலவும் மேலும் குறைந்த காப்பு விலையில் (MSP), மற்றும் உணவுப் பொருள்களின் கொள்முதல், போக்குவரத்துப் பராமரிப்பு ஆகியவற்றிற்கு ஆகும் செலவு போன்றவைகளாகும். பொருளாதாரச் செலவு கூடுதலாக இருப்பதற்கு முக்கியக் காரணம் செயற்கையாக உயர்த்தப் பெற்ற குறைந்த காப்பு விலையின் அதிகரிப்பும் மற்றும் உணவுக் கழகத்தின் திறமையற்ற சில செயல்பாடுகளுமேயாகும். இதனால்தான், வறுமைக் கோட்டிற்கு மேலுள்ள மக்களின் வழங்குவிலையானது (Issue price), வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள மக்களின் விலையைக் காட்டிலும் அதிகமா உள்ளது. அதாவது அவர்களின் (APL) வாங்கும் திறனுக்கு மேலாகவே உள்ளது. இதனால் பொதுவிநியோகம் முறையில் விலையானது மிகவும் சரிகின்றது. பொதுவிநியோக மையங்களில் வழங்கப்படும் பொருட்கள் சில சமயங்களில் தரக்குறைவில் உள்ளதாலும், அவர்கள் மக்களை அணுகுகின்ற முறையில் மக்களுக்கு திருப்தி இன்மையாலும் பெரும்பாலான மக்கள் தற்பொழுது மலிவு விலைக் கடைகளில் வாங்குவதைத் தவிர்த்து கடைகளிலோ, சந்தைகளிலோ வாங்கு வதற்கு முன்வருகின்றனர். சாதாரணக் கடைகளில் தரமானப் பொருட்கள் கிடைக்கப் பெறுவதோடு மிகக் குறைந்த அளவிற்கும், மற்றும் கூடுதலான அளவிற்கும் கூட வாங்குவதற்கு அனுமதி அளித்துள்ளது.

## சந்தைத் தேவை

பொதுவிநியோக முறையில் கிடைக்கப் பெறும் மலிவு விலைப் பொருட்கள், வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள

மக்களின் உணவுப் பொருட்களின் தேவையில் சுமார் 25 விழுக் காட்டினை மட்டுமே பூர்த்தி செய்கின்றது. வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ளவர் கடைகளிலிருந்து பொருட்களை மிகுதியாக வாங்குவதால் தேவைகள் அதிகரிக்கின்றன என்று கூறலாம். மிகுந்த கொள்முதல் அளிப்பினைக் காட்டிலும் அதிகமாக இருக்கும் பட்சத்தில் அதன் விளைவாக விலை உயரும் நிலை உள்ளது. இத்தருணத்தில் ஏழை மக்கள் பாதிப்பிற்கு உட்படுகின்றனர்.

**உழைப்பிற்கு உணவு வழங்கு திட்டம் (Food-for-work scheme)**

ஏழை மக்களின் வாங்கும் திறனை (Purchasing Power) அதிகரிக்கச் செய்யும் நோக்கோடு, உழைக்கும் ஏழை மக்களுக்கு கூலி மற்றும் உணவு தானியங்கள் வழங்கப்படுகின்றன. இத்திட்டம் எதிர்பார்த்த அளவு வெற்றி பெறவில்லை என்றே கூறலாம். மத்திய அரசு உணவு தானியத்திற்குப் பொறுப்பு ஏற்கவும், மாநிலங்கள் நிதிக்குப் பொறுப்பு ஏற்கும் என எதிர் பார்க்கப்பட்டது. ஆனால் மாநிலங்களின் நிதிப்பற்றாக்குறை காரணமாகத் தடங்கல் ஏற்பட்டுள்ளது. பல்வேறு மாநிலங்கள் இத்திட்டத்தினை இன்னும் அமல்படுத்த ஆரம்பிக்கவில்லை என்றே கூறலாம்.

**பரிந்துரைகள் (Suggested Recommendation)**

இயங்கி வரும் உணவு வழங்கு மையங்களில் திறமையற்ற செயற்பாட்டினையும், கையாடல் போன்ற கீழ்த்தரமான செயல்களையும் தவிர்த்து அதிகச் செலவு ஆகாமல், தரமான தானியங்களை வழங்குவதற்கு உத்திரவாதம் அளிக்கும் இடங்களுக்கு வழங்கு மையங்களை மாற்றுதல் அவசியமாகும்.

வருங்காலச் சந்தையும் தடையில்லா வாணிகமும்
**(Futures Market and Free Trade)**

தற்பொழுது நடைமுறையில் உள்ள மானியமும் குறைந்த காப்பு விலையும் மாறுதலுக்கு உட்பட வேண்டும். அடிக்கடி ஏற்படும் விலைமாற்றத்தினைத் தடுக்கவும், விற்பனையில் திருப்தி இல்லாது இருந்து வரும் சிறு



விவசாயிகளைக் காக்கவும் வருங்காலச் சந்தை முறையை உற்சாகத்துடன் பின்பற்றுதல் வேண்டும். தகவல் தொழில் நுட்பத்தின் விளைவால் மிகச் சிறப்பாக இயங்கிவரும் தொலைத்தொடர்பு முறையின் உதவியால் வேளாண் மக்கள் தமது உற்பத்திப் பொருட்களை திருப்தியோடு விற்பனை செய்ய முடிகின்றது. ''பயிர் காப்பீட்டு முறை'' (Crop Insurance Scheme) அமுல்படுத்தப்பட்ட பிறகு வேளாண் மக்களை இயற்கையின் சீற்றத்திலிருந்து காக்கும் வகையில் அரசாங்கமே அவர்களுக்கு காப்பீட்டு சந்தா தொகை யின் பெரும்பகுதியை ஏற்றுக் கொள்கின்றது. இக்காபீட்டுத் திட்டத்தால் உணவு தானியங்களை மாநிலங்களுக்கு இடையே அனுப்புவதற்கான தடை, பரிமாற்றங்கள், ஏற்றுமதி, நிறுவனங்களுக்கு உரித்தான கடன்கள் (Institutional Credit), வர்த்தகக் கடன்கள் ஆகியவற்றிற்கு இருந்த தடைகள் எல்லாம் தளர்த்தப்பட்டன. இந்த தடையில்லா வாணிப முறையினால் உற்பத்தி அளவிற்கும் நுகர்வின் அளவிற்கும் உள்ள வேறுபாட்டினை சரிசெய்வதோடு, கச்சாப் பொருட்களை உபயோகிப்பதில் திறமையைக் கையாளுதல், சாதகமாக உள்ள பகுதிகளில் உற்பத்தி செய்ய அனுமதித்தல் போன்றவைகள் நடைமுறைப்படுத்தப் படுகின்றன.

**கல்விக்கு உணவு (FOOD-FOR-EDUCATION)**

கல்வி நிலையங்களில், குறிப்பாக, பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்யவும், எழுத் தறிவு பெற்றோர் விகிதத்தை நூறு சதவிகிதமாக அதிகரிக்கச் செய்யும் நோக்கத்தோடும் கல்விக்கு உணவுத் திட்டம் செயல் படுத்தப்பட்டு வருகின்றது. பொதுவழங்கு முறையை (PDS) மாற்றி ஏழைகளுக்கு அவர்களின் வருமானத்திற்கேற்ப உணவு பெறுவதற்கான அட்டைகள் (Food Coupon) வழங்கப்படுகின்றன.

மாநல அரசாங்கமும் கிராமப் பொறுப்பாளர் மூலமாக, மக்களின் பொது நலனுக்காக நிதி உதவி செய்கின்றது. அதன்படி கிராம மக்களில் நலிவடைந்தோருக்கு அவர்களின் உழைப்பிற்கேற்ப உணவுக் கூப்பன்களோடு பணமும் கொடுக்கப்படுகின்றது.

## வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்கச் செய்தல்

## (Enhancing Agriculture Productivity)

அரசாங்கமானது, வேளாண் தொடர்பான வசதி வாய்ப்புக்களை அதிகரிக்கவும், பலவழிகளில் மக்களுக்கு கடனுதவி அளிக்கவும், நவீனத் தொழில்நுட்பங்களை விரிவாக்கவும், மாநில மற்றும் வட்ட அளவில் உணவு உற்பத்தியில் தன்நிறைவு பெறச் செய்வதற்கும் நிதி உதவி அளிக்கின்றது. மேலும் முக்கிய உணவுப் பயிர்களான நெல் மற்றும் கோதுமை மட்டுமல்லாது சாதகமான நிலைமைகள் உள்ள இடங்களில் இதர உணவுப் பயிர்களைப் பயிரிடவும் ஊக்குவித்து வருகின்றது. மேலும் வேளாண்மைக்கு இன்றியமையாத தேவைகளுக்கு, குறிப்பாக, நீர்பாசனம் போன்றவற்றிற்கு, தனிப்பட்ட முறையில் நிதிஉதவி செய்யப் படுகின்றது. மிகுந்த அளவு உணவு உற்பத்தி செய்கின்ற விதத்திலும், தானியங்களின் தடையில்லா வாணிக முறை யினாலும் வேலைவாய்ப்பு கிடைப்பதால், கிராமங்களில் தற்பொழுது வறுமை நிலைமை குறைந்து வருகின்றது எனலாம். மேற்குறிப்பிட்டவற்றினை செயல்படுத்துவதற்கு ஐந்து ஆண்டுகள் அவகாச காலம்கூட கொடுக்கப்படுகிறது. ஆகவே இந்தியாவானது ஒரு குறிப்பிட்ட காலகெடுவிற்குள் உணவு பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் ஒரு உன்னதமான நிலைமையை நிச்சயமாக அடையும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

**கற்றல் அடைவுகள்**

1. மாணவர்கள் பல பயிர்களுக்குச் சாதகமான சுற்றுச்சூழல், சமூக மற்றும் பொருளாதார நிலைகளைப் புரிந்து கொள்ளும் திறனைப் பெறுகிறார்கள்.
2. உணவுப் பயிர்களை மற்ற பயிர்களிலிருந்து வேறுபடுத்தித் தெரிந்து கொள்கின்றனர்.
3. வேளாண்மையில் மாணவர்கள் பண்மையினைப் போற்றத் தெரிந்து கொள்கின்றனர்.
4. சமூக மற்றும் உணவுப் பாதுகாப்பிற்கு ஏற்புடைய நடவடிக்கைகளை மாணவர்கள் அறிகின்றனர்.



# சுயமதிப்பீடு

**I.** சரியான விடையத் தேர்ந்தெடுக்கவும்

1. வறட்சியிலும் வளரும் பயிர்

   அ. நெல் ஆ. கரும்பு

   இ. பருப்பு வகைகள் ஈ. கோதுமை

2. தீபகற்ப இந்தியாவில் நெல் அதிகமாக உற்பத்தி செய்யும் மாநிலம்

   அ. ஆந்திரப் பிரதேசம் ஆ. கர்நாடகம்

   இ. தமிழ்நாடு ஈ. கேரளா

3. தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள நெல் ஆராய்ச்சி மையம்

   அ. கும்பகோணம் ஆ. தஞ்சாவூர்

   இ. ஆடுதுறை ஈ. பாபநாசம்

4. கர்நாடகத்தில் கரும்பு அதிகம் உற்பத்தி செய்யும் மாநிலம்

   அ. பெல்லாரி ஆ. மாண்டியா

   இ. மைசூர் ஈ. தார்வார்

5. சணல் பயிர் அதிகமாக விளையும் மாநிலம்

   அ. பீகார் ஆ. மத்தியப்பிரதேசம்

   இ. ஒரிஸ்சா ஈ. மேற்கு வங்காளம்

**II.** கோடிட்ட இடங்களை நிரப்புக

1. நெல் ஒரு ___________ பயிராகும்.
2. கரும்பில் ___________ என்ற இனிப்புச் சத்து இருக்கின்றது.
3. தமிழ்நாட்டில் காப்பி விளையும் மலை ___________
4. மேற்கு வங்காளத்தில் தேயிலை அதிகம் சாகுபடிச் செய்யும் பகுதி ___________ ஆகும்.
5. இந்தியாவின் கோதுமை களஞ்சியம் ___________ .

**III.** பின்வருவனவற்றைப் பொருத்துக

| | | |
|---|---|---|
| 1. காப்பி | -- | உத்திரப் பிரதேசம் |
| 2. கரும்பு | -- | கர்நாடகம் |
| 3. கோதுமை | -- | மத்தியப் பிரதேசம் |
| 4. ஆப்பிள் | -- | ஆந்திரப் பிரதேசம் |
| 5. பருப்பு வகைகள் | -- | இமாசலப் பிரதேசம் |
| | -- | கேரளா |

**IV.** சுருக்கமாக விடையளிக்கவும்

1. தீபகற்ப இந்தியாவில் விளையும் முக்கியப் பயிர்கள் யாவை?
2. நெல் பயிர் வளரத் தேவையான சூழ்நிலைகள் யாவை?
3. தேயிலை இந்தியாவில் எந்தெந்த மாநிலங்களில் பயிரிடப்படுகின்றது?
4. திணைப்பயிர்கள் பற்றி குறிப்பு வரைக.
5. கரும்பு எவ்வாறு பயிரிடப்படுகின்றது?

**V.** விரிவான விடை தருக

1. தமிழ்நாட்டில் நெல் சாகுபடி செய்யும் முறையை விவரி.
2. **கோதுமைச் சாகுபடி முறையினையும் பயிரிடப்படும் பருவங்களையும், பகுதிகளையும் பற்றி விவரி.**
3. இந்தியாவில் விளையும் வெவ்வேறு பயிர்கள் மக்களுக்கு பயனுள்ளவையாக உள்ளன என்பதை விவரி.

**VI.** செய்முறைப் பயிற்சிகள்

1. இந்திய நிலவரைப் படத்தில் ஒவ்வொரு வேளாண் பயிர் பரவலையும் குறிக்கவும் (தனித்தனி நில வரை படத்தில் செய்வது நல்லது).

# அலகு VI : தொழிலகங்கள்

## பாடம் 6

# இந்தியத் தொழிலகங்கள்

**கற்றல் நோக்கங்கள்**

1. மாணவர் நம் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தில் தொழிற்சாலைகளின் பங்கினை அறிதல்.
2. மாணவர் நம்நாட்டின் பல்வேறு தொழிற்சாலைகளைப் பற்றி புரிந்து கொள்ளல்.
3. மாணவர் சக்தி தரும் (energy resources) வளங்களைப் பற்றி தெரிந்து கொள்ளல்.
4. மாணவர் பல்வேறு வகையானத் தொழிற்சாலைகளின் பயன்களைப் பற்றி அறிந்து கொள்ளல்.
5. மாணவர் கனரகத் தொழிற்சாலைகள் எவ்வாறு இதரத் தொழில்களின் (போக்குவரத்து, வியாபாரம்) வளர்ச்சிக்கு உதவுகின்றன என்பதைத் தெரிந்து கொள்ளல்.

## தொழில்கள்

மனிதர்கள் உயர்வான, வளர்ச்சியடைந்த சமுதாய நபர்கள் ஆவர். மனிதனின் இன்றியமையாத அடிப்படைத் தேவைகள் உணவு, உடை, உறைவிடம் ஆகும். மனிதன் தனது வாழ்க்கை முறையை மிகவும் வசதிகள் நிறைந்ததாகவும், சுலபமான பொழுது போக்கு மிக்கதாகவும், ஆடம்பரம் மிக்கதாகவும் மாற்றிக் கொள்வதற்கு அடிப்படைத் தேவைகளைத் தவிர மற்ற பல தேவைகளும் வசதிகளும் தேவைப்படுகின்றன. அவ்விதமே,

திருப்திகரமான வாழ்க்கையை அடைவதற்கும் பல்வேறுபட்ட வசதிகள் தேவைப்படுகின்றன. இவை எல்லாமும் பலதிறப்பட்ட பொருளாதார நடவடிக்கைகள் மூலமாகவே பெறப்படுகின்றன.

உற்பத்தித் தொழிற்சாலைகள் என்ற பொருளாதார நடவடிக்கை கச்சாப் பொருட்களை (raw materials) முழுமைப் பொருளாக (finished product) மாற்றும் செயலாகும். நவீனகாலப் பொருளாதார மேம்பாட்டிற்கு, தொழில்துறையின் முன்னேற்றம் தற்பொழுது முன் தேவையாக உள்ளது. அதனால்தான் உலகில் சிறிய மற்றும் பெரிய, வளர்ச்சி அடைந்த மற்றும் வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கும் நாடுகள் அனைத்துமே தங்களின் வளங்களை வழிமுறைப் படுத்தித் தொழில் வளர்ச்சியைத் துரிதப்படுத்து கின்றன.

ஒரு வட்டாரத்தின் தொழில்துறை நடவடிக்கைகளுக்கு ஆதாரமாக இருப்பது அங்குள்ள இயற்கை வளங்களேயாகும். தொழிற்சாலைகளின் பரவல் அங்குள்ள வளங்களின் பரவலைப் பொருத்து அமைகின்றது. இந்தியா பல்வேறு வளங்கள் நிறைந்த ஒரு நாடாகும். இருப்பினும், தொழில்துறை முழுவதுமாக வளர இயலவில்லை. அதற்குக் காரணம் தொழிற்சாலைகளுக்குத் தேவை யான மூலப்பொருட்களின் பரவல் சீரற்று காணப்படுவதே. தொழில் நடவடிக்கைகளுக்குத் தேவையானத் தாதுப் பொருட்களின் பரவல் இந்தியாவில் குறிப்பிட்ட பகுதிகளில் செறிந்து காணப்படுவது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

## தொழிலகங்கள்

ஒரு நாட்டினுடைய தொழில் நடவடிக்கைகளுக்கு ஆதாரமாக இருப்பது அந்நாட்டில் கிடைக்கப்பெறும் வளங்களே. ஓரிடத்தின் தொழில் முன்னேற்றத்திற்கு அங்கு கிடைக்கும் கச்சாப்பொருட்களின் உற்பத்தியே பெரிதும் முக்கியத்துவம் பெறுகின்றது. இயற்கை வளங்கள், காடுகள், மற்றும் வேளாண் பயிர்களின் உற்பத்தி ஆகியவற்றின் பரவல் சீரற்று ஒரு சில குறிப்பிட்ட பகுதியில் மட்டுமே செறிந்து காணப்படுகின்றது. எனவே, தொழில் நடவடிக்கை களும் அவற்றின் பரவலுக்கேற்ப வேறுபடுகின்றன.



இந்தியாவில் கிடைக்கும் மூலப் பொருட்களின் அடிப் படையில் தொழில்களை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்.

1. தாதுப் பொருட்கள் சார்ந்த தொழிலகங்கள்
2. காட்டுப் பொருட்கள் சார்ந்த தொழிலகங்கள்
3. விவசாயப் பொருட்கள் சார்ந்த தொழிலகங்கள்

## தாதுப்பொருட்கள் சார்ந்த தொழில்கள்

இந்தியாவில் காணப்படும் கனிமப் பொருட்களை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம் (படம் 6.1). அவையாவன :

1. உலோகக் கனிமங்கள் (Metalic minerals)
2. உலோகமல்லாதக் கனிமங்கள் (Non-metalic minerals)
3. எரிபொருள் வளங்கள் (Fuel resources)

## உலோகக் கனிமங்கள்

இந்தியாவில் பலவகையான உலோகக் கனிமங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் இரும்புத்தாது, மங்கனீசு, தங்கம், தாமிரம், வெள்ளி, அலுமினியம் ஆகியவை நமது பொருளாதாரத்தில் பெரிதும் முக்கியத்துவம் பெறுகின்றன. இரும்புத் தாதுவும் மங்கனீசும் நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாதவை. இந்தியாவில் பீகார், ஒரிசா, மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் உலோகதாதுக்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. குறிப்பாக, இந்த மாநிலங்களில் இரும்புத் தாதுவும், மாங்கனீசும் அதிக அளவில் கிடைக்கின்றன கர்நாடக மாநிலத்திலுள்ள கோலாரில் தங்கம் வெட்டி எடுக்கப் பட்டது. தற்போது போதுமானவை கிடைக்காததால் தங்கச் சுரங்கங்கள் மூடப்பட்டு வருகின்றன. மேலும் அலுமினியத் தாதுவான பாக்ஸைட்டு தமிழ்நாட்டில் அதிக அளவில் கிடைக்கின்றது.

| |
|---|
| இரும்பு, மங்கனீசு ஆகிய தாதுக்கள் பீகார், ஒரிசா மற்றும் மேற்கு வங்காளத்திலும், தங்கம் கர்நாடகத்திலும் அலுமினியம் தமிழ்நாட்டிலும் கிடைக்கின்றன. |




படம் 6.1



## உலோகமல்லாதக் கனிமங்கள்

மைகா, சுண்ணாம்புக்கல், ஜிப்சம் ஆகியவைகள் உலோக மல்லாத தாதுக்களாகும். மைகா, சுண்ணாம்புக்கல் ஆகியவை தொழில் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகின்றன. இம்மூன்று உலோகமல்லாத தாதுக்களும் ஆந்திரா, இராஜஸ்தான், தமிழ்நாடு மற்றும் மத்தியபிரதேசம் போன்ற மாநிலங்களில் வெட்டி யெடுக்கப்படுகின்றன.

## எரிபொருள் வளங்கள்

நிலக்கரி, பெட்ரோலியம், இயற்கை வாயு ஆகியன முக்கிய எரிபொருள் வளங்களாகும். ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தில் எரிபொருள் வளங்கள் முக்கிய பங்கு வகிக் கின்றன. தொழில் துறையின் துரித வளர்ச்சிக்குப் பெட்ரோலிய பொருட்கள் பெரிதும் உதவுகின்றன. இந்நூற்றாண்டின் முதன்மையான எரிபொருளாக விளங்கும் இப்பெட்ரோலியம் அசாம், மகாராஷ்டிரம் ஆகிய மாநிலங்களில் மிகுதியாக உற்பத்தி செய்யப்படுகின்றது. தமிழ் நாட்டில் காவிரி டெல்டாப் பகுதி களில் பெட்ரோலியம் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இந்தியாவின் சக்தி மூலங்களில் நிலக்கரி முக்கியமானதாகும். நம் நாட்டின் சக்தி மூலங்களின் தேவையில் 67 விழுக்காடு (அனல்மின்சக்தி தயாரிப்பு உட்பட) நிலக்கரியால் பூர்த்தி செய்யப்படுகிறது. இந்தியாவின் தொழில் வளர்ச்சியில் நிலக்கரியின் பங்கு மிகவும் முக்கியமானதாகும். பீகார், ஒரிசா, மேற்கு வங்காளம் மற்றும் ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்கள் நிலக்கரி உற்பத்தியில் குறிப்பிடத்தக்க மாநிலங்களாகும். நிலக்கரி யின் ஒரு வகையான பழுப்பு நிலக்கரி தமிழ் நாட்டிலுள்ள நெய்வேலியில் வெட்டி யெடுக்கப்படுகின்றது.

நிலக்கரி பீகார், ஒரிசா, மேற்கு வங்காளம், ஆந்திரா ஆகிய மாநிலங்களிலும், பெட்ரோலியம் அசாம், மகாராஷ்டிரா, தமிழ்நாடு முதலான மாநிலங்களிலும் மிகுதியாகக் கிடைக்கின்றன.

பொதுவாக, உலோகத் தாதுக்களும், எரிபொருள் வளங்களும் ஒருங்கே கிடைக்கும் பகுதிகளில் தொழில் நடவடிக்கைகள் மிகவும் சிறந்து விளங்குகின்றன. எடுத்துக்காட்டாக பீகார், ஒரிசா மற்றும் மேற்கு வங்காளம் உள்ளடங்கிய தாதுவளம் மிக்க வட்டாரத்தில் கனரகத் தொழிற்சாலைகள் அமையப் பெற்றுள்ளன.

## கனரகத் தொழிலகங்கள்

கனரகத் தொழிலகங்களுள் ஒன்றான இரும்பு எ∴குத் தொழிற்சாலை, நாட்டின் தொழில் வளர்ச்சியில் மிகவும் முக்கியமான ஒன்றாகும். இரும்பு - எ∴கு ஆலைகள் பீகார், ஒரிசா மற்றும் மேற்கு வங்காள மாநிலங்களில் நிறுவப்பட்டுள்ளன. இரும்பு-எ∴கு ஆலைகள் தனியார் துறையினராலும் மற்றும் பொதுத்துறையினராலும் நிர்வகிக்கப்படுகின்றன (படம் 6.2).

பொகாரோ, துர்காபூர், பிலாய், ரூர்கேலா, ஜாம்ஷெட்பூர், பத்திராவதி, சேலம், விசாகப்பட்டினம், ஹாஸ்பெட் ஆகிய இடங்களில் இரும்பு-எ∴கு தொழிலகங்கள் உள்ளன.

## டாட்டா இரும்பு-எஃகு நிறுவனம் (TISCO)

இந்தியாவில் 1907-ல் ஜாம்ஷெட்ஜி நோவாஜி டாட்டா என்பவரால் இரும்பு-எ∴குத் தொழிலகம் பீகாரில் உள்ள ஜாம்ஷெட்பூரில் நிறுவப்பட்டது. இதுவே முதன்முதலில் தனியார் துறையினரால் நிறுவப்பட்ட பெரிய அளவிலான இரும்பு-எ∴குத் தொழிலகமாகும். இதுவே இந்தியாவில் இரும்பு-எ∴குத் தொழிலகத்திற்கு வித்தூன்றியது எனலாம் (படம் 6.3). இரும்பு-எ∴குத் தொழிற்சாலைக்கு தேவைப்படும் முக்கிய மூலப்பொருட்கள் இரும்பும், நிலக்கரியும் ஆகும். இவை இரண்டும் கனமான பொருட்கள் என்பதால், தொழிற்சாலைகள் இருக்கும் பகுதிகளுக்குக் கொண்டு செல்ல போக்குவரத்துச் செலவுகள் அதிகமாகும். எனவே இதனைத் தவிர்ப்பதற்காக இரும்பு-எ∴குத் தொழிலகங்கள் பொதுவாக இரும்புத்தாது வெட்டியெடுக்கப்படும் பகுதிக்கு அருகிலோ






படம் 6.2




படம் 6.3



அல்லது நிலக்கரி வெட்டியெடுக்கப்படும் பகுதிக்கு அருகிலோ அமைக்கப்படுகின்றன.

இரும்பு மற்றும் நிலக்கரியைத் தவிர மங்கனீசு, சுண்ணாம்புக்கல், டாலமைட் போன்ற தாதுப் பொருட்களும் இரும்பு-எஃகு உற்பத்திக்குத் தேவைப்படுகின்றன. டாட்டா இரும்பு-எஃகுத் தொழிலகம் ஜாம்ஷெட்பூரில் துவக்கப்பட்டதற்கு முக்கிய காரணமாக இருந்தவை :

1. இரும்புத்தாது பீகார் மற்றும் ஒரிசா மாநிலங்களில் இருந்து கிடைக்கின்றது.
2. நிலக்கரி தாமோதர் பள்ளத்தாக்குப் பகுதியில் கிடைக் கின்றது.
3. மங்கனீசு, பீகாரிலும், டாலமைட் ஒரிசாவிலும் கிடைக் கின்றன.
4. நாட்டின் பல பகுதிகளுடன் ஜாம்ஷெட்பூர் இரயில் வண்டிப் பாதையால் இணைக்கப்பட்டுள்ளது.
5. இங்கு சுற்றுப்புறப் பகுதியில் குறைந்த ஊதியத்திற்கு தொழிலாளர்கள் ஏராளமாகக் கிடைக்கின்றனர்.
6. தொழிலகங்கள் மற்றும் தொழிலாளர்களுக்குத் தேவையான வீடுகள் ஆகியன கட்டுவதற்கு ஏற்ற சமநிலப்பகுதிகளும் இங்கு உள்ளன.
7. தொழிற்சாலைக்குத் தேவையான தண்ணீரானது சுவர்ணரேகா (Subarnarekha) ஆற்றிலிருந்து பெறப் படுகின்றது.

இத்தகைய சாதகமான சூழ்நிலையால் ஜாம்ஷெட்பூரில் இரும்பு-எஃகுத் தொழிலகம் நிறுவப்பட்டு அது மேன்மேலும் நன்கு வளர்ச்சியடைந்துள்ளது.

இதுபோலவே இரும்பு மற்றும் நிலக்கரி கிடைக்கும் பகுதிகளில் இரும்பு - எஃகுத் தொழிலகங்கள் துவக்கப்பட்டு வளர்ச்சி பெற்றுள்ளன. இவைகளின் அமைவிடத்தினை இந்தியப் படத்தின் உதவியுடன் தெரிந்து கொள்ளலாம்.

இயந்திரங்கள் இரும்பு-எஃகு பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்படுகின்றன. ஆனால் இயந்திரங்களைக் கொண்டு பல்வேறு விதமானப் பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. கப்பல் கட்டுதல், ஆகாய விமானங்கள் தயாரிப்பு, வாகனங்கள் தயாரிப்பு, அறுவைச் சிகிச்சைக் கருவிகள் தயாரிப்பு மற்றும் பலவற்றின் தயாரிப்பிற்கும் வளர்ச்சிக்கும் காரணமாக அமைவது இரும்பு-எஃகுத் தொழிலகங் களேயாகும்.

மேற்கு வங்காளத்தில் சித்தரஞ்சன் என்னுமிடத்தில் தயாரிக்கப்படும் இரயில் எஞ்சின்களும் தமிழ்நாட்டில் பெரம்பூர் என்னுமிடத்தில் தயாரிக்கப்படும் இரயில் பெட்டிகளும் உலகளவில் பெயர் பெற்றவை.

இந்தியாவில் எரிபொருள் வளங்களான நிலக்கரி, பெட்ரோலியம் ஆகியவற்றினை அடிப்படையாகக் கொண்டு எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களும், பெட்ரோலிய - இரசாயனத் தொழிலகமும் (Petro-Chemical Industries), துணைப் பொருட்கள் சார்ந்த தொழிலகங்களும் வளர்ச்சி பெற்றுள்ளன. இந்தியாவில் கச்சா எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டு சுத்திகரிக்கப்பட்டு வருகின்றது. எனவேதான் எண்ணெய் சுத்தி கரிப்பு நிலையங்கள் துறைமுகங்களுக்கு அருகிலேயே அமைந் துள்ளன. சுத்திகரிக்கப்பட்ட எண்ணெயானது குழாய் வழியாகத் தொழிற்பகுதிகளுக்கு அனுப்பப்படுகின்றது.

## காட்டுப்பொருட்கள் சார்ந்த தொழிற்சாலைகள்

இந்தியாவில் இயற்கைத் தாவரங்கள் பெரிதும் வேறுபாடு டையதாக உள்ளது. பலவகையான காடுகள் உள்ளன. அவைகளி லிருந்து பெறப்படும் பொருட்கள் பலவகைப்பட்டதாக உள்ளன. அவற்றுள் முக்கியமான சில பொருட்கள் மட்டும் தொழிலகங்களின் வளர்ச்சியில் முக்கியத்துவம் பெறுகின்றன என்பதையும் பார்க்கலாம்.

1. காடுகளிலிருந்து கிடைக்கும் மரங்கள் பெரும்பாலும் கட்டிடங்கள் கட்டவும் மற்றும் தொழிலகங்கள் கட்டவும், மரச்சாமான்கள் செய்வதற்கும் பயன் படுத்தப்படுகின்றன.



2. மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியில் இரப்பர் மரங்கள் மிகுதியாக வளர்கின்றன. இதனால் தீபகற்ப இந்தியா வில் இரப்பர் பொருட்கள் மிகுதியாகக் காணப்படு கின்றன.
3. காடுகளிலுள்ள மரங்களிலிருந்து தயாரிக்கப்படும் மரக் கூழைக் கொண்டு காகிதம் தயாரிக்கப் படுகின்றது. தமிழ்நாடு, மகாராஷ்டிரம், மேற்கு வங்காளம், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் காகிதத் தொழிலகங்கள் மிகுதியாக உள்ளன. மத்திய பிரதேசத்தில் உள்ள நேபா நகரில் செய்தித்தாள் காகிதத் தொழிலகம் அமைந் துள்ளது.
4. காடுகளிலிருந்து பெறப்படும் அரக்கு, மெழுகு போன்ற பொருட்கள் பெயிண்ட் தயாரிப்பதற்கு பயன்படுகின்றன. இவ்வாறு பல்வேறு தொழிற் சாலைகளில் காட்டுப் பொருட்கள் பயன்படுத்தப் படுகின்றன. காடுகளிலிருந்து பெறப்படும் ஒருசில பொருட்கள் குடிசைத் தொழில்களின் வளர்ச்சிக்கும் ஆதாரமாக உள்ளன.

## விவசாயப் பொருட்கள் சார்ந்த தொழிலகங்கள்

பல்வேறு தொழிலகங்களுக்கு வேண்டிய கச்சாப் பொருட்கள் வேளாண் பயிர்களிலிருந்து பெறப்படுகின்றன. அவற்றுள் சிலவற்றினைப் பற்றிக் காண்போம்.

### சர்க்கரை ஆலைகள்

உத்திரப்பிரதேசம், தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் பெரும்பாலான பகுதிகளில் கரும்பு பயிரிடப்படுகின்றது. கரும்பிலிருந்து சர்க்கரை உற்பத்தி செய்யும் சர்க்கரை ஆலைகள் நாட்டில் பரவலாகக் காணப்படுகின்றன. இருப்பினும் அவற்றின் பரவல் உத்திரப்பிரதேசம், தமிழ்நாடு ஆகியவற்றில் மிகுதியாகக் காணப்படுகின்றது.

### பருத்தி நெசவாலைகள்

பருத்தி பயிரிடப்படும் பகுதிகளில் பருத்தி நெசவாலைகள் வளர்ச்சி பெற்றுள்ளன. குறிப்பாக, மும்பையில் பருத்தி நெசவாலைகள் செறிந்து காணப் படுகின்றன.

### மும்பையில் பருத்தி நெசவாலைகள்

பருத்தி நெசவாலைகள் முதன்முதலில் மும்பையில்தான் அமைக்கப்பட்டன. மும்பையின் பின்நிலப்பகுதி (hinterland) பருத்தி விளைவதற்கு உகந்ததாக உள்ளது. பருத்தி நெசவாலைக்கு வேண்டிய கச்சாப் பொருளான பருத்தி கிடைப்பதாலும், தொழில் வளர்ச்சிக்குத் தேவையான சில பண்புகள் சாதகமாக அமைந்துள்ளதாலும், இங்கு நெசவாலைகள் அதிக எண்ணிக் கையில் வளர்ச்சி பெற்றுள்ளன. இங்கு நிலவும் ஈரப்பதம் மிக்க காலநிலை, பருத்தி இழை அறுபடாமல் இருக்க ஏற்றதாக உள்ளது. மும்பையில் பருத்தி நெசவாலைகள் செறிந்து காணப்படுவதால் அது **''இந்தியாவின் மான்செஸ்டர்''** என்று அழைக்கப்படுகின்றது.

தமிழ்நாட்டில் மதுரை, கோயமுத்தூர் ஆகிய இடங்களில் பருத்தி நெசவாலைகள் அதிக எண்ணிக்கையில் உள்ளன. கோயமுத்தூர் **''தமிழ்நாட்டின் மான்செஸ்டர்''** என அழைக்கப் படுகின்றது.

### இந்தியாவில் தொழிலகங்களும், மாசடைதலும்

பதினேழு வகையானத் தொழிலகங்களினால் நமது நாடு பெரிதும் மாசுபட்டுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. அவைகள் சிமெண்ட், அனல் மின் சக்திநிலையம், எரிசாராயத் தொழிலகம், சர்க்கரை, உரம், ஒருங்கிணைந்த இரும்பு எஃகு தொழிலகம், எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம், மரக்கூழ் மற்றும் பேப்பர் தொழிலகம், இரசாயன உரம், பூச்சிக்கொல்லி மருந்துத் தொழிலகம், தோல் பதனிடும் தொழிலகம், உயிர்காக்கும் மருந்து, சாயம் தோய்த்தல், காரச்சோடா, செம்பு உருக்குதல், தாமிரம் உருக்குதல் மற்றும் அலுமினியம் உருக்குதல் போன்றவற்றின் தொழிலகங்கள் ஆகும்.



மொத்தம் உள்ள *1,551* தொழிலக வகைகளில் *17* வகைகளில் மாசடைவது தெளிவாகக் கண்டறியப்பட்டுள்ளது. ஏறக்குறைய *1,266* தொழிலக வகைகளில் மாசுக்கட்டுப்பாட்டு வசதிகள் நிறுவப்பெற்றுள்ளன. மீதமுள்ள *130* தொழிலக வகைகள் மாசடைதல் காரணமாக மூடப்பட்டுவிட்டன.

மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், மாநில மாசுக் கட்டுப்பாட்டு வாரியங்களுடன் கலந்து ஆலோசித்து, நாட்டில் மாசுபட்டுள்ள பகுதிகளைக் கண்டறிந்து கட்டுப்படுத்த தனி முயற்சி எடுத்து வருகின்றது. அவைகள் : வாப்பி (குஜராத்), சிங்கரேலி (உத்திரப்பிரதேசம்), கோர்பா, இராட்லம், நகடா (மத்தியப் பிரதேசம்), டிக்பாய் (அசாம்), தலச்சேர் (ஒரிசா), பத்ராவதி (கர்நாடகம்), கவ்ரா (மேற்கு வங்காளம்), தன்பாத் (பீகார்), பாலி, ஜோத்பூர் (இராஜஸ்தான்), மணலி, வடஆற்காடு (தமிழ்நாடு), விசாகப்பட்டினம், பட்டன் சேறு (ஆந்திரப் பிரதேசம்), செம்பூர் (மகாராஷ்டிரம்), நஜாப்கார் (டெல்லி), கோவிந்த்கார் (பஞ்சாப்), உதயக் மண்டல் (கேரளா), மற்றும் டார்வனோ, கலாம்ப் (இமாசலப் பிரதேசம்) என்ற இடங்களாகும்.

### சணல் தொழிற்சாலைகள்

மேற்கு வங்காள மாநிலத்தில் சணல் மிகுதியாக பயிரிடப்படுகின்றது. சணல் தொழிற்சாலைகள் அம்மாநிலத்தில் குறிப்பாக ஹுக்ளி நதிக்கரையில் அதிகமாகக் காணப் படுகின்றன.

இவற்றைத் தவிர கம்பளி நெசவாலைகளும் பட்டு நெசவாலைகளும் மற்றும் செயற்கை இழை தயாரிப்பு ஆகியவைகள் அதற்கேற்ற சாதகமான சூழ்நிலைகள் நிலவும் பகுதிகளில் அமையப்பெற்றுள்ளன. மேலும் வேறு சில தொழிற்சாலைகளும், சிறுதொழில்களும், பல்வேறு குடிசைத் தொழில்களும் இந்தியாவில் வளர்ச்சியைப் பெற்றுள்ளன.

உங்களுக்குத் தெரியுமா?

இந்தியா பற்றிய சில பொருளாதார உண்மைகள் 2002 - 03

* மொத்த உள்நாட்டு உற்பத்தி (Gross National Product) 5.7 விழுக்காடு வளர்ந்துள்ளது.
* செல்லுலர் தொலைபேசிகள் (Cellular Phones) 1998-ல் 1.0 மில்லியனாக இருந்து தற்பொழுது 17 மில்லியன்களாக உயர்ந்துள்ளன.
* இருசக்கர வாகனங்கள் (Two Wheelers) 1998-ல் 28 மில்லியன்களாக இருந்து இன்று 51 மில்லியன்களாக உயர்ந்துள்ளன.
* வீட்டுக் கடன்கள் 1998-ல் 186,000 மில்லியன் ரூபாய்களாக இருந்து தற்பொழுது 810,000 மில்லியன் ரூபாய்களாக வளர்ந்துள்ளன.
* நமது நாட்டின் அந்நியச் செலவாணிச் சேமிப்பு 90 பில்லியன் டாலர்களாக உயர்ந்து ஆசியாவிலேயே மூன்றாவது பெரிய சேமிப்பாகக் கருதப்படுகின்றது.
* செப்டம்பர் 2003-ல் கார்களின் விற்பனை வெகுவாக உயர்ந்து 13 விழுக்காட்டு வளர்ச்சியைக் காட்டியுள்ளது.
* சென்ற வருடம் (2001 - 02) வெளி ஆதாரத் துறை (Out sourcing Sector) யில் மட்டும் 160,000 புதிய பணிநிலைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

### பயன்கள்

நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு தொழிலகங் களே முக்கிய காரணம். கனரகத் தொழில்கள், நெசவுத் தொழில்கள் மற்றும் இதர பல தொழில்களின் வளர்ச்சியால் உருவானவையே யாகும். தொழிலகங்களின் வளர்ச்சியினால் பல்லாயிரக் கணக் கான மக்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைத்துள்ளது. பல்வேறு தொழிலகங்களில் உற்பத்தி செய்யப்படும் எண்ணற்ற முழுமைப் பொருட்கள் (Finished Products) மக்களின் வாழ்க்கையில் பயன்படுத்தப்பட்டு



மக்களுக்கு மனநிறைவை ஏற்படுத்திவருகின்றன. அதனால் மக்களின் வாழ்க்கை எளிதாகின்றது. அவர்களது வாழ்க் கைத் தரமும் உயருகின்றது. தொழிற்துறை முன்னேற்றத்தின் விளைவாக போக்குவரத்து, உள்நாட்டு வாணிபம், சர்வதேச வாணிபம் போன்ற பல துறைகளிலும் முன்னேற்றம் ஏற்பட்டு உள்ளது. நகரங்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகி வருவதுடன் நாட்டின் தேசிய வருமானமும் பெருகி வருகின்றது. மேலும் பல துறைகளில் முன்னேற்றம் ஏற்படத் தொழிலகங்கள் பெரிதும் துணைபுரிகின்றன.

**தொழிலகங்கள் - குறைவேக வளர்ச்சி**

தொழிலக உற்பத்தி அளவை (Index of Industrial Production (IIP)) நிறுவனக் கூற்றுப்படி 2000 -01 ல் தொழிலகங்களில் குறைவேக வளர்ச்சி காணப்பட்டன. தொடர்ந்து 2001-02 லும் அதிகமானச் செறிவுடன் குறைவேக வளர்ச்சி காணப்பட்டது. உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதியும், அடிப்படை வசதிகளுக்குத் தேவையானவற்றை உற்பத்தி செய்யும் தொழிலகங்களும் வளர்ச்சி விகிதத்தில் குறைவேகத் தினையே கண்டுள்ளன. தொழிலகங்களின் வளர்ச்சி 2001-02ல் (ஏப்ரல் - டிசம்பர்) 2.3 விழுக்காடாகக் குறைந்துள்ளது. இதே காலக் கட்டத்தில் முந்திய வருடம் தொழிலகங்களின் வளர்ச்சி 5.8 விழுக்காடாக இருந்தது குறிப்பிடத்தக்கது. இவ் வருட முதல் 9 மாதங்களில் கண்டறியப்பட்ட தொழிலக வளர்ச்சி கடந்த 10 வருடங்களின் வளர்ச்சியில் மிகக் குறை வானதாகும். வியாபாரத்திலும், முதலீடு செய்வதிலும், உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தேவைகள் அதிகம் இல்லாத காரணங்களினாலும், தொழிலகங்களின் வளர்ச்சி யில் தொய்வு ஏற்பட்டுள்ளது. தொடர்ச்சியான அதிக வட்டி விகிதத்தாலும், அடிப்படை வசதிகளின் தடைகளினாலும், நிலம் மற்றும் தொழிலாளர் பற்றாக்குறையினாலும் தனியார் முதலீடும், தொழிலக உற்பத்தியும் நிறுத்தம் கொண்டுள்ளன.

தொழிலகங்களின் குறைவேக வளர்ச்சி அனைத்து முக்கியப் பிரிவுகளிலும் கண்காணிக்கப்பட்டு வருகின்றது.

ஏப்ரல் - டிசம்பர் 2000-ல் உற்பத்திப் பிரிவின் வளர்ச்சி 6 விழுக் காடாக இருந்தது. ஆனால் 2001-ல், அதே காலகட்டத்தில் வளர்ச்சி 2.4 விழுக்காடாகக் குறைந்துள்ளது. மின்சார உற்பத்தி யிலும் ஏப்ரல் - டிசம்பர் 2001-ல் வளர்ச்சி 2.7 விழுக்காடாகக் குறைந்துள்ளது. இதே காலகட்டத்தில் 2000-ல் தொழிலக வளர்ச்சி 4.8 விழுக்காடாக இருந்தது. கனிமங்கள் வெட்டி எடுப்பதிலும் 2001-ல் (ஏப்ரல் - டிசம்பர்) உற்பத்தி வளர்ச்சி 1.1 விழுக்காடாகக் குறைந்தது. ஆனால் 2000-ல் (ஏப்ரல் - டிசம்பர்) உற்பத்தி வளர்ச்சி 4.4 விழுக்காடாக இருந்தது.

**கற்றல் அடைவுகள்**

1. தொழிலகங்களின் இன்றியமையாமையைப் பற்றி மாணவர்கள் அறிந்து கொள்கின்றனர்.
2. தொழிலகங்களின் அமைவிடப் பண்புகளைப் பற்றி மாணவர்கள் தெரிந்து கொள்கின்றார்கள்.
3. மாணவ, மாணவியர் கனிவளங்களின் பரவல் மற்றும் தொழிலகங்களின் பரவல் பற்றி தெரிந்து கொள்கின்றனர்.
4. தொழில்களின் முன்னேற்ற நிலைகள் பற்றி மாணவ மாணவிகள் தெரிந்து கொள்கின்றனர்.
5. வெவ்வேறு தொழில்களை வேறுபடுத்திக் காட்டும் திறமையையும் மாணவ, மாணவிகள் பெறுகிறார்கள்.

## சுயமதிப்பீடு

I.சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்

1. தமிழ்நாட்டில் பெட்ரோலியம் கிடைக்கப் பெறும் டெல்டா பகுதி

   அ. தாமிரபரணி　　ஆ. வைகை

   இ. காவிரி　　ஈ. பாலாறு

2. இந்தியாவில் நிலக்கரி கிடைக்கும் வட்டாரம்

   அ. தாமோதர் பள்ளத்தாக்கு　ஆ. பிரம்மபுத்திரா பள்ளத்தாக்கு

   இ. நர்மதா பள்ளத்தாக்கு,　ஈ. தபதி பள்ளத்தாக்கு



3. கர்நாடகாவில் தங்கவயல்கள் உள்ள பகுதி

   அ. மைசூர்　　ஆ. கோலார்

   இ. பெங்களூர்　　ஈ. மண்டியா

4. மிகுதியாக பாக்ஸைட் உற்பத்தி செய்யும் மாநிலம்

   அ. ஆந்திர பிரதேசம்　　ஆ. பீகார்

   இ. பஞ்சாப்　　ஈ. தமிழ்நாடு

5. ஆசியாவில் மிகப்பெரிய மரம் அறுக்கும் ஆலைகள் உள்ள தீவு

   அ. அந்தமான் தீவு　　ஆ. நிகோபார் தீவு

   இ. லட்சத்தீவு　　ஈ. மினிகாய் தீவு

**II.** கோடிட்ட இடங்களை நிரப்புக

1. தமிழ்நாட்டில் பழுப்பு நிலக்கரி உற்பத்தி செய்யும் பகுதி_______
2. பெட்ரோலியம் கிடைக்கும் வடஇந்திய மாநிலம் ___________
3. பீகார், ஒரிசா மற்றும் மேற்கு வங்காளம் ஆகியன ___________ வட்டாரமாகும்.
4. தமிழ்நாட்டில் மதுரை மற்றும் ___________ ஆகியவற்றில் பருத்தி நெசவாலைகள் மிகுதியாக உள்ளன.
5. ___________ இந்தியாவின் மான்செஸ்டர்' என அழைக்கப் படுகின்றது.

**III.** பின்வருவனவற்றைப் பொருத்துக

| | | |
|---|---|---|
| 1. சித்தரஞ்சன் | -- | பருத்தி நெசவாலை |
| 2. பெரம்பூர் | -- | இரும்பு எஃகு தொழிலகம் |
| 3. ஜாம்ஷெட்பூர் | -- | இரயில் எஞ்சின் ஆலை |
| 4. நேபா நகர் | -- | இரயில் பெட்டி ஆலை |
| 5. மும்பை | -- | அச்சுக்காகித ஆலை |

**IV.** சுருக்கமாக விடையளிக்கவும்

1. இந்தியாவிலுள்ள முக்கிய மூன்று வகை தொழிலகங்கள் யாவை?
2. இந்தியாவில் காணப்படும் முக்கிய தாதுப்பொருட்கள் யாவை?
3. கனரகத் தொழிலகங்கள் எவ்விதம் தொழில் வளர்ச்சிக்கு உதவுகின்றன?
4. காடுகளிலிருந்து பெறப்படும் முக்கியப் பொருட்கள் யாவை?
5. பருத்தி நெசவாலைகள் எவ்விடத்தில் செறிந்து காணப் படுகின்றன?

**V.** விரிவான விடை தருக

1. டாட்டா இரும்பு-எஃகு ஆலை அமையச் சாதகமாக இருந்த காரணங்களைக் கூறுக.
2. காட்டுப் பொருட்கள் சார்ந்த தொழிலகங்கள் பற்றி விரிவாக எழுதவும்.

**VI.** செய்முறைப் பயிற்சி

இந்தியப்படத்தில் தொழிலகங்களை வகைப்படுத்திக் குறிக்கவும்.

அலகு VII : கட்டுமானங்களும் சேவைகளும்

பாடம் 7

# கட்டுமானங்களும் சேவைகளும்

**கற்றல் நோக்கங்கள்**

1. மாணவர் ஒரு நாட்டின் வாழ்க்கைத்தரம் உயர சேவைகள் எவ்விதம் முக்கியத்துவம் பெறுகின்றன என்பதைத் தெரிந்து கொள்ளல்.
2. மாணவர் ஒரு நாட்டின் வளர்ச்சியில் போக்குவரத்து எவ்வாறு முதுகெலும்பாக அமைகின்றது என்பதைத் தெரிந்து கொள்ளல்.
3. மாணவர் இரயில் போக்குவரத்து, சாலைப்போக்குவரத்து ஆகியவற்றின் தன்மைகள் மற்றும் அடர்த்தி வேறுபாட்டினை அறிந்து கொள்ளல்.
4. மாணவர் முக்கிய துறைமுகங்கள், முக்கிய விமான நிலையங்களைப் பற்றிய விவரங்களை அறிந்து கொள்ளல்.
5. மாணவர் வாழ்க்கைத்தர மேம்பாட்டிற்கு கல்வி எவ்வாறு அடித்தளமாக உள்ளது என்பதைத் தெரிந்து கொள்ளல்.
6. மாணவர் அடிப்படைத்தேவைகளுள் ஒன்றான வீட்டு வசதியின் வளர்ச்சியைப் பற்றி அறிந்து கொள்ளல்.
7. மாணவர் நலவாழ்விற்கு வழிவகுக்கும் செயல்முறை களைத் தெரிந்து கொள்ளல்.

ஒரு நாடு பலவிதமான இயற்கை வளங்களைப் பெற்று இருப்பினும் வறுமை நிறைந்த நாடாக இருப்பின் அந்நாடு முன்னேற்றம் அடைவது மிகவும் கடினம். ஒரு நாட்டினுடைய வாழ்க்கைத்தரம் உயர்ந்தால்தான் அந்நாட்டின் வறுமை ஒழியும். வாழ்க்கைத்தரம் உயர வேண்டுமானால் நாட்டின்

வசதி வாய்ப்புக்கள் பெருகவேண்டும். ஒரு நாட்டினுடைய வளர்ச்சியிலும், முன்னேற்றத்திலும் அந்நாட்டிலுள்ள சேவைகள் பெரும்பங்கு வகிக்கின்றன. ஒரு நாட்டின் போக்குவரத்து வசதிகள், கல்வி, நலவாழ்வு மற்றும் வீட்டுவசதி ஆகிய சேவைகள் அந்நாட்டின் வளர்ச்சியில் பெரிதும் முக்கியத்துவம் பெறுகின்றன.

ஒரு நாட்டின் சேவைகளான போக்குவரத்து, கல்வி, நலவாழ்வு மற்றும் வீட்டுவசதி ஆகியவை வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதோடு நாட்டின் முன்னேற்றத்திலும் பெரும்பங்கு வகிக்கின்றன.

உலகளவில் பல வளர்ந்த நாடுகளுடன் தொழில் நுட்பத் துறையில் போட்டியிடும் இந்தியாவில் மக்களின் வாழ்க்கைத் தரம் முற்றிலும் உயர்ந்ததாக இல்லை. இந்தியா சுதந்திரம் அடைந்து ஐம்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாகியும்கூட நாட்டில் வறுமையும், ஏழ்மையும் இன்னும் இருந்து வருகின்றன. மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்கு இந்திய அரசாங்கம் பல முயற்சிகளை எடுத்து வருகின்றது. அத்தகைய முயற்சிகளின் விளைவாக, போக்குவரத்து, கல்வி, நலவாழ்வு மற்றும் வீட்டுவசதி ஆகிய சேவைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டு வருகின்றது எனக் கூறினால் மிகையாகாது.

## போக்குவரத்து

ஒரு நாட்டினுடைய வளர்ச்சியிலும், முன்னேற்றத்திலும் போக்குவரத்து முதுகெலும்பாக அமைகின்றது. நாட்டினுடைய போக்குவரத்திற்கும், நிலத்தோற்ற அமைப்பிற்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. பொதுவாக, சமவெளிப் பகுதிகளில் போக்குவரத்து வசதி அடர்த்தி மிக்கதாகவும், பீடபூமி மற்றும் கரடுமுரடான மலைப் பகுதிகளில் போக்குவரத்து வளர்ச்சி பெறாத நிலையிலும் உள்ளன. போக்குவரத்து இணைய அமைப்பின் வளர்ச்சியும் மக்களின் அதிகப் பரவலுக்கு காரணமாகின்றது.



இந்தியப் போக்குவரத்தில் இரயில் போக்குவரத்து, சாலைப்போக்குவரத்து, நீர்வழிப்போக்குவரத்து மற்றும் வான் வழிப் போக்குவரத்து ஆகியவை அடிப்படை பரிமாணங்கள் ஆகும்.

## இரயில் போக்குவரத்து

ஆசியாவிலேயே இந்தியாவில்தான் இரயில் போக்குவரத்து மிகவும் அடர்த்தியாக உள்ளது. இந்தியாவில் இரயில் போக்குவரத்து பெரிய நகரங்களையும், சிறிய நகரங்களையும் இணைக்கும் வகையில் உள்ளது.

இந்திய இருப்புப் பாதையானது 9 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, பொது மேலாளரால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது (படம் 7.1).

**இருப்புப்பாதையின் பிரதேச மண்டல பிரிவுகள் :**

| இருப்புப்பாதை மண்டலம் | தலைநகரம் |
|---|---|
| 1. மத்திய இரயில்வே மண்டலம் | மும்பை |
| 2. கிழக்கு இரயில்வே மண்டலம் | கொல்கத்தா |
| 3. வடக்கு இரயில்வே மண்டலம் | புதுடெல்லி |
| 4. வடகிழக்கு இரயில்வே மண்டலம் | கோரக்பூர் |
| 5. வடகிழக்கு எல்லைப் பகுதி மண்டலம் | மாலிகான் |
| 6. தென்னக இரயில்வே மண்டலம் | சென்னை |
| 7. தென் மத்திய இரயில்வே மண்டலம் | செகந்திராபாத் |
| 8. தென் கிழக்கு இரயில்வே மண்டலம் | கொல்கத்தா |
| 9. மேற்கு இரயில்வே மண்டலம் | மும்பை - சர்ச்கேட் |

இந்திய இரயில் போக்குவரத்து முதன்முதலில் 1833-ல் ஆரம்பிக்கப்பட்டது. முதன்முதலில் இரயில் போக்குவரத்து மும்பைக்கும் தானாவிற்கும் இடையே இயக்கப்பட்டது.




படம் 7.1.



இதன் மொத்த பிரயாண தூரம் 34 கி.மீட்டர் மட்டுமே ஆகும். ஆனால் தற்சமயம் இந்திய இரயில்வே போக்குவரத்து பெருவளர்ச்சி பெற்றுள்ளது. இரயில் பாதையானது மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

1. அகன்ற இருப்புப்பாதை (Broad gauge)
2. மீட்டர் அளவு இருப்புப்பாதை (Meter gauge)
3. குறுகிய இருப்புப்பாதை (Narrow gauge)

தற்பொழுது மீட்டர் அளவு இருப்புப்பாதையும், குறுகிய இருப்புப்பாதையும் அகன்ற இருப்புப் பாதைகளாக மாற்றப்பட்டு வருகின்றன. மேலும் அனைத்து இருப்புப் பாதைகளும் 2004-ஆம் ஆண்டிற்குள்ளாக அகன்ற இருப்புப் பாதைகளாக மாற்றம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இந்தியா வின் முக்கிய நகரங்களுக்கு இடையே அதிவேக இரயில்கள் விடப்பட்டுள்ளன. அதிவேக இரயில்கள் துரித இரயில்களின் வேகத்தினைக் காட்டிலும் அதிக வேகமுடையதாகும். இந்த இரயில்களில் இளைப்பாறுவதற்கு ஏற்ற வசதிகளோடு உணவு, செய்தித்தாள் மற்றும் பல வசதிகளையும் பெற்றுள்ளன. தமிழ்நாட்டில் இவ்வகை அதிவேக இரயில்கள் குறிப்பாக சென்னைக்கும் கோவைக்கும் இடையிலும், சென்னைக்கும் மைசூருக்கும் இடையிலும், சென்னைக்கும் புதுடெல்லிக்கும் இடையிலும் விடப் பட்டுள்ளன. இவ்வகை இரயில்கள் சதாப்தி அதிவேக இரயில் என்று அழைக்கப்படுகின்றன. மேலும் புது டெல்லிக்கும் மும்பைக்கும் இடையே செல்லும் அதிவேக இரயில்களிலும், ராஜஸ்தானில் ஓடக்கூடிய அரண்மனை இராசதானி இரயிலிலும் தொலைபேசி வசதி செய்வதற்கு அரசு பெரிதும் முயற்சித்து வருகின்றது.

இந்திய இரயில்வே சட்டம் 1994 முதல் அதிவேக இரயிலில் பயணம் செய்யும் பயணிகளுக்குக் காப்பீட்டுத்திட்டம் அறிமுகப்படுத்தியுள்ளது. அதன்படி, இரயில்கள், இரயில் நிலையங்களில் உள்ள ஓய்வறைகள், பண்டகக் காப்பறைகள், முன்பதிவு செய்யுமிடங்கள் ஆகிய

இடங்களில் நடைபெறும் கொடூரமான வன்முறைகள், குண்டு வெடிப்பு, வழிப்பறி ஆகியவற்றால் பாதிக்கப்படும் பயணிகளுக்கு இந்த காப்பீட்டுத் திட்டம் பயனுள்ளதாக உள்ளது.

## சாலைப் போக்குவரத்து

இரயில் போக்குவரத்துடன் ஒப்பிடும்போது சாலைப் போக்குவரத்து அனைத்து குடியிருப்புப் பகுதிகளையும் இணைக் கின்றது. சாலைகளை, அவைகளைப் பயன்படுத்தப்படும் தன்மையின் அடிப்படையில் பல பிரிவுகளாகப் பிரிக்கலாம் அவைகள் :

1. நடைபாதை
2. வண்டிப்பாதை
3. கப்பிப்போட்ட சாலை
4. தார்ச்சாலை
5. அகன்ற சாலை (100 அடிச் சாலை).

பெரு நகரங்களில் முக்கியமான சாலைகள் அகன்ற சாலைகளாக உள்ளன.

நகரங்களில் காணப்படும் மிகுந்த போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கும் வகையில் மேம்பாலங்களும், சுரங்கப் பாதைகளும் கட்டப்பட்டுள்ளன. மேலும் மாவட்ட தலை நகரங்கள், மாவட்ட சாலைகளாலும், மாநில தலைநகரங்கள் மாநில நெடுஞ்சாலைகளாலும் இணைக்கப்பட்டுள்ளன.

தேசிய நெடுஞ்சாலைகள் மத்திய அரசாலும், மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் மாவட்ட நெடுஞ்சாலைகள் ஆகியவை மாநில அரசாலும் நிர்வகிக்கப்படுகின்றன.

சாலைவழிப் பயணத்தினை மேற்கொள்ளும் பயணி களுக்கென மாநில அரசு மாநில போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை இயக்கி வருகின்றது. இந்தப் பேருந்துகள் அனைத்து நகரங்களையும் பெரிய கிராமங்களையும் இணைக் கின்றன.



## நீர்வழிப் போக்குவரத்து

இந்தியாவின் பன்னாட்டு வர்த்தகத்தில் நீர்வழிப்பாதை போக்குவரத்து மிகவும் சாதகமாக உள்ளது. சரக்குக் கப்பல்களின் நிலையில் வளரும் நாடுகளிடையே இந்தியா 15-வது இடத்தில் வருகின்றது. இந்தியாவில் பெரிய துறைமுகங்களும், சிறிய துறைமுகங்களும் மொத்தம் 48 உள்ளன. பெரிய துறைமுகங்கள் அனைத்தும் மத்திய அரசின் நிர்வாகத்தின் கீழ் உள்ளன (படம் 7.2).

காண்ட்லா, மும்பை, மர்மகோவா, மங்களூர் மற்றும் கொச்சி துறைமுகம் ஆகியவை மேற்குக் கடற்கரையிலும் கொல் கத்தா, பாரதீப் விசாகப்பட்டிணம், சென்னை மற்றும் தூத்துக்குடி ஆகியவை கிழக்குக் கடற்கரையிலும் அமைந்துள்ளன.

## வான்வழிப் போக்குவரத்து

வான்வழிப் போக்குவரத்தின் வளர்ச்சியினால், தொலை தூரப் பகுதிகளுக்குக் குறைந்த நேரத்தில் செல்ல முடிகின்றது. வான்வழிப் போக்குவரத்தின் வளர்ச்சியினால் உலகம் மிகவும் சுருங்கியுள்ளது. எடுத்துக்காட்டாக, ஒரு பயணி காலை உணவை இந்தியாவிலும், மதிய உணவை துபாயிலும், இரவு உணவினை இங்கிலாந்திலும் உண்ணும் அளவிற்கு வான்வழிப் போக்கு வரத்து வளர்ந்துள்ளது. இந்தியாவில் வான்வழிப் போக்குவரத்து 1930-ல் அறிமுகப்படுத்தப்பட்டது. தற்பொழுது ‘ஏர் இந்தியா’ மற்றும் ‘இந்தியன் ஏர்லைன்ஸ்’ ஆகிய நிறுவனங்கள் வான்வழிப் போக்குவரத்தினை நிர்வகிக்கின்றன. ஏர் இந்தியா நிறுவனம் சர்வதேச அளவிலும், இந்தியன் ஏர்லைன்ஸ் நிறுவனம் உள் நாட்டுக்குள்ளேயும் வான்வழிப் போக்குவரத்தினை இயக்கி வருகின்றன. இந்தியன் ஏர்லைன்ஸ் அருகிலுள்ள நேபாளம், இலங்கை, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கும் தனது சேவையை விரிவுபடுத்தியுள்ளது. தற்பொழுது பொதுத்துறை நிறுவனங் களைத் தவிர தனியார் நிறுவனங்களும் உள்நாட்டுக்குள்




படம் 7.2



வான் வழிப்போக்குவரத்தினை இயக்கி வருகின்றன. இந்தியாவில் உள்ள முக்கிய நகரங்களுக்கிடையே தனியார் வான்வழிப் போக்குவரத்து இயக்கப்பட்டு வருகின்றது. நம்நாட்டில் சிறிய, பெரிய அளவிலான விமான நிலையங்கள் உள்ளன. பன்னாட்டு விமான நிலையங்களில் ஒரே நேரத்தில் பல விமானங்கள் கீழ் இறங்குவதற்கும், புறப்படுவதற்கும் ஏற்ற வகையில் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இங்கு பயணிகளுக்கெனப் பல்வேறு வசதிகளுடன் கூடிய ஒய்வு அறைகளும் கட்டப்பெற்றுள்ளன.

சென்னை, மும்பை, கொல்கத்தா, டெல்லி, திருவனந்த புரம், பெங்களூர், ஹைதராபாத் ஆகியவை நம்நாட்டிலுள்ள முக்கியமான பன்னாட்டு விமான நிலையங்களாகும் (படம் *7.3*).

### கல்வி

போக்குவரத்திற்கு அடுத்தபடியாக முக்கிய சேவையாகக் கருதப்படுவது கல்வியாகும். ஒரு நாடு எவ்வளவு இயற்கை வளங்களைப் பெற்றிருப்பினும் கல்வியில் பின்தங்கி இருக்குமேயானால் அந்நாடு முன்னேற்றமடைவது கடினம். எனவே கல்வி என்பது நாட்டினுடைய முன்னேற்றத்திற்கும் வாழ்க்கைத்தர உயர்விற்கும் அடித்தளமான ஒன்றாகும்.

இந்தியா போன்ற அதிக மக்கட்தொகை கொண்ட நாடுகளில் அனைவருக்கும் கல்வியறிவு பெற வழிவகுப்பது என்பது மிகவும் கடினமான ஒன்றாகும். எனவேதான், இந்திய அரசு பல வழிகளில் கல்விகற்றோரின் எண்ணிக்கையை அதிகரிக்க முயற்சி செய்துவருகின்றது.

இந்திய அரசியல் அமைப்பினைப் பின்பற்றித்தான் இந்தியாவின் கல்விமுறை உருவாக்கப்பட்டுள்ளது. இந்தியா சுதந்திரம் பெற்ற பின்னர் கல்வியில் படிப்படியாக அதிக முன்னேற்றம் அடைந்து வருகின்றது. கல்வி வளர்ச்சிக்கென தேசிய கல்விக் கொள்கையானது *1968*-ஆம் ஆண்டு அறிமுகப் படுத்தப்பட்டது. இதன் விளைவாக கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை அதிகரித்தது. கிராமங்களில்




படம் 7.3



அடிப்படைக் கல்வி வசதி பெருகியது. நாடு முழுவதும் ஒரே மாதிரியான, தரமானக் கல்வியை வழங்குவதற்கான அனைத்து முயற்சிகளும் எடுக்கப் பட்டுள்ளன. இருப்பினும் நிதிப் பற்றாக்குறை மற்றும் பெருகி வரும் மக்கள் ஆகியவை கல்வி வளர்ச்சிக்கு பெரும் தடையாய் அமைகின்றன.

*1986*-ஆம் ஆண்டு அமல்படுத்தப்பட்ட புதிய கல்விக் கொள்கையானது, கல்வியின் வளர்ச்சிக்கு முக்கிய தூண்டு கோலாக அமைந்தது. கல்வியின் தரம், சமமான கல்வி வாய்ப்பு, குழந்தைகளை மையப்படுத்திய கல்வி ஆகியவை வலியுறுத்தப் பட்டன. புதிய கல்வி முறையில் வேலைவாய்ப்பு மற்றும் தேசிய ஒருமைப்பாடு ஆகியன முக்கிய இலக்குகளாக வலியுறுத்தப் பட்டன. தற்சமயம் மத்திய மற்றும் மாநில அரசாங்கம் இணைந்து கல்வி நிர்வாகம் தொடர்பானச் செய்திகளை மக்கள் இடையே பகிர்ந்தளிக்கும் முறையையும், நடைமுறைப்படுத்தி யுள்ளது. கல்வியாளர்கள் குழுக்கள் அமைக்கப்பட்டு மேலும் அவைகள் கிராம மற்றும் மாவட்ட அளவில் அமைக்கப்பட்டு கல்வி வளர்ச்சிக்கு திட்டமிடுதலையும், செயல்படுத்துதலையும் செய்து வருகின்றன.

மேலும் அரசாங்கமானது பெண் கல்விக்கென பலவித திட்டங்களைத் தயாரித்துள்ளது. தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், மலைவாழ் மக்களுக்கும் கல்வி பயிலும் வாய்ப்பு பெறுவதற் கென பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன. முறை சாராக் கல்வி மையங்கள் கிராமங்களிலும் நகரங்களிலும் செயல் பட்டு வருகின்றன. தற்சமயம் அம்மையங்கள் குழந்தைகளின் கல்வியில் அதிக கவனம் செலுத்தி வருகின்றன. பலவிதமான முயற்சிகள் மேற்கொண்டு வந்தாலும் கல்வி கற்கும் வாய்ப்பு அனைத்து இந்திய மக்களுக்கும் கிடைக்கவில்லை என்றே கூறலாம். இருப்பினும் நமது அரசாங்கம் வருடம் *2000*-ல் அனைவருக்கும் கல்விகற்கும் வாய்ப்பு கிடைக்கப்பெறும் வகையில் செயலாற்றியது.

அனைவருக்கும் கல்வி கிடைக்கும் வகையில் மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சரகம், தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் குழுமம், மாநில ஆசிரியர் கல்வி

ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்கம், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் ஆகியவைகள் பல்வேறு முயற்சி களைச் செய்து வருகின்றன. தேசியக் கல்விக் கொள்கையானது 1992-ஆம் ஆண்டு மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. இதன்படி, மேல் நிலைப் பள்ளிகளில் ஒரே மாதிரியான +2 கல்வி முறை நாடு முழுவதும் அறிமுகப் படுத்தப்பட்டதோடு ஒரே மாதிரியானத் தேர்வு முறை களும் அமல்படுத்தப்பட்டன.

தேசிய அளவில், பேராசிரியர் தாவே அவர்களின் தலைமையில் 1991-ல் அமைக்கப்பட்ட குழு 'குறைந்தபட்ச கற்றல்' (minimum levels of learning) என்ற புதிய கல்வி முறையை அறிமுகப்படுத்தியது. வகுப்பிலுள்ள எல்லா குழந்தைகளுக்கும் தேவையான அனைத்துத் திறன்களையும் முற்றிலும் பெற வேண்டும் என்பதே இக்கொள்கையின் முக்கிய நோக்கமாகும். மேலும் ஆரம்பக் கல்வியை மேம்பாடடையச் செய்வதற்காகவும் இத்திட்டம் கொண்டுவரப்பட்டது.

## நலவாழ்வு

இந்திய அரசியல் சட்டத்தின்படி கல்வியைப் போலவே நலவாழ்வும் முக்கிய அடிப்படை உரிமையாகும். ஒவ்வொரு சமூக அமைப்புகளும் நலவாழ்வுக்கு வழிவகுக்கும் செயல்முறைகளை செய்வதன் மூலம் ஆரோக்கியமான சந்ததியினரை உருவாக்க முடியும். நல்வாழ்விற்கு அடையாளம் மருத்துவமனைகளில் எத்தனை படுக்கை வசதி உள்ளது என்பதல்ல. மாறாக கிராமங்களிலும், நகரங்களிலும் வாழும் மக்களுக்கு எவ்வளவு பானை குடிநீர் வழங்கப்படுகின்றது என்பதுதான் என்று உலகச் சுகாதார நிறுவனம் கூறுகின்றது.

நலவாழ்விற்கு, தனிமனிதச் சுகாதாரமும், சுற்றுப்புறச் சுகாதாரமும் மிகவும் அவசியமாகும். இல்லாவிடில் அசுத்தங்கள் சேர்ந்து அதனால் கிருமிகளின் பாதிப்பிற்கு மக்கள் ஆளாக நேரிடும். இந்தியாவில் கிராமப் பஞ்சாயத்துகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், மாநகராட்சிகள் ஆகியவைகள் சுகாதாரத்தை பாதுகாக்கும் பொறுப்பினைப் பெற்றுள்ளன.



இந்திய அரசாங்கம் நலவாழ்விற்கென பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. மருத்துவ மனைகள், மருந்தகங்கள், ஆரம்பச் சுகாதார நிலையங்கள், துணை மையங்கள் ஆகியன சிறப்பாகச் செயலாற்றி வருகின்றன. ஒவ்வொரு ஆண்டும், நலவாழ்விற்கான வசதி வாய்ப்புக்கள் பெருகி வருகின்றன. கடந்த ஐம்பது ஆண்டுகளில் மருந்து மற்றும் மருத்துவத் துறையில் இந்தியா சிறப்பான ஒரு வளர்ச்சியைப் பெற்றுள்ளது.

## வீட்டு வசதி

நாட்டின் மக்கட்தொகை பெருகி வருவதற்கேற்ப மக்களுடைய தேவையும் மிகவும் அதிகரித்து வருகின்றது. தேவையைப் பூர்த்தி செய்ய உணவு மற்றும் நுகர்வுப் பொருட்களின் உற்பத்தியானது அதிகரிக்கப்பட்டு வருகின்றது. இதற்கு பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மனிதனுடைய அடிப்படைத் தேவைகளில் ஒன்று உறைவிடம். பல்வேறு திட்டங்களின் மூலம் அரசு மக்களுக்கு உதவி வருகின்றது. எடுத்துக்காட்டாக, தமிழ்நாடு அரசு, குடிசை மாற்று வாரியத்தின் மூலம் குடியிருக்க வீடில்லாத மக்களுக்கு வீடு கட்டித் தருகின்றது. மேலும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய மானது தவணை முறையில் பணம் பெற்றுக் கொண்டு ஒவ்வொரு வருமான வகுப்பினருக்கும் ஏற்றவாறு வீடுகட்டித் தருகின்றது. இதுபோலவே, மத்திய அரசும் மக்களுக்கு வீடு கட்டித்தருகின்றது.

அரசுத் திட்டங்களின் மூலம் கட்டப்படும் வீடுகளைத் தவிர, தனியாரும் கிடைக்கக்கூடிய மூலப்பொருட்களைக் கொண்டு தங்களின் சூழ்நிலைக்கு ஏற்ற வகையில் வீடுகளைக் கட்டுகின்றனர். பொதுவாக, கட்டப்படும் வீடுகள் சூழ்நிலை மாறுபாட்டிற்கேற்ப மாறுபடுகின்றன. மலைப் பகுதிகளில் வீடுகள் பாறைகளைக் கொண்டு கட்டப் படுகின்றன. இங்கு வீடுகளில் கண்ணாடி சன்னல்கள் பொருத்தப்படுகின்றன. காரணம் மலைப் பகுதிகளில் அறைக்குள் இருக்கும் வெப்பத்தினைக் காப்பதற்காகவும், வெளிச்சத்திற்காகவும் கண்ணாடி சன்னல்கள் பொருத்தப் படுகின்றன. தற்சமயம் குறைந்த செலவில் தனியாரால் கட்டப் படும் வீடுகளுக்கு அரசாங்கம் உதவுவதோடு மானியமும்

வழங்குகின்றது. இருப்பினும் இவ்வகை வீட்டு வசதிகள் அனைவருக்கும் கிடைக்கவில்லை என்றே கூறலாம்.

வீட்டு வசதியைப் பொறுத்தவரை, நகரங்களில் பல மில்லியனுக்கும் மேலான மக்கள் வீடற்றவர்களாகவே உள்ளனர். இங்கு சாலை ஓர நடை மேடைகளிலும் புறம்போக்கு இடங்களிலும் அடிப்படை வசதிகள்கூட இல்லாமல் இன்றும் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். **''எல்லோருக்கும் வீட்டுவசதி''** என்ற நோக்கம் நம்மிடையே இன்னும் நிறைவேறவில்லை என்றே கூறலாம். மக்களுக்கு குடியிருக்கும் வீடு அமைந்து விட்டால் இதர வசதிகளான கல்வி, நலவாழ்வு போன்ற அனைத்தும் அமைந்துவிடும். மேலும் கல்வியினைப் பெறுவதிலும், நலவாழ்வு காப்பதிலும் ஈடுபட வழி வகுக்கும். அதுவரை நூறு சதவீத கல்வி என்பதும், நூறுசதவீத உடல்நலம் காத்தல் என்பதும் வெறும் கனவாகவே அமையும்.

**கற்றல் அடைவுகள்**

1. போக்குவரத்தின் சமீப கால வளர்ச்சி நிலையைப் பற்றி மாணவர்கள் தெரிந்து கொள்கின்றனர்.
2. கல்வியின் இன்றியமையாமையைப் பற்றி மாணவர்கள் தெரிந்து கொள்கின்றனர்.
3. புதிய கல்விக் கொள்கையின் இலக்குகளைப் பற்றி அறிந்து கொள்கின்றனர்.
4. வீட்டு வசதி மேம்பாட்டிற்கென மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்களைப் பற்றி தெரிந்து கொள்கின்றனர்.
5. தனிமனிதச் சுகாதாரமும், சுற்றுப்புறச் சுகாதாரமும் நல வாழ்விற்கு மிகவும் அவசியம் என்பதை மாணவர்கள் தெரிந்து கொள்கின்றனர்.

## சுய மதிப்பீடு

**I.** சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்

1. போக்குவரத்து வசதிகள் செறிந்து காணப்படும் பகுதி

அ. பீடபூமி ஆ. சமவெளி

இ. குன்றுப்பகுதி ஈ. பள்ளத்தாக்கு



2. ஆசியாவிலேயே மிக அடர்த்தியான போக்குவரத்து வசதியைப் பெற்ற நாடு

அ. சீனா ஆ. ஜப்பான்

இ. இந்தியா ஈ. மலேசியா

3. இந்தியாவில் முதன்முதலில் துவங்கப்பட்ட இரயில் வண்டிப்பாதை

அ. மும்பை - தானா ஆ. மும்பை - பூனா

இ. மும்பை - டெல்லி ஈ. மும்பை - சென்னை

4. உலக நாடுகளிடையே விமானப் போக்குவரத்தினை நடத்தும் இந்திய அரசின் விமானப் போக்குவரத்து நிறுவனம்

அ. ஏர் இந்தியா ஆ. இந்தியன் ஏர்லைன்ஸ்

இ. ஜெட் ஏர்வேஸ் ஈ. தமானியா ஏர்வேஸ்

5. பேராசிரியர் தாவே அவர்களால் உருவாக்கப்பட்ட புதிய கல்விமுறை

அ. குறைந்தபட்ச கற்றல் ஆ. புதிய கல்விக் கொள்கை

இ. ஆரம்பக் கல்வி ஈ. உயர்நிலைக்கல்வி

**II.** கோடிட்ட இடங்களை நிரப்புக

1. ஒரு நாட்டின் வறுமை அகல வேண்டுமானால், மக்களிடையே __________ உயரவேண்டும்.
2. ஒரு நாட்டில் அமையப் பெற்றுள்ள சேவைகள் மக்களின் வாழ்க்கைத்தரம் உயர மட்டுமின்றி, மக்களின் __________க்கும் வழிகோலும்.
3. ராஜதானி விரைவு வண்டி என்றழைக்கப்படும் அதிவேக இரயில் வண்டி __________ மாநிலத்தில் ஓடுகின்றது.
4. பேருந்துகள் இந்தியாவின் எல்லா __________யும் இணைக்கின்றது.
5. மங்களூர் துறைமுகம் __________ கடற்கரையில் அமையப் பெற்றுள்ளது.

**III.** பின்வருவனவற்றைப் பொருத்துக

| | | |
|---|---|---|
| 1. மத்திய இந்தியா | -- | கோரக்பூர் |
| 2. கிழக்கு இந்தியா | -- | சென்னை |
| 3. வடகிழக்கு | -- | மும்பை விக்டோரியா |
| 4. தெற்கு | -- | கொல்கத்தா |
| 5. தெற்கு மத்திய | -- | மாலிகன் |
| | -- | செகந்திராபாத் |

**IV.** சுருக்கமாக விடையளிக்கவும்

1. இந்தியாவில் வான்வழிப் போக்குவரத்தினை நிர்வகிக்கும் அரசு நிறுவனங்கள் யாவை?
2. இந்தியாவின் புதிய தேசியக் கல்விக் கொள்கையின் குறிக்கோள்கள் யாவை?
3. எந்தெந்த அரசு நிறுவனங்கள் அனைவருக்கும் ஆரம்பக்கல்வி கிடைப்பதற்கு முழுமுயற்சி எடுத்து வருகின்றன?
4. 'குறைந்தபட்ச கற்றல்' அளவு என்றால் என்ன?
5. நலவாழ்விற்காக அரசாங்கம் மேற்கொண்டுவரும் முயற்சிகள் யாவை?

**V.** விரிவான விடை தருக

1. இந்தியாவின் ஏதாவதொரு சேவையை விவரி.
2. வீட்டுவசதியை அதிகரிக்கச் செய்ய இந்திய அரசாங்கம் மேற்கொண்டு வரும் முயற்சிகள் பற்றி விவரி.

**VI.** செய்முறைப் பயிற்சிகள்

1. இந்தியப் படத்தில் முக்கியப் போக்குவரத்துத் தடங்களை குறிக்கவும்.
2. இந்தியாவின் கல்வி முன்னேற்றத்திற்காக தீட்டப்பட்டுள்ள திட்டங்கள் பற்றிய விவரங்களைச் சேகரிக்கவும்.

அலகு VIII : இந்தியாவின் மக்கள் வளம்

## பாடம் 8

# மனிதவளங்கள்

**கற்றல் நோக்கங்கள்**

1. மாணவர் மனித வளம் மிக முக்கியமான வளம் என்பதால் எவ்வாறு மக்கட்தொகை கணக்கிடப்படுகின்றது என்பதனைத் தெரிந்து கொள்ளுதல்.
2. மாணவர் மக்கள் அடர்த்தி மற்றும் பரவல் பற்றி அறிந்து கொள்ளுதல்.
3. மாணவர் மக்களடர்த்தியின் அடிப்படையில் எவ்வாறு வட்டங்கள் பிரிக்கப்படுகின்றன என்பதனைத் தெரிந்து கொள்ளுதல்.
4. மாணவர் பாலினத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ளுதல்.
5. மாணவர் நாட்டின் மக்கள் வளத்தினை மேம்படுத்த எடுத்துக் கொள்ள வேண்டிய வழி முறைகளை அறிந்து கொள்ளுதல்.

நாம் வாழுகின்ற உலகமானது பல இயற்கை வளங்களை கொண்டதாகும். உலகில் உள்ள வளங்களில் மனிதவளமே மிக முக்கியமான வளமாகும். உலகில் சீனாவிற்கு அடுத்தபடியாக இரண்டாவது அதிக மக்கட்தொகையைப் பெற்ற நாடு இந்தியாவாகும். மனித வளம் நாட்டின் மிகப் பெரிய சொத்தாக இருந்தபோதிலும், மக்கட்தொகை மிக அதிகமாக (மற்ற வளங்களைவிட) உயரும்போது நாட்டின் வளர்ச்சியைக் குறிப்பிடத்தக்க அளவில் பாதிக்கும்.

சீனர்கள் மனிதவளச்தைச் சொத்தாகக் கருதினாலும் அவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது பெரும்

பான்மையினர் வறுமை நிலைக்குத் தள்ளப்படுவார்கள் என்பதனை உணர்ந்து, மக்கட்தொகைப் பெருக்கத்தினைக் கட்டுப்படுத்தத் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். அதில் ஓரளவு வெற்றியும் பெற்று மக்கள் எண்ணிக்கையைக் குறைத்துள்ளனர். இந்திய அரசும் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தப் பல முயற்சிகள் செய்து குறிப்பிடத்தக்க அளவில் வெற்றியும் பெற்றுள்ளது.

நாட்டின் திட்டங்கள் யாவும் மனிதர்களின் தேவையை நிவர்த்தி செய்து மக்களை ஆரோக்கியமானவர்களாக மாற்று வதற்குத் திட்டமிடப் படுபவையாகும். மக்களின் நலவாழ்வு, அவரது தேவைகள் நிவர்த்தி செய்யப்படுவது என்பவை இயற்கை வளங்களைச் சார்ந்துள்ளன. மனித வளமே மிக அதிகமாக வளரக்கூடியது. ஆனால் மற்ற பெரும்பாலான இயற்கை வளங்கள் தீர்ந்து போகக்கூடியவை. மக்களுக்குத் தேவைப்படும் வளங்களின் தேவை அதிகரிக்கும் போது, வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்துவதும் அவற்றில் வெற்றி பெறுவதும் மிகக் கடினமாகும். குறிப்பாக, மிக வேகமாக வளர்ந்துவரும் இந்தியாவின் வளர்ச்சிக்குப் பெரும் தடையாக உள்ளது. இந்தியாவின் வேகமான மக்கள் தொகை வளர்ச்சியே. எனவே, எதிர்கால மக்களின் தேவையைக் கணக்கிட்டு, பூர்த்தி செய்யவும் நாட்டின் வளங்களைச் சரியாகப் பயன்படுத்தி அதனைப் பாதுகாக்கவும் மக்கட்தொகையைப் பற்றிய புள்ளி விவரங்கள் மிக அத்தியாவசியமாகின்றன.

இந்தியா *3.28* மில்லியன் ச.கி.மீட்டர் நிலப்பரப்பைப் பெற்று உலகின் ஏழாவது பெரிய நாடாகத் திகழ்கின்றது. மக்கள் தொகையின் அடிப்படையில், இது இரண்டாவது பெரிய நாடாகும். சுதந்திரம் அடைந்ததிலிருந்து சனநாயகச் சமதர்மக் கொள்கையைப் பின்பற்றி நாட்டின் வளர்ச்சியை பல்நோக்கு திட்டங்கள் மூலம் ஊக்குவிக்கின்றது. இத்திட்டங்கள் நமது மிகப் பெரிய மனிதவளம் மற்றும் நிதி ஆதாரங்களின் பின்பலத்தில் செம்மையாகச் செயல் படுத்தப்பட்டு வெற்றி பெற்றும் வருகின்றன. இதனால்



நாட்டில் பொருளாதார வளர்ச்சி, கல்வி, சுகாதாரம், வீட்டுவசதி, வேலை வாய்ப்பு மற்றும் இதரவசதிகள் வளர்ச்சி பெற்றுள்ளதால் மக்களின் வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படைத் தேவைகளும் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றன.

## மக்கட்தொகைக் கணக்கெடுப்பு

நாட்டின் மக்கட்தொகை, மற்றும் வளர்ச்சியின் அடிப் படையில் எதிர்கால மக்கட்தொகையின் எண்ணிக்கையைக் கணக்கிட இயலும். இதன் அடிப்படையில் திட்டங்கள் தீட்டி செயல்படுத்துவது எளிதாக இயலும் என்பதால் நாட்டின் மக்கட் தொகை கணக்கெடுப்பு என்பது (Census) நாட்டின் வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாத ஒன்றாகும்.

| |
|---|
| மக்கட்தொகைக் கணக்கெடுப்பு (Census) என்பது மக்களின் எண்ணிக்கை மற்றும் சமூக, பொருளாதார நிலைகளின் புள்ளி விவரங்களாகும். |

மக்கட்தொகைப் புள்ளிவிவரங்கள் பத்து வருடங்களுக்கு ஒரு முறை கணக்கிடப்படுகின்றன. உலகில் எல்லா நாடுகளும் மக்கட்தொகையினைக் கணக்கெடுக்கின்றன. சென்ற *1991*-ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி இந்தியாவின் மக்கட்தொகை *846.3* மில்லியன். *2001*-ன் கணக்கெடுப்பின்படி *1,027* மில்லியன்களாக உயர்ந்து உலகின் இரண்டாவது அதிக மக்கட் தொகை கொண்ட நாடாக நமது நாடு விளங்குகின்றது.

## மக்கட்தொகைப் பரவல்

இந்தியாவை மக்கட்தொகைப் பரவலின் அடிப்படையில் மூன்று வட்டாரங்களாகப் பிரிக்கலாம் (படம் *8.1*). அவைகள் :

1. அதிக மக்கள் செறிந்த பகுதிகள்
2. மிதமான மக்கள் செறிந்த பகுதிகள்
3. குறைந்த மக்கட்தொகை உள்ள பகுதிகள்

## அதிக மக்கள் செறிந்த இடங்கள்

இந்தியாவில் வேளாண் தொழில் அதிகம் செய்யும் பகுதி களிலும், அதிக மக்கட்தொகை உள்ள பகுதிகளிலும் மக்கள்




படம் 8.1



நெருக்கம் அதிகம் காணப்படுகின்றது. வேளாண் தொழில் செழிப்பானப் பகுதிகள் மக்களடர்த்தியில் முதன்மையாய் விளங்குகின்றன. கங்கைச் சமநிலங்கள், கடற்கரைச் சமவெளிகளில் மக்கள் நெருக்கம் அடர்ந்து காணப்படு கின்றது. இதனைப் போன்றே தீபகற்ப இந்தியாவிலும் காவிரி, கோதாவரி, கிருஷ்ணா, மகாநதி வடிநிலப் பகுதிகளில் மக்கள் நெருக்கம் அடர்ந்து காணப்படுகின்றது. அதிக மழைப் பொழிவும், வளமான வண்டல் மண்ணும் உள்ளதால் கடற்கரைச் சமநிலங்களில் வேளாண் தொழில் நன்கு நடைபெறுகின்றது. எனவே, கிழக்குக் கடற்கரைச் சமவெளிகளில் அதிக மக்கள் செறிந்துள்ளனர்.

| |
|---|
| கங்கைச் சமவெளிகளில் அமைந்துள்ள உத்திரபிரதேசம், பீகார், மேற்கு வங்காளம், வட மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங் களில் மக்கட்செறிவு அதிகம் காணப்படுகின்றது. கிழக்குக் கடற்கரைச் சமவெளிகளில் ஆந்திரப் பிரதேசத்தில் அதிக மக்கள் நெருக்கம் காணப்படுகின்றது. |

### மிதமான மக்கள் செறிந்துள்ள பகுதிகள்

தீபகற்ப இந்தியாவில் உயர்நிலங்களில் நிலவும் வறண்ட காலநிலையும், வளம் குறைந்த மண்ணும் வேளாண் தொழிலுக் குத் தடையாக உள்ளன. இப்பகுதிகளில் வறட்சியைத் தாங்கக் கூடிய தானியங்கள் பயிர் செய்யப்படுகின்றன. கரிசல் மண் உள்ள பகுதிகளில் பருத்தி பயிரிடப்படுவதால், பருத்தியைப் பிரித் தெடுக்கும் தொழில்கள் வளர்ச்சி பெற்று இப்பகுதியை செழுமை யாக்குகின்றன. இதனால் இப்பகுதிகளில் மக்கள் அடர்ந்து காணப்படுகின்றனர். குறிப்பாக மகாராஷ்டிரா, கர்நாடகாவில் கரிசல் மண் பகுதிகளில் மக்கள் அடர்த்தி செறிவாயுள்ளது. கரிசல் மண் பகுதிகளைத் தவிர தீபகற்ப இந்தியாவின் மற்ற பகுதிகளில் மிதமான மக்கள் அடர்த்தி காணப்படுகின்றது. தமிழ்நாட்டிலும் மிதமான மக்கள் அடர்த்தியே உள்ளது. தீபகற்ப இந்தியாவின் சில பகுதிகளில் தாது வளங்கள் இருந்த போதிலும், தாது வளங்களை நம்பியுள்ள பொருளாதாரச் செயல்கள் நடைபெறும் பகுதிகளில் மக்கள் அடர்த்தி மிதமாகவே உள்ளது.

சோட்டா நாக்பூர் பீடபூமியில் தாது வளங்கள் கிடைப்பதால் தாது வளங்களை அடிப்படையாகக் கொண்ட தொழில்கள் வளர்ச்சி பெற்றுள்ளன. அது அதிக மக்கள் அடர்த்தி உள்ள பகுதிக்கு அருகாமையில் அமைந்துள்ளது. எனவே, மக்கள் அடர்த்தி தாதுவளங்களின் தன்மையின் அடிப்படையில் பரவிக் காணப்படுகின்றது. மற்ற பகுதிகளில் மக்கள் பரவல் சிதறலாகக் காணப்படுகின்றது.

## குறைந்த மக்கள் அடர்த்தி உள்ள பகுதிகள்

மலைப்பகுதிகள் குன்று பகுதிகளில் மக்கள் வாழ்வதற்கு ஏற்றச் சூழல் இல்லாத காரணத்தால் மக்கள் அடர்த்தி குறைவாக உள்ளது. தீபகற்ப இந்தியாவில் மேற்குத் தொடர்ச்சி மலைகள், கிழக்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளிலும், புற தீபகற்ப இந்தியாவில் இமயமலைப்பகுதியிலும் மக்கள் குறைந்த எண்ணிக்கையிலேயே வசிக்கின்றனர். மலைப்பகுதிகளில் காணப்படும் காலநிலை, அங்குள்ள இயற்கைத் தாவரங்கள், மண் அரிப்பு போன்றவைகள் மனிதச் செயல்களுக்குத் தடையாக உள்ளன. மேலும் உணவு தானியங்களைப் பயிர் செய்ய ஏற்ற சூழல் இல்லாத காரணத்தாலும் சரிவுகளில் காணப்படும் வளமற்ற மண், மண் அரிப்பு ஆகியவை வேளாண் தொழிலுக்குத் தடைகளாக உள்ளதால் மக்கள் நெருக்கம் குறைவாகக் காணப்படுகின்றது. ஆனால் மலைப்பகுதிகளில் காணப்படும் பள்ளத்தாக்குகளில், குறிப்பாக இமயமலையில் காஷ்மீர் பள்ளத்தாக்கில், மக்கள் அடர்ந்து காணப்படுகின்றனர்.

| |
|---|
| இமயமலையில் ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநிலம் அதிக மக்கள் பரவலைக் கொண்டுள்ளது. |

மலைப்பிரதேசங்களில் நிலவும் காலநிலை, இயற்கை அழகின் காரணமாகச் சிலபகுதிகள் சுற்றுலா தலங்களாக வளர்ச்சி பெற்றுள்ளன. தீபகற்ப இந்தியாவில் மேற்குத் தொடர்ச்சி மலைகளில் உள்ள நீலகிரி, ஆனைமலை, கொடைக்கானல், பழனி குன்றுகளும், புற தீபகற்ப இந்தியாவில் இமயமலையில் அமைந்துள்ள டார்ஜிலிங், சிம்லா, டேராடுன் போன்றவை சுற்றுலாத் தலங்களாகவும்,



கோடை வாழிடங்களாகவும் விளங்குவதால் ஓரளவு மக்கள் செறிந்து காணப்படுகின்றனர்.

வடகிழக்கு மாநிலங்களான அருணாசலப்பிரதேசம், மணிப்பூர், அசாம், மேகாலயா, திரிபுரா, நாகாலாந்து ஆகிய பகுதிகளில் மிகக் குறைவான மக்கள் காணப்படுகின்றனர். அசாமில் பெட்ரோலிய தொழிற்சாலையின் காரணமாக மக்கள் நெருக்கம் சிறிது அதிகம் காணப்படுகின்றது.

இது தவிர தலச்சூழல் காரணமாகவும் மக்கள் தொகைப் பரவலில் மாறுதல்கள் தெரிகின்றன. கேரளா நிலப்பரப்பு குறைவாகவும், பெரும்பரப்பு அடர்ந்த காடுகளாகவும் கடற்கரை குறுகலாகவும் உள்ளதால் மக்கள் வசிக்கக்கூடிய நிலப்பரப்பு சிறியதாகின்றது. இதன் காரணமாக, அங்கு மக்கள் நெருக்கம் அடர்ந்து காணப்படுகின்றது.

வடமேற்கு இந்தியாவில் தார்ப் பாலைவனம் மக்கள் வாழ ஏற்றதல்ல. இராஜஸ்தானின் சில பகுதிகள், குஜராத்தின் சில பகுதிகள், பஞ்சாபில் ஒரு பகுதி ஆகியவை இந்தப் பாலை வனத்தில் அடங்கும். ஒரிசாவின் பெரும்பகுதி அரைவறண்ட பாலையாகும். இப்பகுதிகளில் மக்கள் நெருக்கம் மிகவும் குறைவாக உள்ளது. இந்தியாவின் டெல்லி யூனியன் பிரதேசத் தில் மக்கள் நெருக்கம் மிதமானதாகவே உள்ளது. இந்தியாவின் மக்கட்தொகைப்பரவல் அங்கு நிலவும் தல அமைப்பு, காலநிலை, மண்வகை, வேளாண் நிலை, தொழில் வளர்ச்சி, சேவைகள் போன்றவற்றின் அடிப்படையில் அமைகின்றது.

## பாலின விகிதம்

2001-ஆம் ஆண்டின் மக்கட்தொகை கணக்கெடுப்பின் படி இந்தியாவில் 1,027 மில்லியன் மக்களும், அவர்களுள் 523.8 மில்லியன் ஆண்களும், 488.6 மில்லியன் பெண்களும் உள்ளனர். 1901-ஆம் ஆண்டில் 1,000 ஆண்களுக்கு 977 பெண்களாக இருந்த விகிதம் இன்று 929 பெண்களாகக் குறைந்துவிட்டது. இந்தியாவின் கேரளாவில் மட்டும்தான் ஆண்களைவிடப் பெண்கள் அதிகம். ஓராயிரம் ஆண்களுக்கு 950 க்கும் அதிக பெண்களைக் கொண்ட

மாநிலங்கள் இமாசலப் பிரதேசம், ஆந்திரப் பிரதேசம், கோவா, கர்நாடகா, மணிப்பூர், ஒரிசா, தமிழ்நாடு, மற்றும் சண்டிகார். மற்ற மாநிலங்களில் மிகக் குறைந்த விகிதத்தில் பெண்கள் உள்ளனர்.

ஆண் - பெண் விகிதம் குறைவதைத் தடுக்க அரசு பல வழிகளில் முயற்சி எடுத்து வருகின்றது. பெண்களுக்குக் கல்வி, சமஉரிமை அளிப்பதுடன் கல்வியின் மூலம் சமூக மாற்றத்திற் கான விழிப்புணர்ச்சியையும் ஏற்படுத்துகின்றது. இந்திய அரசு கடுமையான முயற்சியை மேற்கொண்டு பெண்ணின் திருமண வயதை அதிகரிப்பது, குடும்ப நலத்திட்டத்தைப் பரப்புவது, பொதுக் கல்வியை அளிப்பதன் மூலம் 'சிறிய குடும்பம்' என்ற இலக்கினை அடையப் பாடுபடுகின்றது. இத்திட்டங்கள் மத்திய, மாநில அரசுகளின் கூட்டு முயற்சியில் செயல்படுத்தப் படுகின்றன.

### மனித வள மேம்பாட்டிற்கான ஊக்குவிப்புகள்

1996-ஆம் ஆண்டு ஜுலை 4 - 5 ஆம் தேதிகளில் டெல்லியில் கூடிய முதலமைச்சர்களின் மாநாட்டில் 2000 ஆண்டிற்குள் அடைய பல இலக்குகள் வகுக்கப்பட்டன.

1. கிராம, நகர்ப்புறங்களில் 100 சதவிகித சுத்தமான குடிநீர் வழங்குவது.
2. கிராம, நகர்ப்புறங்களில் ஆரம்ப மருத்துவ வசதிகளை நிறுவுவதில் நூறு சதவிதம் முழுமை பெறுவது.
3. அனைவருக்கும் ஆரம்பக் கல்வியை அளிப்பது.
4. வீடில்லாத ஏழை மக்களுக்கு வீடுகட்ட நிதியுதவி அளிப்பது.
5. மதிய உணவுத் திட்டத்தை எல்லா கிராம, நகர்ப்புற, சேரி மக்களுக்கும், பின்தங்கிய மக்களுக்கும் விரிவு படுத்துவது.
6. எல்லா கிராமங்களையும் இணைப்பது.
7. வறுமைக் கோட்டிற்கும் கீழ் உள்ள மக்களுக்கு பொதுவிநியோகத்தை ஒழுங்குபடுத்துவது.



வறுமையை ஒழித்து, அடிப்படை வசதிகளை மக்களுக்கு அளித்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதுதான் இவ்விலக்குகளின் நோக்கம். இதனைச் செய்யாவிட்டால் எந்த ஒரு நிலையான வளர்ச்சியும் ஏற்படாது. வறுமை எங்கிருந்தாலும் அது வளர்ச்சிக்குத் தடை என்பதாகவே இந்தியா முழுமையாக நம்புகின்றது. தொடர்ச்சியான பன்னாட்டுச் செயல்முறைகள், உலக மயமாதல் போன்றவைகளின் மூலம் எல்லா மக்களின் வாழ்க்கைத்தரம் உயரும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் ஐக்கிய நாட்டுச் சபை விவாதங்களில் அக்கறையுடன் கூடிய நல்ல நடவடிக்கைகளில் நம்நாடு ஈடுபட்டுள்ளது. அவ்வாறே ஐக்கிய நாடுகள் சபையின் மற்ற நிறுவனங்கள் அரசுகள் சார்புடைய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளன.

எட்டாவது ஐந்தாண்டு திட்டத்தின் (1992 - 97) முக்கிய நோக்கம் மனிதவள மேம்பாடாகும். இதில் சமூக வளர்ச்சி குறிப்பிடத்தக்க வகையில் மேம்பட்டுள்ளது. 1995 - 96 ன் தேசிய வளர்ச்சி விகிதம் 7.1 விழுக்காடாக உள்ளது. அந்த வளர்ச்சி விகிதம் நிலைபடுத்தப்பட்டுள்ளது. மேலும் தடையற்ற வாணிபமும், உலகமயமாதலும் வளர்ச்சியை ஊக்குவித்துள்ளன என்பதனைத் தேசிய வளர்ச்சி விகிதம் உறுதிப்படுத்துகின்றது.

ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டம் 1997 - 2002ல் இந்தியா சுதந்திரம் அடைந்த 50 -ம் ஆண்டு தொடங்கப் பட்டது. இதில் உள்ள திட்டங்கள்.

1. பயிர்த்தொழிலுக்கு முக்கியத்துவம் அளித்து கிராம வளர்ச்சியை மேம்படுத்துவது; போதுமான வேலை வாய்ப்பினை உருவாக்கி வறுமையை ஒழிப்பது.
2. வேகமானப் பொருளாதார வளர்ச்சி, நிலையான விலைவாசி, உணவுப்பாதுகாப்பு போன்றவற்றை குறிப்பாக மிகவும் பின்தங்கிய சமூகத்தினருக்கு வழங்குவது.

3. சுத்தமானக் குடிநீர், ஆரம்ப மருத்துவ வசதி, கட்டாயக் கல்வி, குடியிருப்புகள், கிராமங்களை இணைத்தல் அனைத்தும் குறிப்பிட்ட காலக்கட்டத் திற்குள் நிறை வேற்றப்படவேண்டும்.
4. மக்கட்தொகை வளர்ச்சியைக் குறைப்பது.
5. சமூக விழிப்புணர்ச்சியின் மூலம் எல்லா மக்களையும் ஈடுபடுத்தி சுற்றுப்புறச் சூழலை நிலைப்படுத்துதல்.
6. பெண்களை மேநிலைப்படுத்துதல், பின்தங்கிய, மலைச் சாதியினர், தாழ்த்தப்பட்டவர் சமூகப் பொருளாதார வளர்ச்சி.
7. பஞ்சாயத்து அரசு, கூட்டுறவு, சுய முயற்சி மூலம் மக்களை ஒன்றுபடுத்தி வளர்ச்சியை ஊக்குவித்தல்.
8. தன்னம்பிக்கையை வளர்த்தல்

இத்திட்டங்களில் இந்திய ஓரளவிற்கு முன்னேற்றம் கண்டு நல்ல நிலையில் வாழ்க்கைத் தரம் உயர பாடுபட்டது மிகவும் தெளிவு.

**கற்றல் அடைவுகள்**

1. மாணவர்கள் மனிதவளம் மற்றும் மக்கட்தொகை கணக்கெடுப்பு பற்றி அறிந்து கொள்கின்றனர்.
2. மாணவர்கள் மக்கள் பரவல், அடர்த்தி, வளர்ச்சி ஆகியவற்றை அறிந்து கொள்கின்றனர்.
3. மாணவர்கள் பாலினக்கூட்டு பற்றி அறிந்து கொள்கின்றனர்.
4. மாணவர்கள் குடும்பநலத்திட்டம், பிறப்பு விகிதத்தைக் குறைக்க வேண்டியதன் அவசியம் பற்றி அறிந்து கொள்கின்றனர்.

## சுய மதிப்பீடு

**I.** சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்

1. மக்கட்தொகை புள்ளிவிவரம் எத்தனை ஆண்டுக்கு ஒரு முறை கணக்கெடுக்கப்படுகின்றது

அ. பத்து ஆண்டுகள் ஆ. இருபது ஆண்டுகள்

இ. முப்பது ஆண்டுகள் ஈ. ஒரு வருடம்



2. 1991-ம் வருட கணக்கெடுப்பின்படி இந்தியாவின் மக்கட்தொகை

அ. 406.3 மில்லியன் ஆ. 846.3 மில்லியன்

இ. 1,000 மில்லியன் ஈ. 400 மில்லியன்

3. வேளாண் தொழில் செய்ய ஏற்ற எளிதானப் பகுதி

அ. மலைப் பிரதேசம் ஆ. பீடபூமிப் பிரதேசம்

இ. சமவெளிகள் ஈ. பாலைவனம்

4. காவிரி, கோதாவரி, கிருஷ்ணா, மகாநதி வடிநிலங்கள்

அ. மேற்குக் கடற்கரைப்பகுதி ஆ. கிழக்குக் கடற்கரைப்பகுதி

இ. இமயமலைத் தொடர் ஈ. பள்ளத் தாக்கு

**II.** கோடிட்ட இடங்களை நிரப்புக

1. இந்தியாவில் அதிக மக்கட்தொகை உள்ள மாநிலம் __________
2. __________ பகுதியில் மக்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழல் இல்லை.
3. இமயமலையின் __________ பகுதியில் பழங்குடி மக்கள் (மலை வாழ் மக்கள்) மட்டும் வசிக்கின்றனர்.
4. ________________ மாநிலத்தின் பெரும்பகுதி பாலை நிலமாக உள்ளதால் மிதமான மக்கட்தொகையாக உள்ளது.
5. மேற்கு கடற்கரையில் அதிக எண்ணிக்கையில் மக்கள் காணப்படும் பகுதிகள் __________

**III.** பின்வருவனவற்றைப் பொருத்துக

| | | |
|---|---|---|
| 1. அசாம் | -- | இமயமலை, குளிர் - குறைந்த மக்கள் |
| 2. காஷ்மீர் பள்ளத்தாக்கு | -- | தலைநகர், பன்னாட்டு மக்கள் நகரம் (Cosmopolitan) |
| 3. டெல்லி | -- | வடகிழக்கு மாநிலம், மலைசாதியினர் |

4. பீடபூமிப் பிரதேசம் -- கிழக்குக் கடற்கரை
5. இராஜஸ்தான் -- உயர்நிலங்கள் பாலைவனப்பகுதி - குறைந்த அடர்த்தி

**IV.** சுருக்கமாக விடையளிக்கவும்

1. மக்கட்தொகைக் கணக்கெடுப்பு என்றால் என்ன?
2. எந்த மாநிலங்களில் அதிக மக்கட்தொகைகள் உள்ளன?
3. பாலின விகிதம் பற்றி சிறுகுறிப்பு வரைக.
4. கங்கைச் சமவெளி ஏன் அதிக மக்கட்தொகையைப் பெற்று உள்ளது?
5. மலைப்பகுதியில் குறைந்த மக்கள் வசிக்கக் காரணம் என்ன?

**V.** விரிவானை விடை தருக

1. இந்தியாவின் மக்கட்தொகைப் பரவலைப் பற்றி விரிவாக விவரி.
2. இந்திய வளர்ச்சிக்குப் போடப்பட்டத் திட்டங்கள் பற்றி விரிவாக விவரி.

**VI.** செய்முறைப் பயிற்சிகள்

1. கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைப்படத்தில் மக்கட் தொகைப் பரவலை எளிய வகை ஆரணிகள் (patterns) மூலம் வரைக.

## பாடம் 9

# எழுச்சியுறும் இந்தியா

**கற்றல் நோக்கங்கள்**

1. மாணவர் இந்தியாவின் மேம்பாட்டினைப் பற்றித் தெரிந்து கொள்ளுதல், இந்தியாவின் சாதனைகள், தடைகள் பற்றியும் அறிந்து கொள்ளல்.
2. மாணவர் இந்திய வளர்ச்சிக்காகத் திட்டமிட்ட ஐந்தாண்டு திட்டங்கள், அதன் விளைவுகள், சாதனைகள், தடைகள் பற்றி அறிந்து கொள்ளுதல்.
3. மாணவர் திட்ட இலட்சியங்கள், நோக்கங்கள், மக்களும், அரசும் செய்ய வேண்டிய செயல்கள் பற்றி அறிந்து கொள்ளுதல்.
4. மாணவர் இந்தியாவில் நிகழ்ந்துவரும் எழுச்சியையும் செயல்களையும் தெரிந்து கொள்ளுதல்.

மக்களின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, இருப்பிடம் ஆகியவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியது ஒவ்வொரு நாட்டு அரசின் தலையாய கடமையாகும். அத்துடன் மக்களின் எண்ணங்கள், கற்பனைகள், கலைகள், போக்குவரத்து, கல்வி, சுகாதாரம், மருத்துவம் போன்ற இதர வசதிகளையும் வளப்படுத்தி மக்களின் வாழ்க்கைத் தரத்தினையும் உயர்த்த வேண்டும்.

இன்று இந்தியா பல துறைகளில் முன்னேற்றம் அடைந்து இருந்தபோதும், பெரும்பாலான மக்களின் அடிப்படைத் தேவைகளை முழுமையாகப் பூர்த்திசெய்ய முடியவில்லை. இந்தியாவின் தனிநபர் வருமானம் மிகவும்

குறைவு. இது அமெரிக்காவின் தனிநபர் வருமானத்தில் 60ல் ஒரு பங்குதான். அதிக அளவிலான மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்கின்றனர்.

எனவே, இந்திய அரசு இந்நிலைகளைத் திருத்தம் செய்ய திட்டமிட்டப் பொருளாதாரச் செயல்முறைகளையும், சமூக வளர்ச்சித் திட்டங்களையும் வகுத்து செயல்படுத்துகின்றது. மிக வேகமான மக்கள் தொகை அதிகரிப்பு நமது வளர்ச்சியை பெருமளவில் பாதிக்கின்றது.

1950-ஆம் ஆண்டு முதல் தேசிய திட்டக்குழுவினை நிறுவி ஐந்தாண்டுத் திட்டங்கள் பல தீட்டி செயல்படுத்தி வருகின்றது. ஐந்தாண்டுத் திட்டங்களின் முக்கிய நோக்கம் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதும், நாட்டின் பொருளாதார, சமூக முன்னேற்றத் திற்கான வழிகளைக் கண்டறிந்து நாட்டை எல்லா வழிகளிலும் முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்வது மாகும்.

முதல் ஐந்தாண்டுத் திட்டம் 1951-56-ல் தீட்டப்பெற்றது. இதுவரை ஒன்பது ஐந்தாண்டு திட்டங்கள் நிறைவேற்றப் பட்டுள்ளன. இந்தத் திட்டங்களின் முக்கிய நோக்கம் பொருளாதாரச் சீர்திருத்தம், மனிதவள மேம்பாடு, தனியார் மயமாக்குதல், பொதுத்துறை நிறுவனங்களைச் சீரமைப்பது மற்றும் தடையற்ற வாணிபம் பெருக்குவது ஆகியவை களாகும்.

இந்திய அரசாங்கம் குறிப்பிடத்தக்க அளவில் நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் முன்னேற்றம் கண்டுள்ளது. குறிப்பாக 1991-லிருந்து ஏற்பட்ட பொருளாதாரத் தாராள மயமாதல் இந்தியப் பொருளாதாரம் நிதி நிலைமையில் முன்னேற்றம் காண உதவிற்று. மேலும் தொழில்கள், வேளாண்மை, உணவு உற்பத்தி ஆகியவை குறிப்பிடத்தக்க வகையில் முன்னேற்றம் அடைந்துள்ளன. நம்முடைய உற்பத்திப் பொருட்களை வெளிநாடுகளில் விற்கவும், அதிக வேலை வாய்ப்பிற்கும், வர்த்தக வளர்ச்சிக்கும் வழி காண்பித்துள்ளது. ஐந்தாண்டுத் திட்டங்கள் மூலம் நாடு பல துறைகளில் முன்னேறியுள்ளது என்பதில் எவ்வித ஐயமுமில்லை.



சுமார் 40 - 50 வருடங்களுக்கு முன்பு நமது முன்னோர்கள் பழமையான முறையில் வேளாண்மையில் ஈடுபட்டிருந்தனர். புதிய அறிவியல் நுட்பப் பாதுகாப்பு முறைகள் வழக்கில் இல்லாமல் இருந்த காரணத்தால் தானியங்கள் முதிர்ச்சி பெற அதிக காலம் எடுத்துக் கொண்டன. மேலும் சாகுபடியின் அளவும் குறைவாக இருந்தது. பயிர்த்தொழிலில் புதிய முறைகள், பயிர் பாதுகாப்பு, செயற்கை உரங்கள் பயன் படுத்துவது போன்றவை இல்லாத காரணத்தால் உணவுப் பற்றாக் குறையும் நிலவியது. உழுபவர் கூட உணவுப் பற்றாக் குறையால் ஏழ்மையில் இருந்தனர்.

1960-ஆம் ஆண்டிற்குப் பிறகு வேளாண் தொழிலில் வேகமான மாற்றம் ஏற்பட்டது. நவீனமுறையில் தீவிரச் சாகுபடி செய்யப்பட்டது. பசுமைப்புரட்சி பரவலாக அறிமுகப் படுத்தப்பட்டு தரமான விதைகள், உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள், டிராக்டர்கள் பயன்படுத்தப்பட்டு உற்பத்தி அதிகரிக்கத் தொடங்கியது. இன்று இந்தியா 200 மில்லியன் டன்கள் உணவு தானியங்களை உற்பத்தி செய்கின்றது. கோதுமை உற்பத்தியில் உலகில் சீனா, ஐக்கிய அமெரிக்கா விற்கு அடுத்தபடியாக மூன்றாவது இடத்தில் இந்தியா உள்ளது. பன்னாட்டு வேளாண் ஆராய்ச்சி நிறுவனம் இன்னும் ஒரு சில ஆண்டுகளில் இந்தியா அமெரிக்காவை விட கோதுமை உற்பத்தியில் முன்னேறி இரண்டாவது இடத்தைப் பெற்றுவிடும் என்று கூறுகின்ற அளவிற்கு முன்னேறியுள்ளது.

**இந்தியாவின் ஐந்தாண்டுத் திட்டங்கள் பற்றி ஓர் பார்வை**

***1. முதல் ஐந்தாண்டுத் திட்டம் (1951 - 1956)*** : இத்திட்டம் வேளாண்மைக்கு முன்னுரிமை அளித்து நாட்டின் வேளாண், நீர்பாசன, மின் உற்பத்தித் துறைகளில் முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

***2. இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் (1956 - 1961)*** : இத் திட்டம் தொழில் வளர்ச்சிக்கு முன்னுரிமை அளித்தது. இதன் மூலம் பல கனரகத் தொழிலகங்கள் நிறுவப்பட்டன.

தொழில் கொள்கையில் பலமாறுதல்களையும் ஏற்படுத்தின. அன்னிய உதவி அதிக அளவில் கோரப்பட்டது.

**3. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் (1961 - 1966) :** இதன் நோக்கம் நாடு தன்னிறைவு பெறுவதுதான். ஆனால் தேசிய வளத்தைப் பயன்படுத்துவதில் ஏற்பட்ட சிக்கலாலும் பொருளாதாரச் செயல் முறைகள் அன்னிய முதலீட்டைச் சார்ந்து இருந்ததாலும் எதிர்பார்த்த வெற்றியைப் பெறவில்லை.

**4. ஆண்டுத் திட்டங்கள் (1966 - 67 - 68, 68 - 69) :** மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட தோல்வியினால் மிகுந்த நெருக்கடியை சமாளிக்க ஆண்டுத் திட்டங்கள் போடப்பட்டன. தொடர்ச்சி யாக மூன்று ஆண்டுகள், ஆண்டுத் திட்டங்கள் மட்டுமே திட்டமிட்டு செயல்படுத்தப்பட்டன.

**5. நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் (1969 - 1974) :** இதன் நோக்கம் வேகமானப் பொருளாதார வளர்ச்சி, மேலும் சமூகத்திலுள்ள ஏற்றத் தாழ்வுகளைக் களைவது, வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது ஆகும். இத்திட்டத்தில் பின்தங்கிய பகுதிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது. நிலையான, தன்னிறைவு அடைந்த பொருளாதாரத்தைப் பெற, அதனை மேம்படுத்துவதுதான் இதன் குறிக்கோள். ஆனால் பண வீக்கமும், பல போராட்டங்களும், சமூகத்தில் ஏற்பட்ட குழப்பங்களும், தடைகளும் எதிர்பார்த்த வெற்றியைத் தரவில்லை.

**6. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் (1974 - 1979) :** ஏழ்மையை நீக்குவது, நீண்டகால அடிப்படையில் 1974 - 75-லிருந்து 1985 - 86 வரை போடப்பட்டது. பின்னர் ஆண்டுத் திட்டங்களாக மாற்றப்பட்டது. சுழல் திட்டங்கள் உருவாக்கி பின்னர் அதனையும் தள்ளுபடி செய்துவிட்டனர்.

**7. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம் (1980 - 1985) :** பொதுவான வளர்ச்சியே இதன் குறிக்கோளாகும். ஐந்தாண்டு திட்டங்களி னால் மாற்றம் ஏற்பட்டது என்பது இந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் இருந்துதான் தெரியவந்தது.



**8. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம் (1985 - 1990) :** உணவு தானியங்களின் உற்பத்தியைப் பெருக்குவது வேலை வாய்ப் பினை அதிகரிப்பது முக்கியக் குறிக்கோளாகும். ஆனால் பொதுத்துறை நிறுவனங்கள் எதிர்பார்த்த அளவில் செயல்படாத காரணத்தால் இத்திட்டம் வெற்றி பெறவில்லை.

**9. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம் (1992 - 1997):** 1990-91, 1991-92, ஆகிய மூன்று ஆண்டுகளுக்கு ஆண்டுத் திட்டங்கள் தீட்டப்பட்டன. 1992 ல் ஐந்தாண்டுத் திட்டம் தீட்டப்பட்டது. இதன் முக்கிய நோக்கம் மனிதவள மேம்பாடு, தனியார் மயமாதல், பொதுத்துறை நிறுவனங் களைக் குறைத்தல், பொருளாதாரச் சீரமைப்பு செய்தல் ஆகியவையாகும். இது ஓரளவு வெற்றி பெற்ற திட்டம் ஆகும். பொருளாதார சுதந்திரம் மெதுவாக உருவானது.

**10. ஒன்பதாவது ஐந்தாண்டுத்திட்டம் (1997 - 2002) :** மனிதவள மேம்பாடு, தனியார்மயமாதல், தனியார் துறைக்கு வாய்ப்புக் கொடுத்தல் ஆகியவற்றிற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப் பட்டது. சீரமைப்பு தொடரப்பட்டது. உலகமயமாதலின் காரணமாக வெளிநாட்டு முதலீடுகள் இந்தியாவில் முதலீடு செய்யப்பட்டு தொழிலகங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இந்திய மக்கட்தொகை உற்பத்திப் பொருட்களை விற்க நல்ல சந்தை என்பதை நிரூபித்தது.

2001 செப்டம்பர் 9/11 ல் ஏற்பட்ட சிறிது தளர்ச்சிக்குப் பிறகு இந்தியா தகவல் தொழில் நுட்பத்தில் (IT) முன்னேறி வருகின்றது.

**11. பத்தாவது ஐந்தாண்டுத் திட்டங்கள் (2002 - 2007) :** உணவு தானியங்கள், பருப்பு வகைகள், எண்ணெய் வித்துக்கள் ஆகியவைகள் உற்பத்தி அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதிக மக்கள் தொகை பெருக்கத்திலும் குறிப்பிடத்தக்க அளவில் வறுமைக் கோட் டிற்குக்கீழ் உள்ளவர்களின் எண்ணிக்கை குறையும் என்ற எதிர்பார்ப்பு உள்ளது.

ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலம் தொழில் வேகமாக வளர்ந்தது. பண்டிட் ஜவஹர்லால் நேரு இந்தியத் தொழில்களின் வளர்ச்சியை ஐந்தாண்டுத் திட்டங்கள் மூலம் தொடங்கி வைத்தார். மாட்டு வண்டிகள், இரு சக்கர வாகனங்கள், மிதி வண்டிகள், பேருந்துகள், இரயில் பெட்டிகள், பெரிய விமானங் களின் உற்பத்தி பெருகியது. பொதுத்துறை, தனியார் துறையில் முன்னேற்றம் ஏற்பட்டு பல கனரகத் தொழிலகங்களும், மென்தொழிலகங்களும் நிறுவப்பட்டன. பெரிய, சிறிய தொழிலகங்களின் வளர்ச்சி வேகமாக்கப்பட்டது. தொழிற் பேட்டைகள் உருவாக்கப் பட்டன.

இந்தியாவின் வேகமான வளர்ச்சியின் விளைவாக பலதுறைகளில் இன்று இந்தியா முன்னணியில் உள்ளது. அணுசக்தி, விண்வெளி ஆராய்ச்சி, செயற்கைக்கோள் உற்பத்தி, அதனை விண்வெளியில் அனுப்புதல், கணிப்பொறி, மென் பொருள் உற்பத்தி போன்றவற்றில் மிகுந்த வளர்ச்சியடைந்துள்ளது. மனிதத் திறமையில் இந்தியா உலகில் மூன்றாவது இடத்தைப் பெறுகின்றது.

கடந்த மூன்றாண்டுகளாக இந்தியாவின் ஏற்றுமதி அதிகரித்துள்ளது. பன்னாட்டு மூலதனங்கள் இந்தியக் கனரகத் தொழிற்சாலைகளையும், மற்ற தொழிலையும் ஊக்குவித்தன. இந்திய அரசும், தனியார், அரசின் முதலீட்டுக் கொள்கையில் சீரமைப்புகளை ஏற்படுத்தியது. இந்தியாவின் நோக்கம் இந்திய தொழிற்சாலைகளின் உற்பத்திப் பொருட்களை பன்னாட்டுச் சந்தையைப் பிடித்து தேவையான அன்னிய செலவாணியை ஈட்டுவதே ஆகும். மேலும் தோல் பொருட்கள், ஆடைகள், தயாரிக்கப்பட்ட ஆடைகள் உற்பத்தியிலும் கவனம் செலுத்து கின்றது. வேலை வாய்ப்பினை ஏற்படுத்தி ஏழ்மையை விரட்டுவதே இந்தியத் திட்டங்களின் முக்கியக் குறிக்கோளாகும்.

உலகின் முன்னணியில் உள்ள வாகனங்கள், வாகன உதிரிப் பாகங்களின் உற்பத்தி நிறுவனங்கள் இந்திய



தொழிலகங்களில் முதலீடு செய்து கூட்டாக உற்பத்தியை மேற்கொள்கின்றனர். இந்தியாவைத் தளமாகக் கொண்டு கார் தொழிலகங்கள் நிறைய ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வாகன ஊர்தித் தொழில்களில் அதிக மாற்றம் ஏற்பட்டுள்ளது. இந்தியாவின் டாட்டா கார் நிறுவனம், ஜெர்மனியின் பென்ஸ் நிறுவனத்துடன் இணைந்து கார் தயாரிக் கின்றனர். தொழில் நுட்பப் பகுதியில் இந்தியா மிகப்பெரிய வளர்ச்சியை எட்டியுள்ளது. விண்வெளி ஆராய்ச்சியில் இந்தியா தற்போது அமெரிக்க ஐக்கிய நாட்டுடன் போட்டியிடுகின்றது. இந்தியாவின் நவீன விண்கலம் IRS IC முழுவதும் இந்தியத் தொழில்நுட்பத்தால், இந்தியாவில் தயாரிக்கப்பட்டதாகும். இது தாதுவளங்களை மதிப்பிட மிக உதவியாக உள்ளது. மேலும், இதில் நிறுவப்பட்டுள்ள சக்தி வாய்ந்த நுட்பமாக பரிசோதிக்கும் கருவி (Sensor), தொலையுணர்வுப் பொருட்கள் வர்த்தக ரீதியிலும் வளர்ச்சி பெற உதவுகின்றது. விண்கலம் ஆராய்ச்சி மட்டும் அல்லாமல் விமான நிலையம், துறைமுகம், கப்பல் கட்டும் தளம் போன்ற முக்கியமான இட அமைப்புகளின் பிம்பங்களையும் பெற வாய்ப்புள்ளது. விண்வெளியில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை இந்தியா பெற்றுள்ளது (படம் *9.1*).

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் நில நடுக்கோட்டு விண்கல ஏவுதளம் (Equatorial Rocket Launching Station) திருவனந்தபுரம் அருகிலுள்ள தும்பாவில் நிறுவப்பட்டு உள்ளது. இந்நிறுவனம் *1968*-ல் ஐக்கிய நாடுகள் சபைக்காக ஏவுதளத்தை அர்ப்பணித்தது.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி (ISRO) இந்திய விண்வெளி ஆராய்ச்சிக்கு மையமாக வளர்ந்துள்ளது.

### வளர்ச்சியின் தாக்கம்

பல துறைகளில் இந்தியா வளர்ச்சி பெற்றுள்ளது. குறிப்பாக கல்வி, மருத்துவம் ஆகியவற்றில் மிகுந்த வளர்ச்சியினைப் பெற்றுள்ளது. *1947*-ல் இந்தியா சுதந்திரம் அடைந்தபோது இந்தியரின் சராசரி வாழ்க்கை *27* வருடங்களாகும். தற்போது அது *67* ஆக உயர்ந்துள்ளது.




படம் 9.1



கல்வியறிவைப் பொருத்தவரை, சுதந்திரம் அடைந்தபோது *10* விழுக்காடாக இருந்தது. இன்று *61* விழுக்காடாக உயர்ந்துள்ளது. பெண் கல்வியில் மிகப்பெரிய மாற்றம் நிகழ்ந்துள்ளது. ஆயிரக் கணக்கான நீர்த்தேக்கங்கள் கட்டப்பட்டுள்ளன. நல்வாழ்விலும் கல்வியிலும் முன்னேற்றம் கண்டுள்ளது. இருந்தும் நம் நாடு இன்னும் வளர்ச்சி பெறவேண்டும்.

வளர்ச்சியின் நடுவே சமூகப் பொருளாதாரச் சிக்கல்கள் உள்ளன. ஆனால் ஏழ்மையிலும் ஜனநாயகம் தழைத்துள்ளது. பழமையானப் பொருளாதாரக் கொள்கைகளைத் தவிர்த்து, புதிய கொள்கைகளை இந்தியா பின்பற்றத் தொடங்கியுள்ளது.

## உலகமயமாதலில் இந்தியா

உலகமயமாதல் இந்தியாவில் இரண்டு வழி நிகழ்வுகளில் செயல்படுகின்றது. இந்தியாவில் வாழ்க்கையின் எல்லா நிலை களிலும் இதன் தாக்கம் தெரியவந்துள்ளது. இவை பொருளா தாரத்தின் வழியே ஊடுருவி மறு வடிவத்தையும், இயக்கும் விதத்தையும் மாற்றி அமைத்துள்ளன. இதனால் இந்தியா உலகில் தனது இடத்தினைத் திடப்படுத்தி, மாற்றமடைந்து அண்டை நாடுகளுடன் நல்ல தொடர்பு வைத்துக் கொள்ள முடியும். இந்தியாவின் கல்வி மற்றும் கலாச்சார வாழ்க்கை, தொலைக் காட்சி, செய்தித்தாள்கள் மற்றும் புலன் காட்சி போன்ற அனைத்திலும் மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டே இருப்பதில் இருந்து தெரியவருகின்றது. பத்து ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததைவிட இந்தியா இன்று முற்றிலும் மாற்றம் பெற்று உள்ளது.

இந்தியா உலகமயமாதலின் தாக்கத்தினை இயக்கமில்லா வகையில் ஏற்கவில்லை. இந்தியாவில் நேரிடையாகவும் வெளிநாடுகளில் வாழும் இந்திய மக்களின் வழியாகவும் உலகமயமாதல் அதிகரித்துக் கொண்டிருக்கின்றது. இந்தியாவின் இலக்கியம், கலைகள், திரைப்படங்கள், மதங்கள், உணவுகள், உடைகள், நவீனங்கள் மற்றும் இசை ஆகியவைகள் மேற்கத்திய

நாடுகளின் ஒருங்கிணைந்த பகுதிகளாக இன்று உள்ளன. இந்தியாவின் மருத்துவர்கள், தகவல் தொழில்நுட்ப வல்லுனர்கள், மேலாளர்கள் மற்றும் பொறியாளர்கள் அதிக அளவில் மேற்கத்திய நாடுகளில் குறிப்பிடத்தக்க அளவில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளனர். இவர்கள் தங்களுடைய கடின உழைப்பாலும் திறமைகளாலும் முன்னிலையில் இருக்கின்றனர். இவைகளை வைத்தே இந்தியர்களின் தேவையும் அதிகரித்துள்ளது.

**வாழ்வினைச் சம்பாதி**

என் வாழ்வில்
பாதிநாட்களை
வேலை தேடுவதில் செலவிட்டேன்.
ஏனெனில்
வாழ்க்கையின் அர்த்தமே,
முதன்மையாக,
ஒரு வாழ்வினைச் சம்பாதித்தலே.
இதனை நாம்
செய்யாவிடில்,
நம் வாழ்க்கைக்கு
நாமே குழிதோண்டுவோம்.
ஆனால்
எனக்குப் 'பணி' மீது -
உண்மை உழைப்பின் மீது -
பலமான நம்பிக்கை.
என்றாலும்,
ஐயகோ,
அதனைத் தேடுவதில்
நான்
என் வாழ்க்கையை
வீணடிக்கின்றேன்.
நான் இன்றும்
இச்சூதாட்டத்தில்தான்
காலம் கழிக்கின்றேன்.



**கற்றல் அடைவுகள்**

1. இந்தியாவின் வளர்ச்சியை அறிந்து மாணவர்கள் பெருமிதம் கொண்டது.
2. மாணவர்கள் இந்தியாவின் திட்டமிட்ட செயல்முறைகளையும், ஐந்தாண்டுத் திட்டங்களை அறிந்துகொண்டது.
3. இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களைத் தவிர மற்ற திட்டங்கள் எதிர்பார்த்த வெற்றியைப் பெறவில்லை. அதற்குரிய காரணங்களை மாணவர்கள்அறிந்து கொண்டது.
4. இன்றைய இந்தியாவின் விண்வெளி, அணுசக்தி வளர்ச்சியைக் கண்டு பிரமித்தல்.

## சுய மதிப்பீடு

**I.** சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்

1. போக்குவரத்து, கல்வி, நலவாழ்வு, வீட்டுவசதி ஆகியவை இவ்வகை எனக் கருதப்படுகின்றன.

   அ. சேவைகள் ஆ. நிலஅமைப்பு

   இ. கலாச்சாரம் ஈ. தொழில்கள்

2. இந்தியாவின் முன்னேற்றத்திற்காக 1950-ல் இந்திய அரசாங்கத்தால் இது உருவாக்கப்பட்டது.

   அ. தேசியத் திட்டக்குழு ஆ. ஐந்தாண்டுத் திட்டங்கள்

   இ. பசுமைப் புரட்சி ஈ. செயற்கைக் கோள்கள்

3. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் உற்பத்தியை இந்தியா ஒரு சில ஆண்டுகளில் முந்தக் கூடிய வேளாண் உற்பத்திப் பொருள்

   அ. நெல் ஆ. கோதுமை

   இ. தானியங்கள் ஈ. தோட்டப்பயிர்கள்

4. இந்தியாவின் முக்கிய ஏற்றுமதி

   அ. உணவுப் பொருட்கள் ஆ. துணி நெய்யும் நூல் இழைகள்

   இ. தொழிலகப் பொருட்கள் ஈ. பானங்கள்

5. இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (ISRO) 1968-ல் ஐக்கிய நாடுகள் சபைக்காக அர்ப்பணித்த ஏவுதளம் அமைந்துள்ள இடம்

அ. தும்பா ஆ. சென்னை

இ. டெல்லி ஈ. மும்பை

**II.** கோடிட்ட இடங்களை நிரப்புக

1. இந்தியாவில் இதுவரை __________ ஐந்து ஆண்டு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.
2. 1991-ல் நமது நாட்டில் __________ சீர்திருத்தம் அறிமுகப் படுத்தப்பட்டது.
3. 10-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் பொழுது __________ உற்பத்தியில் இந்தியா இரண்டாவது இடத்தை வகிக்கும்.
4. __________ நவீன விண்கலம் இந்திய தொழில் நுட்பத்தால் முழுவதும் இந்தியாவில் தயாரிக்கப்படுகிறது.
5. நில நடுக்கோட்டு விண்கல ஏவுதளம் அமைந்துள்ள இடம் ______

**III.** சுருக்கமாக விடையளிக்கவும்

1. ஒரு நாட்டின் கடமைகள் யாவை?
2. மக்களின் வாழ்க்கைத் தரத்தைஎவ்வாறு உயர்த்த வேண்டும்?
3. பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இலக்கு என்ன?
4. பண்டிட் ஜவஹர்லால் நேரு தொடங்கிய தொழிலக வளர்ச்சித்திட்டம் எவ்வாறு பயனுள்ளதாக உள்ளது?
5. இந்தியாவில் பொருளாதார வளர்ச்சியின் தாக்கம் எவ்வாறு உள்ளது?

**IV.** விரிவான விடை தருக

1. இந்தியாவை எழுச்சியுடனும் இந்தியாவாக உருவாக்கும் திட்டங்கள் பற்றி ஒரு கட்டுரை எழுது.

**V.** செய்முறைப் பயிற்சி

1. 'எழுச்சியுறும் இந்தியா' என்ற தலைப்பிற்கு ஏற்றவாறு நமது நாட்டின் வளர்ச்சியைக் காட்டும் செய்திகள், படங்கள் மற்றும் தகவல்களைச் சேகரிக்கவும்.

## அலகு X : நிலவரைப் படங்கள் விளக்கப்படங்கள்

### பாடம் 10

# பரவல் நிலவரைப்படங்களும் விளக்கப்படங்களும்

**கற்றல் நோக்கங்கள்**

1. மாணவர் புள்ளி விவரங்களின் முக்கியத்துவத்தினை அறிதல்.
2. மாணவர் பல்வேறுபட்ட புள்ளி விவரங்களைப் பற்றிய அறிவைப் பெறுதல்.
3. மாணவர் புவியியல் வல்லுனர்கள் எந்த அளவிற்குப் புள்ளி விவரங்களைப் பயன்படுத்துகின்றனர் என்பதை அறிந்து கொள்ளல்.
4. மாணவர் புவியியல் சார்ந்த புள்ளிவிவரங்களை எவ்வாறு வரைபடமாக மாற்றுவது என்பது குறித்து அறிந்து கொள்ளல்.
5. மாணவர் பரவல் படங்கள் வரைவதற்கான பல்வேறு முறைகளைப் பற்றி தெரிந்து கொள்ளுதல்.

**நிலவரைப்படங்கள் (MAPS)**

ஒவ்வொரு காலக் கட்டத்திலும், புவியைப் பற்றிய தகவல் களை பல வழிகளில் அறிந்துகொள்ள முடிகின்றது. நிலவரைப் படங்கள் எனப்படுவது, ஒரு இடத்தைப் பற்றியோ, ஒரு வட்டாரத்தைப் பற்றியோ, தல அமைப்பைப் பற்றியோ அல்லது தல அமைப்போடு தொடர்புடைய இன்னும் பலவற்றின் தகவல்களையோ தெரிவிக்கக்கூடிய ஒன்றாகும். நிலவரைப் படத்தினை ஒரு வட்டாரத்தின் உண்மையான பிரதிபலிப்பு என்றே கூறலாம். விளக்கப்படம் (Diagram) என்பதும் தகவல்களைத் துல்லியமான முறையில்

புள்ளி விவரங்களின் அடிப்படையோடு தெரியப்படுத்தும் ஒரு வழிமுறையாகும்.

நிலவரைப் படங்கள், விளக்கப் படங்கள் ஆகிய இரண்டை யுமே புவியியல் வல்லுனர்கள் படவரைவுகள் (Graphicacy) என்ற வகையில் சேர்த்துள்ளனர். படவரைவு எனப்படுவது தகவல்களை எழுத்துவடிவில் கூறாமல் நிலவரைப் படங்கள், விளக்கப் படங்கள் போன்றவற்றின் மூலமாக தெரிவிப்பதாகும். மேலும் விளக்கப் படங்கள், நிலவரைப் படங்களைத் தவிர, புகைப் படம், மற்றும் பழம்பொருட்கள் (artefacts) ஆகியவைகளும் தகவல்களை அளிப்பதில் முக்கியமான பங்கு வகிக்கின்றன.

நகர்வுப்படம் (flow maps) என்பதும் ஒரு வகையான தகவல் வெளிப்பாடு ஆகும். வெவ்வேறு இடங்களுக்கு இடையே உள்ள நகர்வினை இதன் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது. எடுத்துக்காட்டாக, தமிழ்நாட்டில் இரயில் நிலையங்களுக்கு இடையே இயக்கப்படும் இரயில்களின் எண்ணிக்கையை மேலும் நகர்வுப்படங்களின் மூலம் பேருந்து, இரயில் போக்கு வரத்தில் நடை பெறும் மக்கள் மற்றும் பொருட்களின் நகர்வினைப் பற்றி அறிய முடிகின்றது. பொதுவாக, நகர்வுப்படம் மூலமாக இரயில் மற்றும் சாலைப் போக்குவரத்தின் அடர்த்தியையும் அறிய முடிகின்றது.

நிலவரைப் படத்தின் மூலம் தகவல்களை நன்கு அறிந்து கொள்ளும் அளவிற்கு வார்த்தைகள் மூலம் (words) அறிய முடிவதில்லை என்றே கூறலாம்.

### விளக்கப் படங்கள் (DIAGRAMS)

ஆய்வுகள் மூலம் சேகரிக்கப்படுகின்ற புள்ளிவிவரங்கள் வரைகோட்டுப்படம் (Graphs) மூலமும், விளக்கப் படங்கள் மூலமும் காட்டப்படுகின்றன. விளக்கப் படங்கள் புள்ளி விவரங்களின் தன்மையைத் துல்லியமாக எடுத்துக் காட்டுகின்றன. புவியியலில் பல்வேறுவிதமான படங்களின் மூலம் புள்ளி விவரங்கள் காண்பிக்கப்படுகின்றன. அவைகளில் வரைகோட்டுப் படங்கள் (Graph), பட்டைப் படங்கள் (Bar diagrams), வட்டப் பகுப்புப் படங்கள் (Pie



diagrams) போன்றவைகள் முக்கிய மானவைகள் ஆகும். இவற்றின் மூலம் புள்ளிவிவரங்களைப் படமாகக் காண்பிக்கும் பொழுது - அதன் வேறுபாடு மற்றும் ஒருமித்த தன்மை ஆகியவற்றினைத் தெளிவாக அறிய முடிகின்றது. மேற் குறிப்பிட்ட விளக்கப் படங்கள் பரப்புசாரா புள்ளி விவரங்களை வரையப் பயன்படுகின்றன. மக்கள் தொகை வளர்ச்சியினை வளைகோட்டுப் படம் மூலமும், பட்டைப் படம் மூலமும் காண்பிக்க முடியும். படத்தை வைத்தே மக்கள் வளர்ச்சியை எளிமையாகப் புரிந்து கொள்ளலாம்.

### புள்ளி விவரங்கள் சேகரித்தல் (DATA COLLECTION)

நாம் வீட்டை விட்டு வெளியில் வந்தாலே பல்வேறுபட்ட விவரங்கள் நமக்குத் தெரிய வருகின்றன. அவற்றுள் சில நம் மனதில் நன்கு பதிந்துவிடுகின்றன. மேலும் பல்வேறு விவரங் களை நாம் ஆசிரியர்கள் வாயிலாகவும், வானொலி, தொலைக் காட்சி, செய்தித்தாள் போன்றவைகள் மூலம் அறியமுடிகின்றன. சில சமயங்களில் நூலகங்களுக்கும் சென்று தெரிந்து கொள் கின்றோம். இவ்வாறு நமக்கு வேண்டிய விவரங்களை நாம் சேகரிக்க வேண்டியுள்ளது. விவரங்களைக் கவனித்து அறிதல் மூலமும் (observation), கவனமாகக் கேட்டறிதல் மூலமாகவும் (listening), மற்றும் நம் சொந்த முயற்சியினாலும் (Our own efforts) பெறுகின்றோம். இவ்வாறு பெறப்படும் தகவல்களைத் தான் புள்ளிவிவரங்கள் (Data) என்று கூறுகின்றோம். புள்ளி விவரங்கள் உண்மையைப் பிரதிபலிக்கக் கூடியதாகும். அதனை விஞ்ஞானத்தையும் ஒத்தது எனலாம். புவியியலில் புள்ளிவிவரச் சேகரிப்பு என்பது ஒரு விஞ்ஞான பூர்வமான ஒன்று என்று கூறலாம். சேகரிக்கப்படுகின்ற புள்ளிவிவரங்களில் பெருமளவு பரப்பு சார்புடைய புள்ளி விவரங்களாகும்.

### பரப்பு சார்புடையப் புள்ளிவிவரங்கள் (SPATIAL DATA)

இப்புள்ளிவிவரங்கள் அமைவிடத்தின் அடிப்படையில் சேகரிக்கப்படுகின்றன. இப்புள்ளிவிவரங்கள் அட்ச, தீர்க்க அடிப்படையில் சேகரிக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக

இந்தியாவின் அட்ச விரிவு $8^{o}$ 4" வடக்கு முதல் $37^{o}6'$ வடக்கு வரையிலும், தீர்க்க விரிவு $68^{o}$ 7' கிழக்கு முதல் $97^{o}2'$ கிழக்கு வரையிலும் உள்ளன. புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட வேண்டிய பகுதியின் அட்ச, தீர்க்கத்துக்கு உட்பட்டப் பகுதியின் நில அமைப்பு, காலநிலை, இயற்கைத் தாவரம், மண் போன்ற தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன. இதனையே சார்புடைய தகவல்கள் என்கின்றோம்.

### பரப்பு சாராப் புள்ளி விவரங்கள் (NON-SPATIAL DATA)

இப்புள்ளிவிவரங்கள் மனித சமுதாயத்துடன் தொடர்புடை யவைகளாகும். இதனை 3 பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

(1) சமூகம் சார்ந்த புள்ளிவிவரங்கள் (Social),

(2) பொருளாதாரப் புள்ளி விவரங்கள் (Economic Data),

(3) கலாச்சாரப் புள்ளி விவரங்கள் (Cultural Data) என்ப தாகும்.

பொதுவாகக் கூறினால், தனிப்பட்டவர்கள், குடும்பத்தினர், கிராமிய மற்றும் நகர மக்கள் சார்ந்த புள்ளிவிவரங்கள் பரப்பு சாராப் புள்ளிவிவரங்கள் வகையைச் சேரும். மக்கட்தொகை சார்ந்த புள்ளிவிவரங்களை (Census Data) சமூக புள்ளி விவரங்கள் எனக்கூறலாம். எடுத்துக்காட்டாக, 2001-ம் ஆண்டில் மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி மக்களின் எண்ணிக்கை 1,027 மில்லியன்கள் ஆகும். மக்களின் பொருளாதார நட வடிக்கைகள் தொடர்பான புள்ளிவிவரங்கள், விவசாயம் சார்ந்தவை மற்றும் தொழிற்சாலைகளின் உற்பத்தித் தொடர்பானப் புள்ளி விவரங்களை பொருளாதாரப் புள்ளி விவரங்களுக்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

இவ்வாறு பல்வேறு விதமான புள்ளி விவரங்கள் புவியி யலில் பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன. அவை எவ்விதம், எந்தெந்த வழிமுறைகளின் மூலம் சேகரிக்கப்படுகின்றன என்பதை அறிதல் அவசியமாகும். இவைகளுள் மிக முக்கியத் துவம் வாய்ந்த புள்ளிவிவரங்கள் களப்பணி மூலம் பெறப் படுவது என்று கூறினால் அது மிகையாகாது.



புள்ளியியலானது ''தோராயமான ஒரு விஞ்ஞானம்'' என்று (Science of approximation) கூறலாம். புவியியல் புள்ளி விவரங்கள் மற்றும் அளவுகளின் முக்கியத்துவத்தினை இசையா பௌமன் என்ற வல்லுனர் அவர்கள் நன்கு எடுத்துக் கூறியுள்ளார். அவரது கூற்றுப்படி ''புவியியல் சார்ந்த எந்த ஒரு கூறுக்கும் அளவு என்பது மிகவும் இன்றியமையாத தாகும்''. (Geographical thought involves measurement') இதிலிருந்து புவியியல் படிப்பிற்கு புள்ளிவிவரங்களின் முக்கியத்துவம் என்பதை நன்கு அறிய முடிகின்றது.

பொருளாதார வல்லுனர்கள், மற்றும் புள்ளியியல் வல்லு னர்கள் போன்றே புவியியலாளர்களும், புள்ளிவிவரங்களைப் பெரிதும் உபயோகிக்கின்றனர். அந்தப் புள்ளி விவரங்கள் புவியியல் பாடத்திற்குத் தேவையான படங்கள், நிலவரைப் படங்கள், வரைகோட்டுப் படங்கள், மற்றும் பல்வேறு பரவல் படங்கள் ஆகியவைகளை வரைவதற்குத் தேவையான ஆதாரங்கள் என்றே கூறலாம். பல்வேறுபட்ட புள்ளி விவரங்கள் சமூக, பொருளாதார, கலாச்சார, காலநிலை தொடர்புடையவை. புள்ளிவிவரங்களின் தன்மைக்கேற்ப பல் வேறு முறைகள் (Methods) பயன்படுத்தப்பட்டு விளக்கப் படங்கள் அல்லது நிலவரைப் படங்கள் வரையப்படுகின்றன. மேலும் ஒரே வகையான புள்ளிவிவரத்திற்குக் கூட, பலமுறைகளின் மூலம் பலவகையான விளக்கப் படங்கள் வரையலாம். எனவே, புவியியல் வல்லுனர்கள், பல்வேறு முறைகளைப் பயன்படுத்தி தேவைக்கேற்ப புள்ளி விவரங்களை விளக்கப் படங்களாகவோ, நிலவரைப் படங் களாகவோ வரைவதன் மூலம் புவியியலை சிறப்படையச் செய்துள்ளனர் என்று கூறலாம்.

பொதுவாக புள்ளி விவரங்களை விளக்கப் படங்களாகக் காட்டுவதில் இரண்டு முறைகள் உள்ளன :

1. தனிப்பட்ட விளக்கப் படங்கள் (Representation is made without a map)
2. பலவகையான புவியியல் சார்ந்த அம்சங்களின் பரவலைக்காண்பிக்க வரையப்படும் பரவல் விளக்கப் படங்கள்.

## விளக்கப் படங்கள் (DIAGRAMS)

புள்ளிவிவரங்களை, தேர்ந்தெடுக்கப்படும் அளவைக்கு பொருத்தமான படங்கள் வரைவதே விளக்கப் படமாகும்.

விளக்கப் படங்களைக் கீழ்க்கண்டவாறு வகைப் படுத்தலாம்.

1. ஒரு பரிமாணப் படங்கள் (எடுத்துக்காட்டு : பட்டைப் படங்கள் (Bars) வரைகோட்டுப் படங்கள் (Line Graphs).
2. இரண்டு பரிமாணப் படங்கள் (வட்டப்படங்கள், செவ்வகப்படங்கள் மற்றும் சதுரப்படங்கள் முதலியன).
3. முப்பரிமாணப் படங்கள் (கனச்சதுரங்கள், கோளப் படங்கள் முதலியன).

மேலும் சித்திரக் குறிகள் மூலமும் புள்ளிவிவரங்கள் படங்களாகக் காட்டப்படுகின்றன. அதற்கு சித்திரக் குறியீட்டுப் படங்கள் (Pictorial diagrams) என்று பெயர்.

### பட்டைப் படங்கள் (BAR DIAGRAMS)

புள்ளி விவரங்களைக் கொண்டு பட்டைப் படங்கள் வரைவது மிகவும் எளிமையான ஒன்றாகும். இதில் வரையப்படுகின்ற பட்டைகளின் அகலம் ஒரே அளவாகவும், உயரம் கொடுக்கப்பட்டுள்ள புள்ளி விவரத்திற்கேற்பவும் வரையப்படும். பட்டைகளைச் செங்குத்தாகவோ அல்லது கிடையாகவோ வரையலாம். ஒரே தன்மையான புள்ளி விவரத்தைக் காட்டுவதற்கு தனிப்பட்டை படமும் (Simple Bar), ஒன்றுக்கு மேற்பட்ட புள்ளி விவரத்தினைக் காட்டுவதற்கு கூட்டுப் பட்டைப் படமும் (Compound Bar) வரையலாம். மேலும், பட்டைப் படங்கள் கிடையாகவோ (Horizontal bar), செங்குத்தாகவோ (Vertical bar) வரையப்படலாம். கூட்டுப் பட்டை படத்தில் வேறுபட்ட புள்ளி விவரத்திற்கேற்ற பட்டைகள் பல பிரிவுகளாகப் பிரித்துக் காட்டப்படும்.



**எடுத்துக்காட்டு :**

கீழ்க்கண்ட புள்ளி விவரத்திற்கு ஒரு தனிப் பட்டைப் படம் (Simple bar) வரைக (படம் 10.1).

### பட்டைப்படம்

### தாதுப்பொருட்களின் உற்பத்தி - இந்தியா
### *2000 - 2001* to *2001 - 2002*

| வரிசை எண் | தாதுப் பொருட்கள் | உற்பத்தி அளவு (100 டன்களில்) |
|---|---|---|
| 1 | பாக்ஸைட் | 7,993 |
| 2 | குரோமைட் | 1,972 |
| 3 | தங்கம் | 712 |
| 4 | மங்கனீசு | 1,595 |
| 5 | சுண்ணாம்புக்கல் | 3,078 |
| 6 | ஜிப்சம் உப்பு | 2,644 |

### வரைகோட்டுப்படம் (GRAPH)

புள்ளி விவரங்களை, வரைகோட்டுப் படம் மூலமும் வெளிப்படுத்தலாம். இதில் கிடைக்கோட்டில் (X அச்சில்) கால இடை வெளியையும், செங்குத்துக் கோட்டில் (Y அச்சில்) புள்ளி விவரங்களையும், பொருத்தமான அளவைப்படி குறித்துக் கொண்டு பின்பு இவ்விரண்டையும் தொடர்பு படுத்தி, (Co-ordinates) புள்ளிகள் குறிக்கப்பட வேண்டும். இப்புள்ளிகளை பின்பு இணைத்து கோடு வரைதல் வேண்டும். இக்கோட்டின் ஏற்றதாழ்வினைக் கொண்டே புள்ளிவிவரத்தின் தன்மையை எளிதாகப் புரிந்துகொள்ள முடியும்.




படம் 10.1.



**எடுத்துக்காட்டு** : கொடுக்கப்பட்ட புள்ளிவிவரத்திற்கு ஒரு வரைகோட்டுப் படம் (Graph) வரைக *(படம் 10.2)*.

**இந்தியாவின் இரும்புத்தாது ஏற்றுமதி**

| வரிசை எண் | ஆண்டுகள் | ஏற்றுமதி (மில்லியன் டன்களில்) |
|---|---|---|
| *1* | *1980 - 81* | *22.4* |
| *2* | *1990 - 91* | *32.5* |
| *3* | *1995 - 96* | *31.7* |
| *4* | *1997 - 98* | *29.5* |
| *5* | *1999 - 2000* | *16.1* |

## பரவல் நிலவரைப் படங்கள் (DISTRIBUTION MAPS)

பரவல் படங்களின் - உபயோகங்கள் நாளுக்குநாள் எல்லா துறையினராலும் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டு வருவதால் - முக்கியத்துவம் அதிகரித்து வருகின்றது. புவியியல் தொடர்பு உடைய நிலவரைப் படங்களில் பரவல் படங்கள் மிகவும் முக்கிய பங்கினை வகிக்கின்றன. இப்படங்கள் புவியியல் ரீதியிலும் மற்றும் கல்வி கற்பித்தல் வகையிலும் பெரிதும் இன்றியமையாதவைகளாக உள்ளன.

*சில குறிப்பிட்ட வகைப் புள்ளிவிவரங்களைப் படத்தில்* பார்க்கின்ற பொழுது புரியும் வகையில் பரவல் ஆரணிகள் (pattern of distribution) காட்டப் பட்டிருக்கும். இது முக்கியமாக பயிர்கள், கால்நடைகள் (Livestock), மக்கள் ஆகியவற்றின் பரவல்கள் குறியீடு அல்லது வண்ணம் கொண்டு காட்டப் படுகின்றன.

பொதுவாக, பல்வேறு அம்சங்களின் பரவல் படங்கள் வரைய வேறுபட்ட முறைகள் கையாளப்படுகின்றன. அவையாவன :




படம் 10.2.



*1.* **புள்ளிமுறை (Dot Method):** இந்த முறையானது பொதுவாக மக்கள் தொகை, கால்நடைகள், பயிர்கள், தாதுப்பொருட்கள், மற்றும் தொழிற்சாலைகளின் உற்பத்திப் பொருட்கள் ஆகிய வற்றின் பரவலைக் காண்பிக்க பயன்படுத்தப்படுகின்றது. மக்கட் தொகைப் பரவல் மற்றும் பலவற்றின் பரவலைக் காண்பிக்க இம்முறையில் ஒரே அளவிலான புள்ளிகள் காண்பிக்கப் படுகின்றன. மக்கட் பரவலைக் காட்டும் பரவல் நிலவரைப் படங்களில் ஒவ்வொரு புள்ளியும் ஒரு குறிப்பிட்ட அளவிலான மக்களின் எண்ணிக்கையைக் கொண்டிருக்கும்.

*2.* **வண்ணம் தீட்டும் முறை (Shading Method) :** இம்முறையில் பரவலைக் காண்பிப்பதற்கு வேறுபட்ட வண்ணங்களும், அல்லது கருப்பு மற்றும் வெள்ளை இரண்டினுடைய (Black and White) கலப்புடன் கூடிய வண்ணமோ உபயோகிக்கப்படுகின்றது.

*3.* **வட்டப் பகுப்புப்படம் (Pie graph)** : இம்முறை பகுப்புப் படம் வரைவதற்கு வட்டமானது அளவைக்கு ஏற்ப பல பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றது. பின்பு பிரிவுகள் வெவ்வேறு வண்ணங்களால் வேறுபடுத்தி காண்பிக்கப்படுகின்றன.

*4.* **பட்டை விளக்கப் படம் (Bar Graph) :** இந்த வகைப்படமானது குறிப்பாக வர்த்தகப் பொருட்களின் புள்ளி விவரங்களைக் காண்பிக்கப் பெரிதும் பயன்படுத்தப் படுகின்றது. இது அளவினை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு மிகவும் பயன்படுத்தப் படுகின்றது. எடுத்துக்காட்டாக, மக்கட்தொகை ஆண்டிற்கு ஆண்டு எவ்வாறு வேறுபடுகிறது என்பதையும், ஒவ்வொரு மக்கட்தொகை கணக் கெடுப்பு ஆண்டிலும் (Census year) மக்கட்தொகையின் எண்ணிக்கை எவ்வாறு வேறுபடுகிறது என்பதையும் காண்பிக்கப் பயன்படுகின்றன.

**எடுத்துக்காட்டு** : தமிழ்நாட்டின் *2001* ஆண்டின் மக்கட்தொகை புள்ளிவிவரத்திற்கு புள்ளி முறையைப் பயன்படுத்தி நிலவரைப் படம் வரைக (படம் 10.3).

## புள்ளி முறை (DOT METHOD)

## தமிழ்நாட்டின் மக்கள்தொகை 2001 (தோராயமானது)

| வ.எண் | மாவட்டங்கள் | மக்கட் தொகை |
|---|---|---|
| 1. | திருவள்ளூர் | 2,738,866 |
| 2. | சென்னை | 4,216,268 |
| 3. | காஞ்சிபுரம் | 2,869,920 |
| 4. | வேலூர் | 3,482,970 |
| 5. | தர்மபுரி | 2,833,252 |
| 6. | திருவண்ணாமலை | 2,181,853 |
| 7. | விழுப்புரம் | 2,943,917 |
| 8. | சேலம் | 2,992,754 |
| 9. | நாமக்கல் | 1,495,661 |
| 10. | ஈரோடு | 2,574,067 |
| 11. | நீலகிரி | 764,826 |
| 12. | கோயம்புத்தூர் | 4,224,107 |
| 13. | திண்டுக்கல் | 1,918,960 |
| 14. | கரூர் | 933,791 |
| 15. | திருச்சிராப்பள்ளி | 2,388,831 |
| 16. | பெரம்பலூர் } தற்போது ஒரு | 486,971 |
| 17. | அரியலூர் } மாவட்டம் | 694,058 |
| 18. | கடலூர் | 2,280,530 |
| 19. | நாகப்பட்டினம் | 1,487,055 |
| 20. | திருவாரூர் | 1,165,213 |
| 21. | தஞ்சாவூர் | 2,205,375 |
| 22. | புதுக்கோட்டை | 1,452,269 |
| 23. | சிவகங்கை | 1,150,753 |
| 24. | மதுரை | 2.562,279 |
| 25. | தேனி | 1.094,724 |
| 26. | விருதுநகர் | 1,751,548 |
| 27. | இராமநாதபுரம் | 1,183,321 |
| 28. | தூத்துக்குடி | 1,565,743 |
| 29. | திருநெல்வேலி | 2,801,194 |
| 30. | கன்னியாகுமரி | 1,669,763 |






படம் 10.3.

## வட்டப் பகுப்புப் படம் (PIE DIAGRAM)

வட்ட வடிவப்படங்கள் சக்கரப் படமென்றும், வட்டப் பகுப்புப் படமென்றும் அழைக்கப் படுகின்றன. இதனை வரைவதற்கு புள்ளிவிவரங்களின் மொத்த அளவை வட்டமாகக் கொண்டு (360 டிகிரி), பின்பு புள்ளி விவரத்தின் ஒவ்வொரு பிரிவிற்கும் கோண அளவுகள் கண்டு பிடித்து, வட்டத்தைக் கோண அளவிற்கேற்பப் பிரித்து வேறுபடுத்திக் காண்பித்தல் வேண்டும். இப்படமானது நிலப் பயன்பாடு, தொழிற்பிரிவுகள் போன்றவற்றினை காண்பிக்க மிகவும் பொருத்தமானதாகும்.

**எடுத்துக்காட்டு:** கீழே கொடுக்கப்பட்டுள்ள நிலப் பயன்பாட்டுப் புள்ளி விவரத்திற்கு ஒரு வட்டப் பகுப்புப் படம் (Pie Diagram) வரைக (படம் 10.4).

வட்டப் பகுப்புப்படம் வரைவதற்கு முதலில் இந்தியாவின் மொத்தப் பரப்பினைக் காட்ட ஒரு வட்டம் வரைந்து கொள்ள வேண்டும். பின்பு ஒவ்வொரு வகை நில உபயோகத்திற்கும் பாகை அளவுகள் கீழ்க்கண்டவாறு கண்டறிந்து அதனை வட்டத்தில் பிரித்துக் காட்ட வேண்டும். பின்பு ஒவ்வொரு வகை நிலப் பயன்பாட்டுப் பிரிவினையும் பல்வேறு வண்ணங்களைக் கொண்டு வேறுபடுத்திக் காண்பிக்க வேண்டும்.

### வட்ட பகுப்புப் படம் (PIE DIAGRAM)

### இந்திய நிலப் பயன்பாட்டுப் படம் (1995 - 1996)

| வ.எண் | நில உபயோகம் | பரப்பளவு ஆயிரம் ஹெக்டேரில் |
|---|---|---|
| 1 | காடுகள் | 40.48 |
| 2 | வேளாண்மை அல்லாத வேறு பயன்பாட்டில் உள்ள நிலம் | 48.52 |
| 3 | வேளாண்மை செய்யப்படாத நிலம் | 49.45 |
| 4 | தரிசு நிலம் | 28.12 |
| 5 | நிகர வேளாண் நிலம் | 132.89 |
| | மொத்தம் | 397.46 |






படம் 10.4.

வட்ட பகுப்புப் படத்திற்கான கோண அளவுகளைக் கண்டுபிடித்தல்

1. காடுகளின் மொத்த பரப்பு 40.48
   பாகை அளவு = 40.48 x 360/397.46
2. வேளாண்மை அல்லாத வேறு
   பயன்பாட்டில் நிலம் 48.52
   பாகை அளவு = 48.52 x 360/397.46
3. வேளாண்மை செய்யப்படாத நிலம் 49.45
   பாகை அளவு = 49.45 x 360/397.46
4. பாகை அளவு = 28.12 x 360/397.46
   தரிசு நிலம் 28.12
5. நிகர பயிரிடப்பட்டுள்ள நிலம் 132.89
   பாகை அளவு = 132.89 x 360 / 397.46

இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட கோண அளவுகளுக்கேற்ப, வட்டத்தினை பிரித்துக் கொள்ள வேண்டும். பின்பு ஒவ்வொரு நில உபயோகத்தினையும் வண்ணங்களால் வேறுபடுத்திக் காண்பிக்க வேண்டும்.

**கற்றல் அடைவுகள்**

1. புவியியலில் புள்ளி விவரங்களின் முக்கியத்துவத்தினை மாணவர்கள் அறிந்து கொள்கின்றனர்.
2. புள்ளி விவரங்களின் ஆதாரங்களைப் பற்றி மாணவர்கள் அறிந்து கொள்கின்றனர்.
3. பல்வேறு வகை புள்ளிவிவரங்களை விளக்கப் படங்களாகக் காட்டும் முறைகளைப் பற்றியும் அறிந்து கொள்கின்றனர்.
4. எழுத்துவடிவில் உள்ள விவரத்தைக் காட்டிலும் படங்கள் மூலம் காண்பிக்கப்படும் பொழுது கருத்துக்களை நன்கு வெளிப்படுத்த முடியும் என்ற உண்மையை மாணவர்கள் நன்கு அறிந்து கொள்கின்றனர்.
5. பரவல் படம் வரையும் முறைகளை மாணவர்கள் அறிந்து கொள்கின்றனர்.



# சுயமதிப்பீடு

**I.** சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்

1. தனிப்பட்டவர்கள், குடும்பத்தினர்கள், கிராம மற்றும் நகர மக்கள் தொடர்புடைய புள்ளி விவரங்கள்

   அ. தலம் சார்ந்த புள்ளி விவரங்கள்
   ஆ. பொருளாதாரப் புள்ளிவிவரங்கள்
   இ. கலாச்சாரப் புள்ளி விவரங்கள்
   ஈ. சமூகப் புள்ளிவிவரங்கள்

2. ஒரு பகுதிக்குச் சென்று தேவைப்படும் புள்ளி விவரங்களை சேகரிப்பதற்கு

   அ. களப்பணி ஆ. வினாப் பட்டியல்
   இ. வரைகோட்டுப் படம் ஈ. இரண்டாம் நிலை

3. ஒருவரை நேர்க்காணல் செய்வதற்கு உபயோகப்படுவது

   அ. முதுமொழி ஆ. வினாப்பட்டியல்
   இ. படங்கள் ஈ. களப்பணி

4. புள்ளிவிவரங்களை நேரடியாகவோ, அல்லது நேர்காணல் மூலமாகவோ சேகரிப்பதற்கு

   அ. மாதிரி ஆ. வினாப்பட்டியல்
   இ. நகர்வுப்படம் ஈ. முதல்நிலைப் புள்ளிவிவரங்கள்

5. ஒரு இடத்திற்கும், மற்றொரு இடத்திற்கும் இடையே உள்ள நகர்வினை (Flow) காண்பிக்கும் நிலவரைப்படத்திற்கு

   அ. கேள்விப்பட்டியல் ஆ. வரைகோட்டுப்படம்
   இ. நகர்வுப்படம் ஈ. மாதிரி

**II.** கோடிட்ட இடங்களை நிரப்புக

1. பரப்பு சார்ந்த புள்ளிவிவரத்தினைச் சேகரிக்க ஆதாரமாக உள்ளது ________.

2. கணக்கெடுப்பு முறையில் சேகரிக்கப்படும் புள்ளிவிவரத்திற்கு _________என்று பெயர்.
3. பரவல் ஆரணியைப் பற்றிய தகவல்களை வெளிப்படுத்தும் நிலவரைப் படத்திற்கு _________ என்று பெயர்.
4. ஒரே அளவுடைய பல இடங்களை இணைக்கும் கோட்டிற்கு _________ என்று பெயர்.
5. வட்டப்பகுப்பு அல்லது சக்கரப்படத்தில், வட்டமானது _________ ஆக பிரிக்கப்படுகின்றது.

**III.** பின்வருவனவற்றைப் பொருத்துக

| | | |
|---|---|---|
| 1. பரப்பு சார்ந்த | -- | நகர்வுப்படம் |
| 2. சமூகப்புள்ளி விவரங்கள் | -- | விளக்கப் படங்கள் மூலம் காண்பித்தல் |
| 3. வினாப்ப்பட்டியல் | -- | இந்தியாவின் இயற்கை அமைப்பு |
| 4. பட்டைப்படம் | -- | நேர்க்காணல் |
| 5. மக்கள் இடப்பெயர்வு | -- | கணக்கெடுப்பு |

**IV.** சுருக்கமாக விடையளிக்கவும்

1. பரப்புசார்ந்த (Spatial data) புள்ளிவிவரம் என்றால் என்ன?
2. புள்ளி (Dot Map) நிலவரைப் படத்தினை விளக்குக?
3. ஒரு பரிமாணப் படங்கள் யாவை?
4. வரைகோட்டுப் படத்தைப் (Line Graph) பற்றி சுருக்கமாக எழுதுக.
5. ஏதேனும் ஒரு பரவல் நிலவரைப் படத்தினைப் பற்றி (distribution Map) சுருக்கமாக எழுதுக.

**V.** விரிவான விடை தருக

1. புள்ளி விவரங்கள் சேகரித்தல் பற்றி விளக்கமாக எழுதுக.
2. சேகரிக்கப்பட்டப் புள்ளிவிவரங்களைப் படங்களாகக் காண்பிக்கும் முறைகள் பற்றி எழுதுக.
3. புவியியல் சார்ந்த புள்ளிவிவரங்களைச் சேகரிப்பதற்கான ஆதாரங்கள் பற்றி விளக்கம் தருக.
4. தகுந்த எடுத்துக்காட்டுடன் வட்டப்பகுப்புப் படம் (Pie diagram) பற்றி விவரி.

## அலகு XI : களப்பணி

### பாடம் 11

# களப்பணி : கருத்தும், வழக்கும்

**(FIELD WORK : CONCEPT AND PRACTICE)**

**கற்றல் நோக்கங்கள்**

1. மாணவர் களப்பணித் தொடர்பானக் கருத்தினையும், வழக்கினையும் அறிந்து கொள்ளல்.
2. மாணவர் நேர்க்காணலுக்கான வினாத்தொகுப்பினை தயாரித்தல் பற்றி அறிந்து கொள்ளல்.
3. மாணவர் மனித மாதிரிகளை (human samples) எவ்வாறு தேர்ந் தெடுப்பது என்பதைத் தெரிந்து கொள்ளல்.
4. மாணவர் பரப்பு மாதிரியை (area sample) தேர்ந்தெடுத்து, களப்பணி செய்வதற்கு முன்பாகச் செய்யவேண்டிய முதற்கட்ட பணியைப் (pilot survey) பற்றித் தெரிந்து கொள்ளல்.
5. மாணவர் புள்ளி விவர சேகரிப்பு தொடர்பான சிறப்பு மனித மாதிரிகள் (Key informants) தேர்வு செய்தலைப் பற்றி அறிந்து கொள்ளல்.

புவியியல் வல்லுனர்களுக்கு, புவியியலைப் பற்றி அறிந்து கொள்வதற்கு, பரப்புசார் வேறுபாடுகள் (areal differences) அடிப்டைக் கருத்தாகும். இதன் அடிப்படையில் தான் இயற்புவியியல் மற்றும் மனிதப் புவியியல் ஆகிய இரண்டினைப் பற்றி நன்கு அறிந்து கொள்ள முடிகின்றது. புவியின் மேற்பரப்பில் உள்ள வளங்களைப் பற்றி அறிந்து கொள்வதற்கும், மற்றும் புவியியல் ஆய்விற்கும் களப்பணி மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். களப்பணியின் இன்றி யமையாமையைப் பற்றி இந்தப் பாடத்தில் தெரிந்து கொள்ளலாம்.

புவியியலைப் பற்றி அறிந்து கொள்வதற்கும், புவியியல் ஆராய்ச்சிக்கும் முதல்நிலைப் புள்ளி விவரங்கள் (Primary data) முக்கியமான ஒன்றாகும். புவியியல் ஆய்விற்கு ஆவணங்கள், அறிக்கைகள் ஆகியவைகளோடு, மற்ற இரண்டாம் நிலை புள்ளிவிவரங்களும் இன்றியமையாதவை ஆகும். புவியியல் வல்லுனர்களுக்கு நிலப்பகுதியே முக்கிய ஆய்வின் ஆதாரமாக விளங்குகின்றது. நிலப்பகுதி கிராமமாகவோ அல்லது நகரமாகவோ இருந்தாலும், அதற்கென உரித்தான விவரங்கள் சேகரிக்கப்படும். இக்களப் பணியானது புவியியலுக்கு மிகவும் தொடர்புடைய, இன்றியமையாத ஒன்றாகும்.

'களப்பணி செய்தல்' என்பது ஒரு சிரமமான செயலல்ல. களப்பணி செய்வதற்கு கீழ்க்கண்ட சில விவரங்களைத் தெரிந்து கொள்ளுதல் அவசியமாகும்.

1. மிகுந்த ஆர்வமும், கண்டறியும் திறமையையும் பெற்றி ருத்தல்.

   களப்பணி செய்ய விரும்புவோர், பார்த்தறிவதில் மிகுந்த ஆர்வம் (must keep their eyes open) கொண்டி ருத்தல்.

2. தேவையான, தெளிவான, முறையான தகவல்களைக் குறிப்பெடுத்தல் (notes).

   களப்பணியை, களத்தினைச் சுற்றிப்பார்த்து (Sight seeing) பின்பு தகவல்களைச் சேகரிக்கத் துவங்குதல்.

3. சிறந்த நிலவரைப்படங்களின் உதவியுடன், களப்பணிக் கான அமைவிடத்தினை நிர்ணயிப்பதில் கவனம் செலுத்துதல்.

புவியியலில் உற்றுநோக்குதலை (Observation) அமை விடத்தோடு தொடர்பு படுத்தும் பொழுதுதான் அதன் பயனும் மதிப்பும் கூடுதலாகின்றன.

களத்திற்கு நிலவரைப்படங்களை எடுத்துச் செல்லுதல் வேண்டும்.



களப்பணி செய்யும் இடத்தினை, நிலவரைப்படத்துடன் தொடர்புபடுத்திக் களப்பணி செய்யும் பொழுது களப் பணியை மிகவும் துல்லியமாகச் செய்ய முடியும்.

அமைவிடத்தினை நிர்ணயிக்க உலகளாவிய அமைவிடம் கண்டறியும் கருவி (Global Positioning Systems - GPS) யினைப் பயன்படுத்தலாம்.

உலகளாவிய அமைவிடம் கண்டறிதல் (GPS) கருவியானது மிகவும் லேசானதாக உள்ளதால், எடுத்துச் செல்வது எளிது. ஆனால் அது அதிக விலைமதிப்பு உடையது என்பதை மனதில் நிறுத்த வேண்டும்.

இது துல்லியமாக செயற்படக்கூடியது (quite accurate).

மாதிரி ஆய்விடத்தைத் தெரிவு செய்ய (Sample location), கணிப்பொறி மற்றும் புவியியல் தகவல் தொகுதி யினையும் (Geographical Information System) பயன் படுத்தலாம்.

4. **மாற்றம் பெறாதிருத்தல் (Be consistent) :** களப்பணி என்பது புள்ளி விவரங்களைச் சேகரித்தலாகும். புள்ளி விவரங்கள் எதுவாக இருப்பினும் (எடுத்துக் காட்டாக, மண், தாவரம், மதங்கள்) அதிக மாற்றத்தினைக் காணாததைப் பொருத்துதான் புள்ளி விவரங்கள் துல்லியமானதாக இருக்கும்.

புள்ளி விவரங்கள் சேகரிப்பதுடன் மட்டும் களப்பணி முடிவுறுவதில்லை. சேகரிக்கப்பட்டத் தகவல்கள் முறைப் படுத்தப் பெற்று, புள்ளிவிவர மற்றும் கணித முறைகள் வைத்து ஆய்வு செய்யப்படவேண்டும். பின்பு பொருத்தமான வரை படங்கள் விளக்கப்படங்கள் வரைந்து விளக்க மளித்தல் வேண்டும்.

**புவியியலில் களப்பணி** (FIELD WORK IN GEOGRAPHY)

பொதுவாக களப்பணியை முதல்நிலைப் புள்ளிவிவரங் களைச் (Primary data) சேகரிக்கக்கூடிய ஒரு செயல் என்றே

கூறலாம். இச்செயலில், நிலவரைப்படம் மற்றும் மாதிரிப் படங்கள் தயாரித்தல், உற்றுநோக்குதல் (Observations), அவ்வாறே ஒரு சிலவற்றிற்கு அளவுடன்கூடிய விவரமறிதல் (Measurement), மற்றும் தனிப்பட்டவரிடம் நடத்தப்படும் நேர்க்காணல் (Interview) என்பவை அடங்கும். இரண்டாம் நிலைப் புள்ளிவிவரங்கள் (Secondary data) போதுமானதாக இருக்கும்பொழுது களப்பணியின் அவசியம் குறையலாம். புவியியல் வல்லுனர்கள், களப்பணியைப் புவியியலின் ஒரு சிறப்புப் பிரிவாகவே கருதுகின்றனர் என்றாலும், 1950-ஆம் ஆண்டு முதல் 1960-ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலத்தில் இரண்டாம் நிலைப்புள்ளி விவரங்களைத்தான் பெரும்பாலோர் பயன்படுத்தி வந்துள்ளனர். சிலர் அப்பொழுதும்கூட முதல் நிலைப் புள்ளிவிவரச் சேகரித்தலை ஆதரித்ததோடு அதனை பயிற்றுவித்தலுக்கும், ஆய்விற்கும் இன்றியமையாத ஒரு முறையாகக் கருதினர். இதனால் களப்பணியின் முக்கியத்துவம் நாளுக்கு நாள் அதிகரித்து வந்தது. இன்றோ, களப்பணி யில்லாமல் புவியியல் ஆய்வு என்பது இல்லை. சமூக பொருளாதாரத் தொடர்புடைய ஆய்விற்குத் தேவையான மக்களின் அன்றாட நடவடிக்கைகளை அறிய களப்பணி முக்கியமான ஒன்றாகப் பயன்படுத்தப் படுகின்றது. களப்பணி, ஆய்வாளர்களின் வினாக்களைப் பொருத்தும், நோக்கத்தினைப் பொருத்தும் அமைகின்றது.

எந்தவொரு களப்பணிக்கும் கீழ்க்கண்டவற்றினைப் பொருத்தே முன்னேற்பாடுகள் செய்தல் அவசியம். களப்பணிக் கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளுக்குத் தேவையானவைகள் :

1. களப்பணியின் நோக்கமும் தன்மையும்.
2. களப்பணியில் பங்கேற்பவர்களின் நலம் மற்றும் நலவாழ்வு பற்றியவை.
3. களப்பணி பற்றிய விவரத்தை அலுவலகங்கள் மற்றும் சம்பந்தப்பட்டவர்களுக்கு முன் கூட்டியே தெரியப் படுத்துதல்.
4. களப்பணி மேற்கொள்ளும் இடத்தைப் பாதுகாத்தல் (Conservation)



5. களப்பணி செய்ய வேண்டிய பகுதியிலுள்ள மக்களிடம், ஒரு நல்லிணக்கத்தினை (rapport) ஏற்படுத்திக் கொள்ளுதல்.

களப்பணியில் ஈடுபடுவோருக்கு, பல்வேறு விதமான அனுபவ அறிவு கிடைக்க வாய்ப்பு உள்ளது. அதனால்தான் களப்பணியை 'சுவரில்லா பள்ளிக்கூடம்' (Classroom without walls) என்று வகுப்பறைக்கு ஒப்பிட்டுக் கூறுகின்றனர். களப்பணி தொடர்பானச் செயல்களை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. களப்பணியைத் திட்டமிடுதல்
2. களப்பணியை நடத்துதல்
3. களப்பணி மூலம் சேகரித்தத் தகவல்களை முறைப் படுத்துதல்.

களப்பணியைச் சரியாகச் செய்துமுடிக்க, கீழ்க்கண்ட படிப் படியான முறைகளைக் கையாளுதல் வேண்டும்.

1. களப்பணியினை நோக்கத்திற்கேற்ப செய்ய வேண்டிய பணிகளைப் பட்டியலிடுதல் வேண்டும்.
2. களப்பணி செய்வதற்கு முன் திட்டமிடுதல் வேண்டும்.
3. களப்பணி செய்யப்போகும் இடத்திற்குச் செல்வதற்கும் அங்கு தங்குவதற்கும் முன்னேற்பாடுகள் செய்தல் அவசியம்.
4. களப்பணிக்குத் தேவையானப் பொருட்களையும், கருவி களையும் தயார் நிலையில் வைத்தல் அவசியம்.
5. சேகரிக்கப் போகின்ற முதல்நிலைப் புள்ளி விவரங்களை ஆய்வு செய்வதற்கும் பொருத்தமான முறைகளைத் தேர்வு செய்தல் வேண்டும்.
6. களப்பணி செய்யவுள்ள பகுதியை அடைதலும், களப்பணியைத் தொடங்கி நடத்துதலும்.

புள்ளிவிவரம் தொடர்பானப் பயிற்சிகளில் கீழ்க்கண்ட வைகள் முக்கியமானவைகளாகும் :

1. உற்றுநோக்குதல் (Observation)
2. நேர்க்காணல் (Interview)
3. பங்கேற்றல் (Participation)
4. புள்ளி விவரங்களைப் பகுத்தாய்தல் (Data Processing)
5. பகுத்தாய்ந்தவற்றை விவரித்தல் (Interpretation)

இவற்றுள் களப்பணியில், நேரடியாகக் கேட்டறியும் நேர்க்காணல் ஒரு அடிப்படை முறையாகும். இதன் மூலம் பெறப்படும் புள்ளிவிவரங்கள் இறுதியில் தேவைப்படும் அறிக்கையினை எழுதுவதற்கு மிகவும் உதவியாக இருக்கும். எல்லாவிதமான களப்பணியிலும் விவரம் தரும் அறிக்கை எழுதுதல் (Interpretation / Explanation) தான் முடிவானச் செயலாகும். களப்பணியில் ஈடுபட்ட எந்த ஒரு மாணவனாலும் கண்டறியும் திறனையும், அறிக்கை எழுதும் முறையையும் அறிந்து கொள்ள முடிகின்றது. பொதுவாக, களப்பணித் தொடர்பானச் செயல்களில் உற்று நோக்குதலும் (Observation), அறிக்கை எழுதுதலும் (Report Writing) முக்கியமான செயல்களாகும்.

**பரப்பு சார்பான மாதிரிகளின் வகைகள் (Types of Spatial Sampling) : முன்முனைந்து மாதிரி தெரிந்தெடுத்தல் (Exploratory Sampling) :** ஒரு பகுதியைப் பற்றி எதுவுமே தெரியாமல் இருந்தாலும், அல்லது போதுமான தகவல்கள் தெரியாமல் இருந்தாலும், அந்த பகுதியைப் பற்றி தெரிந்து கொள்வதற்கு முதலில் முன்முனைந்து மாதிரி தெரிந்தெடுத்தல் முறையை (Exploratory Sampling) கடைப்பிடித்தல் வேண்டும். இது ஒரு முதல் முயற்சியாக அமைந்து, பொதுவானத் தகவல்கள் நமக்குக் கிடைக்க உதவியாக இருக்கும். எடுத்துக்காட்டாக, ஊரக வளர்ச்சி மையம் ஒன்றில் பணிபுரியும் ஒருவரை ஒரு குறிப்பிட்ட கிராமத்தில் எத்தனை வீடுகளில் வீட்டிற்கு உள்ளே தண்ணீர் குழாய் இணைப்பு உள்ளது என்று கணக்கெடுக்கும்படி பணித்துள்ளதாக வைத்துக்கொள்வோம். இந்தப்பணியை செய்ய முன் முனைந்து மாதிரி தெரிந்தெடுத்தல் முறையை கீழ்க்கண்டவாறு பயன்படுத்தலாம். அனைத்துப் பகுதிக்கும் சென்று வெளிப்புற அறைகள் உள்ள வீடுகளை மட்டும் பார்த்து அவற்றில் எத்தனை வீடுகளில் உட்புற குழாய்



இணைப்பு உள்ளது என்று கண்டு அறியலாம். இந்த கணக்கெடுப்பின்போது, அந்தப் பகுதியைப் பற்றிய மற்ற தகவல்களும் தெரியவரும். இந்த முறையைக் கையாளுவதன் மூலம் ஆராய்ச்சியாளர்கள் இதுவரை கோர்வைப்படுத்தப் படாத தகவல் (Undocumented) பற்றிய நிலவரைப் படங்கள் தயாரிக்க வழிவகுக்கும்.

இந்த நிலவரைப்படங்கள் முழுவதும் வரையப்படாத நிலையில் இருந்தால் கூட, இனி மேற்கொள்ளப் போகும் ஆய்விற்கு இது ஒரு முதற்படியாக அமையும்.

**பயணம் சென்று மாதிரி தெரிந்தெடுத்தல் (Reconnaissance Sampling) :** ஒரு பகுதியைப் பற்றி ஓரளவு தகவல்கள் சேகரிக்கப் பட்டு, மேலும் வேறுபல தகவல்கள் சேகரிக்கப்பட வேண்டி யிருப்பின், பயணம் சென்று மாதிரி தெரிந்தெடுத்தல் முறையை கடைப்பிடிக்கலாம். இந்த முறை குறுகிய காலத்தில், குறைந்த செலவில் கையாளப்பட்டு, முன் முனைந்து தெரிந்தெடுத்தல் முறையைக் காட்டிலும் முடிந்த அளவு கூடுதலானத் தகவல்களை சேகரிக்கப் பயன்படுகின்றது. 1920-ஆம் ஆண்டு மெக்ஸிகோ நாட்டின் வடமேற்கு வட்டாரத்தில் புதைபொருள் ஆராய்ச்சி முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைத் தெரிவு செய்வதற்காக, இத்துறையை உருவாக்கிய டானால்ட் டி. பிராண்ட் (Donald D. Brand) அவர்களும் அவருடைய வழிகாட்டியான கார்ல் ஓ. சாயர் (Carl O. Sauer) அவர்களும் இந்த முறையைக் கையாண்டது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. இவர்களுக்கு முன் ஆராய்ச்சி செய்தவர்கள் புதைபொருள் ஆராய்ச்சி இடங்கள் சில இருக்கின்றன என்பதை மட்டுமே முன்முனைந்து தெரிந் தெடுத்தல் முறை மூலம் அறிந்தார்கள்.

பிராண்டும், சாயரும் காரில் செல்லும்பொழுது சில சமயம் கார் பழுதடைந்து நின்றுவிடும். அப்படி நிற்கும் பொழுதெல்லாம், அருகில் ஏதேனும் குன்று இருந்தால் சாயர் அங்கு சென்று ஆராய்ச்சி நடத்துவார். கார் பழுது பார்க்கப்பட்டு, காரின் இயந்திரம் இயங்க ஆரம்பித்தவுடன் அதன் சத்தம் கேட்டு காருக்குத் திரும்பி வருவார். ஏனெனில்,

அச்சமயங்கள் அவருக்கு மிகவும் பயனுள்ளவையாக இருந்தன. அவரது ஆராய்ச்சிகளின் வழியே கிடைத்த விவரங்களின் தன்மையையும், கார் பழுதடைந்ததையும் சாயர் எப்போதும் ஒப்பிட்டுப் பார்த்து மகிழ்வார்.

**விரிவான ஆய்வு மாதிரி தெரிந்தெடுத்தல் (Extensive Sampling)** :

இம்முறையில் முழுவிவரங்கள், பெரும் பரப்பளவி லிருந்து சேகரிக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, வட்டார அளவில் காணப்படும் புல்வெளிகள் மற்றும் இலையுதிர்க் காடுகள் ஆகியவற்றினைப் பற்றி அறியமுடியும்.

### தீவிர ஆய்வு மாதிரி தெரிந்தெடுத்தல் (INTENSIVE SAMPLING)

இம்முறையில் குறைந்த பரப்பில் மிகுதியான விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, தாவரப் பகுதியை மாதிரியாக எடுத்துக் கொள்ளும் பொழுது, ஒவ்வொரு பகுதி யிலும் உள்ள தாவர வேறுபாட்டினை இம்முறையின் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது (எடுத்துக்காட்டு : புல் வெளிகள் நிறைந்த காடுகள்).

### ஆய்வு மாதிரி அலகுகள் (SAMPLING UNITS)

### புள்ளி மாதிரி தெரிந்தெடுத்தல் (POINT SAMPLING)

இம்முறை மூலம், குறிப்பிட்ட பகுதிகளில் தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன. பின்பு அந்த விவரங்களை அடிப் படையாகக் கொண்டு அந்த இடத்தினைப்பற்றிய தகவல்களை ஓரளவிற்கு ஊகித்துக் கூறமுடிகின்றது. எடுத்துக்காட்டாக, ஒரு பகுதியில் காணப்படும் மண்ணைப் பற்றி அறிய வேண்டு மானால், அந்தப் பகுதியின் பல இடங்களில் புள்ளிமுறை மாதிரிகள் எடுத்து பின்பு ஒரே மாதிரி மண் உள்ள பகுதியையும் மண் வேறுபாட்டினைப் பற்றியும் எடுத்துக் கூறலாம்.



### பரப்பு மாதிரி தெரிந்தெடுத்தல் (AREA SAMPLING)

மிகவும் பரந்துபட்ட பகுதியைப் பற்றிய விவரங்களை அறிய, ஒரு சிறிய நிலப்பகுதியைத் தெரிந்தெடுத்து விவரங்கள் சேகரிக்கப்படுவதற்கு பரப்பு மாதிரி தெரிந்தெடுத்தல் (Area Sampling) என்று பெயர். இது இரண்டு வகைப்படும். ஒன்று நிலையானது (Fixed), மற்றொன்று மாறும் தன்மையுடையது (variable). முதலாவதில், மாதிரிக்கு எடுத்துக் கொண்ட பகுதியின் அளவு மற்றும் வடிவம் நிலையானதாகும். இப்பகுதி ஏறக் குறைய, குறிப்பிட்ட ஆரத்தில் உருவாக்கப்பட்ட வட்ட வடிவத்திலோ அல்லது ஒரு குறிப்பிட்ட அளவில் உருவாக்கப் பட்ட ஒரு சதுரத்தினைப் போன்றோ இருக்கும். மாதிரி தெரிந்தெடுத்தல் நிலப்பகுதியின் அளவானது (Sample Areas) ஆய்விற்கென எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளதின் அடர்த்தி யையும், தன்மையையும் பொருத்தே அமைகின்றது. எடுத்துக் காட்டாக அடர்த்தியான ஆனால் தாழ்வானத் தாவரங்கள் பற்றி ஆய்விற்குத் (low and dense vegetation) தெரிந்தெடுத்த நிலப் பகுதியின் அளவு சிறியதாகவும் (சுமார் 1 சதுரமீட்டர் பரப்பளவு), காடுகள் தொடர்பானவற்றிற்கு மிகப் பெரிய அளவிலான நிலப்பகுதியாகவும் எடுத்துக் கொள்ளப்படுகின்றது.

மாதிரி தெரிந்தெடுத்தல் நிலப்பகுதியின் அளவினைத் தீர்மானிக்க கீழ்க்கண்ட **கூறுகள் - பரப்பு வளைவு** (Phenomena - Area curve) கையாளப்படுகின்றது. அதாவது நிலப் பகுதியை 'X' அச்சிலும் (X-axis) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப் பட்டதை 'Y' அச்சிலும், (Y-axis) தொடர்புபடுத்தி வரைபடம் வரையப்படு கின்றது. இதில் வளைக்கோட்டில் எந்த ஒரு புள்ளிக்குப் பிறகு வளைக்கோடு கிடையாக உள்ளதோ, அந்த குறிப்பிட்ட புள்ளிதான் மாதிரி தெரிந்தெடுத்தல் பகுதிக்கு (Sampling Area) பொருத்தமான அளவாகும் (Ideal size).

### நீள்மாதிரி தெரிந்தெடுத்தல் (LINEAR SAMPLING)

இதில் நிலப்பகுதிக்கு நடுவில், குறுக்காக நீளவாக்கில் (Transect) கோடு போடப்பட்டு, அதன் அடிப்படையில்,

அதற்கு அருகில் மாதிரிகள் தெரிந்தெடுக்கப் படுகின்றன. இதனை களத்திற்குச் செல்லாமலேயே நிலவரைப்படம் அல்லது வான் வெளிப் புகைப்படத்தினைக் கொண்டே மாதிரி தெரிந்தெடுக்க வேண்டிய பகுதியைத் தேர்வு செய்து பின்பு களத்திற்குச் சென்று களப்பணி செய்யலாம். இந்த மாதிரி தெரிந்தெடுத்த நிலப்பகுதி நீளமான கோடு போன்றோ நீண்ட பட்டை போன்றோ விவரங்களின் தன்மைக்கேற்ப தேர்வு செய்யப்படுகின்றது.

### அமைவிடமல்லாத மாதிரி தெரிந்தெடுத்தல் (PLOTLESS SAMPLING)

இது நான்காவது மாதிரியாகும் (Sampling Unit). இது மிகவும் சிக்கலானதும், அதிக நேரம் எடுத்துக் கொள்ளக்கூடியதுமாகும். எனவே, இது ஒரு உகந்த மாதிரி அல்ல என்றே கூறலாம். எந்த ஒரு புவியியல் சார்புடைய ஆய்விற்கும் புள்ளிமுறை, பரப்பு முறை அல்லது நீள்மாதிரி தெரிந்தெடுத்தல் முறை (Linear Method) ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றே பயன்படுத்தப்படுகின்றது.

**பரப்பு சார்பு மாதிரியை வடிவமைத்தல் (Spatial Sampling Design)**: மேற்கண்ட மாதிரிகளைத்தவிர களப்பணி செய்வோர் கீழ்க்கண்ட மாதிரி முறைகளையும் பின்பற்றி வருகின்றனர். **படிநிலை மாதிரி தெரிந்தெடுத்தல் (Hierarchical Sampling).** இம் முறையில் வட்டப் பிரிவு, நகரம், மாநிலம், நாடு போன்ற ஒவ்வொரு பரப்பில் இருந்தும் புள்ளி விவரங்கள் சேகரிக்கப் படுகின்றன.

**குறிப்பிட்டவையல்லாத மாதிரி தெரிந்தெடுத்தல் (Random Sampling) :** புள்ளிவிவரங்கள் சேகரிப்பிற்கு இம்முறை பயன் படுத்தப்படுகின்றது. இதிலுள்ள குறைபாடு என்னவெனில் வட்டாரங்கள் முழுவதற்குமான விவரங்களைப் பற்றி அறிய முடிவதில்லை. இம்முறையில் குறிப்பிட்டவையல்லாத மாதிரி மட்டும் தேர்வு செய்யப்படும்.

**நல்முறை மாதிரி தெரிந்தெடுத்தல் (Systematic Sampling) :** இதில் மாதிரிகள் தெரிவு ஒரு குறிப்பிட்ட இடைவெளியில்



முறையாகச் செய்யப்படுகின்றது. எடுத்துக்காட்டாக, ஒரு களப்பணியாளர் நகரங்கள் சந்திக்கும் இடங்களிலோ அல்லது சாலைகள் சந்திக்கும் இடங்களிலோ காணக்கிடைக்கின்ற அல்லது இல்லாத கூறுகளை எடுத்து மதிப்பீடு செய்யலாம்.

**அடுக்கமைத்து குறிப்பிட்டவை அல்லாதமாதிரி தெரிந்தெடுத்தல் (Stratified Random Sampling)** : சுருக்கமாகக் கூறினால், இது குறிப்பிட்டவையல்லாத மாதிரி மட்டும் தெரிந்தெடுத்தல் (random samping), நல்முறை மாதிரி தெரிந்தெடுத்தல் (systematic Sampling) ஆகிய இரண்டும் சேர்ந்த ஒரு சாராம்சம் என்றே கூறலாம். இம்முறை ஓரளவிற்கு சமச்சீரான முறையாதலால் பெரும் பகுதியில் புள்ளிவிவர சேகரிப்பிற்கு ஏதுவானதாகும்.

முடிவாகக் கூறினால் மாதிரி தெரிந்தெடுத்தலுக்கென தனிப்பட்ட கடினமான விதிமுறைகள் இல்லையென்றே கூறலாம். பொதுவாக, உலகம் பல்வேறான விவரங்கள் அடங்கிய ஒன்றாகும். அவற்றினை எளிமையாக்கி விவரங்களை மக்களுக்குக் கிடைக்கச் செய்வது களப்பணி என்றே கூறலாம். எனவே, தரமான மற்றும் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையான முறைகளைப் பயன்படுத்தி புள்ளவிவரங்களை அறிதல் அவசியமாகும். எந்த முறையிலும், தலவேறுபாடு, சூழ்நிலை மற்றும் அமைவிடத்திற்கு ஏற்பத்தான் பயன்கள் அமையும்.

### வினாத் தொகுப்பினை தயாரித்தலுக்கு பின்பற்றப்பட வேண்டிய வழிமுறைகள் (Designing Schedule of Questions or Questionnaire)

வினாக்களைத் தொகுத்தெழுதுதல் என்பது ஒரு கடினமான செயல் என்றே கூறலாம். அதற்கு பல்வேறு வழிமுறைகள் உள்ளன. அவற்றுள் மிகவும் முக்கியமானதும் மற்றும் எளிமையான வழிமுறைகளாவன :

**நுண்ணிய குறைகள் - பொருள் வடிவமைத்தல் (Micro Issues - Item Design)**

1. பொதுவான விதிமுறைகள் (General Rules)
2. அச்சுறுத்தாத வினாக்கள் (Non-threatening questions)

3. அச்சுறுத்தக்கூடிய வினாக்கள் (Threatening questions)

4. அறிவுச் சார்பு வினாக்கள் (Knowledge questions)

**II. வினாக்களுக்கு வார்த்தை அமைத்தலில் பின்பற்ற வேண்டிய விதிகள் (General Rules for wording)**

1. மொழி எளிய நடையில் இருத்தல் வேண்டும்.
2. வினாக்கள் சிறிதாக இருத்தல் வேண்டும்.
3. தாக்கும் வகையான வினாக்களைத் தவிர்த்தல் வேண்டும் (Avoid double - barrelled questions).
4. எதிர்பார்க்கும் பதில் தரும் வினாக்களையும் தவிர்த்தல் வேண்டும் (Avoid leading questions).
5. மறைமுகமான, யூகம் செய்யக்கூடிய வினாக்களைத் தவிர்த்தல் (Avoid implicit questions).
6. குழப்பமான சொற்றொடரைப் பயன்படுத்தும் பொழுது கவனமாக இருத்தல் வேண்டும்.

**III. அச்சுறுத்தக்கூடிய அச்சுறுத்தாத வினாக்கள் (Threatening vs Non-threatening Questions)**

1. அச்சுறுத்தக்கூடிய வினா என்றால் என்ன?
2. அச்சுறுத்தல் என்பது இரண்டு வகை :
   (i) சமுதாயத்தினரால் விரும்பப்படும் வினாக்கள்.
   (ii) சமுதாயத்தினரால் விரும்பத்தகாத வினாக்கள்.
3. அச்சுறுத்தாத வினாக்களினால் ஏற்படக்கூடிய பிரச்சனைகள் ஞாபக சக்தியைப் பொறுத்தது.

**IV. அச்சுறுத்தாத வினாக்களைக் கேட்டல் எனப்படுவது**

1. நினைவில் நிற்கக்கூடிய வினாக்களைப் பயன்படுத்த வேண்டும்.
2. வினாக்களைக் குறிப்பிட்ட எதிர்நோக்கி பதில் தரும் வகையில், உருவாக்க வேண்டும்.



3. தலைப்பு காலத்திற்கேற்ற வகையில் சரியானதாக இருத்தல் வேண்டும்.

**V. அச்சுறுத்தும் வினாக்களைக் கேட்டல் எனப்படுவது**

1. மேலெழுந்தவாரியானவைகள்.
2. திட்டமிடப்படாதவையாக இருத்தல்.
3. விடைகூற அதிக நேரம் பிடிக்கக்கூடிய வினாக்கள்
4. வினா மேல் வினாவாக (அடுக்காக) இருத்தல்.

**VI. சமூகத்தினரால் விரும்பக்கூடிய வகையில் உள்ள வினாக்கள்** (asking socially desirable questions).

1. நடைமுறை அணுகுமுறையுடன் கூடியது.
2. காரணத்துடன் கூடிய வினாக்கள்.
3. விடைகூற அதிக நேரம் பிடிக்காத வினாக்கள்.
4. அளவுக்கு அதிகமாக மிகைப்படுத்திக் கூறாத வினாக்கள்.

**VII. அறிவு பூர்வமான வினாக்கள் (asking knowledge questions)**

அறிவுபூர்வமான வினாக்களைக் கேட்பதற்கானக் காரணம் என்ன?

1. எடுத்துக்காட்டு - மெட்ரிக் முறையில் 1977-ஆம் ஆண்டு நடத்தப்பட்ட சர்வே.
2. வினாக்கள் அறிவுபூர்வமாக அமைய வேண்டுமானால் :
   (i) விழிப்புணர்வுடன் இருத்தல்
   (ii) பலவித விடைகளிலிருந்து சரியான விடையை வினாவிற்கு ஏற்ப தேர்ந்தெடுத்தல்.

(iii) வினா விளக்கமாக இருத்தல்.

(iv) துல்லியமான அளவும் வினாவும் சேர்ந்திருத்தல்.

## புள்ளி விவரச் சேகரிப்பு (DATA COLLECTION)

புவியியலைப் பொருத்தவரை புள்ளிவிவரச் சேகரிப்பு என்பது மிகவும் முக்கியமான ஒன்றாகும். களத்திற்குச் (field) சென்று தக்க வினாக்கள் மூலமாக புள்ளி விவரங்கள் சேகரிக்கப்படும். அவ்வாறு சேகரிக்கப்படும் பொழுது 3 எளிமையான முறைகள் கடைபிடிக்கப்படுகின்றன.

1. உற்று நோக்குதல் விவரங்கள் (Observed data)
2. நேர்க்காணல் மூலமாக பெறப்படும் விவரங்கள் (Interview data)
3. வினாத் தொகுப்பு மூலமாகப் பெறப்படும் விவரங்கள் (schedule or questionnaire based data)

### 1. உற்று நோக்குதலில் கிடைக்கும் புள்ளி விவரங்கள் (Observed data)

புவிசார்ந்த விவரங்களைப் பார்த்த மாத்திரத்திலேயே கண்டறிவது என்பது அவ்வளவு எளிதல்ல. ஆய்வு செய்ய வேண்டியவற்றினையும், அவற்றின் தன்மை, பயன்பாடு ஆகிய வற்றையும் பொருத்துத்தான் இப்புள்ளி விவரங்கள் சேகரிக்கப் படுதல் வேண்டும். இதில் முக்கியமான, பொதுவான, அறிவார்த்தமான விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

### 2. நேர்க்காணல் மூலம் சேகரிக்கப்படும் புள்ளி விவரங்கள் (Interview data)

இம்முறையில் தேவைப்படும் விவரங்கள் நேர்க்காணல் மூலம் சேகரிக்கப்படுகின்றன. இதற்கு கேட்கப்படுகின்ற கேள்வி களைத் தயாரித்து வைத்துக் கொண்டு பின்னர் விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. இம்முறையில் வினாக்களை உன்னிப் பாகக் கவனித்து அதற்கேற்ப சரியான பதிலை அளித்தல் மிகவும் அவசியம்.



### 3. வினாத் தொகுப்பு கொண்டு புள்ளி விவரங்களைச் சேகரித்தல் (schedule or questionnaire based data)

வினாத் தொகுப்பு தயாரித்தலே ஒரு முக்கியமான செயலாகும். வினாத் தொகுப்பு இரண்டு வகைப்படும்.

1. நேர்க்காணல் நடத்துபவர், நேர்க்காணலை நடத்து வதற்குக் கையாளப்படும் வினாக்கள்.
2. நேர்க்காணல் நடத்துபவரால் தயாரிக்கப்பட்ட வினாத் தொகுப்பானது, நேர்க்காணலில் பங்கேற்பவர்களுக்கு கொடுக்கப்பட்டு வினாக்களுக்கான விடையை நிரப்பப்பட்ட பின்பு திரும்பப் பெறப்படுகின்ற வினாத் தொகுப்பு.

## மாதிரி தெரிந்தெடுத்தல் (Sampling)

புள்ளி விவரங்களைச் சேகரித்தல் என்பது மிகவும் அடிப் படையான ஒன்று. சமூக, பொருளாதார ஆய்வில் மக்கள் அனைவரையும் நேர்க்காணல் மூலம் விவரங்கள் சேகரிப்பது என்பது எளிதல்ல. எனவே, அவர்களுள் சிலரை மட்டும் தேர்ந்தெடுத்து வினாக்களுக்கு விடைகாணும் முறைக்கு மாதிரி தெரிந்தெடுத்தல் (sample selection) என்று பெயர். நாம் சேகரிக்கின்ற புள்ளி விவரங்களை, இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம் என்பதை முன்பே பார்த்தோம். அவை :

1. முதல் நிலைப் புள்ளி விவரங்கள்
2. இரண்டாம் நிலைப் புள்ளி விவரங்கள்

### 1. முதல்நிலைப் புள்ளி விவரங்கள் (Primary data)

இந்த வகையில் புள்ளி விவரங்களை மாதிரிகள் (samples) தெரிந்தெடுத்த பின்னர் விவரங்கள் சேகரிக்கப் படுகின்றன. அதாவது, வினாக்கள் தயாரிக்கப்பட்டு அவற்றுள் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள தேவையான வினாக் களுக்கு விடைகள் பெறப் படுகின்றன. இவ்விவரங்கள் பின்பு ஆய்வு செய்யப்பட்டு (analysed) புரியும் வகையில் அறிக்கை (Interpretation) தயாரிக்கப்படுகின்றது.

## 2. இரண்டாம் நிலைப் புள்ளிவிவரங்கள் (Secondary data)

இவ்வகையில் புள்ளி விவரங்களானது புத்தகங்கள், ஆவணங்கள், அறிக்கைகள் போன்றவற்றிலிருந்து சேகரிக்கப் படுகின்றன. இவ்வகையில் மக்கட்தொகை கணக்கெடுப்பு மூலம் (Census Tract) பெறப்படுகின்ற புள்ளி விவரங்களும் அடங்கும்.

**கற்றல் அடைவுகள்**

1. ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக, திட்டமிடப்பட்டு நடத்தப் படும் களப்பணியைப் பற்றி மாணவர்கள் தெரிந்து கொள்கின்றனர்.
2. நேர்க்காணலுக்கான வினாத் தொகுப்பினை (Interview Schedule) தயார் செய்யும் விதத்தினை மாணவர்கள் அறிந்து கொள்கின்றனர்.
3. ஆய்வு செய்வதற்குத் தேவையானப் புள்ளி விவரங்களுக்காக மாதிரி தெரிந்தெடுத்தல் (Sample) மூலமாக பெறக்கூடிய விதத்தினை மாணவர்கள் அறிந்து கொள்கின்றனர்.
4. ஆய்விற்கான இடத்தினை எவ்வாறு தேர்வு செய்வது என்பதை மாணவர்கள் அறிந்து கொள்கின்றனர்.
5. முக்கிய விவரங்களை அறிய முதலாவதாகச் செய்யப்படும் கணக்கெடுப்பு (Pilot Survey) மற்றும் முடிவாகச் செய்யப்படும் கணக்கெடுப்பு (Survey), மற்றும் நேர்க்காணல் முறை ஆகியவற்றினை மாணவர்கள் அறிந்து கொள்கின்றனர்.

# சுய மதிப்பீடு

**I.** சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்

1. இன்றைய நிலையில் மக்கள் சார்ந்த களப்பணியில் தொடர் புடையது

   அ. நடவடிக்கை  ஆ. நிலவரைப்படம் தயாரித்தல்

   இ. மாதிரிப்படம்  ஈ. கதை கூறுதல்



2. தேவைப்படக்கூடிய, ஒரு குறிப்பிட்ட வகையான புள்ளி விவரங்கள்

   அ. வீடுகளில்  ஆ. தனிப்பட்டவரிடம்

   இ. மாதிரியின் மூலம்  ஈ. நண்பர்களிடம்

3. நாம் ஆய்வு செய்யப்படவுள்ள இடத்தினைப் பற்றிய வினாக் களுக்கான பதில், சேகரிக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட புள்ளி விவரங்கள் மூலம் அறியலாம்.

   அ. கண்டறிதல் (Observation)  ஆ. நேர்க்காணல் (Interview)

   இ. வினாத் தொகுப்பு (Schedule)  ஈ. உரையாடல் (Dialogue)

4. ஒரு குறிப்பிட்ட மக்களை மட்டும் தேர்ந்தெடுத்து அவர்கள் மூலம் புள்ளி விவரங்கள் சேகரிப்பதற்கு

   அ. மாதிரி நபர்கள்  ஆ. கண்டறிபவர்கள்

   இ. பார்வையாளர்கள்  ஈ. கேட்பவர்கள்

**II.** கோடிட்ட இடங்களை நிரப்புக

1. வினாக்கள் அடங்கிய ஒரு _______ லை புள்ளி விவரம் சேகரிப்பதற்கு களப்பணியின்போது பயன்படுத்தப் படுகின்றோம்.
2. புள்ளி விவரங்களை சேகரிப்பதற்கு _______ என்பது ஒரு முக்கியச் செயலாகும்.
3. புள்ளி விவரங்கள் சேகரிப்பதில் களப்பணி ஒரு ________ முறையாகும்.
4. களப்பணி செய்யும்பொழுது____________என்பது முக்கிய செயல்களில் ஒன்றாகும்.

**III.** பின்வருவனவற்றைப் பொருத்துக

| | | |
|---|---|---|
| 1. நேர்க்காணல் | -- | மொத்த மக்களில் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையுடைய நபர்களை மட்டும் தேர்ந்தெடுத்தல் |
| 2. முதல்நிலைப் புள்ளி விவரங்கள் | -- | ஆய்விற்கானக் கேள்விகளை தயார் செய்தல் |
| 3. மாதிரி தெரிந்தெடுத்தல் (Sampling) | -- | முறைப்படுத்தப்பட்ட புள்ளி விவரங்கள் |

4. வினாத்தொகுப்பு -- புவியியலில், மாதிரி மூலம் புள்ளிவிவரங்கள் சேகரித்தல்

5. தகவல் -- தனிப்பட்டவர்களைச் சந்தித்து தகவல் சேகரித்தல்

**IV.** சுருக்கமாக விடையளிக்கவும்

1. களப்பணி செய்யத் தேவையான மூன்று செயல்களைக் கூறுக.
2. களப்பணியில் என்னென்ன முறைகள் பின்பற்றப் படுகின்றன?
3. களப்பணிக்குத் தேவையான மூன்று முக்கிய முன் னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் கூறுக.
4. களப்பணி செய்வதற்கு வேண்டிய ஆறு நிலைகளில் (Steps) ஏதேனும் ஒன்றினைப்பற்றி எழுதுக.
5. புள்ளி விவரச் சேகரிப்பினை விளக்குக.

**V.** விரிவான விடை தருக

1. களப்பணியில், புவியியல் தொடர்பான விவரங்களை விளக்கி எழுதுக.
2. களப்பணித் தொடர்பான முன்னெச்சரிக்கைகள் யாவை?
3. எந்த காரணத்திற்காக, எவ்வாறு களப்பணி செய்யப்படுகின்றது என்பதை விளக்குக.
4. களப்பணியில் எந்தெந்த பயிற்சிகள் (practices) கையாளப் படுகின்றன?
5. மாதிரி தெரிந்தெடுத்தல் (sampling) என்றால் என்ன? மாதிரிகள் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகின்றன?

**VI.** செய்முறைப் பயிற்சி (Practical Exercise)

1. ஒரு எளிமையான வினாத் தொகுப்பினைத் தயார் செய்து, சமூகம், பொருளாதாரம் தொடர்பான விவரங்கள் சேகரிக்கும் களப்பணியை அருகாமையில் உள்ள பகுதியில் செய்யவும்.

## பாடம் 12

# அதிவேக மற்றும் பங்கேற்பு மதிப்பீடு

**கற்றல் நோக்கங்கள்**

1. மாணவர் பங்கேற்பு முறைகள் என்றழைக்கப்படும் செயல் முறைகளைக் கற்றலும் மெச்சுதலும்.
2. மாணவர் அதிவேக மற்றும் பங்கேற்பு மதிப்பீடுகளில் குறிப்பாக இயற்கை வளங்களை மேலாண்மை செய்வது பற்றிய சில முறைகளை கற்றுத் தெளிதல்.

இன்றைய ஆய்வுகளில் ஊரக மேம்பாட்டினைச் சார்ந்து வழக்கிலிருக்கும் மதிப்பீடு முறைகளில் இரண்டு நெருங்கிய அணுகுமுறைகள் பெரும்பாலும் பயன்படுத்தப் படுகின்றன. அவைகள் :

*1.* **அதிவேக ஊரக மதிப்பீடு முறை (Rapid Rural Appraisal - RRA):** இது 1980-ஆம் ஆண்டு தோன்றி விரைவாகப் பரவியது. இதில் ஊரக மேம்பாட்டினை மதிப்பிடத் தேவையான தகவல்கள் உயர்மட்டத்தில் வெளிநபர் களால் சேகரிக்கப் படுகின்றன. சேகரிக்கப்பட்டத் தகவல்களின் அடிப்படையில் ஊரகங்களின் தேவைகள் மதிப்பிடப் படுகின்றன.

*2.* **பங்கேற்பு ஊரக மதிப்பீடு முறை (Participatory Rural Appraisal):** இதுவும் 1990-ஆம் ஆண்டு தோன்றி அதிவேகமாகப் பரவியது. இதில் உள்ளூர் மக்களே பங்கேற்று அவர்தம் கருத்துக்களைப் பரிமாற்றம் செய்து கொண்டு மதிப்பீடு செய்கின்றனர்.

பங்கேற்பு முறையில் தங்களது கிராமத்தின் வள மற்றும் சூழல் மேம்பாட்டு நிலையினை ஆய்வு செய்து தங்களின்

அனுபவம், அறிவு ஆகியவற்றைப் பகிர்ந்து கொண்டு கிராமத்தை மேம்படுத்தத் திட்டங்கள் தீட்டவும், செயல் படுத்தவும், கண்காணிக்கவும், மதிப்பிடவும் அக்கிராம மக்களே வழிவகுக்கின்றனர். பங்கேற்பு முறையின் அடிப் படையானது கிராம மக்களின் அன்றாடச் செயல்களின் வழக்கில் தோன்றியது.

பங்கேற்பு ஊரக மதிப்பீடு முறை மூன்று நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு செயல்படுகின்றது. அவை யாவன :

1. ஆதிக்கம் செலுத்தாமல் உதவி செய்யும் வெளிநபரின் மனப்பான்மை மற்றும் நடத்தை.
2. அணுகு முறைகள் மறைமுகத்திலிருந்து வெளிப் படையாகவும், தனிநபரிலிருந்து குழுவாகவும், எழுத்து மூலமாக இருப்பதிலிருந்து நேரிடையாகக் காண்பது மூலமாகவும், அளவிடுவதிலிருந்து ஒப்பிடுதல் வரையிலும் மாற்றம் அடைந்துள்ளது.
3. கூட்டுறவுடன் தகவல்களையும், அனுபவங் களையும், உணவு மற்றும் பயிற்சிகளையும் உள்ளூர் மக்களிடமும் வெளிநபரிடமும் மற்றும் அமைப்பு களுக்கு இடையிலும் பகிர்ந்து கொள்ளுதல்.

பங்கேற்பு மதிப்பீடு முறையும் மூன்று நோக்கங்களைக் கொண்டது. அவைகள்:

1. ஒரு தலைப்பினை ஆய்ந்து ஆராய்ச்சியினை மேற் கொள்வது.
2. உள்ளூர்வாசிகளுக்கும், வெளிநபர்களுக்கும் ஒருங் கிணைந்த பயிற்சி அளிப்பது.
3. மதிப்பீட்டு முறையில் ஆராய்ந்து, திட்டமிட்டு செயல்படுத்தி, கண்காணித்து மதிப்பிடச் செய்யும் திறனையும், சக்தியையும் வழங்குதல். பங்கேற்பு முறைகளினால் இயற்கை வளங்களை மேலாண்மை செய்வதுடன், பெண்கள், ஏழைகள், வேளாண்மை, நலவாழ்வு மற்றும் உணவுப்பாதுகாப்பு போன்ற



செயல்களையும் மேம்படுத்த முடியும். இந்த முறைகள் மிகவும் மதிப்பு வாய்ந்த தாகவும் நம்பகத்தன்மை கொண்டதாகவும் இருப்பதாக விளைவுகளின் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.

இந்தப் பாடம் தேனி மாவட்டம், கம்பம் பள்ளத்தாக்கில் உள்ள சிலமரத்துப்பட்டி என்ற கிராமத்தில் நடத்தப்பெற்ற அதிவேக மற்றும் பங்கேற்பு முறை ஆய்வின் அடிப்படையில் தொகுக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வு வெளிநாட்டினர் ஒருவரால் தண்ணீர் விநியோகம், சுகாதாரம் மற்றும் நலவாழ்வு பற்றி நடத்தப் பெற்றது. மற்றும் இந்தப் பாடத்தில் கொடுக்கப்பட்டு உள்ள எல்லா எடுத்துக்காட்டுகளும் இந்த ஆய்வின் அடிப் படையில் எழுதப்பட்டவையாகும்.

## பங்கேற்பவர் (கலந்துகொள்பவர்) பார்த்து அறிவது

பங்கேற்பவர் பார்த்து அறிவது என்பது களப்பணி ஆய்வின் ஒரு குறிப்பிட்ட வடிவமாகும். இதில் ஆய்வாளர் தாம் நடத்திய ஆய்வு நிகழ்வுகளின் ஓர் நாயகனாகப் பங்கேற்கிறார். வடிவமைக் கப்படாத (unstructured) கணிப்பில் கிடைக்கும் புள்ளி விவரங்கள் இயற்கை மற்றும் சமூகக் காரணிகளின் பண்பினைப் புரிந்து கொள்ளவும் அவற்றிற்கிடையில் அமைந்துள்ள தொடர்பினை அறிந்து கொள்ளவும் உதவியாக இருக்கின்றன. தண்ணீருக்கும் சுகாதார காரணிகளுக்கும் இடையிலான செயற்பாடுகளுக்கு, சமூகச் சட்டதிட்டங்கள் முக்கியமான காரணமாகும். பிறகு பார்த்து அறிவதில் உள்ள குழப்பங்களை அறிமுகப்படுத்தலாம். பங்கேற் பவர் பார்த்துஅறிவதினால் ஊரக மக்களின் சமூக- கலாச்சார வாழ்வினை நன்கு புரிந்து கொள்ள இயலும்.

பார்த்து அறிந்து, கிரகிக்கும் முறையினால் தண்ணீர் விநியோகம் மற்றும் சுற்றுப்புற சுகாதார வசதிகளை மட்டும் இன்றி நமக்கு எதில் ஆர்வம் உள்ளதோ அதனையும் அறியலாம். ஆராய்ச்சியாளர் ஆராய்ச்சி முடியும் வரை கிராம மக்களது வாழ்க்கையுடன் ஒன்றி அவர்களின் அனுபவங் களையும், அன்றாட பிரதிபலிப்புகளையும் தமது டைரியில் பதிவு செய்கின்றார். அந்த டைரிக்குறிப்புகள் ஆய்வாளரின்

சுய விழிப் புணர்வை அதிகரிக்கச் செய்வதுடன் நடப்பு விளைவினையும், ஆராய்ச்சியின் நிலையினையும் பிரதிபலிக் கின்றன. இராபர்ட் சேம்பரின் (Robert Chambers) கருத்துப்படி நேரடியாக பார்த்து அறிவது பயனுடையதாக இருக்கும். பங்கேற்பவர் பார்த்து அறிவது ஆய்வுக் கேள்விகளை மேம்படுத்திக் கொள்ளவும், ஆய்வு முறைகளைத் தெளிவுபடுத்திக் கொள்ளவும் உதவி புரியும்.

## சமுதாய நிலவரைப் படங்கள் வரைதல்

பங்கேற்பு ஆய்வினைத் தொடங்க சமுதாய நிலவரைப் படங்கள் ஒரு நல்ல ஆரம்பம். ஏனென்றால் இது பங்கு பெறுபவர் மற்றும் ஆராய்ச்சியாளரிடையே உரையாடலுக்கு வழிவகுக்கும். நிலவரைப்படங்கள் சமூக நிலையை பார்வைக்குக் கொண்டுவரும். பங்கேற்பு ஊரக மதிப்பீட்டைத் தீர்மானிக்க பங்கேற்பு நிலவரைப்படம் தேவைப்படுகின்றது. நிலவரைப்படங்கள் தயாரிக்கும்போதும், பின்னரும் ஏற்படும் விவாதங்கள், உரையாடல்கள் கிராம மக்களின் வாழ்க்கை நிலை பற்றிய, முக்கிய விவரங்களை வெளிக் கொணரும். நிலவரைப் படங்கள் வரைதல் பழமையான மற்றும் குறிப்பிட்ட திட்டத்தின் கீழ் உள்ள தண்ணீர், சுகாதார வசதிகள் பற்றியும் (பரம்பரையாக மற்றும் சிறப்புத் திட்டங்கள் மூலமாக), அவ்வாறே அவை எவ்வாறு ஏழை, நடுத்தர மற்றும் பணக்கார வர்க்கத்திற்கு எந்த அளவிற்குக் கிடைக்கின்றன என்பது பற்றியும் அறிந்து கொள்ள உதவும்.

**சமுதாய நிலவரைப்படங்கள் (Social mapping)** கிராமத்தின் தெருக்கள், காலனிகள் மற்றும் ஆய்வின் நோக்கங்களுக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் தயாரிக்கப் படுகின்றன. சமுதாய நிலவரைப்படங்கள் தயாரிக்கும் பொழுது பலதரப்பட்ட மக்களிடம் உரையாடும் வாய்ப்பு ஏற்படுகின்றது. இதன் வழியாகவும் உள்ளூர் நீர் விநியோகம் பற்றி புரிந்து கொள்ள முடிகின்றது. சுகாதாரச் சூழ்நிலை பற்றியும் கிராம மக்களிடையே கலந்துரையாடும் வாய்ப்பு ஏற்படுகின்றது. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் தாழ்த்தப் பட்டோர் காலனியில் அமைந்துள்ள வீதிகளை நிலவரைப்



படம் வரைய ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளை (6 லிருந்து 30 பேர்கள் வரை) பங்கேற்பாளர்களாகப் பயன்படுத்தலாம். பங்கேற்பாளர்கள் ஆராய்ச்சியாளரிடமும், உதவியாளரிடமும் கலந்தாலோசித்து எல்லைகள், சாலைகள், வீடுகள், கட்டிடங்கள், கழிவுநீர் சாக்கடைகள், கழிப் பிடங்கள், கழிவுகள் நிரப்பப்படும் பகுதிகள், நீர் ஆதாரங்கள், நலவாழ்வு, கல்வி வசதிகள் மற்றும் கோயில்களை நிலவரைப்படத்தில் குறிக்கின்றனர். பொதுவாக, இவ்வகை நிலவரைப்படங்கள் பென்சிலின் உதவியோடு சார்ட் (Chart) தாளில் கையால் வரைப் படுகின்றன. இந்த நிலவரைப் படங்கள் குறுக்குநடைப் பயணத் திற்கும், முறைசாரா நேர்க் காணலுக்கும், பாதி- வடிவமைக்கப்பட்ட வினாத்தொகுப்பிற்கு வினாக்களை உருவாக்கு வதற்கும் உதவியாக இருக்கும்.

**குறுக்கு நடைப்பயண முறை (Transect Walk)** : இது உள்ளூர் மக்களிடமிருந்து சில குறிப்பிட்ட பகுதிகளையும் அவற்றின் வளங்கள், குறைகள், நிறைகள் பற்றியும் அறிந்து கொள்ள உதவுகின்றது. எந்தப்பகுதிக்கு என்னென்ன உதவிகள் அதிகம் தேவைப்படுகின்றன என்பது பற்றி விரிவானக் கலந்துரையாடல் கிராம மக்களிடம் நடைபெற உதவுகின்றது. நன்கு மேம்படுத்தப் பட்ட தண்ணீர் மற்றும் சுகாதாரச் சேவைகள் எவ்வாறு சமூகத்தில் உள்ளன என்பதையும் சமூக நிலவரைப்படங்களின் விவரங்களைச் சரிபார்த்துக் கொள்ளவும் குறுக்குநடைப் பயணமுறை பயன்படுகிறது என அனுபவம் வாய்ந்தவர்கள் கூறுகிறார்கள். மேலும் இது சேவைகள் மற்றும் சுகாதாரத்தின் வெவ்வேறு நிலைகள், சமூகத்தின் வெவ்வேறு பகுதியில் எவ்வாறு உள்ளன என்ற தகவலையும் தருகின்றது. பார்வையாளர் கூர்ந்து கவனிப் பவராகவும், எல்லா நேரங்களிலும் பதிலை எதிர் பார்க்காமல், உணர்ச்சிகளைப் புரிந்து கொள்ளக்கூடிய, அனுபவப் பட்டவர்களாக இருப்பின் மிக அதிகமான தகவலைப் பெற இயலும்.

சமூக நிலவரைப்படத்தில் காட்டப்பட்ட தெருக்கள் மற்றும் காலனிகளை அடிப்படையாகக் கொண்டதுதான் குறுக்கு நடைப்பயண முறை ஆகும். இந்த முறையில்

காலனியில் உள்ள தெருக்களின் வழியாகச் சீராகச் செல்லும் பொழுது சமூகத்தில் உள்ளவர்களைத் தேர்வு செய்து அவர்களுடன் கலந்துரை யாடலாம். இந்த நடையானது வரைபடத்தில் வரையப்பட்டுள்ள தோற்றங்களை கற்றுக் கொள்ளவும் சரிபார்க்கவும் உதவியாக இருக்கின்றது. இவைகள் மேலும் கலந்துரையாடல் நடத்தவும் மற்றும் கூடுதல் தகவல் தெரிந்து கொள்ளவும் பயன்படுகின்றன. அதாவது தண்ணீர் விநியோகம், சுகாதார வசதிகள், தண்ணீர் சேகரிக்கும் முறைகள், கழிவுகள், குழந்தைகள் நலம், மிருகங்களின் நலம், சுற்றுப்புறச்சூழல், அழுகல், நீர் தேங்குதல் ஆகியவற்றைப் பற்றிய தகவல்களையும் அறிய முடிகின்றது. கிராமத்தில் உள்ள இயற்கை மற்றும் சமூக அமைப்புகள் பற்றியும், சுற்றுப்புறச் சுகாதாரச் சூழ்நிலை பற்றியும் கூட நன்கு அறிய இம்முறை பயன்படுகின்றது.

**முறைசாரா நேர்க்காணல் (Informal Interviews)** : தனிப்பட்டவர்களிடம் அல்லது குழுக்களிடம் நடைபெறும் உரையாடல்கள், அவ்வப்போது தோன்றும் கலந்துரையாடல் களிலிருந்து ஆய்விற்காக எடுத்துக் கொள்வதைத்தான் முறைசாரா நேர்க்காணல் விளைவுகள் என்கிறோம். இவ்வகை நேர்க்காணல்கள் நெகிழ்வுத் தன்மையுடன் தொடர்ச்சியாக நடைபெற வேண்டும். வினாக்கள் முழுவதும் ஆய்விற்கேற்றார் போல் மாற்றி அமைக்கப்படுதல் வேண்டும். முறைசாரா உரையாடல்கள், சீரமைக்கப்படாத கண் காணிப்புகள் மூலம் மக்களின் வாழ்க்கை, பழக்க வழக்கங்களை ஆராய்ச்சியாளர் தெளிவாகப் புரிந்துகொள்ள இயலும்.

முறைசாரா நேர்க்காணல்கள் வழியாக பலதரப்பட்ட வெவ்வேறு சாதிகள், ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தை களிடம் ஆய்வு முழுவதுமாக நடைபெறுதல் வேண்டும். அவ்வாறு நடைபெறும் நேர்க்காணல் விவரங்கள் துல்லியமாகப் பதிவு செய்யப்படவும் வேண்டும். அது போன்றே கலந்துரை யாடல்களும் பதிவு செய்யப்பட வேண்டும். எல்லா நேர்க்காணல் களும் பதிவு செய்யப்பட வேண்டிய அவசியமில்லை. இவ்வாறு பதிவு செய்யப்படும் நேர்க்காணல், கலந்துரையாடல்களில் கிடைக்கும் புள்ளி



விவரங்கள் கிராமத்தைப் பற்றியும், அதன் தண்ணீர், சுகாதார வசதிகளைப்பற்றியும் நன்கு புரிந்து கொள்ள உதவுவதுடன் அக்கிராம மக்களுடன் ஆய்வாளர்களுக்குள்ள தொடர்பினை மேம்படுத்தவும் உதவுகின்றன. இதனால் பங்கேற்பு ஊரக மதிப்பீடு முறையும் அதன் விளைவுகளும் மேம்படுத்தப் படுகின்றன.

**இடைவெளிக் கதை (Story with a Gap)** : இது அனைத்துத் தனி நபர்களும் கலந்து கொண்டு தங்களுடைய கருத்துக்களை எடுத்துக் கூற வாய்ப்பளிக்கின்றது. படங்கள், ஓவியங்கள் மக்களின் எண்ணங்களை வெளிப்படுத்த உதவும் எளிய கருவிகளாகும். படங்களுக்கு இடையிடையே கூறப்படும் கருத்துக்களும் அனைவரும் கலந்து கொள்ள வழிவகுக்கும். இது கலந்துரையாடலில் தங்களின் கணிப்பு மற்றும் அனுபவங்களை ஆய்வாளர்கள் பகிர்ந்து கொள்ளப் பயன்படும். இடையிடையே கூறப்படும் படங்கள் சார்ந்த கதைகள் மூலம் ஆண்கள் மற்றும் பெண்களின் பார்வையில் பிரச்சினைகளின் பல கோணங்களை அறிந்து கொள்ளவும், உணவு, தண்ணீர், சுகாதாரத்திற்கும் இடையில் உள்ள தொடர்பினைப் புரிந்து கொள்ளவும் ஏதுவாகும். சிலமரத்துப்பட்டி கிராமத்தில் படங்கள் பயன்படுத்தப் பட்டன. ஒன்று சுகாதாரமற்ற கிராமம், மற்றொன்று சுகாதாரச் சுற்றுப் புறத்தோடு கூடிய கிராமம். இந்த முறையை வெவ்வேறு சாதியினர், வேறுபட்ட வயதினர், ஆண்கள் மற்றும் பெண்களிடம் கொடுத்து கருத்துக்கள் அறியப் பட்டன. அதற்கு ஒரு கதை கூறிய பின்னர், இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகான இன்னொரு சுகாதாரமான கிராமப்படத்தையும் காட்டி கிராம மக்களின் கருத்தினைக் கதையாக கூறக் கேட்டபோது, ஆண்கள் அனைவரும் தங்களின் சொந்த அனுபவத்தைக் கதையாகக் கூறினர். ஆனால் பெண்களோ கட்டுக்கதைகளைக் கூறினர். அவர்கள் சில காரணங்களுக்காகத் தங்களது சொந்த அனுபவங்களைக் கூற விரும்பவில்லை.

**பாதிவடிவமைக்கப்பட்ட நேர்க்காணல் (Semi-Structured Interviews)** : இதில் தயாரிக்கப்பட்ட வினாக்கள் சரியாக வரிசைக் கிரமமாக கேட்கப்பட வேண்டும். குறிப்பிட்ட

வினாக்கள் கிராம தண்ணீர் விநியோகம் மற்றும் சுகாதாரப் பிரச்சினைகள் குறித்து, குறைந்த எண்ணிக்கையிலான மக்களிடம் கேட்கப்படுகின்றன. வினாக்கள் யாவும் பங்கேற்பாளர் பார்த்து அறிந்தது, முறைசாரா நேர்க்காணல், சமூக நிலவரைப்படம் மற்றும் குறுக்கு நடைப் பயண முறை மூலம் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் தயாரிக்கப் பட்டவையே. சிலமரத்துப்பட்டியில் இந்த நேர்க் காணல் முன்னாள் கிராமத் தலைவர், தற்போதைய கிராமத் தலைவர் மற்றும் வெவ்வேறு தண்ணீர் உந்து நிலையத்தில் உள்ள மின்சார வேலை செய்பவர் (Electricians) ஆகியோர் களிடமும் நடத்தப்பட்டது. இவ்வகை நேர்க் காணல்கள் மூலம் கிடைத்த தகவல்கள் மற்றும் கிராம மக்களிடம் இருந்து திரட்டப்பட்ட தகவல்கள் யாவும் பிற ஆய்வு முறைகளுக்கும் பயன்படுத்த உதவும் என்றால் மிகையாகாது.

**ஆராய்ச்சி அணுகுமுறைகள் மற்றும் முறைகள்**
**பங்கேற்பவர் பார்த்து அறிவது**

**சமூக, கலாச்சாரப் பகுதிகளையும் புரிந்து கொள்ளுதல் : கிராம** மக்களின் வாழ்க்கையுடன் ஒன்றி, தாய்மொழியில் விவரங்கள் சேகரிக்கப்பட வேண்டும்.

**சமுதாய நிலவரைப்படங்கள்** : பலதரப்பட்ட மக்களுடன் தொடர்பினை ஏற்படுத்துகின்றன. குழுக்களிடம் விவாதங்கள், கிராம மக்களின் தண்ணீர், சுகாதார பிரச்சினைகள், சமூகத்தின் அறிவு, பாலினங்களின் தொடர்பு ஆகியவைகள் பற்றி அறியவும் குறுக்கு நடைப்பயண முறைக்கு அடித்தளமாகவும் அமைகின்றன.

**குறுக்கு நடைப்பயண முறை** : சமூக நிலவரைப்படங்களின் விவரங்கள் சரிபார்க்கப்படுகின்றன. கிராம மக்களிடம் உள்ள தொடர்பினை பலப்படுத்து கின்றது. பாதி-வடிவமைக்கப்பட்ட நேர்க்காணல் வினாத் தாள் தயாரிக்கவும் பயன்படுகின்றது.

**முறைசாரா நேர்க்காணல்** : கிராம மக்களுடன் உள்ள தொடர்பை அதிகப்படுத்துகின்றது. கிராம மக்களிடையே கலந்துரையாடலை ஊக்குவிக்கின்றது. ஆராய்ச்சி முறைகளை விரிவுபடுத்தவும் விளக்கவும் பயன்படு கின்றது.



**பாதி-வடிவமைக்கப்பட்ட நேர்க்காணல்** : விரிவாக்கப்பட்ட உறுதியான புள்ளிவிவரங்களைக் கிராம மக்களிடம் சேகரித்தல்.

**இடைவெளிக் கதை** : ஆண்கள், பெண்கள் கருத்துப்படி சுகாதார, நலவாழ்வு மற்றும் ஆண், பெண் உறவு பற்றி புரிந்து கொள்ளுதல்.

**பாதி-வடிவமைக்கப்பட்ட வினாத்தாள்** : அளவு சார்ந்த தரம் சார்ந்த, சிக்கலான, விரிவான புள்ளி விவரங்களைச் சேகரித்தல்.

## பாதி-வடிவமைக்கப்பட்ட வினாத்தாள்
## (SEMI-STRUCTURED QUESTIONNAIRE)

வினாத்தாள் விளக்கமாக, விவரங்களை அறியக்கூடியதாக, அளவிடக் கூடியதாக பெரும்பாலான மக்களின் எண்ணங்களை பிரதிபலிப்பதாக இருக்க வேண்டும். வினாத்தாள் முறையில் சில கட்டுப்பாடுகள் உள்ளன. சமூக - கலாச்சார சம்பந்தமான செய்திகளை அதிகம் கொடுப்பதால் இது தரமுடையதாக இருக்கும். பாதி-வடிவமைக்கப்பட்ட வினாத்தாள்கள் பங்கேற் பவர் பார்த்து அறிவது, சமூக நிலவரைப்படங்கள், குறுக்கு நடைப்பயணமுறை, இடைவெளிக் கதை கூறும் முறை, முறைசாரா நேர்க்காணல் மூலம் தயாரிக்கப்பட வேண்டும். இது புறம்பான, சரியற்ற (Biased) கேள்விகளைத் தவிர்க்கும். புள்ளி விவரங்களைச் சேகரிப்பதற்கு சிறந்த யுக்தியாகவும் இருக்கும்.

வினாத்தாள் முறையான மாதிரி தெரிந்தெடுத்தல் முறையை அடிப்படையாகக் கொண்டு இருக்கும். தோராயமாக மாதிரி தெரிந்தெடுத்தல் காலனிகளில் ஒவ்வொரு பத்தாவது வீட்டிலும் எடுக்கும்படி அமையலாம். இறுதியாக, மாதிரி தெரிந்தெடுத்தல் 3.5 விழுக்காடு (1,614 வீடுகளுக்கு 57 வீடுகள் மட்டும் என்ற அளவில்) கிராம வீடுகளிலிருந்து பெறப்பட்டதாக அமையும். குடும்பத் தலைவர்கள், ஆண், பெண் ஆகியோர்களிடம் தனித்தனியே நேர்க்காணல் நடைபெறும்.

குடும்பத் தலைவர்கள் என்பவர்கள் திருமணமான குடும்ப உறுப்பினராகவும், அந்தக் குடும்பத்தின் நல வாழ்விற்கு முழுப்பொறுப்பு வகிப்பவராகவும் இருக்க வேண்டும். முறைப்படுத்தப்பட்ட மாதிரி தெரிந்தெடுத்தல் கிராமத்தின் வெவ்வேறு பகுதியில் இருந்து பெறப்பட்ட தாகும். வினாத்தாள் முன் சோதித்து அறியப்பட்டு, இருக்கும் குறைகளை நீக்கி இறுதியான வினாத்தாள் அனைத்து வகை வினாக்களுடன் வெளியிடப்பட வேண்டும்.

இந்தப் பாடத்தின் மூலம் அதிவேக மற்றும் பங்கேற்பு மதிப்பீடு ஒரு சக்திவாய்ந்த ஆய்வு முறைகளின் தொகுப்பாக அறிமுகப்படுத்தப்பட்டது. புள்ளி விவரங்கள் விரைவாகச் சேகரிக்கப்படுவதால் இது அதிவேகமானது ஆகும். என்றாலும் அனைத்து தகவல்களையும் துரிதமாகச் சேகரிக்க வேண்டும் என்பது கட்டாயம் இல்லை. இது ஒரு பங்கேற்பு முறை, ஏனென்றால் அனைத்து முறைகளும் விவாதிக்கப்படுகின்றன. மக்களின் பங்கேற்பும், கலந்து கொள்வதும் முக்கியமானத் தேவையாகும். பங்கேற்பு உள்ளதால் புள்ளிவிவரங்கள் காரணமுடையதாகவும், ஒத்துவரக் கூடியதாகவும் உள்ளன. பங்கேற்பு ஊரக மதிப்பீடு என்பது எப்பொழுதும் கிராம மதிப்பீட்டை மட்டுமே கூறுவது அல்ல. நகர்ப்புறங்களிலும் கூட பயன்படும்.

**கற்றல் அடைவுகள்**

1. புவியியல் ஆய்வில் அதிவேக பங்கேற்பு முறையின் பயன்பாடு பற்றிய அறிவினை மாணவர்கள் பெறுகின்றனர்.
2. அதிவேக பங்கேற்பு முறையின் பல்வேறு முறைகளைப் பற்றியும் மாணவர்கள் நன்கு அறிந்து கொள்கின்றனர்.

## சுய மதிப்பீடு

**I.** சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்

1. நெகிழ்வுத் தன்மையுடன் கூடிய, படிப்படியான தொடர்ந்த வடிவமைத்தல்

   அ. அளவுசார்ந்தது (Quantitative) ஆ. தரம் சார்ந்தது (Qualitative)

   இ. அதிவேகமானது (Rapid) ஈ. பங்கேற்கக்கூடியது (Participatory)



2. எல்லைகள் மற்றும் நிலவரைப்படத்தினை யார் மிகவும் சார்ந்துள்ளார்கள்.

   அ. ஆய்வாளர்கள் ஆ. உதவியாளர்கள்

   இ. பங்கேற்பாளர்கள் ஈ. வெளியாளர்கள்

3. நேர்க்காணல் இதற்கொரு வாய்ப்பாய் அமைகின்றது

   அ. பிரச்சினைகள் ஆ. முன்னுரிமைகள்

   இ. பாதுகாப்பு ஈ. இவை மூன்றும்

4. படங்கள் மற்றும் வரைபடங்கள் ஆகியன ஊக்குவிக்கும் சுலபக் கருவியாகப் பயன்படுவது.

   அ. வெளிப்பாடு (Expression) ஆ. தொடர்பு (Communication)

   இ. வசனம் ஈ. மதிப்பிடல்

5. மதிப்பீடு செய்வதற்கு தலத்திற்குச் செல்லும் பொழுது முக்கியமாகத் தேவைப்படுவது.

   அ. இடைவெளிக் கதை ஆ. நேர்க்காணல்

   இ. குறுக்கு நடை (Transect) ஈ. முறைசாரா நேர்க்காணல்

**II.** கோடிட்ட இடங்களை நிரப்புக

1. _______ வினாக்கள் உருவாக, பங்கேற்பவர் உற்றுநோக்கல் (Participant Observation) மிகவும் உதவியாக உள்ளது.
2. சமூக வரைபடங்கள் _______ ஆராய்ச்சியை மேற்கொள்ள நல்ல ஒரு தொடக்கமாகும்.
3. பிரச்சனைகளுக்கு (Problem situations) முன்னரோ, பின்னரோ கூறப்படும் கதைகள் _______
4. முறைசாரா நேர்க்காணலில் _______ எனப்படுவது தன்னிச்சை யான விளக்கமாகும்.

**III.** பின்வருவனவற்றைப் பொருத்துக

| | |
|---|---|
| 1. பங்கேற்பு உற்றுநோக்கல் | -- வினாக்களை உருவாக்க |
| 2. சமூக நிலவரைப் படங்கள் | -- கிராம மக்களுடன் தொடர்பு கொள்ள |
| 3. குறுக்கு நடை | -- பாலினத்தொடர்பைப் புரிந்துகொள்ளுதல் |
| 4. முறைசார்பு நேர்க்காணல் | -- சமூகக் கலாச்சார ரீதியில் |
| 5. இடைவெளிக் கதை | -- குறுக்கு நடைக்கு அடித்தளம் |

**IV.** சுருக்கமாக விடையளிக்கவும்

1. அதிவேகக் கருத்து கூறலில் 'அதிவேகம்' என்றால் என்ன?
2. சமூக நிலவரைப்படங்கள் என்றால் என்ன?
3. குறுக்கு நடைப்பயணத்தின் நோக்கம் என்ன?
4. பாதி-வடிவமைக்கப்பட்ட நேர்க்காணலின் சாதகமான நன்மைகள் யாவை?
5. ஏன் வினாப்பட்டியல்கள் ஆராய்ச்சிக்குப் பயன்படுத்தப் படுகின்றன.

**V.** விரிவான விடை தருக

1. பங்கேற்பு மதிப்பிடலில் பயன்படும் நேர்க்காணலுக்கான வினாக்களைத் தெரிந்தெடுக்கும் உத்திகள் யாவை?
2. வினாக்களின் அடிப்படையில் நடைபெறும் சர்வேக்களில் குடும்பத்தலைவர் என்பதன் அர்த்தம் என்ன?
3. கிராம பங்கேற்புக் கருத்துக்கூறல் என்பது கூட்டான முறைகள் - காரணத்துடன் விவரி.
4. பங்கேற்பு புள்ளி விவரங்கள் சேகரிப்பில் குறுக்கு நடை எவ்வாறு முக்கியத்துவம் பெறுகின்றது?
5. இடைவெளிக் கதை - இப்புதுமையான புள்ளி விவரச் சேகரிப்பு முறையை விளக்குக.

**VI.** செய்முறைப் பயிற்சிகள்

1. அருகாமையில் உள்ள கிராமத்தில், வறுமை நிலை பற்றிய பங்கேற்புக் கருத்துக்கூறலுக்கு இங்கு விவாதிக்கப்பட்ட ஏதேனும் இரண்டு முறைகளைத் தேர்ந்தெடுக்கவும்.
2. அருகாமையில் உள்ள கிராமத்தின் சுகாதார நிலையைப் பற்றிய விவரங்களை அறிவதற்கான கேள்வித் தொகுப்பினை வடிவு அமைக்க ஆசிரியர்கள் மாணவர்களுக்கு உதவியாக இருப்பது.